உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருக்கொடிமாடச் செங்குன்றூர்

என்னும்

# திருச்செங்கோட்டு மான்மியம்.

ஆசிரியர்

திருச்செங்கோடு விவேக திவாகரன் பத்ராதிபர்

அஷ்டாவதானம்

அ. முத்துசாமிக் கோனார் அவர்கள்.

—o—

திருச்செங்கோடு

**S.V. இரத்தினவேலு முதலியார் & சன்**

அவர்களால்

தமது

**ஷண்முகா அச்சேந்திர சாலையில்**

பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டது.

All rights reserved.] **1938.** [Price Rs. 2—0—0

# முன்னுரை.

உ
சிவமயம்

## திருச்செங்கோட்டு மான்மியம்.

உலகங்களெல்லாவற்றையும், பெருமற்பெற்று, அளித்து அழித்து, மறைத்து, அருளும் பஞ்சசக்தி சொரூபியாகிய, உமாதேவியார் வாமபாகத்திற் பொருந்த, அத்துவிதப் பொருளேயாய், ஸ்ரீஅர்த்தநாரீசுவர முகூர்த்தங்கொண்டு சிவபரஞ்சுடர் விளங்குவது "நாகாசலம்" திருக்கொடிமாடச் செங்குன்றூர், முதலிய பல திருநாமங்கள் பெற்றுள்ள, திருச்செங்கோடு ஆகும்.

திருச்செங்கோடு என்ற மாத்திரத்தானே, ஸ்ரீ அர்த்தநாரீசுவரரும் குமாரசுப்ரமண்யரும், ஆன்மாக்களுக்கு அருள் புரியும் வண்ணம், எழுந்தருளியிருக்கும், சிவஸ்தலம் என்று யாவரும் அறிவார்கள்.

இத்தலத்தில், அன்பர்களுக்கு அநுகிரகிக்கும் நிமித்தம் காட்டியருளிய, அற்புதமான திருவிளையாடல்கள், "காந்தம்" முதலிய மஹாபுராணாதிகளில், ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்துக்கூறும் வடமொழி மஹாத்மியங்களிலுள்ள, பெரும்பான்மை சரிதங்களை ஸ்ரீகவிராஜபண்டிதர், தமிழ்ப்புராணமாகச் செய்தனர்.

மொழி பெயர்க்கப்பட்ட அதனையும், மொழிபெயர்ப்பில்லாதிருப்பனவற்றையும், சிவமணமும், தவகுணமும், பொருந்த வசனமாக எழுதி அச்சிட்டு உதவவேண்டுமென, ஸ்தலவாசிகளான, சில பெரியோர்கள் ஆஞ்ஞாபித்ததற்கிணங்க, இராமநாதபுரம், அருங்கலை விநோதரும், பெருங்கொடை வள்ளலருமாகிய, ஸ்ரீமத் விஜயரகுநாதராஜா பாஸ்கர சேதுபதி பூபாலரவர்கள், மனமுவந்து ஈந்தருளிய, ஏட்டுப் பிரதி வடமொழிமஹாத்மியம், ஆகிய இவ்விரு மொழிப்பிரதிகளின் உதவியைக்கொண்டு இத்தலபுராணத்தை "திருச்செங்கோட்டு மான்மியம்" என்ற தலைப்புடன் திருச்செங்கோடு அஷ்டாவதானம் திரு T.A. முத்துசாமி கோனார் அவர்கள் எழுதி வெளியிட்டனர்.

திருச்செங்கோட்டு மான்மியத்தை, எழுத்துரிமை, பதிப்புரிமை, வெளியிடுமுரிமை ஆகிய ஏனைய உரிமைகளை ஷையாரிடமிருந்து யாம் பெற்று, எல்லோரும் இந்நூலைப்படித்தறியுமாறு, எளிய நடையில் கடினசந்திகளின்றி, சைவ புராணமுறைத்கொப்ப, சிவமணம் கமழ

வேத புராண இதிகாஸசாத்பர்யங்களும் நீதி வாக்கியங்களும் ஆங்காங்கு தோன்றுமாறு, செவ்வனே அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

நாம் வெளியிட்டுள்ள திருச்செங்கோட்டு மான்மியம் என்னும் இந்நூல் 'பர்வதகாண்டம்' 'காந்தகாண்டம்' 'தீர்த்தகாண்டம்' என மூவகையாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. முதற்காண்டமாகிய பர்வதகாண்டத்தில், திருக்கொடிமாடச் செங்குன்றூர் தேவாரம், முதல் உபமன்யு முனிவருளிய, அர்த்தநாரீசுவராஷ்டகம், ஈறாக உள்ள ஏனைய சிறப்புப்பாயிரங்களும்,மான்மியவரலாறு முதற்கொண்டு ஞானசம்பந்தரால் நளிர்சுரம் தீர்ப்பித்த மான்மியம் வரையிலுள்ள, ஏனைய ஸ்தல பூஜா விசேஷாதிகள் அடங்கிய மான்மியங்களும் அடங்கியுள்ளன. இரண்டாவது காண்டமாகிய, காந்தகாண்டத்தில் சூராதியர் செயற்கை, ஷண்முகர் செயற்கை, சூரபன்மன் வதை, முருகர் சிவார்ச்சனை வள்ளிநாயகியார் உற்பவம், திருமணம், ஆகிய ஏனைய அரும்பெரும் விடயங்களும் அடங்கியுள்ளன. மூன்றாவது காண்டமாகிய தீர்த்தகாண்டத்தில், கணபதி தீர்த்த மான்மியம், முதற்கொண்டு பாண்டிய தீர்த்தமான்மியம் முடிய, ஏனைய தீர்த்த விசேஷங்களும், அவற்றை யொட்டிய சரிதங்களும் அடங்கியுள்ளன. மேலும் பல மடாதீனங்களிலிருந்தும் வித்வரத்னங்களினிடத்திருந்தும் கிடைத்த, கிரந்தங்களிலுள்ள, மான்மியங்களாகிய 'கல்லிடப்பத்துக்கு கடலை யருத்தியது' முதல் 'மேய்ப்போனுக வந்து வித்துவானை வென்ற மான்மியங்கள்' ஈறாகவுள்ள மூன்று மான்மியங்களும், இதில் முறைபடுத்தப்பட்டு விவரித்து எழுதப்பட்டுள்ளன. இஃதன்றி இந்நாலின் கண் பிருங்கி உபமன்யு ஞானசம்பந்தர் ஆகிய இம்மூவரின் சரிதங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் சிவமணம் திகழ்வதாலும் ஆகம, ஸமிருதி புராண, இதிகாச தாத்பர்யங்கள், நிறைந்திருப்பதாலும் இந்நூலைப் படிக்கும் பெரியோரன்றி,சிறியோரும் சிறுமியரும் இளமையிலேயே தத்தமக்கு வேண்டிய அன்பு, ஆசாரம், வாய்மை முதலிய நற்குணங்களைத் தெரிந்துகொள்ளுவதன்றி, பக்தி, யுக்தி வாசகசக்தி ஏனைய திறமைகளைப் பெற்றுத் திகழ்வர் என்பது சொல்லாமலே விளங்கும். பெரியோர்கள் இந்நாலிலுள்ள குற்றங்குறியாது குணத்தையும் சிவபெருமான் பெரும்புகழையுமே, பொருளெனக்கொண்டு, இந்நாலிற்குரிய ஆதரவை அளிக்கவேண்டுமெனக்கோருகிறேன்.

இப்படிக்கு,

**S. V. இரத்தினவேலு முதலியார் & சன்.**



உ

சிவமயம்.

# பர்வதகாண்ட விஷய அட்டவணை.


| | பக்கம் |
|---|---|
| சிறப்புப்பாயிரம் ... .... | |
| திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் தேவாரம். .... | I |
| திருநீலகண்டப்பதிகம் .... .... | II |
| கபிலதேவரருளிய சிவபெருமான் திருவந்தாதி .... | IV |
| அருணகிரிநாதரருளிய திருப்புகழ் .... .... | IV |
| கந்தரலங்காரம் .... .... | VII |
| கந்தரந்தாதி .... .... | VIII |
| கந்தரநுபூதி சிலப்பதிகாரம் ... .... | X |
| உபமநியு முனிவரருளிய அர்த்தநாரீஸ்வராஷ்டகம் ... | XI |

# பொருளடக்கம்.


| நெ. | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் .... | .... | 1 |
| 2 | மான்மிய வரலாறு .... | .... | 2 |
| | **பர்வத காண்டம்** | | |
| 3 | நாககிரி மான்மியம் .... | .... | 6 |
| 4 | கிரிவரலாறு .... | .... | 14 |
| 5 | வந்தியாபாடாணம் .... | .... | 18 |
| 6 | பிருங்கி தரிசன மான்மியம் .... | .... | 22 |
| 7 | உமைதவ மான்மியம் .... | .... | 26 |
| 8. | அர்த்தபாக மான்மியம் .... | .... | 33 |
| 9 | அர்ச்சனை மான்மியம் .... | .... | 40 |
| 10 | கந்தர்பூசை மான்மியம் .... | .... | 50 |
| 11 | விஷ்ணு பூசித்த மான்மியம் .... | .... | 53 |
| 12 | பிரமன் பூசித்த மான்மியம் .... | .... | 58 |
| 13 | துர்க்கை பூசித்த மான்மியம் .... | ... | 63 |
| 14 | ஆதிசேஷன் பூசித்த மான்மியம் | ... | 65 |
| 15 | உபமந்யு பேறுபெற்ற மான்மியம் | ... | 69 |
| 16 | திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் நளிர் சுரந்தீர்ப்பித்த மான்மியம் | ... | 76 |
| | **காந்த காண்டம்** | | |
| 17 | சூரனாதியர் செயற்கை ... | ... | 92 |
| 18 | ஷண்முகருற்பவம் ... | ... | 100 |
| 19 | ஷண்முகர் செயற்கை ... | ... | 106 |
| 20 | சூரபன்மன் வதை ... | ... | 116 |
| 21 | முருகர் சிவார்ச்சனை ... | ... | 122 |
| 22 | வள்ளிநாயகியார் உற்பவம் ... | ... | 129 |
| 23 | வள்ளிநாயகியார் திருமணம் ... | ... | 130 |
| | **தீர்த்த காண்டம்** | | |
| 24 | கணபதி தீர்த்த மான்மியம் | விநாயகர் தீர்த்தங்களமைத்தல் | 136 |
| 25 | விஷ்ணுதீர்த்தம் | காந்தருவ ஜயந்தன் கதை | 140 |
| 26 | பிரமதீர்த்தம் | தீர்த்தப் பெருமை | 145 |
| 27 | துர்க்கை தீர்த்தம் | மகிஷாசுரவதம் | 146 |
| 28 | நாகதீர்த்தம் | தீர்த்தப் பெருமை | 148 |
| 29 | சிவதீர்த்தம் | தன்மமுனிவர் சரிதம் | 150 |
| 30 | குமாரதீர்த்தம் | வாணாசுர கர்வபங்கம் | 152 |
| 31 | பாவநாசதீர்த்தம் | சுமதிதிடமதி சரிதம் | 159 |
| 32 | தன்மதீர்த்தம் | கபாலாபரணராக்ஷச வதம் | 163 |
| 33 | இந்திர தீர்த்தம் | ” | 166 |
| 34 | வைரவதீர்த்தம் | மநோஜயராஜன் சரிதம் | 167 |

| நெ. | | விஷயம் | பக்கம் |
|---|---|---|---|
| 35 | வாணதீர்த்தம் | தீர்த்தப் பெருமை | 175 |
| 36 | தேநுதீர்த்தம் | காமதேநு சிவலிங்க பூஜை செய்தல் | 176 |
| 37 | க்ஷீரதீர்த்தம் | தீர்த்தப் பெருமை | 177 |
| 38 | ஷண்முகதீர்த்தம் | தன்ம ஜகராஜ சரிதம் | 178 |
| 39 | சர்வதீர்த்தம் | தீர்த்தப்பெருமை | 180 |
| 40 | அக்கினிதீர்த்தம் | கிரஹபதி அக்கினிதேவனானமை | 181 |
| 41 | யமதீர்த்தம் | சுவேதன் சரிதம் | 184 |
| 42 | குபேரதீர்த்தம் | குணநிதி குபேரனானமை | 186 |
| 43 | சூரியபுஷ்கரணி | தக்ஷயாகம் | 190 |
| 44 | சந்திரபுஷ்கரணி | தாராசசாங்கம் | 192 |
| 45 | செங்கமலதீர்த்தம் | லக்ஷ்மிநோற்றமை | 196 |
| 46 | வருணதீர்த்தம் | மூதேவி வரம்பெற்றமை | 199 |
| 47 | சத்தகன்னியர் தீர்த்தம் | இரதிதேவி நோற்றமை | 200 |
| 48 | நிருதிதீர்த்தம் | புராசரர் சரிதம் | 204 |
| 49 | சத்தரிஷி தீர்த்தம் | நவராத்திரி விரத வரலாறு | 207 |
| 50 | இராமதீர்த்தம் | காயாத்திரிதேவி வரம் பெற்றமை | 211 |
| 51 | வாயுதீர்த்தம் | வாயு பூசித்தல் | 213 |
| 52 | ஈசானதீர்த்தம் | ஜயந்தன் காக உருவம் நீங்கல் | 214 |
| 53 | சரசுவதி, கங்கை, யமுனை தீர்த்தம் | சரசுவதி, கங்கை யமுனை மூவரும் வரம் பெறல் | 216 |
| 54 | ஜாம்பவந்த தீர்த்தம் | தேவஸ்தான அதிகாரி நாய்ப் பிறவி பெற்றமையும் நீங்கினமையும் | 217 |
| 55 | மயேந்திரதீர்த்தம் | மயன் வரம்பெற்றமை | 220 |
| 56 | தீர்த்த நிலை | அந்த அந்த தீர்த்தங்களுள்ள இடங் கூறல் | 220 |
| 57 | சிங்கவன்மன் சாப விமோசனம் | சிங்கவன்மன் திருவிழா நடப்பித்தல் | 222 |
| 58 | திருவிழா | ... ... | 230 |
| 59 | பாண்டவச் சருக்கம் | பாண்டவர் வரம் பெறல் | 233 |
| 60 | பாண்டிய தீர்த்தம் | பாண்டியன் மேகத்தைச் சிறைப்படுத்தும் அருள் பெற்றமை | 235 |
| 61 | மலைகாவலராக்கியது | மலைகாவலர் பெருமை | 239 |
| 62 | கல்லிடபத்துக்குக் கடலையருத்தியது | சிவப்பிரகாசர் சரிதம் | 241 |
| 63 | ஊமை பேசுவித்தது | செல்லும் தேர்க்காலில் கிடத்திய குழந்தை அபாய மின்றி எழுந்து பேசியது | 253 |
| 64 | மேய்ப்போனாக வந்தது | குணசீலனுக்காக குமாரர் மாடுமேய்ப்போனாகவந்தது | 262 |

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

——:O:——

பிரமசூத்திரம், ஸ்ரீகண்டபாஷியம் முதலிய தமிழ் நூலாசிரியராகிய

விருதுபட்டி

## ஸ்ரீலஸ்ரீ, சிவஞானயோகிகள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தங்கோட்ட மில்லுருவிற் சிவஞ்சத்தி யிணைந்திலகுந் தலமாநற் சீர், செங்கோட்டு மான்மியத்தை முத்துசுவாமிப்புலவன் றமிழ்ராங்காணு, வங்கோட்டு விவேக திவா கரத்தலைவ னன்றியற்றி யளித்தான்வேதக், கங்கோட்டி லவிர்பொருளின் பாலன்பாற் றமிழ்நடையிற் கவின மாதோ.

சித்தாந்த வசனபூஷணம் திருவான்மியூர்ப் புராணமுதலிய

நூலாசிரியராகிய

சென்னை - அஷ்டாவதானம்,

மகா-௱-௱-ஸ்ரீ

## பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்பூத்த நறுங்கொன்றை பொலிசடையெஞ் சிவபெருமான் புனிதமான, மன்பூத்த மனத்திடைநின் றறிவிக்க வுலகியலை மகிழ்வி னோர்ந்து, முன்பூத்த புவியினிடைற் றிருந்தியசெங் கோனடாத்தி முழுது மாண்ட, தென்பூத்த வெழிற்சேர மான்பெருமாட்குரிய கொங்கு தேசந்தன்னில்.

அருவினினற் சிவஞ்சத்தி சமவாய மாயிருந்தங் கருளும் பான் மை, யுருவினிலு மேயுலகி னில்விளக்க விருவடிவமொன்ற தாகி, மருவி யிருந்தடியவருக் கருள்சுரக்கு மகிமையினை மருவிநாளுந் திருவளருந் தன்னிகரி லொருமலையாத் திகழ்கின்ற திருச்செங்கோட்டில்.

தண்ணளிசே ருயர்த்த நாரீசன் குமரேசன் றம்பானோர்ந்த,
வெண்ணரிய மகிமையா ருந்தேற வடமொழிநூலினிது சூழ்ந்து, நண்
ணியசெந் தமிழதனிற் சுவைபலவோடலங்கார நயங்கள் மேவும்,
வண்ணமுறைத் தனன்றிருச்செங் கோட்டுமான் மியவசனம் வைய
மேத்த.

உலகனைத்து மேபரவிச் சிவமணமெங்கணும்வீசி யுண்மை தேராக்,
கலதியராம் புறச்சமயர் வாயடக்கிக் காவலர்கள் கரத்திலேந்தி, யில
குறுநல் விவேகதிவா கரன்பத்தி ராதிபனென் றெவரும் வாழ்த்த, நல
மிகுசீர் குலத்திலகியுயர்முத்து சாமியெனு நாவலோனே

சிவமஹாபுராணவசனம் சிவபராக்கிரம முதலிய நூலாசரியராகிய

சென்னை தமிழ்ப்பண்டிதர்

மகா-௱-௱-ஸ்ரீ

## ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்

பாடிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

புகலியர்கோன் குளிர்முன்னும் பிணிதவிர்த்த செங்கோட்டுப்
புகழ்ப்பாற்றேயல், இகலின்மனத் தாழியினி லறிவன்பாந் தறிபாசத்
திறுகவாட்டி, அகல்வனிப் புலவர்களி கொளவளைதந் தன்டனெ வளித்
தான் மாண்பு புகலுவதற் கெல்லையின்முத் துச்சாமி விவேகதிவாகர
பூமானே

மதுரை ஜில்லா முறையூர்

## ஸ்ரீமான் - பழ-சி. ஷண்முகஞ் செட்டியாரவர்கள்

சமுக வித்துவானும், தமிழ்ச்செய்யுட் சிந்தாமணி

முறையூர்ப்புராண முதலிய நூலாசிரியருமாகிய

கொட்டாம்பட்டி

## மகா-௱-௱-ஸ்ரீ எம். கருப்பையாப் பாவலரவர்கள்

இயற்றியன.

கலிவிருத்தம்.

அங்குவளை வேல்விழியி யங்குவளைக் கையார்
இங்கித மினார்கவொழிற் சிங்கிதமென் சொல்வேன்
சங்குமுலை கூந்தல்களஞ் சங்குமுலை முன்னீள்
கொங்குவள நாடுமுயர் கொங்கு வள நாடு.

இந்தவள நாட்டினிடை யிந்தவள வாய்வி
தந்தவள நெற்றியுமை தந்தவளப் பாலுண்
டந்தமிழ்த ஞானருண யந்தமிழ்த ஞான்சொல்
செந்தமிழ் கொண்டின்பொடுபல் செந்தமிழ்செங் கோடு.

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திருக்கொடிமாடஞ் செறிந்துயர்ந்தாடித் தேவரோடேவர்க்குஞ் சிறுமைத், திருக்கொடிமாடந் திகழ்தரலானுஞ் செல்வமிக் கோங்கிடச் செய்யுந், திருக்கொடிமாடந் திருநடம்புரியச் சிறந்துமை சிவனுற லானுந், திருக்கொடிமாடச் செங்குன்றூரென்னச் செப்புவரித் திரு நகரே.

இன்னமாநகரமான்மிய மனைத்துமியற் புலவோருளங்களிப்ப, வன்னமான கலாக்கரத்தினன் மகிழ்வாய் மன்றிடை நடிப்பவான்றமி ழில், உன்னமாநலஞ் சேர்வசனமாவுரைத் திங்குலகெலாமுணர்ந்துயக் கொடுத்தான், அன்னமானவன் யாரெனிலவ்வூரினிலெம்மாயர் தம்மர பில் வாழரசன்.

அருத்தநாரிக்கோனருட்டவ முதிர்ந்தோரன்பெலாஞ் சிவனிடை வகித்த, கருத்தனாந்தமிழாந்திரம் வடமொழிக்குங் கருத்தனாப்பிறந்த சொற்கருத்தன், திருத்தனாந்துறை சையம்பலவாணன்றிருவடிப்பத்தி கொடிருவன், விருத்தனாகாமற் பயன்பெறு மெய்யன்விழை மினார்க் கெழின்மிகு மெய்யன்.

சேற்கரவிழியார்தினமயல்கொள்ளத் திருவளர் முகவையாள் செல்வன்
பாற்கரசேதுபதி மதித்தன்புபதித்த சன்மான முற்றுள்ளோன்
மாற்கரற்கொன்று மகிமையை நன்று மகிழ்ந்திடவழுத்திடும்வள்ளல்
வேற்கரனருளால்வினை செய்மும்மலநோய் வேரறுத்திடவலமேலோன்

சைவசித்தாந்த சண்டமாருத மாத்தரு பெயர்பூண்டுயர் சிவமாம்
மெய்வசி சோமசுந்தரமுகிற் குமிகுவிசுவாசமேவினவன்
கைவசி நெல்லிக்கனியெனக் கிடைத்த கனிவுறுமெமது நட்டாளன்
பொய்வசியாத புகழ் முத்துசாமிப்புனித சற்குணங் கொளற்புதனே.



# பொருளடக்கம்.


| நெ. | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் .... .... | 1 |
| 2 | மான்மிய வரலாறு .... .... | 2 |
| | **பர்வத காண்டம்** | |
| 3 | நாககிரி மான்மியம் .... .... | 6 |
| 4 | கிரிவரலாறு .... .... | 14 |
| 5 | வந்தியாபாடாணம் .... .... | 18 |
| 6 | பிருங்கி தரிசன மான்மியம் .... .... | 22 |
| 7 | உமைதவ மான்மியம் .... .... | 26 |
| 8 | அர்த்தபாக மான்மியம் .... .... | 33 |
| 9 | அர்ச்சனை மான்மியம் .... .... | 40 |
| 10 | கந்தர்பூசை மான்மியம் .... .... | 50 |
| 11 | விஷ்ணு பூசித்த மான்மியம் .... .... | 53 |
| 12 | பிரமன் பூசித்த மான்மியம் .... .... | 58 |
| 13 | துர்க்கை பூசித்த மான்மியம் .... ... | 63 |
| 14 | ஆதிசேஷன் பூசித்த மான்மியம் ... | 65 |
| 15 | உபமந்யு பேறுபெற்ற மான்மியம் ... | 69 |
| 16 | திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் நளிர் சுரந்தீர்ப்பித்த மான்மியம் ... | 76 |
| | **காந்த காண்டம்** | |
| 17 | சூராதியர் செயற்கை ... ... | 92 |
| 18 | ஷண்முகருற்பவம் ... ... | 100 |
| 19 | ஷண்முகர் செயற்கை ... ... | 106 |
| 20 | சூரபன்மன் வதை ... ... | 116 |
| 21 | முருகர் சிவார்ச்சனை ... ... | 122 |
| 22 | வள்ளிநாயகியார் உற்பவம் ... ... | 129 |
| 23 | வள்ளிநாயகியார் திருமணம் ... ... | 130 |
| | **தீர்த்த காண்டம்** | |
| 24 | கணபதி தீர்த்த மான்மியம் ... ... | 136 |
| 25 | விஷ்ணுதீர்த்த மான்மியம் ... ... | 140 |
| 26 | பிரமதீர்த்த மான்மியம் ... ... | 145 |
| 27 | துர்க்கை தீர்த்த மான்மியம் ... ... | 146 |
| 28 | நாகதீர்த்த மான்மியம் ... ... | 148 |

| நெ. | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 29 | சிவதீர்த்த மான்மியம் | ... | ... | 150 |
| 30 | குமாரதீர்த்த மான்மியம் | ... | ... | 152 |
| 31 | பாவநாச தீர்த்த மான்மியம் | ... | ... | 159 |
| 32 | தன்மதீர்த்த மான்மியம் | ... | ... | 163 |
| 33 | இந்திரதீர்த்த மான்மியம் | ... | ... | 166 |
| 34 | வைரவதீர்த்த மான்மியம் | ... | ... | 167 |
| 35 | வாணிதீர்த்த மான்மியம் | ... | ... | 175 |
| 36 | தேநுதீர்த்த மான்மியம் | ... | ... | 176 |
| 37 | க்ஷீரதீர்த்த மான்மியம் | ... | ... | 177 |
| 38 | ஷண்முக தீர்த்த மான்மியம் | ... | ... | 178 |
| 39 | சர்வதீர்த்த மான்மியம் | ... | ... | 180 |
| 40 | அக்கினிதீர்த்த மான்மியம் | ... | ... | 181 |
| 41 | யமதீர்த்த மான்மியம் | ... | ... | 184 |
| 42 | குபேரதீர்த்த மான்மியம் | ... | ... | 186 |
| 43 | சூரிய புஷ்கரணி | ... | ... | 190 |
| 44 | சந்திர புஷ்கரணி | ... | ... | 192 |
| 45 | செங்கமலை தீர்த்த மான்மியம் | ... | ... | 196 |
| 46 | வருணதீர்த்த மான்மியம் | ... | ... | 199 |
| 47 | சத்தகன்னியர் தீர்த்த மான்மியம் | | ... | 200 |
| 48 | கிருதி தீர்த்த மான்மியம் | ... | ... | 204 |
| 49 | சத்தரிஷி தீர்த்த மான்மியம் | ... | ... | 207 |
| 50 | இராமதீர்த்த மான்மியம் | ... | ... | 211 |
| 51 | வாயு தீர்த்த மான்மியம் | ... | ... | 213 |
| 52 | ஈசான தீர்த்த மான்மியம் | ... | ... | 214 |
| 53 | சரசுவதி, கங்கை, யமுனை தீர்த்த மான்மியம் | | ... | 216 |
| 54 | ஜாம்பவந்த தீர்த்த மான்மியம் | | ... | 217 |
| 55 | மயேந்திர தீர்த்த மான்மியம் | ... | ... | 220 |
| 56 | தீர்த்த நிலை | ... | ... | 220 |
| 57 | சிங்கவன்மன் சாபவிமோசன மான்மியம் | | ... | 222 |
| 58 | திருவிழா மான்மியம் | ... | ... | 230 |
| 59 | பாண்டவச் சருக்கம் | ... | ... | 233 |
| 60 | பாண்டீசுர மான்மியம் | ... | ... | 235 |
| 61 | மலைகாவலராக்கிய மான்மியம் | ... | ... | 239 |
| 62 | கல்லிடபத்துக்கு கடலையருத்திய மான்மியம் | | ... | 241 |
| 63 | ஊமையைப் பேசுவித்த மான்மியம் | | ... | 253 |
| 64 | மேய்ப்போறுகை வந்த மான்மியம். | | ... | 262 |

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளருளிய

# தேவாரம்.

---

## திருக்கொடிமாடச் செங்குன்றூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வந்தணனைத்தொழுவாரவலம்மறுப்பாரே. (1)

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாக
மலைமகள் கூறுடையான்மலையாரிளவாழைக்
மலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
தலைமகனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (2)

பாலனநீறுபுனைதிகழ்மார்பிற்பல்வளைக்கைநல்ல
வேலமலர்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மல்கு
நீலநன்மாமிடற்றான்கழலேத்தல்நீதியே. (3)

வாருறுகொங்கைநல்லவடவாள்திகழ்மார்பினண்ணு
காருறுகொன்றையொடுங்கதநாகம்பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
நீருறுசெஞ்சடையான்கழலேத்தல்நீதியே. (4)

பொன்றிகழாமையொடுபுரிநூறிகழ்மார்பினல்ல
பன்றியின்கொம்பணிந்துபனைத்தொளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர்வானின்
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தல்மெய்ப்பொருளே. (5)

ஓங்கியமூவிலைநற்சூலமொருகையன்சென்னி
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்வாய்ந்த
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே. (6)

நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழவெள்ளை
வாடலுடைதலையிற்பலிகொள்ளும்வாழ்க்கையனாய்க்
கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
சேடனதாள்தொழுவார்வினையாயதேயுமே. (7)

மத்தநன்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன்றுன்று
தொத்தலர்செஞ்சடைமேற்றுதையவுடன்சூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
தத்துவனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (8)

செம்பொனின்மேனியனாம்பிரமன்றிருமாலுந்தேடநின்ற
வம்பலத்திரள்போலொளியாயவாதிபிரான்
கொம்பணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (9)

போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கூறும்பொய்ந்நூ
லோதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வேதியனைத்தொழநும்வினையானவீடுமே. (10)

அலைமலிதண்புனல்சூழ்ந்தழகார்புகலிந்நகர்பேணுந்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான்கொடிமாடச்செங்குன்றூரேத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (11)

திருச்சிற்றம்பலம்.

## திருநீலகண்டம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்மஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
சேய்வினைவந்தெம்மைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (1)

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்தீரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோந்
தீவினைவந்தெம்மைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (2)

முலைத்தடமூழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
விலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினை தீண்டப்பெறாதிருநீலகண்டம் (3)

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம் (4)

மற்றிணையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொலோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துன்றிருவடியேயடைந்தோஞ்
செற்றமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம் (5)

மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (6-7)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடுவந்துமையேத்து துநாமடியோஞ்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம் (8)

நாற்றமலர்மிசைநான்முகனாரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுநாமடியோஞ்
சீற்றமதாம்வினைதீண்டப்பெறாதிருநீலகண்டம் (9)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைபுரிசடையீரடிபோற்றுகின்றோம்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (10)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
னிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கட்
டிறம்பயில்ஞானசம்பந்தன்செந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. (11)

திருச்சிற்றம்பலம்.

உ

## கபிலதேவநாயனார் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதி.

சிவன்மாட் டுகவெழுது நாணு நகுமென்னுஞ்
சிவன்மேய செங்குன்றூ ரென்னுஞ்—சிவன்மாட்டங்
காலிங் கனநினையு மாயிழையீ ரங்கொன்றை
யாலிங் கனநினையு மாறு.

உ

குமரன் துணை.

## அருணகிரிநாதரருளிய

# திருப்புகழ்.

———o———

அன்பாகவந்து நின்றாள் வணங்கி ஐம்பூதமொன்ற நினையாமல்
அன்பால்மிகுந்து நஞ்சாருகண்க ளம்போருகங்கள் முலைதானும்
கொந்தேமிகுந்து வண்டாடிநின்று கொண்டாடுகின்ற குழலாரைக்
கொண்டேநினைந்து மன்பேது மண்டி குன்றாமலைந்து மலைவேனோ
மன்றாடிதந்த மைந்தாமிகுந்த வம்பார்கடம்பை யணிவோனே
வந்தேபணிந்து நின்றார்பவங்கள் வம்பேதொலைந்த வடிவேலா
சென்றேயிடங்கள் கந்தாஎனும்பொ
செஞ்சேவல்கொண்டு வரவேணும்
செஞ்சாலிகஞ்ச மொன்றாய்வளர்ந்த செங்கோடமர்ந்த பெருமாளே

கரையறவுருகுதல் தருகயல்விழியினர்
கண்டானசெஞ்சொல் மடமாதர்
கலவியில்முழுகிய நெறியினிலறிவுக
லங்காமயங்கும் வினையேனும்
உரையையுமறிவையும் உயிரையுமுணர்வையும்
உன்பாதகஞ்ச மலர்மீதே
உரவொடுபுனைதர நினைதருமடியரொ
டொன்றாகஎன்று பெறுவேனோ
வரையிருதுணிபட வளைபடுசுரர்குடி
வந்தேறஇந்த்ர புரிவாழ
மதவிதகஜாத துரகதபதியின்
வன்சேனைமங்க முதுமீன

திரைமலிசலநிதி முறையிடநிசிசார்
திண்டாடவென்ற கதிர்வேலா
ஜெகதலமிடிகெட விளைவனவயலணி
செங்கோடமர்ந்த பெருமானே

சாலநெடுநாள்மடந்தை காயமதிலேயலைந்து
சாமளவதாகவந்து புவிமீதே
சாதகமுமானபின்பு சீறியழுதேகிடந்து
தாரணியிலேதவழ்ந்து விளையாடி
பாலனெனவேமொழிந்து பாகுமொழிமாதர்தங்கள்
பாரதனமீதணைந்து பொருள்தேடி
பார்மிசையிலேயுழன்று பாழ்நரகெய்தாமலொன்று
பாதமலர்சேர அன்பு தருவாயே
ஆலமுதாகவுண்ட ஆறுசடைநாதர்திங்கள்
ஆடரவபூணர்தந்த முருகோனே
ஆனைமடுவாயிலன்று மூலமெனவோலமென்ற
ஆதிமுதல்நாரணன்றன் மருகோனே
கோலமலர்வாவியெங்கு மேவுபுனம்வாழ்மடந்தை
கோவையமுதூறலுண்ட குமரேசா
கூடிவருசூரடங்க மாளவடிவேலெறிந்த
கோடைநகர்வாழவந்த பெருமானே.

பொன்றலைப்பொய்க் கும்பிறப்பைத் தும்பறுத்திட் டின்றுசிற்கப்
புந்தியிற்சற் றுங்குறிக்கைக் கறியாமே
பொங்கிமுக்கிச் சங்கைபற்றிச் சிங்கியொத்தச் சங்கடத்துப்
புண்படைத்துக் கஞ்சமைக்கட் கொடியார்மேல்
துன்றுமிச்சைப் பண்டனுக்குப் பண்பளித்துச் சம்ப்ரமித்துத்
தும்பிபட்சிக் கும்ப்ரகச்செம் பதிமீதே
தொண்டுபட்டுத் தெண்டனிட்டுக் கண்டுபற்றத் தண்டைவர்க்கத்
துங்கரத்தப் பங்கயத்தைத் தருவாயே
குன்றெடுத்துப் பந்தடித்துக் கண்சிவத்துச் சங்கரித்துக்
கொண்டலொத்திட் டிந்த்ரனுக்கிச் சுரலோக
கொம்புகுத்திச் சம்பழுத்தித் திண்டலத்திற் றண்டுவெற்பைக்
கொண்டமுக்கிச் சண்டையிட்டுப் பெரும்வேழம்

சென்னூரித்திச் சுந்தரிக்கச் சந்தவிர்த்துக் கண்சுகித்துச்
சிந்தையுட்பற் றின்றிநித்தங் களிகூரும்

செண்பகத்துச் சம்புவுக்குத் தொம்பதத்துப் பண்புரைத்துச்
செங்குவட்டிற் றங்குசொக்கப் பெருமாளே.

ஏருனாலே நீருய்மாயா வேளேவாசக் கணையாலே
ஏயாவேயா மாயாவேயா லாமேழோசைத் துளையாலே
மாறாயூறா யீறுய்மாலாய் வாடாமானைக் கழியாதே
வாராய்பாராய் சேராயானல் வாடாநீபத் தொடைதாராய்
சீறுவீறுசுரேழ்பார்சூழ் சீரார்தோகைக் குமரேசா
தேவாசாவா மூவாநாதா தீராகோடைப் பதியோனே
வேறுய்மாறா யாறுமாசூர் வேர்போய்வீழப் பொருதோனே
வேதாபோதா வேலாபாலா வீராவீரப் பெருமாளே.

காலனிடத் தணுகாதே - காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான - தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே - மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே - நாககிரிப் பெருமாளே

பொற்சித்ர பச்சைபட்டுக் கச்சிட்டு கட்டிப்பத்மப்
புட்பத்துக் கொப்புகற்பித் திளைஞோர்கள்

புட்பட்டுச் செப்பத்துப்பர் கொத்தப்பொற் றித்தத்திட்பப்
பொட்பிற் பெற் றுக்ரச் சக்ரத் தனமானர்

கற்சித்தச் சுத்தப்பொய்பித் தத்திற்புக் கிட்டப்பட்டுக்
கைக்குத்திட் டிட்டுச்சுற்றித் திரியாமல்

கற்றுற்றுச் சித்திக்கைக்குச் சித்திப்பப் பக்ஷத்திற்சொற்
கற்பித்தொப் பித்துக்கொற்றக் கழல்தாராய்

குற்சித்துக் கொட்டுக் கொட்டுத் துக்கச்சத் துக்குக்குக்குக்
குக்குக்குக் குக்குக்குக்குக் கெனமாறு

குட்சிக்குப் பக்ஷிக்கைக்குக் கக்ஷத்திற் பட்சத்தத்தக்
கொட்டிச்சுட் டிக் கொக்கரிக்குக் குடதாரி

சற்சித்துத் தொற்புத்திபட் சத்தற்கொப் பித்துச்சத்துச்
சத்தத்தைச் சத்திக்கொச்சைப் பதிவாழ்வே

தட்சப்பற் றுக்கொப்பத்திற் செற்பற்றைச் செற்றிட்டுச்சச்
சற்பப்பொற் றைக்குட்சொக்கப் பெருமாளே

கொடியமறலியு மவனது கடகமு
மடியவொருதின மிருபதம்வழிபடு
குதலையடி யவனினதருள்கொடுபொரு மமர்காண

குறவர்மகள்புணர் புயகிரிசமுகமு
மறுமுகமும்வெகு நயனமும்ரவியுமிழ்
கொடியமகிலமும் வெளிபடஇருதிசை யிருநாலும்

படியுநெடியன எழுபுணரியுமுது
திகிரிதிகிரியும் வருகெனவருதகு
பவுரிவருமொரு மரகததுரகத மிசையேறிப்

பழயஅடியவ ருடனிமையவர்கண
மிருபுடையுமிகு தமிழ்கொடுமறைகொடு
பரவ வருமதி லருணையிலொருவிசை வரவேணும்

சடிலதரவிட தரபணிதரதர
பரசுதரசசி தரசுசிதரவித
தமருகமிருக தரவனிதரசிர தரபாரத்

தரணிதரதனு தரவெகுமுககுல
தடினிதரசிவ சுதகுணதர பணி
சயிலவிதரண தருபுரசசிதரு மயில்வாழ்வே

நெடியவுடலுரு இருளெழநிலவெழ
எயிறுசுழல்விழி தழலெழஎழுகிரி
நெரியஅதிர்குரல் புகையெழஇடியெழ நெடுவானும்

நிலனும்வெருவர வருநிசிசரர்தள
நிகிலசகலமு மடியவொர்படைதொடு
நிருபகுருபர சுரபதிபரவிய பெருமாளே

## கந்தரலங்காரம்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநா
னைவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்

கொழித்தோடுகாவிரிச் செங்கோடனென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கண் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தைமேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேலனைக் கன்னிப் பூகமுடன்
றருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
யாலித் தனந்தன் பணாமுடி தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
வெங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர் நிற்பனே

---

## கந்தரந்தாதி.

தினகராக்கர தங்கெடுத்தார்குரு தேசிகர்செந்
தினகராக்கர மாறுடையார்தெய்வ வாரணத்தந்
தினகராக்கர சத்தியின்றுகிலத் தேவர்கண்ப
தினகராக்கர தந்தீர்வரீர்வர் செகமெங்குமே.

செவிக்குன்றவாரண நல்கிசைபூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்றவாரண மஞ்சலென்றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்றவாரண வேலாயுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்றவாரண வள்ளிபொற்றாண்மற்றென் றேடுவதே.

தெண்டன்புரந்தர வக்குன்றில்வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன்புரந்தர லோகஞ்செறுதுசெற் றோய்களைவாய்
தெண்டன்புரந்தர நற்கேள்சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன்புரந்தர வின்படிநாக்கிய கீநரகே.

தீனந்தினத்து தரச்செல்வர்பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந்தினத்து முதரானலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனந்தினத்து ணிகளைசெங்கோட்டினன் செந்திலந்நீர்
தீனந்தினத்து தவத்துப்பிரசதஞ் செய்யவற்றே.

சிகண்டிதத்தத்த மரவாரிவிட்ட திதிபுத்ரரா
சிகண்டிதத்தத்த நகபூதரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத்தத்த மலர்மேற்குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத்தத்த கற்போபலமென்னுஞ் சேகரனே.

சேகரவாரண வேல்வீரவேடச் சிறுமிபத
சேகரவாரண மேவும்புயாசல தீவினையின்
சேகரவாரண வெற்பாளநாளுந் த்ரியம்பகனு
சேகரவாரண நின்கையில்வாரணஞ் சீவனென்றே.

தென்றலையம்பு புனைவார்குமார திமிரமுந்நீர்த்
தென்றலையம்புய மின்கோமருக செழுமறைதேர்
தென்றலையம்பு சகபூதரவெரி சிந்திமன்றற்
தென்றலையம்பு படுநெறிபோயுயிர் தீர்க்கின்றதே.

சித்தத்தரங்கத்தர் சித்தியெய்தத்திரி கின்றதென்னர்ச்
சித்தத்தரங்கத்தர் சந்ததியேசெந்தி லாய்சலரா
சித்தத்தரங்கத்தர் தரக்கரைச்செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத்தரங்கத்தர் சேயாரணத்தந் திகிரியையே.

திகிரிவலம்புரி மாற்கரியார்க்குப தேசஞ்சொன்ன
திகிரிவலம்புரி செய்யாரிலஞ்சி செந்தூர் கனதந்
திகிரிவலம்புரி வெறும்படைத்தருள் சேய்தணியில்
திகிரிவலம்புரி சூடியவாகன்று சேடியின்றே.

# X

## கந்தரனுபூதி.

கூகா வென வென்கிளை கூடியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோக மணியே

---

சிலப்பதிகாரம். குன்றக்குரவை

பாட்டு மடை.

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று
மேரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

—o—

சிவமயம்.

உபமன்யு முனிவர் அருளிய

# அர்த்தநாரீஸ்வர அஷ்டகம்.

## சுலோகம்.

1 அம்போதர, ச்யாமள குந்தலாயை, தடித்ப்ர
பாதாம்ர ஜடாதராய, நிரீச்வராயை
நிகிலேச்வராய, நமச்சிவாயைச நமச்சிவாய

### பதவுரை

அம்போதர-நீருண்ட மேகம்போல், சியாமள-கருப்பான, குந்தலாயை-வகுடின்பிரதேசத்தை உடையவளாயும், நிரீச்வராயை-தன்னைத் தவிர வேறொருவனை எஜமானியாயில்லாமலிருக்கிற, சிவாயைச-பார்வதி தேவியின் பொருட்டும், நமஹ-நமஸ்கரிக்கின்றேன். தடித்-மின்னல்களுடைய ப்ரபா-ஒளிபோல் தாம்ர-தாம்ரவர்ணமான ஜடா-ஜடைகளை தராய-தரித்தவராயும் நிகிலேச்வராய-எல்லாவற்றிற்கும் ஈசனான சிவாய-பரமசிவனின் பொருட்டும், நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

### பொழிப்புரை

நீருண்ட மேகம்போல் கருத்தவகுட்டை உடையவளாயும், சகலத்திற்கும் தானெஜமானியாயும், மின்னல்களின் ஒளிபோல் பிரகாசித்து நீண்ட ஜடாபாரங்களை உடையவராயும், எல்லாவற்றிற்கும் எஜமானராயுமுள்ள அர்த்தநாரீசுவரரை நமஸ்கரிக்கின்றேன்.

## 2 சுலோகம்.

கஸ்தூரிகா சந்தன லேபனாயை ச்மசானபஸ்மா
ங்கவிலேபநாய, திவ்யாம்பராயைச, திகம்பராய
நமச்சிவாயைச நமச்சிவாய.

### பதவுரை

கஸ்தூரிகா-கஸ்தூரியோடு கலந்த, சந்தந-சந்தனத்தின், லேபனாயை-பூச்சை உடையவளாயும், திவ்யாம்பராயை-திவ்யமான மனதிற்கினிய, அம்பராயை-வஸ்திரத்தை அணிந்தவளாயிருக்கிற - சிவாயைச-பார்வதியின் பொருட்டு, நமஹ-நமஸ்காரம் செய்கின்றேன். (அவ்

வாறு) ச்மசாநமுது-காட்டிஉள்ள, பஸ்ம்-விபூதியை,அங்கவிலேபனுய-சரீரத்திலணிந்தவராயும், திகம்பராய-அவதூதராயுமிருக்கிற, சிவாயச-சிவனின் பொருட்டும் நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை

கஸ்தூரி புனுகு முதலிய வாசனைத்திரவியங்கள் சேர்ந்த சந்தன மணிந்து, மிக்க அழகான புடவையை தரித்தவளாயும், ருத்ர பூமியில் உள்ள விபூதியை அணிந்து திகம்பரராயுமிருக்கிற, ஸ்ரீ அர்த்தநாரீசுவரரை நமஸ்கரிக்கின்றேன்.

3வது சுலோகம்

பாதார விந்தாச்ருத ஹம்ஸிகாயை பாதாப்ஜ
ராஜத்பணிசேகராய, கலாமயாயை விகலாமயாய
நமச்சிவாயைச நமசிவாய.

பதவுரை

பாதாரவிந்த-தாமரை போன்ற பாதங்களை, ஆச்ரித-அடைந்த ஹம்ஸிக-தண்டைச்சிலம்புகளை உடைவளாயும், கலாமயாயை-கலைகளின் ஸ்வரூபமாயுமுள்ள சிவாயைச-பார்வதியின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கிறேன்-பாதாப்ஜராஜத் பணிசேகராய-தாமரை போன்ற பாதங்களில் விளங்குகிற ஆதிசேஷனை உடையவராயும், விகலாமயாய-விசேஷ கலைகளின் தத்துவமான, சிவாயச-சிவனின் பொருட்டும், நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை

செந்தாமரை மலர்களுக்கு ஒப்பானபாதங்களில் தண்டைச் சிலம்புகளை தரித்து, ஸகல கலைகளின் ஸ்வரூபமானவளாயும்,அவ்வாறே பத்மங்கள் போன்ற தன் கால்களினடியில் ஆதிசேஷன் பணிந்து நிற்க, ஸகல கலைகளின் தத்வப் பொருளான, ஸ்ரீ அர்த்தநாரீச்வரரை நமஸ்கரிக்கின்றேன்.

4வது சுலோகம்

உத்புல்ல நீலோத்பல லோசனையை, க்ருசானு
சந்த்ரார்க்க விலோசநாய, ஸமேக்ஷணயை
விஷமேக்ஷணய நமச்சிவாயை நமச்சிவாய

பதவுரை

உத்தபுல்ல- மலர்ந்த, நீலோத்பல-நீலோத்பலமென்ற கருமையான நைதல் மலர் போன்ற, லோசனயை- கண்களை உடைவளாயும்

ஸமேக்ஷணாயை- (அன்புவாய்ந்த) ஸமமான பார்வைகளையுடைய வளாயுமுள்ள, சிவாயைச-பார்வதியின் பொருட்டும், நமஹ-நமஸ்கரிக்கிறேன். (அவ்வாறே) க்ருசானு-அக்னியென்ன-சந்த்ர-சந்திரவென்ன, அர்க்க-சூரியனென்ன, (ஆகிய) இவர்களைக்கண்களில் வகித்தவராயும், விஷமேக்ஷணாய-கொஞ்சம் விஷமமானபார்வைகளையுடைய, சிவாயச-பரமசிவனின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

## பொழிப்புரை

அன்றுமலர்ந்த நூதனமான கருநெய்தல் மலர் போன்ற கண்களை உடையவளாயும், அன்புவாய்ந்தவைகளான பார்வையை உடையவளாயும், அக்நி, சந்திர, சூரியர்களை, நேத்திரங்களாக உடையவருமான, கோணலான பார்வையை உடைய ஸ்ரீ அர்த்தநாரீச்வரரைப் பணிகின்றேன்.

## 5வது சுலோகம்

விசித்திர ரத்னோஜ்வல குண்டலாயை, ஸ்புரத்மஹா
பந்நககுண்டலாய, சிவப்ரியாயைச, சிவாப்ரியாய,
நமச்சிவாயைச, நமச்சிவாய.

## பதவுரை

விசித்ர-நாநாவர்ணங்களான, ரத்ந-ரத்னகற்களாலிழைத்ததாயும், உஜ்வல-பிரகாசிக்கிற, குண்டலாயை - குண்டலங்களை தரித்தவளாயும், சிவப்ரியாயைச - சிவனிடமன்புவாய்ந்தவளான, சிவாயை-பார்வதியின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கின்றேன். (அவ்வாறே) ஸ்புரத்-பிரகாசிக்கிற, மகாபந்நக-பெரியபாம்புகளை,குண்டலாய-குண்டலங்களாக உடையவராயும், சிவாப்ரியாய-பார்வதியினிடமன்பு வாய்ந்த, சிவாய-பரமசிவனின் பொருட்டு, நமக-நமஸ்கரிக்கின்றேன்.

## பொழிப்புரை

அநேகவர்ணங்களுள்ள, நல்ல ரத்னகற்களாலிழைத்த, குண்டலங்களால், பிரகாசிக்கிறவளாயும், பரமசிவனிடம் அன்புவாய்ந்தவளாயும், (அவ்வாறே) பெரிய பாம்புகளை குண்டலமாய்ப் பெற்று, பார்வதி தேவியிடமன்புவாய்ந்தவராகிய, ஸ்ரீ அர்த்தநாரீச்வரரை நமஸ்கரிக்கின்றேன்.

## 6வது சுலோகம்

மந்தாரமாலாகலிதாளகாயை கபாலமாலாங்கித
சேகராய, க்ருதஸ்மராயை விக்ருதஸ்மராய நமச்சிவாயைசு
நமச்சிவாய

பதவுரை

மந்தாரமாலா- மந்தாரமலர்களின் மாலையால், கலித-செய்யப்பட்ட,(அலங்கரிக்கப்பட்ட) அளக-கூந்தலை உடையவளாயும்,

க்ருதஸ்மராயை- மன்மதனைபிழைக்கவைத்தவளாயுமிருக்கிற சிவாயை-பார்வதிதேவியின் பொருட்டு, நமஹ - நமஸ்கரிக்கின்றேன் (அவ்வாறே) கபாலமாலா - மண்டைஓடுகளின் மாலைகளை, சேகராய சிரோபூஷணமாக வகித்தவராயும், விக்ருதஸ்மராய-மன்மதனையெரித்த சிவாய-பரமசிவனின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை

நல்மணம் பொருந்திய மந்தாரமாலையை சிரஸில் சூடிக்கொண்டும் மன்மதனை உயிர் பிழைக்கச்செய்தவளாயும், (அவ்வாறே) மண்டை ஓடுகளை, மாலையாகச்செய்து தலையிலணிந்து, மன்மதனையழித்தவருமான அர்த்தநாரீச்வரரை நமஸ்கரிக்கின்றேன்.

## 7வது சுலோகம்

ப்ரபஞ்சஸ்ருஷ்டிஸ்திதிகாரணாயை, ஸமஸ்த
ஸம்ஹாரகதாண்டவாய, ஜகஜ்ஜநந்யை
ஜகதேகபித்ரே, நமச்சிவாயைச நமச்சிவாய,

பதவுரை

பிரபஞ்ச-உலகங்களின், ஸ்ருஷ்டி-ஸ்ருஷ்டி ஸ்திதி-இருப்பு (இவைகளுக்கு) காரணையாயும், உலகத்திற்கே அன்னையாயுமிருக்கிற சிவாயை-பார்வதியின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கிறேன். (அவ்வாறே) ஸமஸ்தஸம்ஹாரக, தாண்டவாய-ஸமஸ்தங்களையும் ஸம்ஹரித்து (தாண்டவம்) நர்த்தனம் செய்கிறவராயும், உலகத்திற்கேதந்தையுமான சிவாய-பரமசிவனின் பொருட்டு, நமஹ-நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை.

பிரபஞ்சங்களை ஸ்ருஷ்டித்தும், காப்பாற்றுவதற்கும் முக்கிய காரணமாயும், உலகத்திற்கே தாயாராயும், அவ்வாறே பிரபஞ்ச, ஸம்ஹாரம் செய்து ஸந்தோஷத்தால் நடனம் புரிந்தும் உலகங்களுக்கு தந்தையுமான ஸ்ரீ அர்த்தநாரீசுவரரை நமஸ்கரிக்கின்றேன்.

# XV

## 8வது சுலோகம்

அந்தர்பஹிச் சோர்த்வ, மதச்சமத்யே
புரச்ச பச்சாச்ச விதிட்சு திட்சு
ஸர்வம்கதாயை ஸகலம் கதாய
நமச்சிவாயையச நமச்சிவாயா

### பதவுரை

அந்தஹ- உள்ளேயும், பஹி-வெளியிலும் ஊர்த்வ- மேலும், அதச்ச-கீழும், மத்யே-மத்தியிலும், ஸர்வம் கதாயை- எல்லாவற்றையு மடைந்தவளாயுமிருக்கிற, சிவாயை - பார்வதியின் பொருட்டு, நமஹ- நமஸ்காரம் செய்கின்றேன். (அவ்வாறே) புரச்ச - முன்னும், பச்சாச்ச- பின்னும், விதிக்ஷு-திட்சு - ஒவ்வொருதிக்குகளிலும் ஸகலம் கதாய - எல்லாவற்றிலும் வியாபித்த, சிவாய சங்கரின் பொருட்டு, நமஹ நமஸ்கரிக்கிறேன்.

### பொழிப்புரை

உள்ளும்புறம்பும் மேலும் கீழும் மத்தியிலும் வியாபித்து எங்கும் வசிக்கிறவளாயும் முன்னும் பின்னும் ஒவ்வொரு திக்குகளிலும் ஏங்கும் வியாபித்துமுள்ள அர்த்தநாரீசுவரரை நமஸ்கரிக்கின்றேன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

—o—

# திருச்செங்கோட்டு மான்மியம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

சீரார் பரைபாகன் செங்கோட்டு மான்மியநற்
பேரார் நடையெழுதப் பெற்றிதரும் - ஓர்கோடு
செங்கைபெற்றப் பாரதமுந் தீட்டியிடர் மாற்றவரு
கங்கைபெற்ற முக்கட் களிறு.

### அர்த்தநாரீசுவரர்

கார்மின் முடிகருணை காலவங்கள் சூடகத்தின்
*சீர்மின் னவிர்கைமணி சீறரவ- மேர்பணிகொள்
†நாகமலை வாமனெம்மு னண்ணியரு ளல்குமுயர்
நாகமலை மான்மியம்பன் ன.

### சமயகுரவர், சண்டிகேசுரர், மற்றைநாயன்மார்.

என்புநங்கை பாறைபுணை யிட்டிகைபொன் சம்பயமாய்
அன்புசெறி செந்தமிழா லாக்குவித்தோர் - தன்குரவன்
றுளெறிந்தோ னுதியிறை தாளணைந்தோ ரன்பரன்பர்
தாளையுளத் தேதரித்தேன் றாழ்ந்து.

### அகம்படிமை, புறம்படிமை.

நல்லா கமவழித்தாய் நாரீ சனைத்தொடுவோர்
சொல்லவிநீர் சாந்தந் தொடையமைப்போர்-அல்லலற
ஆடல்பா டல்புரிவோ ராய்ந்தோய்ந் தலகிடுவோர்
தாடலைவைத் தேனன்பு சார்ந்து.

---

* சீர்=தண்டாயுதம்; † நாகு+அமலை=நாகமலை.

# மான்மிய வரலாறு.

—(o)—

கடல்புடை சூழ்ந்த இப்பூவுலகத்தின்கண் ஐம்புலன்களை அடக்கும் வன்மைபூண்ட தவமுனிவர்கள் செய்யும் யாகத்திற்கு வேண்டிய பொருள்களை வேண்டியவாறு கொடுத்தற்குத் தெய்வத்தன்மை பொருந்திய காமதேனு, கற்பகம் முதலிய பஞ்சதருக்கள், புண்ணிய தீர்த்தங்கள், யாகசாலை, யோகசாலை, அத்தியயனசாலை, பர்ணசாலை, பூஜாசாலை முதலியனவற்றாற் சிறந்து விளங்கும் நைமிசாரணியத்திலே பெருகிய தவசிரேட்டராகிய வசிட்டர், புலகர் புலஸ்தியர், கண்ணுவர் கர்க்கர், அங்கிரா, கபிலர், கவுதமர், கிருது, பராசரர், பரத்துவாசர், சத்தியர், சுமந்து, சைமினி, வைசம்பாயனர், ககோளர், தீர்த்தபாதர், விசுவாமித்திரர், சுகர், பிருகு, மிருகண்டு, மார்க்கண்டர், யாஞ்ஞவற்கியர், வாமதேவர், சிவபாத ஹிருதயர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் வேதாரணியர், துருவாசர், வசுச்சிரவர், ஆணிமாண்டவியர் சுனப்புச்சர், சமுவர்த்தர், மணிமேசகர், சனச்சேபர், இரைக்குவர், சம்புதற்பரர், கண்ணுவர், இரசனி, தாற்பியனர், காசிபர், சாண்டிலியர், வாசச்சிரவர், உத்தாலகர், குணி, உருரு, நாரதர், நாசிகேதர், இலிகிதர், குசுருவிந்தர், ஆத்திரேயர், ஆலம்பாயனர், சௌனகர் முதலிய எண்ணிறந்த முனிவர்களெல்லாம் பெரும் புகழ் படைத்தவர்களாய் குற்றமற்ற மனமுடையராய், உலகத்தின்கண் வாழும் மன்னுயிர்களையெல்லாம் தம் இன்னுயிர்போற் கருதினவர்களாய், ஐம்பொறிகளையும் வென்றவர்களாய், தம் மேனியெல்லாம் விபூதி தரித்திருக்கும் புண்ணியசீலிகளாய், நெற்றியிலே திரிபுண்டரம் அணிந்தவர்களாய், உருத்திராக்ஷமாலை தரித்தவர்களாய், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் புண்ணியஸ்தலங்களிற் பற்றுள்ளவர்களாய், காமக்குரோத லோப மோகமத மாற்சரியாதிகளைக் காய்ந்து வெறுத்தவர்களாய், பொறுமையுடையவர்களாய், ஆன்மார்த்த பூசையோடு சுயம்புலிங்கங்களைப் பூசிப்பவர்களாய், ஆறு அங்கங்களோடு நான்கு வேதங்களையும் கசடறக் கற்றுத்தெளிந்தவர்களாய், வேதமுடிவை உணர்ந்தனுயோர்களாய், வேதாந்த ஞானகாண்டத்தை உணர்ந்தாரேனும் ஞானத்துக்கு அங்கமாகிய ஓமாக்கினியையும் வளர்ப்பவர்களாயுள்ளார். இவ்வியல்பினராகிய இருடிகள் ஒருங்கு குழுமிச் சிவபெருமானைத் தாணும் காட்சியாலன்றி உலகவாழ்வானுறும் பிறவிக்கடலைக்கடப்பது அரிதாகுமென்று நிச்சயித்து அந்தச் சிவபெருமானைப் பிரத்தியட்சமாகக் காணும் உபாயம் யாது என்று தங்கள் அறிவினால் ஆராய்ந்து

பார்த்து, இந்திரன் பிரமன், முதலிய தேவர்களாமாறு செய்வதும், சுவர்க்கம் அடைவிப்பதும், மனிதரைத் தெய்வமாக்குவதும், சிவபெருமானைப் பிரத்தியக்ஷ மாக்குவதும், எல்லாவற்றுக்கும் மேலானதும் தவமேயாம்; ஆதலின், அத்தவம் கைகூடுமாயின் எல்லாச் சித்தியும் கிடைக்கும் என்றார் சிலர். இகழ்வையும் பாவத்தையும் அகற்றிப் புகழ், கல்வி, செல்வம், வீரம், அழகு ஒழுக்கம், பெருமை, இம்மையின்ப முதலியவைகளைக் கொடுத்து விண்ணுலகத்துஞ் செலுத்தி அருமை யாகிய இன்பத்தையும் கொடுக்கவல்லது தருமமே யாம்; அத்தருமமே சிவபெருமானுக்கும் ஓர் வாகனமாகும், சிவபெருமானை வணங்கி ஏத்துபவர்களுக்குத் தருமமே சகல நன்மைகளையும் கொடுக்கும்; ஆதலான் தருமமே விசேடமுடையது என்றார் வேறு சிலர். சகல சாஸ்திரவல்லுநரும் மாதவரும் புகழத்தக்கதும், சத்துருவையும் சிநேகமாக்க வல்லதும், எவரையும் தன் வழியில் நடக்கச் செய்வதும், உயிர்களையெல்லாம் பாதுகாப்பதும் தானமேயாம்; ஆதலின் தவறாது தானமே சிவபிரானருளைக் கொடுக்குமென்றார் வேறுசிலர். சூரியசந்திரர் அக்கினி வாயு முதலியவைகள் தோன்றல் அடங்கல் பிரகாசித்தல், சமுத்திரம் வரம்புகடவாது நிற்றல், மேகம் வருவித்தல், உயிரானது கருவில் வந்தமர்த்தல், பின்பு பிறத்தல், உடலிலருவமாயிருத்தல் முதலியனவும் சத்தியத்தினாலாதலின், தவம் தான முதலிய எல்லாவற்றுக்கும் சத்தியமே தலைமை பெற்றமையின் சத்தியமே சிவமாகும், சத்தியமே பரகதியாகும் என்றார் வேறுசிலர். இம்மையினும் மறுமையிலும் மேன்மை கொடுக்கவல்லதும், தேவர்கள் மகிழுமாறு அவிகொடுக்கவல்லதும், சிறந்த செல்வமாயதும், சிவபிரானால் விரும்பப்படுவதும் யாகமாதலின், புண்ணியத்தையும் தவத்தையும் வளர்க்கும் யாகமே சிரேஷ்டமென்றார் வேறு சிலர். இல்லொழுக்கத் துடனியைந்து தென்புலத்தார் கடனைத் தீர்த்து முன்னோர்களை நற்கதியில் விடுப்பதும், அழியாமலிருப்பதை அடைவிப்பதும், மோக்ஷத்துக்கு ஆளாக்குவதும் சற்புத்திரரைப்பெறுதலேயாமாதலின், மக்கட்பேறே மேலானது என்றார் வேறுசிலர். தாய், தந்தை, தாரம், மக்கள், மண், பொன் முதலியவற்றுளுண்டாகும் ஆசை நீங்கிய துறவறமே தருமங்களுக்கெல்லாம் பெரியதாம் பிரமபதவி விஷ்ணுபதவியைக் கொடுப்பதும், சிவபெருமானுக்கு மகிழ்வை விளைப்பதும், சிவலோகத்திற் செலுத்துவதும் துறவறமேயாதலின், இதுவே மேலாயதென்றார் வேறுசிலர்.

இந்தப்பிரகாரம் முனிவர்கள் எல்லோரும் கூறிக்கருத்து வேறு படும் பொழுது, இவர்கள் மாதவமெல்லாம் திரண்டு ஓர் உருக் கொண்டு வந்தமைபோல ஆலத்தை மிடற்றில் வைத்த எம்பெருமா னுடைய திருவடிகளை இடையறாது பற்றிய தியானமுடையவரும், வேதங்களை வகுத்த வியாசமுனிவருடைய மாணாக்கரும், கற்றைத் திரட்சியாகிய சடாமகுடமுடையரும், நிலாக் கீற்றைப் போன்று நெற்றிமீதுவெள்ளொளி விளங்கும் திரிபுண்டரமுடையரும், வேதாகம விதிப்படி தேர்ந்து அணிந்த உருத்திராக்ஷத் தொகுதியுடையரும் இடையில் மரவுரி யுடுத்தவரும், கமண்டலமுடையரும், கருணையுதவும் இளநகைபொருந்திய முகமலர்ச்சியுடையவராய்ப் பூவுலகத்தவராலே துதிக்கற் பாலராயுள்ள சூதமாமுனிவர் அவ்விடத்துக்கு எழுந்தருளி வந்தார்.

அங்ஙனம் எழுந்தருளிய சூதமுனிவரை மற்றைய மாதவர் களெல்லாம் பொங்கிப் பெருகும் பேரன்பினால் உண்டான பரமசந் தோஷத்தினால் எதிர்கொண்டு சென்று விதிதவறாது பூசைசெய்து அவ ரை அழைத்துக்கொண்டு போய் ஆசாரியபீடத்திருத்தி அருக்கியபா த்தியாதி உபசாரம் புரிந்து பலவாறு துதிக்குங்கால், சூதமுனிவர் சந்தோஷங் கொண்டவராய் அவர்களை நோக்கி இருங்கள் என, அவர் கள் அங்ஙனம் எல்லோரும் உட்கார்ந்து அவரிடத்திற் கேட்கவேண்டி யவர்களாய், மெய்ஞ்ஞானவாளால் ஆணவாதி பாசங்களைச் சேதித் தவரே! திருமாலாகிய வியாச பகவானிடத்துச் சகலபுராணாதிகளையும் ஐயந்திரிபறக் கற்று அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த் தம் நான்கினாற் பெரும் கீர்த்தி படைத்தவரே! ஐம்புலன்களின் வாழ் வை ஒருங்கு தொலைக்கும் பொருட்டு நாங்கள் முன்னமே அரிய தவங் களைச் செய்தோம், அதனால் பெருமை மிகுந்த இருஷபவாகனத்தை யுடைய பரமசிவத்தினது திருவடிகளைக்காண்பதே முத்தியடைவதற் குக் காரணம் என்று தெளிந்தோம். ஆனால் அத்திருவடிகளைக் காண் பதற்கு உபாயமாத்திரம் இதுவென்று அறிந்திலேம். ஒருவர்க்கொரு வர் ஒவ்வாத வெவ்வேறு காரணங்கள் கூறி அயர்ந்து மாறுபட்டே மேயன்றி நிச்சயமாக உணர்தல் இயலாதாயிற்று; நாங்கள் செய்த தபோபலம் போலக் காட்சி கொடுத்தீர்கள்; பரமசந்தோஷம் கொண் டேம்; தேவரீர் அறியாதவிஷயம் சுவர்க்கமத்திய பாதாளங்களினும் இல்லை; ஆதலின், பல மார்க்கங்களாலும் நிச்சயித்தறிந்தவாறு சிவ பெருமான் திருவடிகளைக் காண்பதற்குரிய உபாயத்தை அடியேங்

களுக்கு உபதேசித்தருள்க என்றார்கள். சூதமுனிவர் அகமகிழ்ந்த வராய் ஓ முனிசிரேஷ்டர்களே! நீங்கள்கேட்ட இந்தப் பொருள் பதினெண் புராணங்களுக்குள் ஒன்றாகிய கந்தபுராணத்துள்ளது. அதனைப் பரமாசாரிய மூர்த்தியாகிய வியாசமுனிவர் எனக்குபதேசித்தருளினர். ஆதலால் அந்த விஷயத்தை உங்களுக்குத் தெளியச் சொல்வேன்; ஏகாக்கிரசித்தராகிக் கேளுங்கள்! உலகம் அனைத்தையும் அழிக்குமோ என்று அஞ்சுமாறு வந்தகங்கையைச் சடையிலும், கொடிய விஷத்தைக் கண்டத்திலும் தரித்த சிவபிரான் எழுந்தருளியிருக்கும் சிவதலத்தின் பெருமையைக் கேட்டல், கேட்பவருக்குச் சொல்லல், அவ்வித மகிமை வாய்ந்த தலத்தில் வசித்தல், அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் மூழ்குதல், பரிசுத்தமான சிவலிங்கத்தைப் பூசித்தல், முதலியவற்றுள் யாதாயினுமொன்றை அன்புடன் செய்தலே மேலான உபாயமாகும் என்ற மொழி அவர்கள் செவிகளியிற் புகுந்தவுடன் நடுக்கடலில் வருந்தும் மானுமிக்குக்கரை நேர்ந்தமை போல மகா சந்தோஷ முடையராய் முனிவர்கள் ஐய! சூதமாதவரே! கண்ணாற் காணினும், காதாற் கேட்கினும், திசை நோக்கி வணங்கினும், நினைக்கினும், சொல்லினும் வசிக்கினும் முத்தி கொடுப்பதாய், தலம் தீர்த்தம் மூர்த்தம் என்னும் மூன்றானும் விசேடமுள்ளதாய் வாய்ந்த மேன்மையுள்ள ஒப்பற்ற ஒரு தலமிருந்தால், கருணை கூர்ந்து அடியேங்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டு மென்று இரந்து கேட்ட சௌநகாதியரை நோக்கி, முக்கட்பெருமானது அழகிய சீபாதத்தை மறவாத பேரன்புள்ள முனிவிர்காள்! அநாதி மலமுத்த பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களை இரக்ஷிக்கும் பொருட்டு முழுக்கருணையோடு எவ்வுயிர்க்கும் தாமே தாய்தந்தை யாமென்று காட்டுவான் போலும் கொண்ட உருவத்திருமேனியாய் விளங்கும் ஒப்பற்ற ஏகாந்தத்தலமொன்றுள்ளது அது எது என்றால், இப்பரத கண்டத்தின் தக்ஷிண பாகத்திலே திராவிட தேசத்திலே சகல பாவங்களையும் நீக்கவல்ல காவிரி சூழ்ந்த கொங்குமண்டத்திலே உள்ளது. அதனைப் பெரியோர் "நாகாசலம்" என்று துதிப்பார் என்று கூறி, தம் து இரண்டுகைகளையும் சிரமேற் குவித்து, ஆனந்தபரவசராய்த் தேகம் புளகிப்பச் சிவத்துதி புரிந்தனர். அதனைக் கேட்ட பேரதே ரோமாஞ்சங்கொள்ள, நாக்குளற, கண்களினின்று தாரை தாரையாக ஆனந்த பாஷ்பம் ஊற்றெடுப்ப, இன்றன்றோ யாக்கை பெற்ற பயனாகிய முத்தி உபாயத்தைக் கேட்கப்பெற்றோம்! இன்றன்றோ ஆனந்த தாண்டவ சிவபரஞ்சுடரின் ஏகாந்த க்ஷேத்திரத்தின் பெயரைக் கேட்கும் பெரும் பேறு பெற்றோம்! இதனாலன்றோ

நல்லாரைக் காண்பதும், அவர் சொற் கேட்பதும், அவருடன் கூடியிருப்பதும் நன்று பயக்கு மென்ற நீதிவிளங்குகின்றது. எம்மை வாழ்விக்கச் சிந்தை கொண்டுவந்த எந்தாய்! ஒப்பற்ற புண்ணிய க்ஷேத்திரமாகிய நாகாசலத்தின் மகிமையை அடியேங்கட்குக் கூறியருள்க என்று முனிபுங்கவர்கள் விண்ணப்பித்து நின்றார்கள். இவ்வாறுரைத்த சௌநகாதி முனிவர்களை நோக்கி முனிவிர்காள்! நீவிர் சிந்தித்த காரியம் நன்று! நன்று!! நீவிர் மெய்த்தவங்கள் செய்து சிறக்கப் பெற்றீர். உங்கள் தரிசனத்தால் நானும் உய்ந்தேன். நம்பனடியாரது நட்புப்பெற நெடுநாளாகக் காதலித்திருந்தவாறு இன்று கைகூடப்பெற்றேன். சிவநேசப் பெருஞ் செல்வராய்ச் சிவசின்னமணியப் பெற்றுப் பிறவிப் பெருங்கடலைக் கடக்கப்பெற்றீராயினீர்; சிவனடியார் பாதநேணுப்பட்ட தீர்த்தமே புண்ணிய தீர்த்தம். அவர் வாழுமிடமே புண்ணிய பூமி; அவரிடத்துக் கொடுக்குந் தானம் அளவிறந்த பயன் கொடுக்கவல்லதாம். சிவனடியார்கள் புகுந்த மனைகளிலே தேவரும் பிதிர்களும் நடனஞ் செய்வார்கள். சிவனடியார்களைக் கண்டவளவிற் கூசாது அடிக்கடி வணங்குவோனைத் தேவர்கள் தம்பெருமான் என்று தொழுவார்கள். அவர்கள் ஸ்ரீபாத பூஜை புரிவோர்கள் சீவன்முத்தர்களாய்த் திகழ்வார்கள். தங்கள் தரிசனத்தினாலன்றோ சிவத்தலமான்மியஞ் சொல்லும் பேறுற்றேன், ஆதலால் அந்தணரே! சைவசீலம் நிரம்பிய சிவசின்னங்களோடு விளங்கும் நும்மை விரும்பிப் பூசிப்பேன் என்று சூதமுனிவர் பாவனையால் அவர்களைப் பூசித்தனர். அதுகண்ட முனிசிரேட்டர்கள் சூதமுனிவரது சிவநேசத்தையும் சிவனடியார்பால் வைத்த பேரன்பையும் வியந்து பாராட்டினார்கள். சூதமுனிவர் சிறிது மௌன முற்றுச்சிவத்தியானஞ் செய்துகொண்டு சொல்வாராயினர்.

---

உ

## பர்வதகாண்டம்.

### நாககிரி மான்மியம்.

—:O:—

முனிவிர்காள்! ஏகாந்தத் தலமாகிய ஸ்ரீ நாகாசலமானது திரிலோகத்துமுள்ள ஆன்மகோடிகள், தாம் செய்த வினையினின்று நீங்கி முத்தியடைவதற்கு ஓர் உபகாரப் பொருளாகிப் பேருதவியாக விளங்கும்; அது ஓங்கார சொரூபமாய் இலங்கும்; கொடிய பாவங்களையெல்லாம் தூரத்தே போக்கவல்ல பல புண்ணியத் தலங்களினும்

மிகுந்த பலனைக் கொடுக்கவல்லதாம். அன்றியும் புண்ணிய ஒளியினால் ஓங்கிய கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி முதலிய பல தீர்த்தங்கள் கொடுக்கும் பலன்களினும் மேலாகிய சிவ புண்ணியங்களை எளிதிலே கொடுக்கவல்ல தீர்த்தங்களும் தன்னிடத்து அமையப்பெற்றது. அதைத் தரிசித்தவர்களுக்கு வெற்றி மிகுந்த தெய்வலோக பதவியும், பரிச்சித்தவர்களுக்கு பிரமலோகபதவியும், உட்கொண்டவர்களுக்கு விஷ்ணுபதவியும், முழுகினவர்களுக்கு உருத்திரபதவியும் கொடுக்கும் மகிமை வாய்ந்த அந்த ஸ்ரீ நாககிரியைத் தூரதேசங்களிலிருந்து மனசில் நினைத்தவர்களுக்கெல்லாம் நினைத்த நல்வினைகள் கைகூடும். அவ்விடம் தன்னை வந்தடைந்தவர்கட்கு உண்டாகிய பிறவித்துன்பத்தை நிவாரணஞ் செய்து முத்தியையும் கொடுக்கும். இன்னும் மற்ற நவகண்டபூமியில் எவ்விடமிருந்து நினைந்து வணங்கினும் பிறவி உளதாகாது என்றால் அந்தத்திவ்ய க்ஷேத்திரத்தில் வசிக்கும் பெரிய தபோதனர்களடையும் பெருமையான பலன்களை இத்துணைத் தென்று யாவராலேனும் வரையறுத்துக் கூற முடியுமோ? முடியாது! முடியாது!! கைலாசகிரியில் வாசஞ் செய்யவேண்டுமென்ற அபேட்சையுடையோர் ஸ்ரீ நாகாசலத்தை அன்பினோடு மனத்துட்கொண்டு தியானஞ் செய்வாராக.

முறைமையான நிஷ்டையிலோர்ந்து சொல்லப்பட்டகாட்கி நிலையைச் சொல்வாம். ஒப்பற்ற அத்தலத்திலே விளங்கும் புண்ணிய தீர்த்தங்களிலே நியமமாய் முழுகிக் கிரியைக தியான சிந்தனையுட்கொண்டு கண்குளிரத் தரிசித்துப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கினவர்களுடைய தந்தை தாய் வமிசங்களிரண்டின் இரண்டு கோடி தலைமுறைனரும் அர்த்தநாரீசுவரருடைய பாதாரவிந்தங்களிற் சேர்வார்கள். ஆயிரம் படைத்தலைகளையுடைய ஆதிசேடனாற்றாங்கப் பட்ட இந்தப் பூமியிலுள்ள மணல்களை எண்ணினும், ஆகாயத்திலியங்கும் நட்சத்திரங்களை எண்ணினும் பெருஞ் சிறப்புற்றோங்கும் அந்த நாககிரியை வந்து தரிசித்துப் பேறு பெற்றவர்கள் பெருமையை அளவுபடுத்திக் கூறவியலாது. உமையொருபாகரெழுந்தருளிய நாககிரியின் பெருமை மிகுந்த புதுமையாகவே இருக்கும். அன்றியும் யாரேனும் நாகமலை என்று எக்காரணம் பற்றியேனும் ஒருமுறை சொன்னவர்களும், நாகமலைக்குப் போகும் வழி இது என்றவர்களும் உலகத்திலே கூறப்பட்ட முப்பத்துமுக்கோடி திவ்ய தீர்த்தங்களில் மூழ்கினவர்களடையும் பலனையும், மஹாமக தீர்த்தத்தில் மூழ்கினவர்களடையும் பலனையும், பல் நாள் அரியதவம் செய்தவர்களடையும் பலனையும்,

யாகஞ் செய்தவர்களடையும் பலனையும் பெறுவார்கள். எவரேனும்
தங்கள் மனைவி மக்கள் உறவின் முறையாரனைவரோடும் கூடிவந்து
கிரிப்பிரதக்ஷிணம் பண்ணித் தரிசனஞ் செய்வார்களாயின் அவர்களி
ரண்டு வமிசத்தின் ஏழுகோடி தலை முறையினரும் சிவபதத்தை அடை
வார்கள். பிரமன், விஷ்ணு, இந்திரன், தேவர்கள் முதலாயினோர் சுவா
மியிடத்தில் எப்படிச் சேவித்துக் கொண்டிருக்கிறார்களோ அப்படியே
கிருபை பெற்று அவர்கள் மனோபீஷ்டமாகிய வரங்களைப் பெறுவார்
கள். பார்வதி தேவியார் இடப் பாகத்தில் விளங்கும் அர்த்தநாரீசுவர
ரையும், வேலாயுதத்தைத் தாங்கிய குமாரசுவாமியையும், நாககிரியை
யும் தெய்வீக தீர்த்தங்களையும் பக்தியுடனே இப்பிறவியில் மனசில்
நினைத்தவர்களையும் துதித்த பேர்களையும் கண்களிகூரத் தரிசித்த பேர்
களையும் கைலாய பதவியிலே இந்தத் தல மகிமை தப்பாது சேர்த்து
விடும். அஃதன்றியும் அளவிறந்த சோடச மகாதானங்களைச் செய்தும்
தீருதற்கரிதாகிய கொடிய பாவங்களெல்லாம் பெருமை தங்கிய நாக
கிரியில் பக்தியோடு ஒரு தினம் தூங்காமலிருப்பின் விமோசனமாகும்
சொப்பன நினைவாகவேனும், ஒரு பொருளின் அபேக்ஷையாலேனும்
தூங்காதிருக்கினும் அவர்கள் தங்களைப் பீடித்த பீடை பிணி பாவங்கள்
யாவும் தீர்ந்து புனிதர்களாய் அந்தத்திற் கைலாச பதவியை அடை
வார்கள். அன்றியும் நாககிரியில் வந்து அழகிய சிவதீர்த்தத்தில் முழுகி
நியமத்தோடு செபசந்தி தர்ப்பணாதிகள் செய்து அர்த்தநாரீசுரரை
அர்ச்சித்து வணங்கி வேதியர் முதலிய தவமுனிவர்களுக்கெல்லாம்
அன்னம் படைத்துத் துதி செய்த புண்ணிய வான்களின் இரண்டு
மரபுகளிலுமுள்ள லட்சம் தலை முறையினர் சிவன்றிருவடியிற் சேர்
வார். அத்தலத்தைச் சுற்றி மூன்று யோசனையளவும் கயா, பிரயாகை,
காசிமுதலிய தலங்களினும் நூறு மடங்கு அதிக பலன் கொடுக்கத்
தக்கது: ஆதலின் பஞ்ச மகாபாதகத்தைச் செய்த கொடிய பாவியே
யாயினும் நாகமலையைக் கண்ணுற் காணுவானாயின் அவன் தன்னைத்
தொடரும் பாவங்களினின்று நீங்கி உருத்திர பதத்திற் சேர்வன்.
உதயத்தி லெழுந்து திருநாககிரியைத் தரிசித்தவர் மென்மேலும் வந்து
துயரத்தைச் செய்யாநின்ற அன்னைமார் கற்பத்தில் உற்பவிக்க மாட்
டார், முத்தி யடைவார் அழகிய வரைக்கணுள்ள மரக்கூட்டங்களும்
கொடிகள் முதலியனவும் மற்றைச் செந்துக்களும் நாககிரியின் மகிமை
யால் திவ்ய சொரூபங்களாகி மோக்ஷமடையும், ஆதலின் அமரர்,
யட்சர், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர், போகபூமியதிபர்
முனீசுரர் முதலாயினோரும் எங்கச் சனனமாயேனும் நாகாசலத்தில்

வந்து பிறக்கவேண்டு மென்று ஆசை கொண்டவர்களாய்ச் சிவ பிரானைப் பேணுவார்கள். மேலும் அத்தலத்தில் வாசஞ்செய்பவர்கள் சிவயோக அறிவுடனும், பத்தி சிரத்தையுடனும் யாவரிடத்தும் பேரன் புடனும், சத்துவகுணத்துடனும் நற்புத்தியுத்தமரான முத்தான்மாக்க ளாகவு மிருப்பார்கள். மிருகம், பட்சி, கிருமி முதலிய செந்துக்களும் புண்ணிய விசேடத்தினால் விரைவிலே மேற்கதி பெறுதற் கேது வாவனவாம். அஃதன்றியும், அத்தலம் பஞ்சக்குரோச க்ஷேத்திர மாகும். அதாவது கிழக்கில் மணிமுத்தா நதியும், தெற்கில் காவிரி நதி யும், மேற்கில் பவானி கூடலும் வடக்கில் சங்ககிரியுமாக இந்நாற்புற எல்லைக்குள் அமைந்த ஐந்து குரோசவரையும் அந்த க்ஷேத்திரமே யாகும், திரிலோகத்து முள்ள பெரியோர்கள் இத்தலத்தின் மகத்து வத்தை விசேடித்துப் புகழுவார்கள். இம்மலையினின்று எழும் காற் றினாற் றொடக்குறினும் பதினாயிரம் கோகத்தி தோஷமும், மதுபானஞ் செய்த கொடும் பாவமும் போகும். உரோமச்சிறை நீக்கினவர்களுக் குப் பதினாயிரம் குருஹத்தி தோஷம் நீங்கும். புழுக்கள் முதலிய அற்ப செந்துக்களின் தவமும் ஒன்று பத்தாக விருத்திக்குமென்று வேத சாஸ்திர புராணேதிகாசங்கள் கூறுநிற்கின்றனவாதலின், அத்தல மகிமை பிரமாதி தேவர்களாலும் சொல்ல முடியாதெனின் மலபந்தத் திற் சிக்குண்டுழலும் மனிதர்களாலும் எம்போன்ற முனிவர்களாலுமா சொல்லக்கூடும். கூடாது! கூடாது!! ஆயினும் சூறைக் காற்றில் அகப் பட்ட பூளை பட்டபாடு போல இத்தலத்தில் ஒழியுங் கொடிய பாவங் களையும் கூறுகின்றேம். கேண்மின்கள் முனிவர்களே! தங்கள் தங்கள் குலாசார ஒழுக்கங்கள் தவறி நடத்தலும், சிவபிரானைத் தொழுது தோத்திரஞ் செய்யாதிருத்தலும், வந்த அதிதிகளுக்கு யாதாயினும் கொடாதிருத்தலும், யதிகள் உத்தம அந்தணர்களின் தராதரமறியாது தூஷித்தலும், சிவத்திரவியாபகாரஞ் செய்தலும், வழி படுதற்குரிய குருவை நிந்தனை செய்தலும் பசுக்கள் தண்ணீர் பருகவிடாது தடுத் தலும், அந்தணர்களுக்குதவு பொருளையும், அன்னதானத்தையும் கெடுத்தலும் ஆகிய இவைகளெல்லாம் பிரமகத்திக் கொப்பாகிய பாவ ங்களாகும். அப்படிப்பட்ட கொடிய பாவங்களெல்லாம் நாககிரியைக் கண்டால் கடையுகத்தினுலகங்களை யெல்லாம் எரிக்கவல்ல ஊழித் தீமுன் பஞ்சுபோல வெந்துபோவது மாத்திரமன்றி உமேசன் திருவரு ளால் கரு நிறமான இரும்பு பசும்பொன்னானது போல அவர்கள் உருத்திர பதவியையும் பெறுவார்கள். உபயகுலமும் சுவர்க்க லோகமுற ஓமாதிகள் புரியாமை, கூடவொண்ணாத கூட்டத்தில் கூடுத

அன்றொருடனுண்ணல், மதுமாமிசம் புசிக்கும் பெண்களிடம் கலத்தல் கெட்ட பிராமணனில்லிற் புசித்தல், சூத்திரரன்னமே உண்ணுதலாகிய இத்தொழில்கள் பூண்ட இந்தப் பிராமணர்கள் கட்குடியர்களாகிய நீசர்களுக்குச் சமானமான பாவிகள். இக்கொடியவர்களைத் தொடர்ந்த கடிய பாவங்களெல்லாம் உமையொருபாகனமர்ந்த திருநாககிரியைச் சற்றே கடைக்கண்ணுற் கண்டமாத்திரத்தே நெருப்பிலிட்ட அரக்குப் போலக் கருகிப் போக அவர்கள் கைலாயகிரியை அடைந்து சாமீப பதவியைப் பெறுவார்கள். மேலும் பாவஞ்செய்தவர்கள் அஞ்சன பருவதம் போலக் கருத்துப் பருத்த தேகத்தையும், அத்தேகத்தின் மேல் விளங்காநின்ற வச்சிராங்கிகளையும் கொடிய விஷத்தை உமிழாநின்ற பாம்புபோன்ற கொடிய தொழிலையும், வீரத்தினையும், தீவினையோர் மேல்வைத்த கோபத்தினையும், நிட்டூரத்தினையும், வெடித்த சொல்லினையுமுடைய யமதூதர்கள் நீங்காத வலிமையினாலே, வஞ்சகருமாய் நற்குணமில்லாத அற்ப புத்தியை யுடையோருமாய்க் கொடிய தீவினைகளையுடையோருமாகிய பாவிகளைப் பாசத்தினாற் கட்டி இழுத்துச்செல்வார்கள். அப்பாவிகளுள்ளே சிலர் தாம் தாம் செய்த பாவத்தினாலே பெருமுள்ளுகள் அடர்ந்த வழியின் கண் யமபுரிக்குச் செல்லுங்கால், அந்த முள்ளுக்கள் கால்களிலே தைக்க அலறிச் செல்வர். அந்த முட்களைப் பிடுங்கி விட்டுப் போகுநெறி அறியாது வீழ்ந்து கிடப்பர்கள். சில பாவிகள் சேறு பரந்த வழியில் அடிவைக்க அந்தச்சேறு காலிற் பிடித்துக்கொள்ள வருந்துவார்கள். சில பாவிகள் பெரிய மலைவழியிற் சென்று ஏற்ற மிறக்கங்களிலே நடக்கவியலாது கால் தளர அங்கே ஒரு துணையுமில்லாது வருந்துவார்கள். சிலர் அம்பு போலறுக்கும் ஓடும் சல்லியும் பரந்த வழியிற் சென்று வருந்துவர். சிலர் இருள் பரந்த வழியிலகப்பட்டு வழிகாணாது வருந்துவர். சிலர் தீயொழுகக் காய்ச்சிய கரிய இருப்புச் சங்கிலி பின்னிக் கிடக்கும் வழியின்கட் சென்று அடியிட மாட்டாது அழுவார்கள், சிலர் காட்டுத் தீயிற் சிக்கி வருந்துவார்கள். சிலர் சிங்கம், புலி, கரடிகளிருக்கும் வழியிற் சென்று அவைகள் வருத்த வருத்தப்படுவார்கள். சிலர் உடம்பினைக்குடையும் பட்சிகள் புழுக்களுள்ள வழில் வருந்துவர். சிலர் தூசுகளோடு வரும் பெருங்காற்றிடத்தும், கல்மாரி, நச்சுநீர்மழை, குளிர்ந்த பனிக்காற்று முதலியன உள்ள வழியிற்சென்று வருந்துவார்கள். இன்னும் பல துயரமுற அவர்களைக் கட்டி யிழுத்து யமனிடம்விட, அவ்வியமன் ஆஞ்ஞாப் பிரகாரம் யமதூதர்கள் தண்டிக்கும் கொடுமை என்ன கொஞ்சமா? தம்மிடத்திலே அருளைவைத்த ஜகத்பிதாவாகிய சிவபிரா

னது வாக்கியப்பிரமாணத்தையும் மறுத்து, கருமத்தினையுஞ் செய்யாது வெறுத்து கருமத்தினையும் விரும்பாது விட்ட பொல்லாத துட்டரை, சிவந்து நெருப்புச் சொரியாநின்ற ஆயுதங்களினாலே குத்திக் கோபிப்பார்கள். பழுக்கக் காய்ச்சிய இருப்புச்சங்கிலியினாலே கட்டிப் பின்னும் அச்சங்கிலியை எந்தி யிருக்கும்படி செய்வார்கள். குற்றமறத் தருமஞ் செய்யாதவர்களைச் செக்கிற்போட்டு எள்ளுப்போல அரைப்பர்கள். ஆலையிலிட்டுக் கரும்புபோலவும் நசுக்குவார்கள். பொய் சொல்லிய அற்பரை வாயிலே அடித்து நாக்கினையுமறுத்துப் பல துன்பங்கள் செய்வார்கள். வேதாகமங்களைப் பழித்து அதற்கு விபரீதமாக மற்றொன்றைக் கூறும் அற்பர் நாவானது ஒன்றரைக்காதவழிதூரம் எழுந்து வளர அங்ஙனம் வளர்ந்தநாவிலே கொடிய கலப்பையினாலே யமதூதர்கள் உழுது புண்படுத்துவார்கள். சிவாலயத்தும், புண்ணிய தீர்த்தத்தும், திருநந்தனவனத்தும், பெரியோர்கள் வதியும் திருமடங்களிடத்தும் க்ஷவரஞ் செய்து கொள்ளுதல், மலசல மோசனஞ் செய்தல்,நித்திரை செய்தல், புணர்ச்சி முதலியன செய்த பாவிகளைச் செக்கிடையிட்டுத் திருகி அக்கினி நரகத்திற்றள்ளுவார்கள். பின்னும் நந்தனவனத்திலிருக்கும் புட்பத்தைப் பறித்து மோந்தவர் மூக்கில் காரமுள்ள நீரை வார்ப்பார்கள். அப்புட்பத்தை முடிந்த தலையில் கூறிய முளையை அடிப்பார்கள். தாசி முதலியவர்களுக்குக் கொடுத்த கையையும், வாங்கிய கையையும் துண்டு துண்டாக நறுக்குவார்கள். தேவாலயம், மட முதலிய புண்ணியங்களைக் கொடுத்தக்க வகையில் மேல்விசாரணைக் கர்த்தராகவிருந்து, அப்பொருள்களைக் கவர்ந்தாலும், அந்தப் பொருள்கள் கிரமமான மார்க்கத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறதா என்பதைக் கவனியாதிருந்தாலும், பூசைமுதலியன சரியாக நடப்பதில்லை என்று பிறர் சொல்லியும் கேளாது தங் காரியத்தையே பார்ப்பவர்களாக விருந்தாலும் அந்தப் பாவிகள் நெஞ்சிலும் கண்ணிலும் வாயிலும் கூறிய வச்சிராயுதங்களைக் கடாவுவார்கள்.

இவ்வாறு பல துன்பங்களை அனுபவித்துக் கதறித் தங்களை மீட்பாரொருவருமின்றி வருந்துங் காலத்தில் இக்குரலோசை கேட்ட யமதூதர்கள் பல்லை நெறுநெறெனக் கடித்து ஓ பாவிகளே! நீங்கள் முன்னம் இம்மை மறுமை என்னும் இருமைக்குந் துணையராய்ச் சிவபிரான் ஒருவர் உளர் என்று நினைத்தீர்களில்லையே! பொத்தைபாகிய இவ்வுடலும், பலமும், புத்திரர் மித்திரர் அதிகாரம் பொருள் முதலியனவெல்லாம் நிலையாகவே இருக்குமென்று பொய் பேசினார்களே! ஏழைகளை வருத்தினீர்களே! பிறர் பொருள்களை உங்கள் பலத்தால்

அபகரித்துக் கொண்டீர்களே! இதுதான் சுகமென்று பெண்களுடனே கூடி மகிழ்ந்தீர்களே! ஒவ்வாத கற்புள்ள பெண்கள் கற்பை அழித்தீர்களே! அடங்கியிருக்கவும் பயந்தார்களென்று நல்லவர்களைக் கூசாமல் வைதும் அடித்தும் துயர் செய்தீர்களே! பொல்லாத பாவிகளுடன் சேர்ந்து தருமத்தைக் கெடுத்தீர்களே! இரப்போர்க்குக் கொடுப்பதைத் தடுத்தீர்களே! பசித்தவர்களுக்கன்னமில்லை யென்றீர்களே! படுக்க இடமில்லை என்றீர்களே! கோவில் மரங்களை அறுத்தீர்களே! நரகவேதனை யொன்றிருக்கிறதா என்றீர்களே! சபையிலிருந்து வழக்கோரம் சொன்னீர்களே! எமக்கார் நிகரென்று செருக்குற்றீர்களே! இரக்கமில்லாது கடுத்த சொல்லே பேசினீரே! நம்முடைய தேகத்தில் புண்படில் நோவது போலல்லவோ அவர்க்கும் நோமென்றெண்ணாது மற்றொரு உயிரைக் கொன்றீரே! அதனையும் தின்றீரே! தேவாலயம், தெய்வத்திரவியம், தெய்வோத்ஸவ முதலிய சற்காரியங்களை விலக்கினோர், கெடுக்கப் பிரயத்தனப்பட்டோர், எண்ணினோர் முதலானவர்களுடன் உண்டீரே, சேர்ந்தீரே, உதவி செய்தீரே, பேசினீரே, மேற்கண்ட சற்காரியங்களுக்குதவி செய்வாருக்கிடர் செய்யவில்லையா? அக்காரியங்களை வெறுக்கவில்லையா? பழிக்கவில்லையா? ஆலயங்களிற் செய்யத்தகாதன என எடுத்துக்காட்டிய ஆகமவசனங்களை அவிசுவாசிகளைக் கொண்டு தப்பர்த்தங் கற்பித்து மதத்தால் மீறி நடந்து கெடுக்கத் தூண்டவில்லையா? அவ்வித பாவங்களைச் செய்த உங்களுக்கு இவ்வளவுதானா துன்பம்! இன்னும் அநேக காலம் மிகுந்த துயரங்களை அடையப் போகின்றீர்களென்று கடிந்து இன்னும் துன்பத்தைச் செய்வார்கள்.

இவ்வண்ணம் நரகவேதனைப்படவேண்டிய கொடிய பாவிகளும் நாககிரியை அன்புடன் கண்டு தரிசிப்பின் ஸ்ரீ அர்த்தநாரீசுரர் திருவருளால் அத்துயருறாது புண்ணிய உலகஞ் சேர்வார்கள். அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்திபம் சோடசீ, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினி ஹோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூட பசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராயணி, அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயசி முதலிய இருபத்தொருயாகமாயினும், பிரமயாகம், தெய்வயாகம், பூதயாகம், பிதுர்யாகம், மானுடயாகமென்னும் ஐவகை யாகங்களுள்ளே தங்களுக்கு இஷ்டமாக நினைத்துச் செய்கின்ற யாகங்களுக்கு மத்தியில் இடையூறு வந்தால் கலக்கமில்லாது நாககிரியைக்கண்டு தரிசிப்பின் அவர்கள் யாகமுற்றி வரும் பலனைப் பெறுவார்கள். பின்னர்த் தெய்வலோகத்திற் சென்று

தேவேந்திர போகத்தை அனுபவிப்பார்கள்; துலாபுருடதானம் பூதான முதலியன செய்த பலன்களும் சித்திக்கும். சோமவாரதினத்தில் நிர்ச்சலவிரதம் சாந்திராயணவிரதம் செய்யாதவர்கள் நாககிரியைச் சென்று தரிசிப்பின் அந்த விரதபலனை அடைவார்கள். அவர்களுக்குத் தக்க பதங்களுமுண்டாம். எவரேனும் ஓமம் தருமம், யாகங்கள் செய்வாராயினும், செய்விப்பாராயினும் அவர்களுக்கும் அந்த யாக பலன்களுக்கிருமடங்கு பலன் அதிகமாக வாய்க்கும். வாதுசெய்து அமர் புரிபவர்கள் தரிசித்தால் அவர்கள் பகையைக் கடிந்து வெற்றி படைப்பார்கள். தவங்கள் செய்வதிலும் திருப்பணி செய்வதிலும், விரதங்கள் அனுஷ்டிப்பதிலும், வேதபுராணேதிகாச பாராயணம் செய்வதிலும், மந்திரதந்திர கருமங்கள் செய்வதிலும் உண்டாகும் பலன்களைப் பார்க்கினும் அர்த்தநாரீசுரரும் குமாரரும் நீங்காது எழுந்தருளிய நாககிரிதரிசனத்தினால் அதிக பலனுண்டாகும். பிராமணர்கள் தரிசித்து வணங்குவாரேல் நான்கு வேதம் ஆறு சாஸ்திரங்களும் கற்றுணர்ந்த அறிவினராய் வாழ்ந்து முடிவில் உசிதமான பிரமபதத்தைச் சேர்வார்கள். அரசர்கள் கண்டு வணங்கினால் சத்துருக்களை வென்று திக்குவிஜயஞ் செய்து வெற்றியுடையவர்களாய், இராசாதிராசராய் அந்தியத்திற் சுவர்க்கபதத்தைச் சேர்வார்கள். வைசியர்கள் கண்டு தொழுதால் குபேரதிரவிய முடையவர்களாய் வாழ்ந்து சுவர்க்க நாட்டைப்பெறுவார்கள். சூத்திரர்கள் கண்டு துதிசெய்தால் நவரத்தின நிழல் சாயச் செல்வம் பெருகிப் பல வளங்களும் படைத்து, தேகாந்தியத்தில் நற்பதமடைவார்கள். விதவைகள் கண்டு வணங்கினால் மறுபிறப்பில் அந்தப் புருஷனையே மணந்து தீர்க்க சுமங்கலிகளாய் வாழ்வார்கள். கன்னிகை கண்டு தரிசித்தால் மனதுக்கிஷ்டமான நல்ல கணவனை மணந்து மன்மதனேவல்செய்யப் பிரியாமல் சுகித்திருப்பாள். தரித்திரர் கண்டு வணங்கினால் பெருஞ்செல்வம் பெற்று வாழ்வார். அன்றியும் அத்தல மகிமையைக் காணத்தக்க பக்தர்கள் செய்கின்ற தன்மதானங்கள் ஒன்று நூறாக விருத்தியாகும். அந்தத் திருச்செங்கோட்டு மலையிலே சிவபிரான் எழுந்தருளியிருக்கின்றமையால், நம்மைப்போலொத்த முனிவர்களுக்கு வேண்டிய இஷ்ட காமியார்த்தங்களைக் கொடுக்க வேண்டுமென்கிற கருணையினால் காமதேனு கற்பக விருக்ஷம், சிந்தாமணி முதலியனவும் அங்ஙனம் வந்து சேர்ந்து உதவி செய்யும். அங்ஙனம் சென்றவர்களுக்கு காசு வஸ்திரம் உண்வு முதலியன் கொடுத்தவர்களின் நாலாயிரம் தலைமுறையினர் சுவர்க்க பதவியை அடைவார்கள், மனைவியுடனே இல்வாழ்க்கையிலிருந்து

ஓமஞ் செய்கிற மகாதபோதனர்களுக்கு யாரேனும் தானஞ் செய்தால் அவர்கள் பதினயிர அசுவமேத பலன் பெறுவார்கள். அவர்களைக் கண்டவர்கள் துலாபுருஷ தானபலத்தைப் பெறுவார்கள். முனிபுங்கவர்களே! எத்தலங்களினும் இத்தலம் மிகு மேன்மையுடையது என்று கூற, சௌனகாதி இருடிகளெல்லோரும் சூதமுனிவரை வணங்கி ஐயா! அடிகள் கருணையால் சிவத்தலமான்மிய சிரவணமடைந்தோம் ஒப்பற்ற அந்த நாககிரி தோன்றியவாறும், சிவபிரான் பூரணசாந்நித்தியராக விருக்குமாறும், அத்தலத்தை வணங்கி நன்மை பெற்றோர் சரித்திரங்களும் பிறவும் கருணை கூர்ந்து அருளல் வேண்டுமென்று வினவ சூதமுனிவர் புகலவாராயினர்.

௨

## கிரிவரலாறு.

மனமாசற்றமாதவர்களே! முன்னொரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் பெரியவாதமுண்டாய் ஒருவருக்கொருவர் தாமே பலவான் தாமே வலியோனென்று தருக்கும் வலிமை அறியலாமென்ற தீர்மானம் கொண்டவர்களாய் மகாமேருகிரிக்குச் சென்று ஆயிரம் சிகரங்களையுடைய இந்தக்கிரியை என் படத்தால் மூடிக்கொள்வேன். என்னைப் பெயர்த்துத் தள்ளுவாயாயின் வாதராஜ! நீயே வலியோனென்று கூறித் தனது ஆயிரம் சிரங்களும் விளங்க அகன்று விரிந்த அழகிய தனது படத்தை விரித்துச் சிறிது மிடமில்லாதவாறு மேருகிரியை மூடிக்கொண்டான் நாகராஜன். வாயுபகவான் வெகுண்டு கல்லென நகைத்து இதோ ஒரு நொடியிற் பெயர்த்துவிடுகிறேனென்று சபதம் கூறித் திசை யானைகளும் சப்த குல பருவதாதிகளும் அண்டஅடுக்குகளும் நிலை பெயர்ந்து திசைமாறவும் மற்றும் உலகங்களிலுள்ள சகல பிராணிகளும் திடுக்குற்று மதிமயங்கி வாட்ட முறவும் வீசினன். தேவர்களும் முனிவர்களும் இச்சண்டமாருதமாகிய கொடிய காற்றைச் சகியாதவர்களாய் ஊழிக்காலத்தில் அழிக்கவரும் காற்றினும் பெருங்காற்றாகிய இதனை எவ்வாறு சகிப்போம், இது நீக்குதற்கு உபாயம் செய்வேமென்று கூடி ஆலோசித்து மலையை அணுகி நாகராசனைப் பார்த்து ஐய! உமக்கும் வாயுராசனுக்கும் நேர்ந்த வாதகாரணமாக உமது வலுவைக் காட்டுகின்றீர்! இதனல் உமக்கு யாதொரு வருத்தமில்லை, வாதராஜனுக்கும் அப்படியே வருத்தமில்லை. ஆனல் உங்களிருவருக்கும் வெற்றியடைய வேண்டுமென்ற பிடிவாதமாதல்

பற்றி, அது விளையாட்டும் சந்தோஷமுமாக இருக்கும். ஆயின் "ஆட்டுக்கடாச் சண்டையில் நரிமாண்ட" கதையாகச் சகல பிராணிகளும் துன்புற்று உயிர் துறக்க நேர்ந்திருக்கின்றது. ஆகையால் உயிர்களின் மீது கருணை கூர்ந்து உங்கள் போர் சிறிது அடங்குமாறு கருணை புரிதல் வேண்டுமென்று பலவாறு வேண்டிக்கொள்ள, ஆதிசேடனும் சற்று மனசு இளகிக் கவிந்த தனது ஆயிர சிரங்களுள்ள படத்தை எள்ளளவு நெகிழ்த்து விட்ட மாத்திரத்தில், வாயுராசன் ஓசையோடடித்த வேகத்தினால் மேரு சிகரங்களிலொன்றும், ஆதிசேடனுடைய சிரங்களிலொன்றும் பெயர்ந்தும் ஒன்றோடொன்று உராய்ந்து செந்நிறமுறத் தென்றிசை நோக்கி நாவலன் தீவிற்போய் வீழ்ந்தன. அதனால் அன்று தொட்டு மேலோர்கள் அந்தக் கிரியை **நாககிரி** என்று வழங்குவாராயினர்.

அஃதன்றியும் மேருகிரியில் ஐந்துமணி பெயர்ந்து விழுந்தன. அம்மணிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரியும் இலிங்கமுமாக விளங்குகின்றன, அவ்வாறு மணிகள் சிதறித்தெறித்து வீழப்பெற்ற மேரு சிகரம் காற்றடித்தவிசையினால் மூன்று துண்டங்களாகி, அவற்றுள் ஒன்று தெற்குச் சமுத்திரத்திலே சேதுவுக்கணித்தாகிய இலங்காதீபமாயிற்று. இரண்டாவது துண்டம் திருக்கோணமலையாயிற்று. மூன்றாவது துண்டம் தமிழ் வழங்கிய இக்கொங்கு நாட்டில் வீழ்ந்து திருச்செங்கோட்டு நாககிரியாகி இது உமைமொருபாகனும் வேலாயுதக்கடவுளும் பிரியாமல் அமர்ந்திருந்து சகல அடியார்களுக்கும் நல்ல வரங்கள் கொடுப்பதாய்த் தேவர்கள் அர்ச்சிக்க அநேகயுகமாய் விளங்குகின்றது. உகாந்த பிரளய காலத்தினும் அழிவில்லாமலிருக்கிறது. மேருகிரியினின்று தெறித்து விழுந்த மணிகள் ஐந்து கிரித்தலமாயின என முன் சொல்லப்பட்டதன்றோ. இவற்றுள் சிவப்பு மணி ஒன்று ஈசானதிக்கில் விழுந்து திருவண்ணாமலையாயிற்று, நான்கு யுகத்திலும் முறையே, அக்கினிமலை, மணிமலை, பொன்மலை, கன்மலை எனப்பெயர் பெற்று, பின்னர் அருணாசலம் சோணசைலம், அக்கினிமலை எனப் பெயர் படைக்க, இதிலே தவராஜாவாகிய மகாதேவர் உண்ணாமுலையம்மையாரோடு அண்ணாமலையீசரென உலகெலாம் வணங்கப்பிரசித்தி பெற்று எழுந்தருளியிருக்கின்றார். மற்றோர் மரகதமணி கீழ்த்திசையில் வீழ்ந்து ஒன்பது கோணமாக விளங்கிற்று. தமிழாசிரியராகிய அகத்தியமகாமுனிவர் வண்டுருவமெடுத்துப் புட்பங்களில் மதுவைக் கிரகித்து வந்து பூசித்தமையினால் "திருவீங்கோய்மலை" என்ற பெயர் படைக்க, அதிலே சிவபெருமான் மரகதாசலர் எனத் திருநாமம்பூண்டு

மரகதாம்பிகையம்மையாரோடெழுந்தருளி யிருக்கின்றார். மற்றோர் மாணிக்கமணியானது அக்கினிதிக்கில் வீழ்ந்து சூரியப்பிரகாசம்போல ஒளிகாலும் சிவாயமலை எனப்பெயர்பெற, அதிலே சிவபிரான், மாணிக்கநாதர் மாணிக்கக் கூத்தர், திருமலைக் கொழுந்தர் சிவதையீசர், மாணிக்கமலைநாதர், அந்தியொளிதாங்கினார், மத்தியானச் சொக்கர் சுவர்னமாணிக்க வடிவர், நாகேசர், முத்தீசுரர், வாட்போக்கி நாதர், சுவர்நத்தியாகர், காகமணுகாமற்காத்த பரமர், திருமுடித்தழும்பர், இடிவந்து பூசிக்கும் பொற்றாமரைப் பதத்தர், ஆரங்காட்டினார், ஆரிய வாசகனுக்கு அருள்புரிந்த இரத்தினகிரியார், கும்பங்கள் பொசிவாசி கொண்டவர், சுரும்பார் குழலிக்கின்பமணவாளர், பன்றிக்குட்டிக்கு முலையமுதங் கொடுத்தவர், வேடருக்குத் தந்தங்கள் கொடுத்தவர் என்னும் திருநாமங்கள் கொண்டு உலகினர் வத்த எழுந்தருளினார். பின்னரும் மற்றோர் வயிரமணி தென்றிசையில் வீழ்ந்து திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் பெயரியதாய்த் தன் சிகரம் சந்திரோதயம்போற் பிரபை விளங்காநிற்கும். சமுத்திரபானஞ் செய்த அகத்தியமுனிவர் திருக்கரத்துக் கமண்டல சல காரணமாகப் பூமிக்குள் அமிர்ந்தது. அத் திருப்பாண்டிக் கொடுமுடியிலே பண்மொழியம்மை மணவாளரென்று யாவரும் போற்றச் சிவபிரான் கொடுமுடிநாதர், வன்னிவனவீசுவரர் மகடேசுவரர் எனத் திருநாமங்கள் பெற்றுப் பொன்னியாற்றங்கரையில் எழுந்தருளினார். மற்றோர் நீலமணி நிருதி திக்கில் வீழ்ந்து நிலைப் பெற்றிருக்கிறது. அது பொதியம் என்று வழங்கப் பெறுகிறது. இளம் பிறை தங்கிய சடாமுடியுடைய சிவபிரான் உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்ய எழுந்தருளியகாலத்தில் அத்திருக்கல்யாண சபையிலே திரிலோக வாசிகளும் திரண்டு குழுமிய சுமையினால் தென்றிசையிலுள்ள பொதியமலை அண்ட முகடுற மேலெழுந்து நிற்ப, கனத்தினால் வடபூமியானது பாதாளம் புகுவது கண்டு, அதன் கனத்துக்குச் சமமாகித் தவத்தினால் கனத்தவர் யாவரென்றறிந்து சிவபெருமான் அகத்தியமுனிவரை அப்பொதிகாசலத்தில் இருத்திவைத்தனர், இது உலகப்பிரசித்தமாய் எந்நாளும் விளங்குகின்றது. இவ்வாறு ஐந்து கிரித்தலங்களும், அவைகளில் எழுந்தருளியிருந்து உமையம்மையாரோடு அருள் புரியும் சிவபிரானரது பெருமையும் இங்ஙனமாம். இது நிற்க.

பொன்னுலகத்தார், பூலோகத்தார், பாதாளலோகத்தார் மகா முனிவர்களாயினோர் பற்பலயுகங்களாகக் காமியார்த்தங்களை நாடிப் பூசைபுரிந்தமையால் நாககிரிக்கு அளவிறந்த திருநாமங்கள் உண்டா



திருச்செங்கோடு, நாககிரி.

யின. அவற்றுள்ளே சிலவற்றை மாத்திரம் ஈண்டு கூறுகின்றேம். அஃதாவது அந்தக்கிரிக்கு அர்த்தநாரீசுவராசலம், முருகாசலம், கோதைமலை, முத்தமலை, கடகமலை, இடபமலை, தூர்க்கைமலை, முத்திமலை, சித்தர்மலை, சுத்தகிரி, ஞானகிரி, இரத்தினகிரி, சோணகிரி, இரத்தகிரி, பிரமகிரி, தீர்த்தகிரி, தர்மகிரி, கந்தகிரி, பதுமகிரி, தேநுகிரி, திருவேரகம், திருச்செங்கோடு, சேடமலை, தெய்வமலை, சிவமலை, சஞ்சீவிமலை, வாயுமலை, விஷ்ணுமலை, தாருகாசலம், பொருதுமலை, வந்திமலை, அழகுமலை, தாருமலை, சூதமலை, தவமலை, அனந்தமலை, தங்கமலை, யோகமலை, மேருமலை, கைலைமலை, சிவனுடுமலை, விரதமலை, வேதமலை, இருடிமலை, அமுதமலை, சுனைமலை, கூலமலை, கிரமலை, உபயமலை, இமயமலை, கங்கைமலை, கொங்குமலை, முதலிய அநேக பெயர்களுண்டு. இஃதன்றி பூருவகாலத்திலே காமதேநு கைலாச கிரியை அடைந்து சிவபிரானை வணங்கி உம்மைப் பூசிக்குமாறு ஒரு தெய்வத்தலம் திருவுளம்பற்றியருளல் வேண்டுமென்று வேண்ட ஞானமூர்த்தியாகிய பரமசிவனார் கிருபைகூர்ந்து ஒ காமதேநு! நமது பஞ்சநாடிகளாய் மேருகிரிக்கு ஒப்பாவனவாய் நம் மனசுக்கிசைந்தவாய், மகாமேருகி கிரிக்கணுள்ள பல சிகரங்களுள்ளே மிக மேன்மையாகிய கொடுமுடிகள் ஐந்துள. அவ்வைந்து சிகரங்களையும் நீ எடுத்துக்கொண்டு போய்த் தக்ஷிணபூமியில் வைத்து என்னை ஆவாகனஞ் செய்து பூசிப்பாயாக என்றருளிச் செய்தார். நாகக்கொடுமுடி முதலிய ஐந்து சிகரங்களையும் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளியவாறு காமதேநு பெயர்த்தெடுத்துச் சுமந்து கொணர்ந்து நாககிரியின்மீது நாகக்கொடுமுடியை ஸ்தாபித்தது. வாயுபகவான் கொண்டுவந்தது ஆண் நாகச்சிகரமும், இப்பொழுது காமதேநு கொண்டுவந்தது பெண் நாகசிகரமுமாம். இவ்விரண்டும் சிவனும் உமையும் போல கூடிப்பிரியாதிருக்கின்றன. இங்ஙனம் இவ்விரண்டு சிகரங்களும் கூடிப்புணர்ந்து நிற்க, மற்ற நான்கு சிகரங்களுள்ளே தனஞ்சயநாடிச் சிகரமானது நீலநிறமாய் நாககிரிக்கு வடகிழக்குத் திக்கில் விழுந்து விளங்குகின்றது. அதில் அநேக மூலிகைகளும் இரசகந்தபாஷாண விளைவுகளும் முக்கரணிகளான சஞ்சீவிகளும் முளைத்தெழுந்திருக்கின்றன. அதனைக் கஞ்சமலை என்று புகழ்வர் தேவதத்தநாடிச் சிகரமாகிய மற்றொரு சிகரம் நாககிரிக்கு வடமேற்குத் திக்கில் ஓமாக்கினியைக் குவித்தமைபோல அக்கினி நிறமாக விருக்கும். அதிலே பிரமதேவர் சிவபெருமானை ஆவாகித்து வேதவொலி விளங்கப் பூசைசெய்தமை விளங்காநிற்கும். கிருகர்த்த நாடிக் கொடுமுடியாகிய மற்றொன்று நாககிரிக்கு வடக்கே புஷ்பகிரி என்னும்

பெயர்படைத்துச் சுவர்ணநிறமாகப் பிரகாசிக்கும். கூர்மநாடிக்கொடுமுடியாகிய மற்றொன்று அதற்கும் வடக்கே குண்டலாகாரமாய் வெண்ணிறமாய்த் திகழ்ந்து சங்ககிரி எனப் பெயர்பெற்று விளங்கும். இங்ஙனம் கூறப்பட்ட நான்கு சிகரங்களும் நாககிரியைப்பரவி உள்ளே ஒன்றுபடக் கலந்து விரவியிருக்கின்றன. ஓர் பாகம் பால்வண்ணமும், மற்றொரு பாகம் பச்சைவண்ணமுமாகப் பரமசிவனார் எழுந்தருளியிருக்கும் தலத்திலே எங்கணும் வியாபிக்கும் வாயுபகவான் ஆதிசேடன் படம் பொருந்திய முடியைப் பெயர்த்துத் துண்டித் தெரிந்தமைத்துவைத்தமையால் திருச்செங்கோடானது என்றைக்கும் இரத்தகிரி என்றும், சோணகிரி என்றும் திருநாமங்கள் பூண்டு சிறப்பு வாய்ந்து நிறந்திகழ்ந்து ஓங்கி விளங்கியிருக்கின்றது. கொத்தாகிய ஆயிரமுடிச்சேடனுடைய ஓரங்கம் வந்து சேர்ந்தமையினாலே நாககிரி என்று பெயராய், அந்த நாகராஜன்றானே தினந்தோறும் வணங்கினமையால் சேடகிரி என்றும், கோதைமுனிவன் வசிக்கின்ற ஆசிரமத்தில் இக்கிரி வந்தமர்ந்தமையால் * **கோதைமலை** என்றும் பெயர்படைக்கும். சுவர்ணசயிலத்தின் கொடுமுடிச் சிகரத்திற் பொருந்திய சிவலிங்கத்துடனே நாகராஜன் அங்கமும் சேர்ந்து வந்து விழுந்தமைந்த காலத்திலே இரண்டு நாகங்களும் வழியிடையிற் கூடிப் புணர்வதை அறிந்து அவற்றைக் கல்லாக என்று கோதைமுனிவர் சபித்தார். பார்வதிதேவியார் திருக்கல்யாணம் தரிசிக்குமாறு அகத்தியமுனிவர் வரும் மார்க்கத்திலே நாகம் இரண்டு புணர்ச்சி செய்வதுபோற்றோன்ற இது பொல்லாதென்று கோதைமுனி சாபத்தினாலே கல்மலையானமை தெரிந்து, அங்ஙனம் வராது விலகும்போது, அத்திருப்பாண்டிக் கொடுமுடி ஓங்கி நின்றது. அதனைத் தமது குடங்கையாற் புகுதவழுத்தினார் என்று மொழிந்த சூதமுனிவர் அங்கு இன்னும் புதுமையாகிய சிகரம் ஒன்றிருக்கிறதென்று கூறுவாராயினர்.

---

௨

## வந்தியபாடாணம்.

சிவத்தைப் போற்றுந் தேசிகர்களே! வந்தியபாடாணம் எனப் பெயர்படைத்த சிகரம் ஒன்று முன்னர் மகாமேருகிரியிலிருந்தது. அது மலடிகட்கு நிக்ஷேபநிதிபோலச் சந்தானந் தரத்தக்கது. திரிலோகத்

---

* பிக்ஷாடன கோலங் கண்டு, மோஹித்த ரிஷிபத்தினி மார்கள் பின்னர் இங்கு வந்து வதிந்தமையால் **கோதை நகர்** என்று பெயராயிற்றென்றும், கீதநடனாதி பணிவிடைகளியற்றுமுரிமை பூண்டிருந்தனரென்றும் ஒரு சரிதம் காணப்படுகிறது.

துக்கும் உபகாரார்த்தமாய் அருமையாக இருக்கும். மனக்குரோத மில்லாத அநேக முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள், கந்தருவர் முதலாயினோர்களுக்கெல்லாம் ஆதிகாலந்தொட்டுச் சந்ததி அருளிவந்தது. அதற்குப் பக்கத்தில் மோகனிகஜமென்னும் பெயரையுடைய ஒரு சிகர மிருக்கின்றது. அந்தக் கிரியில் எவரேனும் ஒரு கொடியை வாங்கித் தரித்துக் கொண்டால் அந்தப் பூங்கொடிகள் மோகனிகஜத்திலிருக்கிற வரைக்கும் பொன்னுபரணமாக விளங்கும். அக்கொடிகளைக் கீழே போட்டால் உடனே பழைய கொடி உருவமாகும். பின்னும் இஷ்ட காமியங் கொடுக்கும் சித்து மூலிகைகள் மிகுதியாய் அங்கே உள்ளன. அந்த மோகனிகஜசிகரத்தின் கிழ்ப்புறத்தில் வந்தியாபாடாண அமிர்தம் முளைத்தெழுந்து தோன்றிப் பொங்கி வழிந்தமை விளங்காநிற்கும். இமவான் மகளாகிய பார்வதியைத் திருக்கலியாணம் செய்து மணம் புணர்ந்துகூடி விளையாடுங்கால் விஷ்ணுபிரமேந்திராதியர்கள் சிவபிரானையும் உமையம்மையாரையும் வணங்கி எங்களுக்குத் தியாகமாக அவ்வந்தியாபாடாண சிகரத்தைக் கொடுத்தருளல் வேண்டுமென்று வேத மந்திரங்களோதித் துதிசெய்யும்போது பரமசிவனார் மகிழ்ச்சிகொண்டு அப்பாடாண சிகரத்தைத் தியாகமாக அருளப்பெற்றுக்கொண்டு வந்து பிரமதேவர் அதன் பக்கத்தில் ஓர் திவ்ய சிவலிங்கம் தாபித்துப் பூசித்து வந்தீசுரர் என்று பெயரிட்டார்; அந்தச் சிகரம் யாண்டுமுள்ள மலடிகளுக்கும் பிள்ளை பெறுவதற்கருளுண்டாக்கி வைக்கப்பட்டது. அதனை நாரதமுனிவர் வெற்றியையுடைய சூரனுக்குக்கூற அந்த சூரபன்மன் பரமசிவனாரிடம் வரம்பெறுங் காலத்திலே அச்சிகரத்தைப் பெயர்த்துக் கொண்டு வந்து திருச்செங்கோட்டுக் கொடுமுடியிற் பதித்து வைத்துப் பூசை செய்தான். தேவர்களெல்லாம் வந்து வணங்கத்தக்க வலியினனாகிய பானுகோபன் முதலாகிய பல பிள்ளைகளைப் பெற்றான். பொன்னுலகத்தை அழித்துத் தேவர்களைக் கொண்டுவந்து சிறையிலிடுவித்தான். தனது வலிமைக்கும் சிறிதும் எதிர் நிற்கமாட்டாதவர்கள் தேவர்கள் என்று மதித்தான். அஃதன்றியும் கொலை முதலிய பாவங்களையே செய்கின்ற நினைவையுடையவனாய் அகோரமாகிய கோபத்தாற் கொடுந் தொழில்களைச் செய்பவனாய்த் தன் வலிமை குறையாது பல அண்டங்களையும் ஒரு குடைநிழலிலே அடக்கிப் பரிபாலனஞ் செய்து கொண்டிருந்தான். இகத்துக்கும் பரத்துக்கும் உபகாரமாக வந்தியாபாடாண சிகரத்திலே சிவலிங்கத்தை அர்ச்சித்த மகிமையினாலே, கந்த சுவாமியும் அவனைச் சங்கரித்தற்கு அரிதாக ஓர் கொடியும் வாகனமுமாயினான். ஆதலால் பரமசிவனாருக்குப் பிரீதியாய்க்

களிப்பைத் தருவதாகிய அந்தக் கிரியில் யாவரேனும்வந்து சிவயோகம் ஜபம், தபம், தர்மம், தானம் முதலியவைகளை முயன்று செய்வாரா யின் அவை ஒவ்வொன்றும் கோடி கோடி பயனுய் விருத்தியடையும்; அஃதன்றியும் அந்த வந்தியாசிகரத்தைக் கிரேதாயுகத்தில் யாவரேனும் ஒருவர் எங்கிருந்து சிந்தித்தாலும் அது சந்தானம் உண்டாக்கும். திரேதாயுகத்திற்கண்டு நமஸ்காரஞ் செய்யின் பிள்ளை உண்டாகும். துவாபரயுகத்தில் வந்து பூசித்துத் தொழுதால் இஷ்டமாகிய புத்தி ரோற்பத்தி உண்டாம். கலியுகத்தில் சுக்கிரவாரமும் கார்த்திகை நட் சத்திரமும் கூடிய சுபதினத்தில்வந்து குமாரதீர்த்தத்தில் மூழ்கிச் சிவத் தியானத்தோடு உமையொருபாகரைப் பிரதக்ஷிணம் செய்து, மூன்று நாளும் கிரிபிரதக்ஷிணஞ் செய்து வணங்கிச் சிவபுராணபடனமேனும் சிரவணமெனுஞ் செய்து வசிப்பின் நல்ல மகப்பேறு முதலிய இஷ்ட காமியார்த்தங்கள் வாய்க்கும். நிராப்பாவமும் தீரும். தாம் செய்த மருள் மயக்காகிய பாவங்களுக்கும் விமோசனமாக்கும். நினைத்த காரியங்களும் கைகூடும். மார்கழிமாசத்துப் பௌர்ணமியும் ஆருத் நாளாகிய திருவாதிரையும் கூடிய சுபதினத்தில் நாகேசுரரை நினைத்து வனப்பு மிகுந்த குமாரதீர்த்தத்தில் முழுகி நியமநிஷ்டை முடித்துக் கோண்டு ஆசாரத்தோடு குமாரருக்கும் நகேசுரருக்கும் உமையொரு பாகருக்கும் அபிஷேகமுதலாகிய சோடசோபசாரங்களோடு அர்ச் சித்து அன்றைக்கு உபவாசமாயிருக்க வேண்டும். இன்றேல் ஒரு போது அன்னம் புசித்து விரதம் அனுட்டித்துப் பிராமணர்களுக்கு நெய், வெல்லம், பால், தயிரோடு சம்பூரணமாக அன்னம் புசிப்பித்து, பின்னர்த்தான் ஒருவேளை அன்னம் புசிக்கவேண்டும். இவ்வாறு மூன்று நாளும் அர்ச்சனை செய்து வேதாகமசாஸ்திர முணர்ந்த அந் தணர்களுக்குத் தானம் கொடுத்து, அதிதிகள் முதலிய பெரியோர் களுக்கும் தம்மாலியன்ற உதவி புரிந்து அவர்களைத் திரிகாலங்களினும் வணங்கி வந்தியெசுரரைப்பூசித்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்ப வர்கள் அடையும் பலன் இத்துணைத்தென்று கூற அரிதாகும். அஃ தன்றியும் ஷண்முகருடைய பாதங்களைத் தொழுது "ஓம் சரவணபவா' என்று ஏகாந்தமாக்க் கருத்தில் உச்சரித்தபேர்களுக்கு வேதாகம சாஸ்திர உபநிடத ஞானம் சித்திக்கும். பாட, படிக்க, பிரசங்கிக்க வல்ல வரப்பிரசாதத்தை அடைவார்கள். துணிவோடு தாரகப் பிரமத் தியானஞ் செய்கிறவர்கள் பெறும் பேறும் பெறுவார்கள். சிதேவியின் அருளும் பெறுவார்கள். பூமண்டலத்தையும் அரசாட்சி செய்வார் கள். மிகுந்த சௌரியமுடைய சூரனைப் பிளந்து கொன்று தேவேந்

திரனுக்கு இந்திரலோக அரசாட்சி கொடுத்து இந்தப் பூமண்டலத்தில் எழுந்தருளி மகிமையுடைய நாககிரியில் வந்தீசுவரரைப் பூசித்த சுப்பிரமணியக்கடவுள், மகிழ்ச்சியோடு நிகரற்ற ஒரு தீர்த்தமுண்டாக்கி வைத்து, அதில் சடாக்ஷரமந்திரங்களைத் தாபித்தருளினார். கலியுகத்திலும் வந்தீசுரரைப் பூசித்துத் தம்மை வணங்குபவர்களுக்குக் கருணை பாலிக்குமாறு வேலாயுதக்கடவுள் வீற்றிருக்கின்றார். அச்சிகரம் விளங்கியிருக்கும் மலையிடத்தெங்கே எகினும் மேருசிகரம் போலத் தேனருவு பெருகி அலைகொழித்திறங்கும், அழகிய புட்பங்கள் அலர்ந்து யோசனை தூரம் வாசம் வீசும், நந்தன வனங்களும் தாமரைகள் மலர்ந்த அநேக தீர்த்தங்களும் நெருங்கியிருக்கும். வாடாத புட்பங்கள் அலரும். பஞ்சதருக்கள் மிகுந்திருக்கும், மனிதர்களுக்கு அமுதம் புசிப்பாகும். பலவகை மணிநிறங்கள் சுடர்விரித்தொளி பரப்பும். விளைவுக்கதிர் மணிகளும் பெருகும். மிகுந்த வள்ளிய சந்தனச் சோலைகள் விளங்கும். அன்னப்பட்சிகளும் வண்டினங்களும் ஓயாது ஊடிய பெண்களுக்கும் புருஷர்களுக்கும் தூதுபோய்ச் சொல்லும். குகைகளிலே கொடிய மிருகங்கள் கர்ச்சிக்கும். மேகம் இடி மின்னல்களோடு காலிறங்கிப் பெய்யும் முழக்கமிகுந்திருக்கும். யானைகள் பிடியானைகளை மணம்பொருந்திப் புணர்ச்சி செய்யும். அங்கு வசிக்கின்ற மாதர்கள் நெற்றியில் இட்ட சிந்துரப் பொட்டுகள் பரிமளிக்கும். பஞ்சதருக்களினுடைய நிழல்களிலே அனேக மாடமாளிகைகள் செறிந்திருக்கும். அன்பரெல்லாம் அரிதாகிய பஞ்சாக்ஷர மந்திரங்களைச் செபிப்பவர்கள். அவ்வியல்பினதாகிய நாககிரியைக் கண்டவர்களுக்குச் சிவகிருபையும் மோட்சமும் சித்திக்கும். பிரத்தியட்சமாய்க் காணப்படும் ஆதித்தர்கள் உதித்து, சுவாமி சந்நிதானத்தில் எய்திப் பூசிப்பார்கள். புலியும், பசுவும் உறவாகி விளையாடும். தாமரைமகள் உமயவளுக்குற்ற சகியாகும், மேகமண்டலத்தை அளாவியிருக்கும் நாககிரிக் கொடுமுடிச் சிகரங்களில் தென்றற் காற்றினாலே அசைந்தொசிந்தொன்றோடொன்று தழுவிய மலர்ச்சோலைகள் மிகுந்திருக்கும். மூங்கில் வனங்கள் நெருங்கிப் பொங்கி வளர்ந்து விளங்கும். தேவேந்திரனும் பிரமாவும் விஷ்ணுவும் வேதமந்திரங்கள் ஓதிச் சுவாமியைப் ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து சதாகாலமும் வணங்கி வாழ்த்து வாழ்வார்கள். இங்ஙனம் வந்தியாபாடாணப் பெருமை கூறி, பின்னர்ச் சூதமுனிவர் உமாதேவியாரும் சிவபிரானும் ஏகசரீரமாய் நின்றருளிய மகத்துவத்தைச் சொல்வேனென்று கூறுவாராயினர்.

---

உ

# பிருங்கிதரிசன மான்மியம்

—o—

அன்புமிகுந்த அருந்தவர்களே! உலகமெல்லாம் புகழவல்ல மெய்யன்பர்களுடைய உள்ளம்போலப் பரிசுத்தமும் விசாலமுமாய் அகல நீள உயரமுள்ளதாய், கணபதி, வீரபத்திரர், நந்திதேவர், வைரவர், சுப்பிரமணியர், துர்க்கை, மகாகாளர், ஐயனார் முதலியவர்களினாற் காவல் பூணப்பெற்றதாய், பல இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிமயமாகிய நானாவித சிகரங்களோடியன்றதாயுள்ள திருக்கைலாச மலையிலே செம்பொற்றிருக் கோயிலிலே மேன்மையுற்ற சிம்மாசனத்திலே ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாரற்ற பெருங்கருணையினாலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்றுவியற்றும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் ஒரு திருமுகமும், முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களும், பிறையையும் கொன்றையையும் கங்கையையும் சூடிய சடாமுடியும், நாககுண்டலமும் தோடும் திகழும் திருச்செவிகளும், காளகண்டமும், மான்மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினாலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத் திருமேனியும், பூணூலையும் என்பு மாலைகளையும் பிரமகபாலங்களையும் அணிந்த திருமார்பும், புலித்தோலுடையும் யானையுரிப்போர்வையும், வீரக்கழலும் சிலம்புமொலிக்கும் திருவடிகளுமுடையவராய், தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பாருவதி தேவியார் தமது இடப்பாகத்தின் மேவ, பூதகணங்கள் நானாவித வாத்தியங்களை முழக்க, பலர் இருபுறத்தும் வெண்சாமரைவீச, வேறு பலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புரு நாரதர்களும் விஞ்சயர்களும் இசைபாட, கணநாதர்கள் கரைந்து கரைந்துநெக்குருகச் சரீரம் நடுங்க, உரோமஞ் சிலிர்ப்ப மதகினிற் புறப்படும் சலம்போல ஆனந்தவருவி சொரிய, யாவரும் பேரானந்தப் பெருங்கடலுட்டிளைத்து ஆடிப்பாட, முனிவர்கள் தங்கள் கைகளைச் சிரசின்மீது குவித்து வேதசிரசுகளாகிய உபநிடதங்களை எடுத்தோத, பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள் திரு நந்திதேவருடைய பிரம்பினாலே பலமுறை விலக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஆடையை ஒதுக்கி வாய்புதைத்து நின்று தத்தங் குறைகளைக்கூற வீற்றிருந்தருளினர்.

அப்பொழுது அளவிறந்த தேவர் முனிவர் சிவகணநாதர்களெல்லாம் அம்மையையும் அப்பரையும் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து

வருவார்களாயிருக்குங்கால் பிருங்கி முனிவர் மாத்திரம் இங்ஙனம் சிந்திப்பாராயினர். நிரவயவப் பொருளாயிருத்தலால் நித்தியமாகியும், அறிவிக்க அறியும் சேதனமுடைமையால் தூலசித்துப் பொருளாயும், கருவிகளையின்றி அறிவிச்சை செயல்கள் விளங்கமாட்டாமையால் அநாதியே சகசமலத்தினாற்றடைப்பட்டுள்ள ஞானசத்தி இச்சாசத்தி கிரியாசத்திகளையுடையனவாகியும், ஒரே காலத்திலே மாறுபடும் வெவ்வேறு அறிவும் தொழிலும் உடைமையால் சரீரந்தோறும் வெவ்வேறாகியும், முத்தி தசையில் வசிப்புண்டு விரியும் அறிவுடைமையால் வசித்திடவரும் வியாபகமுடையனவாகியும், சதசத்தியல்புடைமையால் தர்மாதர்மங்களைச் செய்து நால்வகை யோனியுட்பட்ட எழுவகைத்தோற்றத்து எண்பத்து நான்கு நூறாயிரயோனிபேதங்களாய்ப் பிறந்திறந்து மேலும் கீழும் காற்றாடியும் கொள்ளிவட்டமும் போலப் புக்குழன்று இன்பதுன்பங்களை அனுபவிப்பவைகளாகியும், பரமேசுவர சம்பந்தமாகிய பேரானந்தத்தைத் தமதாகக் கொண்டனுபவிக்க விரும்பியும் அவ்விருப்பம் பாச உபாதியினால் முற்றுப்பெறாது அவலப்படுதலிற் பரதந்திரமுடையனவாகியும், பசுத்துவம், மலத்தினால் வந்த உபாதியாதலின் பரிபாகதசையில் ஈசுரானுக்கிரகத்தால் அவ்வுபாதியினின்றுநீங்கி ஆன்மலாபத்தை அடைதற்குரியனவாகியும், தற்றரும தருமியாதலால் கடவுட்குரிய எண்குண இயற்கையைத் தங்குணமாகப் பெற்றடங்கி ஒன்றுதற்குரியனவாகியும், ஆனந்த அனுபவ இச்சையேயுடைமையாற் சுத்தாத்துவித முத்திநிலைக்கண் கரைகடந்தோங்கும் ஆனந்தவெள்ளத்துட்படிந்து சுகாதீதமொன்றி நிற்றற்குரியனவாகியும் உள்ளன பசுக்கள் என்றும், இப்பசுக்களுக்குப் பதியாயுள்ளார் சிவபிரான் என்றும், இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று அவஸ்தையில் முறையே சத்தியும் உத்தியோகமும், பிரவிருத்தியும் என்னும் தொழில் வேறுபாடுபற்றிச் சிவன் சதாசிவன் மகேசன் என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் தடத்தக் குறிகளையும், சாத்துவிக ராசச தாமச குணங்களையும் கடந்து, முதலும் ஈறுமின்றி, பெரிதாய், நுண்ணியதாய், பேருணர்வாய், ஆனந்தப் பிழம்பாய் யாண்டும் ஒரே முதலாய், நாசரகிதமாய், ஓங்கொளியாய் நிறைந்து வியாபித்ததாய், ஆன்மாக்கடோறும் அந்தரியாமியாய்விரவித் தொழிற்படுத்தி அறிவை விளக்கி நிற்பது அச்சிவபதிப்பொருளாம் என்றும், இந்தப் பதி சொரூபநிலையிலே பராசத்தியருட்குணங்களினின்று பிரியாது குணிப்பொருளாயிருப்பினும் இடபாரூடர் முதலிய தடத்தமகேசுர மூர்த்தங்களிலே சத்தியை விட்டுச் சிவபிரான் பிரிந்திருத்தல் பிரத்

தியக்ஷமாக அறியக் கிடத்தலினாலும், சத்தியையும் சிவனாரையும் நாயகி நாயக பாவமாய் நோக்குமிடத்தும் நாயகியினும் நாயகராகிய சிவனார்க்கே தலைமை கூறப்படுதலானும், பெண்பாற்பட்ட சத்தியாகிய உமையம்மையாரை விடுத்துப் புருஷர்பாற்பட்ட சிவபெருமான் ஒருவரை வழிபட்டால் அமையும் என்றும், ஆதலின் சிவபிரானையன்றிப் பிறரொருவரைப் பணிவது கூடாதென்று நினைந்து அச்சிவபிரானை மாத்திரம் வணங்கித் திருமுன் நர்த்தனஞ் செய்வாராயினர். பெருங் கருணைத் தடங்கடலாம் எமது அன்னையாராகிய இமயவல்லி புன்முறுவல் கொண்டவராய், அம்புயாதனன் முதலியோர் வணங்கும் சம்புவை நோக்கி என் முக்கட்பெரும! இங்ஙனம் வந்த விஷ்ணு பிரமேந்திராதிதேவர் முனிவர் கணநாதர் முதலானவர்களெல்லாம் விடமுண்டகண்டராகிய நின்னையும் என்னையும் வணங்கிச் சென்றார்கள். இஃதன்றி இந்திரனை வணங்குவோர் சசிதேவியையும், பிரமனை வணங்குவோர் சரசுவதியையும், விஷ்ணுவை வணங்குவோர் இலக்குமியையும் வணங்குவாராக, இந்தப் பிருங்கி, தேவரீரை மாத்திரம் அன்புடன் வணங்கி நர்த்தனஞ் செய்து செல்கின்றான், என்னை வணங்கினானில்லை, இதற்குக் காரணம் அடியாளுக்குத் தெரிந்திலது. அன்பு கூர்ந்து தெரிவித்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார். கங்காதரர் சிவபரஞ்சோதியாகிய சிவபிரான் பரிமளவல்லித் தாயாரை நோக்கி, கொழுத்த கெண்டைமீன் போலும் அழகிய கண்ணையுடைய பெண்ணே! இது விடயத்தில் நீ இவ்வளவு கவனித்தல் வேண்டுமோ? என்றனர். அதற்கு அம்மையார் நாயக! இந்த முனிவன் இன்று மாத்திரமன்று இதற்கு முன் ஒவ்வோர் முறையும் இவ்வாறே செய்து வருகின்றானாதலின் எனக்குச் சந்தேகந்தோன்றிற்று, விடையருளல் வேண்டுமென்று வேண்ட, சிவபிரான் அம்மையாரை நோக்கி மகரக்குழை பூண்டு வள்ளையிலைபோன்று விளங்கும் சிறந்த இரு செவிகளையுடைய நங்காய்! என்னினின்று உன்னை வேறாக நினையாது அபேதம் பாராட்டி வணங்குகிறான் என்றனர், திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப்பால் சுரந்த தனபாரத்தையுடைய லோகநாயகியார் இயமனை உதைத்த சீபாதத்தையுடைய மிருத்தியுஞ்சயரை நோக்கி பெரும! அபேதபாவனையால் வணங்கலாமென்றால், நீர் மாத்திரம் இவ்விடத்திராது உமது பக்கத்து என்னையும் வைத்திருப்பதெதற்காக்கு? அபேதமாக நினைக்கிறவன் என்னைமாத்திரம் வணங்கி நின்னை வணங்காதிருந்தாலென்? அவனுண்மை யறியவேண்டும் ஆதலின் நாமிருவரும் இடைவெளிபெறாது ஒன்றியிருப்போ மென்றிசைந்திருந்தனர். மற்றை



பிர்ங்கிரிஷிக்கு சிவபெருமான் சத்தியின் தன்மைக் கூறல்.

நாளும் அப்படியே பல தேவ கூட்டங்களும் முனிவர் கூட்டங்களும் சிவகணங்களும் வந்து இருவரையும் வலம்புரிந்து வணங்கிச்சென்றனர். பிருங்கி முனிவரும் வந்து சிவபிரானைமாத்திரம் ஒரு பாரிசமிருந்து வணங்கி, அம்மையும் அப்பரும் இடைவெளிகாணுது ஒன்றி யிருப்பதை அறிந்து என் செய்வது என்று சிறிது சிந்தித்து ஒன்றுந் தோற்ருதவராய்த் தியங்கித் தோத்திரம் புரிந்து, ஒரு வண்டுருவம் கொண்டு பறந்து கழுத்தின்கட் கண்ட வழியாற்றிபுராரியை மாத்திரம் வலம் செய்து, திரு முன் நின்று ஹர ஹர ஹர ஹர மகாதேவ சம்போ சங்கர கிருபாநிதே! சகல வேதாகமங்களாலும் துதிக்கப்பட்டவராய் என்றும் அழிவில்லாத மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அருளவல்ல பிற ரோருவர் இருக்கப்பெருதவராயுள்ள உம்முடைய பாததாமரையிலன்றி என் மனமாகிய வண்டு இறங்காது என்றற் ருெடக்கத்தனவாகச் சிவ நாம சங்கீர்த்தனங்கள்பாடி ஆனந்தக் கூத்தாடினர். இதனை நோக்கிய மலை மகள் பிருங்கிமுனிவ! மோக்ஷ சாம்பிராஜ்ய மளிக்கும் வன்மையில்லாதவள் நான் என்று கருதியன்ருே என்னை அவமதித்தனை! நன்று! நன்று!! "உன்னுடலிலுள்ள தசைமுதலியன வாய எமது கூற்றினையும் அவமதித்துவிடு" என்ருர், உடனே அவை நீங்கிவிட, முனிவர் சக்தியின்றிக் கீழே சாயக்கண்டு, என்பணி நம்பரன் அவர்க்கு மற்ருெரு கால்கொடுக்க, அவர் முன்னிருந்த இரு காலுடன் மற்ருேர் காலும் சேர்ந்து முக்கால் முனிவராக நின்றனர். அங்ஙனம் நின்ற முனிவரை நோக்கி பிருங்கியே! வேதாகமங்களின் கருத்தினை நன்கறிந்திருந்தும் நமது சத்தியின் இரகசியந் தோராது அழுகிழந்து அவலனுயினை; சூரியவிம் பம்போற் சிவமும், அச்சூரிய கிரணம்போற் சத்தியும் நிலையுறுதலின், சூரிய விம்பமின்றிக் கிரண மில்லை, கிரணமின்றிச் சூரிய விம்பமில்லை, அங்ஙனமாயினும் சூரிய கிரணத்தின் சகாயத்தினுலே உலகினர் எவற்றையும் அறிந்து இயங் கவல்லவராகின்ருர். அதுபோலக் குணியாகிய சிவத்தைவிட்டுக் குண மாகிய சத்தியில்லை. குணமாகிய சத்தியின்றிக் குணியாகிய சிவமில்லை. அங்ஙனமாயினும் சத்தியின் சகாயத்தினுலே சேதனுசேதனப் பிரபஞ் சம்யாவும் நிலைபெற்றியங்குகின்றன. என்றற்ருெடக்கத்தனவாகச் சிவபிரான் உபதேசித்தவற்றைக் கேட்ட பிருங்கி முனிவர் நன்று! நன்று!! அந்தோ இவ்வுண்மைகளை அறியாது சத்தியைவணங்காது சத்தியிழந்து கெட்டேன்! ஊழ்வலி பெரிது! பெரிது!! என்று பயந்து மெய்மறந்து திடுக்கிட்டுப் பரவசனுய் மிகவும் நொந்து அம்மையப் பரை வணங்கிச் சென்ருர். முத்துக்களையீனும் கருப்புவில்லும், புட்ப

பானைங்களும், பாசாங்குசமு மேந்திய ராஜராஜேசுவரியாகிய அன்னையார் பிருங்கிகொண்ட கருத்திற் கருத்திறக்கிச் சிறிது சிந்தித்து, இளமூரல்கொண்டவராய், பின்பு அடி பணிந்தேத்துபவர்களுக்குக் கருணைநோக்க மருளி அம்மையார் எம்மானிடத்தே வீற்றிருந் தருளினர்.

---

உ

## உமைதவ மான்மியம்.

---

வேதங்களெல்லா முணர்ந்த மெய்த்தவ முனிவர்களே!! இமவான்மகளாகிய பார்வதிதேவியாரைத் திருமணஞ் செய்தபின்னர் ஆறுமுகப் பெருமான் உற்பவித்து நாரதருடன் கூடிக்கொண்டு குன்றுகள் தோறும் திருவிளையாடல் செய்து திருச்செங்கோட்டில் வந்து வசித்திருக்கும் காலத்திலே, மணம்பொருந்திய கூந்தலையுள்ள பிராட்டியார் புத்திரவாஞ்சையால் புதல்வரை நினைந்து உருகுவது தேர்ந்து எம்பெருமான் பல புதுமைகள் செய்தும் உமைதுயர் நீங்காமைகண்டு கைலாயகிரியின் ஓர் சிகரத்திலே கற்பகமுதலிய பல தருக்களும் கொடிகளும் செழித்துப் பலவிதவர்ணமும் வாசனையும் பொருந்திய ஓர் உத்தியான வனத்துட் சென்று அங்குள்ள கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ முதலிய வற்றுள்ளும் பலவிருக்ஷங்களுள்ளும் காணும் தோற்றப் புதுமைகளை உமாதேவியாருக்குக் காண்பித்து மகிழ்ச்சியூட்டி வரும்பொழுது, ஒரு பசிய முல்லைக்கொடியானது வெண்மை நிறமாகிய பெரிய மாதவி மரத்தைச் சுற்றிப்பற்றிக் கொண்டிருப்பதைச் சுட்டி அதனைப் பார்த்தனையோ? நங்காய்! என்றனர். அங்ஙனம் சங்கரன் கூறியவுடனே பார்வதி தேவியார் அதனை நோக்கி ஆ! ஆ!! இந்தப் பெரிய மாதவிமரம் புருஷனாகவும் அதிற் சுற்றியிருக்கும் பசிய முல்லைக்கொடி அப்புருடனைத் தழுவி நிற்கும் மங்கை போலவும் தோற்றுகிறதென்று கொண்டன்றோ அதனைப் பார்க்குமாறு நம்பெருமான் கூறினரென்று நினைந்து மூன்று உலகங்களுஞ் செய்த தபோபலத்தை நிறைவேற்றவோ? இப்பூலோகம் புகழடையவோ? தென்றிசையானது செருக்கு மிகுந்து மற்றத்திசைகளினும் மேற்பட்டோங்கவோ? அஞ்ஞானத்தின் கூட்டத்தை அழித்து அதமாக்கும் கொங்குநாடு வாழவோ? சிறப்பு மிகுந்த திருச்செங்கோடு மகிமையுண்டாகவோ? சைவசமயமானது உலகங்களிலே உயர்ந்து விளங்கவோ? பலவிதமாகிய தவங்களினும் சிவபூசையே சிறந்தது

என்று கடைத்தேரவோ? சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் அடியவருடைய மனம் மகிழவோ? மற்றெக் காரணத்தாலோ? அறியேம். எம்பெருமாட்டி முதுகு புறமாக மெதுவாக வந்து மலர் போலும் மெல்லிய கைகளால் சிவபெருமானுடைய திருக்கண்களை மறைத்தார். கருணைநாயகி கைகளால் இறுக மறைந்தபோது சந்திர சடாதாரியாகிய சம்புவினது இரு கண்களாக இலங்கும் சந்திர சூரியர்கள் மறைந்து போனமையால் உலகமெல்லாம் இருண்டு போயின. எட்டுத் திசைகளும் இருண்டு போயின. எந்நாளும் இருள் இல்லாமல் விளங்கும் தேவலோகமும் இருண்டு போயிற்று. உலகத்திலுள்ளோர் பூமியையும் அதிலுள்ள சராசரப்பொருள்களையும் தங்கள் தங்கள் தேகஸ்திதியையும் காணாது எப்பொழுதும் கண்டறியாதவானத்திலுள்ள பேரிருள் ஒன்றையே ஒழிவின்றிக் காணப்பெற்றார்கள். யாகஞ்செய்வது ஒழிந்து போயிற்று தவமும் தானங்களும் பறந்து போயின. தேவாராதனைகள் ஒழிந்து போயின. போகாத பவங்கள் தொலைந்து போயின. வேதாகமபுராண சாஸ்திர விசாரத்தாலடையும் அறிவையிழந்து உலகமெல்லாம் மயங்கிவிட்டன. தேவர் முனிவர் மனிதர் யாவரும் கூட்டங்கூடி ஓலமிடும்போது பார்வதிதேவியார் கேட்டுச் செங்கரங்களை நீக்கினவுடனே ஒளிகளெல்லாம் பரந்தன. இருளின் தடிப்புக்குறைந்தன. மழுங்கியவெல்லாம் விளங்கின. உயிர்களெல்லாம் பரமசந்தோஷ மடைந்தன. உமாதேவியார் பரமேசுவரருடைய திருக் கண்களை மூடிய கைகளை விலக்க நேர்ந்த ஒரு நிமிஷத்தினுள்ளே உலகங்களிலே பல யுகங்களாயினமையால் ஏகாதச உருத்திரர் முதலானவர்கள் வந்து பல்லாயிரம் உயிர்வகைகள் செய்யும் சற்கிருத்தியங்கள் தவற நேர்ந்தனவென்று முறையிடக் கேட்ட பார்வதிதேவியார் அச்சமுற்றவராய் அந்தோ நம்மால் உலகத்துக்குப் பேரிருள் தோன்ற நேர்ந்ததே! அஃதன்றி அநேகம் தபோதனர்கள் செய்யும் காலநியதிகளும் தவறினவே! என்று வருந்தும் மலைமகளை நோக்கி, நங்காய்! எமது கண்ணைமூடிய காரணத்தால் உலகம் அந்தகாரப்பட்டு படைத்தல் முதலான தொழில்கள் ஒழிந்து போய் உன்னைப் பாவம்வந்து தொடர்ந்து கொண்டது. மாறாக் கருணையுள்ள எம்மையும் உன்னையும் நம்மடியவர்களையும் பாவம்பற்றாது. அங்ஙனமாயினும் விதிவிலக்குகளையெல்லாம் விதிக்கும் வேதாகமங்கள் கூறியவாறு நாம் நடந்து காட்டினாலன்றோ உலகமும் அங்ஙனம் செய்யுமாதலின், நாம் கூறுமாறு அந்தப் பாவத்தைப் பரிகரிக்கும் பொருட்டு அவ்வேதாகம விதிப்படி பிராயச்சித்தம்

செய்துகொண்டு தவக்கோலமாய்க் கேதாரத்திற் சென்று தவம் புரிந்து, காசியிலுமவ்வாறே செய்து, பின்னர்க் காஞ்சீபுரத்திற் றவஞ் செய்வாயேல் யாம் அங்குவந்து காட்சி கொடுக்கின்றேமென்று கிருபாமூர்த்தியாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தனர்.

இதனைக் கேள்வியுற்ற திரிபுரசுந்தரி துயருற்று சிவபிரான் வேறும் நாம் வேறுமாக விருப்பதினாலன்றோ இவ்வித சம்பவம் நிகழ்ந்தது; 'முன்னரே ஒரு பிருங்கி என்னும் பெயரையுடைய முனிவனும் வணங்காது அவமதித்தனன்', ஆதலின் இவ்வித குறைவுகள் நேராதிருக்குமாறு அரிய தவஞ்செய்து அரனிடப்பாகத்தைப் பிரியாதிருக்கப் பெறுவதே நலமெனக்கருதி, எம்பிரான் திருவடிகளில் வணங்கி விடை பெற்றுப் பல தேவர்களும் சத்திகளும் சூழக்கேதாரஞ் சென்று தவஞ் செய்து, கங்கை பெருகும் காசித்தலத்துமெய்தி ஆங்கும் அருந்தவ மியற்றி முற்றிய பின், யாவராலும் புகழ்ந்தேத்தற்பாலதாகிய காஞ்சீ புரம் வந்து சேர்ந்தார் பார்வதிதேவியார்.

பலகோடி சத்திகள் சூழவந்த உமாதேவியார் பொன் மணிகளை யும் மலர்களையும் அலைகளாகிய கைகளால் இரு கரைகளினும் ஒதுக்கும் அழகிய கம்பையாற்றங்கரையிலே நல்ல முகூர்த்தகாலங்கண்டு, பஞ் சாக்கினி மத்தியினின்று அரிய தவஞ்செய்யுங் காலத்து, முருகவேள் ஆங்குச் சென்று உலகமாதாவை வணங்கித் தாயே! எந்தையாகிய பரமேசுரர் நீவிர் செய்யுந் தவத்திலே கருணைகொண்டிருப்பதாகத் தேவர்கள் முறைமுறையாக வந்து கூறுகிறார்கள். ஆதலின் பத்தி சிறிதும்மாறாது தவஞ் செய்வீரேல் பெருங்கருணைக் கடலாகிய பரம பதியின் தயவை அடைவீரென்று புகன்று போயபின்னர்த் திருமால் ஆங்குவந்தனர். அஃதறிந்த உமாதேவியார் உபசரித்து வைகுண்ட வாச! நீலகண்டமூர்த்தியின் இடப்பாகம் பெறவேண்டி அரிய தவம் செய்யாநின்றேன்; விண்ணவர் பெருமானாகிய அண்ணலின் கருத்து இன்னும் என்மீது இரங்கவில்லை. இனி என் செய்யலாம்! சொல்க என்று பார்வதிதேவியார் வினவினர். அப்போது கேட்குதிர் அம்மா! "நீவிரோ நித்திய கன்னிகை! சுவாமியோ நித்தியப்பிரமசாரி! என்று சிருஷ்டி றொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாம் முழங்குகின் றன; அங்ஙனமிருக்க உலகத்துள்ள உயிர்களெல்லாம் உம்மிடத்தே தோன்றி, எவற்றுக்கும் தாயென்று சொல்லவியன்ற உமது அள விறந்த பெருமையை யார் அறிவார்கள். என் அம்மணி! நீர் அறியா தனவு மிருக்கின்றனவோ? ஆயினும் மேதாவியான உபாத்தியாயன்



உமாதேவியார் தவத்துக்கிரங்கி சிவபெருமான் காக்ஷி கொடுத்தல்.

தன்பாற்கற்ற மாணக்கனைப் படிப்பறிவான் வினவி விடைபெற்று மகிழுமாறு போல என்னைக் கேட்கின்றீர், இந்த ஜாலத்தை யாரறிவார்! என் அம்மே! பாவம் என்னும் கட்டறுத்துப் பிரபஞ்ச வியாபாரத்தைப் பொடியாக்கி, வினை என்னும் பகையையும், பிறவி என்னும் பெரும் பகையையும் அறவீசி சிவலோகத்திற் செலுத்தவல்ல ஒரு வாளாயுதமாய், மாறாப் பெருவாழ்வுதரும் மேலான தவம், தீர்த்தம், தானம், யாகம், துறவு, விரதம் எல்லாம் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதனால் வரும் பிரயோசனத்தின் கோடி பங்கிலொருபங்காயினும் ஒப்பாகமாட்டாது; ஆதலால் மகிமை வாய்ந்த சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தாற் பூசிப்பீராயின் குற்றம் நீங்கி நினைத்தன கைகூடும் என்று மிகுந்த சிரத்தையோடு திருமால் மொழிந்தனர். ஆம், ஆம் எனப் புன்னகை செய்து பார்வதி தேவியாரும் கர்மானுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு வேதாகமவிதிவழி பிராயச்சித்தம் புரிந்துகொண்டு, கம்பையாற்றங் கரையிலே வேதசொரூபமான மாவடியிலே ஏகாம்பரலிங்கப்பெருமானை வழுவாது பூசித்து, அச்சிவ பரஞ்சுடரை நேசித்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தைத் தியானித்து வந்தனர். உமாதேவியார் எம்பெருமானிடத்தே வைத்திருக்கும் சத்திய பக்தி தோன்ற, உலகத்திலே சிவபூஜை செய்கின்றவர்கள் மன அழுத்த மிவ்வண்ண மிருக்கவேண்டுமென்று கண்டு உய்யும் வண்ணம் சிவபெருமான் அருளிய தென்று பரமஞானிகள் எண்ணுமாறு கம்பையாறு நீர் பெருகி இருகரையும் பெருகிப் பார்வதி தேவியார் பூசை செய்திருக்கும் இடத்திற்கு மெல்ல மெல்லச் சிவலிங்கத்துக்கு மேலெட்டிய அளவு பெருகிவரவே, மரகதமணிப் பாவைபோன்ற பிராட்டியார் திடுக்கிட்டு விரைந்தெழுந்து வேதிமேல் தன் வலப் பாகத்து முழந்தாளை ஊன்றவைத்துத் தன் கணவனைத் தன் இரு கைகளாலும் இறுகக்கட்டித் தழுவிக்கொண்டார்; உமாதேவியார் கொங்கையாலும் வளையலை அணிந்திருக்கும் செங்கையாலும் இருக்கிக் கட்டித் தழுவிக்கொண்ட மாத்திரத்தில், ஐயர் அஞ்ஞான இருளை அகற்றும் தமது அற்புத ஆனந்த சோதித் திருமேனியில் செங் கைவளைத் தழும்பும் கொங்கைத் தழும்புங் கொண்டு குழைந்து காட்டினார். இரேசக பூரகவாயுக்களை ஒடுக்கித் தூங்காமல் தூங்கவல்ல சிவயோகியர் தமது மெய்ஞ்ஞானக் கண்ணால் கண்டு களிக்கும் ஆனந்தப் பெருஞ்சோதிமயமான எமது ஐயன் திருமேனியானது மென் குயில் போல மதுரமாக வசனிக்கும் தேவியின் கொங்கைத் தழும்பும் செங்கைத் தழும்பும் கொள்ளப்பெற்றது ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்! ஆச்சரியம்!!

சிவலிங்கத்தை விடாமல் அணைத்துக் கொண்டவுடனே, சிவபிரான் கருணைகொண்டு ஆறுசமயங்களுக்கும் முதல்வியாயிருக்கின்ற நாதகீதப்பிரிய வசனியான மனோன்மணியைத் தழுவி, இமவான் புத்திரியாகிய பெண்ணே! உனது அன்பை மெய்ச்சினேன்; என்னவரம் வேண்டும் கேளெனத் திருவாய்மலர்ந்தனர். தத்துவாதீதமாய் விளங்கும் சிவபரஞ்சுடர் கிருபைபாலித்து அருளிய திருவாக்கைக் கேட்டு தேஜோமயமான அற்புதத் திருவுருவைத் தரிசித்து ஆனந்தமுற்று கவுரி மெய்விதிர்ப்ப, மயிர்க்கூச்செறிய, நாக்குழற, கண்களினின்றும் சந்தோஷக்கண்ணீர் மாறாது சொரிய, இறுகத் தழுவிய கைகளைவிட்டு எழுந்து பூமியில் தாழ்ந்து அன்பு மிகுந்து அஞ்சலிசெய்து எம்பெருமானே! எனக்கு வேண்டுவது தேவரீருடைய திருமேனியிடப்பாகம் பெறுவதேயாம் என்று பற்பல விதமாகத் தோத்திரம் புரிந்தனர்.

கலாபமயில்போலும் சாயலையுடையாளே! உலகம் அந்தகாரப்பட எமது கண்ணை மூடிய பாவமானது, இந்தக் காஞ்சீமாநகரத்திற் செய்த பூஜையின் பலனால் நீங்கப்பெற்றாய், இனிமேல் நமது கருணையையடைய விரும்புவாயாகில் கிரேத முதல் நான்கு யுகங்களினும் முறையே அக்கினி மாணிக்கம் பொன் கல் என்னும் நால்வகை மலையாக விளங்கும் திருவருணையங்கிரிக்குப் போய், அங்கே அரிய தவத்தைச் செய்து கௌதமர் முதலாகிய முனிபுங்கவர்கள் நமது அருமைத் திருவிளையாடல்களைச் சொல்லக்கேட்டுப் பேரொளி பொருந்திய திருமலை வலம் வந்து தவம் புரிவாயாகில், ஆங்கு அனுக்கிரகிக்கின்றோமென்று சிவபிரான் ஆஞ்ஞாபித்தருளினார். ஒப்புயர்வற்ற இவ் வரத்தைப் பெற்ற பிராட்டியார் அங்கே காமகோடி பீடம் அமைத்து முப்பத்திரண்டு தருமங்களும் வளர்த்து, இன்னும் அனேக பசுபுண்ணிய பதிபுண்ணியங்களையும் இயற்றி, எல்லாம் மேன்மேலும் விருத்தியாகுக என நல்லாசிபுகன்று, ஜயை விஜயை முதலிய ஏவற்பெண்களாயினோர் புடைசூழ எம்பெருமாட்டியார் திருவருணையை அடைந்தனர். அத்தலத்தை அடைந்தமாத்திரத்தில் விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும்முறை முறையே வந்து பணிந்து தத்தம் வினைக்கேற்றவாறு அருளோக்கம் பெற்று மகிழ்ந்து செல்ல மெய்த்தவமியற்றும் காலத்தில், ஒப்புயர்வற்ற எமதய்யனை அப்பணிச்சடையண்ணல் பிரசன்னமாய் வாராய் பார்வதி! உனது சிந்தனை தெரிந்தேன்; அபீஷ்டப்பிரகாரம் இடப்பாகம் வழங்குகின்றேம்; நீ இவ்வருணையினின்று நீங்கி இத்தலத்துக்குத் தென்மேற்றிசையில் கொங்கு மண்ட

லத்தில் திருநாகாசலம் எனப் பெரிய பர்வதம் இருக்கின்றது. ஆங்குச் சென்று அம்மலைமீது விளங்கும் புண்ணியசுனைகளில் நீராடி, நமது குமாரன் குமரவேல் சதா விளையாடி வசித்திருக்கும் தானத் தருகில் தேவதீர்த்தம் என்னும் இணையற்ற மகாதீர்த்தத்தில் மலர்ந்த பொற்றாமரைப்பூம் பொகுட்டின்மீது நற்றவம் புரிவாயாகில், ஓ! பொற்றொடியே!நாம் அங்கு உற்றிடுவேம்; நீ விரும்பிய இடப்பாகமும் பெற்றிடுவாய் என்று கங்காதரமூர்த்தி திருவாக்கருளினர்.

இவ்வாறு பரமேசுரர் ஆஞ்ஞைசெய்தவுடன் பார்வதிதேவியார் பரவசப்பட்டு மிக மகிழ்ந்து சித்தம் நெகிழ்ந்து, எம்பெருமானுடைய கட்டளைப்பிரகாரம் நடக்கிறேமென்று மும் முறை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, பிரமேந்திராதி தேவர்களும் தேவமாதர்களும் யக்ஷர் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர் கந்தருவர் நாகலோகவாசிகள் முனிபுங்கவர் முதலானவர்களும் பின் தொடர, ஜயை விஜயை என்னும் பணிப்பெண்கள் எச்சரிக்கை கூறிக் கைகொடுத்து வர, நமது நாயகரான முக்கணெம்பெருமான் அனுக்கிரகிக்கத் திருவுள்ளம் கொண்டனராதலால், இனி அதிவிரைவில் நாம் விரும்பிய எல்லாம் முற்றுப் பெறுமென்ற நம்பிக்கை கொண்டு பிலத்துவாரவழிபுகுந்து, தென்மேற்குத் திசைநோக்கி, கொங்குமண்டலத்து நாகாசலமீது வெளிவந்தனர். பலகோடி தேவர்கள் புடைசூழ, தன் அன்னையாகிய இமயவல்லி வருதலை அறிந்த பிரணவாகிருதியான ஆனைமுகங்கொண்டு விளங்கும் மூத்தபிள்ளையார் ஆனந்தபரவசங்கொண்டு துள்ளித் துள்ளித் தொந்திவயிறு குலுங்கக் குதித்துக் குதித்தோடி முறம் போன்ற இரண்டு காதுகளையும் ஆட்டிக்கொண்டு,புகழைபெற்ற, கையை உயரநீட்டி, மற்ற நான்கு திருக்கரங்களையும் கூப்பி நமஸ்காரம் புரிந்து, எதிரோடிவந்து பெருமகிழ்ச்சி பூப்ப பார்வதிதேவியார் அருகு வந்தனர். வந்த குழந்தையை அன்புற நோக்கி வாரி எடுத்து மார்புற அணைத்து உச்சி மோந்து முத்தங் கொடுத்து இரு கன்னங்களையும் சுவை பெருகக் கடித்து, தும்பிக்கையையும் மஸ்தகத்தையும் தோளையும் மார்பையும் தடவி அப்பா! என் கண்மணியே! உனது தந்தையாருடைய இடப்பாகம் பெறவேண்டி நெடுங்காலமாகத் தவஞ் செய்தும் கருணாநிதியாகிய வள்ளலாருக்கு இரக்கம் காணாது நின்று இறுதியில் அக்கினிப் பிழம்புவடிவான அருணையங்கிரியில் அர்த்தபாகம் கொடுப்பதாகத் திருவாக்கருளி, நாகாசலத்திற் சென்று தவம் புரிவாய் என்று அனுக்கிரகித்தனர். ஆதலின், என் அருமைக் குழந்தாய்! தவஞ் செய்ய ஆரம்பிக்கின்றேன். ஸ்நானஞ் செய்யப் புண்

ணிய தீர்த்தம் வேண்டும். அந்தர மத்தியபாதாளம் என்னும் மூவு லகத்து மிருக்கும் புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் ஒரு நிமிஷத்தில் உன் துதிக்கையால் கிரகித்து இவ்விடத்தோர் சுனையில் நிரப்பு, எனக் கட்டளையிட, அவர் தமது மாதாவின் பாதாரவிந்தங்களிற் பணிந்து 'என்னை யீன்றெடுத்த தாயே! உன் திருநாமத்தை நினைத்தவர் கேட்ட வர் முதலாயினோர் அனேக பிறவிகள் தோறும் செய்த கொடிய பாவங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல நீங்குகின்றன என வேதாகம புராணேதிகாசங்களெல்லாம் முறையிடுகின்றன. இவ்வாறு மகிமைவாய்ந்த உமக்குக்கிட்டாதனவும் ஒன்றுண்டோ? ஸ்நானம் செய்யப் புண்ணிய தீர்த்தம் தேடல் வேண்டுமா? உம்து கடைக்கண் அருள் சிறிது பெற்றோர் கால் படிந்த ஜலமே தீராவினையகற்றும் புண்ணிய தீர்த்தமன்றோ! நீவிர் ஆடவல்ல தீர்த்தம் எங்ஙன மிருக் கிறது! தேவரீருடைய திருப்பாதம்பட்ட ஜலம் இம்மலையிலிருக்குமேல் உலகத்துள்ள பிராணிகள் கண்டு பரிசித்து, உண்டு பரிசுத்தமாய்ப் புண்ணிய உலகத்தை அடைதற்கு ஏதுவாகும். அக்கருத்துக்கொண் டன்றோ திருவிளையாடல் புரிகின்றீர்கள்.' என் தாயே! ஆஞ்ஞை தவறாது இதோ தீர்த்தம் அமைக்கின்றேன் என்று கூறி, விநாயக மூர்த்தி தமது புழைக் கையை நீட்டித் திரிலோகங்களிலுமுள்ள நதிநதங்கள் முதலிய புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் கிரகித்து அம்மலைப் பாங்கெல்லாம் நிரப்பினர். இவ்வரிய பெரிய செயலைக் கண்ட தேவர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சிபெற்றவர்களாய், நாம் பல நாள் தேடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு தீர்த்தங்களில் முழுகி அவ் வவற்றால் வரும் பயன்களைத் தனித்தனி பெறுவதுண்டு. இப் பொழுதோ மூத்தபிள்ளையார் ஒப்பற்ற தமது தும்பிக்கையால் உல கத்திலுள்ள புண்ணியதீர்த்தங்களையெல்லாம் ஒருங்கே திரட்டி இவ் விடத்துப் பிரதிட்டை செய்தார். உலோகமாதாவாகிய பிராட் டியாரே தாம் பரிசுத்தம் பெறுவதுபோல சுத்தமாகிய தீர்த்தங்களிற் படிந்து பரிசுத்தஞ் செய்யப் போகின்றார்! எளிதில் இத்தீர்த்தத்தை உட்கொண்டு நற்கதியடையலாமெனப் பேசி மகிழ்ச்சிபெற்றிருந் தார்கள். கணநாயகர் தாயார் சமீபத்துச் சென்று என் அரிய அன்னையே! தங்கள் உத்தரவுப்பிரகாரம் தீர்த்தங்கள் அமைத்து விட்டேன் என்று விஞ்ஞாபித்தனர். இதனைக் கேட்ட உமாதேவியார் மகிழ்ந்து குழந்தாய்! நல்ல புத்திரனைப் பெற்றோர்க்கு எப்பொருள்தான் அருமை என உபசார மொழிகூறி, வேதாகமப் பிரகாரம் சங்கற்பஞ் செய்து நீராடி ஏனைய நியதிகளையு முடித்துக்கொண்டு பிரமேந்திராதி

தேவர்களெல்லாம் வாழ்த்த உச்சிமலை சேர்ந்து எதிர் வணங்கிவரும் குமாரதேவரைப் பரிந்து கட்டியணைத்துப் பாலூட்டிக் களித்து இனிய மொழிகள் புகன்று பின்பு பரமேசுவரரது இடது பாகம் பெறுதற் பொருட்டுப் பராசத்தியார் அரிய தவஞ் செய்ய ஆரம்பித்தனர்.

---

உ

## அர்த்தபாக மான்மியம்.

—o—

பத்திமிகுந்த வுத்தமர்களே!

அத்தருணத்தில், "எல்லா அண்டங்களையும் பெறுமாற் பெற்றெடுத்த எம்பெருமாட்டியார் பெரும்புகழ் பெற்றோங்கும் செங்கோட்டையணைப் பூசித்து மகாவிரதமாகிய கேதாரேசுவர விரதத்தை அநுட்டித்து இடப்பாகம் பெறப்போகின்றார் என்று அணைகடந்த சந்தோஷத்தால் எடுத்துக்கூறும் மங்கல ஓசையைக் கேட்டு, உருத்திர மாதர்கள் முதலாயினோரும், குற்றேவல் புரியும் பல மாதர்கள் சூழச் செந்தாமரைப் பொகுட்டில் வசிக்கும் இலட்சுமிதேவியும், பல மாதர்கள் சூழ வெண்டாமரையில் விளங்கும் சரசுவதியும், கோடா கோடி மாதர்கள் சூழ அபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்னும் சத்தமாதர்களும் வந்தார்கள். விண்ணுலகத்தவர்களிலும் கருடர் கந்தருவவித்தியாதரமாதர்களிற் பலரும் இடாகினி காளி யோகினி வகுப்பில் அநேகரும், உரகர் கந்தருவர் இராக்ஷதர் இயக்கர் உருத்திரர் மருத்துவர் வசுக்கள் கருடர் கிம்புருடர் சாரணர் சித்தர் தேவர்கள் பிரமவிஷ்ணுக்கள் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் பல சமயதேவர்கள் முதலாயினோரெல்லாம் தேவியார் பாதாரவிந்தங்களை ஜய ஜய போற்றி என்று பணியவும், தண்ணுமை, முருடு, குடமுழா, மொந்தை, தகுணிதம், பேரிகை, தக்கை, பதலை, முரச முதலிய கொட்டு வாத்தியங்களும், திருச்சின்னம், எக்காளம், கொம்பு, சங்கு, குழல் முதலான ஊது வாத்தியங்களும், மற்ற வாத்தியங்களும் தாம் தாம் என்று முழங்கவும், வெண்சாமரைகள் பட்டுக் குடைகள் விசிறிகள் ஆலவட்டங்கள் என்பன வெல்லாம் அங்கங்கே விளங்கவும், குள்ளர்களும் பூதங்களும் கைவீசிக்கொண்டு விரைந்து குறு குறு என்று நடந்தோடி வரவும், பல கருவிகளாலுண்டாகும் கல கல என்னும் முழக்கமும், கள கள என்னும் முழக்கமும், கலின் கலின் என்னு முழக்கமும், சல சல என்னும் முழக்கமும், சள சள என்னும் முழக்கமும், சட சட என்

னும் முழக்கமும் மற்றும் சில முழக்கமும் ஹர ஹர என்னும் முழக்கமும், ஜய ஜய என்னும் முழக்கமும் மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும் முழங்கவும், ஆகாயத்தில் அடர்ந்திருக்கும் கூட்டங்களைப் பார்க்கின்றவர்களும், தேவியார் திருவழகைப் பார்க்கின்றவர்களும், பெருமகிழ்ச்சியால் தேகமெல்லாம் பூரித்துப் பரமானந்தப் பெருவெள்ளத் துட்படிந்து கண்ணீர் துளிக்க நின்று கைகூப்பித் தொழுகின்றவர்களும், அடியேங்கள் ஆனந்தவீடு அடையும் காலம் இது என்றும் இந்தப் பூலோகம் என்ன தவம் செய்ததோ என்றும் சொல்கின்றவர்களுமானார்கள்.

அத்தருணத்தில் உமாபத்திரை, கீர்த்திமதி, அநிந்திதை, கமலினி, ஜயை, விஜயை முதலிய எவற்றோழிகளைப் பார்த்து, பாங்கிமார்களே! நாம் இப்பொழுது கேதாரேசுவரவிரதம் செய்யப்புகுகின்றமையால் பூஜைக்கு வேண்டியனவெல்லாம் கொண்டு வாருங்களென்று பார்வதிதேவியார் கட்டளையிட்டவுடனே சிலர் நீண்டிருக்கும் இலைகளையுடைய வாழைகளையும், நெருப்புபோற் சிவந்து பழுக்கும் பழங்களையுடைய கமுகமரங்களையும், வெல்லக்கட்டியைத்தரும் கரும்புகளையும் தூண்கள்தோறும் சேர்த்துக் கட்டிக் காந்திவீசும் மணிமாலைகளைத் தொங்கவிட்டு வாசனை மலரும் பூமாலைகளைச் சரம் சரமாகத் தொங்கவிட்டுப் பல வர்ணமாகிய சித்திரவிதானத்தை மேலேகட்டிச் சிங்காரஞ் செய்தார்கள். சிலர் மணம் வீசும் புனுகு அப்பி அகிற்புகை வளர்த்து பொன்னைப் பொடியாக அராவிக் கூட்டி மகரந்தப்பொடி சேர்த்துப் பன்னீர் தெளித்துக் கரைத்துக் கரைத்து மெழுகினார்கள். சிலர் வாசனைத் திரவியம் சேர்ந்த அன்னம், சுத்தான்னம், பருப்புப்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், மிளகோதனம், புளியோதனம், தத்தியோதனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந்தோதன முதலிய சித்திரான்னவகைகளையும் தாளிக்கப்பட்ட பொரிக்கறி முதலாயினவற்றையும், மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி முதலிய பணிகாரவகைகளையும், குடிப்பன நக்குவன கடிப்பன விழுங்குவன என்னும் நால்வகையுண்டிகளையும், கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, தித்திப்பு என்னும் அறு சுவைப்படச் சமைத்து வைத்தார்கள். சிலர் தேன் துளிக்கும் மலர்களைக் கொய்து கொண்டு வந்து சூட்டு கண்ணி இண்டை தொங்கல் முதலிய பலவித மாலைகளைத் தொடுத்து அவற்றைப் பரிமளப் புகையோடு சேர்த்துப் பன்னீர் தெளித்துச் செம்பொற் குடலையில் நிறைத்து வைத்தார்கள்.

சிலர் செம்பொற்குடங்களிலே தெய்வத்தன்மையுள்ள மந்திரங்கள் சொல்லிப் பொன்னுடைகொண்டு அந்தக் குடங்களின் வாய்களைக்கட்டி அலைவீசும் தண்ணீர் வடித்து அண்டாக்களில் நிறைய ஊற்றிவைத்தார்கள். சிலர் மணித்தட்டுகளுடன் கைம்மணி முதலிய பூஜாபாத்திரங்களைச் சித்தி செய்து வைத்து, பத்திரபுஷ்பங்கள் எல்லாவற்றையும் புழுப் பூச்சிகள் இல்லாவண்ணம் ஆராய்ந்து எடுத்து நிறைத்து வாசனையுள்ள ஏல முதலியவைகளைத் திருமஞ்சனத்திற் கலந்து சித்தப்படுத்தினார்கள். சிலர் பலாப்பழம் வாழைப்பழம் மாம்பழம் நாரத்தம்பழம் மாதுளம்பழம் எலுமிச்சம்பழம் தேங்காய் பாக்குப்பழ முதலியவைகளை நிறைத்து வைத்தார்கள். சிலர் பசுவின் பாற்குடங்களையும், நெய்க்குடங்களையும், தேன்குடங்களையும், கருப்பஞ்சாற்றுக் குடங்களையும், தயிர்க்குடங்களையும், தேவாமிர்தக்குடங்களையும் கொண்டுவந்து வைத்தார்கள். சிலர் சித்திரப்பூம்பட்டாடைகள், வெண்பட்டாடைகள், பச்சைப்பட்டாடைகள், செம்பொற்பட்டாடைகள், செம்பட்டாடைகள், நீலவர்ணப்பட்டாடைகள் முதலியவற்றைக் கொண்டுவந்து வைத்தார்கள். சிலர் நவரத்தினமுடிகள் குதம்பைகள் பொன்னாபரணங்கள் பட்டங்கள் தோளணிகள் மோதிரங்கள் கடகங்கள் கண்டசரப்பணிகள் ஆரங்கள் முதலாயினவற்றைக் கொண்டுவந்து வைத்தார்கள். சிலர் வாசனையுள்ள சந்தனக்குழம்பில் புனுகுசட்டத்தைப் பிழிந்து வார்த்துப் பச்சைக் கர்ப்பூரத்தோடு குங்குமப்பூவைப் பொடிசெய்து சேர்த்துப் பொருந்தக் கரைத்து வடித்து எடுத்து விழுது அமைந்த குடங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள்; சிலர் கண்ணாடி வெண்சாமரை சந்திரவட்டக்குடை விசிறி விபூதி கர்ப்பூரம் தூபம் குடம் தட்டு முதலியவைகளுடன் பூஜைக்குரிய மற்றவைகளையும் சேர்த்து வைத்தார்கள். முறுக்காணிகளுடன் வச்சிரத்தொட்டி அமைந்திருக்கும் இன்னிசை வீணையும், பாடும் பாடலும் ஒன்றுபட்டிணங்கப் பண்ணுடன் பாடுங்கள் என்றும், பல வாத்தியங்களை வாசியுங்கள் என்றும் தேவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்." இவ்வாறு பணிவிடைகளையெல்லாம் பாங்கிமார்கள் செய்து கொண்டிருக்க எம்பெருமாட்டியார் புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷ அஷ்டமி திதியில் விதிப்படி விரத ஆரம்பஞ் செய்து மஹாலிங்கமூர்த்தியை எழுந்தருளச் செய்து ஆகமோக்தமாக அபிஷேகம் புரிந்து திருவொற்றாடைசாத்தி அலங்கரித்து புஷ்பஞ்சாத்தி இருபத்தொருவகைப் பத்திரபுஷ்பங்களால் அர்ச்சித்து இருபத்தொரு இழையிட்டுப் பூசித்து அன்னபக்ஷணாதிகள் நிவேதித்து தூபதீபாராதனம் உபசாரங்கள் புரிந்து

என்பு நெக்கு நெக்குருக, மெய்ம்மயிர் பொடிப்ப, நாத் தழுதழுப்ப, கண்களில் ஆனந்தநீர் சொரியத் தோத்திரம் செய்து, திருமுன்னர் நின்று நர்த்தனம் செய்து சர்வலோகரக்ஷகா! சர்வேசா! விசுவாதிகா! தீனதயாளா! நித்தியா! நிர்மலா! சச்சிதானந்தா! அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் நிற்குந் தற்பரா! என மனசுருகிப் பாடிச் சிவார்ச்சனை செய்து இருபத்தோராயிரம் வருஷம் விரதாநுஷ்டானத்துடன் எம்பிரானைப் பூசித்து வருங்காலத்தில் புரட்டாசிமாச கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று விசேஷமாகப் பூசித்துத் திருமுன் நின்று மனம் கசிந்துருகத் தோத்திரஞ் செய்யுங்கால், கருணைக்கடலாகிய எம்பெருமான் பார்வதிதேவியார்க்கு அநுக்கிரகிக்கத் திருவுளங்கொண்டு ஒப்பற்ற விநாயகமூர்த்தியையும் குமாரக்கடவுளையும் ஆரத்தழுவி, பழுதில்லாத் தவமியற்றும் தேவியார் எதிரே பூரணனந்தமயமாய்க் காட்சி கொடுத்து மலைமகளே! நன்று நன்று! உன் தவத்தை மதித்தேன். வேண்டிய வரத்தைக் கேள் என்றனர். அம்மையார் மிகுதியும் அடங்காத மகிழ்ச்சிகொண்டு கைகளால் இறுகத்தழுவி இதயத்திலுள்ளே வணங்கித் துதித்து சுவாமீ! தேவரீர் வேறும், அடியாள் வேறுமாக இருந்தமையாலன்றோ தக்கனுடைய வேள்வியில் அவன் நிந்தித்த வசனத்தினாலே மிகவும் சிரமப்பட்டேன்; 'பிருங்கி அவமதிக்கவும் பெற்றேன்' இனி அவ்வாறு நிகழாமல் தேவரீரது அர்த்தபாகம் பெறும்படி அனுக்கிரகிக்க வேண்டும்; பரமகருணாநிதியாகிய உம்மோடு கலந்திருப்பதன்றி ஒரு இமைப்போதேனும் தனித்திருக்கமாட்டேன் என்று பட்டமரமும் தழைக்குமாறு மிகுந்த குளிர்ச்சிதோன்ற இனிமைபெற வேண்டி அண்ணலாரோடு கலந்திருப்ப நினைந்து அன்புருகித் தோத்திரஞ் செய்கின்றார்.

சங்கரமஹாதேவா! சதாசிவா! சந்திரசேகரா! தேவர்கட்கெல்லாம் முதன்மையானவரே! சிவந்த திரிநேத்திரங்களையுடைய தேவரே! மஹேசுவரரே! யாவர்க்கும் மேலாகிய பரிசுத்தரே! உருத்திரமூர்த்தியே! போற்றி போற்றி!! சூலாயுத அஸ்தரே பழமையான விருஷபாரூடரே! யமனுக்கு யமனானவரே! மன்மதனை எரித்தோரே! ஆலத்தை யுண்டவரே! நீலகண்டரே! நிராமயரே போற்றி! போற்றி!! எமது கர்த்தரே! வெவ்விய மழு வேந்தியவரே! ஆசாபாசங்களை அகற்றவல்ல ஐந்து திருமுகங்களையுடையவரே! திக்கெல்லாம் வீசி நிற்கும் சடாதரரே! திருவெண்ணீறு பூத்த திருமேனியரே! போற்றி! போற்றி!!



ஸ்ரீ அர்த்தநாரீசுர கோலத்தை தேவர்கள் முதலானோர் தரிசித்தல்.

"நிலத்தைச் சார்ந்த சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளாக அமர்ந்தனை; அந்நிலத்தை அஷ்டமூர்த்தங்களுள் ஒரு மூர்த்தமாகக் கொண்டனை; அங்ஙனமாயினும், அந்த நிலத்தினால் தொடக்குண்ணாதிருந்தனை; நிலவுலகத்தையும் அந்நிலவுலகின் கண்ணுள்ள இருதிணைப் பொருள்களையும் உமது ஆஞ்ஞாப்பிரகாரம் நடைபெறக் கற்பித்தனை; நீரிலே கந்தமொழிந்த மற்றை நான்கு தன்மாத்திரைகளாக அமர்ந்தனை; அந்நீரை ஓர் மூர்த்தமாகக் கொண்டனை; அங்ஙனமாயினும், நீரினாற்றொடக்குண்ணாது நின்றனை; நீரையும் அந்நீரில் வாழும் உயிர்களையும் நும் ஆஞ்ஞாப்பிரகாரம் நிலைக்கச்செய்தனை; நெருப்பின்கண்ணே இரசத்துடன் கந்தம் நீங்கலாக மற்ற மூன்று தன்மாத்திரைகளாகச் சார்ந்தனை; அந்நெருப்பை ஒரு வடிவமாகக் கொண்டனை; அந்த நெருப்பினால் தொடக்குண்ணாதமர்ந்தனை; நெருப்பையும் அந்நெருப்பிலுள்ள பொருள்களையும் உன் கட்டளையில் நிலைபெற்றிருக்க நிறுத்தி வைத்தனை. காற்றிலே ரூபரசத்தோடு கந்தம் நீங்கலாக மற்றைய இரண்டு தன்மாத்திரைகளாக் அமர்ந்தனை; அக்காற்றை ஒரு வடிவமாகக் கொண்டிருக்கின்றனை; அந்தக் காற்றினால் தொடக்குண்ணாது நின்றனை; காற்றையும் அந்தக் காற்றிற் கலந்திருக்கும் பொருள்களையும் உன் கட்டளைப்பிரகாரம் வாசஞ்செய்ய வைத்தனை. ஆகாசத்திலே சத்தமாத்திரையாய்ச் சார்ந்தனை; அந்த ஆகாசத்தை ஒரு வடிவமாகக் கொண்டிருக்கின்றனை; அந்த ஆகாசத்தினால் தொடக்குண்ணாது நின்றனை; ஆகாசத்தையும் அந்த ஆகாசத்திலுள்ள பொருள்களையும் உமது கட்டளையில் நிலைபெற நிறுத்தினை. மதிக்கப்படும் உயிர் சந்திரன் சூரியன் முதலிய எல்லாப் பொருள்களிலும் இவ்வாறு கலந்து ஓங்கி மனம் வாக்குக் காயங்களைக் கடந்து விளங்கும் மஹாதேவா! உன் மலரடி போற்றி! போற்றி!! என உமையம்மையார் தோத்திரித்தனர்." இவ்வாறு மனமுருகித் தவங்கிடந்து தோத்திரஞ் செய்தவுடனே மேருகிரியை வில்லாக எடுத்த காரணகர்த்தாவாகிய பரமசிவன் திருவுளமகிழ்ச்சியோடு தம்முடைய ஒப்பற்ற இடப்பாகம் கொடுத்தருளினார்.

தேவாசுரர் முதலானவர்களும் நாரதமுனிவர் முதலான தேவரிஷிகளும் வசிட்டர் முதலான பிரமரிஷிகளும் திதி அதிதி தக்கன் பெற்ற பெண்கள் யோகினிகள் அருந்ததி உலோபாமுத்திரை அநசூயை முதலான ஸ்திரீஜனங்களும், சனகர் சனற்குமாரர் சனந்தனர் சனாதனர் முதலான நால்வரும், அகஸ்திய முனிவர் துருவாச முனிவர்

உபமன்யு வீராதி வீரராகிய பூதகணங்கள் உருத்திரர்கள் கணதிபர்கள் பிருங்கி நந்திதேவர் முதலானவர் எல்லாரும் சேர்ந்து, உமாதேவியார் வேறாகவும், பரப்பிரமசிவனுர் வேறாகவும் கண்டகோலம் இரண்டும் தம்முள்ளே கரைந்து ஒன்றி வலப்பாகம் சிவக்கூறும் இடப்பாகம் சத்திகூறுமாக அர்த்தநாரீசுவர வடிவம் பொருந்திய அற்புத ஜோதி ஆனந்தத்திருமேனியை இடையறாமற் கண்டு அரஹர ஜய ஜய என்று ஆரவாரஞ் செய்து பரமானந்தக் கடலில் விழுந்து புரண்டு அலைந்து இரு கண்களினுலும் பெறுதற்கரிய பெரும்பேறு பெற்று, மலர்போல மலர்ந்திருக்குங் கண்கள் ஆனந்தபாஷ்பம் பொழிய அழுது, தேகமெங்கும் பெருகிய அன்பினுல் புளகமடைந்து இரும்புண்ட நீர்போற் கலந்தவர்களாகி எம்பெருமானுடைய திருவருட் பெருங்கருணைத் திறத்தையே எண்ணி ஐம்புலன்களும் ஆனந்தத்திலழுந்தச் சிரசின்மேற் கைகூப்பிக்கொண்டு சிவானந்த போகத்தை அனுபவித்தார்கள். நாகமலையும் கொங்குநாடும் முறையே பொன்மலையும் பொன்னுலகமுமானதென்று, போக பூமிகளும் பொன்னுலகமுழுதும் அங்ஙனம் வருவதற்குத் தாகமோக அபேக்ஷையுடனே தயங்கா நின்றன பரம கருணாநிதி வீற்றிருந்தருளிய தீர்த்தம் **தேவதீர்த்தம்** என்று அகிலாண்டபதியாகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் திருவாக்கினலேயே பெயரிடப்பெற்று விளங்குகின்றது. நாககிரி தேவதீர்த்தத்தின்மீது உமையொருபாகராக ஸ்ரீ அர்த்தநாரீசுரர் அடியார்களைக் காக்கும்பொருட்டு மனமகிழ்ச்சியுடனே எழுந்தருளியிருக்கின்றார். அங்ஙனம் எழுந்தருளியிருக்கின்ற திருமேனி அழகிய பாவனையைச் சிறிதறிந்தவரையிற் கூறுகின்றேன். பசுவின் பால்போல வெண்ணிறமாய், ஒருபாதி சிவனும் ஒருபாதி அம்மனுமாய் எழுந்தருளியிருக்கும் ஆனந்தவடிவைக் கணபதியும் செவ்வேளும் தரிசித்துப் பரவசப்பட்டுச் சமீபத்திலேயே கொலுவாக இருந்தார்கள்.

அர்த்தபாககோலம் எப்படியெனில், தண்டாயுதத்து நுனியை வலது திருக்கரத்தின் மூன்று விரலால் வளைத்துப் பிடித்திருக்கும் காட்சியைப் போல அமர்ந்து, ஒரு திவ்விய ஹஸ்தத்திலே அழகிய பார்வதியைத் தமது இடப்பாகத்திற் சேர்த்தணைத்து, மகரகுண்டலம் வலது தோளிடத்தசையவும் அழகிய பூரணப்பிரகாசம் மிகுந்திலங்கும் குளிர்ந்த முத்துமணி நிறைந்த இரத்தினத்தோடு இடது தோள் பிரகாசிக்கவும், ஒரு பகற்காலத்திலே தாமரையும் நீலோற்பலமும் புட்பித்தது போல இரண்டுகண்களும் ஒன்றுக்கொன்று உற்றுநோக்கிய இனிய பார்வையும், பொன்மலைவில்லைப்போல வளைந்திருக்கின்ற இரண்டு புருவங்

களும், திருமுகமண்டலம் ஒரு பாதி பவளநிறமும் ஒரு பாதி பச்சை நிறமுமான பிரகாசமும், இடப்பக்கத்தில் அழகிய துடையில் பச்சை நிறமான கோசிகஉடையும் வலப்பக்கத்துத் துடையில் புலித்தோலுடையும் படம் விரித்தழகிய நாககேயூரந்தரித்த கையும், நாகமணி செறிந்த சூடகக்கையும், குங்குமம் கஸ்தூரி கர்ப்பூரம் கலந்த களபசந்தன திலகப்பொட்டும், மையெழுதிய கண்ணும் சிவந்த நெருப்பில் விளைந்த வெண்மையாகிய விபூதி நெற்றியிற் பிரகாசிக்கச் சிவந்தகன்ற கண்ணும், பகை செய்த மன்மதனை எரித்த நெற்றிக்கண்ணிலொருபாதி அக்கினிக் கண்ணும், அதனுடனே ஒன்றாய்க் கலந்து சர்வ ஆன்மாக்களுக்கும் கருணைகூர்ந்து இரக்ஷிக்கின்ற பாதிநெற்றியிற் குளிர்ந்த பார்வையும், இகபரங்களின் மோகதாக சோகங்களைத் தீர்த்தருளியதொரு பாகமும் சகல ஆன்மாக்களுக்கும் புத்திர சந்தானம் கொடுக்குமாறு அருள் பாலிப்பதொருபாகமும், பொன்னூமத்தம் பூப்போலப் பொருந்திய திருச்காதொரு புறமும், தேன்றுளிக்கும் நெய்தற்பூப்போற் பொருந்திய திருச்செவி ஒரு புறமும், மந்தரகிரியாற் கடலைக் கடையும்போதெழுந்த விஷம் பொருந்திய சிறப்புற்ற கழுத்தொரு பாதியும், பரிமளிக்கின்ற கஸ்தூரி அணிந்த மிருதுவாகிய கழுத்தொரு பாதியும், அழகிய மையெழுதாப் பார்வையுற்ற கண்ணொரு பாகமும், கருமையாகிய அஞ்சனந்தீட்டி அழகு தரும் கண்ணொரு பாகமும், தம்முடைய தும்புரு நாரதரிருவருடைய கீதவிசையைக் கேட்கும் செவியொரு பாகமும், மேன்மையாசச் சரசுவதி பாடும் உசிதவலங்கார கவிகள் வினவும் காது ஒரு பாகமும், முப்புரிநூலாகிய பூணூலும், விபூதித்தூளிதமும், அழகிய மார்பிடமொருபக்கமும், சுவர்ணச்சிமிழ்போன்ற களபகஸ்தூரி பரிமளாதி மிகுந்து நெருங்கிய தனபாரமும், வலிய தண்டாயுதமேந்தியதொருபாகமும் அழகிய வளைகளணிந்ததொரு பாகமும், நாகபந்தனமொருபாகமும், ஆலிலைபோன்ற திருவயிறு ஒரு பாகமும், இயமனை உதைத்த நாகவீரவெண்டயம் அணிந்த திருப்பாதம் ஒரு பாகமும் அழகிய சிலம்பின் பிரபை விளங்கிய திருப்பாதம் ஒரு பாகமும் தேவர்கள் முனிவர்கள் போற்ற விளங்கிச் சிவனும் உமையும் இவ்வாறு ஒரு திருமேனியாகிக் கடல்சூழ்ந்த பூலோகமெல்லாம் ஈடேறும்வண்ணம் எழுந்தருளியிருக்கின்றார். ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் மேற்குமுகமாக நோக்கி நிற்க, வேலாயுதக்கடவுள் கிழக்குமுகமாக நோக்கி நிற்கக்கண்டு வணங்கித் துதித்தவர்கள் இம்மை மறுமை இரண்டினும் புகலிடமாக வாழும்டியாகக் கிரியைச் சூழ்ந்தவூர் கோதையூர் என்றும், திருவேரகம் என்றும் பெயராய் வழங்கியிருக்குந் திருச்செங்கோட்டில் எழுந்

தருளியிருக்கும் சிவன் அழகை எழுதுதற்கும் சொல்லுதற்கும் அரிதா யிருக்கும் இவ்வாறு சிவரூபத்தியானஞ் செய்து சிவனுடைய பஞ் சாக்ஷரத்தை உச்சரித்து, சத்தி மந்திரத்தையும் நினைத்து, ஜபஞ் செய் யும் புண்ணிய சிந்தையுள்ள பெரியோர்களைத் தேவர்களுக்கு மேலான தேவர்களென்று நினையாமல் ஈனபுத்தியினால் மனிதர்களாக நினைப் பார்களாகில் இரௌரவாதி நரகத்தை அடைவார்கள். அண்டாண்ட நாயகராகிய எம்பெருமானைத் தரிசனஞ் செய்தவர்களைப் பிரத்தியக்ஷ மாகக் கண்டவர்களுடைய பாவங்கள் எப்படிப்பட்ட கொடியன வாயினும் அக்கினியிலிட்ட பஞ்சுபோல எரிந்துபோகும். மெய்வழி பாடானைத்தும் விருத்திக்கும். இது நிச்சயம்! நிச்சயம்! சிவனாணை சத்தியாணை என்றும் இவ்வுண்மைவாய்ந்த திருமுறையை அன்போடு கற்றவர்களும், கற்று ஓதுகின்றவர்களும், சொல்லக் கேட்பவர்களும் சொன்னவர்களுக்கு யாதாயினும் கொடுக்கின்ற பாக்கியவான்களும் சிறப்புப்பொருந்திய இத்திருமுறையை வைத்துப் பூமாலைசாத்தி அர்ச் சிப்பவர்களும் இறுதியில்லாத பாவங்களினின்று நீங்கி மனசில் எண் ணிய காரியங்களும் கைகூடப்பெற்று நீடு வாழ்வார்கள் எனச் சூதமா முனிவர் திருவாய் மலர்ந்தருளினர்.

---

உ

## அர்ச்சனை மான்மியம்.

---

ஐம்புலவேடர்களைச் சங்கரித்து விளங்கும் அரியதவ சிரேட்டரே! தேவரீரது கிருபையால் நாககிரியின் மகத்துவமும், பரசுபாணியாகிய எம்பெருமான் பார்வதிதேவியார்க்கு இடப்பாகம் கொடுத்த ஒப்புயர் வற்ற புண்ணிய சரித்திரத்தையும் கேட்டு இத்தேகமெடுத்த பிரயோச னத்தைப் பெற்றேம். சத்தியஞானனந்த சொரூபியாகிய ஸ்ரீ அர்த்த நாரீசுவரரை அன்புடன் பூசிக்கும் நெறியையும் வேதாகமோக்தமாகப் பூசித்தோர்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பேரவாவுற் றிருக்கின்றேமாகையால் அடியேங்கள்மீது கிருபைபாலித்து அநுக்கிர கிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கும் முனிபுங்கவர்களைக்களிகூருவகை யால் நோக்கி, நற்கதிபெற விரும்புவோர்க்கடையாளமாவது சிவபெரு மான் திருவருள் சுரந்த சரித்திரத்தையும் சிவனடியார் சரித்திரத்தை யும் கேட்டு மனமுருகிப் பத்தி செலுத்துவதாகுமாதலின், அவ்வியல் பினராகிய நீவிர் அறிந்து சந்தோஷமெய்துமாறு கூறுகிறேன் என்று தமது குருவாகிய வியாசரையும் பரம பிதாவாகிய எம்பெருமானையும் சூதமாமுனிவர் உளத்தேதஸ்மரித்துச் சொல்லத் தொடங்குவாராயினர்.

சாம்பவோத்தமர்களே! சூரியன் உதயமாதற்கு ஐந்து நாழிகைக்கு முன் சிவபுண்ணிய சிந்தைகொண்டெழுந்து தண்ணீர் வாயிற் கொண்டு கொப்பளித்து முகத்தையும் கைகால்களையுங்கழுவி கோகர்ண முத்திரையுடைய வலக்கையால் நீர்கொண்டு ஆசமனஞ் செய்து வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனுமிருந்து விபூதி தரித்துக்கொண்டு **"இந்தத் தினத்தில் சிவகாருண்யமுடையவனாய்ப் பரமேசுவர கைங்கரியஞ்செய்து அதனால் சமஸ்த பலன்களையும் அடையுமாறு என்னை அநுக்கிரகிக்க வேண்டும்"** என ஸ்ரீ அர்த்தநாரீசுவரரை மிகுந்த வணக்கத்துடன் பிரார்த்தித்தல் வேண்டும். திருக்கோவிலெல்லைக்கு நானூறு முழதூரத்துக்கு அப்பால் ஈசானதிக்கல்லாத மற்றைய திக்குகளில் நடமாட்டமில்லாது கொஞ்சம் பசுமை செறிந்த இடத்திற்சென்று பூணூலை வலதுகாதிலே மாட்டி தலையையும் காதுகளையும் வஸ்திரத்தினாலே மூன்றுதரஞ் சுற்றி பகலில் வடக்கு முகமும் இரவில் தெற்கு முகமுமாகவிருந்து மலசல மோசனமும் செய்க. மூத்திரம், முள், பூச்சி புழு, எலும்பு, மலம், வழி, புல், ஆறு, பள்ளம், ஜலம், பசுவின்சாணம் சாம்பல், மயானம், பூந்தோட்டம், அறுகுநிறைந்த பூமி, மரநிழல், நாற்சந்தி முச்சந்தி, உழுத நிலம், களர்நிலம், கடற்கரை, நதிக்கரை, பசுக்கள் கூடுமிடம், இடிவீழ்ந்தவிடம், சுழல்காற்றிடம், புற்று, அருவிபாயுமிட முதலிய இடங்களில் மலசல விசர்ச்சனம் செய்யலாகாது. ஸ்திரீகள், பசுக்கள், ஆதிசைவர்கள், சூரியன், சந்திரன், அக்கினிகாரியாதி ஆலயம், மகா சைவர்கள், சிவசின்னதாரிகள், மலம், ஆண்குறி, பிராணிகள் முதலியவற்றை மலசல மோசனஞ்செய்யும்போது பார்க்கலாகாது. மூக்குச்சிந்தல் காரியுமிழ்தல் எப்பமிடல், முதலியன செய்யாது மௌனமுற்று நாசிநுனியைப் பார்த்துக் கும்பித்து விசர்ச்சனம் செய்தல் வேண்டும், துரும்பு ஓட்டுப்பாளம் மண்ணுங்கட்டி முதலியவைகளால் குதத்தைத் துடைத்தல் வேண்டும். பசுவின் சாணவராட்டி, கல் எலும்பு முதலியவற்றால் சுத்திசெய்யலாகாது. இடதுகையினால் ஆண்குறியைப் பிடித்துக் கொண்டு சௌசத்திற்காகச் சுத்தப் பிரதேசத்தில் பருக்காங்கல் அல்லாத மிருதுவாகிய மண்ணை வலக்கையின் மூன்று விரலால் அள்ளிக்கொண்டு, அல்லது நெல்லிக்காய்ப்பிரமாணம் கொண்டு சிவதீர்த்தமல்லாத நீர்க்கரையிற் சென்று ஜலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு இடக்கையினாலே குறியை ஒருதரமும் குதத்தை ஐந்துதரத்துக்கு மேலும் இடக்கையை இடையிடையே ஒவ்வொருதரமும் பின்னரும் இடக்கையைப் பத்துத்தரமும் இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழுதரமும் சுத்திசெய்து சகனத்தைத் துடைத்து கால்

களை முழங்கால்வரையும் கைகளை முழங்கைவரையும் ஒவ்வொருதரமும் கழுவிச் சுத்திசெய்து சௌசஞ் செய்த இடத்தைச் சலத்தினலலம்பி விட்டு அவ்விடத்தைநின்று நீங்கி வேறு துறையிலே போய் வாய் கண்கள் நாசி காதுகள் கைகால்களினகங்கள் இவற்றை சுத்திசெய்து எட்டுத் தரம் வாயிற் ஜலங்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்துத் தலைக்கட்டு நீக்கிப் பூணூலை முன்போலத் தரித்துக் குடுமியை முடித்து மந்திரங்கள் உச்சரியாது ஒருதரமும் மந்திரங்கள் உச்சரித்து ஒருதரமுமாக இருதரம் ஆசமனம் பண்ணல் வேண்டும். தடாகமுதலியவற்றில் முழங்கால் அளவினதாகிய ஜலத்தில் நின்று இடக்கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கையினலே ஆசமனம் செய்க. அவ்வளவு ஜலமில்லாதிருப்பின் கரையை அலம்பி அதில் கிழக்கையேனும் வடக்கையேனும் நோக்கிக் குக்குடாசனமாகவிருந்து இரண்டு முழங்கால்களுக்கு மிடையே கைகளை வைத்துக் கொண்டு வலக்கையை விரித்துப் பெருவிரலையும் சிறுவிரலையும் பிரித்து விட்டுப் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்த ஜலத்தை ஆசமித்தல் வேண்டும்.

வேம்பு வேல் பூல் நாயுருவி மா மருது இத்தி தேக்கு நாவல் மகிழ் கடம்பு விளா அசோகு குருக்கத்தி சம்பகம் ஆத்தி முதலிய மரக்குச்சிகளைச் சுண்டுவிரற் பிரமாணமுள்ளதாய் நேரியதாய்த் தோலோடு கூடியதாய் கணுவும் துளையும் இடைமுறிதலுமில்லாததாய்ப் பன்னிரண்டங்குல நீளவளவினதாய்ப் பற்கொம்பு இருத்தல் வேண்டும். பெருவாகை நொச்சி பெருங்குமிழ் புன்கு கருங்காலி ஆயில் மருது துறவிகளுக் குரியன. பற்கொம்பு முறிக்கும் மரத்தை நோக்கி "கிளைகளையுடைய மானே நின்னிடத்துச் சந்திரன் வசிக்கின்றுனுதலின் ஆயுள் கீர்த்தி ஐசுவரியம் மக்கட்பேறு வலிமை மனத்தூய்மை இரக்கம் நீதி ஞானமுதலியவற்றை என் முகத்தைப் பார்த்துகொடுத்தருள்க" என்று கூறிப் பற்கொம்பு கொள்ளல் வேண்டும். அப் பற்கொம்பை இருதயமந்திரத்தினல் கழுவி வடக்கு அல்லது கிழக்கு நோக்கி மௌனமுற்றுக் குககுடாசனமாக இருந்துகொண்டு மேல்வாய்ப் பற்களின் நடுத்தொடங்கி இடப்புறத்தை முன்னே சுத்திசெய்து பின்னர் மிருதியைச் சுத்திசெய்து கீழ்வாய்ப் பற்களை வலப்புறந் தொடங்கி இடப்புற பரியந்தஞ் சுத்திசெய்து, பின்பு வேருெரு குச்சியை சரியளவாகப் பிளந்து பிளவுக்கு மும்முறையாக உள் நாக்கு அளவாக ஓட்டி நாக்கை வழித்து இடப்புறத்தில் எறிந்து விட்டுப் பன்னிரண்டுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையும் கைகால்களையும் கழுவி ஆசமனஞ் செய்தல் வேண்டும். தந்ததாவனம் பண்ணும்போது சரியாவான் அஸ்திர மந்திரமும், கிரியாவான் பாசுப

தாஸ்திர மந்திரமும், யோகி இருதயமந்திரமும், ஞானி சிவபெருமானையும் நினைத்திருத்தல் வேண்டும்.

பட்டமரம், பாளை, வைக்கோல், கைவிரல் செங்கல் கரி சாம்பல் மணல் முதலியன தந்தசுத்திக் கருவியாகாதன. நின்று கொண்டாயினும் நடந்துகொண்டாயினும் போர்த்துக் கொண்டாயினும் மலம் நாய் நீசர் கழுதை எலும்பு ஆடு முதலியவைகளைப் பார்த்துக்கொண்டாயினும் தந்த சுத்தி செய்யலாகாது. நதி, நதம், நதிதீரம், நத்யம், சிவதீர்த்தம், தெப்பக்குளம், ஏரி, சங்கமப்பிரதேச முதலியவைகளில் ஸ்நானஞ் செய்வது உத்தமம். குளத்தில் ஸ்நானஞ் செய்வது மத்திமம். நடவாவி கிணறு முதலியவைகளில் ஸ்நானஞ் செய்வது அதமம். பாண்டஸ்நானம் அதமாதமமாகும். நதியில் எதிர்முகமிருந்தும், குள முதலியவற்றில் விடியற்காலத்தில் சூரியனுக்கெதிர் முகமாகவும், மற்றக் காலங்களில் வடக்கு முகமாயும் ஸ்நானம் செய்தல் வேண்டும். கொப்பூழ் பரியந்தமுள்ள தீர்த்தத்தில் நின்று கரநியாச அங்கநியாசங்கள் செய்து, தீர்த்தத்துக்கு நிரீக்ஷணாதி ஐந்து சுத்திகள் செய்து, உத்தூளனமாக விபூதி தரித்துக்கொண்டு, ஆகாயத்திலும் நான்கு திக்குகளிலும் பஞ்சப்பிரம மந்திரத்தை அபிமந்திரித்து, வித்தியாதேஹ நேத்திரநியாசம் புரிந்து, இருதயாதி ஷடங்கங்களால் ஆவாகித்துச் சிவசொரூபமாகப் பாவித்து, இரண்டு கைகளையும் சிரசுக்குமேல் பன்னிரண்டங்குலமுயர்த்தி அஞ்சலியஸ்தனாய் நூற்றெட்டு அல்லது ஐம்பத்து நான்கு இருபத்தேழு முறைமூல மந்திரத்தை உச்சரித்துக் குருவையும் ஸ்ரீநீலகண்டப் பெருமானையும் அதிகாரானுகுணமாய்த் தியானித்து, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக் கொள்ளுதலாகிய ஷண்முகமுத்திரையால் பன்னிரண்டு பத்து எட்டு முறை ஜலத்தில் மூழ்கிச் சூரியனிருக்கும் திக்கை நோக்கி மூலாதாரத்து ஞானஸ்வரூபமாக இருக்கும் அக்கினியை எழுப்பி விந்துஸ்தானத்திலிருக்கும் அமுதத்தை அங்குசமுத்திரையினால் வாங்கி நீரிலிருத்திப் பிரணவத்தினாலும் மூலமந்திரத்தினாலும் சம்ஹிதா மந்திரத்தினாலும் மந்திரித்துக் கும்பகமுத்திரையால் நீரைக் கையிலெடுத்து ஈசானாதிபஞ்சப்பிரமத்தாலும் வித்தியாதேகநேத்திரநியாசத்தாலும் ஷடங்கமந்திரங்களாலும் சிரசிற் புரோக்ஷித்துக் கொண்டு, மும்முறை ஆசமனீயஞ் செய்து, சத்திகாயத்திரி மந்திரத்தால் மும்முறைஅர்க்கியம் கொடுத்து, ஆசமனீயஞ் செய்து, சிவகாயத்திரி மந்திரத்தால் மும்முறை அர்க்கியம் கொடுத்து, ஆசமனீயஞ் செய்து,பின்னர்

முன்போல ஸ்நானஞ் செய்தல் வேண்டும். அதன்பின் கரையேறி யஜ்ஞோபவீதத்தை இடமாகப் போட்டுக் கொண்டு தேவபிதுர்களின் திருப்தியின் பொருட்டுச் சிகையில் ஜலத்தையும் வஸ்திரத்திலுள்ள ஜலத்தையும் கீழே பிழிந்து உலர்ந்த வஸ்திரத்தினால் தலையைத் துடைத்தல் வேண்டும். பொன் வெள்ளி வெண்பட்டு சிவப்புப்பட்டு வெள்ளெருக்கநார் தாமரைநூல் கதம்பைநார் என்பவைகளால் ஒன்பது, ஏழு ஐந்து அல்லது மூன்று வடங்களால் வலமாகவே முறுக்கி ஒரேசுற்றாக (கடிசூக்தமாக) அரைஞாண் இடையில் தரித்தல் வேண்டும். வெண்மையாகிய மூன்று முழ நீளமும் எட்டு அங்குல அகலமுமுள்ள கௌபீனத்தைத் தாளமுத்திரை காட்டித் தரித்தல் வேண்டும். வெண்மை மஞ்சள் காஷாய முதலிய நிறமுள்ளதாயும், பன்னிரண்டு பத்து அல்லது ஒன்பது முள நீளமும், மூன்று முள அகலமுமுள்ள வஸ்திரத்தை நிரீக்ஷணாதி சுத்திசெய்து தாளமுத்திரையைக்காட்டி இடையில் தரித்தல் வேண்டும். இடுப்பில் தரிக்கும் வஸ்திரம் ஏழு ஆறு முழத்துக்குக் குறையாமலிருத்தல் வேண்டும். வஸ்திரத்தின் நுனியில் இரண்டு முழம் அளந்து வலப்பக்கத்து இடுப்புக்கு மேல் வைத்து அதற்குமேலாய் எதிரிலுள்ள மீதத்தை இடது இடுப்பிற் சொருகி முன் வலதுபாகத்தில் வைக்கப்பட்ட இரண்டு முழ நீளத்தை நான்கு அங்குல அகலத்தில் மடித்துப் பின்பக்கத்திற் சொருகி, முன் பக்கத்தில் பன்னிரண்டு அங்குல அகலத்திலும் நீளத்திலும் மடித்து முன் பர்கத்திற்சொருகி, மறுபடியும் அதன் நுனியில் இரண்டங்குல அளவு மடித்து முன்போற் சொருகி, முன்பாகத்தை வலதுதுடை மூலபரியந்தம் மடித்துத் தொங்கும் வஸ்திரத்தினும் தூக்கிச் சொருகுவது பஞ்சகச்சமாம். இவ்வஸ்திரதாரணம் குய்யப்பிரதேசத்தை மூடித்தரிக்க.

வீட்டிலே ஸ்நானம் செய்ய வேண்டுமானால் கோமயத்தினால் மெழுகிய பரிசுத்த பூமியில் எட்டிதழ்ப்பதும மண்டலமிட்டுக் கர்னிகாமத்தில் கலசம் ஸ்தாபித்துத்திக்கு விதிக்குகளில் எட்டு அல்லது நான்கு கலசத்துச்குக் குறையாமல் தாபித்து, வெந்நீர் அல்லது குளிர்ந்தஜலம் சிவமந்திரத்தால் கலசங்களுள் விட்டு, ஈசானாதி பஞ்சகத்தாலும் ஷடங்கத்தாலும் அபிமந்திரித்து, அந்தக் கலசத்துக்கு ஈசானிய பாகத்தில் கோமயத்தால் சுத்திசெய்த இடத்தில் பீடத்தில் உட்கார்ந்து, இந்தக் கும்பஜலத்தினால் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தீர்த்தத்தில் ஆவாகித்திருந்த தேவதைகளை சம்ஹாரமுத்திரையால் அகற்றி ஸ்நானமுடிவில் இருதயத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

பின்பு கற்பம் அநுகற்பம் உபகற்பம் அகற்பம் என்னும் நான் குவித விபூதியில் விதியாற் செய்து முன் பிரதிஷ்டித்த பாத்திரத்தில் நிரீக்ஷணுதி பஞ்சசுத்தி செய்து, ஈசாணுதி பஞ்சப்பிரம மந்திரத்தால் அபிமந்திரித்து, வித்தியாதேக நேத்திரநியாசம் செய்து, நூற்றெட்டு முறை மூலமந்திரம் ஜபித்து, மாயாதத்துவத்தையும் லகுளீசுவரரையும் ஆவாகித்து, உத்தூளனஞ் செய்துகொண்டு, நுரை குமிழி உள்ள நீர், புழு உள்ள நீர், வடித்தெடாத நீர், இழிகுலத்தார் தீண்டியநீர், கலங்கனீர், பாசிநீர், உவர்நீர், வெந்நீர், பழநீர், சொறிநீர், அல்லாத சுத்த ஜலத்தை நிரீக்ஷணுதி பஞ்சசுத்தி செய்தபின் தத்துவத்திரய மந்திரத்தால் ஆசமனஞ் செய்து, உதட்டை வலக்கையின் கட்டைவிரலால் இரண்டுதரம் துடைத்து, பெருவிரலையும் பவித்திரவிரலையும் சேர்த்துப் பாதமுதல் சிரசுபரியந்தம் துடைத்துப் பெரு விரலையும் தர்ஜனிவிரலையும் ஒன்முகச்சேர்த்து, வலக்கண் இடக்கண் நெற்றிக்கண்களாகிய சூரிய சந்திராக்கினி ஸ்தானங்களைத் தொட்டுப் பெருவிரல் சுண்டுவிரல்களைச் சேர்த்து, வாயுஸ்தானமாகிய வலப்பக்க இடப்பக்க மூக்குத் துவாரங்களைத் தொட்டு, ஆகாயஸ்தானமாகிய வலதுகாது இடது காதுக்களைப் பெருவிரலால் தொட்டுக் கண்டத்துக்குட் கீழிட்ட அப்புஸ்தானமாகிய புஜங்களை வலமிடமாகத் தொட்டு, பிருதிவிஸ்தானமாகிய கொப்பூழையும் தொட்டு, ஜீவவியாபகஸ்தானமாகிய சிரசை ஐந்து விரல்களால் தொட்டு, "ஏ மகாதேவ! பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் சூரியன், சந்திரன், என்பனவற்ருற் சேர்ந்துள்ள சரீரத்தில் ஜீவசொரூபமாகிய என்னைச் சேர்த்துவைத்து, ஜனனமரணுதி கிலேசத்தை விச்சைக்கு ஈடாகக்கோடுத்துக் காக்கின்றீர். இந்த மலசரீரத்தைத் தயையினல் நீக்கிப் பரிசுத்தமாகிய தேகத்தைப் பெறுமாறு கருணைகரராகிய ஏ பிரபுவே! கிருபை செய்யவேண்டும்." எனப் பிருதிவிமுதல் ஜீவபரியந்த அதிதேவதைகளாகிய பவாதி அஷ்டமூர்த்திகளை மேற்கூறிய எட்டு இடங்களிலும் பாவித்து, "என்னைச் சிவகைங்கரிய யோக்கியனுக இப்பொழுது செய்யுங்கள்" எனப் பிரார்த்தித்தல் வேண்டும்.

பின்பு விபூதியையும் தீர்த்தத்தையும் சுத்தி பண்ணிக் கரநியாசஞ் செய்து வலக்கைப் பெருவிரல் நடுவில் அணிவிரல்களால் விபூதியை எடுத்து இடது உள்ளங் கையிலே வைத்து நிரீக்ஷண முத்திரையினல் நிறுத்தி, வலக்கையை மேலே கவித்துமூடி பிரமபஞ்சக ஷடங்கவித்தியாதேக நேத்திரமந்திரங்களால் அபிமந்திரித்துப் பிரசாத மந்திரத்தில் நூறு அல்லது ஐம்பது இருபத்தைந்து ஜபித்து, விந்துப் பிரதேசத்திலுள்ள அமுதத்தைத் தீர்த்தத்தில் பொருத்தியதாய்ப்

பாவித்து, வாமதேவ மந்திரத்தால் விபூதியில் ஜலம் விட்டுக் குழைத்து இரண்டு உள்ளங்கைகளில் பவித்திரவிரல்நுனியினாலே எட்டிதழ்க் கமலம் கர்ணிகையுடன் எழுதி பரமேசுரரை ஆசமன மந்திரமூலத்தாலும் பஞ்சப்பிரம அங்கவித்தியாதேக நேத்திரமந்திரங்களாலும் அபிமந்திரித்து, ஆசாரியரையும் சிவபெருமானையும் விதிப்பிரகாரம் தியானித்து, நிருதி திக்கில் யக்ஷர்கள் சிவகணங்கள் தேவதைகள் முதலியவர்களின் பொருட்டுச் சூலமுத்திரையினால் தரித்ததாகப் பாவித்துப் பின்பு வடக்குமுகமாக விதிப்படியிருந்து சாங்கம், உபாங்கம், பிரத்தியங்கம் என மூவகைப்பட்ட தேகத்தில் நெற்றி தோள்களில் ஆறங்குல நீளமும், மார்பில் ஆறு அல்லது நான்கு அங்குல நீளமும், தொப்பூழ், பாதம் முழங்கை மணிக்கட்டு முதலிய ஸ்தானங்களில் ஒவ்வோர் அங்குல நீளமும், ஏனைய இடங்களில் பிந்து மாத்திரையுமாக முப்பத்தெட்டு இடங்களில் திரிபுண்டரந் தரித்து, தரித்துக் கொண்ட விபூதிமிச்சத்தைச் சிரசிலும் உடம்பிலும் பிரகாசிக்கப் பூசிக்கொண்டு உள்ளங்கையில் ஜலத்தை அள்ளித் தத்துவத்திரயத்தால் உட்கொண்டு, பிரணவத்தாலும் உமையொருபாகர் மந்திரத்தினாலும் நியாசஞ் செய்து, அந்தரியாகஞ் செய்து, அதன் பின்னர் ஆன்மார்த்த சிவலிங்கப்பெருமானைப் பூசித்துப் போற்றி செய்தல் வேண்டும்.

அதன் பின்னர்த் தனது உபதேசகுருவைத் தியானித்துத் திருக்கோயிலைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து உட்புகுந்து சூரிய பூஜை செய்து, பின்பு விநாயகமூர்த்தியைப் பூசித்து, தெளிவுள்ளவராகிய சரசுவதி தேவியாரைப் பூசித்து, இரண்டு யானைகள் பொற்கலசத்தாலே கங்கா ஜலத்தை அபிஷேகிக்கின்ற திருமகளைத் துதித்து, சிவப்பு வர்ணமும் மூன்று கண்களும் ஜபமாலை சூல ஹஸ்தமும், பொருந்திய நந்திகேசுரரைத் தியானித்து, முதலை மீதேறிப் பூரண கும்பம் கருநெய்தற் புஷ்பம் ஏந்தி வெள்ளை நிறமுற்று விளங்கும் கங்காதேவியை வணங்கி, கறுத்த நிறமும் மூன்று கண்களும் கபாலமும் சூலமுமுடைய மகாகாளரை ஏத்தி, ஆமை வாகனத்திலேறிப் பூரண கும்பம் கருநெய்தற் பூக்கொண்டு கருமைநிறமுற்று விளங்கும் யமுனாதேவியைத் தியானஞ் செய்து, பூசித்து அஸ்திர துவாரபாலரைப் போற்றிப் பின்பு அரனையும் ஐங்கரனையும் சங்கநிதி பதுமநிதிகளையும் சண்டர் பிரசண்டரையும் தியானத்தோடு பூசித்தபின், சுவாமி பீடத்தின் கீழ் வெண்மை நிற முடையவளாய்ச்சிரசிலே அங்குராகாரமுடையவளாய் வரதம் அப்யம் பாசம் அங்குசமுமுடையவளாயுள்ள ஆதாரசத்தியை அர்ச்சித்து, பிரம சிலையிலே பூமியே கிழங்காகவும்,

பஞ்சகலைகளும் காம்பாகவும், பாவனையே முள்ளாகவும், மாயையே பதுமமாகவும், அநேக இதழ்களையுடைய ஆசனத்திலே வெண்ணிறமாக இருக்கும் அனந்தரைப் பூசித்து அக்கினி நிருதி வாயு ஈசானம் என்னும் மூலைகளில் வெண்மை செம்மை பொன்மை கருமையாகிய நிறத்தோடு கூடிய தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் என்னும் நான்கு சிம்மங்கள் தாங்கி யிருப்பது கண்டு பூசித்து சதாசிவர், அனந்தனர், ஸ்ரீகண்டர், பார்வதி, சுப்பிரமணியர், விஷ்ணு, பிரமா, என்னும் எழு குரவர்களையும் வணங்கி, பதுமதளம் எட்டினுள்ளும் வாமை, ஜேஷ்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்னும் அஷ்டசத்திகளை வணங்கிக் கமல கேசரத்தில் மனோன்மணியைப் பூசித்து, இவ்வியல்பு வாய்ந்த மகத்தாகிய சிவபீடத்தில் ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதமென்னும் ஐம்முகப்பெருமானை எழுந்தருளச் செய்து, ஆவாஹன ஸ்தாபன சந்நிதான சந்நிரோதன பாத்திய ஆசமன அர்க்கிய புஷ்பதான முதலியன புரிந்து, ஷோடசோபசாரங்களுடனே பத்தியோடு பூலோக கைலாசமென்னும் நாககிரியில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அர்த்தநாரீசுவரரைப் பூசிப்பதென்று வேதங்கள் முறையிடாநின்றன எனச் சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

துவாரபூசை செய்தபின்பு, யசுர்வேத மத்தியில் விளங்கும் ஸ்ரீருத்திரங்களாலே அர்ச்சனை செய்து, பாதங்களில் பாத்தியங் கொடுத்து, திருமுகத்தில் ஆசமனமும், திருமுடியில் அர்க்கியமுங் கொடுத்து, மதுபர்க்கம் அளித்துச் சிவாகமப்பிரகாரம் பின்னரும் ஆசமனங் கொடுத்து, நெய்யும் பாலும் கலந்து சமைக்கப்பட்ட திருவமுதளித்து, நெல்லிக்காப்பு திருமஞ்சட்காப்பு பஞ்ச கவ்வியம் பஞ்சாமிர்தம் பால் தயிர் நெய் தேன் இளநீர் கரும்பிரசம் பலகனிரசங்களாலும் சந்தனத்தாலும் அபிஷேகித்துக் காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கொண்டு பதமந்திர உருத்திர மந்திரமோதிப் பூரணாபிஷேகஞ் செய்து, மெல்லிய பட்டாடை எடுத்துத் திருமேனியை மெத்தென ஒற்றித் தேவர்களும் விரும்பத்தக்க பட்டாடையும் கௌசிக ஆடையும் வெண்பூணூலும் சாத்தி பூஷணவர்க்கங்களும் பூமாலைகளும் அணிந்து, அறுசுவை அமைந்திருக்கும் நால்வகை உண்டிகளைத் திருவமுது செய்வித்து, சீதள ஜலம் கொண்டு திருக்கைகளையும் செம்பவளத் திருவாயையும் பூசித் திருவடியை அலம்பி, மந்திரஞ் சொல்லித் தாம்பூலமும் தக்கோலமும் அளித்துத் தூபதீபங்களையெல்லாம் முறையாகக் காட்டி, மகிழ்ச்சியுடன் வில்வபத்திரம் வெள்ளெருக்கம்பூ, தாமரைப்பூ, சன்

பகப்பூ, செங்கழுநீர்ப்பூ, மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, அலரிப்பூ என்னும் அஷ்ட புஷ்பங்களைத் திருமேனி குளிர்ச்சியாகுமாறு சாத்தி, நினை வுடனே மந்திரபுஷ்பாஞ்சலி செய்து துதித்து, நமஸ்கரித்து புனரா சமன முதலாய்ச் செய்யத்தக்க உபசாரமெல்லாஞ் செய்து, ஜபம் நிறைவேற்றிச் சிவநாமங்களால் துதிசெய்து, தினசாகித்திய சங்கீத நர்த்தன நீராஞ்சனம் குடை கவரி கண்ணாடி முதலியவற்றால் உப சரித்து, நான்கு வேதங்களோடும் இனிமையாகிய தென்கலைத் திருப் பாடலிசை முழங்கச் சகல மேளவாத்தியங்களும் முழங்கப் போற்றி செய்து, பின்பு லயாங்கமுடனே போகாங்கமிவைகளை மனக்கருத் திலெண்ணிப் பிரதக்ஷணம் செய்து, வணங்கி, எம்பெருமானாகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரரைப் பூசிப்பது அறிவாகுமென வேதங்கள் கூறு கின்றன.

சுவாமியினுடைய அழகிய வலதுகை ஞானமுத்திரையும், ஜப மாலையும், இடதுபுறத்தில் நெய்தற் புட்பமும் உமையை அணைத்திருக் கும் கமலக்கையும், கறுப்புஞ் சிவப்புமாக நித்தியமாகிய சாத்துவிக குணமும், சிவப்பும், வெள்ளையுமாகிய ராசச குணமுமாகிய ரூபமும் தேவி திருக்கையில் தரித்த தாமரைப் புஷ்பமுமாக உன்னித் தியானித் தவர்களுக்கு வலிமை மிகுந்த யானைகள், தேகமாய்த் தாவிச் செல்லும் குதிரைகள் சிவிகைகள் முதலிய நல்ல பாக்கியங்களும் நல்ல கீர்த்தியும் தண்ணிய பரிவினால் பாலிக்கும். சாமளவர்ணம் கறுப்பு சிவப்பு நிற மும் அமைந்தபாதமாக உன்னிய புவனத்தவர்களுக்கு இஷ்டமாகிய வரமுதவும் ஆகருஷணமும் வசியமும் வேண்டில் குளிர்ந்தபிறை மரு விய முடியும், அழகிய சொர்ணக் காந்தியும் கருணை நிறைந்த பார்வை யும், வரதம் அபயம் பாசம் அங்குசம் பொருந்திய அஸ்தங்களுமாகத் தியானித்து வணங்கவேண்டும். உறுதியாகிய உச்சாடனத் தொழி லுக்கு வெண்ணிறமாகிய திருமேனியும், கிளியும் நெய்தற்பூவும் பிடித் தவராக ஞானமுத்திரையும் ஜபமாலையும் தரித்த திருக்கரங்களுமாகத் தியானித்து அருச்சனை செய்யவேண்டும். பகைவர் புறஞ்சாய்ந்து போவதற்குக் கூந்தலும் எட்டுப்புயங்களும் அம்புவில் கபாலம் கேட கம் கூரிய வாள் பிடித்த திருக்கரங்களுமாக ரூபத்தியானஞ் செய்து வணங்கி அர்ச்சனை செய்வாராக. மற்றும் இவ்வாறே ரூபத்தியானம் செய்தவர்களுக்கு நினைத்த காரியம் கைகூடும் என மொழிந்த சூத முனிவர் கூறுகின்றார்.

அன்புள்ள அந்தணர்களே! முன்னொரு நாள் வேதம் கூறுதற்குப் பிரணவத்தை உச்சரித்த பிரமதேவரை நோக்கி இப்பிரணவத்தின் பொருள் கூறுக என முருகக் கடவுள் கேட்கவே, ஐயந்திரிபற அந்தப் பிரணவத்தின் பொருள் தெரியாது பிரமதேவர் மயங்கித் தளைபட்டுச் சிறைபட்ட பின் மனம் வருந்திக் கைலாயபதியை அரியதவம் புரிந்து வேண்டினர். வேண்டிய வேண்டியாங்குதவும் வள்ளலாராகிய எம்பெருமான் கருணைகூர்ந்து ஏ பிரமதேவா! தக்ஷிண பூமியிலே நாம் விரும்பும் புண்ணிய க்ஷேத்திரங்கள் எங்கெங்கிருக்கின்றனவோ அவ்விடமெல்லாம் எய்தி எம்மைப் பூசித்துப் பின்பு இமயகிரி கைலாயகிரி மகாமேருகிரி முதலாகிய பர்வதங்களுக்கெல்லாம் மேன்மை பெற்று, குளிர்ச்சி பொருந்திய இமாசல கன்னிகையாகிய உமாதேவியாருடன் கூடி ஏகதேகமாகிய அர்த்தநாரீசுர முகூர்த்தமாக எழுந்தருளிய நாமும், தேவர்சிறைமீட்ட குமாரசுவாமியும் நீங்காமல் வசித்திருக்கும் இன்பமுற்ற திருச்செங்கோட்டை அடைந்து முப்பொழுதும் திருமேனி தீண்டி அருச்சித்து யாம் வேறு என்றும், நீ வேறு என்றும் பேதங் காணாது ஸ்தாவரலிங்கம் சங்கமலிங்கம் என்னும் அபேத பாவனை பெற்று, சிவத்துவிஜரென்றும் இணைபிரியாத ஒப்பற்ற சிவப் பிரமமென்றும் இயற்பெயர்கொண்டு பிரமர் கூட்டங்களாகப் பிரபலித்து ஒன்று அநேகங் கோடி மஹ பிரமரென விருத்தியாகி மனங்களித்து வணங்கினால் பிரமதேவனே! நீயும் நானும் சம்பந்தமாகக் கலந்திருப்பப் பிரியாமல் உன் மனசும் என் மனசும் ஒன்றுபடக் கலந்திருப்பேம், அப்பொழுது இரத்தின மயமான இக்கிரியிலே ஆறுமுகனுக்கு உபதேசித்த பரமஞானத்தை உனக்குப் போதிக்கின்றேமென வரப்பிரசாத மனுக்கிரகஞ் செய்து விடை கொடுத்தார்; அவ்வாறே பிரமதேவர் ஆதிசைவராய்ப் பூசித்து ஞானபோதம் பெற்று வாழ்ந்தார்; ஆதலினால் சிவார்ச்சனைக்குரியவர்கள் எமது சிவரூபராகிப் பரமசிவத்தின் நேத்திரங்களாகி அகண்ட சச்சிதாநந்த மூர்த்திக்குயிராகிய மந்திரஸ்வரூபராகிய ஆதிசைவர்களே யாவர். அவர்களையன்றிச் சிவார்ச்சனைக்குரியவர்கள் வேறு பிராமணர்களாகார்கள் *

"மேன்மை பெற்ற சிவப்பிராமணர்களில் உடற்குற்றம் மனக்குற்றம் இல்லாதவராயும் நாலுவேதம் ஆறு அங்கங்களை அறிந்தவரா

* ஈண்டுள்ள சிவத்விஜ பிரஸ்தாபம் வடமொழி யேட்டுப்பிரதிகளிற் காணப்படினும், இவ்வாண்டில் அச்சிட்ட பிரதியிற் காணப்படவில்லை.

யும், ஞானபாதங்களை நன்கு போதிப்பவராயும், கிரியா பாதத்தில் சமர்த்தராயும் யோகபாதத்தில் அப்பியாசமுள்ளவராயும், சரியா பாதப்பிரகாரம் நடத்தையுள்ளவராயும் சிவசாஸ்திரமாகிய சிவாகமத்தில் விசேஷ பரிசயமுள்ளவராயும் சிவபூஜை சிவார்ச்சனைகளைத் தவறுமல் நடாத்துகின்றவராயும் உள்ள ஆசாரியரே எம்பெருமானது அமுதம் பொதிந்த தேஜோமயத் திருமேனியைத் தீண்டி அருச்சிக்கவர வேண்டியது முறையாகும்" அன்னூர் பெருமை பெரிது! பெரிது! என்ருர் சூதமுனிவர்.

---

உ

## கந்தர்பூசை மான்மியம்.

---

உலகத்திலே சதுர்வித புருஷார்த்தங்களை விரும்பிய புண்ணிய சீலர்கள் சிவசுப்பிரமணியரைப் பூசை செய்ய வேண்டிய விதியைச் சொல்கின்றேனென்று சூதமாதவர் சொல்கின்ருர்.

முக்குற்றமற்ற முனிவர்களே! அழகிய படமுற்ற நாகபந்தனம் பொருந்திய தொந்திவயிறும், பணைத்து இறுகிய சீபாதங்களும், ஞானனந்த மகாகுணங்கள் பொருந்திய கைகளும் குளிர்ந்த பிறை போன்ற ஒற்றைக் கொம்பும், முறம்போன்ற இரண்டு செவிகளும், நான்ற வாயும், யானைமுகமுமுள்ள விநாயகரைத் தியானித்துக் கணபதி நியாசஞ் செய்து, உபதேச குருமூர்த்தியின் இரண்டு பாதங்களையும் போற்றி செய்து, திரமாகிய பொதியமலை வாசராகிய அகத்திய முனி இருஷியாகவும், திருஷ்டுப்பு சந்தசாகவும், வலிமை மிகுந்து இளந்தன்மை பொருந்திய குமாரதேவனே தெய்வமாகவும் பொருத்தி ஞானப்பிரகாசமாகிப் பிரணவபீஜாக்ஷர சகிதமாகச் சடாக்ஷரத்தை "எல்லாப் பாக்கியங்களும் அளிக்கும் விநியோக" மென உச்சரித்து ஒளிபொருந்திய ஆறு திருமுகங்களும் கமலமலர்போன்ற பன்னிரண்டு கரங்களும் வாய்ந்து, களிப்புமீதூரும் தெய்வானை வள்ளியம்மை என்போர் உபயபாரிசங்களிற் பொலிய வெற்றியையுடைய சத்திவேல் பிரகாசிக்கா நின்ற அலங்காரந்தன் கருத்திற்றேற்றமாகச் சுப்பிரமணியரை நினைந்து, ஆவாகனம், ஆசமனம், பாத்தியம், அர்க்கியம் கொடுத்துத் தியானஞ் செய்து ஆசனங்கற்பித்து, திருவபிஷேகஞ் செய்து திருவொற்றுடையிட்டுத் திருவுடை சாத்தி, உபவீதந் தரித்து பரிமளசுகந்த புஷ்பமாலைகள் அஷ்டபுஷ்பங்கள் ஆபரணங்கள் சாத்தி

அலங்கரித்துக் குறைவில்லாத தூபதீபங்களுடனே அன்பாக அமுத நிவேத்தியஞ் செய்து கர்ப்பூர தாம்பூலம் சமர்ப்பித்துப் புநராசமன முதலிய யாவுஞ் செய்து பூரணதோத்திரம் நர்த்தனம் நிராஞ்சனம் கவரி குடை விசிறி ஆலவட்ட முதலியவைகளால் உபசரித்துத் தாளம் மிருதங்கம் முதலிய சகல வாத்திய முழக்கத்தோடு அர்ச்சித்துப் போற்றி செய்து முன்னும் இடையினும் பின்னும் தியானஞ் செய்து நமஸ்கரித்து ஒளிவீசாநின்ற சுவர்ண இரத்திநாபரணங்களால் அலங்கரித்த கொம்பு சேர்ந்து முஷ்டிகளுடன் பாய்ந்து போர் செய்யும் செருக்கு மிகுந்த செம்மறி யாட்டுக்கடாமீதேறிச் செழுமையையுடைய தேவலோகத்துப் பாரிசாத பூச்செண்டு கைலேந்தி மகாமேருவை வலமாகச் சுற்றி விளையாட்டாய் வலது திருக்கரத்தில் ஜபருத்திராக்ஷ மாலையும், இடது ஹஸ்தத்தில் சிவஞானபோதம் நிறைந் தமைந்த புஸ்தகமும் பற்றினவராக நினைத்துத் தியானஞ் செய்கின்றவர்களுக் கெல்லாம் தகுதியாகிய கல்வியும் ஞானமும் சுருதி போதங்களும் அவரவர் கருதிய இஷ்டகாமியார்த்தங்களும் எய்த இந்தப் பூமியிலே வாழ்வார்கள். சரஸ்வதிதேவியும் அவர்களிடத்தில் அன்போடு நீங்காது வசித்திருப்பாள்.

சப்தரிஷிகளில் வசிஷ்டர் பத்தினியாகிய அருந்ததி நீங்கலாக மற்றை ஆறு இருஷி பத்தினிமார்களாகிய கார்த்திகைப் பெண்களுடைய அழகிய முலையமுதை ஆறு திருவாயாலும் உண்டு நெருங்கிப் பூமணம் வீசாநின்ற சோலைகளிலே அவர்கள் சிறுவிரலைப் பிடித்துக் கொண்டு மனக் கிளர்ச்சியோடுலாவி நூல்போல் துவண்டு சிறுத்த இடுப்பின் மேலேறி விசித்திர விளையாடல் புரிந்து களிகூரும் மஹத்தாகிய தோற்றத்தை மனதிற் பாவனை செய்து தியானித்தவர்கள் குற்றமில்லாத சற்புத்திரர்களைப் பெற்று இவ்வுலகத்தில் வாழ்ந்திருப்பார்கள். அழகிய செந்தாமரை மலர்போன்ற பன்னிரண்டு திருக்கரங்களிலும் வெற்றியையுடைய அஸ்திர சஸ்திரத் தொழில்கள் பயின்று விஜயம் பொருந்திய பன்னிரண்டு தோள்களும் வாய்ந்து மனக் களங்கமறப் பரசுராம ரொருபுறமாகவும், வீர வாகுதேவர் முதலிய முதன்மை பெற்ற ஒன்பதின்மர் சூழ்ந்து விளங்கவும் நெருங்கி ஐம்முகப் பெருமானிடத்தில் வித்தை பயிலும் தோற்றமுள்ள மேலாகிய சிறப்பு வாய்ந்த இராசதகுண மமைந்து, திரிகரணங்களால் வழிபாடு புரியும் மக்கட்கு இகபரசாதனங்களை அளிக்குமாறு பெருங் கருணை ததும்பி இரக்ஷிக்கும் பான்மை பெற்று விசேஷ வரமருளும். உதயகால சூரியனைப் போலப் பிரகாசமுற்று இடதுகையில் கமண்ட

லமும் வலது மலர்க்கரத்தில் தண்டாயுதமும் பிடித்திருக்கின்ற குமார
மூர்த்தியை மனசிற் பாவனையாற் றியானித்து வணங்கியவர்களுக்கு
மெய்ஞ்ஞான போதமும், அரிய தவப் பயனும், நிறைவுற்ற செல்வ
மும் பொருந்த வாழ்வார்கள். கொன்றை முதலிய பூக்கள் மலர்ந்து
நிறைந்த கார்காலச் சந்திரனைப் போல விளங்கிய ஆறு திருமுகங்
களும், வழுவுறாது வேதமோதி மலர்ந்த அழகிய செவ்வாய்களும்,
ஒளி மிகுந்த குண்டலங்களால் விளங்கும் திருச்செவிகளும், ஆதியந்த
மற்ற தமது மாதாப் பிதாக்களாகிய சாம்பசிவனைத் தரிசித்துப் போற்றி
நமஸ்கரிக்கும் பன்னிரண்டு கைகளையுமுடையவராகப் பாவித்துப்
பூசிப்போர் மனசில் நினைத்த காரியங்கள் கைகூட வாழ்வார்கள்.
பாசம் அபயம் வில்கேடகம் சக்கரம் பதாகை இடது பாகமும்,
வரதம் அங்குசம் உலக்கை அம்பு வாள் செருவெல்லும் வேல் வலப்
பக்கமுமாக, தேவேந்திரன் புதல்வியாகிய தெய்வயானையம்மன் அருகி
லிருந்து பிரகாசிக்க, ஐராவதத்தில் எழுந்தருளி யிருப்பவராகத் தியா
னஞ் செய்தவர்கள் அஷ்டசித்தி பெற்று வாழ்வார்கள். இடது
கையிற் சேவற்கொடியும் அழகுவாய்ந்த வெற்றிவேல் வலது பொற்
கையிலுந் தரித்துக் கடாக்ஷம் பொருந்திய திருவதனமும் கடப்ப
மாலை அணிந்த வலிய ஜயமிகுந்து பூரித்த புயங்களும், முப்புரி வாய்ந்த
பூணூல் மார்பும், செவ்வானம் போலும் கிரீட காந்தியும் விளங்கப்
பொற் பிரபையுள்ள மரகத மயில் வாகனத்தின் மீது எழுந்தருளி
யிருக்கும் பாவனையுறத் தியானிப்பவர்கள் சகல நன்மைகளையும் பெற்று
வாழ்ந்திருப்பார்கள். உருவம் அருவம் அருவுருவமாகிய சிவபிரா
னுடையவும் உமாதேவியார் சுப்பிரமணியர் என்னும் இருவருடைய
வும் ரூபதியானம் ஒருவராலும் புகன்று அளவுபடுத்தப் படுவதன்று.
ஆனால் சிற்றறிவினனாகிய எனக்குத் தெரிந்தவாறு கூறினேன். இஃ
தன்றியும், அன்னவாகனத்தையுடைய பிரமதேவராலும் இரக்ஷா
கிருத்தியம் பெற்ற விஷ்ணுவாலும் மற்ற அரிய தபோதனர்களாலும்
எடுத்து கூறவியலாத மகிமை வாய்ந்தது திருச்செங்கோட்டு நாககிரி
யின் மகத்துவம். லோகநாயகராகிய சிவபிரானுடைய ஐந்து திரு
முகங்களி னின்றும் தோன்றிய ஆகமங்கள் அம்மையும் அப்பரும்
கூடியவிடத்தே முருகக் கடவுளும் சேர்ந்திருக்கும் திருச்செங்கோட்டு
நாகாசலத்துக்கு மற்றெத்தலமும் ஒப்பாகாவென்று கூறும். இங்
ஙனம் மகிமை வாய்ந்த திருச்செங்கோட்டு மகத்துவத்தை ஆதி
காலத்தில் பரமேசுவரர் அகஸ்திய முனிவர்க்கு உபதேசிக்கக் கேட்
டிருந்த பார்வதியார் சுப்பிரமணியருக்கு விளக்கியதை முருகக் கடவுள்



கந்தரைப் பூசித்தல்

நந்திகேசுவரர்க்குச் சொல்ல வந்த மகத்துவத்தை வேதவியாசர் பாற் கற்ற எளியேன் வைதிகோத்தமர்களாகிய சௌனகாதி மகாமுனிவர்களே! உங்களுக்குச் சொன்னேன். அந்தத்திருநாககிரியில் நாகேசுரரென்னும் அர்த்தநாரீசுரர் வேலாயுதக் கடவுள் விளங்கிப் பிரியாமல் வசித்து அளவில்லாத தீர்த்தங்களுமுண்டாக்கிச் சகல போகங்களும் முத்தி மோக்ஷங்களும் அனைவருக்குங் கொடுத்து இரக்ஷிக்கும் கிருபையினாலே திரிலோகங்களுக்கும் மகாமேருகிரிக்கும் இந்த மகிமை இல்லை இது உண்மையாகிய வசனமென்றார் சூதமுனிவர். அர்ச்சனை தியானம் ஞானபோத நிஷ்டை ஜப முதலியவெல்லாம் திருச்செங்கோட்டு மலைமீது செய்பவர்களுக்குப் பரமேசுவருடைய திருவருளும் பேறும், குமாரருடைய வாழ்வும் திரிபுரசுந்திரியினுடைய கருணையும், சிறப்பும், சிவபிரானது நாற்பதங்களும் பெற்று வாழ்வார்கள் என்ற சூதமுனிவரை வணங்கிச் சுவாமி! லோகநாயகராகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரரைப் பூசித்துப் பேறுபெற்றவர்களின் சரித்திரங்களைக் கூறுதல் வேண்டுமென்று முனிவர்கள் வேண்டச் சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

---

உ

## விஷ்ணு பூசித்த மான்மியம்.

---

அன்புள்ள அந்தணர்களே! முன் யுகத்தில் ஓர் நாள் சாம்பவோத்தமராகிய துர்வாச முனிவர் வைகுண்டத்தை அடைந்து வருவது கண்ட திருமால் கோயிலின் வாயிற்காவலர் அச்சமுற்று, இம் மாதவரை உத்தரவு பெற்றுச் செல்கவென்றால் மகாரிஷியின் சாபத்தைப் பெறவேண்டும். அச்சாபம் பொல்லாது என்றுன்னி வழி விட்டு விலகிநின்றார்கள். அப்பொழுது மூலத்தானத்தில் திருமகளுடன் ஒருமனதாகக் கூடி இன்பமனுபவித்திருக்கும் சமயமாதலால் முனிவர் வருவது தெரியாது விஷ்ணு மயங்கியிருந்தனர். சாமானியர்களைப் போலவே மையலிலிவ்வாறு மயங்கியிருத்தல் தகுமா என்று காலால் எட்டி முனிவர் உதைத்தனர். தனது தவறுதலையும் முனிவர் தவவலிமையையும் நோக்கி முனிவர் பாதத்தைப் பிடித்து ஓ முனீந்திரா! ஆபரணமணிந்த மார்பிற்பட்ட பாதம் நோகுமே என இனிது இனிமையாக உபசரித்தனுப்புவித்தனர். பின்பு வைகுண்டபதியாகிய திருமால் வாயில் காப்போரை அழைத்து எமக்கு அறிவிக்காமல் முனிபுங்கவரை நீங்களேன் உள்ளேவிட்டீர்கள்? அதனால் அவரை

வரவேற்று உபசரிப்பதற் கியலாது போயிற்று! ஆதலால் இது பெருந்தப்பித மாதலின் உங்களுக்குச் சாபம் கொடுக்கின்றேன். அதாவது எம்மிடத்து விசுவாசமுள்ளவர்களாய் நூறு ஜன்மம் பூமியிற் பிறந்திருந்து இங்கு வருகிறீர்களா? அல்லது விரோதிகளாக மூன்று ஜன்மங்கள் பிறந்திறந்து இவ்விடம் வந்து சேருகிறீர்களா? உங்கள் சம்மதம் எது என்று மகாவிஷ்ணு கேட்டார். சுவாமி! தங்கள் திருவாயிலைக் காத்திருக்கும் பாக்கியம் பெற்ற அடியேங்கள் இப்பதவியை விட்டு அன்புகொண்டவர்களேயானாலும் அதிக நாள் நீங்கியிருக்கமாட்டோம். பகைவர்களாகவிருந்தாலும் மூன்று ஜன்மத்தில் இப்பதவி பெறுவதே சம்மதமென்றார்கள். அவ்வண்ணமே ஆகுக என விஷ்ணுமூர்த்தி சபித்தனர். சாபம் பெற்ற வாயில் காவலர் இருவரும் முதலில் கசியபருக்குத் திதி என்னும் பெயரையுடைய மங்கையிடம் இரணியன் இரணியாட்சன் என்னும் பெயர் விளங்கத் தோன்றினார்கள். இருவரும் கல்வி பயின்று அரிய தவத்தைச் செய்து வரம் பெற்றார்கள். இரணியன் மூவுலகமும் தனக்குக் கீழ்ப்படியுமாறு தன் ஆஞ்ஞையைச் செலுத்தினன். தன்னைத் தெய்வமாகக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினன். வேத முதலியன ஆரம்பிக்கும் பொழுதும் முடிக்கும் பொழுதும் இரணியாயநம என்று உச்சரிக்கும்படி கட்டளையிட்டான். பிரமா முதலியவர்களும் இவன் தண்டனைக்குப் பயந்து "காலத்துக்குத் தக்ககோலம்" என்று அவ்வாறே நடந்தார்கள். சாதுகளாகிய தேவர் முனிவர்களை யெல்லாம் ஈனத்தொழில் செய்யுமாறு பலவிதத்திலும் இம்சை செய்தான். துன்பம் பொறுக்கமுடியாத தேவர் முனிவர்களாகிய சாதுக்கள் வைகுண்டஞ் சேர்ந்து விஷ்ணு சந்நதியில் பெருங்கூட்டமாக நின்று ஓ இலட்சுமிநாதா! இரணியனுடைய அதிகாரம் நாசமாகும்படி கிருபை செய்ய வேண்டுமென்று பலவாறு முறையிட்டார்கள். சமுத்திரம்போல ஒலமிடும் தேவாதியரை நோக்கி ஓ சாதுக்களே பயப்படாதீர்கள் விரைவில் உங்களுக்குச் சௌக்கியம் உண்டாகும் என்று சக்கிரபாணி அனுக்கிரகித்தார். பிழைத்தோம்! பிழைத்தோம்! என்று விடைபெற்று தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள். பின்னர் இரணியகசிபுடைய மனைவியார் வயிற்றில் ஒரு ஆண் மகவு பிறந்தது. அதற்குப் பிரகலாதன் என்று நாமகரணமும் ஏனைய விபவங்களும் நடத்தப்பட்டன. நத்தையில் முத்து ஜனித்தது போலப் பிறந்த பிரகலாதன் செல்வமாக வளர்ந்தான். ஐந்து வயதாயிற்று அக்ஷராப்பியாசஞ் செய்ய ஆரம்பித்தார்கள். முதலில் அப்பா! பிரகலாதா!

இரணியாயநம என்று சொல் என்றார் உபாத்தியாயர். காதுகளை இரண்டு கைகளால் மூடிக்கொண்டு சுவாமி! தாங்கள் இவ்வண்ணம் சொல்லப்படாத சொல்லைச் சொல்லலாமா? என்றான். குழந்தை ஆரம்பத்திலேயே விநயமாக கேட்பது கண்டு மகிழ்ச்சியும் பயமுங்கொண்டு ஆனால் எவ்வாறு சொல்வது என உபாத்தியாயர் கேட்டனர். சொல்கின்றேன் கேளுங்கள் என்று பிரகலாதன் கற்கண்டும் தேனும் அமுதும் நெய்யும் பழமும் கலந்து 'உண்டால் உருசிப்பதுபோல அன்புடன் கூறுகின்றான், சுவாமி! இரக்ஷகர்த்தாவினது திருநாமாக்ஷரங்களாகிய நாராயணாயநம என்று கூறவேண்டும். அவ்வாறில்லாது கொடிய பாதகனுடைய பெயரைச் சொன்னால் மறுமையில் இரௌரவாதி கொடிய நரகவேதனையும், இம்மையில் காக்கைக் கொடியும் கழுதை வாகனமும் கொண்ட மூதேவி விலாசமும் உண்டாகும். ஆதலால் அந்தச் சொல்லை மறந்துவிடும். அரிநாம மந்திரமாகிய அஷ்டாக்ஷரத்தை எவர் சொல்லினும் இருமை வாழ்வு பெருகி விஷ்ணுபதவி வாய்க்கும். இம்மையில் நினைத்தனவெல்லாம் கைகூடும். சுவர்க்கபுவன போகமும் கிடைக்கும் என்றான் பிரகலாதன். இவ்வாறு சிறிதும் தடையின்றித் தைரியமாயும் அன்பாயும் குழந்தை சொல்லும் வார்த்தையைக் கேட்ட உபாத்தியாயர் கைகால்களும் உள்ளமும் நடுங்கிப் பதைத்து, ஐயோ சிறிய மதலாய்! இளங்கன்று பயமறியாது என்றவாறு கூறுகின்றாய்; நீ சொல்லிய வார்த்தையைக் கேட்டபொழுது அடங்காத சீற்றங்கொண்டு சொன்னவனாகிய உன்னையும் கேட்டிருந்த என்னையும் கொன்றுவிடுவார். இனிமேல் அவ்வாறு சொல்லவேண்டாம் என்று எத்தனைவிதமாகச் சொல்லினும் சற்றும் அஞ்சாது ஹரிநாமசங்கீர்த்தனத்தையே உச்சரித்துக்கொண்டிருக்கும் சிறுவன் செயலை நோக்கி, இனிமேல் அரைக்கணமும் தாமதித்தல் கூடாதென்று தீர்மானித்துப் பிரகலாதனை அழைத்துக்கொண்டு இரணியன் முன்னர்ப் போய் ஓ பிரபுவே! தங்கள் புத்திரனுக்கு எந்தத் தந்திரஞ் செய்து சொன்னாலும் நான் சொல்லும் வண்ணம் சொல்லமாட்டேன் என்கின்றான். தான் மற்றொன்று சொல்கின்றான் கேட்டருளுங்கள் என்னலும், மிகுந்த பிரியமாகத் தன் அருமைக் குழந்தையை எடுத்து முத்தமிட்டு மடிமீது உட்கார வைத்து அடே அப்பா! என்செல்வமே! உபாத்தியாயர் சொல்வது போலச் சொல் கண்ணே! என்று சொன்ன இரணியன் முகத்தைப் பார்த்து, ஐய! ஐய! மேலோர்களாலே போற்றத்தக்க வேதோத்தமாக அரிநாமத்தை உச்சரியாமல் மதோன்மத்தனாகக் கேவலம் உன்

பெயரை உச்சரிக்குமாறு சொல்வது என்னபுத்தி. அந்த அஷ்டாக்ஷரங்களை ஸ்மரித்தால் நினைத்த போக போக்கியங்களை அடையலாமே என்றான். பிரகலாதன், பழுக்கக் காய்ச்சி ஊற்றிய செம்புபோல இவ்வார்த்தை இரணியன் காதிற் புகுதலும் உடனே கைகால்கள் பதற மீசையும் உதடும் துடிக்க மடிமீதிருந்த சிறுவனைக் கீழே தள்ளி ஏவலாளர்களை அழைப்பித்துத் தாக்ஷண்ணியமின்றி இந்தச் சிறுபையனைக் கொண்டுபோய் நெருப்புமூட்டி அதில் தூக்கிப் போடுங்கள் என்றான். அவ்வாறு செய்தார்கள். பிரகலாதன் சற்றும் துயர்கொள்ளவில்லை ஆனைகளின் காலால் மிதிக்குமாறு செய்தான். அதனாலும் கெடுதி நேரவில்லை. கல்லிலே கட்டிச் சமுத்திரத்திற் கொண்டுபோய் போடுமாறு செய்தான் அதனாலும் பிராணன் போகாது மகிழ்ச்சியுடன் கரைவந்து சேர்ந்தான். இவைகளையெல்லாம் நேரே பார்த்திருந்த இரணியனுக்குக் கடுங்கோபமுண்டாய்த் தன் இடையிற் கட்டியிருந்த வாளாயுதத்தை உறையினின்று எடுத்து அடே பயலே நான் சொல்வதுபோலச் சொன்னாலாயிற்று. இன்றேல் கண்டங் கண்டமாக வெட்டிவிடுவேன் என்றான். இவ்வார்த்தை கேட்ட பிரகலாதன் ஓ புத்தியில்லாத பாதகனே! உன்னால் என்ன செய்யக்கூடும் என் இஷ்ட தெய்வமாகிய நாராயணருடைய ஆஞ்ஞையின்றி என்றான். அவனே எல்லாவுயிரையும் என்னையும் காப்பவன். வீண் வாய்மதம் ஏன் பேசுகின்றனை என்றான் பிரகலாதன். அடே ஏதுமறியாத சிறு குழந்தையே! நானே திரிலோகங்களையும் காத்து இரக்ஷிப்பவன். என்னினும் வலியோன் ஒருவருமில்லை என்பது எனது கோட்பாடு. ஆனால் உன்னைக் காப்பவன் ஒருவன் இருப்பதாகச் சொன்னாயே? அவன் யார்? அவன் எங்கு இருக்கின்றான்? திருட்டுப்பயலே! என்றான் கொடிய இரணியாசுரன். இவ்வாறு கேட்டபொழுது புன்சிரிப்புக் கொண்டு பிரகலாதன் என்னைக் காக்கும் நாராயணர் ஆயிரம் பணாமுடியுடைய ஆதிசேஷ சயனத்திலும், மேல் உலகத்திலும், கீழ் உலகத்திலும், பல உலகங்களிலும், யானை முதல் எறும்பு ஈறாயுள்ள சமஸ்தப் பிராணிகளிலும், பஞ்சபூதங்களிலும், ஐம்புலாதிகளிலும், ரூபத்திலும், அரூபத்திலும், சீவனிலும், சீவனல்லாத எப்பொருளிலும், துரும்பிலும், தூணிலும் வசிக்கின்றார் என்றான். இதனைக் கேட்ட இரணியன் கண்களிலே தீப்பொறி பறக்கச் சினந்து இத்தூணிலும் இருப்பனோ என்றான். கொடியபாதகனாகிய இரணியனே! என் கர்த்தா இத்தூணிலும் இருப்பது உண்மையே என்ற மாத்திரத்தில் மேக கர்ஜனைபோல அட்டகாசஞ் செய்து அண்டபுவனங்கள்



விஷ்ணுபூசித்தல்.

நடுநடுங்க அந்தச் சுவர்ணமணித் தூணை ஓங்கிக் குத்தி இகழ்ச்சியாகிய சில வசனங்கள் கூறினன். அந்தத் தூணிலிருந்து திடுக்கிடும்படி கனமுழக்கமான ஒரு சிம்மநாதமுண்டாயிற்று, இவ்வோசையைக் கேட்டவுடன் அடா கள்ளப்பயலே தூணில் ஒளித்துக்கொண்டிருக்கின்றனே? திறமையுடையையாயின் வெளியில் வா என்று ஆக்கிரமித்துக் கோபித்தான். அப்பொழுது பிரகலாதன் சுவாமி லட்சுமி பதியே! நாராயணமூர்த்தியே! வெளியே வந்தருளுக என்று ஸ்தோத்திரஞ் செய்தான். அப்பொழுது படீரென அந்த தூணைப் பிளந்துக் கொண்டு அகிலாண்டமளவும் நிமிர்ந்து நான்கு தோள்களும் நாற்றிசை பரவ மலர்ந்த செந்தாமரை மலர்போன்ற புயம் ஆதிசேடன் முடி அதிரப் பொருந்திக் கூர்மை பொருந்திய சிங்கப் பற்கள் பயங்கரத்தை விளைவிக்க நகங்கள் விளங்க, அண்டாண்டங்களெல்லாம் நடுங்கச் சிரித்துக்கொண்டு வட்டக் கண்கள் சுழன்று சுழன்று வடவை போலச் சொலித்து நெருப்புப் பொறி கக்கச் சிரசு சிங்கமாகவும் மற்றைய கீழ் அங்கங்கள் மானிட வடிவாகவும் வெளிவந்த நரசிங்க மூர்த்தி கொடிய இரணியனுடன் யுத்தஞ் செய்து அவனை இழுத்து வாசற்படியில் மடியிற் போடடுக் கொண்டு வயிற்றைக் கிழித்துக் குடலைப் பிடுங்கி மாலையிட்டுக்கொண்டு இரத்தபானம் பண்ணினர். இவ்வாறு இரத்தவெறியால் மதிமயங்கி ஆடித் திரியத் தேவர்கள் வேண்டப் பரம மெய்ஞ்ஞான மூர்த்தியாகிய சிவபெருமான் சரப பக்ஷியாக வந்து நரசிம்மத்தைக் கொத்தி அண்ட கடாகத்துக்குக் கொண்டுபோய்க் குலுக்கிவிட உண்டரத்தத்தைக் கக்கிய பின்பு அறிவு வந்து அபராதஞ் செய்தேன் என்று சிவபெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தம்முடைய உலகத்துக்குப் போயினர் விஷ்ணு மூர்த்தி. பின்பு இரணியாக்ஷன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்ப் பாதாளத்தில் வைத்தான். அது அறிந்த விஷ்ணு வராக அவதாரமெடுத்துப் பூமியை இடந்து பாதாளம் புகுந்து இரணியாக்ஷனை அடர்ந்து கொன்று புவியை முன்போல நிலைக்கச் செய்தார். அந்தப் பிரமகத்தி விஷ்ணுவைப் பற்றிக்கொண்டது.

பின்பு மகாவிஷ்ணுவினுடைய காதுக்குரும்பையினின்றும் மதுகயிடவர் என்னும் இருவர் தோன்றித் தவம் கோற்றுப் பராக்கிரம சாலிகளாய் யாவரையும் வென்று திக்குவிஜயஞ் செய்து வருங்காலத்தில் திருப்பாற்கடலிற் சயனித்திருக்கும் அனந்த சயனரை நோக்கி செவிமாசிற் பிறந்த மவுடீகராதலின் முன் பின் ஒன்றும் தோற்றுதவராய்ச் சமுத்திர மத்தியில் பச்சை மலைபோலப் படுத்திருப்பவன்

யாரென்று சினந்துபோய்ச் சாடினார்கள். மூவருக்கும் போர் மூண்டது. ஒருவரை ஒருவர் பலநாள் வெல்வதற்கின்றிச் சமர்புரியவே, மதுகயிடவர் இருவரும் விஷ்ணுவை நோக்கி நீர் வெகு சமர்த்தர் எங்களுடன் இதுவரையில் ஈடுகொடுத்துவந்தீர் மெச்சினோம்; உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்குதிர் என்றனர். விஷ்ணுவும் நல்லசமயம் வாய்த்ததென்று மகிழ்ந்து ஐயன்மார்களே! நான் கேட்கும் வரத்தைக் கொடுக்கும் திறம் உங்களிடத்துண்டா என்றனர். எவ்வாறு கேட்பினும் கொடுப்பேம் என்றனர். "என் கைச் சக்கரத்தால் உங்கள் தலை அருந்து நீங்கள் இறக்க" வரம் கொடுங்கள் என்ற விஷ்ணுவைச் சுத்தவீரர்களாகிய அவ்விருவரும் நோக்கி அவ்வாறே கொடுத்தேம் என்றவுடன் சக்கிராயுதத்தை விட்டு அவர்கள் சிரசை அறுத்து அவர்கள் உடம்பின் தோலை உரித்து இரத்த மேதையுடன் நிலத்தின்மேல் விரித்தமைத்தார். இக்காரணத்தால் பூமிக்கு மேதினி என்றும் பெயர் எய்திற்று. தன்னிடத்து உதித்த மதுகயிடபரைக் கொன்ற பழியையும் இரணியன் இரணியாக்ஷன் என்போரைக் கொன்ற பழியையும் போக்கிக் கொள்ளும் பொருட்டு விஷ்ணுவானவர் திருச்செங்கோட்டுக்கு வந்து மரகதமுற்ற செம்பவளத் திருமேனிப் பிரானைப் பூசித்து, தன் பெயரால் மேற்குத் திசையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கிப் பிரதிஷ்டித்து மேற் குறித்த பழிகளெல்லாம் நீங்கிச் சுகமுற்று, இங்ஙனந் திருவருள் பாலித்த நாகேசுரப்பெருமானை விட்டு நீங்குதற்கு மனமின்றி ஆலயத்தின் நிருதி மூலையிலேயே ஆதிகேசவர் என்னும் பெயர்பெற்று விஷ்ணுவானவர் விளங்குகின்றார் என்றனர் சூத முனிவர்.

---

௨

## பிரமன் பூசித்த மான்மியம்.

---

திருநாககிரியில் விஷ்ணு பூசை செய்து தன் துயர் தீர்ந்து மகிழ்ச்சிபொருந்தி வீற்றிருந்த பின்பு வெள்ளிய பிறைக்கோட்டை அணிந்த சடாபாரத்தையுடைய பெருமானைத் தேன்றாளித்தலர்ந்த தாமரைப்பூம் பொகுட்டில் வீற்றிருந்து உலகசிருட்டி செய்யும் நான்முகப் பண்ணவன் பூசித்த மகத்துவத்தைக் கூறுகின்றனர் சூத மாதவர். வெண்ணீறு சண்ணித்த மேனியர்களே! சுத்த வெண்மை நிறம் பொருந்திய திருப்பாற்கடலில் துயில் கொள்ளும் விஷ்ணுவினிடம் அன்னவாகனராகிய பிரமா சென்று சந்தித்தபோது சரா

சராங்களையெல்லாம் படைக்கவல்ல கடவுளாகிய என்னை வணங்கிக் கேட்கும் வரத்தைக் கொடுக்கின்றேன் கேள் என்ற பிரமதேவரை நோக்கிப் புன்முறுவல் கொண்ட நாராயணமூர்த்தி அடே வேதியா! நீ என் உந்திக் கமலத்துதித்து வந்தவன் என்றதை மறந்துவிட்டனையே! அற்பர்களுக்கு ஐசுவரியம் அதிகாரம் வந்தால் தன் நிலைமையைச் சற்றும் நினையார்கள் என்பதற்கு நீயே முதற்காக்ஷியாயினை என்று சொல்ல இருவர்க்கும் வாதம் நேர்ந்து, பலகாலம் ஓய்வின்றி அமர் பெருகியது. இதனை நோக்கிய தேவர்கள் கலக்கமுற்றவர்களாய் இது எக்காலம் நீங்குமோ என ஏக்கங் கொண்டு பரமேசுவரத் தியானஞ் செய்திருந்தார்கள். மால் அயனாகிய அவ்விருவருமோ நாழிகைக்கு நாழிகை செருக்குமேலிட்டுத் தங்களுக்கு மேலொரு கடவுளில்லை என்னும் தீர்மானங்கொண்டவர்களாய் மதோன்மத்தங் கொண்டு பெரும்போர் செய்திருந்தார்கள். திடுக்கென்ன இவ்விருவர்களிடையே அக்கினிப் பிழம்பு தோன்றிற்று. அவ்வாறு தோன்றிய சோதிவடிவாகிய அக்கினி ஸ்தம்பம் கீழும் மேலும் காணமுடியாதவகையாய் அந்தரத்திலும் பாதாளத்திலும் ஊடுருவிநின்றது. இதனைக் கண்டு திகைத்த வேதனுமரியும் தங்கள் அறிவிற்கேற்றவாறு ஓர் தீர்மானஞ் செய்துகொண்டார்கள். அடியை மாலும், முடியை அயனும் கண்டு வருவதாகவும் தெரிந்து முன் வருபவரே பெரியர் என முடித்தார்கள். உடனே விஷ்ணு வெள்ளைப் பன்றி உருவமெடுத்து நிலத்தை முகத்தால் தோண்டிக் கொண்டு செல்ல, வேதியன் அன்னப்பக்ஷியாய் முடியைக்கண்டு வருகிறேன் என்று பறந்து ஆகாயத்திற் சென்றார். பாதத்தைக் காணப் பன்றியாய்ச் சென்ற மாயவன் அநேக காலம் வரையிலே தனது பிறைபோன்று வளைந்து வெண்மையாய்க் கூரிய கொம்புகளாலும் வலிந்துயர்ந்து அகன்ற மூக்காலும் பூமியைக் கிண்டிக் கிண்டி மழுங்கி இரத்தம் பெருக்கெடுத்து வடியத் தேகம் மெலிந்து அயர்ந்து திகைத்து நின்றார். அச்சமயத்தில் சிவந்த தங்க நிறம்போன்று மகரந்தங்கள் பொருந்தி மடல்களையுடைய ஒரு தாழம்பூ மேலே இருந்து இறங்கி வருவதைக் கண்டு ஓ கேதகையே! எங்கிருந்து வருகின்றனை? என்று அன்னம் வினவ, பரமேசுவரருடைய ஜடாமகுடத்திலிருந்து வருகின்றேன் என்றது. இன்னும் முடி எவ்வளவு தூரம் இருக்கும் என்று அன்னம் வினவ, யாதுபற்றிக் கேட்கின்றனை? எனத் தாழம்பூ கூறிற்று. முடியைப் பார்த்துவரச் செல்கின்றேன் எனக் கூறும் அன்னத்தைநோக்கித் தாழம்பூச் சொல்கின்

றது. நீ முடியைக் காணமுடியாது. இவ்விடத்திலேயே நீ களைத்து விட்டாய் இன்னும் எத்தனையோ கோடிமடங்கு தூரமிருக்கின்றது என்ற வார்த்தையை சொன்னவுடனே அன்னம் திடுக்கிட்டு ஆனால் எனக்கு ஒரு சகாயம் செய்யவேண்டும். அஃதாவது, நானே முடியைக் கண்டு வருகின்றேன் என்று விஷ்ணுவிடம் சபதஞ் செய்து வந்துவிட்டேன். முடியவில்லை என்றாலோ எதிரியுஞ் சிரிப்பான் ஏனையோர்களும் அவமதிப்பார்கள். ஆதலால் முடியை இந்த அன்னம் வந்து கண்டது. சாட்சிக்காக நான் வந்தேன் என்று மாத்திரம் தயவு செய்து சொல்லவேண்டும் என்று ஒருவருடைய உயிரைக் கொடு என்று கேட்பவர்களைப் பார்க்கினும் அதிக கீழ்ப்படிதலும் இரக்கமுமாகக் கேட்டது. இந்த வார்த்தையைக் கேட்டவுடன் சிவ! சிவ!! என்று திகைத்து என் நண்பா, உலகத்தில் எல்லா நற்காரியங்களையும் முடித்துக் கொடுப்பது மெய் எல்லா ஈனங்களையும் கொடுத்துத் தவ தானங்களை யெல்லாம் அவமாக்கிப் பிறர் நிந்திக்க, ஏதுவாக இருப்பது பொய் என்பர் பெரியோர் அப்படிப் பட்ட பொய்யைச் சொல்லுமாறு என்னைக் கேட்பது சரியன்று என்றது தாழம்பூ. வேதாவாகிய அன்னம் சொல்கின்றது. சொல்வது சரிதான். ஆனால் ஆபத்துக்காலத்தில் பிறர்க்கு இம்சை நேராததா இருந்தால் பொய் சொல்லலாம் என்று நீதி சாஸ்திரங்கள் கூறுகிறபடியால் ஓ தாழம்பூவே! என்மீது தயைபுரிந்து விஷ்ணுவின் முன் ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமென்று பின்னரும் கேட்டுக்கொள்ளவே தாழம்பூச் சம்மதிக்க, அன்னமும் பூவும் விரைவாக வராகமாவிடம் வந்து ஓ விஷ்ணுவே! நீ இன்னும் பாதத்தைக் காணாமல் மயங்கி நிற்கின்றாய் நானோ அதிவேகமாகச் சென்று இதன் முடியைக் கண்டு வந்தேன். நான் பார்த்ததற்கும் அங்கிருந்து ஒரு சாட்சியும் அழைத்து வந்திருக்கின்றேன் என்று கூறி, நானே வெற்றியடைந்தேன் மாதவா நீ அபஜயப்பட்டாய் என்று பிரமா மிகு களிப்புக்காட்டிக் கூறினர்.

பலநாள் வருந்தித் தேடியும் பரஞ்சோதியினடி என்னாற் காண முடியவில்லை என்று மிகுந்த தாழ்மையுடன் மாயவன் இயம்ப, இவ்விருவர் பொய் மெய்களையும் ஆய்ந்துணர்ந்த பரமேசுவரர் இவர்கள் முன் தோன்றி, ஓ வேதியனே! நீ அகந்தை கொண்டாடுமல்லாது சற்றேனும் அச்சமின்றி முடியைக் கண்டேன் என்று முழுப்பொய் சொன்னாயன்றோ! பொய் எல்லாவற்றுள்ளும் தீயதானதால் அத் தீய பொய்யைப் பேசிய நாவுள்ள தலையை கொய்து விடுகின்றேம் என்று ஒரு தலையைக் கிள்ளிய தோடமையாது உனக்கு உலகத்திலே



பிரமன் பூசித்தல்.

ஆலயமில்லாது போகுக எனக் கட்டளையிட்டு விஷ்ணுவை நோக்கி நீ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுத் தோல்வி வரினும் மெய்ம்மையே கூற வேண்டும் எனவும், பொய்யை மெய் என்றுவது மெய்யைப் பொய் என்றுவது சபையார் ஒப்பினும் ஈசுரன் உண்மையை அறிந்திருக்கின்றார் என்ற ஞானவுணர்ச்சி பொருந்தி மெய்ம்மை பேசினமையால், எமது அன்பர்கள் உன்னை வணங்கவும் பெறுவாய், உனக்கு ஆலயமும் பெருகுக எனக் கிருபை பாலிக்கருளினர். நானே பெரியவன் என்னும் அகந்தைக்குச் சிரம்போயிற்று. பொய் பேசியதற்கு ஆலயம் போயிற்று இதனிடையே பரமேசுரருடைய கோபத்துக்குப் பாத்திரனாய் விட்டேனே என் செய்வேன் சிருஷ்டித் தொழிலும் போய்விடுமோ எனத் தியங்கி இனி அரை க்ஷணமும் வெறிதே இருத்தல் கூடாது. சிருஷ்டித்தல் காத்தல் சங்கரித்தல் என்னும் முத்தொழிற்கும் மூலகாரணர் பரமசிவமேயாம் என உணர்வு கொண்டு திருவருணை முதலிய திவ்வியஸ்தலங்களில் அர்ச்சித்துப் பூசித்தும் தன் உள்ளக் குறை தீராது ஆலோசிக்கின்றார். ஆதிகாலத்தில் பெண்பாலரைச் சிருஷ்டிக்க முடியாத பொழுது கடாக்ஷித்து எதிர்தோன்றி ஆண்பெண் என்னும் இருபாலாரையும் பிறப்பிக்கும் வரங் கொடுத்தவர் ஸ்ரீ அர்த்தநாரீசுவரக் கடவுளாதலால் மஹத்தான மூர்த்தங்கொண்டு விளங்கும் திருச்செங்கோட்டை அடைந்து மனக்குறையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார் பிரமதேவர் என்ற சூதரை வணங்கி சுவாமி! பெண்பாலாரைச் சிருஷ்டிக்க இயலாதிருந்த காலம் எப்பொழுது என முனிவர்கள் வினவினர்கள். சூதர் கூறுவாராயினர்.

"உத்தம பத்திவாய்ந்த முனிபுங்கவர்களே! கேளுங்கள் பூருவம் சிருஷ்டித்தொழில் சித்தி பெறுதல் வேண்டிப் பிரமதேவர் புருவமத்தியஸ்தானத்திடமாகச் சிவபரஞ்சுடரினுடைய சீபாதங்களைத் தியானித்து நெடுங்காலந் தவஞ் செய்து கொண்டிருக்கையில் சிவபெருமான் உருத்திரகாயத்திரியுடன் குமாரரூபங்கொண்டு வந்து காட்சி கொடுத்தருள நோக்கி, உருத்திர காயத்திரி என்னும் மந்திரத்தினுல் முதற் கடவுளாம் என உணர்ந்து கைகூப்பித் தொழுது சிறியேன் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டருளும் தற்புருடன் பொருட்டாக யாம் மிகவும் தியானிக்கின்றேம் எமக்கு உருத்திர மூர்த்தி அனுக்கிரகஞ் செய்க என்னும் வலியமைந்த காயத்திரி மந்திரத்தை முறையுறக் கணித்துப் போற்றியதனல் கங்காதரமூர்த்தி திருவருள் சுரந்து சிருஷ்டிக்கும் திறம் கொடுத்தருளி மீண்டுபோதலும், பிரமதேவர் பூரணபத்தியோடு அந்தப்புருடனை நினைந்து உலகத்தை உண்டாக்கும்

போது எல்லாம் ஆணுகவே தோன்றவே, பெண்ணையும் படைக்க முயன்றும் முடியாமல் தனது புத்தியால் தேர்ந்து தெளிந்து, தற்புருடன் பொருட்டு என்பதை நீக்கி ஆயிரங்கண்களையுடைய புருடனது பெருங்கருணையை தியானிக்கின்றேம் எமக்கு உருத்திரமூர்த்தி அநுக்கிரகஞ் செய்க என்னும் வேறு காயத்திரி மந்திரத்தை உணர்ச்சியால் உலகத்தை உண்டாக்கும் திறம் வாய்க்குமாறு கணித்து அருந்தவம் செய்யும்போது பார்வதிபாகம் (ஸ்ரீ அர்த்தநாரீசுவரமூர்த்தம்) ஆகப் பிரமனுக்குத் தரிசனந் கொடுத்தருளி, வேதியனே! நீ இந்த மந்திரத்தைக் கணித்ததினல் அபிப்பிராயம் தெரியலாஞேம். இனி மேல் ஆணும் பெண்ணும் படைப்பாய் என்று படைக்குந் திறமருளி அந்தர்த்தானமாயினர்." ஆதலால் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளியிருக்குந் தலமே தன் மனக்குறையைத் தீர்த்தருளும் என்று தேறி தக்ஷிணகைலாயம் என்னும் திருநாககிரியை அணுகி உமையொருபாகரைப் போற்றி செய்து விஷ்ணுதீர்த்தத்துக்கு ஈசானத்தில் பிரமதண்டத்தால் ஒரு தீர்த்தங் கண்டு அதற்குத் தன் பெயரை அமைத்து வேதாகம மந்திரங்களை ஆவாகித்து நாள்தோறும் மூழ்கி உமையொருபாகரை வணங்கிப் பூசித்து வந்தார். அப்பூசாபலனை அடைந்த நன்மைகள் பல. தெய்வப் பெண்ணுகிய திலோத்மை மீது காதல் கொண்டு மயங்கித் திரிந்த பித்தத்தைத் தவிர்த்தார். ஆறுமுகப் பெருமான் குட்டிச் சிறையிலிட்ட மனக்கிலேசம் நீங்கினர். பிரணவப் பொருள் தெரியாது திகைத்து நின்ற அஞ்ஞானம் நீங்கி மெஞ்ஞான போதத்தையும் பெற்று வாழ்ந்தார். பிரமகற்பாந்த காலங்களினும் அழிந்து போகாத தானமென்றறிந்த விஷ்ணு முதலிய தேவர்களும் சித்தர் முதலாயினேரும் உறையுளாக நினைந்து வசிக்கின்ற இடம் (திருச்செங்கோடு) நாகாசலம் எனத் தேர்ந்து அவ்விடமே பெருந்தவஞ் செய்ய வாய்ந்தது என்னும் விவேகத்தையும் பெற்றூர், தன்னை உந்தியத் தாமரையிலீன்றவர் கேசவர் என்றறிந்து அவரையும் கணபதியையும் சுப்பிரமணியரையும் அம்மையாரையும் திரிகாலங்களினும் கண்டு வணங்கி, சுவர்க்க மத்திய பாதாளம் என்னும் மூன்றுலகங்களுக்குஞ் சென்று மீளுதற்குப் போந்த பிலத்துவாரங்கள் இருக்கின்றன என்றும், இறந்தவர்கள் உயிர் பெற வேண்டில் அதற்கு மருந்திருக்கின்றது என்றும், கைலாயகிரியிலிருக்கும் அதிசயங்களினும் மேலாகிய பல வியப்புகள் இருக்கின்றன என்றும், மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மும்மை விசேஷங்களில் இதுவே சிறந்ததென்று சதாசிவமூர்த்தியின் அநுக்கிரகத்தால்

சேர்ந்திருக்கின்றன என்றும், தான் பெற்ற சகல பாக்கியங்களும் இக்கிரியில் செய்த தவப்பயனேயாமென்றும் உணர்ந்து சத்திய லோகத்தைக் கைவிட்டாலும் திரு நாககிரியைக் கைவிடுவதில்லை என்னும் நம்பிக்கை கொண்டனராக பிரமதேவர் நொடிப்பொழுதும் நீங்காது திருநாககிரியில் வீற்றிருக்கின்றார். பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நாற்குலத்தவருள்ளும் எவராயினும் திருச் செங்கோட்டுக்கு வந்து அன்புடனே கிரிப்பிரதக்ஷணஞ் செய்து இந்தப் பிரமதேவர் பூசித்த மான்மியத்தைப் பாராயணஞ் செய்தவர்கள் இஷ்டகாமியார்த்தத்தைப் பெறுவார்கள். ஹர ஹர மஹாதேவா என்னும் சப்தமிட்டு நாகாசலமான்மியத்தை வைத்துப் பூசித்தவர்கள் உத்தமபிராமண பூசை செய்த பலனை அடைவார்கள். கற்றவர் கேட்பவர் கேட்பிப்பவர்களும் நல்ல இன்பவாழ்வை அடைவார்கள் என்றார் சூதமுனிவர்.

---

உ

## துர்க்கை பூசித்த மான்மியம்.

---

சுழல் பூச்சிப்போலச் சுழன்று சுழன்று மாய்ந்து உற்பவிக்கும் பிறவி என்னும் கடலைக் கடக்கும் தோணியாகிய பஞ்சாக்ஷரத்தை நீங்காது உச்சரித்துப் புனிதர்களாக விளங்கும் சைவபுங்கவர்களாகிய முனிவர் குழாங்களே! தவறுது வேதமோதுகின்ற பிரமதேவர் திருநாககிரியில் அமர்ந்து தாமரை மலர்ந்த பிரமதீர்த்தத்தைக் கண்டு எம்பெருமானைத் திரேதாயுகத்து அர்ச்சித்த மான்மியத்தைப் புகன்றேம். எட்டுப் புயங்கள் பெற்றுச் செம்பொற்பட்டாடை அணிந்து நினைத்த காரியங்களை முடிக்கும் வரமுதவுகின்ற துர்க்காதேவி பூசித்த முறையைச் சொல்கின்றேம் என்று சூதமுனிவர் சொல்வாராயினர்.

முன் ஒரு காலத்தில் போராடத் தொடங்கிய மகிடாசுரனைச் சங்கரித்துத் திருவண்ணாமலையில் எழுந்தருளி அழகிய மகிடாசுரன் தலையில் நர்த்தனஞ் செய்த துர்க்காதேவிகையிலிருந்த கூரியவாளைக் கழுவிச் சூரவீரங் கொண்டு அழகிய அருணையின் கண்ணுள்ள சுனைக் கரையில் வசித்திருக்கின்றமையால் சுனைக்கரைத் துர்க்கை என்று பெயர் உண்டாயிற்று. அந்த மகிடாசுரன் உடற்குள் ஒரு சிவலிங்கமிருந்தது. மகிடாசுரனைத் துர்க்கை சங்கரித்தவுடன் அந்தத் துர்க்கை கையையும் வாளையும் அச்சிவலிங்கம் விடாமற் பற்றிக்கொண்டது. அவனைக் கொன்றமையால் நேர்ந்த ஹத்தியும் சாயாரூபமாய்ப் பின்

தொடர்ந்து போர் செய்து வருவது கண்டு வருந்திய துர்க்காதேவி சுனைக்கரையிலே அந்தச் சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசை செய்தனர். அங்ஙனம் நியமத்தோடு பலநாள் பூசை செய்தும் அப்பிரமஹத்தி தீராமையால் காமமுத்தி தருவதாகிய சிதம்பரஞ் சென்று அந்தச் சிவலிங்கத்தை வைத்துப் பூசித்து நடராஜப்பெருமானை உளத்தே தியானித்து ஓ காளகண்டமூர்த்தியே! தில்லை நாயகரே! தேவர்க்கெல்லாந் தேவரே! தெய்வத்தன்மை பொருந்திய சித்ஸபேசரே! முன் ஓர் கால் சிறிதும் பயமின்றித் தேவரீரிடத்து மிகு வலிமையுடையேன் எனச் செருக்கிக் காளியாய் வந்து அறியாமையால் எதிர்த்து உம்மோடு வாது பேசி நர்த்தனஞ் செய்துவிட்டேன். சிற்றறிவும் சிறுதொழிலுமுள்ள அடியாள் எதிர்த்து வாது செய்தது குற்றம். பின்னரும் நான் மனத்தாலும் வாயாலும் தேகத்தாலும் செய்த குற்றங்களெல்லாம் நீக்கியருளல் வேண்டுமையனே என்று நைந்துருகிக் கலங்கி முறையிடத் துர்க்கையின்மீது கருணைகொண்டு திருமால் பதஞ்சலி முதலியோர் துதிக்குந் தாண்டவராயப்பிரான் தயைகூர்ந்து துர்க்கையே! அழகிய புஷ்பவனங்களும் கற்பகச் சோலைகளும் கங்கை முதலிய சகல தீர்த்தங்களும் சிறந்து சுவர்ணமயமாக விளங்கும் மலையொன்றிருக்கின்றது. அதற்குத் திருநாககிரி என்று பெயர். அம்மலையின் சிகரத்தில் யாமும் பார்வதி தேவியும் ஏகசரீரமாகிய அர்த்தநாரீசுர மூர்த்தமாக எழுந்தருளியிருக்கின்றோம். அவ்விடத்தில் விஷ்ணுவும் பிரமனும் முருகனும் ஆசைகொண்டு அகலாமல் வசிக்கின்றனர். விஷ்ணுவும் பிரமாவும் அத்தலத்தில் எம்மைப் பூசித்து சகல வலிமையும் பெற்றிருக்கின்றனர், அதுவே தக்ஷிணகைலாசம். அது மகாமேருவின் பொற்சிகரமுமாய், நமது இலிங்காகிருதியாகவும் அழகுவாய்ந்துள்ளது. தேவர்கள் முனிவர் முதலியோரும் சூழ்ந்திருக்கின்றார்கள். நீ அந்த ஸ்தலத்தை அடைந்து நம்மைப் பூசித்தால் உன்னைப் பற்றிய பிரமஹத்தி முதலிய பாவமெல்லாம் தீரும் என்று பஞ்சகிருத்திய நடனமூர்த்தி அனுக்கிரகித்தனர். இவ்வற்புதத் திருவாக்குப் பிறந்தவுடன் என்பிரபுவே அடியாள் உய்ந்தேன்! உய்ந்தேன்! என்று பன்முறை வணங்கி விடை பெற்றுக்கொண்டு மேன்முகந் திரும்பிச் சோழ நாட்டை விடுத்துக் கொங்குநாட்டிற் பிரவேசித்தவுடன் திருநாககிரிச் சிகரந் தோன்றவும் ஆனந்தங்கொண்டு பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்தெழுந்து கண்களில் நீர்வடிய உரோமஞ்சிலிர்ப்பப் பரவசமாய்ப் பன்முறை வணங்கி அந்நாகமலையை நோக்கி வரவே, தன்னைத் தொடர்ந்து



துர்க்கை பூசித்தல்.

சமீபத்து வந்த மகிடாசுரனது பிரமஹத்திச் சாயையானது தூரத்தே அகலக் கண்டு துர்க்காதேவி சந்தோஷப்பட்டுப் பின்னரும் வழிக் கொண்டு சென்று பஞ்சக்குரோசத்தெல்லைக்குட் பிரவேசிக்க தன்னிடத்திருந்த மனமாசு நீங்கிப் புனிதமாதலையுங் கண்டு அதிசயித்து இப் பூமண்டலத்தில் இவ்வியல்பு வாய்ந்த அற்புதத்தலத்தை நான் இதுகாறுங் கண்டதில்லை. பஞ்சக்குரோசவெல்லைக்குட் பிரவேசித்தவுடனே என் மனசு பரிசுத்தப்படுமாறு செய்துவிட்டது. இன்னும் அத்தலத்தை அடைந்து தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து உமையொருபாகரைத் தரிசித்தால் விளையும் நன்மையை எங்ஙனம் கணிக்கக்கூடும் என்று கைகளைக் கட்டிக்கொண்டு அஞ்சலியஸ்தராய் விரைந்து சென்று கிரிப்பிரதக்ஷணஞ் செய்து, கணபதிதீர்த்த முதலிய தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ் செய்து, அம்மையப்பரை ஆகமோக்தப்பிரகாரம் பூசித்து, தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அச்சுனையில் தினமும் ஸ்நானஞ் செய்து, சப்த கன்னியர் முதலியோர் தன்னைச்சூழ கிரிவலம் வந்து நாககிரீசரை அன்புடன் பூசித்து வந்தனர். சகல மாசுகளும் நீங்கிப் பரிசுத்தமுடையவராய்ச் சந்தோஷ சித்தங்கொண்டு அம்மை என்றும், காளி என்றும், அழகிய நாச்சியார் என்றும் பெயர் பெற்று அம்மலைச் சாரலில் நித்திய தரிசனப் பேற்றை விரும்பி வசிப்பவர்களுக்கு ஊழிக்காற்று முதலிய வற்றால் அவமிருத்தியு நேராவண்ணம் காத்துக்கொண்டு அத்தலத்து வசிக்கின்றனர். ஆளி வாகனி, சுரபூஷணி, அமலை, திரிசூலி, செம்பட்டுடையாள், எட்டுப் புயங்களுடைய கன்னிகை, கையிற் கபாலந் தரித்த ஆடல்விநோதி எனத் துதித்துத் துர்க்கை தீர்த்தத்தில் மூழ்கி தேவர்களையும் சிவசுப்பிரமணியரையும் எமது கருணைமூர்த்தியாகிய அர்த்தநாரீசுவரரையும் வணங்கித் துதித்தவர்கள் தங்கள் தங்கள் மனத்திலுள்ள துயரெல்லாம் நீங்கப்பெற்றுப் பரிசுத்தர்களாய்ச் சிவபத்தி மேன்மேலும் பெருகிவளர ஒப்பில்லாத மேற்பதவி பெற்றுக் கடைத்தேறுவார்கள் என்று சூதமுனிவர் அன்போடு மொழிந்தருளினர்.

---

உ

## ஆதிசேடன் பூசித்த மான்மியம்.

விஷயசுகங்களை விஷமென நினைக்கும் தவசிரேஷ்டர்களே! மூன்று யுகங்களினும் விஷ்ணு, பிரமா, துர்க்கை பூசித்த மான்மியத்தைச் சொன்னேம். இனிக் கலியுகத்தில் ஆதிசேடன் பூசித்த முறைமையையும் கூறுகின்றேம். கேளுங்கள்.

அக்காலத்தில் மேருகிரி வில்லாகவும், ஆதிசேடன் வில்லிற் பூட்டு நாணியாகவும் ஏற்றுத் திரிபுரங்களைச் சங்கரித்த பின்னர் ஓர் நாள் கைலாசகிரியில் மேன்மை பொருந்திய சிவகணங்களும் தேவர் களும் வணங்க வீற்றிருந்தருளும் உமாபதியை வணங்கி சுவாமி! இக்கைலாசகிரியைப்போலப் புண்ணியந்தரவல்ல தலம் பூமண்டலத் தில் எவ்விடத்தேனும் இருக்கின்றதா? இருக்குமேல் அருள்புரிதல் வேண்டுமெனப் பன்முறை வணங்கி ஆதிசேடன் இரந்து கேட்டனன். பரமேசுவரர் புன்முறுவல்கொண்டு நன்று வினவினை ஓ ஆதிசேஷா! உத்தமகுணம் வாய்ந்தவர்களே மூர்த்தி தலம் தீர்த்த மகிமைகளை விசாரிப்பார்கள் 'ஆன்மாக்கள் கடைத்தேரும் வண்ணமாகவே திரு வுருவங்கள் கொண்டு ஆங்காங்குவிளங்கி வீற்றிருக்கின்றேம். எங்கும் வியாபகமாகிய கடவுளை ஓரிடத்திற் குறித்துத் தொழ வேண்டுமோ? இவ்விடத்தில்லையோ? நம் உயிரில் இல்லையோ? எனவாய் ஞானம் பேசுவர். அவ்வாறு உயிரின் கண் வீற்றிருப்பது உண்மையேயாம். ஆயினும் உயிரில் இவ்வாறு எழுந்தருளி யிருப்பாரா என்பதைச் சிவ ஞானச் செல்வர் உணர்வர். அங்ஙனம் உணர்ந்த சிவஞானிகளும் புறத்தே மூர்த்தி முதலிய வடிவில்லை என்றெண்ணார்; யாதினு லெனில், அவர்க்குச் சர்வவியாபகமுண்டென்கையால், ஆதலால் காய்ந்த கட்டையில் எல்லாப் பாகங்களிலும் அக்கினி வியாபித்திருக் கின்றது. அது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. தொட்டாற் சுடுவது மில்லை. சாத்திரங்களாலும் கடைந்து கண்ட அநுபவசாலிகளின் வாக்காலும் கட்டையில் எல்லாப் பாகத்திலும் அக்கினி இருக்கின்ற தென அறியக்கூடும். கட்டையைக் கடைந்தால் புகையோடு உரோஞ் சிய இடத்தில் நெருப்பு வெளிப்படுவதைப் பிரத்தியக்ஷத்திற் காண லாம். அன்றியும் ஒரு பசுவின் தேகமெல்லாம் பால் வியாபித்திருக் கின்றது. அப்பாலைப் பெறவேண்டுவது அதன் மடிப்பிரதேசத் தமைந்த முலைக்காம்பின் வாயிலாகவேயாம், எல்லாவிடத்தும் வியா பித்துத்தான் இருக்கின்றதே என்று மற்றொரு அங்கத்தில் எடுக்க முயற்சிப்பின் பாலைக் காண்டல் சாத்தியப்படாது. ஆதலினால் பல விடங்களில் ஓடும் மனசை ஒரு நிலையில் நிறுத்தி ஈசுரநாமோச்சார ணங்களாற் கடைந்து தேற்றி, சைவாகம பத்திவழிபாடாகிய அன்புக்கன்றைச் செலுத்தி, எமது திருவருள் தங்கிய மூர்த்தி தல தீர்த்தபலன் என்னும் பாலைக் கைக்கொள்ளல் வேண்டும். ஆதலால் நற்பதவி விரும்புவோர் மூர்த்திதல தீர்த்தவழிபாடு செய்யும் நிமித்தம் பத்தியோடு விசாரணை செய்வர். அப்படிப்பட்ட ஞானமுற்றவன்

ஆதலால் ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷா! விறைவினை சந்தோஷம்! சந்தோஷம்!! கூறுகின்றேம். அன்புடன் கேட்பாயாக. எம்மைப் பூசிக்கும் பூசை நித்தியம் நைமித்தியம் காமியம் என மூவகைப்படும் எல்லா உலகங்களினும் நித்தியபூசை ஒன்றே செய்யப்படுவது. வடக்கே இமயமலைக்கு கிழக்கும் தெற்கும் மேற்கும் சமுத்திரஞ் சூழ்ந்த எல்லைக்குள் அடைந்த பரதகண்ட மெனப்படும் புண்ணிய பூமி ஒன்றே நைமித்திய காமிய பூசைக்குரிய தானம். இந்தப் பரதகண் டத்திலும் விசேஷமாகிய புண்ணியக்ஷேத்திரங்கள் பல உள்ளன. அவற்றுள்ளும் நூற்றெட்டுத் தலங்கள் பெருமை வாய்ந்தன. அவற்றுள்ளும் கணித்துப் பார்க்கும்பொழுது ஒன்றென்றுவது இரண் டென்றுவது இரண்டுமற்றென்றுவது சொல்வதற்கின்றி ஒன்றென் றால் ஒன்றாய், இரண்டென்றால் இரண்டாய், ஒன்றும் இரண்டும் என்பதற்கின்றி ஆணுமன்றிப் பெண்ணுமன்றி ஆணும் பெண்ணு மன்று என்பதற்கின்றி ஆணென்றால் ஆணைப் பெண் என்றால் பெண் ணைப் அல்லவென்பதற் கின்றி இரண்டு மொன்றாய்ப் பிரிப்பதற்கின்றி இடைகலை பிங்கலை என்னும் இரண்டும் கூடிய சுழுமுனைபோன்ற செயலாய்த் தேவர்களும் முனிவர்களும் வேதோபநிஷதங்களும் ஆய்ந்தோய்ந்து சீவாத்தும ஒடுக்கம் போலக் கண்டு தெளிய நின்ற பரமஞானனந்த சோதிவடிவமாகிய அர்த்தநாரீசுவர மூர்த்தம் கொ ண்டு யாம் எழுந்தருளியிருக்கும் நாகாசலக்ஷேத்திரமே அதிவிசேஷ முடைத்து. மகத்துவம் வாய்ந்த அக்கிரியானது மேருவின் கொடு முடியை வாயுதேவன் பெயர்த்துவந்த நாள் முதல் நின்வடிவாகிய பாம்பு போன்றிருக்கும். அம்மலையையே யோகிகள் பாம்புவடிவமாகிய குண்டலினி சத்தி என்பர். அதன்மேல் விளங்கும் மனேன்மணியாகிய உமாதேவியார் செய்த தவம் பலிதமான இடம். அதனைக்கண்டால் பந்தபாசம் அகலும் கைலைமலையினும் இம்மலையில் அதிகபிரீதியோடு அகலாமல் யாம் வசிக்கின்றமையால் மால் அயன் முதலிய தேவரெல் லாம் திருமணக்கோலமாக எம்மைத் தரிசித்துக் கொண்டிருப்பார்கள். காத்தற்கடவுளாகிய விஷ்ணுவும் வந்து பூசித்து வணங்கிப் பிரியாமல் இருப்பதனல் வைகுண்டம் என்றும், உருத்திரகணங்கள் நம்மை ஆடிப் பாடிப் பூசித்து வாழ்வதனல் உருத்திரபுவன மென்றும், பிரமதேவர் அகலாமல் அர்ச்சித்து வீற்றிருப்பதனல் கோகனகபர்வதமென்றும், தேவேந்திராதியர் இருப்பதால் தேவலோகமென்றும் விளங்க அந் நகரம் துர்க்காதேவி காவல்பூண்டு விளங்குகின்றது. ஆங்குச்சென்று வணங்கினல் உன் இஷ்ட சித்தி கைகூடும் எனத் திருவாய்மலர்ந்தருளி

னர். உடனே நாகராஜனும் எம்பெருமானைப் பன்முறை வணங்கி தென்றிசை நோக்கிப் புறப்பட்டு வழியிலுள்ள பல தீர்த்தங்களினும் படிந்து பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு எப்பொழுது நாகாசல தரிசனம் கிடைக்கும் கிடைக்குமெனக் கொண்ட ஏக்கம் முன் நின் றிழுக்க திருச்செங்கோடு எனப் பெயரிய நாகாசலத்தைக் கண்டு வணங்கி கிரிவலம் வந்து தெய்வத்தன்மை பொருந்திய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து நியதி முடித்து குமாரக் கடவுள் முதலிய தேவர் களை முறையுற வணங்கி அற்புத ஞானானந்த ஜோதிவடிவராகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரரைத் தரிசித்து மலைற்கண் ஊற்றுபோலச் சுரந்தொ ழுகும் கண்ணீர், அருவிபோல வடிய, தேகம் சிலிர்ப்ப, உடல்நடுங்க, மொழி குழற, என் தாயும் தகப்பனும் நீ, குருவும் நீ; தெய்வமும் நீ; எல்லாம் நீயே; நீயே கதி என்று பலவாறு புகழ்ந்துபாடிக் கூத்தாடி நாகரத்தினத்தால் விளக்கேற்றி தேவாமிர்த நிவேதனம் புரிந்து யோகஞானபோதமுற்று போற்றி மந்திரபுஷ்பாஞ்சலி செய்து தேவர் களுக்கெல்லாம் தேவனாகிய கடவுளே சத்திசிவரூபமாகிய திருமணக் கோலத்தை ஆனந்தமுறக்கண்டு ஆனந்தப் பேறு பெற்றேன். ஆனால் இன்னும் ஒரு ஆவல் இருக்கின்றது. அஃதாவது தாண்டவதரிசனங் காணவேண்டும் என்பதே என்றனன். வேண்டவே வேண்டிய வேண் டியாங்குதவும் வள்ளலாராகிய எமது இறைவர் ஊர்த்துவதாண்டவம் காட்டியருளி ஆதிசேஷா! தில்லைக்கண்ணுள்ள பொன்னம்பலத்தில் தாண்டவமாடுகின்றோம்; அங்கு உற்று நமது திருநடனக் காட்சியைத் தரிசித்துக் கொண்டு மீட்டும் இவ்விடம் வந்து எம்மைப் பூசித்துக் கொண்டிரு எனக் கட்டளையிட்டனர். இப்படியே சிதம்பரஞ் சென்று திருநடனக் காட்சியுங் கண்டு சேவித்து நல்வரங்களும் பெற்று பிரமாதியரைப் போலவே அதிக வலிமைப் பெற்று மேரு வைச் சுமந்து இளைப்பில்லா திருக்குமாறு அளவில்லாப் புஜபல பராக் கிரமமும், மேன்மையுமுடைய சகலகலைஞானமும், காரணார்த்தமாகிய பரப்பிரம்ம சிவப்பொருளை அறியும் நிலைமையுமாமெல்லாம் ஸ்ரீ அர்த்த நாரீசுவரர் அநுக்கிரகத்தால் பெற்றான். பகைத்த தாருகாசுரனை ஜயித்த வேலாயுதபாணியாகிய ஷண்முகப்பெருமான் பாதாரவிந்தங் களையும் பணிந்து போற்றி சிறப்புடைய நான்காவது யுகத்தில் தனது பெயரால் ஒரு தீர்த்தத்தையுங் தாபித்து, நித்தியமும் ஸ்நானஞ் செய்து உமையொருபாகரை அர்ச்சித்துக் களிகூர்ந்து தினமும் தில்லை சென்று நடனமும், நாகாசலத்தில் உமையொருபாகர் தரிசனமுஞ் செய்து கொண்டு, நித்தியானந்தப் பெருவாழ்வு பொருந்தி நாகதீர்த் தக்கரையில் தவஞ்செய்து கொண்டிருக்கின்றான் நாகராஜன்.



ஆதிசேஷன் பூசித்தல்.

ஒப்பற்ற தவவலிமையுள்ள ஞானிகளே, மகாமந்திரம், வேதாகமங்கள், வேதியர், முனிவர், குருக்கள்மார், தாய்தந்தையர் முதலிய பெரியோர்களைச் சற்று மெண்ணாது நிந்திப்பதும், கர்ப்பஸ்திரீகளைக் கொல்வதும், குருபத்தினியைப் பரிசிப்பதுமாகிய மகா பாதகங்களெல்லாம் திருச்செங்கோட்டில் எழுந்தருளிய உமையொருபாகரைத் தரிசித்தமாத்திரத்தில் சூரியன்முன் பனி நீங்குவது போன்றும், பாம்பின் உடம்பிற் சட்டையுரிவது போன்றும், பெருமழையிற் பூளைப்பூக்கள் சிதறுவது போன்றும் அக்கினியிலிட்ட பஞ்சுபோன்றும் மாய்ந்து நல்ல தவப்பயன் கைகூடும் என்றும், அடியார் பத்தி சிவபத்தி எய்தி இகத்தில் நல்வாழ்வு பெற்று முடிவில் முத்தியின்பத்தை அடையலாம் என்றும் பதினெண்புராணங்களும் கூறுகின்றன. இது நிச்சயம் என்று சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர்.

---

௨

# உபமந்யு பேறுபெற்ற மான்மியம்.

---

மலமாசற்ற மாமுனிவர்களே! இருமையிலும் பெருநன்மையளிப்பவர் உமையொருபாகரென வேதாகமங்களாற்றெளிந்து பூசித்துப் பேறுபெற்ற உபமந்யுமுனிவர் சரித்திரத்தைக் கூறுகின்றேனுங் கேட்டானந்திப்பீர்களாக வெனச் சூதமாதவர் கூறுகின்றனர்.

உலகத்திலே பற்பல பிரகாரமாகச் செய்யுந் தவங்கள் புவனபோகங்களைக் கொடுக்க வியன்றனவாகும்; சிவார்ச்சனையோ புவனபோகங்களோடு பரபோகத்தையும் கொடுக்கவல்லது. இச்சிவார்ச்சனைக்கு முக்கியமான புஷ்பங்களைக் காலையில் எடுக்கலாமென்றாலோ வண்டுகளால் அப்பூக்கள் எச்சிலாய்விடுகின்றன. மாலையிலெடுத்தால் அரும்புகளாய் இருக்கின்றன. இவைகள் சிவபூஜைக்கு அருகமாவதில்லை. இரவில் எடுக்கலாமென்றால் வழி தெரிவதில்லை. புஷ்பந் தெரியவில்லை. மரமேறுதற்குப் பனி ஈரமானதால் கைகால்கள் வழுக்கின்றன. ஆதலின் புலிக்கண்ணும் புலிக்காலும் இருக்குமேல் இரவில் மரமேறவும் மலர் பார்த்து எடுக்கவும் சுலபமாக இருக்குமென்று தவங்கிடந்து சிவபிரானால் அவ்வாறு வரம்பெற்றுச் சிவார்ச்சனையை மகிழ்வுடன் செய்தின்புற்று வாழும் வியாக்கிரபாத முனிவரிடம் அவர் பிதாவாகிய மத்தியந்தின முனிவர் அருள் கூர்ந்து வந்து, பிள்ளையின் வாய்மை தவமுதலியவைகளை நோக்கி மகிழ்ந்து அருமருந்தன்ன

புதல்வா! நஞ்சந்தகி விருத்தியாகும் வண்ணம் விவாகஞ் செய்து கொள்வாயாக என்றனர். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்றிருப்பதால் ஒருவாறு தேறி ஒப்புக்கொண்டனர். விசிட்டமுற்ற வசிஷ்டமுனிவரது அருமைத் தங்கையை விதிப்படி மணவினை முடித்தார்கள். விற்பனமிகுந்த கற்பின மனைவியாருடன் கூடிப் புலிக்கான் முனிவர் இல்லற நடாத்தி வருங்காலத்திற் சிவகடாக்ஷத்தால் பத்தினியார் திருவயிற்றில் ஓர் புத்திரன் பிறந்தான். இப்புத்திரனை உபமந்யு எனப்பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். வடிவினருமையைக் கண்ணுற்ற அருந்ததி ஆவனுடன் தம்மிடத்துக்கு எடுத்துப் போய்த் தம் மகவுடன் பாலூட்டி வளர்த்த உபமந்யு தாயாரிடம் திரும்பிவந்து சேர்ந்தார். பசியுற்ற மதலை தாயார் முகத்தை நோக்கி அம்மா! நிறையாத என் வயிறு நிரம்புமாறு நானருந்தப் பசுவின் பால் கொடுக்க வேண்டும் என்று தாயார் முகத்தைப் பார்த்து அழுதனர். அழுத குழந்தையை மார்புறத் தழுவி உச்சிமோந்து முத்தமிட்டு அழுங் குழவிக்குப் பசும்பால் கொடுக்க வகையில்லாளாய் ஆ! ஆ!! தெய்வமே!!! உலகத்திலே குழந்தையைப் பெற்றவர்கள் மகவு பசிகொண்ட நேரம் தெரிந்து முன்னரே பாலூட்டிப் பாராட்டுவார்கள். பொன் வள்ளத்திற் பாலுஞ் சீனியுஞ் சேர்த்துப் பிசைந்து பவளவாயைப் பிதுக்கிப் பாலன்னத்தை ஊட்ட, அதனை அக்குழந்தை துப்ப ஆ அதோ "காக்காச்சி" "ஊமன்டி" என்று பராக்குச் செய்து ஊட்டிப் பாலன்னத்தை உட்கொள்ளச் செய்வார்கள். உண்ணமாட்டேன் என்று தவழ்ந்தோட, தளர் நடை கொண்டோடும் மகவின் பின் சென்றெடுத்தூட்டுவார்கள். இளவாழைத் தண்டுபோலக் குளிர்ந்து மென்மைகொண்ட இருதுடை யிடையே குழந்தையின் இருகாலையும் ஆடவிடாது மெதுவாக இடுக்கி, கைகளால் தள்ளிவிடாது தலைக்கு அணையாய்க் கழுத்துறப் பின்னுகைத் தம் கையை மடக்கி ஏந்திச் சிறு பூங்கையைப் பிடித்துப் பாலூட்டி எடுத்துக் குலுக்கி பாலூட்டியதற்காக வருந்தியழும் அழுகையை வேடிக்கை காட்டி அடக்குவார்கள். அன்றியும் ஒரு பிள்ளை சாதம் கேட்க, மற்றொரு குழந்தை சர்க்கரை வினவ, வேறொரு மகவு பழம் கேட்க, பக்கத்திருந்த சிசு பால் கேட்க, அத்தனை குழந்தைகளும் வேண்டியவாறு கொடுத்து விளையாடச் செய்வார்களே! இம்மட்டோ! உண்பன உடுப்பன சூடுவன விளையாடுவன முதலியவற்றுள் எதை எதைக் கேட்பினும் அதை அதைக் கொடுத்தன்றோ ஒவ்வொரு மதலைகளையும் மகிழ்ச்சி யூட்டி வளர்க்கின்றார்கள். நமக்கு ஒரு குழந்தையே! பாலன் கேட்டமுவதும்

பசும்பால்தானே! இதுகொடுக்க வகை யில்லாதிருப்பது இலம்பாடன்றே. அவ் இலம்பாடென்னும் தரித்திரமானது ஒளி பொருந்திய அழகைக் கெடுத்துச் சரீரத்தை உலர்த்தும். மிகுந்த சோம்பலைக் கொடுக்கும், கோபத்தைவிளைக்கும், காதலன் காதலிகளுக்கிடையிருந்து கலகமூட்டும், பொய்யை அழைக்கும், பேராசையை இழுக்கும், அவமானத்தைக் கொடுக்கும், இதுவுமன்றி, மகிழ்ச்சிக் கடலுக்கு வடவை, எண்ணத்துக்கு இருப்பிடம், துக்கத்துக்குச் சொந்தவீடு, ஒழுக்கவனத்துக்கு ஒழியா நெருப்பு. ஆதலின் வறுமைபோலக் கொடியது எது என்று ஆலோசிக்கில் வறுமையேயாதலால், இவ்வுலக வாழ்வை விரும்பினவர்கள் தரித்திரமின்றி யிருக்க வேண்டுமென்று உள்ளத்தில் சிந்தித்து இரு கண்களினும் மலைற்கேணி ஊற்றுப் போல நீர் பெருகி மலையருவி விழுவதுபோல நீரை வடித்தும் பெருஞ் சோர்வு கொண்டு தியங்கி நின்றனள்.

எத்தனை நினைந்தும் இளங்குழவிக்குப் பசும்பால் தருதற்கு வழி காணுது வீட்டுட் புகுந்து தீட்டிய நெல்பாவைக் கரைத்துக் குழந்தையைத் தேற்றி இடது கையாற் றலையைப பிடித்துச் சற்றுக் குனிவித்து, மாப்பால் வைத்த வள்ளத்தை வலக்கையிலேந்தி அப்பா! குழந்தாய் இதோ பால் அருந்து என்று புகட்ட நாவைத்த மாத்திரத்திற் றலையை இருபுறமும் இ! இ!! என்றாட்டி இது பாலல்லவென்று விம்மி விம்மிக் குழந்தை அழ ஆரம்பித்தது. ஓயாது அழுங் குழந்தையை மடிமீது வைத்துத் துக்கஞ் சகியாது தாயாரும் தேம்பியழுதனள்.

குழந்தையைத் தழுவி முகத்தைப் பார்த்து என் அருமைக் கண்மணியே! ஐசுவரியவான்களிடத்தே பிறந்து சௌக்கியப்படாமல் ஏழைகளாகிய எங்கள் மதலையாகத் தோன்றி வயிற்றுப் பசிக்கும் பாலில்லாமல் வருந்துகின்றனையே. இதுவும் உன் விதி தானே! பூருவகாலத்தில் சிவலிங்கத்தின் மீது துளிப்பாலேனும் அபிஷேகம் புரிந்திருப்பே மாயின் பாலுக்கு இப்பொழுது வருந்துவோமா? கவலையகற்ற வந்த கற்பகமே! அரிவை ஆடை அணிகலன் போஜனம் தாம்பூலம் பரிமளம் பாட்டு பூவமளி என்னும் அஷ்ட போகங்களை அனுபவிப்பவர்களும், மண்டலாதிபதியும், தேவலோகம் சத்திய லோகம் வைகுண்டலோக முதலிய உலகம் புரத்தலும், முத்தொழிலியற்றலுமாகிய எல்லாம் திங்கள் சூடிய மங்கை பங்கனைப் பாடிப் பரவிப் பூசித்த பயனுலல்லது வேறல்லவே. ஆதலின் இகபரமிரண்டும்

வேண்டி ஈசனைப் பூசியாத ஏழைகளாகிய நாங்கள் இப்பொழுது வருந்தினால் எங்ஙனம் கிடைக்கும். முற்பகல் செய்யினன்றோ பிற்பகல் விளையும் என்று விம்மி விம்மி அழும் தாயார் முகத்தைப் பார்த்துப் பாலர் கூறுவாராயினர்.

என்னை யீன்றெடுத்த தாயே! பூசனை புரிந்தால் வேண்டியவற்றைக் கொடுக்கக்கூடிய சிவன் ஒருவர் இங்கிருப்பாரானால் நான் இப்போது பூசைசெய்து பாக்கியங்களைப் பெறுகின்றேன் என்றார் தாயார் மகனை நோக்கி எங்களுக்குக் கதி கொடுக்கவந்த கற்பகமே, அருளாலேனும், வஞ்சகமாகவேனும், பொருளாசையாலேனும், விளையாட்டாகவேனும் எவனேனும் முக்கணெம்பெருமானை நினைந்து பூசிக்கின்றானோ அவன் தப்பாமல் ஈசுரப் பிரசாதத்தைப் பெறுகின்றானென்பதுண்மை. அச்சிவார்ச்சனைக்கு அவசியமாகிய சாதனங்கள் உண்டு. "பிதிருகிரியையிலும், யாகத்திலும், ஜபத்திலும், ஓமத்திலும் வைசுவ தேவமென்னும், நித்தியகன்மத்திலும், சிவபூஜையிலும் பரிசுத்தனைத் தான் பஸ்மதிரிபுண்டரந் தரித்துக்கொள்ளுவானாகில் காலனைவீட்ட வென்றுவிடுவான், அவ்வாறு திரிபுண்டரந் தரித்துக் கொள்ளாமல் எந்தக் கிருத்தியத்தைச் செய்கின்றானோ அந்தக் கர்மம் ஈடேறாது" என்று காத்தியாயனரும், "எவன் திரிபுண்டரமணியவில்லையோ அவனுடைய ஆசாரமும், சத்தியமும், தபசும், ஓமமும் புண்ணியதீர்த்த ஸ்நானமும், சிவபூஜையும் நிஷ்பலமாய்விடும்" என்று சாதாதபரும், அரசன் எப்படித் தன் நகரத்தில் வசிக்கும் பிரஜைகளைத் தன் பிரஜையைப் போல நினைக்கின்றானோ அப்படிச் சிவபிரான் விபூதி அணிந்தவனைத் தன்னைப்போல எண்ணுகின்றார். அந்தணராலும் சூத்திர ஜாதியாலும் வெண்மையாயும் பரிசுத்தமாயுமிருக்கிற பஸ்மத்தால் எவன் திரிபுண்டரந் தரிக்கின்றானோ அவன் சிவனை வசியப்படுத்திக்கொண்டவன்" எனக் கூர்மபுராணமும், "பயங்கரமான இராக்ஷதர்கள், சர்ப்பம், பிசாசு, பிரேதகணங்கள், க்ஷுத்திர ஜந்துக்களாகிய பிரமராக்ஷசர்கள், யமதூதர்கள். யோகினி டாகினி முதலான துஷ்டப் பிசாசுகள் விபூதி அணிந்தவனைக் கண்ட மாத்திரத்திலேயே வெகுதூரம் ஓடிப்போம். பஸ்மதிரிபுண்டரந் தரிப்பதால் ஈசனுக்கும் கேசவனுக்கும் பிரமனுக்கும் பார்வதிக்கும் இலட்சுமிக்கும் சரசுவதிக்கும் திருப்தி உண்டாகும்" என மற்றும் ஸ்மிருதி கர்த்தாக்களும் "அக்கினியினால் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட பஸ்மத்தை சத்தியோஜாதாதி ஐந்து பிரம மந்திரத்தினால் ஜபித்தெடுத்து இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையினால் மூடி பன்னிருமுறை பிரணவத்தை



உபமநியு முனிவர் பூசித்தல்.

ஜபித்து ஜலத்தால் நனைத்து சிரசிலும் நெற்றியிலும் தோளிலும் குறுக்காக மூன்று ரேகைகளாய் அணிந்துகொள்ள வேண்டும்; இந்தச் சாம்பவ விரதமானது சமஸ்த வேதங்களிலும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் மறுபிறப்பில்லாதிருப்பதற்காக இந்தப் பஸ்மதாரணத்தை மூன்று ரேகைகளாகக் கொள்ளவேண்டும்; நெற்றியில் இரண்டு கண்களின் புருவ முனைவரையில் தரிப்பதுதான் திரிபுண்டரமென்று சொல்லப்படும். எவ்வகைப்பட்ட வித்துவானும், பிரமசாரியும், கிரஹஸ்தனும், வானப்பிரஸ்தனும், சந்நியாசியும் திரிபுண்டர தாரணஞ் செய்துகொள்கின்றார்களோ அவர்கள் சமஸ்தபாதகத்தினின்றும் புனிதராகின்றார்கள். தம் இஷ்ட தேவதையைத் தியானித்தோராவர். சகல சம்பத்துக்களினும் நிறைந்தோராவர். சமஸ்த சாம்பவ மந்திரத்தை எப்பொழுதும் ஜபித்தோராவர். இகத்தில் சமஸ்தபோகங்களையும் துய்த்து, பரத்தில் நற்கதி கைகூடப் பெறுகின்றார் என்றும், மீண்டும் இக்கன்ம பூமியில் ஜனிப்பதில்லை ஜனிப்பதில்லை எனத் தேவாதி தேவராகிய பரமேசுவரர் அருளினர்" என்று சாமவேதம் காலாக்கினி ருத்திரோப நிடதமும் ஆகமங்களுங் கூறுகின்றன என்று உன் தந்தையாரும் மாதுலராகிய வசிஷ்டரும் அடிக்கடி எடுத்துரைக்கக் கேட்டிருக்கின்றேன். ஆதலினால் விபூதி தரித்துக்கொண்டு பூசிக்கவேண்டும் என்று பாராக்குக் காட்டி அழுகை தணிப்பவர்போலக் கூறினர்.

இதனைக் கேட்ட சிறுவர் "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பதற்கேற்ப, என்னையீன்ற தாயே! இப்பொழுதே மங்கைபங்கனை ஆராதிக்கின்றேன், சிவபிரானை வசிகரிக்கத்தரும் விபூதி தந்தருளல் வேண்டுமெனவேண்டுதலும் உளமகிழ்ந்த தாயார் குழந்தை முகத்தைப் பார்த்துச் சந்தோஷித்து விபூதியை எடுத்து இந்த விபூதி உன்மாசகலும்பொருட்டு உன் தந்தையார் எனக்களித்தார். மந்திர நாயகமாகிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஓதி அணிந்துகொள் என்றார். பணியுடன் பெற்றுக்கொண்ட சிறுவர் களிப்பெய்திச் சிவார்ச்சனை செய்ய ஆரம்பித்தனர்.

சிறுவர் எட்டுச் செங்கல்லை எடுத்து பூருவ புண்ணிய மிகுதியால் ஆலயமியற்றி மண்ணினால் சிவலிங்கஞ் செய்து பத்திரபுஷ்பங்களால் பூஜாத்திரவிய மெல்லாம் அமைத்துக் கொண்டு அபிஷேக அலங்கார அர்ச்சனை நைவேத்தியங்களியற்றி, மலரடியில் தாழ்ந்து வீழ்ந்து, கண் காது மூக்கு செவி நா என்னும் ஐம்புலநுகர்ச்சியற்று உமேசரது

திருவடி நினைவேகொண்டு சமாதியிலிருந்தனர். மனத்தூய்மை பெற்ற மைந்தன் வழிபாட்டிற்கிரங்கி மங்கையோர்பாகர் மழலை மொழிச் சிறுவர் முன் தோன்றுதலும், உள்ளம் நெகிழ்ந்து தாழ்ந்து பணிந்து தரையினில் வீழ்ந்து என்னையாள எழுந்தருளிய ஆனந்தவடிவே! அமலனே! வேண்டிய அளிக்கும் மேலவரே! எனக் கண்களில் நீர் சொரிய விம்மி அழுத பாலகனை அருளினோக்கி, அருமையுற்ற மதலாய்! பால் வேண்டியன்றோ பூஜித்தனை. பாற்கடலையே உதவினேம். அருந்துக என அருளின மாத்திரத்திற் பாற்கடல் தோன்ற பாலகர் மகிழ்ந்து அன்பு மீதூர அருந்தி அகங்களித்திருந்தனர்.

பின்பு சிலநாளகன்ற பின் பாற்கடலருந்திய பாலகர் சிந்திப்பதாவது. மூவர் முதல்வரது முளரியந்தாளைப் பூசிப்பதே மானுடஜனன மெடுத்த பிரயோசனம். காமியார்த்தமாகப் பூசிப்பதில் பதமுத்தி கிட்டுகின்றது. அது ஐந்தரு நிழற்று மிந்திரன் பதமும், மாதவர் விரும்பும் சீதரன் பதமுமாம். சின்னாள் அனுபவித்து நீங்கப்படுவன. அவை பசுஞானத்தா லடையப்பாலன. பதிஞானத்தாலடையும் நிலையே நித்தியமானது. அந்த ஞானம் எளிதானதன்று. அதனைப் பெறும் தவமே மெய்த்தவம். மற்றைத் தவங்களெல்லாம் பொய்த்தவமாகும். அம் மெய்த்தவமானது சரியை கிரியை முதலிய மார்க்கங்களிலே சென்றடைதல் தகுதி எனத் தாம் ஆய்ந்த நல்லுணர்வால் ஓர்ந்து புண்ணிய க்ஷேத்திரங்கள் தோறும் சென்று இளம்பிறை சூடிய இறைவரைப் பூசித்து வணங்கி இமயமலையினும் ஈசனுக்கினிய நாகாசலத்தை அடைந்து நாரிபாகரைப் பூசித்து வணங்கி ஐம்புலனடக்கி அருந்தவ மியற்றினர்.

உபமந்யு பிரமரந்திருந்தெழும் யோகாக்கினிப் புகைப்படலம் தேவலோகத்திற்றுக்க விண்ணவர் வெருண்டு விண்டு விடஞ் சென்று வணங்கி சரோருஹ நேத்திரமுற்ற சக்கிரபாணி! பூலோகத்திற் புலிக்கால் முனியீன்ற புத்திர ரத்தினம் வருந்தி மாதவம் செய்கின்றார். முன்னமொரு நாள் பாலுக்கழுதார். பாலலோசனர் பாற்கடல் கொடுத்தனர். இப்பொழுது இந்திரபதம் கேட்பாரோ! அல்லது இந்த வைகுண்ட ஆட்சியைத்தான் கேட்பாரோ! அல்லது எதைத் தான் கேட்பாரோ தெரியவில்லை. அடியவர் எதைக் கேட்பினும் அம்மையப்பர் அதனைக் கொடுத்துவிடுகின்றனர். அதனை அறிதல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். பொங்கரவிற்றுயில் சங்கிடமேந்தியும் புள்ளூர்ந்து புராரிபாற் சென்று புதுமலர் கொண்டருச்சித்துப் போற்றிப் புகன்றனர்.

மாதவர்க்கருளும் மழுவலானும் உபமந்யு புரியும் உயர்தவ வன்மையை உலகினர்க்குணர்த்தத் திருவுளம் பூண்டு அமரர் கோனுருத் தாங்கி ஜராவதப்பிடரேறி முனிவர் முன்னின்று மைந்த! உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் கொடுக்கின்றேன் எனலும் முனிவர் நகைத்து, சிவனடியார்கள் விரும்பும் வரத்தைக் கொடுக்க வல்லையோ! அல்லை! அல்லை!! உன்நிலைமை நீ அறியாய் அறியாய் அகன்று போ என்றனர். தலையோட்டிலிரந்து சுடுகாட்டில் வதிந்து பேயுடனாடும் பெண்பாதியனே முப்பத்து மூன்று கோடி தேவர்கள் தலைவனான என்னில் உயர்ந்தோன். அந்தணர் சிறுவ! நீ பிழைக்க விரும்பினையேல் இப்பொழுதே அபேக்ஷித்த வரத்தைப் பெற்றுக்கொள் என்றுரைத் தோனை நோக்கி இவன் உண்மையாகிய இந்திரனல்லன். யாரோ ஒரு அரக்கன். இந்திரவுருத்தாங்கி ஈசனை நிந்திக்கின்றான் போலும் எனக் கருதி சிவநாம ஸ்மரணை செய்து இரு கையாலும் காதை மூடிக் கொண்டு என்னை அடிமைகொண்ட மூவர் முதல்வராகிய சிவபரஞ் சுடரை நிந்தித்த பாவியின் உயிரை அந்த க்ஷணமே போக்கவேண்டும். இன்றேல் உடனே சிவநிந்தை சகியாது மாய்ந்து விடுதல் வேண்டு மென்று சினந்து மேன்மையுற்ற விபூதியைக்கையிலெடுத்து அகோ ராஸ்திரத்தை உச்சரித்துச் சிவநிந்தகனைக் கொல்க என விடுத்தனர். எறிந்த அவ்வகோராஸ்திரத்தை நந்திதேவர் தடுத்துக்கொண்டனர். சிவநிந்தகன் இறவாமற் போய்விட்டான். இனி ஆவியை விட்டு விடுகின்றேன் என்று மூலாக்கினியைச் செவ்வனே எழுப்பச் சிவபெருமான் மகிழ்ந்து இடபாரூடராய் உமையொருபாகராய்ப் பிரசன்னமாயினர் ஆகாயதுந்துபி முழங்கியது. தேவர்கள் புட்பமாரி பொழிந்தனர் ஹர ஹர சப்த முழங்கின. இருகண்கள் பெற்ற பேறிது எனத் தரிசித்துத் தரையில் விழுந்து பணிந்து கண்களில் நீர் சொரிய நாக்குழற உரோமஞ் சிலிர்ப்ப அஞ்சலியஸ்தத்தோடு நின்று பஞ்சாக்ஷரரூபமாயும் பஞ்சாக்ஷரப் பொருளாயு முள்ள அம்மையாரை உபமன்னியு முனிவர் "அம்போதரசியாமலகுந்தலாயை" என்றற் றொடக்கத்த அஷ்டகத்தால் ஸ்தோத்திரிக்க மங்கையிடத்தன் மகிழ்ந்து முனிபுங்கவ! நின் தவம் கண்டு மகிழ்ந்தனம். நீ பாசுபத ஞானயோக சங்கிதை ஆகமங்கள் செய்யும் செயலளித்தேம். சிவகணத்தலைமை ஈந்தேம். இறவாப்பதமீந்தேம். நம் மெய்யடியார்கள் உண்மை விளக்கம் பெறப் போதிப்பாயாக என அநுக்கிரகித்துத் தேஜோமயமாகிய விமானத் தெழுந்தருளினர். கிடைத்தற்கரிய பேறுபெற்ற உபமந்யு முனிவர் ஸ்ரீ அர்த்தநாரீசுரரை முப்போதும் பணிந்து வாழ்ந்திருந்தனர்.

பின்பு கிருஷ்ணமூர்த்தியின் பத்தினிமார்களில் உருக்குமணி முதலிய தேவிமார்கள் ஒவ்வொருவரும் பத்துக் குழந்தை யீன்றெடுத்து மகிழ்ச்சி கூர்ந்து வாழ்ந்தார்கள், சாம்பவதி என்னும் புண்ணியவதிக்கு மாத்திரம் குழந்தை இல்லை. ஏனையோர்களெல்லாம் ஈன்ற மக்களோடு விளையாடிக் களிப்பதைப் பார்த்துத் தனக்கு மகவில்லையே என வருந்தி லோகரக்ஷகராகிய தன் பத்தாவிடம் அறிக்கையிட்டனள். நன்மனையாட்டியை ஒருவாறு தேற்றி மகிழ்வித்தனர். பின்பு உபமன்னியு தவச்சாலையை மருவி வழிபாடியற்றி மகவிலாக்குறையை வசனித்தனர். கேட்ட முனிவர் மந்தஹாசம் புரிந்து கண்ணா! முன்னம் பிருகு முனிவர் சிவத்தைப் பேணி வெள்ளி என்னும் குழந்தையைப் பெற்றனர். திருமறுமார்ப! நினக்கெவை அரிய! ஆயினும் செஞ்சடைக்கடவுள் தவமியற்றினலன்றி வரந் தரமாட்டார் எனக் கூறி மீன்போனேக்கி, ஆமைபோனுன்னி, பக்ஷிபோற் பரிசித்துப் பாசமொழித்துப் பஞ்சாக்ஷரத்தை ஓதி விபூதி திரிபுண்டரந் தரித்து உருத்திராக்ஷகண்டி சாத்தித் தீக்ஷை செய்து பாசுபத விரதத்தைப் பன்னிரண்டு மாசம் இயற்றுவித்து ஞானேபசேசம் புரிந்தனர். அதனைப் பெற்றுச் சிவாராதனஞ் செய்த கண்ணன் முன்னர் முக்கண்ணன் தோன்றி வேண்டிய வரமீந்தனர். இதனைச் சாம்பவதிக்குக் கூறி மகிழ்ந்து கூடிவாழும் நாளில் சாம்பவதி கர்ப்பமாய் அழகுவாய்ந்த ஓர் நன்மகவை ஈன்றுள். பார்த்துக் களித்து உமையோடு கூடினவர் வரத்தால் வந்த குழந்தை யாதலின், சாம்பன் எனத் திருநாமமிட்டு மகிழ்ந்தார்கள். உபமந்நியுவையும் உமேசரையும் ஒருபோதும் மறந்தார்களல்லர்.

இன்னும் பலர்க்குச் சிவதீக்ஷைபுரிந்து மகாத்துமாக்களாக்கியும், மெய்யடியார் பிரபாவங்களை விளக்கியும் அம்மையப்பர் பாதாரவிந்தத் தியானமாகிய சிவானந்தப் பெருவாழ்வுற்று உபமந்நியு முனிவர் எந்நாளும் விளங்குகின்றனர். என்றூர் சூதமுனிவர்.

---

உ

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரால் நளிர்சுரந்தீர்ப்பித்த மான்மியம்.

---

பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு என்பன வாதி பன்னிரண்டு திருநாமங்களுள்ளதாய்ச் சோழநாட்டில் மிகுந்த வளப்



ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் நளிர்சுரந்தீர்த்தல்.

பத்தோடு விளங்கும் சீகாழிப்பதியின் கண்ணே பிராமணகுல சிரேஷ்டராய், போதாயன சூத்திரமுடையோராய், கவுணியகோத்திர திலகராயுள்ள சிவபாதவிருதயர் என்னும் முனிபுங்கவர் தோணியப்பராகிய சிவபெருமானை நோக்கி சமணவிருளைத் துரத்தவல்ல ஞானமணியாகிய ஓர் புதல்வரைத் தமக்கருளுமாறு தவஞ் செய்தார். அவ்வாறு செய்த தபோபலத்தினால் தோணியப்பருடைய பெருங் கருணையினால் சிவபாத விருதயருடைய மனைவியாராகிய பகவதியாருடைய திருவயிற்றில் கர்ப்போற்பத்தி உளதாயிற்று. பத்து மாதங்களினுஞ் செய்யத்தகுஞ் சடங்குகளும் முறைப்படி செய்யப்பட்டன. சூரியன் முதலிய கிரகங்கள் மிக்கவலியோடு நிற்கும் திவ்விய லக்கினம் வரத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே உலகமுய்யுமாறு பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார். விதிப்படி பத்துநாட்களிலும் ஜாதகன்ம முதலியன செய்யப்பட்டன. அவருக்கு ஆளுடைய பிள்ளையார் என்னும் திருநாமமிட்டு மகிழ்ந்தார்கள். அவதரித்தருளிய பிள்ளையார் உத்தமர் செய்யும் மெய்த்தவப்பயன்போல் வளர்ந்து மூன்று வயதாயபோது தந்தையாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானத்தினிமித்தஞ் செல்லும்போது அவருடன் சென்று அங்கிருந்தனர். குழந்தையைப் படிக்கரையிலிருத்திச் சிவபாதவிருதயர் தீர்த்தத்துக்குள் மூழ்கிப் பாவம் நீங்கும்பொருட்டுச் செய்யும் அகமர்ஷணமந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கையில், எம்மையாளவெழுந்த புத்திரரத்தினமாயுள்ளவர் தமது பரம பிதாவைக் காணாது வருந்துவதொத்துச் சிவபிரானை நினைந்து பிரிவாற்றாமையால் தோணியப்பருடைய சிகரத்தைப் பார்த்து அம்மே! அப்பா! எனக் கண்ணில் நீர்ததும்ப அழத் தொடங்கினர். அவ்வழுகையைக் கேட்டு உள்ளம் பொறாதவர்களாகிய பெருமானும், பிராட்டியாரும் விரைந்து விடையூர்ந்து அங்கெழுந்தருளினர். அப்போது உமாதேவியாரை நோக்கி நின் மகனை அழுகை தவிர்க்கும்படி எடுத்து இரு முலைகளிலும் சுரந்தொழுகும் பாலைப் பொன்வள்ளத்திற் கறந்தூட்டுக என்று சுவாமி புகல்வதன் முன்னர் அம்மை விரைந்து சென்று ஆராமை மேலிடத் தமது அருமைத் திருக்கரங்களால் நம் பெருவாழ்வை எடுத்து மார்போடு இறுகத் தழுவித் திருமேனியிற் படிந்திருந்த புழுதியை மாற்றிக் கண்களிற் பெருகிய நீரைத் தமது முன்றானையாற்றுடைத்து மடிமீது இருத்தி உச்சிமோந்து முத்தமிட்டு மகிழ்ந்து தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்து அதனோடு ஞானமாகிய அமுதமுங் கலந்து உண்ணென்று ஊட்டுதலும் நம்பெருஞ் செல்வமாயுள்ளவர்

உண்டருளி அழுகை தவிர்ந்து சிவஞான சம்பந்தராகி எழுந்தருளி னர். பின்னர்ப் பிராட்டியாருடைய மடிமீதிருந்தவர் தாவிப் பெருமானுடைய மடித்தலத்திலேறி அவருள்ளமகிழ விளையாடுகையில் அவ்விருவருங் கண்டு களித்து அளவில்லாத ஆனந்தமெய்தினர். அப்போது சிவபாதவிருதயர் தமது நித்திய கடனை முடித்துக் கொண்டு திருக்குளத்தினின்றும் கரையை அடைந்து அருளொழுக்கம்போலச் சரல் படிந்திருக்கும் பாலொழுக்கின் அதிசயகோலத்தைக் கண்டு வெகுண்டு உனக்கு இப் பால் ஊட்டினவர் யாவர் என்று (பாலரு வாயரை)பிள்ளையாரை வினவி ஒரு சிறியகோல் கொண்டு மருளால் ஓச்சப் போயினர், அதற்கு எம்பெருந்தகையார் சுட்டிறந்து சிவானுபூதியில் உணரப்படும் சிவம் அருளினல் திருவுருக்கொண்டு சிவபெருமானய் உமாதேவியாரோடு எழுந்தருளி யிருந்தமையைச் சுட்டி "தோடுடைய செவியன்................இவனன்றே" என்னும் திருப்பதிகமோதித் தமக்குப் பாலளித்தாரிவனெத் தெரிவித்தனர். இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் சாரமாயதும், உயர்வொப்பில்லாத யசுர்வேதமத்தியிலுள்ள ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருளாயதுமாகிய ஸ்ரீ காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்தாகிய தகரத்தின்மீது சமஸ்தவேதாகமாதி சாஸ்திரங்களுக்கும் வித்தாகி வேதங்களுக்கு ஆதியினும் அந்தத்தினும் உள்ள ஓங்காரத்தின் முதலக்ஷரமாகிய ஓ வை ஏற்றி (த+ஓ) "தோ" என்று தொடங்கித் "தோடுடைய செவியன்" என அருளிச் செய்தார்.

இலௌகீகத்திலே பாலகராயினோர் தங்கள் தாயார் வாயிலாகவே தந்தையாரிடத்து வேண்டியதொன்றைப் பெறுவது நிகழக் காண்டலானும், வைதிகத்தினும் சிவசத்தியைத் தியானித்தே சிவமாகிய ஞேயப்பொருளைப் பெறல் வேண்டுமென்பது ஸ்ரீ காயத்திரியினதும் முத்திபஞ்சாக்கரத்தினதும் பொருளாகக் காணப்படுதலினுலும், உதாத்த அனுதாத்த சுவரிதப் பிரசயங்களோடு கூடிய வேதத்தை அத்தியயனஞ் செய்பவர் வாயிலாகச் சுருதி எனப்படும் காதினுற் கேட்டாலன்றி எவ்வாற்றானும் அதனை மனனஞ் செய்துகொள்வது கூடாதவாறுபோல, திராவிட தேவாராதிகளிற் காணப்படும் நாட்டைக் குறிஞ்சி முதலிய பண்கள் இருபத்தொன்றையும் அவற்றை அப்பியசித்தவர் வாயிலாகச் சுருதியினல் (காதினல்) கேட்டாலன்றி அவற்றை ஓதிப் பயன் பெறுதல் ஒருவாற்றானும் கூடாதென்ப துணர்த்துவாராய், "செவிச் செல்வம் செல்வத்துட் செல்வம்" என்றது நாயனர் சுருதிச் செவியையே சிறப்பித்தாற்

போல எம்பெருந்தகையாரும் தோடுபொருந்திய காதைக் "தோடுடைய செவியின்" என்று முதற்கண்ணே சிறப்பித்தருளினர். சிவபாதவிருதயர் அத்திருப்பதிகத்தின் பொருளை உணர்ந்தபோதே அது தோணியப்பர் திருவருளாமெனத் துணிந்துகொண்டார். பார்வதி தேவியாரோடு சிவபிரான் திருத்தோணிக்குள்ளே எழுந்தருளப் பிள்ளையார் அதனைக் கண்டு அன்பு மேலீட்டினாலே தமது கண்வழியே சென்ற கருத்து நீங்காது கலந்து செல்லத் தாமும் திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தார். இவரைத்தொடர்ந்து இவர் தந்தையாரும் பேரானந்தத்தினோடு பின்சென்றார். அங்கு நங்குருநாயர் திருப்பதிகம் பாடியருளித் திரும்பும்போது சீர்காழியிலுள்ளார் யாவரும் இவ்வற்புதத்தை அறிந்து மகிழ்ந்து கோபுரவாயிலின்கண் வந்து ஆளுடைய பிள்ளையாரைத் தரிசித்து மகிழ்ந்தார். சிறிய பூம்பாதம் தரையிற் பொருந்த நடந்தருளுவது மனம் பொறாத சிவபாதவிருதயர் அச்சிறிய பெருந்தகையாரை எடுத்துத் தமது தோளின்மேல் வைத்துக்கொண்டு அந்தணர்கள் வேதமோதிப் பின்வரவும், அநேக வாத்தியங்கள் முழங்கவும், அடியார்கள் சூழ்ந்து ஹர ஹர என்று கடலொலிபோன் முழங்கித் துதித்து வரவும், சீர்காழியை வலங்கொண்டு தம்முடைய திருமாளிகையை அடைந்தனர்.

அன்று கழிந்து மறுநாள் ஞானசம்பந்தவள்ளலார் தோணியப்பரைத்தரிசித்துக்கொண்டு திருக்கோலக்காவிற் சென்றுகையினாலே ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடினர். அப்போது பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றாளம் அவருடைய திருக்கரத்தில் வந்திருந்தது. அதனைக் கண்டு யாவரும் அதிசயித்தார்கள். மீண்டும் சீகாழிக்கு வந்து சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி மகிழ்ந்து அங்குச் சிலபோது வசித்திருந்தனர். பின் அங்கே நின்றும் திருநனிப்பள்ளி திருத்தலைச் சங்காடு திருப்பல்லவனீச்சரம் திருச்சாய்க்காடு திருவெண்காடு திருமுல்லைவாயில் என்னும் ஸ்தலங்களுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகமோதி சீகாழிக்குத் திரும்பி அங்கெழுந்தருளி யிருந்தனர். திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் தமது பத்தினியாருடன் வந்து பிள்ளையாரைத் தரிசித்தனர். அவருக்கு விருந்தளித்துப் பதிகங்களை யாழில் அமைத்து வாசித்துவரக் கட்டளையிட்டு அன்புபாராட்டினர். பின்பு சிவபாதவிருதயர் திருநீலகண்டயாழ்பாணர் முதலியவர்கள் சூழச் சிதம்பரத்தை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் ஓதித் திருவேட்களத்தை அடைந்து அங்கு வசித்துக்கொண்டே நடராஜ

மணியை வந்து தரிசித்துப் போவாராயினர். தில்லை மூவாயிரவர் சிவகணங்களாய்த் தோற்றக் கண்டு களித்துத் திருநீலகண்டயாழ்ப் பாணருக்குங் காட்டி மகிழ்வித்தனர். பின்பு திருவெருக்கத்தம்புலியூர் திருமுதுகுன்றம் திருபெண்ணுகடம் திருநெல்வாயிலரத்துறைதலங் கட்குப் போக விரும்பித் தமது தந்தையாராகிய சிவபாதவிருதயர் தோளினின்றுமிறங்கித் திருப்பாதங்கள் நோவ நடந்து மாறன்பாடி யில் அன்றிரவு தங்கிப் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு அப் பதியிற்றானே தங்கியருளினர். அஃதறிந்த கடவுள் திருவரத்துரை யிலிருக்கும் பிராமணர்கள் யாவருக்கும் தனித்தனியே சொப்பனத் திற்றோன்றி "நமது குழந்தை ஞானசம்பந்தன் நம்மிடத்து வருகின் றான். அவன் ஏறுதற்கு முத்துசிவிகையும், அவனுக்கு நிழற்றுதற்கு முத்துக் குடையும், அவன் புகழ்தோன்ற ஊதுதற்கு முத்துச் சின்ன மும் நாம் கொடுக்கின்றோம் அவற்றை நீவிர்கொண்டு அவனை எதிர் கொண்டு போய்க் கொடுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளி அதனைப் பிள்ளையாருக்குத் தெரிவித்தருளினர். விழித்தெழுந்த பிராமணர்கள் ஆச்சரியமெய்தினவர்களாய்த் திருக்கோவிலுட் சென்று சுவாமி கட்டளையிட்டருளியவைகளிருப்பக்கண்டு மகிழ்ந்து அவற்றைத் தாங் கிக்கொண்டு சிவனடியார்கள் பலர்சூழ வாத்தியங்கள் முழங்கப் பிள்ளை யாரை எதிர்கொண்டார்கள். பிள்ளையாரும் அவர்களை எதிரே காண அவர்கள தாங்கள் கொண்டுவந்த முத்துச் சிவிகை முதலிய வற்றை ஏற்றருளும்படி பிரார்த்தித்தார்கள். திருவருளை வியந்து "எந்தை யீசனெம்பெருமான்" என்னும் திருப்பதிகமோதித் துதித்து அருள்வடிவாகிய முத்துச் சிவிகையை வலம் வந்து பணிந்து பஞ்சா க்ஷரத்தை உச்சரித்துக்கொண்டே உலகம் உய்யுமாறு அதில் ஏறியருளி னர். எம்மையாள வெழுந்தருளிய வள்ளலார் அச்சிவிகைமேலேறி வீற்றிருந்தருளிய அற்புத கோலத்தைக்கண்ட சிவனடியார்கள் ஹர ஹர என்று உச்சிமேற் கரங்கூப்பி ஆரவாரித்தார்கள். அந்தணர்கள் வேதவொலி யெழத்துதித்து ஆரவாரித்தார்கள். இந்திரன் முதலினோர் புஷ்பமாரி பொழிந்து துதித்து ஆரவாரித்தார்கள். முத்துக்குடை நிழற் றினர்கள். திருஞானசம்பந்தப் பிள்ளையார் வந்தார், சிற்சடப்பிரபஞ் சங்கள் யாவும் தாமேயாகிய உமாதேவியார் திருமுலை சுரந்தூட்ட ஞானப்பாலுண்டருளிய பாலருவாயர் வந்தார், வேதமுதலிய எல் லாக் கலைகளையும் ஓதாதுணர்ந்தருளிய முத்தமிழ் விரகர் வந்தார் என்று முத்துச்சின்ன மொலித்துக் கிளர்ந்தது. இப்பெருங் காட்சி தோன்றப் பிள்ளையார் திருவரத்துறையை அடைந்து சிவிகையின்றிழிந்து திரு

ஆலயத்துட் சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகமோதித் துதித்து அப்பதியிலேதானே சிலநாள் எழுந்தருளியிருந்தனர். அங்கிருந்தபடியே திருவெண்ணெய் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு சீகாழிக்குப்போய் உபநயனஞ் செய்து கொண்டனர். அப்பொழுது அந்தணர்கள் மந்திரோபதேசம் செய்யப்புகும்பொழுது எண்ணிறந்த வேதங்களையும் கலைகளையுமெடுத்தோதி ஐயந்திரிபற யாவும் அவர்கள் தெளியுமாறு உணர்த்தி முடிவில் ஸ்ரீ பஞ்சாக்ஷரப் பதிகமோதி அதில் "வேதியர்க் கந்தியுண் மந்திர மைந்தெழுத்துமே" என்றருளி, ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருளே திரிகால சந்தியினும் செபிக்கற்பாலதாகிய காயத்திரிமந்திரத்தின் பொருளுமாம் என அவருய்யும் மார்க்கத்தைக் காட்டியருளி, பின்பு சில நாள் அங்கு வசித்துக்கொண்டிருந்தார். திருநாவுக்கரசு சுவாமிகள் அங்கு வந்து அவரைத் தரிசித்தனர். அவருக்கு விருந்தூட்டி உபசரித்து அவரோடு அளவளாவி மகிழ்ந்தனர். பின்னர் விடைபெற்றுக்கொண்டு செல்லத் திருஞான சம்பந்த சுவாமிகள் அங்கே நின்றும் பிதா முதலியர்கள் சூழப் புறப்பட்டுத் திருக்கண்ணார் முதலிய தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு திருப்பா சிலா சிரமம் என்னும் தலத்துக்கெழுந்தருளி அங்குக் கொல்லி மழவன் என்னும் அரசன் மகளுக்கு நேர்ந்திருந்த குமரகண்டவலி எனப்படும் முயலகன் நோயைத் திருப்பதிகமோதித் தீர்த்தருளினார். பின்னர்த் திருப்பைஞ்ஞீலி திருவீய்ங்கோய்மலை முதலிய தலதரிசனஞ் செய்துகொண்டு, கொங்குநாட்டிற் காவேரிக்குத் தென்கரையிலுள்ள தலதரிசனஞ்செய்து வடக்கேயுள்ள திருக்கொடிமாடச் செங்குன்றூரைத் தரிசிக்கும் ஆசைமேலீட்டால் பரிசனங்கள் சூழச் சென்றார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருக்கூட்டங்கள் சூழ எழுந்தருளி வருவதை அந்நகரத்தில் வாழ்வாரும் அடியவரும் கேள்வியுற்று அடங்கா மகிழ்ச்சிபெற்று வீதிகளை மெழுகிக் கோலமிட்டும், வாழை தென்னை கமுகு ஈந்து முதலிய அரிய பசிய மரங்களைக் கொணர்ந்து அழகுபெற நாட்டியும், மாவிலைத் தோரணம் மகர தோரணங்களை மேலே தொங்கவிட்டும், இன்னும் அவரவர்களுக்குத் தோன்றியவாறு வீடுகளையும் திருவீதிகளையும் திருமடங்களையும் திருக்கோவில்களையும் அலங்காரஞ் செய்தும் யாவருங்கூடிச் சந்தன புஷ்ப தாம்பூல கதலி நாரிகேள விகுச பலாதிகளைத் தட்டில் வைத்தேந்தியும் விதிப்படி அமைத்த பூரணகும்பம் எடுத்து மேளவாத்தியங்கள் முழங்கச் சாம்ப சதாசிவ ஹர ஹர என்றும் ஆரவாரித்துக்கொண்டு எதிர் சென்று முத்துச்சின்ன முழக்கத்தைக் காதுகுளிரக் கேட்டு, முத்துக்குடையும்

அடியார் திருக்கூட்டப் பொலிவினையும் கண்குளிரப் பார்த்து, ஆனந்தம் பொங்கி அடியற்ற மரம்போலக் கீழே விழுந்து வணங்கி எழுந்து முத்துச்சிவிகை மீது எழுந்தருளிய இளந்தோன்றலாய் எம்மையாள வந்த பெருந்தகையாரைத் தரிசித்து அடிவீழ்ந்து வணங்கினார்கள். முத்தமிழ் விரகரும் அகமகிழ்ந்து அருள்பாலித்தனர். அடிபணிந்தவர்கள் இரண்டு கைகளையும் சிரமேற்கொண்டவர்களாய் இமைகொட்டாது இரண்டு கண்களாலும் காழிப்பிள்ளையார் திருவடிவைக் கண்டவர்களாய் தேனை ஈ மொய்ப்பதுபோலச் சூழ்ந்து உமையொருபாகர் ஆலயத்தருகுறப் பிள்ளையார் சிவிகையினின்றிறங்கிப் பிரதக்ஷிணம் புரிந்து சந்நிதிமுன் சென்று தாழ்ந்தெழுந்து, திருவடியிற் கங்கையும் கையில் தண்டாயுதமும் நெற்றியிற் பாதி தீக்கண்ணும், திருமுலைப் பாலூட்டிய அம்மையாரிடப்பாகமும் பால்வண்மையுமாக நின்றகோல நிமலனை நெஞ்சநெகிழத் தரிசித்தெய்திய ஆனந்தப் பெருக்கால் "வெந்த வெண்ணீறணிந்து" என்னும் திருப்பதிகத்தை ஆரம்பித்து ஆங்கு ஆகம சாஸ்திரங்களை ஆய்ந்துணர்ந்து அமலனை முப்பொழுதும் திருமேனி தீண்டு முழுப்பாக்கியம் பெற்ற சிவாசாரியர்களின் அருமை பெருமை அன்புடைமை முதலியவற்றை நோக்கி நான்காம் பாசுரத்திலேதானே "சீருறு மந்தணர் வாழ் கொடிமாடச் செங்குன்றூர்" எனச் சிறப்பித்துப் பதிகமோதித் திருக்கடைக் காப்புச் சாத்தியருளினர். இவ்வாறு நித்தியமுந் தரிசனஞ் செய்துகொண்டு வாழும் காழிவிரகர், விட்டுப்பிரிய மனமுறாதவராய் மங்கைபங்கனைக் கும்பிடுமாதரவுடன் அக்கோனகரி லினிதமர்ந்திருந்தனர். சிலநாட் சென்றபின்பு காவேரிநதிக்கு அப்பால் மேற்குப்புறத்துள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருநணா என்னும் "பவானிகூடல்" க்ஷேத்திரத்தைப் பணிந்து பதிகம் ஓதியருளித் தமக்குத் திருமுலைப்பால் கொடுக்கக் கட்டளையிட்டவரும், அளித்தவருமாகிய அம்மையப்பர் இருவரும் ஏகவடிவாய் விளங்கும் ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிய பேரின்ப வைப்பாகிய செங்குன்றூர் வந்திருந்து வைகினர். ஆங்கு ஆளுடையபிள்ளையார் அமர்ந்துறையும் நாளில் சூல்கொண்ட மேகங்கள் பெய்தலான கார்காலம் நீங்கிற்று. சூரியகிரணம் தாக்காமையால் அலைகளால் ஒலிக்கின்ற நீர் நிலைகளெல்லாம் விறுவிறுப்புற்று வெவ்விய மலையிடங்களெல்லாம் குளிர்பெருகியது. செழிப்பாக மலர்ந்திருந்த தாமரைப்பூக்கள் முகம்புலர்ந்து போனமையால் அதிலிருந்துண்ட வண்டினங்கள் தேனில்லாமையால் சுழன்று சென்றன. அறுகம் புல்லிற் பெய்த பனித் துளிகள் வரிசையாக விருப்பது

பளிங்கு மணிகளை மரகதக் கொடியிற் கோத்திருப்பது போன்றும், மூடுபனியால் மலைகள் மறைந்திருப்பது அக்காலத்துக் குளிரைச் சகியாமல் மலைகள் வெள்ளைப் போர்வை போர்த்திருப்பது போன்றும் விளங்க, மிகுந்த குளிரோடு பொழுதெல்லாம் வாடைக்காற்று வீசுவதால் இலையுதிரும் மெல்லிய சோலைகள் நிலை குலைந்தாடவும், நடுக்கம் விளைக்கும் குளிரால் கையை நீட்டி நீட்டிப் பார்த்தும் நீட்ட முடியாமல் சூரியன் குறுகிக்கொள்வது போலத் தோன்றவும் பனிக்காலம் வந்தது.

அந்தக் குளிர் சகியாதவர்களாய்க் குங்குமக் கட்டைகளைப் பிளந்து நெருப்புமூட்டிப் புகைப்பார்கள். இரும்புத் தகட்டால் பெரிய வள்ளங்கள் செய்து அதில் சந்தனக்கட்டை முதலியவற்றை நறுக்கிப் பிளந்திட்டு நெருப்புண்டாக்கி அந்தத் தனல் நிறைந்த தோணியைத் தங்கள் சமீபத்திலிழுத்துக் கைகளை விரித்துச் சூடுகாட்டியும், போர்வையை விலக்கித் தைற்பாத்திரத்துடன் போர்த்துக் கொண்டு சூடேற்றியும், புல் முதலியவற்றைக் கொண்டுவந்து எரியவிட்டுப் பல பேர்கள் சூழவிருந்து கொண்டு குளிர் காய்ந்தும் ஒருவாறு உபசாந்தி செய்துகொள்வார்கள்.

அக்காலத்தில் திருக்கொடிமாடச் செங்குன்றில் சுவாமி தரிசனஞ் செய்து பதிகமோதித் துதித்து, நின்ற கோல நிமலனை விட்டு நீங்க மனசில்லாது மனோரம்மியமாக அமர்ந்திருக்கும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுடன் மேவியிருக்கும் திருக்கூட்டத்தார்களும் பலகாலமாக அந் நாட்டில் வசித்து வந்தார்கள். வாடைபனி முதலியனவற்றால் அந்நாட்டினர் பிரதி வருஷங்களிலும் குளிர்சுரம் கண்டு துன்பப்படுவார்கள். அவ்வாறே அப்பொழுதும் அந்நாடு முழுதும் வியாபித்துப் பிரஜைகளை வருத்தி வந்தது. அந்தக் குளிர் சுரம் அடியவர் குழாங்களுள்ளும் மெல்லவந்து நுழைந்தது. அந் நாட்டார் ஆண்டுகள் தோறும் இத்தீநோயால் வருந்துவதையும், திருக்கூட்டத்துட் புகுந்து முடுகுவதையும் எம்மையாளவந்த ஆளுடைய பிள்ளையார் முன் விண்ணப்பித்து வணங்கினார்கள்.

இவ்வாறு குளிர்ச்சுரம் இந்நிலத்தின் இயல்பாகவிருந்தாலும், முன் செய்த வினைக்கீடாகப் பீடைகள் வந்து பற்றுமென்றாலும், "பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும், காலனை யன்றேவிக்கராங்கொண்ட, பாலன், மரணந்தவிர்த்தது வு மற்றவர்க்கு

நந்தங், கரணம்போலல்லாமைகாண்" என்ற திருவாக்குக்கியைய, நமது பசுகரணங்கள் போலாகாது சிவகரணமுற்ற சிவஞானிகளுக்கு எதுவுமாம் என்பது தொனிப்ப, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "அவ்வினைக்கிவ்வினை" என்ற திராவிட சுருதியைத் தொடங்கி, வெவ் வியவிடத்தை முன்னர்த் தரித்து எம்மிடர் நீங்கிய மேன்மையினால் எவ்விடத்தும் எக்காலத்தும் அடியார் இடர் நீக்கிக் காப்பது சிவ பிரானரது கண்டமென்பது போதரச் "செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்" எனப் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தியும் முடித்தருளுங்கால், அவ்வூரில் வசிப்பவர்களுக்கேயன்றி அந்நாடு முழுதும் பனிக்காலத்துறும் அத்தீராப் பனிப்பிணி நீங்கிப் போயிற்று.

பின்னுஞ் சிலநாள் அங்கிருந்து நின்றகோல மழகிய நிமலனை விட்டு நீங்க மனமுறாதவராயினும் ஏனைய ஸ்தலங்களையும் தரிசித்து வேதசாரமாகிய பதிகங்களை அருளும் திருநோக்கத்தால் ஒருவாறு துணிந்து ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் பால்விடை பெற்றுக்கொண்டு திருப் பாண்டிக் கொடுமுடி திருக்கருவூர் ஆனிலை வெஞ்சமாக்கூடல் என்ப வற்றைத் தரிசித்துப் பதிகமோதிக் கொங்குநாடகன்று சோழநாட் டுள்ள திருப்பராய்த்துறை திருவாட் போக்கி முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்பட்டீச்சுரத்துக் கெழுந்தருளினர். அப்போது வெய்யில் வெப்பம் அங்குண்டாகாதிருக்கச் சிவகடாக்ஷத்தால் பூதம் முத்துப்பந்தரைக் கொண்டு வந்து பிடித்தது. அங்குச் சிவதரிசனஞ் செய்துகொண்டு திருவாறை வடதளி முதலிய க்ஷேத்திர தரிசனம் புரிந்து திருவாவடுதுறைப்பதியில் வந்து சேர்ந்தார். அங்குப் பரம பதியைப் பாடிப் பொற்கிழிபெற்றுத் தந்தையாராகிய சிவபாதவிரு தயர் செய்யும் யாகத்துக்கு உதவிய பின், திருக்கோழம்ப முதலிய தலதரிசனஞ் செய்து திருத்தருமபுரத்துக் கெழுந்தருளி திருநீலகண்ட யாழ்ப்பாணர் வேண்டியவாறு யாழ்முறிப் பதிகம் பாடி அங்கே நின்றுந் திருநள்ளாறு முதலிய பதிகளிற் சென்று பதிகமோதி, திருமருகலுக் கெழுந்தருள அங்கு அழுதுகொண்டிருந்த பெண்ணின் கலக்கத்தை நிவர்த்திக்கும்பொருட்டு விஷமுண்டிறந்த வணிகன் பிழைத்தெழுமாறு பதிகம்பாடி, அக்கன்னிகைக்கும் அவனுக்கும் திருமணம் புணரும்படி செய்து, அத்திருமருகலினின்றும் திருச்செங் காட்டங்குடி முதலிய தலதரிசனஞ் செய்துகொண்டு திருநாவுக்கரசு நாயனரோடு திருவீழி மிழலை சென்று வாழும் நாளில் துர்ப்பிக்ஷம் வந்தது. முக்கணெம் பெருமான் சொப்பனத்திற் றோன்றிப்

பொற்காக கொடுப்பதாகக் கட்டளையிட்டருளியபடியே கிழக்குப் பீடத்திலிருப்பதை ஆளுடைய பிள்ளையாரும், மேற்குப் பீடத்திலிருப் பதை ஆளுடைய அரசுகளும் பெற்று அடியவர்களுக்கு அமுது படைத்துக் கொண்டிருந்து பஞ்சம் நீங்கியவுடன் பலஸ்தல தரிசனம் புரிந்து திருமறைக்காடு சென்று வேதம் பூசித்து மூடிச் சென்ற கதவை அப்பர் சுவாமிகள் பதிகமோதித் திறந்தருளினர். பிள்ளை யார் பதிகம் கூறி அங்ஙனம் திறக்குமாறும் அடைக்குமாறும் நிகழச் செய்தனர்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் வேதாரணியத்திலிருக்கும் பொழுது பாண்டிநாட்டிலே க்ஷமணிருள்மூடிச் சைவநிலைமாற அரசன் முதல் யாவரும் க்ஷமண் பாவப்படுகுழியில் வீழ்ந்து நிலைதடுமாறி வருந் தினர்கள். அரசனது மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்தி ரியாகிய குலச்சிறைநாயனரும் சிவநேசம் மாருமல் அயலறியாதபடி சிவத்தியான பரவசராய் ஒழுகிவந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த் திநாயனர் மகிமைகளையும் அவர் வேதாரணியத்தில் எழுந்தருளியிருப் பதையும் கேள்விப்பட்டு அப்பெருந் திருவாளரைப் பாண்டிக் கழைக்கு மாறு தம்மவருட் சிலரை மறைக்காட்டுக்கனுப்பினர்கள். அவர்கள் வணங்கி விண்ணப்பித்தார்கள். அதற்கிசைந்து பிள்ளையார் புறப் பட்டனர். அங்கெழுந்தருளியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் சுவாமி! க்ஷமணர் கொடுமை சொல்லிமுடியாது. தேவரீருக்குக் கிர கங்கள் வலியில்லாமலிருக்கின்றன. போவது கூடாதென்று தடுத் தனர். நாரிபாகர் நமது உள்ளத்திற் குடிகொண்டிருக்கின்றராகை யில் நமக்கு ஒரு தீங்கும் வரமாட்டாதென்று உறுதி கூறி "வேயுறு தோளிபங்கன்" என்னும் கோளறு பதிகத்தைப் பாடியருளினர். இதனைக் கேட்ட அரசுகள் அப்படியே செய்திடுக என்றிசைந்தனர். விடைபெற்று வழியிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு மதுரைக் கெழுந்தருளினர். குலச்சிறைநாயனர் எதிர்கொண்டு உபசரித் தழைத்து வந்தனர். மீநாக்ஷியம்பா சமேதராய் விளங்கும் சொக்க லிங்கப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு திரும்பும்போது கோபுர வாயிலில் ஒதுங்கிக்கொண்டு நின்ற மங்கையர்க்கரசியார் அச்சிறிய பெருந்தகையைத் தம் கண்கள் செய்த தவத்தின் பயனைத் தரிசித்து வணங்கினர். முத்தமிழாகரர் நல்லருள்பாலித்து அங்கு நின்றும் புறப்பட்டுக் குலச்சிறைநாயனர் அமைத்திருந்த திருமடத்தில் பதின ருயிரம் திருக்கூட்டத்தாரும் ஏனையவடியார்களும் சூழ எழுந்தருளி

யிருந்தனர். பாண்டிமாதேவியார் கட்டளையிட்டவாறு குலச்சிறை நாயனர் சுவாமிக்கும் பரிஜனங்களுக்கும் விருந்தளித்து மகிழ்ந்திருந்தனர்.

பிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளும்போது பகலிலே கண்ட அமணர்கள் இரவில் ஓரிடத்திற் சபைகூடி இளங்கோன்றலார் தங்கியிருக்கும் திருமடத்தை மந்திரவலியாற் றீப்பற்றுமாறு செய்வதாகத் தீர்மானித்து அரசன் சம்மதமும் பெற்று மந்திரித்தார்கள். பயன் படாமையால் அக்கினியைக் கொண்டு போய்ச் சுற்றிலும் வைத்தார்கள். அதுவும் பயன்படா தொழிந்தது. அஃதறிந்த சீகாழிப் பிள்ளையார் "செய்யனே திருவாலவாய்" என்னும் திருப்பதிகமோதி அதில் "அவுணர் கொழுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே" என்றமைத்தருளினர். அரசனுக்குச் சுரநோய் தோன்றிற்று. அமணர்கள் தங்களான் மணிமந்திர அவுஷதப் பிரயோகஞ் செய்ய அதிகரித்தது. பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் திருஞானசம்பந்த சுவாமிகள் வந்தாலன்றி இந்தச் சுரநோய் நீங்காதென்று இதமாக உரைத்தார்கள். அத்திருநாமத்தைக் கேட்டமாத்திரத்தில் சிறிது குணப்பட்டது. அரசன் அவரை அழைத்துவரக் கட்டளையிட்டான். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனரும் விரைந்து சென்று பணிந்து இரக்ஷிக்க வேண்டுமென்று வேண்டுதலும் உடனே புறப்பட்டு அமணரை வாது செய்து வெல்லுதற்குச் சுவாமி திருவுள்ளத்தை அறிவோ மென்று ஆலயத்தணுகி "காட்டுமாவது" என்னும் பதிகம் பாடித் திருவுள்ளத்தை அறிந்து சிவநாமத்தைப் பரப்பும் பொருட்டு "வேதவேள்வியை" என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருவருள் பெற்றுப் பாண்டியன் அரண்மனைக்குச் சென்றனர்.

இளஞ் சூரியனைப்போ லெழுந்தருளிய ஞானமணியைப் பாண்டியன் கண்டு அஞ்சலி செய்து இரத்தினாசனத்திருத்தி வணங்கினன். அமணர்கள் இரைச்சலிட்டார்கள். மங்கையர்க்கரசியார் பிள்ளையார் சிறுகுழந்தையே என்று அஞ்சினர். மாதேவியே! நீ அஞ்சாதே நான் "ஈனருக் கெளியனலேன் திருவால வாயரனிற்கவே" என்று அவர துள்ளம் குதூகலிப்பப் பதிகவாயிலாகத் தமதுண்மையே எடுத்துக் கூறினர். அரசன் க்ஷமணர்களைப் பார்த்து நோயைத் தவிர்க்கக் கடவீர்கள் என்றான். பிரபுவே! இடது பக்கநோயை நாங்கள் தவிர்க்கின்றேம். அந்தச் சைவப்பிள்ளை வலதுபக்க நோயைத் தவிர்க்கக் கடவர் என்றார்கள். பீலியாற்றடவி மந்திரித்தார்கள்,

நோய் அதிகரித்து வருந்தி க்ஷமணர்களைக் கடுத்துத் தேவரீர் எனது நோயைத் தீர்த்தருள வேண்டுமென்று பிள்ளையாரை அரசன் பிரார்த்தித்தான். அதற்கிசைந்து "மந்திரமாவது நீறு" என்ற திருப்பதிகமோதித் தமக்குப் பிரித்துக்கொடுத்து வலது பக்கத்தை விபூதி கொண்டு நீவினர், நோய் நீங்கிக் குளிர்ந்தது. இடதுபக்க நோயையும் தேவரீரே தீர்த்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கிசைந்து பிள்ளையார் விபூதிகொண்டு தடவி, நோய்முற்றும் நீக்கியருளினர். அரசன் உள்ளமகிழ்ந்து படுக்கையினின் றெழுந்து இரண்டு கைகளையும் சிரமேற் கூப்பிக்கொண்டு அடியற்ற மரம்போலத் தரையில் விழுந்து வணங்கினன். அரசன் மனைவியாரும் மந்திரியாரும் தோத்தரித்தார்கள். இது கண்டு பொறாத அமணர்கள் வேறு சூழ்ச்சியால் வெல்ல வேண்டுமெனக் கருதி இரு திறத்தாருடைய சமய உண்மைகளையும் சீட்டிலெழுதி நெருப்பிலே இடக்கடவோம். எது வேகாமல் நிலைக்குமோ அதுவே வெற்றி யுடையதாகும் என்று கூறினார்கள். பிள்ளையார் அப்படியே செய்வோம் என்றனர். பாண்டியன் அக்கினி அமைக்கும்படி செய்தனன். திருஞானசம்பந்தப் பிள்ளையார் தாம் பாடிய திருமுறைக்குக் கயிறு சாத்த "போக மார்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் நேர்ந்தது. இது அக்கினியிலிடப்படுமாயிற் பழுதில்லை என்னும் கருத்துடைய "தளரிளவளரொளி" என்னும் திருப்பதிக மொன்றோதி அவ்வக்கினியிலே யாவரும் காண விட்டருளினர். அந்த ஏடு பசுமையாய் விளங்கியிருந்தது. க்ஷமணர்சள் தங்கள் சமய உண்மைகளை எழுதிய ஏட்டை இட்டார்கள் கரிந்து சாம்பராய்விட்டது. இது தவறினும் வைகையில் ஏட்டை இடுவோம் எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப்பொருளுடையது என்று அமணர்கள் கூறினார்கள். அப்பொழுது குலச்சிறை நாயனர் எனப் பெயரிய மந்திரியார் க்ஷமணர்களைப் பார்த்து நீங்கள் இதிலும் தோற்றால் என்னசெய்வது என்றார். க்ஷமணர்களுக்கு நாணமும் கோபமும் அதிகரிக்க நாங்கள் கழுவேறுவோம் என்றார்கள். இந்த ஏற்பாட்டினை இருபக்ஷத்தாரும் ஏற்று யாவரும் வையையை அடைந்தார்கள். அப்போது அமணர்கள் "அத்திநாத்தி" என்றெழுதிய ஏட்டை ஆற்றிலிட்டார்கள். அது அவர்களிடும்போதே கடலை நோக்கி ஓடி மறையக் கண்டு பயந்து தியங்கினார்கள். அப்போது பிள்ளையார் "வாழ்கவந்தணர்" என்னும் திருப்பதிகத்தை ஓதி அதனை ஏட்டில் எழுதித் தாமும் வைகையிலிட்டார். அத் திருவேடு நதியிலே எதிர்த்து ஜலத்தைக்

கிழிந்துக் கொண்டு சென்றது. "வேந்தனு மோங்குக" என்றருளி னமையால் பாண்டியனுடைய கூனும் நிமிர்ந்தது. மந்திரியார் குதிரையின் மேலேறிக்கொண்டு ஏட்டைப் பின் தொடர்ந்தும் பிடிக்க மாட்டாது போக, அது கண்ட பிள்ளையார் "வன்னியு மத்தமும்" என்ற பதிகமோதி அவ்வேடு ஓடாதிருக்கும்படி செய்தருளினர். அது தங்கியவிடம் "திருவேடகம்" என்று பிரசித்தி அடைந்தது. குலச்சிறை நாயனர் நதியிலிறங்கி ஏட்டினைக் கையிலெடுத்துச் சிரமேற் கொண்டு மகிழ்வெய்திச் சிவதரிசனம் செய்து திரும்பிப் பிள்ளையாரை வணங்கி ஏட்டினை பாண்டியன் முதலாயினோருக்குக் காண்பிக்க யாவரும் களித்து ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள். அபராதப் பட்டிழிந்த க்ஷமணர்களை இப்போதே கழுவிலேற்றிடுக என்று உறு தியான கட்டளையிட்டனன். அது சிவனருள் என்று பிள்ளையார் வாளாவிருந்தனர், உடனே க்ஷமணர் ஒருவரையும் விடாது கழுவேற் றினர். அரசன் பிள்ளையாரை வணங்கி விபூதி வாங்கித் தரித்தனன். அப்படியே அந்நாட்டிலுள்ள யாவரும் திருநீற்றுப் பெருஞ் செல் வத்துக் குரியவர்களாகிச் சிறந்தார்கள். பாண்டியன் முதலாயினோர் சூழத் திருவாலயத்தை அடைந்து எழுந்தருளியிருந்தனர். பின்பு திருப்பரங்குன்ற முதலிய தலங்களைத் தரிசித்துப் பாண்டியநாட்டை அகன்று முள்ளி வாய்க்கரையை அணைந்தனர். ஆற்றில் பிரவாக மதிகமானதால் ஓடங்கள் நிலைகொள்ளவில்லை. ஓடக்காரர்கள் போய் விட்டார்கள். திருக்கொள்ளம்பூதூர் அக்கரையிலே காணத் தரிசிக்க வேண்டுமென்ற அவாவால் ஓடத்தைத் தள்ளி அடியார்கள் ஏறும்படி செய்து தாமும் கூட ஏறி "கொட்டமே கமழும்" என்னும் திருப் பதிகத்தை ஓதி ஒரு தடையுமின்றி அக்கரை சேர்ந்து திருநள்ளாறு முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு போதிமங்கைக்கு வரும் போது தங்கள் வீதியில் வரக்கூடாதென்று அங்குள்ள புத்தர்கள் தடுத்தார்கள். அது கண்டு பொருத சம்பந்த சரணலயர் "புத்தர் சமண்கழுக்கையர்" என்னும் பிள்ளையாரது திருப்பதிகத்தை ஓதி தடுத்த புத்தநந்தியின் றலை யிடரி விழும்படி இடி இடித்து விழக்கடவது என்று சொல்லியருளினர் உடனே அவ்வாறு முடிந்தது. அடியார் கள் ஆரவாரித்தார்கள். சாரிபுத்தன் வாதுக்கு வந்தான். அப் போது திராவிட லோகராகிய சம்பந்தசரணலயர் சாரிபுத்தனைச் சமய நிராகரணஞ் செய்து வென்று பிள்ளையாருடைய திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்தார். புத்தர்களுக்குச் சைவத்தினுண்மை இனிது விளங்கின மையால் சைவராகிப் பிள்ளையாரது திருவடிகளாய் உயர்ந்தார்கள்.

சீகாழிப்பிள்ளையார் அங்குநின்று நீங்கித் திருக்கடவூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு அப்பர் சுவாமிகள் இருப்பதாகக் கேள்வியுற்றுத் திருப்பூந்துருத்தி நோக்கி வரும் வழியில், வாக்கின் மன்னவர் தம்மை ஒருவருமறியாதபடி திருக்கூட்டத்துள் நுழைந்து சிவிகை தாங்குபவர்களிற் றூமும் ஒருவருகச் சுமந்துகொண்டு வந்தார். திருப்பூந்துருத்தி சமீபிக்க உடனே "அப்பர் எங்குற்றூர்" என வினவினர்; அதனைக் கீழே சிவிகை தாங்கிநின்ற அப்பர் ஸ்வாமிகள் கேட்டு "அடியேன் தேவரீரைத் தாங்கும் பெருவாழ்வுற்றிருக்கின்றேன்" என்று உடனே விடைபகர்ந்தனர். அதனைக் கேட்ட பிள்ளையார் பதைத்துச் சிவிகையினின்று மிறங்கி அப்பர் சுவாமிகளை வணங்கினர். அவர் வணங்குவதன் முன்னர் அப்பர் சுவாமிகள் அவரை வணங்கினர். அடியார்கள் யாவரும் அமல மூர்த்திகள் இருவரையும் வணங்கி ஆனந்தித்தார்கள். பிள்ளையார் பாண்டிநாடு சென்று வந்த விசேஷம் புகன்றூர். அப்பர் சுவாமிகள் தாம் தரிசித்த தொண்டை நாட்டின் பிரபவங்கள் கூறினர். பிள்ளையார் மார்க்கத்திலுள்ள தலதரிசனஞ் செய்துகொண்டு திருவோத்தூரை அடைந்தார் அங்கு ஒரு சிவநேசரின் வேண்டுகோளுக் கிரங்கி "பூத்தேர்த்தாயின்" என்னும் திருப்பதிகமோதி அதில் "குரும்பையாண்பனையீன் குலைபோத் தூர்" என்றேதியருளலும் ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாய்ப் பலன்றருவதாயின. பின்பு திருமாகறல் முதலிய பதிகளைத் தரிசித்துத் திருவொற்றியூரை அடைந்தார். சிவதரிசனஞ் செய்து கொண்டு மயிலாப்பூரை நோக்கிவரும் வழியில் வைசிய குலோத்தமராகிய சிவநேசர் என்பவரும் சிவனடியார்களும் எதிர்கொண்டழைத்து வணங்கி அடியார்கள் பிள்ளையாரை நோக்கிச் சுவாமி! இந்தச் சிவநேசருக்குப் பூம்பாவை என்னும் ஓர் பெண் உண்டு. ஓர் நாள் யாவரும் கூடிய விடத்து பூம்பாவையையும் என் பொருளையும் என்னையும் திருஞான சம்பந்த சுவாமிகளுக்குக் கொடுத்துவிட்டேன் என்று சொல்லி ஆனந்தமடைந்தார். சிலநாளில் பூம்பாவை விஷந்தீண்டி இறந்தாள். அதுகண்ட அன்பர் "இந்தப் பெண்ணைப் பிள்ளையாருக்கென்று அர்ப்பணம் பண்ணினமையால் நான் இப்போது துன்புறவேண்டியதில்லை, இவ்வுடலைத் தகனஞ் செய்து பிள்ளையார் வரும் வரையும் என்பையுஞ் சாம்பரையுஞ் சேமித்து வைப்பேன்" என்று துணிந்து அவ்வாறே தகனஞ் செய்து எலும்பையுஞ் சாம்பரையும் குடத்திலிட்டுக் கன்னிமாடத்தில் உபசாரத்துடன் வைத்திருந்தார். இவருடைய விருத்தாந்தம் இது என்று பணிந்தார்கள். இவ்வருமை கேட்டருளிய

பிள்ளையார் சிவநேசரே! உமது திருமகளாரது என்பு நிறைந்த குடத்தைத் திருமதிலின் புறத்தே கொண்டு வாருமெனலும் கபாலீசரது அபிமுகத்திலே வைத்தார்கள். அதனைப் பிள்ளையார் கண்டு பரமசிவனது திருவருளின் பெருமையைச் சிந்தித்துத் திருவருளுக்கினாலே பூம்பாவாய் என்று அழைத்து "பூமியிலே மானிட ஜென்மமெடுத்தவர்கள் பெறும்பயன் சிவனடியார்களுக்குத் திருவமுதூட்டுதலும், சிவபிரான் பொருட்டுச் செய்யப்படும் திருவிழாச் சிறப்புக்களைக் கண்களினாற் கண்டு இன்புறுதலுமே என்பன சத்தியமாயின் நீ இவ்வுலகர் முன் வருவாய் என்று "மட்டிட்டபுன்னை" என்னும் திருப்பதிகத்தை ஓதியருளினர். அதில் அருளிச் செய்த "போதியோ" என்னும் திருவாக்கிய அமிர்தம் அவ்வங்கத்திலே பொருந்த அது குடத்தினுள்ளே சரீரமாய்ப் பரிணமித்தது. பூம்பாவை முதற்பாடலில் வடிவு பெற்று இரண்டு முதல் எட்டாவது பாடல்வரையில் பன்னிரண்டு வயதடைந்து அக் குடத்திற்றானே அடங்கியிருந்தனள்.

அப்போது பிள்ளையார் பூம்பாவையைக் குறித்து நீ குடத்தினுளடங்கி வெளிப்படாமலிருப்பது தக்கதன்று. சமணர்களும் புத்தர்களும் பரிகசிப்பார்கள் என்னுங் கருத்தினாற் பத்தாம் திருப்பாட்டை அருளிச் செய்தார். அது பொழுது பூம்பாவை தன்கை வெளிதோன்றக் குடமுடைந்து எழுந்தாள். அது கண்டு பிள்ளையார் திருக்கடைக் காப்புச் சாத்தியருளினார். அது கண்டவர்களெல்லாம் அன்பும் அதிசயமுமதிகரித்துப் பலவாறு துதித்து வியந்தார்கள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். அடியார்கள் ஹர ஹர என்று ஒலித்தார்கள். பிள்ளையார் கபாலீசரிடத்து விடைபெற்றுக் கொண்டு திருவான்மியூர் முதலிய தலதரிசனஞ் செய்து கொண்டு சீகாழிக் கெழுந்தருளினர். அப்போது சிவபாதவிருதயர் ஏனையரும் கூடி வைதிகந் தழைத்தோங்குமாறு திருக்கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று இரந்து கேட்டுக்கொண்டார்கள். அதற்குப் பிள்ளையார் அரிதிலிசைந்தனர். உடனே திருநல்லூரில் நம்பியாண்டார் நம்பி என்பவரது திருமகளாரை மணம்பேசி விதிப்படி சிறப்புடன் திருமணங் கொண்டு ஓமாக்கினியை வலம் வரும்பொருட்டு எழுந்து பரமசிவனைத் துதித்து "அக்கினியாவார் பரமசிவனே" என்று திருவுளங்கொண்டு மனைவி கையைப் பற்றிக்கொண்டு ஆலயத்துக்குப் போய் "நல்லூர்ப்பெருமணம்" என்னும் திருப்பதிகம் பாடியருளப் பரமசிவன் கருணைகூர்ந்து உன் காதலியுடன் நீ நம்மிடத்துக்குவா

என்றருளியவுடன் அவ்வாலய முழுதும் சோதிமயமாய் அச்சோதியில் ஓர் வாயிலை வகுத்துக் காட்டினர். அதனைக்கண்ட பிள்ளையார் "காதலாகிக்கசிந்து" என்னும் நமசிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளி அங்கு வந்திருப்பவர்களை யெல்லாம் அவ்வாயினிலுள்ளே பிரவேசிக்கச் செய்துதாமும் கலியாணப்பெண் கையைப் பற்றியபடியே அச்சோதியை வலம் வந்து பிரவேசித்து மறைந்தருளினர். பின்பு அச்சோதி மறைந்து பழையபடி ஆலயமாக விருந்தது. இவ்வதிசயத்தைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் வருந்தித் துதித்து வாழ்த்தினர்கள் பிள்ளையாரது பெருமை எங்கும் பரவியது.

---

உ

சிவமயம்.

# காந்த காண்டம்.

## சூரனுதியர் செயற்கை.

அரிய தவத்திற் சிறந்த முனிவர்களே! சுப்பிரமணியக்கடவுள் திருநாககிரிக்கு எழுந்தருளிய விசேஷங்களைச் சொல்கின்றேம். சிரத்தையோடு கேளுங்கள் என்று சூத முனிவர் கூறுகின்றார்.

மரீசிபுத்திரராகிய காசிபரிஷியின் மனைவியர் இருவரில் அதிதி என்பவள் பல தேவர்களைப் பெற்றனள். திதி என்பவள் பல்லாயிரங் கோடி கூட்டமாகிய அசுரர்களைப் பெற்றனள். "காசிபருக்குப் பிறந்த அறுபத்தாறு கோடி இராக்ஷதருக்கரசனாகிய அக்கிரகேசன் என்பவன் சுமாலிபுத்திரியாகிய பிங்கலகேசியை மணம்புரிந்து பாக்கிய வசத்தால் சுரசை என்னும் பெண்ணைப் பெற்றான். அவள் வடிவைப் பார்த்த அசுரகுருவாகிய சுக்கிரன் மாயவித்தைகள் அனைத்தையும் மந்திரபூருவமாகப் போதித்து மாயை என்று பெயரிட்டான், அசுரர் குறைவினையும் தேவர் பெருமிதத்தையும் யோசித்து மாயையை ஆசீர்வதித்து, தாழ்க்காமல் இலக்குமிக்கு மேலாகிய வடிவு பொருந்தி வனத்திலே தவஞ் செய்யும் காசிபரிடம் போய் அவரை மயக்கி இரவிற் கலந்து வலிய பிள்ளைகளைப் பெற்று, சத்துருக்களாகிய தேவர்கள் பழியின் மூழ்க அரிய தவங்களைச் செய்ய அனுப்பிய பின் திரும்புவாய் எனக் கட்டளையிட்டேகினன். பார்த்த பெண்களும் மோகங் கொள்ளத் தக்க திருவுருக்கொண்டு மாயை காசிபர் தவஞ் செய்யும் இடஞ்சென்று அந்த வனத்திலே பொன்னுலகமோ அளகாபுரியோ என மயங்குமாறு மாடமாளிகை கூட கோபுரங்களைத் தனது மாயவித்தையால் தோற்றுவித்து வயிரக் குன்றினிடத்துச் சோடச கலைவாய்ந்த சந்திரனைப் போலக் காசிபர் வரும் வழியில் மாயை நின்றனள். கற்பகத் தருக்களிலே தாவும் வல்லிசாதகக் கொடிதான் இப்பூங்கொடி போன்று வந்ததோ என மாரன் கணைக்கிலக்காய் மயங்கி விளக்கிற்பட்ட விட்டில்போல் வாடித்தொடர்ந்து வேண்டவும் மாயை ஒவ்வாதவளாய் மறுக்க, முனிவர் அறிவிழந்து ஓ பெண்கள் நாயகமே, அடியேன் என்ன பிசகு செய்திருக்கினும் மன்னித்து

மன்மதவாதையிலிருந்து பிழைப்பிக்க வேண்டுமென்று இரந்து அடியில் விழுந்து வணங்கினார். மாயை மனசிரங்கி ஓ இருஷியே! பயப்படவேண்டாம், என் சுந்தரவடிவிற்கும் அழகுக்கும் தகுந்த மேனியும் வளப்பும் பெறுவீராயின் உம்மை அணைவேனென்று சொன்னாள். இது செவிகளுக்கமுதமாக கேட்டுக் காமக் கடலுள் ஆழ்ந்து கரைகாணாத காசிபர் சந்தோஷசாகரத்திலிழிந்து, பெண்ணே! நீர் ஏவியபணிவிடை செய்யக் காத்திருக்கின்றேன் என்று மன்மதனும் நாணும் படியாகிய உருக்கொண்டு நிற்க, மாயை மகிழ்ந்து இருஷியின் கரத்தைப்பிடித்துச் சென்று சுவர்ணமயமாகிய ஓர் மண்டபத்தில் ரமணீயமாகிய சப்ரகூட மஞ்சத்தில் இருவரும் முதற் சாமத்தில் சரச சல்லாபமாய்க் கலந்தனர். புயவன்மையில் ஒப்பில்லாத சூரபன்மன் மாயையிடத்து உற்பவித்தான். காமப்போரிலுண்டாகிய வெயர்வையில் ஜயசாலிகளாகிய முப்பதினாயிரம் வெள்ளம் தானவர் உதித்தனர். இரண்டாஞ் சாமத்தில் மற்றொரு மண்டபத்தில் சிம்மரூபங் கொண்டு கலவி செய்தார்கள். பராக்கிரமசாலியாய் ஆயிரமுகம் இரண்டாயிரம் கரங்களுமுள்ள சிங்கமகாசுரன் பிறந்தான். வியர்வையில் நாற்பதினாயிரம் வெள்ளம் சிங்கமுகமுள்ள அசுரர்கள் பிறந்தார்கள். மற்றொரு சித்திர மண்டபத்தில் மூன்றாம் சாமத்தில் யானையுருவெடுத்துக் கூடினார்கள். நான்கு கொம்புகளையுடைய யானைமுகத்தோடு தாரகாசுரன் உதித்தான். கூடிக் கலவும் காலத்துண்டாகிய வேர்வையில் நாற்பதினாயிரம் வெள்ளம் கஜமுகங்களை பெற்ற அவுணர்கள் உதித்தார்கள், நான்காஞ் சாமத்தில் மற்றொரு சித்திரமண்டபத்தில் இருவரும் செம்மறி யாட்டுருக்கொண்டு சேர அசமுகி என்னும் பெண் பிறந்தனள். அத்தருணத்தில் அவ்விருவர் வேர்வையினும் முப்பதினாயிரம் வெள்ளம் அவுணர்கள் பிறந்தார்கள். பின்பு விடியற்காலத்தில் மற்றைய மண்டபங்கடோறுஞ் சென்று யாளி புலி குதிரை மான் கரடி முதலிய மிருகங்களின் வடிவைப் பெற்று புணர அவ்வம்முகங்களைப்பெற்று அறுபதினாயிர வெள்ளம் அவுணர் தோன்றினர். இவ்வாறு மாயையானவள் சூரன் முதலிய நான்கு பிள்ளைகளையும் இரண்டு லக்ஷம் வெள்ளம் சேனைகளையும் ஓரிரவிற் பெற்றனள்."

இருள் நீங்கி வெளிச்சம் தோன்றியவுடன் திசைகள் செவிடுபட ஆர்ப்பரித்துவரும் அவுணவெள்ளத்தைப் போற்றி வந்த சூரபன்மன் துணைவரை நோக்கி, இனி நாம் நடந்துகொள்ள வேண்டிய காரணங்களைப் பற்றி நமது குரவரை அணுகிக் கேட்டுக்கொள்ளலாம்

எனச் சொல்லி எதிரில் நின்ற தாய் தந்தையரை வணங்கிக் குரவரே! நாங்கள் இனிமேல் நடந்துகொள்ளவேண்டிய கிரமங்களையும் அதற் கடுத்த நீதிகளையும் கட்டளையிடுவீரென்று போற்றக் காசிப ரிஷியும் பிள்ளைகளே! நான் உங்களுக்கு ஒருறுதியை உணர்த்துகின்றேன். நீங்கள் மூவிரும் அந்நெறியே நிற்கக்கடவீர்கள். "அறிவால் அமைந்த பெரியோர்கள் ஆராயத்தக்க பொருள் பதி, பசு, பாசம் என மூன்றும் வேதாகமங்களெல்லாவற்றாலும் உணர்த்தப்படுவன இவையே. நித்தி யராய், வியாபகராய், ஞானானந்தமயராய், உயிர்கள் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந் தொழில்களையும் செய்யுஞ் சிவபெருமானே பதி எனப்படுவர். வேண்டு தல் வேண்டாமையில்லாத சிவபெருமானுடைய இலக்கணத்தைச் சொல்லுதல் யாவர்க்கும் அரிது. வேதங்களாலும் துணியப்படாத அவருடைய இலக்கணத்தை இத்தன்மையதென்று நாம் பேசவல் லமா! ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாகிய பாசங் களாலே பந்திக்கப்பட்டுள்ள பசுக்களாகிய உயிர்கள் எண்ணில்லாதன. அவை அநாதியே உள்ளன. அவை தாம் தாம் செய்த நல்வினை தீவினை களினாலே இடையறாது பிறந்திறந்துழலும். பிருதிவியண்டத்தும் அப்புவண்டத்தும், தேயுவண்டத்தும், வாயுவண்டத்தும், ஆகாய வண்டத்தும் உதிக்கும். அவற்றிற்கு ஓரிடமே நிலையென்று சொல் லற்பாலதா! அவை தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்தை யுடையன வாம். அவை பிறக்குமுன் கருப்பத்தினும் அழியும், பிறந்த பின் னும் அழியும், சில நாளிருந்தும் அழியும், காளைப்பருவத்தினும் அழியும், மூப்பினும் அழியும். அவற்றினிலையாமை இத்தன்மைய தென்று சொல்லலாகுமா! உயிர்த்தொகை கதிரெழுதுகளினும் மிகுதி யுடைத்தென்று சொல்லுதலும் அறியாமையே. இறந்த வுயிர்களும் பிறந்த வுயிர்களும் இவ்வளவையுடையன என எண்ணற்பாலனவா! கல்வியும், வீரமும், செல்வமும், வலியும், பிறவும் நீர்க்குமிழிபோல நிலையில்லாதனவாம். தருமம் என ஒரு பொருளுண்டு. அது இருமை யின்பத்தையும் எளிதிற் பயப்பது. அது அருமையினெய் தும் பொருள். அது ஒருமையுடையோர்க்கன்றிப் பிறர்க்கு அறிவ தரிது. இத்துணைச்சிறப்பினதாகிய தருமத்தை ஒருயிர் செய்யுமாயின் அன்பும், அன்பின்குழவியாகிய அருளும் உண்டாகும். அவை உண் டாக, தவம் உண்டாகும். அது உண்டாக, அவ்வுயிர் சிவபிரானை அடையும் அடையின், பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று

நீங்கி, பேரின்பத்தை அனுபவிக்கும். ஆதலால், தவம்போலச் சிறந்தது பிறிதொன்றுமில்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவஞ் செய்து, முத்தி யின்பத்தைப் பெற்றவர் சிலர், இம்மை யின்பத்தைப் பெற்றவர் சிலர், இருமை யின்பத்தையும் பெற்றவர் சிலர். தம்முடம்பை வாட்டி நெடுங்காலந் தவஞ் செய்தவரல்லரோ தேவர்களாகி மேற்பதங்களைப் பெற்று வாழ்வோரெல்லாரும். பத்திமையோடு தவஞ் செய்து முத்தி யின்பத்தைப் பெற்றவர்களை இவ்வளவினர்களென்று சொல்வதரிது. தவஞ் செய்து இருமையின்பத்தையும் பெற்றவர்கள் பிரமா விஷ்ணு முதலியோர். தவஞ் செய்யாது பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யும் பாவிகளுக்கு இருமை யின்பமும் இல்லை. அவர்கள் மீண்டும்மீண்டும்பிர வித்துன்பத் தழுந்துவார்கள். இவ்வுண்மையை அறிந்து அறிவிப்பினும், பூமியினுள்ளோர் கொலை களவு முதலிய பாவங்களினின்றும் நீங்கு கின்றிலர். அதனால் முத்தியின்பம் பெறாது சனனமரணத் துன்பங் களை அடைகின்றனர். இருமை இன்பத்துக்கும் ஏதுவாயுள்ள தவத் துக்கு உயர்வுமில்லை, ஒப்புமில்லை தவத்தை ஒப்பது தவமேயாம். ஆத லால், பிள்ளைகளே! நீங்கள் தருமத்தைச் செய்யுங்கள். பாவத்தை விலக்குங்கள். சிவபெருமானைத் தியானித்துப் பெருந்தவம் புரியுங்கள் இதுவன்றிச் செய்யத் தக்கது யாது! உடம்பை வாட்டித் தவஞ் செய்வோர் உலகமெல்லாம் வியக்கும்படி வாழ்வர், அடைந்தாரைக் காப்பர், பகைவரை அழிப்பர், விரும்பிய பொருள்களெல்லாம் அடை வர், நித்தராய் இருப்பர் என்றனர். இதனை அருகிருந்த மாயை கேட்டு நகைத்துப் பிள்ளைகளே! மேலாகிய மோக்ஷவீட்டை விரும் பும் தவசிகள் விசாரிக்கும் வேதசாரத்தை முனிவர் போதித்தனர். நீங்கள் சகல சம்பத்துக்களையும் தீர்க்காயுளையும் ராஜாராஜாக்கள் வணங் கும் மேம்பாட்டையும் பெற்றுச் சக்கிரவர்த்திகளாய் வாழவேண்டிய வழி நாட வேண்டியது. அஃதாவது 'கல்விப் பொருள் செல்வப் பொருள்' என்னும் இரண்டுக்கும் மேலாகிய பொருள் உலகத்தில் ஒன்றுமில்லை. இலட்சுமிகரமாகிய பொருட் செல்வம், அழிவற்ற கல்விச் செல்வம் என்னும் இவ்விரண்டிலொன்றைப் பெறாத ஜன்மம், உழன்று திரியும் பேய் ஜன்மமாகும். உணர்ச்சிக்குரிய பலகலைகளை யும் ஆய்ந்த பண்டிதராயினும் அனுபவத்துக்கு வேண்டிய வஸ்துக் கள் இல்லாவிடின் அதனைத் தரும் பொருளைப் பெறவேண்டிப் பகை வரையும் பணிந்து நிற்பாராயின், கல்விப் பொருளினும் செல்வப் பொருள் ஏற்றமுடைத்தாகின்றது என்பது ஆயவும் வேண்டுமோ? பேரறிவாளரேயாயினும் திருவைப் பெறாராயின் அவர்களை உலகம்

மதியாது இகழும். போக போக்கிய அநுபவங்களையும், பலரும் வந்தித்துப் புகழத்தக்க கீர்த்தியினையும், தவ விரதங்களையும், கெம்பீரத்தையும், இம்மை மறுமைச் சம்பத்தையும், மற்ற மேம்பாடுகள் அனைத்தையும் கொடுக்கத்தக்கது செல்வமாதலின்செல்வப் பொருள் விசேஷமுடையது. செல்வம் வேண்டுமாயின் தீரம் வேண்டும். அச்செல்வத்தைப் போற்றினால் அதிக செல்வவானாகலாம் அதை அடைதற்கு வீரமாமகத்தைச் செய்யுங்கள். அதற்கு வேண்டிய உபகரணங்களை உதவுகின்றேன் என்ற சகல மந்திர தந்திரங்களையெல்லாம் மனப்பூருவமாக உபதேசித்தாள்.

தாயார் வார்த்தையைக் கேட்ட சூரபன்மன் துணைவரைக் கூவித் தவஞ் செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் சேகரிப்பதுமன்றிக் காவலாகவும் இருங்களென்று அஞ்ஞாபித்து, விசாலமாகிய மதிலெழுப்பி, அவுணவெள்ளங்களைக் காவல்வைத்து, நடுப்பிரதேசத்தில் ஆயிரயோசனைப் பரப்பு ஆழமுமாகிய ஓமக் குண்டத்தையும் அதனைச்சூழ வேதிகைகளையும் அமைத்து, சூழ நூற்றெட்டுக் குண்டங்கள் அமைத்து, அவற்றைச் சூழ ஆயிரத்தெண்வகைக் குண்டங்களையும் கெல்லிவைத்து, இவ்வாறு மூவகைக் குண்டங்களும் அது அவ்வவற்றிற்குரிய வேதிகைகளும் கிரமப்பிரகாரம் அமைப்பித்து, மதிற்புறவாயில் முதலியவைகளைப் பூசித்து, ஆயிரத்தெட்டுக் குண்டங்களிலே பலி முதலியன கொடுத்து, இந்த வேதிகை முதலியவைகளைப் பூசித்திரு என்று தாருகாசுரனைக் கட்டளையிட்டு, நூற்றெட்டுக் குண்டங்களைச் சேர்த்து பலிமுதலியன புரிந்து சிங்கமகாசுரனைப் பூசித்திருக்குமாறு உத்தரவுசெய்து பின்னர் அகன்று விசாலம் பொருந்திய பிரதான குண்டத்துச் சென்று, பலவிதமாகிய பலி முதலியன உதவிப் பலகாலம் தவமியற்றியும் பரமேசுவரர் பிரத்தியக்ஷமாகாமையால் துணைவரைக்கூவி இந்த யாகத்தை நீங்களிருந்து முடியுங்களென்று ஆஞ்ஞாபித்து தன் உடைவாளை உருவிச் சற்றும் கூச்சமின்றித் தன் சரீரத்தில் ஒவ்வொரு உறுப்புக்களாக அரிந்து அரிந்து குண்டத்திலிடவும் குறைந்தன குறையாது வளர்ந்து வளர்ந்து வருவன தெரிந்து, அந்தரத்தில் நின்று ஆயிர வருஷம் வரையில் மாமிச யாகத்தைச் செய்தும் பரமேசுவரர் கடாக்ஷியாமையால், இத்தேகத்தை வைத்திருப்பதில்லை என்று திடசித்தங்கொண்டு கொழுந்துவிட்டெரியும் யாகக் குண்டத்தின் மத்தியிலே பழுக்கக் காய்ந்து மந்திரவலியால் அழிவற்றிருக்கும் வச்சிர ஊசிமேல் குதித்தான். அவ்வூசி கபாலத்துமேலே ஊடுருவிப் போகவும் வேள்விக் குண்டத்

தின் அடியில் துகள்படவிழுந்து புதைத்து மாய்ந்தனன், இதனைக் கண்டிருந்த சிங்கமாமுகன் பதைத்து வருந்தி மயங்கி ஒருவாறு தேறித் தமயனைப் போலவே நாமுஞ் செய்யலாமென்று பிரதான குண்டத்திற் சேர்ந்து கிரமமாகப் பூசித்து தன் சிரகரங்களைக் கொய்து கொய்து சமித்துக்களாகக் குண்டத்திலிட்டுவந்தான். கழித்த சிரமும் கரமும் முளைக்க முளைக்கப் பறித்துப் பறித்து அவிகொடுத்து வந்தான். இதனைக் கண்ட அவுணவீரர்கள் தாங்களும் அவ்வாறே செய்யத் தலைப்பட்டார்கள். சிங்கமகாசுரன் கொய்து கொய்து போட்டுக் கை ஓய்ந்து நமக்கும் காளகண்டமூர்த்தி பிரசன்னமாக வில்லை தமயனைப் போல நாமும் குண்டத்தில் விழுந்து மாய்ந்துவிட லாமென்று வானத்தெழும்ப மனசிற் றிடங்கொண்ட மாத்திரத்திலே திரிநேத்திரமுடைய சிவபெருமான் ஒரு கிழப்பிராமண வடிவமாய்க் கோலூன்றி அக்குண்டத்தருகில் வந்து, நீங்களெல்லோரும் கிலேச சிந்தராய் இருக்கவேண்டிய காரணம் என்னை என்று வினவ, தன் விருத்தாந்தமெல்லாங் கூறினன். விசனப்படாதே உன் தமையனை வரவழைக்கின்றேம் என்று திருவாய்மலர்ந்தருளி கங்கையை ஓம குண்டத்துச் சொரியுமாறு அருள, கங்கை விழுந்தமாத்திரத்தில் சூரபன்மன் எழுந்து விருஷபாரூடராக நின்ற சொரூபத்தை வணங்கி வரம் வேண்டினன். அரிய வீரமகாவேள்வி செய்த சூர பன்மனே! நீ கேட்டுக்கொண்டவாறு பிருதிவிதத்துவத்தில் ஆயிர கோடி அண்டங்கள் உண்டு. அவற்றுள் ஆயிரத்தெட்டு அண்டங் களுக்கு அதிபதியாய் நூற்றெட்டுயுகம் வரையும் அரசு செலுத்தக் கடவாய். அந்த அண்டங்கடோறும் நினைந்தவாறு சென்று வரக் கூடிய இந்திர ஞாலத்தேர் ஒன்றும், பாதுகாக்கத்தக்க வலியமைந்த சக்கரமொன்றும் வீரமுள்ள சிங்கவாகனம் ஒன்றும், தேவர்களுக் கெல்லாம் தலைமை பெற்று வாழும் மேம்பாடும் பராக்கிரமமும், பாசுபதாஸ்திர முதலிய தேவப்படைக்கலங்களும், வச்சிராயுதமும் பதினாயிரக் கோடி வெள்ளமாகிய யானைகள் குதிரைகள் தேர்கள் அசுரர்கள் கலந்த சைனியங்களும் கொடுத்தார். சிங்கமாமுகனும் தாருகனும் வணங்கச் சூரபன்மனைப்போலவே ஜயஜாலிகளாய்த் தேவாதிகளைப் போர்களத்தில் வென்று முதுகுகண்டு கீர்த்திப்பெற் றிருப்பீரென வரமுதவி மறைந்தனர். துணைவருஞ் சேனைகளுஞ் சூழச் சூரபன்மன் சென்று தந்தையாரைக் கண்டு வணங்கி ஆசீர் வதிக்க பின்பு சுரகுருவாகிய சுக்கிரபகவானிடஞ் சென்று நீதி போதிக்க வேண்டினன். தேவர்களெல்லோரினும் சூரபன்மனே!

நீ மேன்மை பொருந்திய பாக்கியங்களை அடைந்தனை. நீயே பிரமமென நினைத்துக்கொள், உனது சத்துருக்களாகிய தேவர்களை அடிமைகொண்டு ஆண்டு வருவாயாக என ஆசீர்வதித்தனர்.

பராக்கிரமசாலியாகிய சூரபன்மன் மகிழ்ந்து பத்துத் திசைகளினுஞ் சென்று யாவரையும் வெற்றிகொண்டு பின்பு விசுவகர்மனை அழைத்து நகரம் ஒன்று உடனே உண்டாக்குதி எனக்கட்டளையிட்டனன். விசுவகன்மன் தென்சமுத்திரத்தைச் சார்ந்து எண்பதினாயிர யோசனைப் பரப்பில் அதிவிநோதாலங்காரமாகச் சூரபன்மன் வாசஞ் செய்ய வீரமயேந்திரபுரத்தை அமைத்து, அதனைச் சூழக் காவலின் பொருட்டு எண்திசையினும் ஏமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணபுரம், வாமபுரம், பதுமபுரம் என்பவைகளை அமைத்து, வடசமுத்திரஞ் சார்ந்து சிங்கமகாசுரனுக்காக ஆசுரபுரத்தை நிருமித்து, நாவலந்தீவில் ஏமகூட பருவதத்தருகிலே தாருகாசுரனுக்காக மாயாபுரத்தைப் படைத்து. பின்னர்ச் சூரபன்மனிடஞ் சென்று அமைத்த விவரத்தை விண்ணப்பித்தனன். நல்லவேளையிற் பிரவேசித்துப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்ட அசுரேந்திரன் விவாகஞ் செய்துகொள்ள நினைத்தான். விசுவகன்ம குமாரத்தி பதுமகோமளையைச் சூரபன்மனுக்கும், அக்கினிதேவன் குமாரத்தி விபுதையைச் சிங்கமாசுரனுக்கும், நிருதிபுத்திரியாகிய சவுரியைத் தாருகாசுரனுக்குமாக விவாகம் நடைபெற்றது.

விஷ்ணுவை தான் வேண்டும் நிமிஷத்தில் வந்து செய்திகளைக் கேட்கவேண்டும் என்றும், பிரமாவைப் பஞ்சாங்கஞ் சொல்லவேண்டும் என்றும், சூரியனைக் குளிர்ந்த கிரணத்தோடு செல்லவேண்டும் என்றும், சந்திரனைப் பூரணகலைகளோடு போகவேண்டும் என்றும், யமனைத் தன் சேனை காவலர் உயிரைக் கொல்லக்கூடாதென்றும், அக்கினியை இந்நாட்டிலிருப்பவர் எவர் நினைப்பினும் அவ்விடஞ் சென்று இட்ட வேலை செய்யவேண்டும் என்றும், வாயுவை நகர்க் குப்பைகளைச் சுத்தி செய்யவேண்டும் என்றும், வருணனை வாயு சுத்தி செய்தவுடன் சுகந்த நீரால் சிறுதுளி தெளித்துத் துகளெழாது அடக்கிவைக்கவேண்டும் என்றும், இந்திரனை நோக்கிச் சகல தேவர்களேரடு வந்து நகரத்தில் என்ன வேலையிடுகிறார்களோ என்று காத்திருக்க வேண்டும் என்றும் ஆஞ்ஞை செய்து, சபையிலுள்ளோர்க்கு வெவ்வேறு பணிகளை ஏற்படுத்தினன். அவ்வாறே செய்வதாக வணங்கினர்கள். இப்படிப்பட்ட ஏவல்கள் செய்து பங்கப்பட்டு வாழும்

நாளில் இந்திராதி தேவர்களை அழைப்பித்து ஓ தேவர்களே! நீங்கள் தானவருக்குத் தம்பியராகும். அவர்களுக்குரிய தொழில்களை முடிப்பது உங்களுக்கு உரிமையாதலால் சமுத்திரங்களிலிருக்கும் மீன்களில் நாம் புசிப்பதற்கு யோக்கியமாகிய பருத்த மீன்களைப் பற்றிக் கொண்டு வந்து கொடுப்பீர்களெனப் புதிய கட்டளையிட்டான். தேவர்களெல்லாம் இவ்வீனத் தொழில்களைச் செய்து மனம் வருந்தித் துக்கித்துக் கொண்டிருந்தார்கள். இங்ஙனம் அரசுபுரிந்து வருங்காலத்தில் வீரதீர பராக்கிரமமுள்ள புத்திரர்களைப் பெறவேண்டுமென நினைந்து நாரதரால் விவரமறிந்து கைலாசத்திற் சென்று பரமேசுவரரை வணங்கி எம்பெருமான் அருளாற் பெற்ற வந்தியாபாஷாணம் என்னும் சிலையைத் திருச்செங்கோட்டு நாககிரியிற் கொண்டுவந்து விதிப்பிரகாரம் பிரதிஷ்டை செய்து வலம் வந்து பூசித்து உமையொரு பாகரையும் தரிசித்து வந்தான். சூரபன்மன் அந்த பலப் பிராப்தியால் பானுகோபன் முதலிய புதல்வரைப் பெற்று வாழ்ந்திருந்தான். இவ்வாறு சூரபன்மன் தாருகன் சிங்கமாமுகன் முதலியோரால் வருத்தமுற்றுத் தேவர்கள் நடுநடுங்கிப் பிரமதேவரிடம் முறையிட்டார்கள்.

---

சிவமயம்.

# சண்முகருற்பவம்.

சினமிறக்கப் பெற்று செந்தண்மை பூண்ட முனிபுங்கவர்களே இங்ஙனம் முறையிட்ட தேவர்களைப் பிரமதேவர் நோக்கி தேவர்களே! முன்னர்ச் சிவபிரானை அவமதித்த தக்கன் யாகத்தில் நாமெல்லாம் கூடியிருந்த குற்றத்துக்காகப் பரமேசுவரர் நமக்கு விதித்த தண்டனையன்றோ இவ்வசுரர்களிடம் நாம் ஈனத்தொழில் செய்து மானங்கெட்டுக் கஷ்டப்படுவது. கஷ்டப்பட்டோர் சுகம் பெறுவர் என்னும் பழமொழிக்கேற்ப நாமும் சுகப்படுவோம். ஏழைகளாகிய நம்மீது தயைபுரிந்து முக்கணெம்பெருமான் ஒரு மகவருளுவர் என்னும் தெய்வரகசியமுண்டு. ஆதலின் அஞ்சன்மின் என்ற பிரமதேவரை நோக்கி ஓ அன்னவாகனக் கடவுளே! எளியேங்கள் இயற்றுங் காரியத்தைக் கட்டளையிடுதல் வேண்டுமெனக் கேட்டார்கள். சிவநிந்தகனாகிய தக்கனுடைய பெண் என்ற இழிவை நீக்கிக்கொள்ள வேண்டி இமயவரதனென்னும் மலைக்கு மகளாய் அவதரித்துத் தவம் புரிந்துகொண்டு உமாதேவியார் இருக்கின்றார். மூன்றாம் பிறையை முடியில் அணிந்த சதாசிவமூர்த்தி சனக சனந்தன சனாதன சனற்குமாரர் என்னும் முனிவர்களுக்கு ஞானயோகத்தைக் கல்லாவின் கீழிருந்து காட்டிக்கொண்டிருக்கின்றார். அவ்விடம் விட்டுப் பார்வதியாரை விவாகஞ் செய்தற்கியைந்த தந்திரஞ் செய்யுங்கள் என்று தேவர்களுக்குப் பிரமா சொன்னார்.

தேவேந்திரன் மகிழ்ந்து அழகிய புஷ்பபாணங்களையுடைய மன்மதனை அழைத்து ஓ ரதிபதியே. அவுணர்களால் வருந்தும் தேவர்கள் சுகிக்குமாறு நீ சகாயஞ் செய்யவேண்டும். அண்டபுவனங்களையும் தேவர்களையும் முனிவர்களையும் சிருஷ்டிப்பவர் உமது தமையனாராகிய பிரமதேவர். படைத்தப் பொருள்களை அன்புடன் இரக்ஷிப்பவர் உமது பிதாவாகிய விஷ்ணு. எல்லா நலங்களும் அனுபவிக்கப் பாக்கியந் தருபவர் உமது மாதாவாகிய இலட்சுமிதேவியார். இவ்வாறு மேன்மைபெற்ற தமையன் பிதா மாதாக்களையுடைய நீர் தேவர்களுக்குத் துக்கநிவாரணஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றீர் என்ற மகவானை நோக்கி ஓ சசிபதியே! இதன்பொருட்டு என்னாலாகும் காரியஞ் செய்யச் சித்தமாக இருக்கின்றேன் என்றான் மன்

மதன். யோகியர்க்கு உபதேசித்திருக்கும் சிவபிரான்மீது உமது மலர்க்கணையைத் தூண்டி எழுந்தருளச் செய்யவேண்டுமென்றவுடன் திடுக்கிட்டு ஓ இந்திர! இது அடாத காரியம் பரமேசுவரனை அவமதித்தால் நாசமாகும் என்றான். பலபேர்க்குச் சுகமுண்டாகும் காரியஞ் செய்வதால் செய்தவனுக்குக் கெடுதிவருவதாக இருக்கினும் அதனை அனுபவித்துக் கீர்த்தியையும் புண்ணியத்தையும் புத்திமான்கள் சம்பாதிப்பார்கள்; ஆதலின், ஓ மன்மதா! காலந்தாழ்க்காமல் இக்காரியத்தை முடித்தருள்வாய் என்று வேண்டிய இந்திரனுக்கிணங்கி, நல்லது! அவ்வாறு செய்கின்றேன் என்று உறுதி கூறி மகுடமிலங்க இரண்டு காதுகளினும் இரத்தின குண்டலங்கள் தரித்து நவமணி வாகுவலயங்களைப் பருத்துயர்ந்த தோளிற் புனைந்து, பிரமவிஷ்ணுக்களளித்த மதாணிகளை மார்பிடைபூண்டு சுவர்ணமயமாகிய பூந்துகிலுடுத்தி, இடையிற் கச்சை கட்டி, தாழம்பூ மடற்பூவை உடைவாளாக இடையிற் சொருகி, சுரும்புநாணேற்றிய கரும்பு வில்லைக் கையிலேந்திக் குணத்தொனி காட்டி, ஒள்ளிய இரதிதேவியும் வசந்தனும் அலங்காரத்தோடு இருக்க மகிழ்ந்து போர்க்கோலமாய்க் கிளிப்புரவிபூண்ட தென்றற்றேரேறி, அழகு வாய்ந்த மாங்குயில்கள் எக்காளமூத, மடந்தையர் சேனை முன்னடக்க, சந்திரவட்டங்குடை பிரகாசிக்க, விளங்குகின்ற மகரக்கொடிமேலே அசைய, பெருந்த ஆரவாரத்தோடு மன்மதன் பரிசுத்தவான்கள் உள்ளம்போலத் தாவள்ளியமாகிய கைலையங்கிரி நோக்கிச் சென்றான்.

தேஜோமயானந்த வடிவுற்றுக் குருமூர்த்தமாய் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற இடத்தை அணுகி, பரமஞானமுணர்த்தும் தக்ஷிணாமூர்த்தியைக் கண்டு மயங்கிப் பின்தேறி, புட்பக்கணையைத் தூணியினின்றெடுத்து வில்லில் வைத்துத் தீவிரமாய்க் கணைவிடுவதற்கு இலக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் பூரண அமுத கலசம்போலும் தனங்களின் பாரம் சுமக்கலாற்றாது ஒடிந்து போமோ என்றையுறும்படியாக இடைதுவள, அந்த இடையானது எங்கே முறிந்து போகின்றதோ எனப் பயந்து கல் இணைத்துப் பொற்பூண் பிடித்திருக்கிறதென்ன கோசிகப் பட்டணிந்து மேகலாபரணமிட்டதின்மேல் உதரபந்தம் (ஒட்டியாணம்) பிரகாசிக்க, கொல்லுலையிற் காய்ச்சி அச்சமாகத் தட்டி விஷந்தோய்த்து அகன்று நீண்டிருக்கும் வேல்போன்று மையணிந்து காதளவோடி நீலோற்பல இதழையும் கொழுத்த கெண்டை மீனையும் கயத்துளோட்டிய அருள் நிறைந்த கண்கள் விளங்க, செந்தாமரைப் புஷ்பம்போன்ற கைகளிற் பதும

ராகமணி வைத்திழைத்த வளைகளும், அமாவாசை இருள்போலக் கருத்து நெய்த்து நீண்ட கூந்தலில் அணிந்த மலரருகுற்றுச் சென்று வரும் வண்டினங்களும், ஒள்ளிய பாதங்களில் அணிந்திருக்கும் சிலம்பலம்புகளும் அலம்பும் ஓசைகள் ஏ மன்மதா! ஏன் ஒளித்து மயங்குகின்றனை இதுதான் சமயம் வாவென்று ஜாடை செய்து அழைப்பதாகிய குறி காட்டுவதுபோல சத்திக்க, ஆய்ந்துணர்ந்தோருடைய அஞ்ஞான இருளைநீக்கும் எமது குலதெய்வமாகிய உமாதேவியாரது ஆனந்தமய தேககாந்தியானது தளிர்த்து அரும்பிப் பூத்துக் காய்த்துச் செறிந்த சோலையிருளை நீக்கச் சந்திரனும் சூரியனும் ஒரு பொழுதில் உதித்து வருவதுபோல இரத்தினாபரணங்கள் பிரகாசிக்க, சரசுவதியும் இலட்சுமியும் இருபுறமும் கைலாகு கொடுத்துவர, பிரமதேவரும் விஷ்ணுவும் தேவராஜனும் இனி நம் பகைவர்களாகிய அசுரப் பகையிருட்டு நீங்கிப்போமென்று சந்தோஷிக்க தாருகன் முதலாகிய அவுணர்களுடைய பாக்கியங்களெல்லாம் நடுங்கி உள்ளங்கலங்கவும் மலைமகளாகிய உமாதேவியார் அழகைப் பார்த்து இமயமலையிலுள்ள ஏனைப் பெண்களெல்லாம் நாணங்கொண்டு தாங்கள் அவ்வளவு அழகு பெறவில்லையே என்று தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொள்ளவும், ஒன்றின்பின் ஒன்றாய் மென்மேலும் வரும் ஒள்ளிய கடலலைபோலும், தேவமகளிர் வெள்ளிய சாமரைகளை வீசவும், நமக்குப் பாவச் சுமையை நீக்கி அருளக்கூடிய புண்ணிய சொரூபியின் பாதம் நோதலில்லாதிருக்கவேண்டுமென்று பூமாது மிருதுவாய் மலர்ப்பதத்தைத் தாங்கி பிடிக்கவும், நன்மையைத் தரும் யாகபதியாகிய தேவேந்திரனைப் பீடித்த வினைகளெல்லாம் நடுங்கவும், அழகிய சிலம்புகள் ஒலிக்கப் பாதமலர்சளோடும் இரத்தின வளையலை அணிந்த கைகளாகிய காந்தட் புட்பங்களோடும், மரகதக்கிளியேந்திய கமலம்போன்ற கைகளோடும் கூந்தலாகிய கரியமேகத்தோடும், கண்களாகிய மீன்களோடும் கழுத்தாகிய கமுகோடும், இடையாகிய வஞ்சிக்கொடியோடும் விளங்கச் சர்வாபரண அலங்காரத்தோடு திவ்ய சுவர்ணமயமாகிய பூங்காவில் அதிசயம்போலும் ஐந்து முகங்களையுடைய பரமேசுவரனெதிரில் ஒரு வஞ்சை வந்ததுபோலும் விளங்குகின்ற பார்வதி தேவியார் வந்தனர். அகலாத ஒப்பற்ற புத்திவழி பாட்டினால் நினைத்தற்கரிய இறைவரது திருப்பாத கமலங்களிலே புனிதமாகிய தீர்த்தத்தை விட்டுப் புஷ்பாஞ்சலி செய்யுங் காலத்தில், மன்மதனனவன் தன் வில்லிற் பூட்டியிருக்கும் தாமரை முதலிய கணை மலர்களையும் எய்து சொரிந்தான். அன்புடன் சாத்தியமலர்களோடு

அகந்தைகொண்டு எறிந்த கணைமலர் பரிசித்தவுடன் நெற்றிக் கண்ணைத் திறக்க மன்மதன் சாம்பராயினன். உமாதேவியார் இதற்கு முன்னரே தவச்சாலை நோக்கிச் சென்றனர். சந்திர ஜடாதாரராகிய பரமேசுவரரைப் பர்த்தாவாகக் கொள்ளவேண்டுமென்று உமாதேவியார் பஞ்சாக்கினிமத்தியிலே ஒரு பாதத்தில் நின்று, நின்ற பாதத்தின் மேலொரு பாதத்தை மடித்து அடித்தொடைத் தலத்திற் சேர்த்திறுக்கி ஒருகையிலிடையைப் பிடித்து நின்ற காற்பெருவிரலை அக்கினி குண்ட மத்தியில் நிறுத்திய ஊசிமுனையிலூன்றி ஆதித்தனுக்கு நேராகக் கண்பார்வையினைச் செலுத்திப் பத்தியினால் காரணபஞ்சாசரத்தைத் தியானஞ் செய்து மனசை அசையாது நிறுத்தி இடதுபுறத்திலே இடது கையை அழகுபெற நீட்டி, வலது அங்குலிகள் சிரசின்மீது முகுளிதமாகக் காமனைக் காய்ந்தோன் பாதத்தை நினைத்துப் பிரணவ முதலிய மூல பஞ்சாக்ஷர மந்திரத்தை இடைவிடாமல் தியானஞ் செய்திருக்க, சத்தரிஷி மங்கையர்கள் தனித்தனி வந்து வணங்கிச் செல்ல, மற்றைய தேவமாதர் முதலியோர் பணிவிடை செய்ய அரிய தவத்தைச் செய்தார்.

இங்ஙனம் பார்வதி தேவியார் அரியதவஞ் செய்வதற்கிரங்கி ஒரு பிராமண வடிவுகொண்டு பார்வதிதேவியார் முன் தோன்றி, ஓ மலைமகளே! "பேதமை யென்பது மாதர்க்கணிகலம்" என்பதற்கேற்ப நீ சற்றும் யோசித்துப் பாராமல், எலும்பு பாம்பு எருக்கு முதலியவற்றைத் தரித்துக்கொண்டு விகாரமாகிய கபாலத்தை கையிலே தரித்துக்கொண்டு பிக்ஷைவாங்கி உண்ணும் பித்தன்; சுடலையிலும் தில்லைவனத்திலும் ஆடுகின்றவன்; பூதப் பிரேத பிசாசுகாளிகூளிகள் சூழச் சஞ்சரிக்கின்றவன்; புலித்தோலை உடுத்து யானைத்தோலைப் போர்ப்பவன்; கையிலும் சிரிப்பிலும் விழியிலும் நெருப்புள்ளவன்; விஷத்தை அருந்திக் கண்டங்கறுத்தவன்; தாருகாவனத்து ரிஷிபத்தினிமார்கள் கற்பை அழித்தவன்; திரண்ட எருதிலேறுபவன்; தனியே திரிகின்றவன்; இங்ஙனம் ஆதியந்தமறியாத ஒரு புருஷனை நினைந்து ஆசைப்படுவது அழகாமோ? பார்த்தோர் கேட்டோர் நகைப்பார்களே! ஓ பெண்ணே! என்றவுடன் பார்வதி தேவியாருக்குக் கோபம் பிறந்து சிவ சிவ என இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்ட குறிப்பை உணர்ந்து, தவவலிமையை நன்கு மதித்து விருஷபாரூடராகக் காட்சி கொடுத்தருளினார் பரமேசுவரர். நேத்திரானந்தமாகத் தரிசித்து ஆனந்தம் பெருகப் புளகாங்கிதமுற்று ஸ்தோத்திரம் புரியும் பார்வதிதேவியாரைக் கைலாயம் புகுதலாம்

வருக என்றவுடன் மலையரசனும் மேனையுமாகிய தாய் தகப்பன்மார் மற்றைய தேவர்களுமிருந்து மணவினை முடித்தருளுதல் வேண்டுமென்ற பார்வதிதேவியாரின் கருத்தின்வண்ணம் சப்தரிஷிகளை மலையரசன்பால் விடுத்து மணவினை பேசி எல்லாத் தேவர்களும் முனிவர் முதலியோர்களும் மணக்கோலங்காண அங்குவந்து சேர்ந்தமையால், வடநிலம் தாழ, அதனைச் சமப்படுத்துமாறு அகத்தியரைப் பொதியைக்கனுப்பி, இரதிதேவி வேண்ட மன்மதனை எழுப்பி, பின்பு, வேதாகமோக்தமாகப் பார்வதிதேவியாரை விவாகம் புரிந்தனர். தேவர் முதலியோர் களிப்பெய்தினர். உமையம்மையாரும் சுவாமியும் கைலாயகிரியை அடைந்து களிப்புற்றிருக்கத் தேவர்களெல்லோரும் கூடி அக்கினிபகவானைப் பார்த்து எம்பெருமானுடைய கையிலும் மெய்யிலும் நகையிலும் விளங்குகின்றவனாகிய அக்கினிதேவனே! நீ கைலை சென்று தேவர்கள் முறையை எடுத்துரைத்துக் குறையிரந்து அவுண கூட்டங்களை ஒழிக்கவல்ல நிபுணனாகிய ஒரு பிள்ளையை அருளவேண்டிவா வென்று அனுப்பினார்கள். அக்கினிபகவான் சென்று கைலாசபதிபால் நின்று விழுந்து பணிந்து விண்ணப்பித்துக்கொண்டான். சந்தோஷித்து விந்துவைக் கொடுத்தார், எல்லாப் பொருள்களையும் தகிக்கவல்ல அக்கினிபகவான் அதனைத் தாங்க வலியற்றவனாய் மயங்கிப் பரமசிவத்தின் ஒப்பற்ற சடாபாரத்தில் வீற்றிருக்கும் புனித தீர்த்தம் பொருந்திய சரவணப்பொய்கையில் சிவபிரானுதவிய விந்துவை விட்டுவிட்டான் அக்கினிதேவன். அந்தச் சரவணப் பொய்கைச் சார்பின் தபோவலிமை வாய்ந்த முனிவர் வசிக்கும் அக்கிராரங்கள் இருந்தன. சிவனருளிய பொறியைக் கையிலேந்தி வந்தமையால் மோகமிஞ்சி முனி பத்தினிமார்களைப் புணரவேண்டுமென்று ஆசைகொண்டு மெய்மயங்கி உடல்வெதும்பி வருந்தினான். இதனை அவன் பாரியையாகிய சுவாகாதேவி அறிந்து உலகத்துள்ள பொருள்களை யெல்லாம் தகிக்கவல்லது அக்கினியே என்றிருந்தோம். அவ்வக்கினியையும் சுட்டு அவஸ்தைக்குள்ளாக்குவது காமாக்கினி ஒன்றிருக்கிறதல்லவா? ஆ ஆ இது கொடிது கொடிது என்று தனக்குள்ளே விசனப்பட்டு புருஷனை அடைந்த சுகதுக்கங்கள் மனைவியைப் பொறுத்ததல்லது ஏனையோரைச் சாராது. மனைவி இகபரமிரண்டுக்கும் வேண்டிய சாதனங்களைக் கணவனோடு கலந்து காத்தலின் இரண்டு கண்களுக்குமொரு பார்வையாவது போலக் கணவன் மனைவி என்னும் இருவரும் ஒன்றுபட்டுச் செய்பவர்களாக இருக்கின்றார்கள். ஆதலின் நமது கணவன்கொண்ட காமாக்கினியில்

மாய்ந்து போகாமல் யாதேனும் உபாயஞ் செய்து பிழைப்பிக்க வேண்டும் எனக் கருதி தன் கணவன் ஆசைப்பட்டவர்களாகிய காசிபர், அத்திரி, பராத்துவாசர், விசுவாமித்திரர், கௌமதர், ஜமதக்னி என்னும் ஆறு முனிவர்களின் பத்தினிமார்களாக உருவெடுத்துத் தனித் தனியாகவந்து அக்கினிதேவனோடு கூடிச் சுகங் கொடுத்து மோகலாகிரியை நீக்கினாள். ஆனால் சப்தரிஷிகள் பத்தினி மார்கள் பேரிலும் காதல்கொண்டான். மற்றைய ஆறுபேர்களுடைய ரூபம் எடுத்ததுபோல வசிஷ்டர் பத்தினியாகிய அருந்ததியின் உருவு எடுக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இதனை அக்கினிபகவானறிந்து மகாரிஷிகள் சாபம் வராவண்ணம் காப்பாற்றிய மனையாட்டியைப் புகழ்ந்து பிழைத்தேன் என்று சந்தோஷித்தான். அக்கினி தேவனாலிச்சிக்கப்பட்ட மனைவி என்று ஒவ்வொரு முனிவரும் தங்கள் தவவலிமையால் உணர்ந்து மனவிரோதமுற்று நீங்கிவிட்டார்கள். அந்தஅறுவரும் மனவியாகூலம் தீரும்வண்ணம் சரவணப்பொய்கைக் கரை வந்து சேர்ந்தார்கள்.

சிவமயம்.

# சண்முகர் செயற்கை.

கேட்டீர்களோ சைவபுங்கவர்களே! தங்கள் மனக்கிலேசத்தை நீக்கிக்கொள்ளுமாறு சரவணப் பொய்கைக்கு வந்த அழகிய ஆறு பெண்களும், காண்டற் கரிதாயப் பார்த்தவர்கள் உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளும் வனப்பு வாய்ந்த ஒப்பற்ற இளஞ்சூரியனைப் போன்ற தேககாந்தியுள்ள குழந்தையைக் கண்டமாத்திரத்தில் உற்றிருந்த கரையிலாத் துக்கமெல்லாம் ஓடிப்போயின. அடங்கா மகிழ்ச்சிகொண்டு தாவி எடுத்து முகம் அழுந்த முத்தமிட்டு மார்புறத் தழுவுதற்கு முன் தனபாரங்களிற் பாலூறிப் பீரிட முன்பிர் பீச்சி விட்டு நடுவிரல் சுட்டுவிரல் இரண்டாலும் தங்கள் முலைக்காம்பை யிடுக்கி மெல்லிய கொவ்வைக்கனிபோன்ற குமாரதேவருடைய வாயில் வைத்துச் சுவைக்கச் செய்தனர். ஆறு மங்கையர்களும் பாலூட்டி பாராட்டித் தொட்டிலிட்டுத் தாலாட்டி கொஞ்சிக்குலாவி வளர்த்து வந்தார்கள். கைலாயபதியாகிய பரமசிவன் பார்வதிதேவி யாரை நோக்கி நமது குமாரனைக் கந்தன் சரவணப் பொய்கையில் விளையாடிக் கொண்டிருக்கிறான் பார்த்துவரலாம் மலைமகளே! என அழைத்துக்கொண்டு விருஷபவாகனரூடராய்ச் சரவணப் பொய் கைக் கரைக்கு வந்தவுடன் பார்வதி தேவியார் மகிழ்ந்து மேன்மை யுற்ற தனபாரத்திலிருந்து பாலைப் பொற்கிண்ணத்திற் கிரகித்துவிட்டு என் அருமைக் குழந்தாய்! வா என எடுத்துப் பாலைப் புகட்டி, கொஞ்சி விளையாட்டுக் காட்டிக் குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்த ஆறு பெண்களுடைய மனத்துயரகற்றி நக்ஷத்திர பதவி கொடுத்து, குமாரதேவரைக் கங்கையில் உதித்தமையாற் காங்கேயன் என்றும், சரவணப்பொய்கையில் வந்தமையால் சரவணபவன் என்றும் அழைத்து, விருஷபவாகனத் தேற்றிக்கொண்டு பரமேசுவரரும் பரமேசுவரியும் கைலைக்குச் சென்றார்கள். ஆங்குச் சென்று பரமசிவத்தின் மடியிலும் தோளிலும் பார்வதி தேவியாரின் கையிலும் மெய்யிலும் விளையாடி மகிழும் முருகபிரானுக்கு ஓதிவைக்கவந்த பிரமதேவரை நோக்கிப் பிரணவத்தின் பொருள் யாதென வினவலும் அறியாது மயங்க, அவ்வயன் தலையில் நையப்புடைத்துச் சிறை செய்தனர். இதனை அறிந்த சிவபெருமான் குழந்தாய்! பிரமனை என்

சிறையிலிட்டாய் எனலும் வேதாரம்ப உச்சரிப்புக்கே பொருள் அறியாதவனை வேதியனெனச் சிறையிலிட்டேனெனப் பால் நாற்றம் மாறாத செவ்வாயுள்ள செவ்வேள் கூறவே மகிழ்ந்து உனக்குத் தெரியுமோ எனக் கேட்டவுடன் தெரியும் என்ற குழந்தையின் தீரம் பொருந்திய மொழியைக்கேட்டு அதிசயித்துச் சொல்வாயாக என்றனர். பிரணவத்தின் பொருள் சாதாரணமாகச் சொல்லத்தக்கதல்ல குருசிஷ்ய பாவத்தில் அறிவிக்கத்தக்க பொருள் அன்றோ என்றனர். ஆறுமுகப்பெருமாள் அங்ஙனமாகவே கூறுக என இருந்தவுடன் அறிவிக்கக் கேட்டுப் பிரணவப் பொருளாகிய பரமசிவன் மகிழ்ச்சி பூத்திருந்தனர். அதன் பின்னர் மேருமலை சக்கிரவாளகிரி அஷ்டகுலபருவதங்கள். காஞ்சி, சிதம்பரம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருவானைக்கா, கழுக்குன்றம், திருவண்ணாமலை, தீர்த்தமலை, திருத்தணி, பரங்குன்று, திருச்சிராப்பள்ளி, மதுரை, செந்தில், வேங்கடம், விராலிமலை, பழனி, திருமுருகன்பூண்டி, புள்ளிருக்கும் வேளூர், சீகாழி, மயிலாப்பூர் முதலிய இடங்களெல்லாம் சஞ்சரித்து விளையாடித் திருச்செங்கோட்டுக்கு வந்து திருவிளையாடல் செய்து நாகேசுவரரைத் தரிசனஞ் செய்துகொண்டிருக்கும் காலத்தில் அழகிய சோதி பொருந்திய மரகதக் கொழுந்துபோல விளங்கிய ஒரு லிங்கத்தைக் கண்டு விதிப்படி பூசை செய்து பல வரப்பிரசாதங்களை அடைந்தனர். அன்புகூர்ந்து குமாரக் கடவுள் பூசித்தமையால் குமரேசர் எனப் பெயராயிற்று. இவ்வண்ணம் மகிழ்ந்து வீற்றிருந்தவர் சிலநாள் கைலாயத்திலும் சிலநாள் பிற தலங்களினுஞ் சென்று ஈசுரனைப் பூசித்து உள்ளம் மகிழ்ந்து திருச்செங்கோட்டுக்கு வந்து சேர்வர். எவ்வெவ்விடங்களுக்குச் செல்லினும் எமது ஆறுமுகப் பெருமானுக்குக் கைலையும் செங்கோடுமே மனோரம்மியத் தானமாக அமைந்தமையால், விஷ்ணுலோகம், பிரமபதம், சூரியமண்டலம், அண்டபகிரண்டங்கள் அக்கினிபுரம், பஞ்சபூதஸ்தலங்கள். நாகலோகம், வருணநகர் முதலிய இடங்களிலும், அன்புடனே நினைத்தவர்கள் இருதயங்களினும் பிறவிடங்களினுஞ் சென்றும் மீண்டு நாகமலையிலே அன்புடன் சென்று கிருபைபாலித்திருந்தார் முருகக் கடவுள். ஆனால் ஒவ்வொரு தானங்களிலும் அங்கங்குப் பிரியாமல் சிவகுருநாதன் வசிப்பதாகவே யாவரும் மகிழ்ந்திருந்தார்கள் என்றார் சூதமுனிவர்.

மெய்யைப் பொய்யெனக் கருதும் மெய்ஞ்ஞானிகளே! இந்தச் சிவசுப்பிரமணியக் கடவுளுக்கு இத்திருநாககிரி எப்பொழுதும் அதிக

பிரீதியை விளைப்பதென்பது உண்மை. இளமையில் நமது முருகக் கடவுள் திருவிளையாடல் புரிந்த காலம் மாத்திரமன்று, பின்பு வேலாயுதத்தை ஏவிச் சூரனை இருதுண்டாக்கி ஒன்று மயில் வாகனமும் மற்றொரு துண்டு சேவற்கொடியுமாக ஏற்றுக்கொண்டு வெற்றியோடு ஏமகூடபருவதம், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சோலைமலை, சுவாமிமலை, மேனுட்டிலுள்ள வராககிரி முதலியவற்றில் எழுந்தருளி, பின்னர் திருவாவினன்குடியில் கைலாசபதியை வணங்கி வீற்றிருந்தருளும்போது, ஒருநாள் பஞ்சதருவைப்போலச் செழித்தோங்கி வளர்ந்திருக்கும் சோலையினிடையிலுள்ள உசிதமாகிய மாமரத்திலிருந்து விழுந்த திவ்வியமாகிய ஒரு மாங்கனியைச் சிவபெருமான் திருக்கரத்தில் வைத்துக்கொண்டு ஒரு நொடிப்பொழுதில் இப்பூமண்டலத்தை வலம் வருபவர்களுக்கு இப்பழம் கொடுக்கத்தக்கது என்று சொன்னபோது பொற்பிரபையுற்ற பச்சைமயில்மேல் ஏறிச் செவ்வேள் அரை நொடிக்குள் உலகை வலம் வந்தார். இதற்கு முன்னரே விநாயகக் கடவுள் சுவாமியை வலம் வந்து கையை ஏந்தினவுடன் கனியைக் கொடுத்துவிட்டார். பூவலம் வந்த சுப்பிரமணியர் கேட்கவே அப்பா! குழந்தாய் "அப்பழநீ" என்றருளினர். அதுமுதல் அத்தலத்துக்குப் பழனி என்று திருநாமம் விளங்குகின்றது. அந்தப் பழனிமலையிலிருந்து மயில்வாகனமேறிக் குமாரக் கடவுள் பூமியிலிறங்கி வந்தமையினாலே இந்த மண்டலத்தில் அது மயிலிறக்கமென்று பெயராய் விளங்குகின்றது, தனக்கு ஒப்புயர்வில்லாத சரவணேத்பவர் எழுந்தருளி உலகமெல்லாம் கைதொழுத்தேத்தச் சூரியோதயமாகும் கிழக்குத் திசைமுகமாய்ச் சொல்லுதற்கரிய கோழிக்கொடியுடனே அமுதசிலை யுருவாகிநின்றூர் குமாரசுவாமி. கைலாசம் இமயகேதாரம், காசி, காஞ்சி, திருவண்ணாமலை முதலிய ஸ்தலங்களிலே தவம் புரிந்து பிலத்துவாரவழியாக வந்து அரியதவஞ் செய்துக்கொண்ட பார்வதி தேவியார் மகிழப் பின்பு பரமேசுவரர் தமது இடப்பாகம் கொடுத்தருளி அர்த்தநாரீசுவர மூர்த்தமாய் மேற்குத் திருமுகமாக நின்றூர்.

அரிய சிவபத்திவாய்ந்த மாதவர்களே! வேதசொரூபியாகிய பார்வதிதேவியாருக்கு வாமபாகம் வழங்கி ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிய தலத்திலிருந்து கந்தமூர்த்தியும் முகுந்தமாதவனும் பிரமனிந்திராதி தேவர்களும் உரிய காலங்கடோறும் தரிசனம் புரிந்து அரியதவங்க ளியற்றியிருக்குங் காலத்திலே தேவகூட்டங்கள் முறைமுறையாக வந்து நாகேசுரனைத் தரிசித்து வணங்கி சந்திரமவுலியே!

உனக்கு நமஸ்காரம், எங் கந்தனைப் பெற்றோரே போற்றி. வல்வினையைத் தீர்த்தருளும் மங்கையோர் பங்கா போற்றி, அழிவில்லா ஆதியே போற்றி, மார்க்கண்டனுக்காகக் காலனை உதைத்த பாத பங்கயத்தவரே போற்றி, சுழித்தோடும் கங்கையையும் பாம்பையும் சடையிற் கட்டியவரே போற்றி, சுமாமி தாருகன் முதலிய கொடிய அவுணர்களிடம் அகப்பட்டுக்கொண்டு எளியேங்கள் மிகவும் வருத்த முறுகின்றேம். கடைக்கணித்துக் காப்பாற்றி அருள்புரிதல் வேண்டுமெனப் பலவாறு ஏத்தி ஓலமிட்டார்கள். மனக் கலக்கமுற்றுப் புலம்பும் முறையோசையைத் திருச்செவியிலேற்ற சிவபெருமான் தேவர்களே! யாது காரணத்தினால் வருந்துகின்றீர்கள் எனலும் சுவாமீ! தேவரீரது பல்லாயிர நாமங்களில் ஒருபெயரை அருளினாலேனும் மருளினாலேனும் மற்றெப் பிரகாரத்தினாலேனும் உச்சரிப்பவன் சகல சுகங்களையும் அனுபவிப்பவன் என வேதாகமங்கள் முறையிடுகின்றனவே; அவ்வாறிருக்க பேரானந்தவெள்ளமே! உம்முடைய ஒப்புயர்வற்ற பாதசேவை செய்து வாழும் எளியேங்கள் தாருகன் முதலிய கொடிய அவுணப்பதர்களால் துன்புற்று வருந்துகின்றேமே. ஓ கருணாநிதியே! எங்களுக்கு மாத்திரம் இப்பொழுது அவ்வேத வாக்கியங்கள் பொய்யாய்ப் போயினவோ! நீலகண்டா! தீனதயாளுவே! திருவருள் பாலித்தருளல் வேண்டும் சுவாமி என எழுகடலும் ஒருங்கு கூடியரற்றினாற்போல ஓலமிட்டார்கள். தேவர்களை நோக்கி எம்பெருமான் புன்னகை செய்து இந்திராதிதேவர்களே! நீங்கள் கூடியவாறு நமது திருநாமத்தைச் சொன்னவர்களின் வல்வினைகளெல்லாம் நீங்குமென்பது உண்மையே. ஆயினும் நீங்கள் மிகுந்த அகந்தைகொண்டு வேள்வி இயற்றிய தக்கன் என்னும்கொடிய சிவநிந்தகனோடு உறவுபூண்டிருந்தீர்களன்றோ. எப்பொழுதும் உலகத்தில் எம்மையும் எமது அடியவர்களாகிய சிவஞானியர் சிவயோகியர் சிவபூஜகர் பௌராணிகர் எழுதுவோர் கேட்போர் சிவாலய திருப்பணிபுரிவோர் இவர்களுக்குக் குற்றேவல் புரிவோர் இவர்களை ஆதரிப்போர் முதலாயினோரை அறிவின்மையால் அவமதித்து நிந்திக்கினும், பூருவகாலத்திற் செய்த நல்வினைப் பயனாக அடைந்திருக்கும் ஐசுவரியம் அதிகாரம் வலிமை சுகம் எல்லாம் போய் மாறாத துன்பத்துக்காளாய் வருந்துவார்கள்; நீங்களும் அக்குற்றத்துக்குட்பட்டவர்களாகையால் அவுணர்களால் துன்புறுகின்றீர்கள். ஆனால் உங்களுக்கு நல்லுணர்வு தோன்றி மன்றாடுகின்றமையால் இனிமேல் அத்துயரினின்று நீங்கிச் சுகப்படுமாறு அநுக்கிரகிக்கின்றேம் என்றருளினார் காலகண்டமூர்த்தி என்று பின்னும் சொல்வார் சூதபுராணிகர்.

வெண்ணிற நீறுபுனைந்த திண்ணிய முனிவர்களே! ஒப்புயர் வற்ற அப்பணிச் சடை எம் அண்ணல் அமுததாரை பொழிந்த தென்னக் கட்டளையிட்ட திருவார்த்தைகளைச் செவிவழியேற்ற தேவர் முதலாயினோர் குதூகலித்துச் சந்தோஷ பூரிதர்களாய்க் குதித்துக் கூத்தாடி இனிமேல் நமக்கு நல்லகாலம் பிறந்ததென்று ஆர்ப்பரித்தார்கள் என்ற சூதமுனிவரை நோக்கி சுவாமி! திரிலோசனராகிய நீலகண்டமூர்த்திக்குப் பூஷணையால் மகிழ்வும் தூஷணையால் இகழ்வுமுண்டோ? இவ்விதசுவபாவம் சாமானியர் களிடத்ததென்றன்றோ கேள்விப்பட்டிருக்கின்றேம். அவ்வாறிருக்க தக்கன்கொண்ட அகந்தைக்காகச் சிவபரஞ்சுடர்க்குக் கோபம் உண்டாயிற்றென்றால் பெருமைக் குறைவன்றோ. ஆதலால் இதற்குச் சமாதானம் எங்களுக்குத் தோன்றுமாறு அருள்புரியவேண்டுமென வேண்டும் முனிவர் குழாங்களை நோக்கிச் சொல்லுகின்றார். ஒவ்வா வழிகளில் நடக்கும் பிள்ளைகள் பின்னர்த் தீங்கு அனுபவிக்க நேருமெனத் தேர்ந்த தந்தை அத்தியமார்க் கங்களில் ஒழுகாது பிரம்புகொண்டு அழ அழ அடித்துப் புத்திபுகட்டுவது போன்றும், வருந்தும் நோயாளி அந்நோயால் மேலும் கஷ்டங் கொள்ளாதவாறு பலசாலிகளைப் பிடித்துக் கொள்ளச் செய்து வைத்தியன் கூறிய கத்தியால் அறுத்துப்புண்ணை ஆற்றி நோயைக் குணப்படுத்துவது போன்றும் பரமபிதாவும் வல்வினை தீர்த்தானும், வைத்திய நாதனுமாகிய எம்பெருமான் செய்யும் தண்டனையும் ஆன்மாக்கள்மீது கொண்டகருணையால் அவர்கள் அகந்தை முதலிய கொடிய செய்கையாலும் சகவாசத்தாலும் மீளா நரகத்தி லாழ்ந்தி வருந்த நேராவண்ணம் காட்டிய மறக்கருணையே யாகும். ஆதலின் தம்பொருட்டுக் காட்டிய திறமன்று என்ற முனிவர் பின்னரும் சொல்வாராயினர்.

மனத்தை அடக்கிய மாதவர்களே! திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய நமதிறைவர் ஏழைகளாகிய தேவர்கள் முறைப்பாட்டுக்கிரங்கி தமது இனிமை வாய்ந்த இனிய திருக்குமாரரை அன்புடன் அழைத்து அருட்சத்தியாராகிய எம்பெருமாட்டியாரருளிய வெற்றி தரும் வேலாயுதத்தைச் சுப்பிரமணியர் திருக்கரத்திலளித்து "அரிய குழந்தாய்! சாதுக்களுக்கு இடர் செய்யாநின்ற துஷ்டர்களாகிய அவுணக் கூட்டங்களைத் தொலைத்து வருவாயாக" என ஆசீர்வதித்து அனுப்பினர். தானகவே செய்யக்கருதியிருக்கும் காரியத்தை முடித்து வருக என இறைவனும் அனுமதி கொடுத்தமையால் உண்டாகும் சந்தோஷத்துக்கு எல்லை காண்டல் கூடுமோ கூடாது. ஆதலின் நமது

ஷண்முகக் கடவுள் மிகுந்த சிறப்புடன் தாவித் தாவிச் செல்லும் செம்மறிக்கடாவாகன மேறிக்கொண்டு நவவீரர்கள் போற்ற, தேவர்கள் மலர்மாரி தூற்ற, சுவர்ணசைலத்தை நோக்கித் தேவசேனைகள் சூழ அதிவீரபராக்கிரமத்தோடு நடந்தார். தங்களைக் கொடுமை புரியும் பாதகனைக் கொல்வதாக ஒரு தலைவன் புறப்படின் கஷ்டப்பட்டவர்கள் கொள்ளும் கெக்கலிப்பு அளவுபடாது. தேவர் கூட்டங்களும் சிவகணங்களுஞ் செய்யும் ஆரபாரமும் வெற்றிவேலிற் கட்டிய மணியினோசையும் கைவலயங்களிற் கட்டிய சிலம்பின் ஒலியும் காலிற்கட்டிய வீரகண்டாமணிச் சத்தமும் சேனைசமுத்திரங்கள் விற்கள் வளைத்து நாணேற்றுதலால் உண்டாகும் குணத்தொனியுமாகிய இவையெல்லாம் கோடைகாலத்திடி முழக்கம் போலாயின. இம்முழக்கத்தைக் கேள்வியுற்ற அசுரசேனைகளிற் பல மருண்டு அங்கங்கே சுற்றிப்பார்த்து ஓர் காலத்துமில்லாத தொனியாயிருத்தலை வியந்து சிறிது மனங் கலங்கித் திடுக்கிட்டு ஊமைபோலப் பேசாது சித்திரப் பதுமைபோல நின்றன. இன்னதென்றறிந்து வருவேமென்றெண்ணி நாற்றிசையும் ஓட ஒன்றுடன் ஒன்று முட்டி மாய்ந்த சேனைகள் பல. இவ்வாறு ஒலப்படுவதை அறிந்து கடனீரை உறிஞ்சும் படவாமுகாக்கினிபோலச் சீறித் தாருகாசுரனும் எழுந்தான். எழவே, அனந்தகோடி சேனை அசுரர்களும், அசுரப்படைத் தலைவராகிய போர்வீரர்களும், பாவ இருட்கூட்டம் போல நெருங்கிப் புடைசூழ்ந்து வர தேர் யானை குதிரை காலாள் என்னும் சதுரங்க சேனைக்கூட்டங்கள் செல்வதாற் கிளரும் புழுதிகள் அண்டங்கள் முற்றினும் பிரவேசித்து சந்திர சூரிய நக்ஷத்திரங்களின் பிரகாசங்களெல்லாம் மழுக்கி இருள்மூட, பீடையோடே பீடை சேர்ந்தாற்போல வலிய அசுரக் கூட்டங்களுடன் அசுரக் கூட்டங்கள் கூடி அட்டகாசங்கள் செய்து கெக்கரித்துப் பேரிடி இடித்தாற்போலும் நெடிய அண்டங்களெல்லாம் குலுங்கிக் கலங்க விற்களை வளைத்து நாணேற்றுதலால் நேரும் நாணொலி ஓசையும், யுத்த வாத்தியத்தின் முழக்கமும் சமுத்திர கோஷத்தினு மிகுந்து முழங்கின. இங்ஙனம் ஆரவாரத்தோடு ஒளிமிகுந்த சூரியனைப்பனிக் கூட்டங்கள் சூழ்ந்து வளைத்துக்கொண்டாற் போல வலிய அசுரப் படைகள் வந்து சிவஷண்முகதேவரைச் சூழ்ந்து கொண்டன. இவ்வாறு சூழ்ந்துகொண்டதை ஓர்ந்த குமாரமூர்த்தி நீண்டு அழகிய வில்லை வளைத்து மகிமைவாய்ந்த ஒரு தேவாஸ்திரம் விடுக்க, யமபடர்போலும் சூலவேல் பிடித்தெதிர்த்த அசுரக்கூட்டங்களெல்லாம் சின்னபின்னப் பட்டு முறிந்தோடிப்போயின. இதனை அறிந்த துஷ்ட மிகுந்த அசுரக்

கூட்டங்களில் வேல் பிடித்த வீரர்கள் ஒரு பக்கமும், சூலம் பிடித்த சூரர்கள் ஒரு புறமும், தாவிச் செல்லும் குதிரை இவர்ந்தோர் ஒரு பக்கமும், மும்மதம் பொழியும் யானையிலிவர்ந்தோர் ஒரு பக்கமுமாக நான்கு திசைகளிலும் சூழ்ந்துகொண்டு சிவகுமாரராகிய முருகக் கடவுளை இந்நிமிடத்திலே கொன்றுவிடுவேமென்று ஆலகால விடம் போலக் கொதித்தெழுந்து வந்து குழுமினூர்கள். முற்காலத்தில் மாய்ந்தேமெனத் தேவர் நடுங்கவெழுந்த விஷத்தைச் சிவபெருமான் உண்டு, கண்டத்தில் அடக்கியது போல முருகவேளாகிய நமது இறைவர் மந்த ஹாசியஞ் செய்து தேவாஸ்திரங்களைப் பிரயோகித்து கொதித்தெழுந்த அவ்வசுரசேனைகள் அனைத்தையும் ஒரு இமைப் பொழுதிற் சங்கரித்து அடக்கிவிட்டனர். வேலாயுதக் கடவுளுடைய பாணங்களால் அறுப்புண்டு மாய்ந்த அசுரர்களுடைய பருவதம் போன்ற உடல்களிலிருந்து குமிளித்து அருவிபோற் பெருகிவரும் இரத்தவெள்ளங்கள் எவ்வண்ணமிருந்ததெனில் பூமிதேவியானவள் அழகிய சிவந்த பட்டாடையைத் தரித்துக்கொண்டமைபோலாம். பாராக்கிரமம் பொருந்திய இளவர்ண சிங்கத்தைக் கண்ட மதங் கொண்ட யானைகள் மயங்கி மாய்வனபோல அவுணசைனியங்கள் பூமியில் விழுந்து மாய்ந்து போயினவற்றைக் கண்ட தாருகாசுரன் ஆண் சிங்கம்போலக் கொதித்துச் சீறிப் பின்னரும் அனந்தகோடி அசுரசேனைகளை அணிவகுத்துவிடுத்தான். உக்கிரத்தோடு வரும் பலகோடி அவுணவீரர்களைக் கண்டு புன்சிரிப்புக் கொண்டு இதனை ஒரு விளையாட்டாகக் கொண்டு ஒவ்வொரு அசுரவீரனுக்கும் ஒவ்வோர் தகரவாகன மேற்கொண்டு ஒவ்வோர் வேலாயுதமேந்திய ஒவ்வோர் திருக்குமார தேவராகத் தோன்றி நின்று கணைகளைத்தொடுத்து அத் தனை படைவீரர்கள் படைத்தலைவர்கள் அணித்தலைவர்கள் யூகத்தலைவர்கள் எல்லோரையும் கொன்று புவியில் வீழ்த்தி, அப்பால் அட்டகாசஞ் செய்து, இரதத்தின்மீது நிற்கும் தாருகாசுரனைப் பார்த்து அடா தாருகா! சமர்த்தனயின் நம்முன்னே வந்து போர் செய்யடா என்றூர் சிவ சுப்பிரமணியக்கடவுள். எக்காலம் திக்குவிஜயஞ் செய்து அரசாட்சியைக் கைக்கொண்டானே அக்காலம் முதல் தனக்கு மிக்கவர்களும் ஒத்தவர்களும் இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் எவ்வுலகத்தும் இல்லை எனத்திடங்கொண்டு தேவர்கள் செய்யும் ஏவல்கொண்டு வருபவனுகிய தாருகா பராக்கிரமசாலியானவன் கண்ணெதிரே சேனைகளெல்லாம் ஒரு சிறு குழந்தையால் சின்னபின்னப்பட்டுப் போக சிறிதும் அஞ்சாது எதிரில் நின்று வாடா போருக்கென்று அழைப்

பதைக் கேட்பானுயின் அவன்கொண்ட கோபத்தின் அளவையாராற் சொல்லமுடியும். அவனது ஆத்திரம் எவ்வண்ணமிருக்கும்! முனிவர்களே கேளுங்கள். இவ்வாறு நமது சிவசுப்பிரமணியக்கடவுள் போருக்கழைத்த சத்தஞ் செவியிலே காய்ச்சிய செம்பை வார்த்ததுபோலப் புகுத, அந்தத் தாரகன் உக்கிரங்கொண்டு உடல் பதை பதைப்ப மீசை துடிக்க இரதத்தை வாயுவேகமாக முடிக்கிக்கொண்டு வந்தெதிர்த்து எதிர் நின்று ஒரு சிறு பயலா நம்முடன் எதிர்ப்பவன்! பார்க்கலாமென எளிதாக நினைத்து தன் கையில்லை வளைத்து நாண்பூட்டி டங்காரஞ் செய்து பாணங்களை விடாமழையாகப் பொழிந்தான். அவற்றையெல்லாம் தேவாஸ்திரங்களினுலே பொடிப் பொடியாக்கிக் குழந்தை வடிவேலர் அறுத்தறுத்தெறிந்தார். இவற்றையெல்லாங் கண்ட தாருகன் மதிமயங்கி எவ்வளவோ வரப்பிரசாதங்களைப் பெற்றவர்களுக்கும் வேண்டிய நல்லவரங்களைக் கொடுக்கக் கூடியவர்களுமாகிய தேவர்களையெல்லாம் புஜபலபராக்கிரமத்தாலே செயித்து அவர்களைக் குற்றேவல் கொண்ட நாம் ஏவும் வெற்றிபொருந்திய பாணங்களை யெல்லாம் துண்டித்து வருகின்றுன். இவனை ஒரு சிறு பிள்ளையாகவன்றே எளிதாக நினைத்திருந்தேம். இப்பொழுது பார்க்குமளவில் மகா பராக்கிரமசாலியாகக் காண்கின்றுன். ஆதலின் உருவத்தால் ஒரு வரை நிதானிப்பது புத்தியீனமாகும் என நினைந்து இனிமேல் அஸ்திரசஸ்திரயுத்தவித்தைகளினுல் இச்சிறுவனை வெல்லக்கூடாது. ஆயின் மாயவித்தைகளாலேதான் இச்சிறுவனை ஏய்க்க வேண்டுமென்று நினைந்து, தன் தாயார் உபதேசித்த மாயாவிஞ்சைகளினுலே அனந்த கோடி விருக்ஷங்களாகியும், அளவில்லாத மிருகங்களாகியும், அனேக அரணியங்களாகியும், கோடாநு கோடி மலைகளாகியும் சொரூபமெடுத்து மறைந்து நின்று மிதமில்லாத கன்மாரி பொழிந்து நின்று அம்புகளைத் தொடுத்து யாவர்க்குந் தெரியாது பிரமாஸ்திரத்தை அபிமந்திரித்து விடுத்தான். ஒருபக்கம் இடியுமழையும், ஒருபுறம் நெருப்பும் காற்றும், ஒருபுறம் படையும் மின்னலுமாக அநேக சித்திர விசித்திரமாகிய மாயா சொரூபமெடுத்துவரும் அப்பிரமாஸ்திரத்தின் ஆரபாரத்தை நோக்கிக் குலுங்கச் சிரித்துப் பெருமையையுடைய ஒரு ஞானஸ்திரத்தை எடுத்து விடுத்த நிமிஷத்திற் பிரமாஸ்திரம் வலியிழந்து போயிற்று. இனிமேல் இவ்வசுரனைக் கொல்லாது தாமசஞ் செய்யின் அவன் தேவர்கள் மனசு இடுக்கிட வேறுவேறு மாயங்கள் செய்வானெனக் கருதி இப்பொழுதே இக்கொடியோனை மாய்த்துவிடல் வேண்டுமெனக் குமரவேள் திருவுள்ளத்தடைத்து

ஜயப்பிரதமாகிய பராசக்தி வேலாயுதத்தைத் திருக்கரத்தில் ஏந்தினர். அந்தரவாசிகள் பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்திபிகள் முழங்கின.

கேளுங்கள் உத்தமபத்தி வாய்ந்தோர்களே! ஆதிகாலத்தில் பிரணவத்துக்குப் பொருள் கூற அறியாதவனென்று குட்டிச் சிறையிட்ட இளையபிள்ளையாரைப் பிரமாஸ்திரமானது ஒன்றுஞ் செய்யாது சமுத்திரவெள்ளத்திற் சொருகிய அக்கினிக் கொள்ளிப்போலப் போனமை கண்டு மனங் கலங்கி இனி யாது செய்யலாம் எனத் திகைத்து நமது தேவதாஸ்திரங்களும் மாயவித்தைகளும் பயனற்றுப் போயினவே! நம் தோல்வியைக் கண்ட கேட்ட தேவர் முதலிய நம் பகைவர்கள் நகைப்பார்களே! நம்மைச் சூழ்ந்த சேனைவீரர்களெல்லாம் மாய்ந்து போனார்களே! நமக்குத் துணை ஒருவருமில்லையே! இப்பொழுது நம்முயிரைக் காப்பாற்றும் மார்க்கம் எது என்று தேடும் நிலைமையிலிருக்கின்றதே எனச் சித்தங்கலங்கி மெத்தப்பயந்து சமுத்திர நீரிலுள்ளே புகுந்தொளிப்பான் அதை விட்டுப் பாதாளலோகத்துள்ளே போய் மறைவான். அட்ட திக்குகளிலும் ஓடுவான். மேகமண்டலத்தில் மறைவான். இவ்வாறு கீரி தூரத்த நடுங்கி ஓடும் பாம்புபோல புதர்களிலும் புழைகளிலும் அங்குமிங்குமாகத் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுநிமித்தம் ஓடி ஒளிக்கத் தலைப்பட்டான். இவ்வாறு அங்குமிங்கும் ஓடி ஒளியா திருக்குமாறு சரக்கூடங்கட்டி நின்றநிலையிலேயே நிற்குமாறு செய்து தமது திருக்கரத்திலேந்திய வேலாயுதத்தை ஏவினர் வல்வினைதீர்க்கும் நமது செங்கோட்டுவேலாயுதமூர்த்தி. சென்ற வேலாயுதமானது யானைமுகங்கொண்டு வச்சிரமலைபோன்ற சரீரம் பெற்ற தாருகாசுரனுடைய மார்பிற்பட்டு ஊடுருவி அப்பாற்செல்லவே யுகாந்தகால இடி முழக்கம்போல ஓலமிட்டுப் பெருமலை சாய்ந்தது போலத் தாருகாசுரன் வீழ்ந்தான். இவன் அலறி விழுந்த பேரொலியைக் கேட்டுப் பயந்து இலட்சுமிதேவி விஷ்ணுவைத் தழுவிக்கொண்டனள். சரசுவதிதேவி பிரமனைக் கட்டிக்கொண்டாள். இந்திராணி இந்திரனைத் தழுவிக்கொண்டனள். சூரியன் தேவிமார்கள் புளகமுண்டாகும்படி அவனைத் தழுவிக் கொண்டார்கள். சுவாகாதேவி அக்கினி பகவானைத் தாவிப் பிடித்துக்கொண்டாள். சந்திரனை அவன் தேவிமார்கள் கட்டிக் கொண்டார்கள். மற்றைய திக்குபாலர்களின் மனைவிமார்கள் அவரவர்கள் பர்த்தாக்களைத் தழுவிக்கொள்ளுமாறு நாகாசலப் புறத்திலே தாருகாசுரன் வீழ்ந்தான். இவ்வண்ணம் சிவகுமாரருடைய பராசக்திவேலால் தாருகாசுரன் முகந்தரைபட வீழ்ந்தவுடன் தேவர்

களும் தேவேந்திரனும் மகாசந்தோஷத்தோடு புஷ்பமாரி பொழிந் தார்கள். கார்காலத்துப் பெருமழைபோலும் சுவர்ணமாரியும் பொழிந் தார்கள். எங்களைப் பிடித்த பீடை தொலைந்ததென்று பிரமவிஷ்ணுக் கள் முதலாயினோர்களெல்லாம் ஷண்முகநாதர் சந்நிதிக்கண் விழுந்து பணிந்து எழுந்து அஞ்சலியஸ்தராய் சுவாமி எளியேங்களுக்குத் தாயும் நீ, தந்தையும் நீ, எங்கள் சீவான்மாவும் நீ, சகலபொருளும் நீ, உன்னையன்றி எங்களுக்கு உற்ற துணைவரில்லை எனக் கண்ணீர் சொரிய நாக்குளற மெய்மயிர் சிலிர்ப்பத் தோத்திரஞ் செய்து தங் களுக்கு இடர் செய்த தாருகன் மாய ஒப்பற்ற சிவசுப்பிரமணிய மெய்ப்பொருளை உதவிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் சந்நிதானத்து நின்று பணிந்து சுவாமி தேவரீர் கிருபையார் தந்த செங்கோட்டுவேலாயுத மூர்த்தி தாருகாசுரனைச் சங்கரித்தனர், சந்தோஷமடைந்தோம். ஆதலின் தேவேந்திர குமாரியாகிய தெய்வானையை விவாகஞ் செய் விக்கப் பேராசை கொண்டிருக்கின்றோம். அவ்வாறு பொருந்தத் திருவுள்ளங் கொள்ளல் வேண்டுமென இரந்து வேண்டும் விஷ்ணு பிரமேந்திராதி தேவர்களை நோக்கி "அவ்வண்ணமே ஆருக" என ஆசி புகன்ற சிவபெருமான் சுப்பிரமணியரை நோக்கி குழந்தையே இத் தேவர்களோடு சென்று திருக்கல்யாணஞ் செய்துகொண்டு வா என அருளலும் குமரகுருபரமூர்த்தி இறைவரை வணங்கி சுவாமி இப்பொழுது தேவரீரை அர்ச்சிக்க வேண்டுமென்ற பேரவாவுற்றி ருக்கின்றேன். பின்னர் ஆஞ்ஞைப்படி நடந்துகொள்ளுகின்றேன் என்று வணங்கி, அங்ஙனம் காசிபன் மரபில் வந்த திதிபுத்திரனுகிய அஞ்ஞான மனசையுடைய தாருகாசுரன்பட்ட பின்பு பிரமஹத்தி மாயை கண்டு புன்முறுவல் செய்து இந்தப் பூமண்டலமெல்லாந் தொழுது வணங்குகின்ற திருநாககிரியிற் சிவபிரானைப் பூசித்தமர்ந் தருளினர். அப்பொழுது சூரன் மகனுகிய பானுகோபனை விட்டுத் தேவலோகத்தை யெல்லாம் சின்னப்பின்னப் படுத்தித் தேவர்களை இடுக்கண் புரிவது தெரிந்து விஷ்ணு பிரமேந்திராதி தேவர்களெல் லாம் ஒருங்குகூடி வந்து ஓலமிட உமாதேவியாரை வாமபாகத்துக் கொண்டருளிய நமது இறைவர் கருணைகூர்ந்து தேவர்களை நோக்கி ஓ அமரரே! நமது குமாரவேள் கையில் வேலாயுதமிருக்கின்ற பொழுது நீங்கள் பயப்பட வேண்டுவதில்லை என அபயஹஸ்தம் கொடுத்து அவர்கள் பயத்தைத் தீர்த்தருளினர் மங்கையோர் பங் கராகிய பரமேசுவரர் என்றார் சூதமுனிவர்.

---

உ

சிவமயம்.

# சூரபன்மன் வதை.

---

[illegible]யும் கண்மணியும் புனைந்த சாம்பவோத்தமர்களே! உள்ளம் நடுங்கி முறையிடும் தேவர்களை அஞ்சேலென்ற பரஞ்சுடராகிய சிவபிரான் சுப்பிரமணியரை நோக்கி அன்புள்ள குமாரா! சூரபன்மன் முதலிய கொடிய அசுரர்களைக் கொன்றுவா எனக் கட்டளையிட்டபோது அதிவீரபராக்கிரம மிகுந்த. வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமாமகேசுரர், வீரமாபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் நவவீரர்கள் புடைசூழ இலட்சவீரர்கள் ஆயுதபாணிகளாய் சுவர்ணமயமாகிய பெரிய தேர்களிலேறி இருமருங்குகளிலும் போற்றி நடக்க, சுப்பிரன், மேகமாலி, சுவேதகிரிடன், கபாலி, அப்பிரசித்து, சித்திராங்கன், சுவேததாலு, வச்சிரன், வீமன், உக்கிரன், உக்கிரேசன், பிப்பிலன், நந்திசேனன் முதலிய நூற்றெட்டுச் சேனைவீரர்கள் சூழ்ந்துவர, ரணபேரிகை ஜயபேரிகைகளும் வெற்றிச்சங்கம் சின்னம் மத்தளம் உடுக்கை சல்லரி மல்லரி எக்காளம் குடமுழா முதலிய பதினெண் வாத்தியங்கள் முழங்க மாலயனிந்திராதி தேவர்களெல்லாம் பாரிஜாத புஷ்பங்களை வேதமந்திரங்களால் துதித்து வீச, இன்னும் பற்பல வைபவங்களுடன் புறப்பட்டு முன்னர் இடபகிரியிற் சென்று, அங்கிருந்து புறப்பட்டு நீலகிரியிற் சேர்ந்து, அநேக மலைகள் புடைசூழ்ந்த பஞ்சாக்ஷர பருவத்திலுமிருந்து மேகமொய்த்தவராக கிரியிலும் மருவி, பின்பு திருநாககிரியிற் சேர்ந்து அம்மையப்பரை வணங்கி விடைகொண்டு யுத்த சன்னத்தராகி அந்தச் சூரபன்மன் பேரில் யுத்தஞ் செய்ய வாயுவேகமாக நடத்தி வரும் இரதத்தின் மீது எழுந்தருளிக் குமாரதேவர் புறப்பட்டார். இவ்வாறு போர்க் கோலங்கொண்டு செல்ல மாதலி நடாத்திய தேரின் ஓசையானது சூரபன்மன் காதின்வழி புகுத அது சீவனை உண்ணவந்த இயமன் ஆர்ப்பரித்தது போலுமிருந்தது. அதுகண்டு சூரன் திடுக்கிட்டான். அப்பொழுது அந்த மயேந்திரபுரத்துக்குக் காவலராகிய அநேக வீர சூரர்கள் புற அணிவகுத்து நின்று யுத்தமிடத் தொடங்கினார்கள். அப்பொழுது பல பல விதமாக அநந்தகோடி மகாகோடி இராக்கதக் கூட்டங்களும் அசுர சேனைகளும் கணமாகச் சூழ்ந்து சேவிக்க சூரபன்மனனவன் மேருமலைபோலும் உயர்ந்து பிரகாசம் பொருந்திய

சுவர்ணமயமாய் அலங்காரமிருந்த ஏழுநிலை மாடகூடத்தின் மீதேறி முருகவேளுடைய சேனைசமுத்திரத்தைப் பார்த்துச் சொல்கின்றான். ஆ! ஆ!! இது என்ன ஆச்சரியம். நான்கு முகங்களையுடைய பிரமதேவனானவன் நம்முடைய பெயரைக் கேட்டமாத்திரத்தில் பேரிடி முழக்கங் கேட்ட நாகசர்ப்பத்தைப் போல நடுங்கி ஒடுங்கிக் கிடப்பன். திருமாலோ காற்றில் அகப்பட்ட பூளைப்பூப்போன்று பறந்தோடுவன். மதனனை எரித்த நெற்றிக்கண்ணையுடைய சிவனானவன் கைலாயகிரிக் குகைக்குள்ளே பண்டாரமாய் ஒளித்திருப்பன். இவ்வாறு திரிமூர்த்திகளும் முன்வர அஞ்சித் திரிமூர்த்திகளாயினார்கள். மற்றைத் தேவர்களுக்கெல்லாம் அரசனாய் சத்தரிஷிகளால் பல்லக்குத் தாங்கிச்செல்லும் இந்திரனோ, நமது குழந்தையாகிய பானுகோபனுக்குக் குற்றேவல் செய்வதாய் அமைந்து அடிமையாயினன். இவர்களினும் அத்தேவாதியர்களுக்கு வலிமையொன்றுமில்லை. நானோ மும்மூர்த்திகளிடத்தும் மாயாவரம் பெற்றிருக்கின்றேன். இங்ஙனமாக நம்மோடு சமர்புரிய வருபவன், சிவனையீன்ற தந்தையா? அல்லது குருவா? அப்படி யில்லாவிடில் மற்றையோர் நம்மோடு எதிர்க்கவும் நினைப்பார்களோ? என்று அதிசயித்து, சூரபன்மனை எதிர்க்கவும் ஒருவர் புறப்பட்டார் என்ற வார்த்தைக்கிடமாயிற்றே என பல்லை நெறுநெறனக் கடித்து மீசை துடிக்க கண்களில் அனற்பொரி பறக்க, உற்றுப் பார்த்தான். பலகோடி தேவகூட்டங்களின் மத்தியில் இளஞ் சூரியனைப் போன்ற ஒளிபொருந்திய ஆறு திருமுகமண்டலங்களும் குழைகள் அசைந்தாடும் பன்னிரண்டு திருச்செவிகளின் கீழ் வாகுவலயங்களிலங்கும் பன்னிருபுயாசலங்களும் தேனுண்டு எழுந்த ஈக்கள் செறிந்து விளங்கும் வெட்சிமாலை அசைந்திலங்கும் அழகிய மார்புகளின் சிறப்பையுங் கண்டு மங்கையர்களைப் போல மோகித்து ஷண்முகக் கடவுளுடைய அழகென்னும் தேனில் சூரன்மனமென்னும் ஈ பாய்ந்து வீழ்ந்து ஆழ்ந்து அதனைவிட்டுப் பெயரவகையற்று மயங்கினதென்னச் சொக்கி வெட்கி அருகினின்றவர்களைக் கூவி ஓ சேனைவீரர்களே! இந்தக் குழந்தையாகிய கந்தனை உங்கள் கோபாவேசத்தாற் கொன்றுவிடாதீர்கள். அவன் மெத்த அழகுள்ள குழந்தையாகக் காண்கின்றான். அவனை இமிசியாமற் பிடித்து வாருங்கள் "வடிவுற்ற ஆறுதலைப் பாப்பா" என நம் குழந்தைகளுக்குப் பராக்குக் காட்டி விளையாடுதற்கு உபயோகமாகும் என்று சொல்லிப் பின்னரும் சொல்கின்றான். இக் கந்தன் குழந்தையானதாலன்றோ நமது சௌரிய பராக்கிரமத்தை யோசிக்கவில்லை. வயது வந்து மந்திரா

லோசனை செய்திருந்தால், தான் தொடுத்த காரியத்தின் வலிமையும், மேற்கொண்ட காரியத்தை முடிப்பவனாகிய தன்னுடைய வல்லமையும், எதிர்ப்பவனாகிய பகைவனுடைய திறமும், எதிரிக்கிருக்கும் துணையும் தனக்கிருக்கும் துணையும் நன்கு யோசிப்பதுமன்றி பகற்குருடாகவிருக்கும் கோட்டான் பகலில் கொத்தித் துரத்திய காக்கையை இரவில் வெல்லும் வலிமை பெறுவதால் காலசுபாவத்தையும், மும்மதங்கொண்ட யானையின் காலைக் கவ்வி நீருள் இழுத்துச் செல்லும் முதலையானது கரையில் சிறு பூனையையும் எதிர்க்க முடியாது போவதால் இடநிதானத்தையும் ஆராய்ந்தே யோசித்துப் போர்க்கெழுவார்கள். பால்மணம் மாறாத வாயுள்ள குழந்தையானதால் "இளங்கன்று பயமறியாது" என்றவாறு துள்ளிக் குதித்தோடி வந்திருக்கின்றான். ஆயினும் நீங்கள் இமிசை செய்யாது பிடித்து வாருங்கள் எனக் கட்டளையிட்டான். இவ்வுத்தரவு பெற்ற அரக்கர் கூட்டமெல்லாம் குழந்தைவடிவேலர் சேனைகளை வளைந்து கொண்டன. சூழ்ந்தவர்கள் யுத்தத்துக்கு ஆரம்பித்தவுடன் வீரவாகுதேவர் வில்லை வளைத்துச் செய்த சிறு நாணோசையால் காது செவிடுப்பட்டுப் பயந்து ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சிலர் மடிந்துபோனார்கள். சிலர் கோபத்தோடு சூலம் வேல் கதை வீரவாள் முதலிய பல ஆயுதங்களை வீசி நெருங்கி அடர்ந்து வந்தார்கள். நெருப்பில் வீழ்ந்த காய்ந்த புற்சுமைகளைப் போல எறிந்த ஆயுதங்கள் சாம்பலாயெரிந்து போனமைக்கண்டு பயந்து ஓடிப்போனார்கள். ஓடாமல் எதிர்த்து நின்றவர்களெல்லாம் சிவபெருமான்மீது பூக்கணை ஏவிநின்ற மன்மதன் எரிந்து போனமைபோல முருகவேலுடைய கோபாக்கினியால் வெந்து நீறுனார்கள். இன்னும் பல்லாயிரக்கோடி சூரர்கள் வந்து எதிர்த்து ஈட்டி, நேருசம், கவண், கைவேல், தேவாஸ்திரம், சூலம், உலக்கை, கைவாள் குந்தம், மழு, சக்கரம், தண்டாயுதம், கப்பணம், அக்கினிக்குண்டு, கோடாரி முதலிய ஆயுதங்களை எறிந்து பிடி பிடி என்றும் அடி அடி என்றும் அட்டகாசஞ் செய்து அகோரயுத்தஞ் செய்தார்கள். வலியயமன் ஓடினும் விடாது இறுக்கிக் கட்டுகின்ற எறி ஆயுதங்களும் தாங்கள் அநேகவிதமாகத் தவஞ் செய்து பெற்ற தேவாஸ்திரங்களும் விட்டு விட்டுப் போர்செய்து பற்பல மாயாசொரூபங்களெடுத்து ஒழித்தும் எதிர்த்தும் பெரிய மலைபோலக் காலாட் படைகள் மகாயுத்தஞ் செய்தார்கள். தெய்வலோகத்திராநின்ற ஐராவதம் போன்று மும்மதங்களைப் பொழிந்து சீற்றங்கொண்டு காலாலும் வாலாலும் துதிக்கையாலும் கிம்புரிக் கொம்பாலும் மிதித்து வீசிப்

பிடித்துக் குத்தி அமராடும் யானைக் கூட்டங்களும், மாறி மாறி மேருகிரியைப் போல உயர்ந்து பிரகாசியாநின்ற வெற்றிக்கொடி பார்க்க விளங்கும் இரதநிரைகளும், ஆதித்தன் தேரிற் பூட்டிப் பச்சைக் குதிரைகளைப் போல வேகமாய்ப் பாய்ந்து வரும் மல்லகதி மயூரகதி வியாக்கிரகதி இடபகதி வானரகதி என்னும் ஐங்கதிகளும் தேர்ந்து நடக்கக் கூடிய குதிரையணித்திரள்களும், அதிவீர பராக்கிரமசாலிகளாகிய வீராதிவீரர்களின் கூட்டங்களும் முறை முறையாக அணிவகுத்து யூகத்துடனே நின்று வேலாயுத மூர்த்தியுடனே கடிய யுத்தஞ் செய்தார்கள். கணைகற்றுச் சூழ்ந்து தொந்தயுத்தம் புரிந்து வரும் அவுணசேனைகளை நோக்கி சிவகுமாரரானவர் புன்னகை செய்து அழகிய வில்லையெடுத்து நாணிபூட்டி குணத்தொனி செய்து ஒரு சிறு அக்கினியாஸ்திரத்தை எடுத்துவிடவே அக்கணையானது கோடானுகோடி கணைகளாய்ப் பெருகி அனலைக் கக்கிக் கொண்டு பாய்ந்து சங்கரித்துவிட்டது. குமாரதேவர் ஏவிய பாணத்தினால் அடியுண்டு சாய்ந்து மாய்ந்த அரக்கர்கள் காயத்திலிருந்து பெருகும் இரத்தமானது பெருகி ஆறாய் அலைகடலைச் செந்நிறமாக்கிவிட்டது. பகலென்றும் இரவென்றும் காணாது யுத்தஞ் செய்யப் பல மலைகள் இருப்பனப்போல பிணக் குவியல்கள் குவிந்தன. இரத்த சமுத்திரத்தில் கப்பல் செல்வதுபோல முருகவேல் இரதம் சென்றது. அவ்வவ்வண்டங்களிலே வைத்திருந்த சேனைகளையெல்லாம் சூரபன்மன் மென்மேலும் அனுப்பிக்கொண்டிருக்க, வந்தவைகளையெல்லாம் கண்டதுண்டஞ் செய்து வீழ்த்தினர் ஆறுமுகப்பெருமாள். இங்ஙனம் குமாரதேவருடைய கணைகளால் சூரபன்மனுடைய தேர் யானை குதிரை காலாள் என்னும் நால்வகைச் சேனைகளும், மற்றைய சேனாபதிகளும், பந்துவர்க்கங்களும், சகோதரர்களும், புத்திரர்களும், பௌத்திரர்களுமாகிய எல்லா அவுணர்களும் மாய்ந்துபோயினர். பாசறையிலும் மற்றையிடங்களிலும் சுற்றிப்பார்க்கவும் யோசிக்கவும் ஒருவருமில்லை என்னும்படியாயிற்று. சூரபன்மனவன் தனியே வெறுங் கையாக நின்று சுற்றிப் பார்க்க ஒருவருமின்றிக் கலங்கி ஐயோ நம்மவர்கள் எல்லோரும் மாய்ந்தனரே. நான் ஒருவன் மாத்திரந்தானே இருக்கின்றேன். வீராதி வீரராகிய சகோதரர்களையும் புத்திரர்களையும் மாய்த்த இப்பையன் நம்மைவிடப்போகின்றானோ? இத்தனை நாளாக வெற்றியுடன் கீர்த்திபெற்ற நமது சௌரிய பராக்கிரமங்களெல்லாம் ஒரு சிறு பாலனால் இழந்தோமென்பது என்ன சிறுமை! என்ன காலக்கேடு! எனத் திகைத்தான். இங்ஙனம்

கூறியதைக்கேட்ட முனிவர்கள் சுவாமி! இந்த சூரன் சாமானிய னல்லன். இவனைப்போல வீரவேள்வி மற்றொருவர் செய்யமாட்டார்கள் என்பதற்கையமில்லை. மாதவ சிரேட்டன். செய்த தவத்தால் எல்லா ஐசுவரியமும் பெற்ருன். அவ்வாறு தவத்தால் நேர்ந்தவற்றிற்கு அழிவு வரலாமா ? இவனோடு எல்லாம் அழிவற்றதாகவன்றோ இருக்கவேண்டும். இங்ஙனம் இழந்துபோக நேர்ந்ததென்ருல் வருத்தமுற்றுத் தவஞ் செய்வதால் என்ன லாபமிருக்கின்றது என வினுவ அம்முனிவர்களை நோக்கிச் சூதமுனிவர் கூறுகின்ருர்.

முனிவர்களே! நீங்கள் ஐயமுற்றது சரியே. உலகத்தில் பூஜை தவம் செய்வது காமியம் என்றும் நிஷ்காமியம் என்றும் இருவகைப்படும். காமியம் என்பது தனக்கு வேண்டியவற்றை அபேக்ஷித்துச் செய்வது. வேறு யாதொரு பொருளையும் விரும்பாது மோக்ஷமே வேண்டுமெனச் செய்வது நிஷ்காமியமாகும். தான் செய்யும் பூஜை தவத்தின் ஆதியினும் அந்தத்தினும் இப்பொருளைத் தனக்குக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து செய்த பலன் தன்னை அடைய விரும்புவதே காமியமாகும். தான் செய்யும் தானகர்மாதிகளை யெல்லாம் சிவார்ப்பணஞ் செய்து தனக்கொன்று வேண்டுமெனச் சங்கற்பியாது விடுப்பது நிஷ்காமியமாகும். இதில் காமிய பலன்களெல்லாம் தேவபதம் இந்திரபதம் விஷ்ணுபதம் உருத்திரபத முதலிய பதவிகளைக் கொடுத்துப் போகம் புசிப்பிக்க வல்லன. இந்தச் சூரனே அண்டாண்ட அதிகாரம் வகுத்துத் தன்னை யாவரும் வணங்க அரசு செலுத்தி ஆளவேண்டிச் செய்தனன். அவ்வாறே அத்தபோபலன் வாய்த்தது. அங்ஙனம் வாய்த்த காலத்தில் மன்னுயிர்களுக்கு இமிசை புரியாமல் சாதுக்கள் பால் பரிவு கூர்ந்து ஜீவகாருண்ணிய முடையவனுய் எல்லாம் ஈசுரகிருபையால் கிடைத்தன என நினைந்து தர்மசாஸ்திரங்கள் விதித்தவற்றைச் செய்து நிஷேதித்தவற்றை நீக்கி தெய்வபக்தி அடியார்பக்தி வாய்ந்தோர்கள் நூலுணர்ச்சியுற்ற மேலோர்கள் மற்றைய சாதுக்கள் மனசு வாடாமல் அரசு செலுத்தியிருப்பானேல் இவ்வாறு சம்பவம் நேராது. கிடைத்த ஐசுவரியத்தை இவன் அற்பபுத்தியினுலியற்றிய மிலேச்சத் தனத்தால் இழக்க நேர்ந்தது. எவரும் தங்களுக்கு ஐசுவரியம் நேர்ந்த காலத்தில் தன்னுல் வந்ததென்று அகங்கரித்து எளியவர்களையும் சாதுக்களையும் மனம் நோகச் செய்து தெய்வவிசுவாச முதலியனவின்றி இருந்தால், இருந்தது தெரியாமல் இழந்துபோக நேருமென்று கூறி, பின்னரும் சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

உத்தமபத்திவாய்ந்த சத்திய விரதியர்களே! முன்னர் இவன் கையில் அகப்பட்டுக்கொண்ட தேவர்கள் திகைத்து எங்ஙனம் ஓடலாம்! எவ்வாறு இச்சமயம் உயிர் தப்பலாம்! என நினைத்து வருந்தினார்களன்றோ. அவ்வாறே "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்" என்ற பழமொழிப் பிரகாரம் இப்பொழுது எங்ஙனம் ஓடலாம்! எவ்வாறு உயிர் தப்பலாம்! என்ற திகைப்புக்கொண்டான். ஆயினும் வீரசூரனானதால் உடனே தைரியங்கொண்டு மாயவித்தையால் ஒருவர்க்குந் தெரியாது ஓடி மற்றோர் அண்டத்தில் ஒளித்துக்கொண்டான். இத்தருணத்தில் தேவர்களெல்லாம் பிழைத்தோம் என்று குதித்துக் கூத்தாடிச் சிவகுமாரரைப் புகழ்ந்தார்கள். முருகவேளானவர் வீரவாகுதேவரை நோக்கி சூரபன்மன் எங்ஙனமோ ஒளித்துக் கொண்டான் எந்த அண்டத்திலிருக்கின்றான் என அறிந்துவா வென்று அனுப்பினர். சற்று நேரத்துக்கெல்லாம் மகா கோரத்தோடு சூரபன்மன் வந்து எதிர்த்து ஒரு பெரிய இருப்புலக்கையை எறிந்தான். அந்த உலக்கை அண்டங்களையெல்லாம் தகர்த்துவிடுமோ எனத் தேவர்களெல்லாம் நடுங்குமாறு குமாரதேவர் மார்பிலெய்தி அது செங்கழுநீர் மாலைபோல் விழுந்தது. சுப்பிரமணியமூர்த்தி ஒரு ஈட்டியை எடுத்து விட்டனர். அது இடிமின்னலெனச் சிறந்து சூரன் மார்பிற் பட்டு ஊடுருவி நீலகிரியிலிருந்து இறங்கி வரும் செம்மணி அருவிபோல இரத்தப் பிரவாகம் உற்பவித்த பின்னர் மேகமண்டலத்துள் ஒளித்துக் கன்மாரிகளைக் கணைமாரிபோற் பொழிந்தான். கார்த்திகேயரும் விரைந்து அஸ்திரப் பிரயோகஞ் செய்து சரக்கூடங்கட்டிச் சூரனை அகலவிடாது தடுத்தனர். சூரன் வாயுவாஸ்திரங்கொண்டு விலக்க நாகாஸ்திரத்தினால் வேலாயுதபாணி இழுத்து விலக்கி அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகிக்க உலகத்தில் அக்கினி பரவிவந்தது கண்டு, கண்டகன் வருணாஸ்திரத்தை விட்டு விலக்கிப் பின்பு மோகனாஸ்திரம், பிசாசாஸ்திரம், இராக்ஷசாஸ்திரம், மாயாஸ்திரங்களைத் தொடுத்து ஒருமுகமாக முனைந்து போர் செய்தான். இவற்றைப் பிரமாஸ்திரங்கொண்டு சுவாமி அறுத்தெரிந்து மற்றொரு அஸ்திரத்தைத் தொடுக்க அவ்வஸ்திரம் தாக்கப் பொறுது திடுக்கிட்டு ஆகாயத்தில் மறைந்து நின்று சிங்கம், பன்றி, புலி, மறி, கரடி, பாம்பு முதலிய வடிவங்களெடுத்துப் போர் புரிந்து பின்பு ஒரு சக்கிரவாகப்பக்ஷி ரூபமாய்ப் பலபல மாயா ஜாலவித்தைகளால் மயக்கிப் போர் புரிவதை ஓர்ந்து சிறிது திகைத்துத் தமது பரம பிதாவாகிய சிவபெருமானை உள்ளத்தே தியானித்து மவுனமுற்று ஒப்புயர்வற்ற சத்தி வேலாயுதத்தைத் திருக்

கையிலேந்தினர். அப்பொழுது மூன்று உலகங்களும் நடுங்கின. நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன. முச்சுடர்களும் ஒளி மழுங்கின. இவ்வித துற்குறிகள் தோன்ற வேலாயுதமானது புறப்பட்டதைக் கண்டு நடு நடுங்கிப் பயந்து பலவேறு உருவங்களெடுத்து ஓடி மறைந்து பின்பு தன் மனக் கவடுகள் போன்ற பல கிளைகளையுடைய பெரிய ஒரு மரமாய் நடுக்கடலில் வேர் மேலும் நுனி கீழுமாக ஒரு மாமர வடிவெடுத்து மறைந்து நடுங்கி நின்றான் சூரபன்மன். அப்பொழுது "குமாரதேவருக்கு வெற்றி பெருகுக" என முத்தேவரும் எத்தேவரும் ஆசீர்வதித்து புஷ்பமழை பொழிந்தார்கள். "சூரனை இரு கூறாக்கி வா" என ஏவிய பராசக்திவேலானது அனேககோடி சூரியப் பிரகாசமாக ஒளிகொண்டு சென்று அம்மரத்தை இரு கூறு செய்யவே இரு கூறுகளும் இடைந்திடைந்து நாககிரிச்சாரலிலே விழுந்து சேவலும் மயிலுமாயின. நக்ஷத்திர ராசிகளையெல்லாம் பொறிகளாகப் பொறுக்கும் அச்சேவலைக் கொடியாக உயர்த்தி, நாகேந்திரன் முதலானவர்களின் சிரங்களைக் கொத்திவரும் மயிலை வாகனமாகக்கொண்டு ஏறி அடக்கினர் சிவசுப்பிரமணியக் கடவுள். கேட்டீர்களோ முனீந்திரர்களே! இச்சூரபன்மன் அநேக தீமைகளை விளைத்தமையால் அவன் அடைந்த ஐசுவரியங்களெல்லாம் இழந்தாலும், அவனது தவவுடல் நாய் நரிகளுக்கு உணவாகி, மலமாய்ப்போகாது அழியாத கொடியும் சேவலுமாயிருப்ப நேர்ந்தது. பின்னர் இக்கொடியோனால் சிறையிடப் பட்டிருந்த தேவர்களை நீக்கி இந்திரனுக்கு அரசாட்சி கொடுத்து மகிழ்வித்தனர் சுப்பிரமணியக்கடவுள்.

---

உ

சிவமயம்.

## முருகர் சிவார்ச்சனை.

---

ஈசனிணையடி மறவாத இருடியர்களே! தேவர்கள் துயர் நீங்கி இன்பத்தை அனுபவித்து மகிழ்ச்சிபெறுமாறு கொடிய தாருகாசுரனைச் சங்கரித்து பெருமகிழ்ச்சி புகட்டிய குமாரதேவர், அகஸ்தியர் நாரதர் வசிஷ்டர் கௌதமர் விசுவாமித்திரர் ஜமதக்கினி பராசரர் பரத்துவாஜர் வியாசர் சுகர் மார்க்கண்டர் சவுண்டிகர் முதலிய பழமையாகிய முனிபுங்கவர்களும், தேவர்கள் தேவேந்திரன் பிரமா மாயோன் எனப்படுவோர்களும் சூழ்ந்துவர திருநாககிரியை அடைந்து தமது திருப்பெயரால் குமாரதீர்த்த மென்றொரு தீர்த்தமுண்டாக்கி

முனிவர்கள் முதலாயினோர் அனுதினமும் முழுகித் தங்கள் பவங்களைப் போக்கிக்கொள்ளற்பாலதாகிய கங்கைமுதலிய தீர்த்தங்களை அதிலே தாபித்து மனவுறுதியோடு தினமும் அதில் முழுகி நாகேசுரரை வழிபட்டுத் திரிகாலமும் அவர் பாதாரவிந்தங்களைப் போற்றி அனவரதகாலமும் சிந்திக்குமாறு பரமேசுவரரால் பஞ்சாக்ஷரம் உபதேசிக்கப்பெற்று, அருமையாகப்பெற்ற பஞ்சாக்ஷரத்தைத் தியானஞ்செய்துகொண்டு அர்த்தநாரீசுவரரைப் பன்னிரண்டு திருக்கரங்களாலும் தேன் ஒழுகும் திவ்வியமாகிய புஷ்பங்களைக் கற்றைகற்றையாய்க் குப்பல் குப்பலாய் வாரிச்சொரிந்து, பூசிக்கவேண்டியிருக்கும் புஷ்பத்துக்காகக் கற்பகபுஷ்பவனத்தைத் திருநாககிரியில் நாட்டி, உமையொருபாகர் திருவடிகளைத் தமது அகமலர்த் தாமரைப்பூ மத்தியிலிருத்தி அன்பினுருசி ஆனந்த பரவசமுற்று, பின்னலையுடைய சடைமுடிக்கூந்தலும், பிரகாசிக்கின்ற பிறைபோலும் நெற்றியும், மான்போலும் பார்வையையுடைய கண்களும், நகை பொருந்திய திருவாயும், சங்கக் குழையும் மான் மழுவேந்தியகையும் நாகேயூரம் தரித்த புயங்களும் சுவர்ண ரத்தின மாலைகளணிந்த முலைமார்பும், செம்பட்டுடுத்திய இடையும், சுவர்னபாடகமணிந்த திருப்பாதமும் பொருந்திய ஸ்ரீ அர்த்தநாரீசுவரரை மனசிலே நினைந்து துதித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை சிவபீஜம் சத்திபீஜங்களை முறையே மாறி மாறி ஜபித்து மிதந்த அன்போடு வேதாகம விதிப்படி பூஜை நைவேத்தியஞ் செய்து சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யத் திருவுளத்தடைத்தார். அங்ஙனம் அந்தத் திருநாககிரியிலே கிளர்ச்சியையுடைய தெய்வதீர்த்தத்துக்குக் கிழக்கே பிரமதீர்த்தத்துக்குத் தென்கிழக்கே வளர்ச்சியுடைய நாகதீர்த்தத்துக்கு மேற்குத்திசையில் ஒப்பற்ற ஒரு சிவலிங்கத்தை வேதாகம நெறிப்படி தாபித்து, தாபித்த சிவலிங்கத்தில் பரமேசுவரரை ஆவாகனஞ் செய்து தரிசித்து அர்ச்சித்து சோடசோபசாரங்கள் செய்து பூசித்து, வேதமந்திரங்களினாற் றுதிசெய்து, படிக முதலிய ஐவகை நிறமுள்ள திருமுகங்களும் பத்துத்தோள்களும் தவசிந்தை கொடுக்கும் பதினைந்து திருக்கண்களும் கையிற்பற்றிய தசாயுதங்களும், புதுமையான கங்கையும், இளம்பிறையும், நாகமும் பிரியாமல் வசிக்கும் சடைமுடியோங்கிய கிரீடங்களும், பவசிந்தாகுலந்தீர்க்கும் உமையொருபாகமுமாக எழுந்தருளியிருப்பவராகத் தியானித்துப் பூசித்தார். இந்திராதி தேவர்களெல்லாம் அடிவணங்க அரசுசெலுத்திய தாருகாசுரனது குழாங்கள் நசித்துப் போகவும், அகிலாண்டங்களிலிருக்கும் சாதுக்களெல்லாம் களிகூர்ந்து பொலியவும் தாபித்த சிவலிங்கத்துக்குக் "குமரேசர்" எனத் திருநாமமிட்டு வணங்கினார் குமாரதேவர்.

சூரபன்மன் பெயரைச் சொல்வதற்கேனும் இலையாமாறு கொன்றுநாசஞ் செய்த பின்னரும் நாகாசலத்தெய்தி சிவலிங்கமொன்றைத் தாபித்து வேதசிவாக மோக்தமாக ஆவாஹனுதிகள் புரிந்து அபிஷேக நைவேதனங்களும் உபசாராதிகளும் கிரமமாகச் செய்து நேசித்துப் பூசித்துத் தோத்கரித்தார். வினை தீருமாறு பிரதிஷ்டித்த சிவலிங்கத்துக்கு "முருகேசர்" எனப் பெயரிட்டழைத்தார். இந்திரன் உத்தியாவனத்திலிருந்த கற்பகம் மந்தாரம் பாரிஜாதமுதலிய புஷ்ப விருக்ஷங்களை யெல்லாம் சூரபன்மன் தன் மனையிற்கொண்டுபோய் நாட்டியிருந்தான். அவற்றையெல்லாம் அடியோடு எடுத்து வந்து முருகேசர் ஆலயத்தைச் சுற்றிலும் வைத்து வளப்பமுண்டாகச் செய்தார். பாண்டீசுரர் எழுந்தருளியிருக்கின்ற வந்தியா பாடாணமலைக்கு மேற்புறத்தில் தம்மால் இயற்றப்பட்ட திவ்ய குமார தீர்த்தத்தில் முழுகி நியமத்தோடு முனிவர்களும் தேவர்களும் சூழ நித்திய கருமங்கள் முடித்து முருகேசரை விதிப்படி பூசித்து சதா காலமும் திரிநேத்திரராகிய உமையொருபாகமாக எழுந்தருளிய சதாசிவர் இவர் என்று அந்தச் சிவலிங்கத்தின் மீது சிவசொரூபதரிசனங் கண்டு மிகுந்த பத்திபூண்டு ஆனந்த பரவசராய், முன்னர்க் குமரேசுவரரை எவ்வாறு பூசித்தாரோ, அவ்வாறே பூசித்து உலகமெல்லாம் புகழ்ந்தோங்கும் நாகதீர்த்தத்தில் முழுகி, நியதிமுடித்து ஸ்ரீ அர்த்தநாரீசுரரைப் பூசித்து, பின்னர்ச் சகலதானங்களிலும் அன்னதானம் விசேஷம், அதிலும் மகாபாதகங்களை யெல்லாம் தூரத்தே அகற்ற வல்ல நாகாசலத்தில் அளிக்கும் ஒரு கவள அன்னத்துக்கு மற்றெவ்விடங்களிலேனும், மலைமலையாகக் குவித்தளிப்பினும் சிறிதும் ஒப்பாகாதெனக் கருதி முருகேசராலயத்துக்கு முன்பாக ஒரு சத்திரமமைப்பித்து அதில் மலரவன் பிராமணர் முதலியோர் விரும்பிப் புசிக்குமாறு போஜனம் கொடுத்து வந்தார். இவ்வாறு தேவமானத்தால் பலநாள் சிலவிரதங்களை அநுஷ்டித்து நேசித்துப் பூசித்து ஒப்பற்ற மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார் சுப்பிரமணியர். தேவர்களெல்லாம் அசுரக் கொலையால் நேர்ந்த பாவங்களையெல்லாம் திருநாககிரியில் அவரவர்களுக்கியன்றவாறு புண்ணிய தீர்த்த ஸ்நானம் ஜபதப ஹோமம் பூசை தரிசனம் தானமுதலியன செய்து களங்கஞ்சற்றுமுறுது நீங்கிப் புனிதர்களாகிப் பின்பு உமையொருபாகர் மகா சந்நிதானத்திற் சென்று பணிந்து கைகட்டி வாய்புதைத்து நின்று ஏழைகள் கொண்ட கஷ்டங்களை யெல்லாம் திருவருளால் போக்கி இரக்ஷித்த காளகண்டமூர்த்தியே! தீனதயாளா! எளியேங்



முருகர் சிவார்ச்சனை செய்தல்.

கள் அவுணர்களால் படாதபாடுகளெல்லாம் பட்டோம். அவற்றினின்றும் எங்களைமீட்ட கந்தசுவாமிக்குப் பிரத்தியுபகாரம் எங்களால் ஒன்றுஞ் செய்ய இயலாது. காய்ந்து வாடும் பயிர்களுக்கு மேகம் மழை பெய்து உயிர்வாழ்விக்கின்றது. அவ்வாறு சகாயம் புரிந்த மேகத்துக்குப் பயிர்கள் என்ன உபகாரஞ் செய்ய வன்மை உண்டு. பிரத்தி யுபகாரத்தைப் பெறக் கருதி அந்தமேகம் செய்ததுமன்று ஆகையால் நாங்கள் யாது கைமாறு செய்யப்போகின்றோம் ஆயினும் செய்நன்றி மறத்தல் அதிபாதகத்தினும் பெரிய பாதக மென்பர் மேலோர். ஒரு காலத்தில் ஒருவர் தினையளவு உபகாரஞ் செய்தாராயின் மேன்மக்களாயினோர் அதனைப் பனையளவு உயர்ந்த உதவி செய்ததாகவே கோள்வர். தினையளவு உபகாரஞ் செய்தவர்களால் பின் ஒரு காலத்தில் பனையளவு தீமை தெரிந்தோ தெரியாமலோ நேர்ந்துவிடினும் முன் செய்த தினையளவு உபகாரத்தைப் பெரிதாகக் கருதி இந்தப் பனையளவு தீமையையும் சகித்திருப்பர். அதிலும் அவ்வுதவியும் பிறவுதவியில்லாது திகைக்கும் காலத்திற் செய்த உதவி சிறிதாக இருந்தவிடத்தும் இந்தப் பூமியினும் பெரிதாகச் செய்ததாய் அனுதினமும் அறிவுடையோர் நினைத்திருப்பார்கள் என்று பெரியோர் கூறுவர். தேவரீரது திவ்ய வரபுத்திரசிகாமணியால் யாங்களடைந்த நன்மைக்கு அளவு உண்டோ ! இல்லை ! இல்லை !! கொடிய அவுணர்களால் நாங்களும் சிறைப்பட்டோம். பெண்டு பிள்ளைகளும் சிறையாயினர்கள். மாறுவேஷம் பூண்டு திரிந்தோம். அம்மட்டோ ! சிவ! சிவ !! நினைக்கினும் பதைக்கின்றதே ! பரமசிவம் ! சண்டாளர்களும் செய்தற்கஞ்சும் ஈனத்தொழில்களைச் செய்தோம். அமரர்களானதால் உயிரை விடுதற்கில்லாது அடிமைபூண்டு காலங்கழித்தோம். அந்தப் பாதகர்களுடைய கையினின்று நீங்குவோமென்று ஒரு நாளும் நாங்கள் நினைக்கவில்லை. இவ்வாறு ஆபத்தினின்று எங்களை நீக்கினது மாத்திரமன்றி எங்களுக்குக் கொடுமை செய்த பாதகர்களையெல்லாம் நாசப்படுத்தி எங்களுக்கு நிர்ப்பயமாக்கிய குமாரதேவருக்கு நாங்கள் யாது கைமாறு செய்யவல்லோம். ஆனால் செயற்பாலது எங்கள் உடல் பொருள் ஆவி என்னும் முப்பொருள்களையும் அவருக்காக்கி அவருடைய பாதாரவிந்தங்களில் எங்கள் மனமாகிய வண்டை மொய்திருக்கும்படி செய்வதுதான், ஆனாலும் ஒரு ஆசை இருக்கின்றது. ஒப்பற்ற தனிக்கடவுளே ! எங்கள் இராஜாவாகிய தேவேந்திர குமாரியாகிய தெய்வானையை முருகவேளுக்கு மணவினை முடித்து இருவரும் வீற்றிருக்கும் கோலத்தை எங்கள் கண்கள்

களிகூரத் தரிசிக்கவேண்டுமென்பதே. ஏழைகள் வேண்டியவண்ண மெல்லாம் அநுக்கிரகிக்க தேவரீர் இவ்வரமும் கொடுத்தருளல் வேண்டும். நாங்கள் கொண்ட இந்த அபிப்பிராயத்தை முன்னரும் விஞ்ஞாபித்துள்ளேம் என ஏகோபித்து உயிரிரப்பவர்களினும் பார்க்க அமைதியும் பணிவுமாகத் தேவர்கள் விஞ்ஞாபனஞ் செய்துகொண்டார்கள். இத்தோத்திரங்களை செவிவாய்மடுத்த எம்பெருமான் மகிழ்ந்து நமது ஷண்முகனை அழைத்துக்கொண்டுபோய் உங்கள் அபீஷ்டப்பிரகாரம் திருமணத்தைச் செய்வியுங்கள் என்று ஆஞ்ஞாபித்தனர். இந்நல்வாக்குத் தோற்றியவுடன் துள்ளிக்கூத்தாடிக் குமாரதேவரை வலங்கொண்டு வணங்கித் தேவர்கள் பிரார்த்தித்தார்கள். சிவகுமாரராகிய முருகவேளும் சுவர்ணச் சாயலையுடையதோகை மயில் வாகனத்தின் மீது ஆரோகணித்து தேவர்கள் சூழ சகலவித ஆடம்பரங்களோடு அமராவதி நகரத்துக் கெழுந்தருளிய வைபவத்தை என்னென்று சொல்லமுடியும். சுவர்க்கமத்திய பாதாளங்களென்னும் முப்பிரிவுற்ற உலகங்களும் அண்டபகிரண்டங்களும் குமாரதேவருக்குத் திருக்கல்யாணம் நடக்கப்போகிறதென்று யாவரும் தங்கள் தங்கள் வாசஸ்தலங்களை அலங்கரித்து மகிழ்ச்சிக்கொண்டார்கள். சிறைமீட்ட வேலாயுதபாணி வருகிறாரென்று ஆகாயவாசிகள் தம்பதிகளாகவந்து வணங்கி வாழ்த்தினார்கள். சூரியனைக்கண்ட செந்தாமரை மலர்போல யாவருள்ளமும் மலர்ந்தது. வல்வினை தீர்த்த பெம்மானே! எங்களுக்குச் சேவை தந்தனையே! நீ வாழி! வாழி! என்றார்கள். உமது கூரியவேலாயுதமானது வாழக்கடவது என்றார்கள். பாரிஜாத் முதலிய புஷ்பங்களை மழை வருஷிப்பது போலச் சொரிந்து மகிழ்ந்தார்கள். இவ்வாறு சென்ற திருக்குமார தேவரைத் தேவேந்திரன் ஒரு அரிய சிம்மாசனத்திலிருத்தி வணங்கினன். தேவர்களெல்லாம் வணங்கினார்கள். அரம்பை முதலிய தேவமாதர்கள் நடனம் புரிந்தார்கள். ஹாஹா ஹூஹூ முதலியோர் கானமிசைத்தார்கள். மற்றைத் தேவர்களெல்லாம் வேதமந்திரங்களால் தோத்திரஞ் செய்தார்கள். முருகவேள் இன்புற்று விளங்கினார். சத்தவிருடியர்களும் நந்திதேவர் முதலிய சிவகணநாதரும் பிரமதேவரும் மற்றையோரும் நல்ல முகூர்த்தமிது என்று கணித்தார்கள். அத்தருணத்தில் பூரண சந்திரவதனியாகிய தெய்வயானையைச் சகல ஆடை ஆபரணாலங்காரத்தோடு தேவேந்திரன் அழைத்து வந்து திருமணஞ் செய்து கொடுத்தான். தேவதுந்துபிகளும் மங்கலப்பாடல்களும் முழங்கின. பின்பு கிம்புரிக்கோடுகளையுடைய ஐரா

வதமென்னும் யானையின் மீது ஏற்றிவைத்து தெய்வலோகத்தை வலஞ் செய்வித்தார்கள். அங்ஙனம் வலம் வந்து தேவசபா மண்ட பத்தில் சிம்மாசனத்தின்மீது ஏற்றி மகுடஞ் சூட்டித் தேவேந்திர பட்டம் கட்டினோம்; இனி சுவாமி எளியேங்களாகிய தேவர்கள் சேனைக்கு அதிபதியாக எழுந்தருளல் வேண்டும்; இசைந்தருளல் வேண்டுமென்று மன்றாடினார்கள். தேவர்களே, உங்களுடைய வேண்டுகோளை ஒப்புக்கொண்டு தேவசேனாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டோம். நீங்கள் ஒருபோதும் பயப்படவேண்டாமெனத் திரு வாய்மலர்ந்தருளினர். இத் திருமொழி கேட்டவுடன் அன்று தோன் றியவிடத்தை அடக்கி உமது பிதா அளித்த அமுதத்தை வாயினால் உண்டோம். நிலத்திலும் நீரிலும் மற்றெப்பொருளிலும் தோன்றிய (அவுண) விடத்தை உமது வேலால் அடக்கிப் பயப்படாதீர்களென்று வாக்காலளித்த திருவமுதத்தை எங்கள் செவிகளாற் பருகினோம். வாழ்ந்தோம்! வாழ்ந்தோம்! எனத் தேவர்கள் சந்தோஷங்கொண் டார்கள். இரு செவிவரையிலோடி நீண்டு மதத்துச் செவ்வரி பரந்து மைதோய்ந்த கண்களும், தேன்றுளித்த வண்டுகள் ரீங்கார சப்தஞ் செய்யப் பார்த்தோருள்ளங் களிகூருமாறு மலர்ந்து அழகு வாய்ந்த திருமுகமும், நீண்டு வாசனை பொருந்திய தைலமூட்டி நெறித்துக் கறுத்து மேகம் போன்ற கூந்தலும், வள்ளையிலையைப் போன்றழகு வாய்ந்து ஜீவரத்தினத் தாடங்கமணிந்த செவிகளும். பட்டமரங்களெல்லாந் தளிர்க்கற்பாலதும், உண்ணக் கிண்ணத்தி லேந்திய அமுதத்தைப் பருகாது நிறுத்தி வெறுக்கவைக்கற் பாலது மாகிய இனிமை வாய்ந்த மொழியும், பிறைபோன்று முரிந்த புருவங் களும், கண்டோர் கண்களை இமையாது நிறுத்தும் வனப்பு வாய்ந்த வளையல் அணிந்த கைகளும், உண்டோ இல்லையோ தனபாரத்தால் முறிந்து சாய்ந்துவிடுமோ என்ன ஐயமுற விளங்கு கொடியிடையும், வார்கொண்டிறுக்க வடங்காது நிமிர்ந்து மேலெழும்பிய மலைபோன்ற தனபாரங்களும், தளதளப்பாகிய பச்சைநிறங்கொண்ட பொன் போன்ற சாயலும், வலம்புரிச்சங்குபோன்றழகிய திருமங்கலிய மணிந்த கழுத்தும், வளையாது மெல்லென நடக்கும் அன்னம்போன்ற நடையும் பொருந்திய தெய்வயானை மங்கையாரோடு கூடி மகிழ்ந்து வீற்றிருந்தார் சுப்பிரமணியக் கடவுள். சில பகற்கள் சென்றபின் தேவர் முனிவர் முதலாயினோர் புடைசூழப் பூவுலகத்துக்கெழுந்தருளி திருநாகாசலத்தை அடைந்து பிரிந்திருந்த ஆற்றாமையால் விரைந்து வலம் வந்து அம்மையப்பரை வணங்கித் தெய்வயானையையும் வணங்கு

வித்து கைகட்டி நின்று என் ஐயனே! அடியேன் அறியாது செய்த பிழைகளையெல்லாம் பொருத்தருளி பாதக அவுண கூட்டங்களெல்லாம் நாசமாகும்வண்ணம் பராசக்திவேலாயுதம் கொடுத்தருளி வல்வினைகளை மாற்றியகடவுளே போற்றி போற்றி என்று தோத்திரஞ் செய்கின்ற குமாரசுவாமியை அம்மையும் அப்பரும் கையார எடுத்தணைத்து தழுவி உன்னுடைய கல்வியும் அழகிய சிறப்பும் அருளும் நம்மேன்மை போலுற்றுயர்ந்தோங்குக எனத் திருவாய் மலர்ந்தருளி தெய்வயானையைத் தங்கள் பக்கத்தில் அழைத்து நமது திருக்குமாரருக்கு இனிதாகிய இன்பமும் அன்பும் உனக்குண்டாகுக என ஆசி வழங்கினர். தேவர்களெல்லாம் தொழுது போற்றித் தங்கள் தவநெறிகளை இயற்ற விடைபெற்றுச் சென்று அனுதினமும் உமையொருபாகரையும் செங்கோட்டுவேலரையும் வந்து பணிந்து வேண்டிய வரங்களைப் பெற்று மகிழ்வுற்றிருந்தார்கள்.

முக்குறும்பற்ற முனிவர்களே! உமையொருபாகர் சந்நிதானத்தே யுகங்கள் தோறும் வேடபேதம் பெறுவதோர் கற்பகதருவுண்டு. அது அழகுற்ற மாமரமாகவிருக்கிறது. நம்மை ஆட்கொள்ளுஞ் சிவபிரானார் திருமுடியிலிலகுங் குளிர்ந்த மதியமுதத்தால் பசுமையாய்ப் பணைத்துத் தளிரும், தழையும், பூவும், பிஞ்சும், காயும், கனியும் பொருந்தி மும்மூர்த்தி வடிவுற்று விளங்கியிருக்கும். அந்தத் தெய்வீக மாமரத்திலிருந்து தினமும் தீங்கனிகளுதிரும். அக்கனிகளை அம்மையப்பர் குமாரர் மூவர் தவிர மற்றைத் தேவர்களுமருந்தார்கள் புசித்தால் நரகவேதனை வருமென் றஞ்சுவார்கள். முன்னொரு காலத்துத் தம்மை வலம்புரிந்த மூத்தபிள்ளையாருக்கு ஒரு மாங்கனி கொடுக்க, இளைய பிள்ளையாருக்கு நேர்ந்த மனவருத்தம் நீங்கி பிரதிநாளினுங் கனிபெறும் வண்ணம் அநுக்கிரகித்தமாமரமென்று பெரியோர் கூறுவர். அம்மரத்தினின்று விழுங்கனிகளை எடுத்து சுவாமிக்கு அபிஷேகம் புரிந்து நிவேதித்து முருகவேளும் அன்புட னருந்துவர். ஒப்பற்ற மகிமை பெற்ற விம்மரத்தை ஞான நோக்கமுற்றவர்களே காணவல்லவர்கள் இதுபோன்ற மரம் எவ்வுலகத்து மில்லையென்றார் சூதமுனிவர்.

---

உ

சிவமயம்.

# வள்ளிநாயகியார் உற்பவம்.

---

சிவவேடத்தினரைச் சிவனென மதிக்கும் தபோதனர்களே! திருமால் புத்திரிகளாகிய அமுதவல்லி சுந்தரவல்லி என்னும் இருவர்களும் தவமியற்றுதலைக்குமரேசர் அறிந்து அமுதவல்லியைத் தேவேந்திரனிடம் வளருக என ஆஞ்ஞாபித்து, அவுணரை வெற்றிகொண்டவுடனே இந்திரனிடம் வளர்ந்த அமுதவல்லி என்பார் தெய்வயானை என்னும் திருநாமம் பெற்றுத் திருக்கல்யாணஞ் செய்த விவரமறிந்தீர்கள். சுந்தரி என்னும் மங்கையைப் பூலோகத்திற் சென்று சிவமுனி புத்திரியாய் வேடர் சிற்றூரில் வசித்திரு என்றருளிய சுப்பிரமணியக் கடவுள் கட்டளைப் பிரகாரம் சுந்தரி பூலோகத்துதித்த விபரம் கூறுகின்றேம் முனிவர்களே கேட்பீர்களாக.

வள்ளிமலைச் சாரலிலே சைவவிரதங்களை அநுஷ்டித்துக்கொண்டு வசிக்கும் சிவமுனி என்பவர் எதிரே அழகிய மான் ஒன்று சுவர்ணச் சாயை பொருந்தி மேய்ந்துகொண்டிருப்பதைக் கண்டு ரூபலாவண்ணியமுற்ற தருணமங்கையை நேர்ந்த காமுகனைப்போல் உன்மத்தங்கொண்டு சேர்ந்தனர். அம்மலைச் சாரலிலோர்பாங்கு தவம் புரிந்திருந்த அம்மான் வயிற்றுனுள்ளே சுந்தரவல்லியார் பிரவேசித்திருந்தனர். அம்மான் சூன்முற்றி வேடப்பெண்கள் சில்லக்கோலினால் வள்ளிக்கிழங்கைக் கல்லியெடுத்த குழிகள் ஒன்றிலே சிசுவை ஈன்றது. அம்மலைச் சாரலில் வசிக்கும் வேடர் தலைவன் சுயேச்சையாக வேடர்கள் சூழச் சுற்றிவரும்போது இளஞ்சிசு அழுமோசை கேட்டுப் பார்க்க தேஜோமயமாகிய ஒரு பெண் குழந்தை கிடக்கத்தன் இரு கண்களாலும் கண்டு ஆனந்தங்கொண்டு இரு கைகளாலும் மெல்லெனவெடுத்து மனைவிகையிற் கொடுத்துத் தமது குலதெய்வம் கொடுத்த பாக்கியமென அருமை பாராட்டி வள்ளிக் கிழங்குதோண்டிய குழியிலிருந்தமையால் வள்ளி என்று திருநாமமிட்டுக் கண்ணை இமைகாப்பதுபோல வளர்த்தனர். நடைப்பருவம் அரிவை தெரிவைப்பருவம் நீங்கி அமுதம் போன்ற மொழியும், குமுதப்பூ வனைய கனிவாயும், தங்கச்சிமிழ் போன்ற தனபாரமும், பிறையொத்த நெற்றியும் காந்தள் மலர்போன்ற கைகளும், வலம்புரிச் சங்குநிகர்த்த கழுத்தும், கணை போன்ற கண்களும், கமலமலரொத்தமுகமும், முருக்கம் பூவொத்த

அதரமும் வாய்ந்த பேரழகுற்று அதிரூபசௌந்தரிய பூலோகலட்சுமி என்று யாவரும் புகழுமாறு மங்கைப்பருவமுற்று விளங்குங் காலத்தில் அம்மலைச் சாரலிலுள்ள தினைப்புனங்களைப் பக்ஷி முதலியன அழித்து விடாது பாதுகாத்திருக்கும் பொருட்டு பவளமலையொருபுறமும், மேகமொய்த்த வச்சிரமலையும் மாணிக்கமலையும் இருபுறமும் பொருந்தி நிற்க அழகிய மரகதமலைச் சாரலிலொருபுறத்தில் விளங்காநின்ற பூங்காவனத்திலே ஒரு பரண் அமைப்பித்தார்கள். அப்பரணின்மீது சந்தனக்கோட்டினையும் யானைக்கொம்புகளையும் அழகுபெற அமைத்து கொவ்வைக் கனிவாயும் அமுதரசத்தைப் பழித்த இனிய மொழியையுமுடைய வள்ளிநாயகியாரை அழைத்துக் கொண்டு வந்து அதன்மேல் இருத்தி மான் பார்வையைப் பழிக்கும் சில பெண்களை அம்மையார்க்குத்துணையாக வைத்தார்கள். வள்ளியம்மையும் அழகிய பரண்மீதிருந்து ஒளிபொருந்திய கவணில் மாணிக்கக் கற்களை வைத்து தினையைக் கவரும் கிளி புறா முதலியவற்றைப் பார்த்து ஆலோலம் ஆலோலம் என்று பட்டமரங்களும் தளிர்க்கவியன்ற புள்ளோச்சுமினிய தொனியினால் அவற்றை ஓட்ட முயன்றார். அவ்வொலியினால் கல்லும் உருகிற்று. கவணெலிரிந்த கற்கள் பட்டும் கிளி முதலிய பறவைகள் எழுந்து ஓடாமல் இவ்வினிய தொனிக்கிளகிக் கேட்டுக்கொண்டிருந்தன. தேவாமுதரசமும் கைக்கும் தகுதி வாய்ந்த இனிய குரலோசை அம்மார்க்கத்திற் செல்லும் பிரமாவின் புத்திரராகிய நாரதமுனிவர் கேட்டு மகிழ்ந்து இவ்வினிமை வாய்ந்த குரலோசையையுடையவர் தெய்வலோகத் தனங்கோ நாகலோகத் தனங்கோ என ஐயுற்றுப்பார்த்த அளவில் வள்ளிநாயகி எனத் தெரிந்து ஒப்பற்ற வடிவு பொருந்திய இந்நங்கை வேலாயுதச் செங்கையுடையானுக்கே மணமகளாக இருத்தல் வேண்டுமெனத் தேறி உடனே புறப்பட்டுச் சிவகுமாரர் சந்நிதானத்தெய்தி தான் பார்த்துவந்த விபரங்களை எடுத்துரைத்தார். கைலாயம் நாகாசலம் என்னும் இரண்டு மலைகளையும் தமது இரண்டு கண்களாக நினைந்து எழுந்தருளி அடியார்களுக்கு அபீஷ்டவரப் பிரசாதமருளி விளங்கும் ஷண்முகநாதர் நாரதரால் நினைப்பூட்டிய வள்ளிநாயகியாரைக் காண உள்ளத்தில் எண்ணமுற்றவராயினர்.

---

## வள்ளிநாயகியார் திருமணம்.

மும்மதமுள்ள யானைகளானவை கொம்புகளாற்பாய்ந்து குத்ததிரட்சியாகிய முத்துக்குவைகளையும், நீலவொளி காட்டும் மூங்கில்

வெடித்துதிர்த்த முத்துராசிகளையும் இன்னும் பல மணிகளையும் மலர் கனிகளிலிருந் தொழுக்குப் பெருகிய தேனருவியானது வாரிச் சொரிந்து சத்திக்கத்தக்க பல மலைகளிலே வள்ளிநாயகியார் இருக்கின்றாரோ எனத் தேடியும், அஷ்டபுயங்களையுடையவளாய்ச் சத்தமாதர்களாகிய சத்திகூட்டங்களில் இனிய சத்தியாய் அறு சமயத்தாருக்கும் அங்கங்கே அவரவர்க்கு இஷ்ட தெய்வமாக விளங்கி, பஞ்சபாதங்களைத் தீர்க்கின்றவராய் வளமையாகிய சதுர்வேதப் பொருளாய்த் திரிநேத்திர முடையவராய்த் திருநடனஞ் செய்கின்ற பாதங்களையுடைய அழகிய துர்க்காதேவிக்கு உரித்தாகிய பாலை நிலத்தைச் சார்ந்த விடமெங்குந்தேடியும், அரிய மெல்லிய மலர்போன்ற பாதங்கள் நோவச் சூராதிகளுடைய இரத்தந் தோய்ந்த வேலாயுதத்தையுடைய குமரவேள் ஓர் திருவிளையாட்டாய்க் கொண்டு தேடிச் செல்வாராயினர்; அங்குங் காணாமையால் தனது மாமனாகிய மாயவனுக்குச் சொந்தமாகிய முல்லைவனத்திற் புகுந்து அங்கே குதிக்கும் பிணைமான்களைக் கண்டு தம்முயிர்போலும் எழிலுடைய வள்ளிநாயகியின் மருண்ட கண்கள் இம்மான் பார்வை போன்றுதானிருக்குமென நினைந்தும், உள்ளம் உருகியும், அழகிய கொன்றை புஷ்பித்த மலரைக்கண்டு இப்பூ நிறம் போன்றுதான் குறமாதின் மேனியிருக்கும் என எண்ணிப் பெருமூச்செறிந்தும், முல்லை நிலத்தார் வேய்ங்குழலாலெழுப்பும் சாகாரிப் பண்ணைக் கேட்டு உள்ளமுடைந்தும், மருதநிலத்தில் புகுந்து செல்லும்போது, தெய்வயானையின் தகப்பனாகிய தேவேந்திரனுடைய நிலமாதலின் அவன் கண்டால் மோசமெனப் பயந்தவர்போலக் கால்கள் தடுமாறி, வளநிறைந்த நீர்த்தடங்களில் மலர்ந்த செந்தாமரை மலர்களையும் முருக்கவிழாத மலரையும், பருவத்கரும்புகளையும் கண்டு இம்மலர்போலும் முகமும், அரும்பு போலும் கொங்கைகளும் உள்ளவராகத்தான் வள்ளி ஒள்ளிய அழகுடனுலவுவளோ என உள்ள முடைந்தும், திருச்செந்தியிலும், திருநாககிரியிலும் எழுந்தருளியிருக்கும் அழகிய முருகநாதர், நெய்தல் நிலமாகிய கடற்கரைக்குவந்து கழி சூழ்ந்த கடற்கரைப்பட்டினங்களெல்லாம் தேடி, நீர்ச்சுழியும், கருமணலொழுக்கமும், மகரமும் கண்டு வள்ளிப்பெண்ணின் உந்திச்சுழியும் நெடிய கூந்தலும், பிரபை செய்யும் குழைகளும் இவ்வாறுதானிருக்குமென்று வியந்தும், குறவர்களிருக்கும் வனங்களைத் தேடிவளமைகூர்ந்த வள்ளிமலை எது என்று தமது மனசில் வள்ளிப்பெண்வடிவை இருத்தி மலர்போன்ற கண்களிலும் அவளுருவ ம்அமையுமாறு அவ்வனத்தில் வருவார் போவார்களையும் விசாரித்துத் தேடியும் தனபாரம்

பொருந்திய பொற்கொடியின் குரலோசையை நாடிமெல்லிய பாதங்கள் வருத்தமுற நடந்தும் இன்னும் பெண்ணமுதைக் காணவில்லையே என்று உள்ளம் நைந்து செல்லும் பொழுது கவண் கல்லோசையையும் "ஆலோலம்" என்னும் இனிமை வாய்ந்த குரலோசையையும் இரு செவிகளாற் கேட்டு மனமகிழ்ந்து "வாழ்ந்தேன் வாழ்ந்தேன்" என்று முருகர் குதூகலம் கொண்டார். இக்கானகத்திற்றிரிகின்ற யானைக் கூட்டங்களே ! பிடியினங்களே ! பிணைமான் தொகுதிகளே ! கலைமான்களே ! நீங்கள் இந்த மானீன்ற தலைவியாகிய வள்ளிப்பெண்ணிருக்கும் வழியைக் காட்டுங்கள் ! தினைக்கதிரைக் கொய்யுங் கிளிகாள்! கிளிப் பேடைகாள்! குருவிக் கூட்டங்களே! நீங்கள் இனிதாக வாழ்வீர்கள். யான் இங்ஙனம் தேடித்திரிகின்றேன். எப்போது அவளைக் காணப் பெறுவேன் சொல்மின்களென்று எதிரே தோன்றுபவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டு குரலோசை வரும் வழியை நன்கு உற்று அவ்வழியே சென்று சேர்ந்து குறவர்களுக்குயிர் போன்ற மலைப்பெண்ணமுதை, காமவல்லிக் கொடிபோலழகிய பிடியானை நடையை யுடையவளை, உச்சிதமாகிய குலமடந்தையை, தென்றல் வீசும் வசந்த காலத்துக்குயில்போலும் ஓசையையுடையமலைத்திருமகளை, செவ்வியமானீன்ற கன்றை, பெண்கனியை, கனிந்தசொற் பேசும் பெண்கிளியை, அழகிய வள்ளிநாயகியாரை தமது கண்களாரக் கண்டார் வடிவேலர்.

வாராய் பெண்கள் நாயகமே! நீ இந்தக் காட்டில் அழகிய பரணின்மீது இப்படி இருந்தால் உம்முடைய குரலோசையால், பேசும் மிருது வசனங்களால், கண்களின் பார்வையால், அழகிய நடையால், துறவிகளாக இவ்வனத்தில் வசிக்கும் முனிவர்கள் தவம் அழிந்து போகாதோ! சுவர்ணக்கிளிபோலும் அழகிய பெண்ணே! உபயோகமற்ற இந்தப் புனத்துப் பரண்மீது தனிமையாக இருக்க வைத்து இந்த மலைக் குறவர்கள் உம்மைச் சதிமோசஞ் செய்திருக்கிறார்கள். பிரமதேவனுடைய விதியும் இதற் கொத்திருக்கிறதென்றால் அறிவில்லாத வேடர்கள் துணிவை என்னென்று மதிக்கவிருக்கிறது. மின்னலுக்கு மேலாக ஒரு கார்மேகங் கண்டிருப்பதும், செவ்விய தாமரைப் புஷ்பத்துள்ளே நிலோற்பலபுஷ்ப மிருப்பதும், மலையின்மீது தான் கொடியிருப்பதுண்டு மெல்லிய கொடியின்மேலே கலைபொருந்திய இரண்டு பொன்மலைகளிருப்பதும், வில்லின் மேலே பிறையும், பிறையின்மீது சிந்தூரதிலதம் வாய்த்தலுமாகிய வனப்புக்களைத் தெய்வலோகத்திலும் கண்டிலேன். ஓ மனமே! சொல்லுதற்கரிதாய் அமுதூறும் கோவைக் கனிபோலும் அதரவழகுகொண்ட இந்தக் காமவல்லிக் கொடிபோன்ற

இம்மாது வசிக்கும் இந்தத் தலம் தேவநகரமோ, செம்பொன்மேருவோ, அமராவதி நகரமோ, திருப்பாற் கடலோ, புனந்தானோ யாதென்று தோற்றவில்லையே. சங்கத் துவாரமானது குயிலோசையைத் தருமோ? அடிபெண்ணே! இராப்பொழுதானது ஒருபகலில் வருமோ? அங்ஙனம் வரக்கண்டாலும் உசிதமான பிறையும் பூரண சந்திரனும் ஏககாலத்திருக்குமோ தெரிந்து சொல்வீராக. நீர் காவலாக இருக்கும் தினையில் ஒரு மணியும் குருவிகள் தின்னுவண்ணம் இப்பரண்மீதேற்றி ஓலமிடச் சொல்வீராக. உமது ஏவலுக்கு எளியேன் ஆகும் வேலை செய்கிறேன் என்ற முருகர் பின்னரும் சொல்கின்றார். ஓ பெண்கள் நாயகமே! நீர் எறியும் கவணுக்கேற்ற பெரிய முத்துக்களாக எடுத்துக் கொடுக்கவேணும், உமது கையிற் செறிந்த பந்து கழங்காட இசைவு தெரிந்து செய்யவேணும், மணமும் தேனும் பொருந்திய நல்ல நல்ல புஷ்பங்களால் மெல்லிய பூஞ்சோலையில் விளையாடத் தக்கதாக நறுமணலில் சிற்றில் விளைக்கவேணும் ஏவல் செய்க என்று செவ்வாய் திறந்து சொல்லியருளுவீராக. இன்றேற் பிடியானையைப் போல உமது சிற்றிடையை நோகாமற் பிடிக்கட்டுமா? மெல்லிய கொடிபோன்ற சிற்றிடையில் கோசிக ஆடை உடுத்தட்டுமா? கர்ப்பூரத் தூளையும் மகரந்தத்தையும் கலந்து மார்பிலப்பட்டுமா? கூந்தல் மீதுமலர்ந்த புஷ்பங்களைச் சூட்டி அலங்கரிக்கட்டுமா? எவ்வேலை செய்யச் சொல்கிறீர்! காம நோயைச் செய்யும் கூறிய கண்களையுடைய பெண்ணமுதமே! நீர் அழகிய பெண்மயிலேயாகும். என் புயங்கள் பருத்துயர்ந்த மலையேயாகும். ஆதலால் புயமலையின்மீது மயிலாகிய நீர் ஏறிவிளையாடாத காரணமென்ன எனப் பலவாறாகக் காமவின்பமொழிகள் பல கூறி வள்ளிக்கு இசைவு கூறியிருக்கும் சமயத்தில் யமகிங்கரர்களைப் போல ஆரபாரத்தோடு வேடர்கள் நெருங்கினார்கள். அவர்கள் வரவை அறிந்த குமாரதேவர் கிளிகள் தங்கும் வேங்கைமரமாயினார். அதனைக் கண்டு இது புதிதாகக் காண்கிறது என்று சிலர் சொன்னார்கள். சிலர் வெட்டிவிடலாமென்றார்கள். நமது வள்ளி வசிப்பதற்கு நிழலாகவும் நாம் பந்திவழங்குதற்குத் தகுதியாகவும் இருக்குமென விலக்கித் தேன் கலந்த மூலபழங்களை வள்ளிக்குக் கொடுத்துவிட்டு வில்லம்பு கையிலேந்திக்கொண்டு வேடர்கள் தங்கள் சிற்றூரை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் சென்ற பின்பு வேங்கைமரமாக நின்ற காமக்கள்ளராகிய முருகர் காந்தருவ மணத்தில் விருப்புற்று சித்திரவேலையிற் றேர்ந்தவனால் தூரிக்கோலால் எழுதவொண்ணாத அவ்வளவு அழகு மிகுந்த வடிவெடுத்து வள்ளிநாயகியார் எதிரில் வந்து நின்று ஓ பெண்மணியே!

கொடிய வேடர்கள் என்னைக் கொல்லாமற் கிருபை செய்தாய், அது போல மலர்ப்பாணங்களையுடைய வேடன் கொலைக்கிலக்காகாதவண்ணம் என்னைக் கூடி இன்பத்தைக் கொடுப்பாயாக. பாதசேவைக்கு மிஞ்சிய உபசாரமில்லை என்றவாறு பாடகமணிந்த உன் பாதத்தைப் பிடித்தாவது உம்மோடு கூடிச் சுகித்துச் செல்வேனன்றிப் போகேன். ஆதலின் தாமசஞ் செய்யாதீர், இன்னும் ஒருமுறை அந்த வேடுவர் வந்தால் நம்முடைய காரியத்துக்கு இடராகும். ஓ அன்னநடையுடைய அணங்கமுதமே! என்னோடு கூடவாரும். பொன்மலை, வெள்ளிமலை, பொன்மேடை, சித்திரவன்னத் திருமாளிகை முதலிய வெல்லாந் தருகின்றேன் என்ற வார்த்தையைக் கேட்ட வள்ளியம்மை முகஞ் சுளித்து ஓ குமாரரே! தகாதவார்த்தைகளை "என் பேசி நிற்கின்றீர் இதோ எங்கள் வேடுவர் வருகின்றார்கள். கண்டால் உம்மையும் என்னையும் கொன்று விடுவார்கள் வந்தவழி பார்த்துப் போய்ப் பிழைத்துக் கொள்ளுங்கள்" என்றவுடன் வேடர் கூட்டங்கள் நெருங்கிவரவே மிகவும் வெளுத்த நரைமயிர் பொருந்திய முடியும் கூனி வளைந்து தளர்ந்த மேனியும் கொண்ட தவமுனிவராகக் குழிக்கண்பொருந்தி பூணூல் தரித்துக் கோல் பிடித்தூன்றி நடுங்கித் தத்தித் தடுமாறிப் பிராமணக் கிழவன் போலும் குறிஞ்சிக் கிழவராகிய முருகவேள் வேடர்கள் வரும் வழியினின்று வேடராசனுக்கு ஆசிமொழிந்தார். எங்கிருந்து எங்கே செல்கின்றீர்கள் என வணங்கிக்கேட்ட வேடுவனை நோக்கி, "அரசே! கன்னிகாதீர்த்த மாடுதற்கு வந்தேன்" என்ன அப்படியே ஆருக ஆருக என மொழிந்து இவரை அழைத்து வள்ளியம்மையிடம் விட்டு இவர் தவநிலைமையைக்கூறி, தினைமா தேன்கொடுத்துச் சென்றார்கள். அதனைப் புசிப்பதுபோற் பாசாங்கு செய்து விக்கிக் கொண்டதாக மாயஞ் செய்து சுனைநீர் வேண்டு மென்றனர். கபடமறியாத வள்ளியம்மை இவரை அழைத்துப்போய்ச்சுனை யடையாளங் காட்டும் பொழுது யவ்வனபுருஷனாக மருவ வேண்டினர். ஒவ்வாது சீற்றங் கொள்வதை அறிந்த கந்தசுவாமி தன் மூத்தோனை நினைத்தார். மும்மதங் கொண்ட காட்டானையாக வள்ளியைத் துரத்திவரவே பயந்து முருகரை முதுகின்புறமாகக் கட்டிப்பிடித்து இந்த யானையைத் துரத்தி என் உயிரைக் காத்தால் உமது சொற்பிரகாரம் நடக்கின்றேனென்று வள்ளியம்மையார் கூறியவுடன் மிகுந்த சந்தோஷங்கொண்டு யானையை வெகுதூரம் துரத்திவிட்டு வந்து, தெய்வயானையைச் சேர்ந்த சேவகரானவர் மரமடர்ந்த வள்ளிமலைச் சாரலில் வள்ளிநாயகியாரைக் கூடி இன்பமனுபவித்தார். அணைந்தபின்பு ஆறுமுகமும் பன்னிரண்டு புய

மும் தோன்ற மயில் வாகனத்தின்மீது முருகவேள் காட்சிகொடுத்தார். அப்பொழுது வள்ளியம்மை கொண்ட மகிழ்ச்சிக்கு அளவு சொல்ல முடியாது உடனே வள்ளியம்மையார் தமது தோழிகள் பக்கத்துச் சேர்ந்தார். இன்பம் அனுபவித்த கந்தவேள் சுற்றிச்சுற்றி வள்ளியுடன் கலந்து சுகிப்பதைச் சாடையிற் கண்ட பாங்கி, நாயகியை நோக்கி அம்மா! உலகத்திலே தங்கத் தகடும் இரத்தின மணியும் தமக்கு தாமே நெருங்கிச் சேரவேண்டிய யோக்கியதை உள்ளனவாக இருந்தாலும் அவற்றைத் தாங்கி இழைப்பவ னொருவன் வேண்டும். அதுபோல நீங்கள் இருவரும் என்னை அறியாது சேர்ந்தணைந்தாலும் அது நிசவின்பமாகாது, நான் உங்களுக்குரியவளானதால் உங்களுடைய புணர்ச்சியைச்செவ்விதாக்குகிறேன் எனப் பிரிய வசனஞ் சொல்லி மகிழ்வூட்டியிருக்குந் தருணத்தில் வேடர்கள் வந்து விளைந்த தினைகளை அறுத்துக் குவித்தார்கள். முருகவேளும் இரவில் வந்தார். பாங்கி வள்ளியம்மனை அவருடன் கூட்டி அனுப்பினாள். அறிந்த வேடர்கள் தொடர்ந்து பாணங்களை விட்டுக் கந்தசுவாமியைத் தடுத்தார்கள். வள்ளிப்பெண்ணே உன் இனத்தார்கள் வந்துவிட்டார்கள். நான் ஒரு மலைக்குகையில் ஒளித்துக்கொள்கிறேன், நீ உன் இனத்தாருடன் சேர்ந்துகொள் என்று முருகவேள் கூறினர். வள்ளிநாச்சியார் ஒவ்வாது பின் தொடர்ந்து வருவதை உணர்ந்து வேலாயுதத்தை விட வேடர்களெல்லாம் மாய்ந்து போனார்கள். வள்ளியம்மைகண்டு மனமுடைந்து எழுப்பிக் கொடுக்கும்படி வேண்டினார். நீயே எழுப்பு என்ற கட்டளைகொண்டு "நீங்களெல்லாம் எழுங்கள்" என்றவுடன் தூக்கம் நீங்கினவர்களைப் போல எழுந்தார்கள். மயில்வாகனத்தின்மீது காட்சி கொடுத்தருளினர் முருகேசர். இரண்டு கண்களாலும் கண்டு மகிழ்ந்து நமது குல தெய்வமெனப் பணிந்து போற்றி வள்ளிநாயகியாருக்கும் சிவசுப்பிரமணியக்கடவுளுக்கும் முறைப்படி விவாகஞ் செய்வித்து அங்குள்ள வரிசைகளைக் கொடுத்தனுப்பினார்கள். பூங்கொடிபோலும் அழகிய வள்ளியம்மையாரோடு கந்தசுவாமியும் நாரதரும் கைலை சென்று வணங்கி தெய்வயானையோடு கூடித் திருநாககிரியில் தேவர் முனிவர் சித்த வித்தியாதர கின்னர கிம்புருடர் நாகர் நாற்பத்தெண்ணாயிரம் இருஷிகள் சேவிக்க அடியார்கள் வல்வினைகளை நீக்கி அபிஷ்ட வரப்பிரசாதங்கள் அளித்து வீற்றிருக்கின்றார் எனத் தேனூறுமாறு சூதமுனிவர் சௌனகாதி ரிஷிகளுக்குத் திருவாய்மலர்ந்தருளினார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தீர்த்தகாண்டம்.

## கணபதிதீர்த்த மான்மியம்.

---

தபோதனர்களே! ஸ்ரீ அர்த்தநாரீசுரர் மகிமையையும், குமாரர் பெருமையையும் கேட்டீர்களன்றோ? தீர்த்த விசேடத்தையும் அன்புடன் கேட்பீர்களாக. பஞ்சக்குரோச ஸ்தலமாகிய திருச்செங்கோட்டு அட்டதிசையிலுமுள்ள தீர்த்தங்களில் முழுகினால் முப்பத்துமுக்கோடி தெய்வ தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த பலனாகிய சிவகதி வாய்க்கும், கிரியின்மேல் திக்குக்கு ஆயிரம் தீர்த்தங்களாக எட்டுத் திக்கினும் எண்ணாயிரம் தீர்த்தங்கள் இசைந்துள்ளன. அத்தீர்த்தங்களிற் படிந்தோர்களுக்கு நாற்பத்தெண்ணாயிரம் தீர்த்தங்களில் மூழ்கிய பலன் சித்திக்கும். இவைகளில் சந்திரபுஷ்கரணி சூரியபுஷ்கரணி தீர்த்தங்களும் இரகசியமாகிய கைப்புநீர் பொருந்திய சுனை ஒன்றும் உண்டு. விருத்தாப்பியர் மூழ்கினால் பாலியராகும் தீர்த்தமொன்றிருக்கின்றது. இன்னும் சுவர்ணமயமாகிய திருச்செங்கோட்டில் அருமை வாய்ந்த மூன்று சுனைகள் உண்டு. அவற்றுள் இரும்பைக் களிம்பற்ற செம்பாக்குவதொருசுனை. செம்பை வெள்ளியாக்குவதொருசுனை. வெள்ளியைப் பொன்னாக்குவதொருசுனை. இவ்வாறு காரண மகிமை வாய்ந்தவைகள் பல. அவற்றின் பெருமை சொல்வதெளிதன்று. ஆனால் இக்கலியில் அதிருஷ்டவான்களுக்கே இவை புலப்படத் தக்கனவாம்.

மனமாசில்லாத மாதவர்களே! மகிமை வாய்ந்த நாககிரியிலுண்டாகிய தீர்த்தங்களில் நூற்றுக்கொன்றாக எளிதால் மேன்மையாகிய மோக்ஷம் கொடுப்பதற்குரித்தாய் விளங்கியிருப்பன கணபதி தீர்த்தம் முதல் நாற்பது தீர்த்தங்களாகும்; அவற்றுள்ளே சிவபாதம் கொடுக்கத்தக்கதாய் மணம் பொருந்திய தாமரை முதலிய நீர்ப்பூக்கள் பொருந்திய கணபதி தீர்த்த மகிமையை முதலிற் சொல்கின்றேன் என்று சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளுவாராயினார்.

மகிமை வாய்ந்த தபோதனர்களே! உலகமாதாவாகிய உமாதேவியார் கைலாயத்தினின்றும் கேதாரத்தெய்தி சிலநாள் தவஞ்



தேவி கட்டளையிட்டவாறு கணபதிதீர்த்தம் அமைத்தல்.

செய்து, பின்னர்க் காசியம்பதிக்கணுள்ள கங்காநதியில் மூழ்கி நல்ல தவஞ் செய்து, பின்னர்க் காஞ்சிபுரத்தில் கம்பாநதியில் அரியதவஞ் செய்து அங்கிருந்து மேகமொய்த்த திருச்செங்கோட்டுக்கு வந்து தமது மூதற்புதல்வராகிய யானைமுகத்து விநாயகரை அழைத்து, குழந்தையே! பல புண்ணிய தலங்களில் தவஞ் செய்தேன். உனது பிதாவின் திருவருள் கிடைக்கவில்லை. ஆனல் "நாகாசலம் விசேஷமாகிய தவம் இஷ்டசித்தியும் மோக்ஷசாம்பிராஜ்யமும் கொடுக்கவல்லது. அதுபோல்" மற்றொருதல மிருப்பதாகச் சொல்லுதற்கில்லை. ஆதலால் அங்கே சென்று நம்மை அருச்சிப் பாயாக" எனச் சிவபெருமான் அருளிச் செய்தனர். அதுபோலவே தவஞ் செய்ய ஆரம்பிக்கின்றேன். எவ்வுலகத்துமுள்ள புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் இம்மலையின் மீது வந்து தங்கும் வண்ணம் முயற்சி செய் என்று தாயார் கட்டளையிட்டவுடன் மூத்த பிள்ளையார் அடிவணங்கி அம்மணி! பெற்றோர்கள் வாயாற்சொல்லி ஏவுதற்கு முன்னமே, குறிப்பறிந்து வேலை செய்யும் பிள்ளைகள் கேடாத அமுதத்துக் கோப்பானவர்கள்" என்று விளங்குவதால் தேவரீர் கூறுவதன் முன்னமே நான் செய்திருக்கவேண்டியது. அவ்வாறின்றேல் பிள்ளையாக விருந்து என்ன பிரயோஜனம்? தாயே! இந்நிமிஷத்தில் தேவரீர் இட்ட கட்டளையை முடிக்கின்றேன் என வணங்கி, தமது துதிக்கையால் திரிலோகத்துமுள்ள புண்ணிய தீர்த்தங்களைக் கிரகித் து நாகாசலத்தின் நாற்புறத்தும் தேக்கிவைத்தனர். வடபாங்கிருந்தமையால் வடபுறம் அதிக தீர்த்தங்கள் விளங்குகின்றன தீர்த்தங்களை அதிசயிக்குமாறு நிரப்பியவுடன் உமாதேவியார் சந்தோஷித்து, மூத்தபிள்ளையாரைத் தக்கோனென மதித்து, அத்துணைத் தீர்த்தங்களில் தன் பெயரால் ஒன்று விளங்க வேண்டுமென்று கஜானனர் கருதிய, கணபதி தீர்த்தத்தி லிறங்கி அடுத்தாற்போல் தன் பெயராலு மொருதீர்த்தமிருக்க வேண்டுமென்று காருண்ணிய சிந்தைகொண்டு ஒரு தீர்த்தங்கண்டு அதற்கு "அம்பை" என்று திருநாமமிட்டு இவ்விரு தீர்த்தங்களிலும் மகா மந்திரங்களை ஆவாகித்துப் பிரதிஷ்டித்து ஆன்மாக்களுடைய வல்வினை தீருமாறு விதிப்படி ஸ்நானம் செய்து தன்னை சுத்தையாக்கிக் கொல்வது போல் தீர்த்தங்களைப் புனிதமாக்கி நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு நியமத்தோடு நாகேசுவரரை அருச்சித்துத் தியானித்துப் பரமேசுவரர் வாமபாகத்தைப் பெற்று, மாலயனிந்திராதி தேவர்களும் இருஷிகணங்களும் வந்து போற்ற வீற்றிருந்தருளுகின்றார் உமாதேவியார்.

சிவானந்தச் செல்வர்களே! அந்தக் கணபதி தீர்த்தத்தில் நீராடி அம்மையார் இரண்டு சீபாதங்களையும் பணிந்து அஷ்டசித்திகளையும் பெற்று, தன்னைத் தரிசித்தோர்களுடைய தேகாதி பிரபஞ்ச தீவினைகளெல்லாம் கட்டோடறுபுண்டு நித்தியவாழ்வு பெற்றுய்ய அநுக்கிரகிக்கின்றார். யார் எந்தத் தொழிலைச் செய்கின்றார்களோ அத்தொழில் ஆரம்பித்தற்கு முன்னர் விநாயகர் என்னும் பெயரையுடைய தன்னை வணங்கினால் அதற்கு நேரிடும் விக்கினங்களை நிவாரணஞ் செய்வதாலும், சாதுக்களாகிய அடியார்களுக்கு இடையூறுகளைத் திரிகரணங்களுள் யாதொன்றினாலேனுஞ் செய்வார்கள் ஆரம்பிக்குங் காரியங்களுக்கு விக்கினம் உண்டுபண்ணுவதாலும் விக்கினேசுவரர் என்று திருநாமமும், தன்னை வணங்குவோர் கேட்டருளும் வரங்களை உதவுவதால் கற்பக விநாயகர் என்னும் திருநாமமும் பெற்று உலகத்தார்க்கு மெய்த்துணையாய் எழுந்தருளி யிருக்கின்றார்.

பூரணானந்த தபசிகளே! தாருகன் சூரபன்மன் முதலிய அசுரர்களுடைய புஜபல பராக்கிரமம் தாழ்வு பட்டதென்று சொல்லும் வண்ணம் கஜமுகாசுரன் என்பவன் கடவுளைப் போற்றி, தேவர்களாலும், பூதங்களாலும், மனிதர்களாலும், மிருகங்களாலும் இறவாமலும், பிரம்மா, விஷ்ணு, தத்துவஞானிகள், சிவயோகிகள், முனிவர் கந்தருவர் முதலாகிய யாவராலும் அவர்கள் பெயராலும் வழங்கும் அஸ்திரசஸ்திரங்களாலும் அழியாதவரம் பெற்றுள்ளவன். இவன் மூவுலகத்துமுள்ள அட்டதிசைகளினுஞ் சென்று விஜயஞ்செய்து தன் அடியில் யாவரும் வணங்குமாறு அரசுபுரிந்து வாழும் நாளிலே சாதுக்களாகிய தேவர் முனிவர் தபோதனர் முதலியோர்களை இமிசை செய்து வந்தான். இவனது கொடுமைகளைச் சகிக்க முடியாது தேவர்களெல்லாம் சிவபிரானிடம் முறையிடத் திருவருளால் விநாயகமூர்த்தி விலங்கினமாகிய யானை முகமும், மனிததேகமும், பூதங்களைப்போன்ற குறுகிய கைகால்களும், தெய்வத்தன்மை பொருந்திய நான்கு கைகளும் ஆயுதங்களுமுடையவராய்த் திருவவுதாரஞ் செய்து திருவருள் பெற்று அவ்வசுரனை எதிர்த்துப் பெரும்போர் தொடுத்துப் பல்லாயிர அஸ்திரங்களை ஏவியும் அக்கொடியோன் மாயாமை கண்டு கணபதி தீர்த்தத்தில் மூழ்கி அம்மையப்பரை வணங்கி வரம்பெற்று அக்கயமுகன் எவ்வஸ்திரங்களாலும் சாகாவரம் பெற்றிருக்கின்றான் என நினைந்து, ஐயோ! இவ்வாறு வரம் பெற்ற இவனுக்கொடிய செய்கையன்றோ தீங்கைத் தரவல்லதாக நின்றது. உலகத்தில் அற்பபுத்தியுள்ளவர்களுக்கு ஐசுவரியமே

பெரும்பகையாக நேர்கின்றது என்பது வாஸ்தவமாக இருக்கின்றது. இங்ஙனம் மகத்தாகிய வரம் பெற்றவன் சாதுத் தன்மை பொருந்தித் தரும மார்க்கத்தில் நடப்பானாயின் இவ்வைசுவரியமே அணையாகக்கொண்டு சதுர் புருஷார்த்தங்களை அடைந்திருப்பன். இவன் அற்பனாதலின் ஐசுவரியும் வந்தவுடன் கொடுமை செய்ய ஆரம்பித்து அழிந்துபோகின்றான் என அவன் கொடுமையை நினைந்து தமது இரண்டு தந்தங்களில் ஒன்றை முறித்துக் கஜாமுகாசுரன்மீது ஏவினார். அக்கொம்பு சென்று அவனை மாய்த்தது. அவன் முன் சிவபூஜை செய்தோனாதலின் அப்பூஜை செய்த உடல் நாய் நரிகள் தின்னுமாறு வீழ்ந்தழியாது பெருச்சாளியாய் நிற்க நேர்ந்தது. இதனைக் கண்டவுடனே விநாயகமூர்த்தி அம்மூஷிகத்தில் ஆரோகணித்துப் பூப் பிரதக்ஷணமாய்ச் செல்ல வடித்து திருநாககிரிக்கெழுந்தருளி சிவகற்பகத்தைக் கண்டு வணங்கித் தன்னை வணங்கினோர்க்கு இஷ்டசித்திகளைக் கொடுத்தருளி வீற்றிருந்தார் விநாயகமூர்த்தி. குறைவில்லாத கணபதிதீர்த்த மகிமைகளை எடுத்துச் சொல்ல ஒருவராலும் முடியாது. அத்தீர்த்தத்தில் மூழ்கு முறைமை எவ்வாறெனில் தெய்வத்தன்மை பொருந்திய கணபதி தீர்த்தத்தைக் கண்டவுடன் வணங்கி "உம்முடைய கிருபை தந்தருளும்" என்று விநாயகமூர்த்தியைத் தியானித்து சிவசுப்பிரமணியரையும் நினைந்து வாமதேவத்தைப் போற்றி சுனையில் இறங்கி விதிப்படி மூழ்குதல் வேண்டும் எழுபிறப்பினும் செய்த வல்வினைகளெல்லாம் அத்தீர்த்தத்தை உட்கொண்டால் நீங்கும். மூழ்கினால் சொர்க்க போகம் பெறலாம். மணிமந்திர அவுஷதங்கள் நன்றாய்ப் பலிக்கும். தெய்வ வைத்தியர்கள் ஆகாய கமனிகளாகிய சித்தர்கள் முதலாயினோர் சித்துக்கேதுவாகிய பதினெட்டு மூலிகைகளும் பெற்றுக்கொள்ளும்படி அந்தக் கணபதிதீர்த்தத்தில் வந்து முழுகிக் கேடில்லாத அழகும் மாறாத இளமையும் தவமகிமையுமுற்று மனோபீஷ்டங்களும் கொடுக்கப் பெற்று வாழ்வார்கள். அத்தீர்த்தக் கரையருகில் அமுத சஞ்சீவி அடைந்துள்ளது. சித்தெல்லாம் தரும் வர்ணம் பலவாம். சதாதேவர்களும் முனிவர்களும் சூழ்ந்து முத்தீ வளர்த்தோமஞ் செய்வதும் சத்து இது, அசத்து இது என்று அறிவதுமாக வதிவார்கள். சிவபிரானாரது வாமபாகம் பெற உமாதேவியார் மூழ்கி அத்தேவியார் கருணைகூர்ந்து உண்டாக்கிய அம்பா தீர்த்தத்திலும் எந்த நேரமும் தேவர்களும் வித்தைமிகுந்த சித்தர் முதலியோரும் சூழ்ந்து விளங்குவார்கள். இவ்வியல் பினதாகிய மகிமைவாய்ந்த கணபதி தீர்த்தமாட வேண்டுமென்று சங்கற்பித்து

உள்ளன்போடு பத்தடி நடந்தவர்கள் பாவமெல்லாம் நீங்கும். அந்தச் சுனையில் விதிப்படி மூழ்கி அம்பாநதியருகில் சிவபணிவிடைத் தொழில் முடித்தவர்கள் நாகேசருடைய திருப்பாத நிழலையடைந்து என்றும் வாழ்ந்தினிதிருப்பார்கள். இது நிச்சயம்! நிச்சயம்!!

## * விஷ்ணுதீர்த்த மான்மியம்.

மனமாசற்ற மாதவர்களே! தெய்வத்தன்மை பொருந்திய விஷ்ணுதீர்த்தம் என்பது விசேஷமுள்ளது. அது பிரமஹத்தி முதலிய பாவங்களைப் போக்கும். கொடிய சாபங்களால் நேர்ந்த பல தீவினைகளை யெல்லாம் நீக்கும். அத்தீர்த்தத்தைப்பற்றி ஒரு சரித்திரம் கூறுகின்றேன் கேளுங்கள்.

பரமஞானிகளுடைய உள்ளம்போலப் பரிசுத்தமாக விளங்கும் கைலாயகிரியினும் சத்தியலோகத்தினும் வசிப்பவர்களும் ஞானவியல்புடையோரும் பெரியோர்களுமாகிய முனிபுங்கவர்கள், விபூதி உருத்திராக்ஷம் உசிதமென்று தரிப்பவர்கள், பஞ்சாக்ஷரமோதும் சிறப்பு வாய்ந்தவர்கள், சீலத்தின் மிகுந்து சைவநெறியால் சிவபூஜை செய்பவர்களாகி நாலாயிரம் தபோதனர்கள் தீர்த்தமாடுதற்காக எழுந்தருளி வந்தார்கள். அழகின் மிகுந்த பல கந்தருவப் பெண்களும், விசுவாவசு என்னும் கந்தருவராஜ குமாரனாகிய ஜயந்தன் என்பவனும் நிருவாணமாக ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தார்கள். பிரமதீர்த்தக்கரைக்கு இம்மகரிஷிகள் வருவதை அத்தீர்த்தத்து நீராடும் காந்தருவமாதர்கள் கண்டு நாணங்கொண்டு நடுங்கிக் கரையிலிருந்த வஸ்திரங்களை எடுத்து உடுத்துக்கொண்டு முறைமைப்படி ஒதுங்கி நின்றார்கள். ஜயந்தன் மாத்திரம் நிருவாணமாகவே ஜலத்தில் இறுமாந்து நின்றபடி யிருக்க, இவனை மகரிஷிகளில் ஒருவராகிய வசிஷ்டர் கண்டு கோபங்கொண்டு கண்களில் தீ எழ நோக்கி அடா கந்தர்வா? நீ எங்கள் வரவு தெரிந்திருந்தும் நிர்வாணமாகத் தீர்த்தமாடலாகாதென்ற விதியையும் மாதர் மோகத்தால் மறந்தாய். பெண்களிடத்து மிகுமோகங்கொண்ட அறிவில்லாதோர் கடைத்தேறுவதுண்டா! சிறிதேனும் அச்சம் நாணமின்றி விபூதி உருத்திராக்ஷமணிந்த பெரியோர்களென்று சற்றும் மதியாது அலட்சியமாய்க் கொடிய இராக்ஷதனைப்போலப் பயமற்று நின்றமையால் அராக்ஷதகை அலையக் கடவாய் என்று சபித்தனர். கோடைகாலத் திடிமுழக்கம் கேட்ட

---

*புள்ளியன் சுனை என்பர்; புள்ளியன்—கருடவாகனன்.

பாம்பு போலவும், பராக்கிரமம்பொருந்திய சிங்க கர்ஜனைக் கேட்ட யானைபோலவும் இறுமாந்து நின்ற ஜயந்தன் இம்மொழியைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்கி யாதுந் தோன்ருது பிரமைகொண்டு சித்திரப் பாவைபோல் நின்றனன். இங்ஙனம் நிற்கும் ஜயந்தனைப் பார்த்து காந்தருவமாதர்கள் யாவரும் இரக்கங்கொண்டு அந்தோ அரசே! என்செய்வோம், நீர் அந்தத் தபோதனர் காலில் சரணுகதி என்று விழுந்தால் மன்னித்தாட் கொள்ளுவர். "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்ற நீதி வாக்கியமிருக்கின்றமையால் எவ்விதமும் க்ஷமிப்பார்கள் போய்ப் பணியும் என்றுரைத்தனர். அதைக்கேட்ட ஜயந்தன் முனிவர் சாபத்தினுல் திக்பிரமைகொண்டு யாதுந் தோன்ருது நிற்க, அம் மாதர்கள் உள்ளம் நைந்து துயரக் கடலிற் படிந்து நாயகனைவிட்டுப் பிரியமாட்டாதவர்களாய் யாவரு மொருமித்துக்கூடி முனிவர் கூட் டத்துள் விளங்கும் வசிஷ்டமாமுனிவர் பாதத்தில் சண்டமாருதந் தாக்கச் சாய்ந்த மரங்களைப்போல வீழ்ந்து, தேவரீரது பெருமை தெரியாத ஜயந்தன் செய்த அபசாரத்தை மன்னித் தருளுதல் வேண்டும் சுவாமி! உலுத்தர்கள் உலகத்தைத் தன்மயமென்றும், காமி கள் பெண்மயமென்றும், ஞானிகள் சின்மயமென்றும் பரவசப்பட்டுக் காண்கின்ருர்கள்; மிகுந்த சம்பத்தை அடைந்த அறிவிலிகள் மதத்தை அடைகின்ருர்கள். அம்மதத்தால் நல்வினை தீவினை நல்லார் பொல் லார் என்றறிதற்கியல்வதில்லை. சம்பத்தாலும் காமத்தாலும் கண் கெட்டவனுய்த் தேவரீர் எழுந்தருளுவது தோற்ருது கண்கெட்ட வனுனன். உயிர்கண்மாட்டன்புடையோரே அந்தணர் எனப்படுதலின் கருணைகூர்ந்து எங்களை இரக்ஷிக்கவேண்டும். எங்கள் நாயகர் அரக் கராய் அலங்கோலப்பட நாங்கள் எவ்வாறு சகிப்போம். நாயகன் துயரப்பட்டால் பெண்களுக்கு என்ன சுகமுண்டு, தபோதனர்களே! கிருபைபாலித்தருள வேண்டுமெனப் பலவாறு துதித்தார்கள் இத னைக் கேட்ட வசிஷ்டர் கூறுவாராயினர்.

பெண்களே! இக்கொடியோனுகிய ஜயந்தன் எம்மால் நேரிட்ட சாபத்தை அனுபவித்தே தீரவேண்டும். ஆயினும் நீங்கள் வருந்திக் கேட்டுக்கொள்வதால் சிறிது அநுக்கிரகிக்கின்றேம். இவன் இந்த அரக்க உருவத்தோடு பதினுறு வருடகாலம் நரமாமிச முதலிய வற்றைப் பசிதீர உண்டு உலாவிப் பின்னர் முடிவில் திருநாகாசலத் தில் சிவபிரானருளிய ஆயுதந்தாக்க இச்சாப விமோசனமுற்றுப் பழைய சொரூபம் பெற்று உங்களோடு கூடிவாழ்வனென்று கூறி

ரிஷிகளோடு சென்றனர். உடனே ஜயந்தனைவன் மூன்றாம்பிறை போன்ற வச்சிரதந்தமும், அந்தகாரம் போன்ற தேகமும், மேனோக்கி எரியும் அக்கினிச்சுவாலை போன்ற சிவந்தகேசங்களும், வளைந்த புருவமும், தீவர்த்தியைப் போன்ற கண்களும், மலைபோன்ற மூக்கும், அலைபோன்ற நாக்கும் பொருந்திய கோரரூபங்கொண்டு தன்னை நேசித்த பெண்களையே பக்ஷிக்குமாறு துரத்தினன். இவ்வாறு விகாரமாகிய தேகம் பெற்றதுமன்றித் தங்களையும் பக்ஷிக்க வருவதைக்கண்டமாதர்கள் வயிறு எவ்வாறு தான் பற்றி எரியுமென்று சொல்லக்கூடுமா! அந்தோ. அவ்வளவோ தங்கள் உயிரைக் காப்பதற்காக மனோவேகமாகக் கந்தருவலோகம் ஓடிப் புகுந்தார்கள். ஜயந்தன் என்னும் அரக்கன் காடு மலை வனம் வனந்தரங்களிலும், காறுகளிலும், நதிகளிலும், சுடுகாடுகளிலும் சூறாவளிக்காற்றைப்போலத் திரிந்து சிங்கம் காட்டானை கரடி புலி மான் மரை முதலிய விலங்கினங்களையும், பறவைகளையும் பிடித்துத் தின்று, மீன் முதலிய நீர்வாழ் பிராணிகளை ஜலத்தோடு உறிஞ்சி உண்டும், சஞ்சரிக்கும் மனிதர் முனிவர் தவசிகள் என்போரையும் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் துரத்திப் பிடித்துப் பக்ஷித்தும் பசிதீராது உழன்று திரிந்தான். சுயேச்சையாகக் கண்டகண்ட பிராணிகளைப் பிடித்து வாயிற்போட்டுத் திரிந்துகொண்டு ஒருநாள் திருநாககிரியை எய்தி அதின் மீது விஷ்ணுதீர்த்தக்கரையில் சகுந்த என்னும் முனிவர் இருப்பதை உணர்ந்து அவரைப் பிடிக்க ஓடினன். பெரிய விகார உருவத்தோடு வரும் அரக்கனைப் பார்த்து உடல் நடுங்கி சகுந்த முனிவர் ஓடி உமையொருபாகா! அடைக்கலம்! அடைக்கலம்! என ஓலமிட்டழுவதை ஓர்ந்த ஏழைப் பங்காளராகிய எமது பரப்பிரம சிவனர் திருவருள் சுரந்து ஒரு கட்காயுதத்தை அருளினர். அதனைத் துரத்தி வருபவன் மீது முனிவர் ஏவவே ஜயந்த ராக்ஷஸன் உடலைப் பிளந்தது. உடனே அவன் கீழேவிழுந்தான் அரக்கவுடல் நீங்கி கந்தருவவுருப் பெற்றுக் கட்கத்தையும், சகுந்தமுனிவரையும் வணங்கி அம்மையப்பரைத் தொழுது கந்தருவப் பெண்களெல்லாம் வந்துசேர அவர்களைத் தழுவி அழகிய புஷ்பவிமானத்தின் மீதேறி தன்னுலகஞ் சேர்ந்து வாழ்ந்தான். "விஷ்ணு தீர்த்தத்துட் புகுந்திருந்து வந்து சேர்ந்தவர்களுடைய பாவங்களைப் போக்கிக்கொண்டிரு" எனப் பரமசிவப் பிரபு கட்காயுதத்துக்குக் கட்டளையிட, அது அவ்வாறிருந்தது, அதுமுதல் அதனைக் கட்கதீர்த்த மென்றழைப்பார்கள்.

அத்தீர்த்தத்தின் அருகே கீழ்புரத்தில் இலுப்பை மரமொன்று உண்டு. அதன் நிழலின் கீழ்ச் சகுந்தமுனிவர் பெரியோர்களோடு கூடி அரிய தவஞ் செய்திருக்கின்றனர். அவ்வாறு வளப்பமுற்ற இலுப்பை மரத்தின் வேர்கள் ஆரணமாகும். கிளைகள் சாஸ்திரங்களாகும். பசிய இலைகளெல்லாம் புராணங்களாகும் மேலும் அம்மரமானது ஆதிமூலகாரணராகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் ஜடாபாரத்திற் றரித்தருளிய பிறையிலார்ந்து மலிவாக ஒழுகிப்பெருகும் அமுதத்திறைற் குளிர்ச்சியுடைத்தாய் வித்துமுதலிய வேர்களும் கொம்புகளும் தழைத்த தழைகளும் புஷ்பங்களும் காய்களும் சுத்தமான மெல்லிய கனிகளுமாக நிரம்பியார்த்து இந்நிலத்தார் காணுமாறு விளங்கிக்கொண்டிருக்கின்றது. வசிட்டர் முதலிய இருஷிகணங்கள் பிலத்துவாரவழியாக வந்து அரிய தவங்களைச் செய்வார்கள். தெய்வத்தன்மை பொருந்திய அந்தமரத்தின் விசேஷங்களிற் சிலவற்றைக் கேளுங்கள். அந்தமரமானது முதலுகமாகிய கிரேதத்தில் அகில் மரமாயும், இரண்டாம் யுகமாகிய திரேதாயுகத்தில் பொலிவுடைய சந்தனவிருக்ஷமாயும், மூன்றுவது துவாபரயுகத்தில் அரசமரமாயும், நான்காவது கலியுகத்தில் சிவபிரானுக் கிஷ்டமாகிய மாமரமாகிப்பின்னர் இலுப்பை மரமாயும் நான்கு யுகத்திலும் ஐந்து விதமரமாகப் பிரமகற்ப விஷ்ணு கற்பங்களினும் அழியாது சிறப்புடைத்தாய்ப் புண்ணியபலன்கள் மிகவும் திகழ்ந்து விளங்கியிருக்கும். மேலும் அம்மரத்தின் மூலவேர்கள் பிரமசொரூபமும், நடு விஷ்ணு சொரூபமும், மேற்கிளைகளெல்லாம் உருத்திர சொரூபமுமாய்த் திரிமூர்த்திகள் உருவமுற்று விளங்குதலால் அம்மரத்தினிழலில் யாரேனும் அன்போடு இலைக்கறி குளிர்நீர் பானக்கம் கூழ் முதலியவற்றைச் சிவனடியார்க்குக் கொடுப்பாராயின் அது மனோபீஷ்டத்தோடு கோடிபிராமணசந்தர்ப்பணை செய்தவரடையும் பலனைக்கொடுக்கும். அந்த மரத்தின் நிழலிலிருந்து உத்தமராகிய பிராமணர்களுக்கு நல்ல ஜலம் வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு பிடிக்குட்பட்ட செம்பு தானஞ் செய்வார்களாயின் அது கடல்நீர் அளவு பானதானஞ் செய்தபலனை எளிதிற் கொடுக்கும். மெய்த்தவமுடைய பெரியோர்களுக்கு ஒரு பிடி அன்னம் கொடுப்பாராயின் இது மகாமேரு அளவு அன்னதானஞ் செய்தபலனைக் கொடுக்கும். இஃதன்றியும் கனிகாய்கள் முதலிய பதார்த்தங்களைப் பிராமணருக்குக் கொடுத்து பானத்துக்குச் சிறிது நல்லதீர்த்தம் கொடுப்பார்களாயின் அவர்கள் பிரமபதத்தில் வைகிவாழ்வார்கள். அந்த மரத்தடியில் ஒரு பசுத்தானங்கொடுத்தால் ஏனைய புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆயிரம் கோ

தானம் கொடுத்த பலனுக்கொப்பாகும். அந்த இலுப்பைமரத்தடியி லிருந்து ஒருசிறிய கிரஹதானம் பிராமணர்களுக்குக் கொடுத்தார் களாயின் இப்பூமண்டலமெல்லாம் ஒரு குடைக்கீழ் அடக்கி ஆளவல்ல அரசனுவார்கள். அழகிய புதுவஸ்திரதானங் கொடுத்தால் வெவ்விய குளிர்க்காய்ச்சல் நீங்கும். எள் தானங்கொடுத்தால் ஒருதலை முறைப் பாவங்களெல்லாந் தீர்ந்துபோம். பிதிர் வர்க்கங்களுக்கு முத்தி உண் டாகும். மாதப்பிறப்பு சூரிய சந்திர கிரகண புண்ணிய காலங்கள் அமாவாசை முதலிய தினங்களில் அன்னதானஞ் செய்தவர்களின் பலன்களை யார் எடுத்துரைப்பார். தைமாசப்பிறப்பு சித்திரைமாசப் பிறப்புகளினும் புரட்டாசி மாசத்து முப்பது தினங்களினும் அன்பி னேடு தங்கள் பிதிர்களைக் குறித்துக் கைமைபெற்ற வேதியர்களுக்கு அன்னதானஞ் செய்தோர் அடையும் பலனைப் பிரமதேவரும் கூறி முடிக்க வன்மையுடையரல்லர். இஃதன்றியும் அவ்விலுப்பை மரத் தடியில் நூறு பல வெல்லம் சாம்பவர்களுக்குக் கொடுத்தாலும் இன் றேல் அதன் கிரயத்தை கொடுத்தாலும் அவர்கள் செய்தபாவங்கள் சின்ன பின்னங்களாகிப்போம். அவர்களுக்கு யமதண்டனையுமில்லை. இஷ்டகாமியங்களாகிய சகல வரப்பிரசாத பலன்களும் நிரம்ப உண் டாகும். சித்திரை அஷ்டமி தினத்திலும் சித்திரா பௌர்னமி தினத் திலும் இன்னும் மற்றைய புண்ணியதினங்களினும் முன் சொன்ன தானங்களை யாவர்செய்யினும் கோடிமகாதானங்களைச் செய்பவர் களுக் குண்டாகும் பலன்களுக்கு மேலாகிய பலன்களும் போகமோக்ஷ ங்களையும் மகாமுனிவர்களாலுஞ் சொல்லி முடியாத பலனையும் அடை வார்கள். பாதுகை, விசிறி, குடைபரிவாகத் தானங் கொடுத்தவர் களுக்கும் யமவாதை இன்று. அவ்விடத்திலே ஓமம் தர்ப்பணஞ் செபம் சிவார்ச்சனை அரிபூஜை செய்வித்தவர்கள் பலனையாவரே சொல் வர். பூமிதானம் கொடுத்தவர்கள் விஷ்ணுபதம் பெறுவர்கள் அந்த இலுப்பைமரத்தடியில் அசுவதானஞ் செய்தவர்கள் ஆயிரம் அசுவ மேத யாகபலனை அடைவார்கள். மாறுபாடில்லாத மனசோடு மே லோர்க்குச் சுவர்ணதானம் கன்னிகாதானஞ் செய்தவர்கள் ஆயிரம் யாகஞ் செய்தபலனை அடைவார்கள். சுவர்ணம் வெள்ளிதானங் கொடுத்தால் அவர்களுடைய பிதிர்களுக்குச் சொர்க்கபதவி உண்டா கும். குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உருப்பு மயக்கம், உருப்பில் பிண்டமாகிய எண்வகை எச்சமென்னும் உடற்குறை உள்ள வர்கள், நோய் மேலிட்டோர், தரித்திரர், சிறுவர், மலையிடத்து வசித்தி ருப்போர் என் போருக்கு மனமுவந்து உதவுதல் வேண்டும். துலாபார



ஜயந்தன் சாபம் நீக்கல்.

தானஞ் செய்த அரசர்கள் குறைவில்லாது இராச்சியபாரம் புரிவார்கள். கதித்த நான்கு வருணத்திலும் கன்னிகாதானஞ் செய்தவர்கள் விஷ்ணுபதம் பெற்று மேலாகிய சிவபதத்தை அடைவார்கள். விஷ்ணு தீர்த்தத்தின் மகிமையைச் சொன்னவர்கள் கேட்டவர்கள் அன்பு கொண்டவர்கள் படித்தவர்களுக்கு யாதேனும் கொடுத்தவர்கள் திருவருள் பெற்று வாழ்வார்கள் என்றார் சூதமுனிவர்.

## பிரமதீர்த்த மான்மியம்.

மாசற்றமனமுடையீர் ! விஷ்ணுதீர்த்தத்தில் நீராடிய பின்பு பிரமதீர்த்தத்தில் விதிப்படி முழுகுதல் வேண்டும். அதன் மகிமையைச் சொல்வேன். மகிமை வாய்ந்த பிரம தீர்த்தத்தை நினைத்தவர்களும் ஸ்நானஞ் செய்து பெருமை பெற்றவர்களும் வலிய வினைகளைத் தீர்த்து மேன்மையுற்ற சத்திய லோகபதவியைப் பெறுவார்கள். முற்காலத்தில் பிரமதேவர் வந்து பூசித்தமையால் மலைக்குப் பிரமகிரி என்னும் பெயரும் பிரமதீர்த்தம் என ஒன்றும் உண்டாயின. வேதியர்களும் தேவர்களும் விஷ்ணுபக்தர்களும் முனிவர்களுமாகிய யாவரும் ஒருங்கு குழுமிச் சூழ்ந்து துதிசெய்ய கணபதியாரும் வைரவர்களும் துர்க்கைகளும் தேவர்களும் தங்கள் ஆயுதங்களைப் பிரமதீர்த்தத்துக்கு அங்கங்கே காக்குமாறு இருத்தி, காளியைக்குமாரர் திருமுன் நிறுவி, கிழக்குத்திசையில் சூரியனையும், மேற்குத்திசையில் வயிரவரையும், வடக்குத்திசையில் விநாயகமூர்த்தியையும் காவலாக வைத்தார் சிவபிரான், பரமேசுவரர் நாககிரிக்கு வந்தபோது உடன் வந்த வீரேசுரனையும், ஐயனாரையும் செங்கோட்டு அடிமலை அணிமலையில் காக்கும்படி அனுக்கிரகஞ் செய்து அமைத்தார். வீரேசனயலிலொரு சாஸ்தா தீர்த்த மிருக்கிறது. அதில் மூழ்கினவர்களுடைய பாவங்களெல்லாம் நீங்கும். இஷ்ட காமியார்த்தங்கள் உதவும் இந்நாவலந் தீவிலுள்ள புண்ணிய தீர்த்தங்களெல்லாம் தம்மையடைந்த பாவங்கள்தீர அந்தப் பிரமதீர்த்தத்தில் வந்து நீராடும். அத்தீர்த்தத்தைச் சிரசிற்றெளித்துக் கொண்டவர்களுக்குப் பிரமபுர பதமுண்டாம். புகழ்ந்து நமஸ்கரித்தவர்களுக்கு உபய நூற்பகுதி பெற்ற கலைஞானங்கள் பலிக்கும். நாளும் முழுகினவர்களுக்குப் பிரமபதம் கிடைக்கும் ஆயுள் வேண்டுமென்று பத்தியோடு மூழ்கினவர்கள் அவமிருத்யு நீங்கி ஆயுள் விருத்திபெற்றுச் சற்புத்திரப்பேறு கண்டு வாழ்வார்கள். நற்பதத்தைப் பெற்றவர்கள் பிரமதீர்த்தத்தில் மூழ்கி கிரிப்பிரதக்ஷிணஞ் செய்து தொழுது வணங்கி எந்நாளும் அதிக பலன்களைப் பெற்று வாழ்வார்கள். அத்தீர்த்

தத்தில் விதிப்படி முழுகி ஸ்ரீ அர்த்தநாரீசுவரரைத் தரிசித்து தேவர்கள் சதா வசித்திருப்பர். அத்தீர்த்தக்கரையில் பிதிர்களுக்குப் பிண்டமிட்டோர்களுக்கு பிரமபதம் தப்பாமற் கிடைக்கும். தர்ப்பணஞ் செய்தவர்களுக்குச் சுவர்க்கபதம் கிடைக்கும். திலதானஞ் செய்தால் விசேஷபலித மாகும். கறவைப்பசு கொடுத்தவர்கள் பிரமசாரூபம் பெற்று வாழ்வார்கள். தேவஜைகவேண்டுமென்று அன்போடு முழுகிய மனிதர் தேவஜைகவுமாவர். உமையொருபாகர் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலுக்கருகில் வடபாரிசமிருக்கும் பிரமதீர்த்தத்தில் அந்தி சந்தி முழுகி நியதிமுடித்து காயத்திரிஜபஞ் செய்து பின்னர்க் குமாரரையும் உமையொருபாகரையும் வணங்கும் புண்ணியவான்கள் அடையும் பலன்கள் அளவில் அடங்கினவல்ல. முதல் வருணத்தாரல்லாத மற்றையோர்கள் அந்தப்பிரம தீர்த்தத்தில் மூழ்கி நாகேசுரரைச் சோடாசோபசாரத்தோடு பூசை செய்வித்து வணங்கி வாழ்த்தினுல் பூதானம் கன்னிகாதானம் சுவர்ணதானம் கோதான முதலியன செய்த பலன்களினும் மேலாகிய பலன்களை அடைவார்கள். மேலும் பிரமதீர்த்தத்து மூழ்கிப் பரிசுத்தமாகிய வெண்கலை உடுத்து வெண்ணீறு பூசி படிகமாலை கைக்கொண்டு பிரமாவின் தேவியாகிய சரசுவதியைத் தியானஞ் செய்தவர்கள், ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நாற்கவிகளைப்பாடுங் கவி, அரும்பொருளைச் செம்பொருளுடைமையிற்காட்டி விவரிக்கும் கமகன், கார்ணமு மேற்கொளு மெடுத்துக் காட்டி பிறன்கோண் மறுத்துத் தன்மதம் நிருத்தும் வாதி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்றிறங்களைக் கேட்க விரித்துக் கூறும் வாக்மி என்று சொல்லும் நால்வகைப் புலவர்களிற் சிறந்து வாழ்வார்கள். பத்தி புத்திகளும் பெறுவார்கள். இப்பிரமதீர்த்த மான்மியத்தைக் கேட்போரும் வாசித்தோரும் வாணியின் அருள்பெறுவார்கள் என்றூர் சூதமாமுனிவர்.

## துர்க்கைதீர்த்த மான்மியம்.

பரிபூரணனந்த பாக்யவான்களே! சொர்க்கபதம் கொடுக்கத்தக்க மேன்மையுற்ற பிரமதீர்த்தத்து மாடின பின்பு துர்க்கைதீர்த்தத்திற் படிந்து தென்புலத்தார்களாகிய பிதிர்கள் சந்தோஷிக்குமாறு தர்ப்பணஞ் செய்து நியமத்தோடு முனிவர்களே திரிசூலபாணியாகிய துர்க்கா தீர்த்தத்தில் மூழ்கி நியதிமுடித்து வேதமோதினுலும் நெய் பாலுடன் தர்ப்பணங்கள் கோலிச் செய்தாலும், பலதானங்கள் செய்தாலும் இயல்பாகிய அவர்கள் வர்க்கத்தார் அனைவரும் சிவகதி பெறு

வார்கள். மேலும் துர்க்கை தீர்த்தக்கரையில் ஒரு கன்னிகையைச் சர்வாபரண பூஷணத்தோடு தானங்கொடுத்தவர்கள் சிவபிரானுரது சார்பில் வாழ்வார்கள். மகரசங்கிராந்தி தினத்திலும் புரட்டாசி மாசத்திலும் மற்றைப் புண்ணிய தினங்களிலும் அத் தீர்த்தக்கரையில் மாஹேசுரர்களுக்கு அன்னமளித்தோர் பெறும் பலன் கோடியாக விருத்திக்கும். கிரஹண புண்ணிய காலத்திலே அச்சுனையில் நியமத்தோடு மூழ்கினவர்கள் முன் செய்திருந்த பாவங்களினின்று விடுபடுவார்கள். மற்றைய இடங்களிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் மூழ்கிய பலன்களை துர்க்கா தீர்த்தம் ஒன்றே கொடுக்கும். அந்தத் தீர்த்தக் கரையில் நெய் பால் தயிர் எள் கொண்டு தர்ப்பணஞ் செய்பவர்களும் இடபம் பசுக்கன்று எருமை முதலியவைகளைத் தானங் கொடுத்தவர்களும் அடையும் பலன் பெரிது. அவர்களின் பிதிர்கள் சொர்க்க வாழ்வு பெறுவார்கள். அத்துர்க்கா தீர்த்தத்திலாடியவர்கள் கங்கை கௌதமி யமுனை முதலிய தீர்த்தங்களில் நாளும் நாளுமாடியபலனும் அசுவமேத பலனுமடைவார்கள். பிதிர்களைக் குறித்துப் பிண்டமிட்டோர் தேவபதம் பிரமபதம் விஷ்ணுபதம் சிவபதம் பெற்று வாழ்வார்கள் ஏழு கன்னிப்பெண்களைத் துர்க்கா தீர்த்தத்து நீராட்டுவித்துப் புதுவஸ்திரங் கொடுத்து அன்னம்படைத்து ஏழு சத்திமார்களென்று எண்ணிப் பூசித்தவர்கள் பெறும் பயன்களுக்கு அளவில்லை. மகாதிவ்ய ஸ்தலங்களில் வசித்தும் புண்ணிய தீர்த்தங்களிற் படிந்தும் தீராத பஞ்சமகாபாதகங்கள் யாவும், துர்க்கை தீர்த்தத்தில் மூழ்கி அன்போடு பஞ்சாக்ஷரத்தைசெபிக்கில் சூரியனைக் கண்ட பனிபோல நிவாரணமாகப் புனிதமாக்குவிக்கும். அக்காளி தீர்த்தத்தில் விதிப்படி முழுகி நீல நிறமாகிய திருமேனியும் சங்க, சக்கிர, கட்க, திரிசூல, தண்டம் என்னும் ஆயுதங்களைப் பிடித்து அழகிய செம்பட்டுடைபுனைந்து திரிநேத்திரியாய் வீற்றிருப்பதாய் துர்க்காதேவியைத் தியானித்தவர்கள் ஜயசீலராவார்கள். இஃதன்றியும் அத்தீர்த்தத்தில் சிவத்தியானத்தோடு மூழ்கி உமையொருபாகரைத் தரிசித்தவர்கள் காலனுக்குக் காலனுகும் வலிமை பெற்று தேஜசுடைய தேகம் பெறுவார்கள். அதனைக் கண்டால் பாவம் போம். கையில் அத்தீர்த்தத்தை அள்ளினுல் சௌரியமாம். உட்கொண்டால் கலைஞானசித்திகளெல்லாம் பலிதமாம். சிரசின்மேற் புரோக்ஷித்து மூழ்கினுல் மோக்ஷம் கிடைக்கும். சத்தவிருஷிகளின் பத்தினிமார்களாகிய எழுவரும் துர்க்கா தீர்த்தத்தில் மூழ்கி அத்துர்க்காதேவியைப் பணிந்து இன்பரசக்கனியாகிய பரமேசுவரரைத் தரிசிப்பார்கள். முற்காலத்தில் துர்க்காதேவி

யானவர் அருணசலத்தில் வந்து மகிடாசூரனைச் சங்கரித்த கூரிய வாளைக் கழுவி அருணகிரிநாதரைத் துதித்து திருநாககிரி ஸ்தலத்தில் வந்து சுயம்பிரகாசராகிய அர்த்தநாரீசுவரரைப் பூசித்து வணங்கி தன்பெயரால் அன்பு கூர்ந்து அமைத்த இந்தத் தீர்த்தமானது கங்கை யமுனை காவேரி தீர்த்தத்தை ஒத்துள்ளதாதலின் இதில் தேவரும் முனிவரும் வந்து மூழ்கி அரியதவஞ் செய்யாநிற்பர். இஃதன்றியும் திருநாகாசலத்தின் எல்லையாகிய பஞ்சகுரோசத்துள்ளசகல சீவர்களும் உருத்திரசொரூபமென்று பெரியோர் கூறுவர், வேலவரும் உமையொருபாகரும் வீற்றிருந்தருளும் திருச்செங்கோட்டு மான்மியத்தைக் காதுகுளிரக் கேட்டவர்கள் அரியவினைகளினின்றும் ஒரு நொடிப்பொழுதில் நீங்கிப் புனிதமுற்றுப் பின்பு சிவானுக்கிரகமுற்று வாழ்வார்கள். என்றார் சூதமுனிவர்.

## நாகதீர்த்த மான்மியம்.

உத்தம பத்தி வாய்ந்த மெய்த்தவ முனிவர்களே! வாயுதேவனும் நாமும் இகல்கொண்டு போர்புரியுங்கால் பல்லாயிரகோடி பிராணிகள் இமிசையுற நேர்ந்தது. பவத்தை நீக்கிக் கொள்ளுதல் வேண்டுமெனக் கலியுகத் தொடக்கத்தில் நாகராஜன் அவ்வனம் வந்து ஸ்ரீ அர்த்தநாரீசுவரரையும் கந்தசுவாமியையும் அன்போடு பூசித்து மகிழ்ச்சிகொண்டு தன் பெயரால் விளங்க ஒரு திவ்யதீர்த்தம் விதித்தருளினன். அதனல் நாகதீர்த்தமென்று பெயராயிற்று. துர்க்கா தீர்த்தத்தில் நீராடிய பின்பு ஒளி பொருந்திய மணியைப் பெற்ற படமுள்ள நாகராஜன் அமைத்த பொன்மயமாகிய தீர்த்தத்தைக் கண்டு பணிந்து அர்த்தநாரீசுவரரைத் தியானித்து ஸ்நானஞ் செய்து நியதிமுடித்து நன்மையாகப் பிண்டப் பிரதானமிட்டு அவ்விடத்து ஒரு பசுதானம் கொடுத்தார்களாயின் அந்தப் பசுவானது இவர்களின் முன்னோர்களாகிய பிதிர்களிருக்கும் நரகத்தருகிற் சென்று வாலைச் சமீபத்துக் கொடுக்க அவ்வாலைக் கொண்டு கரையேறிநற்பதங்களிற் சேர்ந்து, பசுதானஞ் செய்து தங்களை நற்கதி கூட்டியவர்கள் சிரேயசு பெறும்படி அவ்வுலகத்திருந்து சிவபிரானை ஸ்மரிப்பார்கள். அத்தீர்த்தத்தில் அன்போடு மூழ்கினோர் கிணறுகள், வாவிகள், புட்பவனங்கள், தாகசாந்தியின் பொருட்டுச் சுத்தமாகிய தண்ணீர்ப் பந்தல்கள், திருமதில்கள், கோபுரங்கள், சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள், செய்து வைத்தோரடையும் பலனை அடைவார்கள். வளமை பொருந்திய நாகதீர்த்தத்தைச் சூழ ஈந்துமரங்களும், சந்தனதருக்களும்

தென்னமரங்களும், கமுக மரங்களும், பூங்காவனங்களும் வைத்து வளர்ச்சியாகப் பரிபாலனஞ் செய்த புண்ணியவான்கள் சிவலோக பதஞ் சேர்வார்கள். அந்தத் தீர்த்தத்தில் முழுகும்போது கங்கா தீர்த்தமென்று மூழ்கவேண்டும். நல்ல பால் போலுஞ் சுவையுடைத்தாகிய கலைகள் அனைத்துஞ் சித்தித்துச் சிவபதம் பெறுவார்கள். ஆலகால விஷத்துக்குச் சமானமாகிய கொடிய விஷங்களைக் குடித்தாலும் ஆடாநின்ற பாம்பு கடித்தாலும் அழுகு குலைக்குங் குஷ்டரோகங்கள் பேதாபேதமாகிய குளிர்சுரங்கள் மேலிட்டுத் துயர் கொண்டாலும், சிவபிரான் சடாமகுடத்திலுறையுங் கங்கையை நினைத்துப் போற்றிச் சூலபாணியாகிய சிவபிரானைப் பத்தியோடு நினைத்து அந்த நாகதீர்த்தத்தில் குளித்தாலும், பருகினாலும் முன் சொல்லிய நோய்களெல்லாம் தீர்ந்துபோம். அழகிய நாகதீர்த்தச் சுனை நாககிரியிலுதித்து விளங்குவது. அது ஒங்கு சக்கரந்தரித்த ஆதிகேசவராகிய விஷ்ணுவானவர் அனந்தசயனஞ் செய்யாநின்ற திருப்பாற்கடலென்று சொல்லப்படும். இங்ஙனம் இதினால் வரும் அனந்தகோடி பலன்களை யாவருக்குங் கொடுத்தருளும் பகுதியினாலே அத்தீர்த்தத்தைத் தெய்வ கங்காநதிதீர்த்தமென்று சொல்வதன்றி நாம் வேறு ஒன்றும் கருதிச் சொல்வதின்று. பரமேசுவரரைப் போற்றிய நாகராஜனுக்கு ஆதிசேஷன் என்னும் பெயருண்மையால் சேஷதீர்த்தம் என்றும் ஒரு பெயர் விளங்கும். மாமகதீர்த்தத்தை ஒத்த அத்தீர்த்தத்தில் மூழ்கி கரையில் அரசர்கள் கிராமம் பூமிதானங் கொடுத்தால் மாநிலமுழுதும் ஒருகுடைக்குளடக்கி ஆள்வார்கள். இம் மகிமை வாய்ந்த சேஷதீர்த்தத்தில் முதலுலகத்தில் நீராடினோர் தேகம் பொன்னிறமாகும். இரண்டாம் யுகத்தில் பிரீதியோடு படிந்தோர் நடுக்கமுடைய வார்த்திகம் தீரும். இளமையுற்ற ஊமைகள் மூன்றும் யுகத்தில் ஸ்நானஞ் செய்தால் செவ்விதாக வசனிப்பார்கள். நெடிய நான்காம் யுகத்தில் ஒரு மாதகாலம் முழுகினால் நினைத்த காரியம் கைகூடி வாழ்வார்கள். பின்னரும் அந்தத் தீர்த்தத்தில் விஷ்ணுபதம் வேண்டுமென மூழ்கினால் அப்பதம் பெறுவார்கள். சிவ பதம் வேண்டுவென மூழ்கினால் அப்பதம் கிடைக்கும். அந்தத் தீர்த்தத்தை உட்கொண்டு சொற்ப தருமத்தைச் செய்யினும் தேவேந்திர பதம் பெறுவார்கள். ஆதலின் மேகமொய்த்த நாகமலைக்கணுள்ள நாகதீர்த்தம் தரும் பலன்களைக் கணித்துச் செல்ல ஒருவராலும் முடியாதென்றனர் சூதமாமுனிவர்.

# சிவதீர்த்த மான்மியம்.

சிற்சுகோதய சீலர்களே! நாகதீர்த்தத்தின் மகிமையைக்கேட்டு மகிழ்ந்தீர்கள் நமது இறைவர் திருநாமம் பெற்ற சிவதீர்த்தத்தின் மான்மியத்தையுஞ் சொல்வோம் கேளுங்கள். இவ்வுலகத்தும் அவ் வுலகத்துமுள்ள தீர்த்தங்களெல்லாம் அந்தச் சிவதீர்த்தத்தில் வந்து புகுந்தாடப் பெற்றுள்ளன. மூத்தநாயனர் முதலிய தேவர்கள் வந்து தீர்த்தமாடத்தக்கதாக அமைத்துவைத்தார் உமையொருபாகர். தரும தேவதையானது ஒரு தவமுனிவராக அவதரித்து யோசிக்கின்றது.

பிறப்பென்னும் பெரிய கடலில் காலம் என்னும் பாம்பின் வாயில் ஒரு சிறு தவளைபோல அகப்பட்டிருந்தும் அறியாமல் ஆடி அலுத்துப்போனேன். சேற்றிலே புரளும் பன்றிபோலச் சுத்தசூனிய மாகிய மாயையினலே மயங்கிச் சுழழ்கின்றேன். இது மாயையோ? மடமையில் கொடுமையோ? விதியோ? அல்லது துர்மதியோ? யாதென்று சொல்வேன்! எப்படி வெல்லுவேன்! எந்த நாள் பிறவியை வேரோடு கல்லுவேன்! இது என்னகாலமோ! ஆ! ஆ! காலம் என்பது ஒன்றே விண்களையும் விணக்கீடாக உயிர்களையும் படைத்துக் காத்து அழிக்கவல்லது. அக்காலத்தில் தோன்றும் பொருள்கள் அதற்கு வசப்பட்டு அழிவது போல காலமானது எதற்கும் வசப்பட்டு அழிவ தாய்க்காணேமே. ஆதியந்தமில்லாக் கடவுளே! உலகவாழ்வு என்ன வாழ்வு. தோன்றி மறையும் மின்னல்போல நிலையில்லாத தேகமாகத் தானே யாருக்கு மிருக்கிறது. மனிதர்கள் ஏனைய ஜந்துக்களோடு விரைவில் மாய்கின்றனர். தேவர்களோ இன்னும் சிறிது கூடியிருக் கின்றார்கள். யோசிக்கிறபொழுது கண்ணிமை பதினைந்து கொண்டது காட்டை, காட்டை முப்பது கலை கலை முப்பது மூகூர்த்தம், முகூர்த் தம் முப்பது பகல் இரவென்னும் ஒரு நாள். நாள் ஏழு ஒரு வாரம். வாரம் இரண்டு பக்ஷம். சுக்கிலபக்ஷம் கிருஷ்ண பக்ஷம் என்னும் இரண்டு சென்றால் ஒரு மாசம். இரண்டு மாசம் (தென்புலத்தார்க்கு ஒரு நாள்) ஓர் இருபது. மூன்று! இருது ஒரு அயனம். உத்தராயண மாகிய பகலும் தக்ஷிணயனமாகிய இரவுமான அயனம் இரண்டானல் தேவர்களுக்கு ஒரு நாள்; மானுடர்களுக்கு ஒரு வருஷம் தேவர்களுக் குப் பத்து வருஷமானல் சத்தவிருஷிகளுக்கு ஒரு வருஷம். சத்தவிரு ஷிகளுக்குப் பத்து வருஷமானல் தாருவனுக்கு ஒரு வருஷம். மனுஷ வருஷம் பதினேழுலக்ஷத்து இருபத்தெண்ணுயிரம் கொண்டது கிரே

தாயுகம். பன்னிரண்டு லக்ஷத்து அறுபத்தாறுயிரம் வருஷம் திரேதாயுகம். எட்டுலக்ஷத்து அறுபத்துநாலாயிரம் வருஷம் துவாபரயுகம். நான்குலக்ஷத்து முப்பத்திரண்டாயிரவருஷம் கலியுகம். இந்நான்குஞ் சேர்ந்தது சதுர்யுகம். ஒரு சதுர்யுகத்துக்கு தேவர்களுக்குப் பன்னிரண்டாயிரம் வருஷங்களாகின்றன. மனிதர்களுக்கு நாற்பத்துமூன்று லக்ஷத்து இருபதினுயிரம் வருஷங்களாகின்றன. இவ்விதமாகிய சதுர்யுகம் எழுபத்தொன்று கழிந்தால் மனுவந்தரமாகும். பிரமாவின் பகலாகிய ஆயிரஞ் சதுர்யுகத்திலே பதினன்கு மனுக்கள் அதிகாரம் பண்ணுவார்கள். பதினன்கு இந்திரர்கள் இறப்பார்கள். பகலைப் போலவே ஆயிரஞ் சதுர்யுக காலம் பிரமாநித்திரை செய்யும் இரவாகும். ஆகவே, இரண்டாயிரஞ் சதுர்யுகம் திரும்பினல் பிரமதேவருக்கு ஒருநாள். இந்த நாள் முப்பது கொண்டது ஒருமாசம். இந்த மாசம் பன்னிரண்டு கொண்டது ஒருவருஷம் இந்த வருஷம் நூறனல் பிரமாயுக்கு ஆயுள் முடியும். இந்தப் பிரமகற்பம் ஒன்று கடந்தால் விஷ்ணுவுக்கு ஒருநாள். இந்த மாசம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருஷம். இவ்வருஷம் நூறுகொண்டது விஷ்ணுவுக்கு லயகாலம். சீ! சீ!! இது என்ன வாழ்வு ஆதலின் இந்தத் தேகம் இடி கரைபோல இடிந்து விழுவதன் முன் நித்திய நிரதிசயானந்த வீடு பெறுதல் வேண்டும். அதற்கு வழி சிவபூஜையே என்றுன்னி தவமும் சிவபூஜையும் செய்து நன்மைக்கேதுவாகிய பல்வகையாகங்களுஞ் செய்தார். பெருமைவாய்ந்த சிவதீர்த்தத்தில் தெய்வவடிவாகிய தன்ம முனிவர் தீர்த்தமாடி நியமத்தோடு புதுமை பொருந்திய ஜோதிமயமாகிய சிவபெருமானது திருவடிகளை விதிப்படி பூஜித்து அர்ச்சித்து நாள் தோறும் நன்மையாக நல்லதவஞ் செய்து வந்தார். அப்பொழுது எம்பெருமான் எழுந்தருளிக் காட்சி கொடுத்து அன்பனே! இத்தப் புவன சக்கரத்தில் யாது வேண்டித் தவஞ் செய்தாய். அதனைச் சொல்வாயாக என வினவ, சுவாமி! அருமருந்தே! மூலகாரணமே! கல்லை வல்லோர் அருந்துங்கனியே! கற்பகமே! அமுதசாகரமே! அருட்பெருங்கடலே! பிரம விஷ்ணுக்களும் தேடிக்காணத உமது திருவடிகளை அடியேன் கண்டு தரிசிக்குமாறு எழுந்தருளிய பெருங்கருணையை என்னென்று எடுத்துரைப்பேன்!! தன்வயத்தனதல், தூயவுடம் பினனதல், இயற்கையுணர்வினனதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல். பேரருளுடைமை, முடிவிலாற்றுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணங்களையுடையோரே! அடியேனுக்கு வேண்டுவதுவேறு ஒன்றுமல்ல. அழியாத பொருளைக் கண்குளிரக் கண்டிருப்பதையே

அபேக்ஷிக்கின்றேன். எல்லாம் அழிந்து போகுங்காலத்தில் தேவரீர் ஒருவரே தனித்து இருக்கத்தக்கவர். ஆதலின் பேரானந்தப் பெருஞ் சோதிவடிவாகிய தேவரீரை, இருக்கண்களாலும் தரிசித்திருக்கும் பேறே அடியேற்கு வேண்டுவது. விமலமூர்த்தியே! தேவரீரை என் முதுகின் புறத்தில் தாங்கியிருக்கவேண்டும். தாங்கும் வலிமை எனக் கருளவேண்டும். தவத்துக் கிரங்கித் தேவரீர் காட்சிகொடுத்த இச்சிவ தீர்த்தத்துக்கு என்பெயர் வைத்து வழங்கவேண்டும். கிருபாநிதியாகிய உம்மைத் தொழுபவர்கள் என்னையும் தொழுதல் வேண்டும். எனப் பிரார்த்தித்தனர். எம்மையாளுடைய நாயகரும் அவ்வாறே அனுக் கிரகித்தனர். அத்தருமமுனிவர் தன்பெயரால் ஒரு தீர்த்தம் அமைத் துப்பூசித்து, தருமமுனிவர் வெள்ளை விருஷபமாய்ப் பரமேசுவரரைத் தாங்கிக் கற்பாந்தத்தும் அழியாது வாழ்ந்தனர். அன்று முதல் அந் தச் சிவதீர்த்தத்தைத் தன்மதீர்த்தம் என்றும் இடபதீர்த்தம் என்றும் வழங்குகின்றார்கள். துற்புத்தியாகிய மனசோடும் சோரனைப் வேறொரு துணிவுகொண்டு புகுந்தாலும் அந்தச் சிவதீர்த்தத்தைத் தரிசித்தால் நற்பதவிவாய்க்கும் இம்மகிமை வாய்ந்த தீர்த்தக்கரையில் ஒரு பசு தானம் செய்தோர் பெறும்பலன் பெரிதாகும். ஒரு கோடி காராம் பசுக்களைச் சிவாலயங்களில் நிறைத்து வைத்த பலனை விருத்திக்கும். வளமை பொருந்திய அத்தீர்த்தத்தில் விதிப்படி படிந்து அன்புடன் பசுக்கள் கொடுக்கும் பால் தயிர் முதலிய ஐந்துவகையுஞ் சிவபெருமா னது திருமேனி குளிர அபிஷேகம் புரிந்து, கற்பூரம் விரவிபசந்தனக் குழம்புகளால் நாகேசுவரராய் அம்மையப்பருக்கும் சத்திவடிவேலருக் கும் அபிஷேகாதிகள் புரிந்தோர் பெறும் பலன்களைச் சொல்லி முடிவு படுத்தக்கூடாது. தருமதேவதை தவஞ்செய்யுந் தீர்த்தமாகிய அருள் நிறைந்த சிவதீர்த்தத்திற்றோய்ந்தவர்கள் பொன்னிறமேனி பெறுவார் கள். அச்சுனை பொற்றாமரைத்தீர்த்தமாகும். பூர்வகர்மமாகிய வல் வினைகளைப் போக்கி நல்ல சிவகதி கொடுக்கும் வெள்விடைச்சிவதீர்த் தம் மிகவும் மகிமை வாய்ந்தது. இத்தீர்த்த மான்மியங்களைப் படித்த வர்களும் அன்புடன் கேட்டவர்களும் சிவபதஞ் சேர்வார்கள் என்றார் சூதமாதவர்.

## குமாரதீர்த்த மான்மியம்.

சைவசீலர்களே! தெய்வத்தன்மை பொருந்திய சிவதீர்த்தத்தில் மூழ்கிய பின்னர் மகிமைவாய்ந்த குமாரதீர்த்தத்தில் நெறிபெற மூழ்கி பத்தியோடு ஷடாக்ஷரமந்திரம் ஜபித்து பாவநாசமாகத்தக்கதாக உமை

யொருபாகர் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து புவனேசுவரி மந்திரத்தோடு ஜபித்து துதி செய்தவர்களுக்குப் புத்தி முத்தி சித்திக்கும். குமரகுருபரர் கருணை கூர்ந்தமைத்த குமாரதீர்த்தத்தின் மகிமையைச் சொல்கின்றேன் என்று சூதமுனிவர் சொல்வாராயினர்.

திருமாலுக்கு மூவடி மண்பிக்ஷைகொடுத்த மாவலியினுடைய நூறு பிள்ளைகளில் முதன் மைந்தனும் மகாசௌரியம் பொருந்தினவனுமாகிய வாணசுரன் என்பான் பூருவம் தபசிகளைப்போல நெடுங்காலம் தபசு செய்தான். அடியார்க்கெளியராகிய சிவபெருமான் அவ்வசுரன் முன்னின்று ஆனந்தக் கூத்தாடுவதைக் கண்டு கனிந்து உடம்பெல்லாம் குழைந்து மனமெல்லாம் உருகித் துதிசெய்து நந்தி தேவர் முதலிய கணங்களோடு தானும் மத்தளந் தட்டினன். சிவ பெருமான் திருவுளமகிழ்ந்து திருவருள் சுரந்து அவனுக்கு ஆயிரம் கைகொடுத்து வாணசுரனே! உனக்கு வேண்டிய வரங்களைச் சொல் என, அமரர் பிரானே எனக்கு அக்கினி மதில் சூழ்ந்த கோட்டையும் அதிகபலமும், அகண்ட ஐசுவரியமும் மூவுலகங்களை ஏகசக்கிராதிபதியாக ஆளுந்திறமும், மாளாவாழ்வும், உன் திருவடிப்பத்தியும் கொடுத்தருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்க சிவபெருமான் அவ்வரங்களைக் கொடுத்தருளினர். சகலலோகங்களையும் தன் வசப்படுத்திக்கொண்ட வாணசுரன் அகங்கரித்து அக்கிரமஞ் செய்து வாழும் நாளில் கைலாச கிரிக்குப் போனன்; எம்பெருமான் அங்கு ஆனந்தக் கூத்தாடும்போது ஆயிரம் கைகளாலும் மத்தளம் தட்டவே, அகமகிழ்ந்த பரமேசுவரர் யாது வரம் கேட்கினும் கொடுக்கின்றேம் கேள் எனலும், அடியேன் அனவரதஞ் சேவிக்க ஆவல் கொண்டேன். ஆதலின் பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர் என்பாரோடும் மற்றைய கணங்களோடும் தேவரீர் அடியேனது கோட்டை வாசற்படியில் குடிகொண்டிருக்க வேண்டுமென்று கும்பிட்டான். அடியார்கள் எண்ணிய பொருளை எண்ணியபடியே கொடுத்தருளும் எம்பெருமான் அவ்வசுரன் விருப்பத்தின் பிரகாரமே அவன் கோட்டைவாசலிற் குடிகொண்டிருந்தார். காலந்தப்பாமற் கங்காதரக்கடவுளைக் கைகூப்பித் தொழுது மாயவன் இந்திரன் முதலிய தேவர்களை முதுகுகாட்டி ஓடச்செய்த அவ்வாணசுரன் எம்மை அடிமையாகப் படைத்தருளும் பரமேசுவரர் திருமுன் வணங்கி சுவாமி! தேவர்களெல்லாம் என்னோடு எதிர்த்துப்போர் செய்ய வலியிலாது ஓடிப்போய் விட்டார்கள். என் தோளிலுள்ள தினவைத் தேவரீரோடு பொருது நீக்கிக்கொள்ளவந்தேன் என்று சிறிதும் அஞ்சாது சாற்றினன். யமனையும், மன்மதனையும், பிரமதேவரையும் முறை

யேகாலால் உதைத்தும், நெற்றிக் கண்ணால் எரித்தும், நகத்தாற்கிள்ளியும் மாய்த்த சிவபெருமான் நகைத்து தன்னைத்தொழுபவனைத் தானே கொலை செய்தல் தருமமன்றெனத் திருவுளத்தடைந்து வாணசுரனே! வீணை அவசரப்படாதே எனது அன்பனாய் கண்ணன் உன் தோளியுள்ள தினவெல்லாம் தீர்க்க விரைவில் வருவான் என்று சொல்ல, வாணசுரன் கைதட்டிச் சிரித்து என் பிதாவே! *அந்தக் கண்ணன் முப்பது முறை என்னோடு எதிர்த்துப் போர் செய்து எனது யுத்தத்தைச் சகிக்காது புறங்காட்டி ஒடி ஒளித்துக் கொண்டிருக்கின்றான். அவனை ஒரு வீரனாகவைத்துச் சொல்லலாமோ எனக் கேட்டனன், பண்ணிய சண்டைக்குப் பயந்து போனவனைக் கொண்டே அடக்கத் திருவுளஞ் செய்து, ஓ வாணசுரனே! உனக்குத் தோற்றோடிப் போன பின்னர்க் கண்ணன் எனது அன்பனாகிய உபமந்யு முனிவனுக்குத் தொண்டு செய்து வைதிகசைவ பாசுபததீக்ஷை பெற்று எல்லாரினும் பலசாலியாயிருக்கின்றான். அவனை முன்போல இலேசானவனென நினைக்காதே எனத்திருவாய் மலர்ந்தருளுதலும் வாணசுரன் தன் அரண்மனைக்கேகினன். அவ்விடத்தில் அவன் பெற்ற அருமைக் குமாரத்தியாகிய உஷா என்பாள் ஒரு நாள் நித்திரை செய்யும் பொழுது கண்ணன் மகனாகிய பிரத்தியும்நன் பெற்ற குமாரனும் கட்டழகுள்ளவனுமாகிய அநிருத்தன் என்பவன் கனவில் தோன்றிக் கட்டித்தழுவ அவளும் அன்புடன் தழுவிப் பெருங்களிப்புற்று விழித்துப் பார்த்து அவனைக்காணமல் வருந்தித் துயர் கொண்டிருப்பதை ஓர்ந்த சித்திராங்கனை விவரந்தெரிந்து கொண்டு உலகத்திலுள்ள இராஜ குமாரர்களுடைய வடிவுகளையெல்லாம் படத்தில் எழுதிக் காட்டிக் கொண்டு வந்தனள். அநிருத்தன் படத்தை பார்த்தவுடன் இவன் தான் என்றாள். உடனே அவளது உயிர்த்தோழி துவாரகைக்குச் சென்று நித்திரை செய்யும் அநிருத்தனைக் கட்டிலோடு சித்திரப்பாவைபோல எடுத்துக்கொண்டு வந்து வைத்தாள் வைக்கவே அசுரன் மகள் அமுதம் அள்ளி உண்பவள் போல அவனைக்கட்டித்தழுவி அவன் அழகெல்லாம் உற்றுப்பார்த்து நாவிலூறும் நீரை அருந்தினாள். அவன் விழித்துக்கொண்டான். அவளுக்கும் விரகம் மேலிட்டது கங்குகரை காணமற் பெருகிவரும் புதிய சுகானந்த போகக்கடலில் முழுகிவிட்டான். நெற்றியில் வேர்வை ஒழுகவும், செவ்வாய் துடிக்கவும், கண்கள்

* நம்பனீ துரைத்தலு நக்குக்கையெறிந், தெம்பிரான்! முப்பதாமுறையிற்கையொ டேற், றும்பரார்கணத்தொடு மோடியுய்ந்துளா, னம்பகமுளரியானமருக்காற்றலான்.

சிவக்கவும், புரு குயில் காடை ஓசைபோல குஸ் குஸ் குகுகு குமுகு என்று ஓசை உண்டாகவும் கைவளைகள் கலீர் கலீர் என்று கலிக்கவும், ஆடையும் நாணமும் அவளை விட்டகன்று போகவும் கூந்தல் வீழ்ந்து ஆழ்ந்து கொள்ளவும் அவளும் மன்மதப் போராடினாள். இங்ஙனம் இன்பம் அனுபவித்து வரும் நாளில் உஷாதேவியின் மேனி வேறுபட்டுக் கருப்பமுற்றாள். தாதிமார்கள் அறிந்து வாணனுக்கும் அறிவித்தார்கள். அநிருத்தனைப் பிடித்துச் சிறைப்படுத்தினான். உஷா மனங் கலங்கிச் சோர்வடைந்தாள். அநிருத்தன் காணாமற் போனமையையும் வாணாசுரன் சிறைப் படுத்தியிருப்பதாயும், தெரிந்து மனங்கலங்கி கண்ணன் திரண்ட சேனைகளோடு சோணிதபுரத்தை வளைந்துகொண்டான். வாணாசுரன் இதனை அறிந்து தனது சேனைகளைத் திரட்டிக் கொண்டு யுத்தத்துக்கு ஆரம்பித்தான். இருதிறத்தினரும் அமர் விளைத்தனர். சோணிதபுரக்கோட்டையிலுள்ள கணபதி, சுப்பிரமணியர், பார்வதியார் என்போரைக் கண்டு பணிந்து, சிவபிரான் வீற்றிருக்கும் இடஞ்சென்று வணங்க என்னை வெற்றிகொண்ட பின் அன்றோ உள்ளே போதல் வேண்டுமென்றனர் சுவாமி! ஒரு சிறு துரும்பை காட்டித் தேவர்கள் செருக்கை அடக்கினீர். புன்சிரிப்பால் திரிபுரங்களைச் சாம்பராக்கினீர். உம்மை வெல்பவருமுண்டோ. என்னை அடிமைக் கொண்ட கடவுளே என வணங்கிய கண்ணனை நோக்கி, ஓ கமலக் கண்ணா! நீர் போர் செய்ய வருவதை முன்னரே வாணனுக்கு அறிவித்திருக்கின்றோம். உனக்குக் கொடுத்திருக்கும் வரத்தின் வண்ணம் வாணனை நீ வெற்றி கொள்வை. நாம் அருச்சுனனோடு செய்தபோர் எம் இனிய குமாரனாகிய முருகனோடு விளையாடும் விளையாட்டுப் போலன்றோ சந்தோஷமாயிருந்தது, அங்ஙனமே உன்னோடு ஒரு நிமிஷம் சண்டை செய்வோம். அஞ்சாதே என்று தேறுதல் கூறி அமர்விளைக்க கண்ணன் இனிச் சகித்தேன் என்று தியானித்துப் பணிய அடியார்க்கெளியன் என்பதைத் தாமும் தாழ்ந்து காட்டினர்.

பாணனுக்கடிமை என்று விறகு சுமந்தும், வந்திக்கு ஆள் என்று சுமந்து அடிபட்டும், சுந்தரர் பொருட்டுப் பரவையார் வீட்டுக்குத்தூது சென்றும், தமது அடியார்களுடைய விருப்பத்தை நிறைவேற்றியிருக்கும் ஏழை பங்காளர் இக்கண்ணனுக்கு வெற்றியுண்டாக்கியது ஓர் ஆச்சரியமோ! ஆகாது! ஆகாது!!

இக்கட்டைக் கடந்த கண்ணன் உள் நுழைந்து வாணாசுரனுடன் எதிர்த்து யுத்தம் புரிந்து வாணன் தோள்களையெல்லாம் வெட்டவரும்

பொழுது பரமேசுவரர் இவர்கள் எதிரில் தோன்றி ஓ முகில்வண்ணு! உன்னைப்போல இவனும் நம்மைப் பூசித்தவன். இவனது விருப்பம் நிறைவேறுமாறு இவனது கைகள் இரண்டையும் முகத்தையும் விட்டு விடு என்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வண்ணமே விட்டு விட்டுச் சிவபெருமான் பணித்தபடியே வாணுசுரனைச் சினேகமாகக்கொண்டு அவனது மகள் உஷாவை அநிருத்தனுக்கு விவாகஞ் செய்வித்துத் துவாரகைக்குக் கண்ணன் சென்றான். கங்காதரமூர்த்தி வாணனை நோக்கி உனது தோள் தினவுதீர்ந்ததோ என்று நகையுற வினவலும் அவன் தலை சாய்த்து சுவாமி! இராச்சிய முதலியன ஒன்றும் வேண் டாம். நித்தியானந்த முத்தி வேண்டுமென்று வாணன்வேண்ட, அஃது வேண்டுமாயின் திருநாககிரிக்குச் சென்று பூசித்துப் பெற்றுக் கொள் என மறைந்தருளினர். வாணுசுரனும் திருநாககிரிக்கு வந்து குமாரதீர்த்தத்தில் விதிப்படி முழுகி வந்தீசுவரரைப் பூசித்து உமை யொருபாகரையும் நேசித்துப் பூசித்து தன் பெயரால் ஒரு தீர்த்த மமைத்துப் பூசித்துத் திருவருள் பெற்று சிவகணங்களுக்குத் தலைவனு கும் பதவியுடன் பரமானந்த முத்தி பெற்றான். வாணுசுரனுடன் வந்த பல பெரியோர்கள் குமார தீர்த்தத்தில் மூழ்கிக் குகைகளிற் புகுந்து சிவயோகம் புரிந்தார்கள்.

ஒரு காலத்தில் தேவர்கள் கைலங்கிரி சென்று சந்திர ஜடாதர ரை வணங்கி எம்பெருமானே! கிரஹஸ்தாசிரமிகளாகிய நாங்கள் கடைத்தேறும் வண்ணம் புத்திரசந்தானம் அளித்தருளல் வேண்டு மென வேண்டுதலும் அமரர்களே! பூலோகத்தில் மிகுந்த மகிமை வாய்ந்து ஒப்பற்ற நாகாசலம் என்னும் ஓர் மலை இருக்கின்றது. கைலை மலையைவிட அது எமக்குப்பிரியமானது. அதின்மீது வந்தீசர் என்னும் திருநாமமுற்று எழுந்திருக்கும் இலிங்கத்து யாம் அருள் சுரந்து விளங்கி யிருக்கின்றோம். மக்கட்பேறு வேண்டியவர்கள் அழகு வாய் ந்த அம்மலை மீது சென்று எமது அருமைக் குமாரன் அமைந்த குமார தீர்த்தத்து மூழ்கி அந்த வந்தீசுவரனை வணங்கி பார்வதியை வாமபாகத் துற எடுத்த மூர்த்தமாகிய எம்மையும் வணங்குவோர்கள். நல்ல குண மமைந்த மக்கட் பேற்றைப் பெறுவார்கள். என்றருளினர் சிவபெரு மான்.

தத்துவஞான தபசிகளே! அந்த நாககிரிமீது ஒருநாள் அன்ன பானுதிகளின்றி உபவாசியாய் ஆலய வலம் வந்து பூசிப்பவர்கள் நினைத் தன கூடும். குமார தீர்த்தத்தில் உதய காலத்தில் மூழ்கி தீர்த்தக்கரை

யில் நியமமுடித்து சரவணபவ என்று சடாக்ஷரத்தை குரு உபதேச முறைப்படி உச்சரித்து ஜபஞ் செய்து தந்தை நீ, தாய் நீ, தமர் நீ, தவமு நீ என்று சிந்தித்து மூன்று தினம் ஆகாரம் நித்திரையின்றி வந்தியாபாஷாணத்தையும் வந்தியேசுரரையும் கணபதியாரையும் திருக்குமாரரையும் அர்த்தநாரீசுவரரையும் வலம் வந்து வணங்கி நேசித்துப் பூசித்துத் தவஞ் செய்வோர்கள் தவறாது புத்திர பௌத்திரப்பேறு பெற்று வாழ்வார்கள் என்றருளிய திருவாய் மொழி தேறி தேவர்கள் திருநாககிரியில் வந்து குமார சுனையில் மூழ்கி சுவாமி தரிசனஞ் செய்து அம்மலையிலிருக்கும் சஞ்சீவி முதலிய மேன்மையுற்ற மூலிகைகளையும் கண்டு இஷ்டகாமியார்த்தங்களைப் பெற்று வாழ்ந்தார்கள். குமார தீர்த்தத்தில் ஒரு துளி நீரை உட் கொண்டவர்கள் குமரரைப்பெற உரியவர்கள். சடாக்ஷர தியானஞ் செய்து பிராமணப்பெண் உட் கொண்டால் குமார சுவாமியுடைய வலிமை பெறுவார்கள். அரசர் குலப்பெண்களானால் குமாரர் பதம் பெறுவார்கள். கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நக்ஷத்திரத்தில் மூழ்கிச் சண்முகதேவரையும் முக்கட் பெருமானையும் போற்றி வணங்கினவர்கள் இராச்சியபாரம் புரிவார்கள். நோயால் மேனி நுடங்கார்கள். நல்ல மனைவிகளும், பிள்ளைகளும், திரவியமும், சீரும் பேரும் பெற்று வாழ்வார்கள். ஷடாக்ஷர மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு வேலவருக்குச் சுகந்த சந்தன மாலைகள் சாத்தி தூபதீபம் நிறைத்து தரிசித்தவர்கள் பூர்வ ஜந்மாந்தர கருமங்களெல்லாம் நிவர்த்திக்கப்பெறுவார்கள். தனக்கு இடையூறு புரியும் சத்துருக்களை வெல்லுந்திறம் வேண்டுவோர் குமார தீர்த்தத்து மூழ்கிப் புண்ணிய தினமாகிய திருக்கார்த்திகைநாளில் வாசனை பொருந்திய புனுகு ஜவ்வாது கோரோசனை குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் பன்னீர் மற்றை வாசனைத்திரவியமும் கலந்த திவ்ய சந்தனங்களால் முருகருக்கு முழுக்காட்டிச் சாத்திப் புஷ்பமாலையும் புனைந்து. தூபதீப நைவேத்திய உபசாரங்கள் புரிந்து தரிசித்துப் போற்றிப்பணிவார்களாயின் மாற்றாரை வெல்லவல்ல துணை சௌரிய முதலியனவும் கூடி ஜயசீலராவார்கள். விசேஷ தரும நாளாகிய வைகாசி மாதத்துப் பௌர்ணமி விசாகத்தில் குமார தீர்த்தத்துள் மூழ்கி விதிப்படி மனோ பக்தியாக அர்ச்சனை செய்து தேங்காய் பழம் பாயசம் நிவேதித்து அதிற் சில பிரசாதம் உண்டார்களாயின் வயிற்றில் வலிக்கும் குன்ம முதலிய பிணிகள் யாவும் குணமாகும். பீதாம்பரம் மஹாதாபி சாதாரா என்னும் விசேஷ பொன் வஸ்திரங்களும் குங்குமப்பட்டு, என்பவற்றைச் சாத்தி அலங்கரித்து வணங்கி வாழ்த்தினவர்கள் பல செல்வங்கள்

படைத்து வாழ்வார்கள். வாசனைத்திரவியம் விரவிய சந்தனக்குழம்பு அபிஷேகம் குளிர்ச்சியாகும்படி செய்தவர்கள் வெப்பு மேகம் சர்வாங்க விரணம் அந்தரதாகம் காசரோகம் நீங்கப்பெறுவார்கள். குமார தீர்த்தத்து மூழ்கி சிவதரிசனஞ் செய்து ஒரு சுவர்ண புஷ்பஞ் சாத்தினவர் பாதகங்கள் நீக்கப்பெறுவர். துயர் தீரும். போக போக்கியம் உண்டாம். செல்வம் பெருகும். புத்திரப் பேறுண்டாம். வித்தையும் பெருகும் மகத்தாகிய குமார தீர்த்தத்துக்குச் சித்திகரு தீர்த்தம் என்றும் ஒரு பெயருண்டு. அத்தீர்த்தத்தின் மேற்பாரிசத்தில்சத்திரதீர்த்தத்தின் கீழ்ப்பாரிசத்தில் உள்ளது ஷண்முக தீர்த்தம். அந்தக்காலத்தில் சத்திரங்கட்டி அமுதபோஜனம் குமாரக்கடவுள் செய்வித்து உமையொருபாகரை அர்ச்சித்தார். அன்று முதல் சத்திரதீர்த்தம் எனப்பெயராயிற்று. கற்பகம், ஞானபாதபம், தரு, கூலவிருக்ஷம் என்றிவ்வாறு நான்கு உகத்தும் பெயர்கொண்டு குமாரதீர்த்தத்தின் மேற்புறத்தில் ஒரு தரு விளங்கி நிற்கின்றது. குமார தீர்த்தத்தில் முழுகி அக்கூலவிருக்ஷ நிழலில் மாவிரதியர்களுக்கு ஒரு பிடி அன்னங்கொடுத்தால் கோடி சிவஞானிகளுக்குப் பாலன்னம் கொடுத்தமைக்கொப்பாகும், சூரிய சந்திர கிரகண காலங்களில் அவ்விருக்ஷநிழலில் எள்ளால் ஓமஞ் செய்வார்களானால் எள்ளுக்காயிரம் தேவாண்டு கைலாயத்தில் வசிப்பார்கள். அங்ஙனம் பிராமணர்களுக்குத் தானங் கொடுத்தால் அவர்கள் அடையும் கதியைச் சொல்லி முடியாது. தன் வழியினரேயன்றித் தாய்வழி தந்தை வழி என்னும் இருமரபினரும் சிவலோகம் பெறுவார்கள். ஒரு கோதானஞ் செய்தவர்கள் பாராள்வார்கள். ஒரு இடபக்காளைக்குச் சூலமிட்டு விடுவார்களாயின் பிதிர்களெல்லாம் அர்த்தநாரீசுவரர் சாலோகம் பெறுவார்கள். தை மாச அமாவாசை முதல் சிவராத்திரியளவாய் நித்தியமும் குமார தீர்த்தத்து மூழ்கிச் சிவதரிசனஞ் செய்வார்களானால் மாமக தீர்த்தமூழ்கிய பலனை அடைவார்கள். உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலமாகிய தைமாசப்பிறப்பு ஆடி மாசப்பிறப்புகளினும் கிரகண புண்ணிய காலங்களினும் மூழ்கினால் மிகுந்த புண்ணியம் கிடைக்கும். இத்தீர்த்தத்தில் தானாக வந்து மூழ்கி பூசை நைவேத்திய முதலியன செய்ய வியலாவிடின் கைப்பொருள் கொடுத்துப் பிறரை முழுகச் செய்யினும் அப்பலன் சித்திக்கும். கூலவிருக்ஷத்தின் கீழ்ப்பாகத்தில் குமார தீர்த்தத்து மகிமையையும் முருகர் புகழையும் சதாகாலமும் தோத்திரஞ் செய்து உசிதமிகுந்த மான்மியங்களைச் சொல்பவர்களும் கேட்பவர்களும் நல்லவடிவுற்று இஷ்ட காமியார்த்தங்கள் பெற்று உலகத்தில் வாழ்ந்திருப்பார்கள். இது உண்மை என்றார் சூதமுனிவர்.

## பாவநாசதீர்த்த மான்மியம்.

அமல போதானந்த அருந்தவர்களே! நாகமலையைப் பிரம தேவர் காக்கின்றார். இதனைச் சூழ்ந்த ஐந்து குரோச அளவுள்ள எல்லையளவும் விஷ்ணு காக்கின்றார். இதன் மத்தியிலுள்ள நீரெல்லாம் தீர்த்தமே. பிரமதேவர், தேவேந்திரன், தேவர்கள், முனிவர்கள், யோகிகள், ஞானிகள், சந்திரசூரியர், கந்தருவர், பதினொருகோடிருத்தி ரர்கள், அஷ்டவசுக்கள், அக்கினிதேவர், கின்னரர், கிம்புருடர் கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர், இயக்கர் முதலியோரெல்லாம் தங் கள் தங்கள் பத்தினிமார்களோடு வந்து தீர்த்தத்தைச் சிரசின்மேற் புரோக்ஷித்துக் கொண்டு மலர் கொய்து தீர்த்தத்தில் மூழ்கி உமை யொருபாகரை அர்ச்சித்துத் தரிசனஞ் செய்கிறார்கள், யாவரேனி னும் தெய்வத்தன்மை பொருந்திய அக்கிரியின்மீது விரதசீலராக மூன்று நாள் வசித்து உலகுபூத்த உமாதேவியாரிடப்பாகம் விளங்கும் எமதிறைவனை வணங்கினோர்க்கு ஊழ்வினை நீங்கும். அறிவு பொருந் தியவர்கள் அந்த நாகமலை எல்லையை அடைந்தவுடன் வணங்கிப்பூசித்து "ஓ நாகாசலம் என்னும் தெய்வமே" அடியேங்கள் கடைத்தேறும் பொருட்டு யாத்திரை செய்து வரும் வரைக்கு எங்களுடைய கால்கள் உன்மீது படும் வரைக்கும் எங்களுடைய கால்கள் உம்மீதுபடும் குற்றத் தைப் பொறுத்து இரக்ஷிக்க வேண்டும்" என்று ஸ்தோத்திரஞ் செய்து பின்னர் மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்க வேண்டும். தீர்த்தங் களில் விதிப்படி ஸ்நானஞ் செய்து சுவாமி தரிசனமும் மற்றைய நியதி களும் முடித்துக்கொண்டு மலைவிட்டிறங்கி அடிவாரத்தில் வந்தவுடன் "மிதித்த குற்றத்தைப் பொறுத்து இரக்ஷிக்க வேண்டும்" என்று போற்றி குருவைத் துதித்து நின்ற நிலையே மூன்று பிரதக்ஷிணஞ் செய்து பஞ் சாக்ஷர ஷடாக்ஷரங்களை செபித்துக்கொண்டு செல்லல்வேண்டும். இவ் வாறு மகிமைவாய்ந்த நாககிரியிலே பாவநாசதீர்த்தம் என ஒன்றிருக் கின்றது; புனிதமாகிய குமார தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த பின்னர் காமவிகாரமின்றிப் பாவநாசதீர்த்தத்தில் மூழ்குதல்வேண்டும். தபோ தனர்களாகிய இருஷிகள் திருவடிகளைத் துதித்து தன்னுலியன்றது முன்வைத்து நிவேதித்து தூபதீப சவர சத்திர உபசாரங்களோடு உமேசரைப் போற்றிப் பணிந்து நீராடுதல் வேண்டும். இத்தீர்த்திலே படிந்தாலும், இதனை உட்கொண்டாலும், பரிசித்தாலும் இதின்திவலை தெறித்தாலும் நித்தியானந்த மோக்ஷத்துக்குள்ளாகும் பரஸ்திரீ கமனத்தால் வந்த பாதகங்களும், சிசுகத்தியால் நேர்ந்த குற்றமும்,

மாதாபிதா குருமுதலிய பெரியோர்களை நிந்திக்க தீமையும், பிரம ஹத்தி முதலிய மகாபாதகங்களும், பிசாசு, பூபம், ஏவல், சூனிய முதலியனவும் நீங்கும். இத்தீர்த்தக்கரையில் பிண்டப்பிரதானம் தர்ப்பணஞ் செய்தோருடைய பிதிர்கள் சிவலோகஞ் சேர்வார்கள், இத்தீர்த்தத்தில் நடந்த அற்புதம் ஒன்றைக் கேளுங்கள்.

இமயமலைச்சாரலில் பல்வகை விருக்ஷங்களும் குன்றுகளும் நெருங்கிச் சோலைகள் ஆகாயத்தை அளாவவும், வண்டுகள் கீதம்பாடவும் சிங்காரத்தோடுங் கூடிய பரமவாச்சிரமம் என்னும் வனத்தில் இருஷீசுரர்கள் முதலிய தபோதனர்களும்,பிரமசாரிகளும் கிரகஸ்தாச்சிரமிகளும் வானப்பிரஸ்தரும், சந்நியாசிகளும், அடர்ந்து கூடியிருப்பவர்களிடத்திலே திடமதி என்னும் பெயருடைய ஒரு சூத்திரன் சேர்ந்து அவர்களாலோதப்பட்ட வேதசாஸ்திரங்களைக் கேட்டு அன்னவர்களைப் பணிந்து நமஸ்கரித்து ஓ பெரியோர்களே! நீங்கள் செய்யும் யாகாதிகிருத்தியங்களும் காயத்திரி ஜபமும் செய்து ஒரு முனிவனாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். எளியேன்மீது தயை கூர்ந்து தொண்டனுக்கு உபதேசித்தருளல்வேண்டும் என்று வேண்டுதல் செய்தான். அதற்கு அவர்கள் திடமதியே! நீ சம்ஸ்காரமற்ற சூத்திரனாகப் பிறந்து அநேக பாவங்களைச் செய்திருக்கின்றனை உனக்கு யாகாதி கிருத்தியங்கள் செய்யும் வேதமந்திரங்களை உபதேசித்தல் கூடாது. நீ மனுசாஸ்திரப்படி மேலோர்களை அடுத்து ஏவல் செய்து சரியையாதி மார்க்கங்களை அநுஷ்டித்து நன்மார்க்கத்திலே நடப்பாயானால் நல்வினை ஈட்டத்தால் உயர்ந்தவனாவாய் என்றனர். அவ்வாய்மைகேட்ட திடமதி ஆசையாகக் கேட்ட காரியம் கைகூடாமற் போய்விட்டதே என நாணமுற்றுத் தலைகுனிந்து தன்வீடுபோய்ச் சேர்ந்தான். பின்னர் இவன் ஓர் யோசனை செய்து அந்தணர்களாற் சொல்லப்பட்ட சரியை முதலிய மார்க்கங்களில் நடக்கவேண்டுமென்று மனசைத் திடஞ்செய்துகொண்டு அதுமுதல் நந்தவனம் வைத்தும், வாவிகள் தோண்டியும், தீர்த்தயாத்திரை செய்தும், பெரியோர்களுக்கு உபசாரஞ் செய்தும். புண்ணியமாகிய காரியங்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தும், சித்த புருஷர்களுக்குக் கந்த மூலபதார்த்த முதலியவற்றை உதவியும், வழிகளில் சத்திரங்களும் மடங்களும் கட்டியும், தண்ணீர்ப்பந்தல்கள் வைத்தலுமாகிய பலவித தருமங்களை நடாத்திவந்தான். ஒரு நாள் அவ்வழியாக வந்து போய்க்கொண்டிருக்கும் சுமதி என்னும் பிரமசாரிக்கு வேண்டிய உபசாரங்களை விசுவாசத்தோடு செய்துவந்தான். அந்தப் பிரமசாரி இவன்மீது பிரியமுற்று



சுமதி திடமதி பாவம் போக்கல்.

நேசம் பூண்டார். சுமதி எழுந்தருளி யிருக்கும் ஆச்சிரமத்துக்குத் திடமதி ஒருநாட்சென்று வணங்கி சுவாமி! அடியேனுக்கு ஒரு கருத்திருக்கின்றது அஃதாவது. தமியேன் தேவரீரைப் போலவே வேத மந்திரங்களை உணர்ந்து யாகாதி கிருத்தியங்களை நடாத்தவேண்டும் என்பதே, இந்த அபேக்ஷையை எளியேனுக்கு அநுக்கிரகித்து இரக்ஷிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். சுமதியும் அவன்மீதுள்ள பிரியத்தால் இணங்கிப் பிரமகுலத்துக்குக்குரிய மந்திர தந்திர யோகங்களை யெல்லாம் திடமாகப் போதித்தார். திடமதியும் உணர்ந்திருந்தான். இச்செய்தியை ஆங்குள்ள வேதியர்கள் கேட்டு அச்சுமதியை யாவரும் தூஷிக்க மனக்கவலைகொண்டு நாளுக்கு நாள் தேஜசுகுன்ற மரணமடைந்தான். மரண மடைந்தவன் யமகிங்கரர்களால் வாதைப்பட்டு நரகவேதனையுற்றுத் தாவரப்பிரப்புகளடைந்து அதனின்று நீங்கி ஊர்வன பறப்பன நடப்பனவாகிய பூச்சி பறவை மிருகஜன்மங் களடைந்து நீங்கி முன் செய்தவப்பேற்றால் நீசனுகவும் சூத்திரனுகவும் வைசியனுகவும் அரசனுகவும் பிறந்து பிறந்து சுழன்று தனது கன்மங்களை போக்கிப் பழயபடியே பிராமணகுலத்திற் பிறந்தான். ஐந்து வயதிலேசௌள உபநயனங்களும் வித்தியாப்பியாசங்களும் செய்துகொண்டு யாவும் உணர்ந்தோனுகி இருக்கும்போது வனத்துக்குப் போய்ச் சமித்துச் சேகரஞ்செய்து வருங்காலத்தில் ஒரு பிராமணப்பேய் பிடித்துக்கொண்டது. அதனுல் யாதுந் தோன்ருது பிரமைகொண்டு கண்கள் சுழல நாத்தடுமாறிப் பிதற்றலுண்டாய் நாளுக்குநாள் துன்பமேலிட்டு வருவதை அவன் தந்தைகண்டு மனோவியா கூலமுற்றுத் துக்கசாகரத்தில் மூழ்கி இந்த வினையை எவ்வாறு தீர்ப்பேனென்று பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, அநேக ஸ்தல தரிசனஞ் செய்தும் தீராமையால் மிகுதியும் கவற்சிகொண்டு தென்றிசைக் கண்ணுள்ள பொதிய மலைச்சாரலில் போகும் பொழுது சமுத்திரஜலத்தை உள்ளங்கையில் ஏற்றுண்ட மகா தபோநிதியாகிய அகஸ்திய முனிவர் எழுந்தருளக் கண்டு அடிவணங்கிச் சொல்வானயினன். தவசீலரே! நான் அருமையாகப் பெற்றெடுத்த குழந்தைக்கு எட்டு வயசுமுதல் இவ்வண்ணம் இந்நோய் இருக்கின்றது. கருணைநிதியே! இது தீரும் மார்க்கம் கருணைபுரிதல் வேண்டும் என்று வேண்டினன். இவ்வாறு வேண்டிய பிராமணனை ஞானதிருஷ்டியால் நோக்கி அகஸ்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளுவாராயினர். இப்பாலன் அநேக ஜன்மமெடுத்து உழன்று வருகின்ருன். இவன் பாபத்தினின்று நீங்கிச் சுகம் பெறவேண்டுமானல் ஓர் உபாயஞ் சொல்கின்றேம். முன்னு

ளில் நாம் கொண்டு வந்த கமண்டத்தினின்று வெளிப்போந்த காவிரி நதிக்கு வடக்கே இரண்டு குரோச தூரத்தில் நாகாசலம் எனப்பெயரிய மலை ஒன்று உள்ளது. அதன்மீது எம்மை ஆட்கொண்ட நீலகண்டர் திருவருளால் வந்த பாபநாசதீர்த்தம் ஒன்றிருக்கின்றது. இதில் மூழ்கின் பைத்தியம் நீங்கும் என்று அனுக்கிரகித்தனர். உடனே அவரைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு திருச்செங்கோட்டை அணுகி மலை மீதேறிப் புண்ணிய தீர்த்தங்களைக் கண்டு சந்தோஷித்து சங்கற்பஞ் செய்து பாபநாசதீர்த்தத்தில் விதிப்படி தானும் முழுகிப் பாலனையும் ஸ்நானஞ் செய்வித்தவுடனே சூரியனைக் கண்டபனிபோலவும், அனலைக் கண்டகுளிர்போலவும், சூறுவளிக் காற்றின் எதிர்ப்பட்ட பூளை போலவும் அப்பிள்ளையினுடைய பாவங்களெல்லாம் நீங்கி கிருதார்த்தனாய்த்தூய மனதோடும் தகப்பனைப் பார்த்துப் பணிந்து ஓ தந்தையே! நாம் இங்கே வந்த காரணம் என்னை என வினவினன். பிதா சந்தோஷமுற்று நடந்த சமாசாரம் அனைத்தையும் அவனுக்குரைத்தான். பிதாவும் பிள்ளையும் பேரன்புள்ளவர்களாய் மூன்று நாள் அங்கு உமையொருபாகர் தரிசனஞ் செய்துகொண்டிருந்து நான்காவது தினத்திலே பிரயாணப்பட்டுதம் இருப்பிடஞ் சேர்ந்து அளவிறந்த செல்வத்தோடும் வாழ்ந்து பின்னர்ச் சிவபெருமானுடைய திருவடி நிழலை அடைந்தார்கள். வேத மந்திரங்களை அறிந்து யாகாதி கிருத்தியங்கள் செய்த திடமதி என்பவன் வருமையுற்றோனாய் உயிர்விட்டு யமவாதை அடைந்து நரகவேதனையுற்று பின்னர்ப் பற்பல ஜன்மங்களை எடுத்தெடுத்திளைத்து புண்ணிய விசேடத்தால் கழுகாய்ப்பிறந்து பிணங்களைத் தின்று திரியும் பொழுது ஒருநாள் தாகம் அதிகரிக்க நாகாசலத்துப் பாபநாசத்தருகிலேயுள்ள ஒரு மரத்தின் மீதுவந்திருக்கும் போது அப்பாவநாசத் தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்பவர்களுடைய தேகஜலம் கழுகு மீது தெறித்தது. அக்கழுகு உருவம் நீங்கி திவ்யமாகிய தேவசொரூபம் பெற்று ஆடையாபரணதிகளோடு விளங்கிக்கொண்டு தெய்வவிமானத்தேறி தேவகணங்கள் மலர் மாரி தூற்றத் தேவதுந்துபிமுழங்க ஆலவட்டக்குடை பிடித்துச் சாமரம் வீசிவர அரம்பை மேனகா திலோத்தமை முதலிய அப்சரஸ்திரீகள் நடனஞ் செய்து வரத்தேவலோகம் போய்ச் சேர்ந்து தேவபோகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

இங்ஙனம் இவ்விருவருடைய அளவிறந்த சென்மங்களிற்செய்த பாவங்களையெல்லாம் நாசப்படுத்திய தீர்த்தமே பாபநாசமாகும். இப்புண்ணிய தீர்த்தக்கரையிலே நன்மையாகிய தானதருமங்களைச் செய்

தோர் யாம் வணங்கும் தெய்வமாவார்கள். ஆதலின் பாவநாச தீர்த்தத்தையும், நாகேசுவரரையும். அகிலாண்டவல்லியாராகிய உமாதேவியாரையும், சிவசுப்பிரமணியரையும், மூத்தபிள்ளையாரையும் தரிசித்து அன்பினோடு ரூபத்தியானஞ் செய்தவர்களும், நல்லெண்ணத்தோடு பாவநாசதீர்த்த மான்மியத்தைக் கற்போர் கேட்போர்களும் சிவகடாக்ஷம் பெற்று நீடுவாழ்வார்கள் என்றார் சூதமுனிவர்.

---

௳

## தன்மதீர்த்த மான்மியம்.

ஒழுக்கந் தவறாத உத்தமர்களே! ஜன்மாந்தர கன்ம வினைகளைப் போக்கவல்ல பாவநாசதீர்த்த மான்மியத்தைக் கேட்டீர்களா மற்றும் கேட்பீர்களாக. மற்றைய தீர்த்தங்களிற் பாவநீக்கமுற்றபின் புண்ணியபலனை இது கொடுப்பதால் இத்தீர்த்தத்தைத் தன்மதீர்த்தமென்று மேலோர் சொல்வர். அன்றியும் சிவதீர்த்தத்தில் மூழ்கி சிவதீர்த்தக் கரையில் தவமியற்றிய தன்மமுனிவர் வேண்டுகோட்பிரகாரம் அத்தீர்த்தத்துக்கு அவர் பெயர் உண்டாயிற்று. அத்தீர்த்தக்கரையில் அளவில்லாத முனிவர் தபோதனர் தேவர் முதலியோர் முறை முறையே வந்து முழுகி நேசித்துப் பூசித்துச் செல்வார்கள். முன்னொருகாலத்தில் அந்தத் தன்மதீர்த்தத்தில் தேவேந்திரன் வந்து முழுகியவுடன் அவனைப்பற்றிய பிரமகத்திதோஷம் பின்னப்பட்டுத் தீர்ந்து பரிசுத்தனுகித் தெய்வலோகத்தில் அரசுசெலுத்தி வாழ்ந்திருந்தான். அவ்வரலாற்றைக் கேட்பீர்களாக.

வைஜயந்தம் என்னும் பட்டணத்தில் கபாலாபரணன் என்னும் பராக்கிரமசாலியாகிய ஒரு இராக்ஷசன் பிரமதேவரை நோக்கித் தவங்கிடந்து அநேக வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டவனாய், சவபக்ஷன் என்னும்மந்திரியோடும், அநேக இராக்ஷசப்படைகளோடும் அரசாண்டு வருங்காலத்தில் திக்குவிஜயஞ் செய்யவேண்டுமெனக்கருதி மனவலிகொண்டு ரதகஜதுரகபதாதிகளோடு யுத்தசன்னத்தனாய்ப் பிரயாணப்பட்டு அமராவதியைப்போய் முற்றுகையிட்டான். அண்டமும், மற்றை அண்ட அடுக்குகளும், பாதாளலோகமும், சத்தியலோகமும், அதிருமாறு வீரர்களின் சிங்கநாதமும், யுத்தவாத்திய கோஷமும் வெற்றிச் சங்கத்தொனியும் எழுகடலும் கூடி முழங்குவது போலும் பேரொலி அதிர்வதைக் கேட்ட தேவேந்திரன் வெள்ளை யானைமேற்கொண்டு செல்ல மற்றைத் தேவர்களும் அமருக்குப் புறப்

பட்டார்கள். கார்காலத்திடிபோலக் கர்ஜித்து முனைந்து போர் செய்யும் கபாலாபரணன் விட்ட சூலத்தை வச்சிராயுதத்தினாலே இந்திரன் தகர்த்து விட்டான். தேரோடு தேரும், யானையோடு யானையும், குதிரையோடு குதிரையும், காலாட்களோடு காலாட்களுமாகத் தறுகண்மை கொண்டு இருதரச்சேனைகளும் இளைப்பில்லாமற் போர் புரிந்த சவபட்சனோடு யமனும், கவுசிகனோடு வருணனும், கபாலபூஷணனோடு குபேரனும், மாம்சப்பிரியனோடு அக்கினிதேவனும், மத்தமாலியோடு நிருதியும், மருதராக்ஷசனோடு வாயுபகவானும், நிட்டூரவேகியோடு ஈசானமூர்த்தியுமாக எதிர்த்தார்கள். சவபக்ஷனை முதுகிட்டோடுமாறு அடித்து மற்றவர்கள் ஒருவருக்கொருவர் இளைக்காது யுத்தம் நடாத்தியகாலத்தில் யமனுடைய தண்டாயுதத்தால் முப்பதினாயிரம் அரக்கர்கள் அடியோடு மடிந்தார்கள், யமன் முதலிய நான்கு பேர்களும் எதிர்த்த நான்கு இராக்ஷசர்களும் இறந்தார்கள். தேவேந்திரன் ஒரு அக்கிரோணி இராக்ஷசசேனைகளை மாய்த்துத் தென்றிசைக்கனுப்பினான். தன் சேனைகள் மாய்ந்து கால்வேறு தலைவேறாகப் போனதைக் கபாலாபரணன் கண்டு பொங்கியெழுந்து தேவசேனைமேற் பாய்ந்து சங்க சங்கமாக ஒரு நிமிஷத்திற் படைசாயுமாறு ஏவி இந்திரன்மீது சோனைமாரி பெய்வது போலக் கணைமழை பெய்வதை ஓர்ந்த தேவேந்திரன் அதிதீக்ஷண்ணியமாகிய ஓரம்பு தொடுத்து இராக்ஷச இராசன் கைவில்லையும் பாணத்தியும் துண்டம் துண்டமாக அறுத்துத்தள்ளி விட்டான். எவ்வகைப்பட்ட தேவாஸ்திரங்களைத் தொடினும் துண்டித்து விடுகின்றான் என்று கபாலாபரணன் கடுஞ்சினங்கொண்டு யமதண்டத்தினும் நூறுமடங்கு பெருமையும் வலிமையுமுள்ள ஓர் பெரிய தண்டாயுதத்தை எடுத்துத் தூபதீப நைவேத்தியாதி உபசாரம் புரிந்து ஏவினான். அந்தத்தண்டமானது சண்டமாருதத்தையும் அக்கினிக்குவியல்களையும் கக்கிக்கொண்டு கடலைக் குடித்துவிடுமோ என்று யாவரும் திடுக்கிட அதிவேகத்தோடு வந்து இந்திரன் மார்பிற்றாக்கவே இந்திரன் அடியற்ற மரம்போலச் சாய்ந்தான். தேவர்களெல்லாம் திடுக்கிட்டு ஏங்கினார்கள். இதனை அறிந்த வியாழபகவான் மந்திரஸ்பரிசம் செய்த மாத்திரத்தில் உயிர்த்தெழுந்த இந்திரன் மாதலிகொண்டு வந்த இரதத்தின் மீதேறி இராக்ஷச சேனைகளைச் சின்னபின்னப்படவாட்டி அவ்வரக்கன் தேர் முறியுமாறு வச்சிராயுதத்தை ஏவினான். அரக்கனும் தேவர்களைத் துரத்திக்கொண்டு இந்திரனைப் பிடிக்க வந்தான். இந்திரன் மகனாகிய ஜயந்தன் என்பவன் இராக்ஷச சேனைகளையெல்லாம் கணையாலும், புயவலியாலும் வேலா

னும் மாய்த்துத் தன்னோடெதிர்க்க வருவதைப் பார்த்த கபாலாபரணன் ஜயந்தனைப் பிடித்துக்கொண்டு வாயுவேகமாக ஓடினன். இதனைக் கண்ட இந்திரன் வச்சிரவாள் கொண்டு அரக்கன் கைகள் அற்றுவிழ வெட்டிவிட மைனுகபருவதம் போலப் பூமியிற் சாய்ந்தான் அங்ஙனம் விழுந்த அரக்கன் பூமி ஒரு செக்காகவும் அவன் ஒரு உலக்கையாகவும் எழுந்து சுழன்று சுழன்று சேனைகளை அழித்தான். இதனைக்கண்ட இந்திரன் வச்சிராயுதத்தை எடுத்து அரக்கனைக்கொன்றுவா என ஏவினன். அவ்வச்சிரம் அவ்வரக்கனுடலைத் துண்டு துண்டாகச் செய்து கடலில் வீழ்த்தியது. மாம்சப்ரியன் முதலிய இராக்ஷசவீரர்களும் மந்திரியாகிய சவபக்ஷனும் மடிந்தார்கள். தேவேந்திரனைப் பிரமஹத்தி சூழ்ந்துகொண்டது என்றனர் சூதமுனிவர். சௌனகாதியர் சூதமுனிவரை வணங்கி எம்மிறைவரே! கபாலாபரணன் அரக்கனன்றோ. பிராமணனுக விருப்பினன்றோ பிரமகத்தியுண்டு. இச்சந்தேகத்தை நிவாரணஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, சூதமுனிவர் சொல்வாராயினர்.

அந்தணர்களே! நீங்கள் கேட்டகேள்வி சரியே. முன்னர் அதிக அழகு வாய்த்து விளங்குகின்ற விந்தியாரணியத்திலே திரிவக்கிரன் என்னும் ஒரு இராக்ஷசன் சுசீலை என்னும் பெயர்பெற்று அதிரூபலாவண்ணியத்தோடுங் கூடிய ஒரு அரக்கியோடு கூடிக்குலாவிச் சுகித்திருக்கும் போது புத்திரப்பேறில்லாமைகண்டு அடிபெண்ணே இமயச்சாரலிற் சுசிமுனிவர் தவஞ் செய்கின்றார். அவரைச் சேர்ந்தால் திவ்யமாகிய வரத்தைப் பெறத்தக்க குழந்தை கிடைக்கும் அக்குழந்தையைக் கொண்டு நமது குல சத்துருக்களாகிய தேவர்களை வெற்றி கொள்ளலாமென்று ஏவுதலும், அவ்வரக்கி தன்னைச் சிங்காரித்துக் கொண்டு அமுதத்தைத் திரட்டி உருவாக்கிய தெனச்சொல்லும் வண்ணம் இரண்டு குழைகளையும் எட்டித் தாவிச் சுழலும் இரண்டு கெண்டை மீன்களைப்போலொத்த கண்கள் விளங்க, அடிபாரித்துத் திரண்டு பொற்பொடி அணிந்ததே போலத் தேமல் பொருந்தி மூன்னின்றோரைக் குத்தித் தள்ளிவிட எழுந்த மதயானை போல முன்வந்து அழகு வாய்ந்த முலைகள் பிரகாசிக்கச் சுசிமுனி அருகிற் சென்று அவரைத் தன் வலைக்குளாக்கும் சரசசல்லாப வித்தைகள் செய்யக் கண்ட முனிவர் மயங்கி அவளை வலிதிற்கட்டி அணைய ஒரு குழந்தை பிறந்தது. ஓ பெண்ணே! இக்குழந்தை நம் பீஜமானபடியால் உலகமனைத்தும் ஆள்வான் என முனிவர் கூறினர். சந்தோஷகரமாகக் குழந்தையுடன் திருவக்கிரனிடம் வந்து சேர்ந்து கபாலாபரணன் என

அம்மகவுக்குப் பெயரிட்டு வாழ்த்தினார்கள். இக்கபாலாபரணன் பிரம பீஜமாதலால் அவனைக்கொன்றமை பிரமகத்தியாய் இந்திரனைப் பற்றி யது என்று கூறி, பின்னரும் சூதமுனிவர் சொல்வாராயினர்.

பிரமகத்திபற்றிய இந்திரனும் தேவர்களும் வெருவிப் பிரமதேவ ரிடம் போய் முறையிட பிரமா சிறிது மவுன முற்றுச் சிவஸ்மரணை செய்து இந்தப் பிரமகத்தி நீங்குதற்கு இலகுவாகிய மார்க்கம் யாதெனில் கொங்குமண்டலத்தில் நாகாசலம் எனப் பெயரிய அற்புத ஸ்தலம் ஒன்று உள்ளது. இதில் தருமதீர்த்தம் என்ற தீர்த்தம் மகா பாதகங்களை நீக்கும். அன்பினோடு அங்கே சென்று நீராடி அம்மையப்பரை வணங்கினால் துயர் நீங்கி விண்ணுலகாட்சி புரிவாய் என்ற வார்த்தையை வணங்கிக் கேட்டு தேவர்கள் புடைசூழத் திருநாககிரிக் கெழுந்தருளித் தருமதீர்த்தத்தை அடைந்து மூழ்கிப் பிரமகத்தி நீங்கப் பெற்று அர்த்தநாரீசுவரரையும் குமாரரையும் சேவித்துச் சந்தோஷத்தோடு சென்றான்.

## இந்திர தீர்த்த மான்மியம்.

மாதவமிகுந்த வேதியர்களே! இந்திரன் அமராவதி அடைந்து சுதர்மண்டபத்தில் அரசு செலுத்துங்காலத்தில் தனக்குற்ற பிரமகத்தி நீங்கியகாரணத்தைப் புகலக்கேட்ட தேவர்கள் மகிழ்ச்சி கொள்ள அவர்களோடு மறுபடியும் வந்து திருச்செங்கோட்டில் தருமதீர்த்தத்து விதிப்படி முழுகிச் சுவாமியை வணங்கி தன்பெயரால் ஒரு தீர்த்தங் கண்டு விதிப்படி அதைப் பிரதிட்டித்து அத்தீர்த்தத்து மூழ்கினவர்களுக்கு இராச்சியாதிகாரமும் போகபோக்கியங்களும் உண்டாக அருள்புரிய வேண்டுமென்று எம்பெருமானிடத்து வரம் வாங்கினன். ஆதலால் தருமதீர்த்தத்தில் மூழ்கிய பின் இந்திர தீர்த்தத்தில் மூழ்க வேண்டும். அத்தீர்த்தக்கரையிலே சொற்பதானம் கொடுத்தாற் கோதானம் பூதானஞ் செய்த பலனையும், தீர்த்தங்களைக் கண்டால் கிணறு வாவி தண்ணீர்ப்பந்தல் மகேசுவரபூசை செய்தபலன்களையும் கொடுக்கும் இந்த மான்மியத்தை அன்பு கூர்ந்து சொன்னவர்களும் கேட்டவர்களும் இஷ்ட காமியார்த்தங்களைப் பெற்று வாழ்வார்கள் என்றார் சூதமுனிவர்.

## வைரவதீர்த்த மான்மியம்.

இருவினைகளை ஒழித்த இருடிகளே! மேன்மையுற்ற வைரவ தீர்த்தத்தில் முழுகினால், தரித்திரம், தோல்வி துக்கம் என்பன வற்றை நீக்கிச் சம்பத்து, சந்தோஷம் சிவானுக்கிரகம் என்பவற்றைக் கொடுக்கும். இவ்வைரவதீர்த்தத்தில் முழுகினோர் அடைந்த நற்பலன் களைக் கேட்பீர்களாக.

மிகுந்த வளப்பமுற்ற உச்சினிநகரத்துக்கு அதிபதியாகிய விக்கிரமாதித்தனுடைய மரபிலுதித்த மனோஜவன் என்னும் அரச னானவன் சுமித்திரை என்னும் தேவியாரோடும், சந்திரகாந்தன் என் னும் குமாரனோடும், மந்திரி பிரதானி முதலிய இரதகஜதுரகபதாதி களோடும் மனுநீதி தவறாது குடிகளிடத்தில் ஆறிலொரு கடமைப் பெற்று மாதம் மும்மாரி பெய்துவர, அளவிறந்த கீர்த்தியோடும் இராச்சிய பரிபாலனஞ் செய்து வந்தான். இவ்வாறு இவன் இராச் சியபரிபாலனஞ் செய்துவருங் காலத்தில் எப்பொழுதும் உத்தம குணம் வாய்ந்த பிராமணர்களால் உதாத்த அனுதாத்த சுவரிதமுதலிய சுரங்கள் வழுவாது வேதாத்தியயனம் அத்தியாபன முதலியவற்றால் உண்டாகும் ஓசையும், வேதாந்தம் வைசேடிகம் பாட்டம் பிரபாகரம் பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என்னும் ஆறுசாத்திர மோதித் தர்க்கிக்கும் ஓசையும், அக்கினிஷ்டோமம் அத்தியக்கினிஷ்டோமம் உக்தீபம் சோடசி வாசபேயம் அதிராத்திரம் அப்தோரியாமம் அக் கினியாதேயம் அக்கினிகோத்திரம் தரிசபூரணமாசம் சாதுர்மாசியம் நிரூடபசுபந்தம் ஆக்கிராயணம் சௌத்திராமணி அட்டகை பார் வணம் சிரார்த்தம் சிராவணி அக்கிரகாயனி சைத்திரி ஆசுவயுகி என் னும் இருபத்தொரு யாகங்களை நடாத்தும் ஓசையும், அந்த யாக அவிப்பாகத்துக்காகத் தேவர்கள் சந்தோஷத்தோடு தங்கள் உலக வாழ்க்கையையும் விரும்பாது நெருக்கியிருக்கும் ஓசையும், சிரார்த் தாதிகளைப் பெறும் பொருட்டுப் பிதிர்கள் தமது லோகத்தை விட்டு வந்து காத்திருக்கும் ஓசையும், தபோதனர்களும் முனிவர்களும் சூழ்ந்து நெருக்கியிருக்கும் சோலைகளிலுண்டாகும் ஓசையும் சிறந்து எங்கேநோக்கினும் மங்களகரமாக விளங்கவும், சாதியொழுக்கம், சமய நிலைமை, ஆச்சிரம தரும முதலியன வழுவின்றி முப்பத்திரண்டு தருமங்கள் பெருகவும் அந்நாட்டினுள்ளோர் நோய் அவமிருத்தியு தரித்திர முதலியனவின்றி வாழ்ந்து கொண்டு வந்தார்கள். இவ்வாறு

மனோஜவன் குடிகளைத் தழுவிச் செங்கோல் செலுத்திவருங்காலத்தில் பல சாஸ்திரவாராய்ச்சி செய்தவர்களும் விருத்தருமாகிய பாஷண்டிகள் அரசனையடுத்துச் சிற்சில சித்திகளைக் காண்பித்து, ஓ மனோஜவ மஹாராஜனே! வெண்ணிறமாகிய சுண்ணும்பும் மஞ்சளும் சேர்ந்தால் சிவப்பு வர்ணம் தோற்றுவதுபோல, இத்தேகம் சுக்கில சுரோணிதங்களின் விகாரமே: இங்ஙனமாக இத்தேகம் புண்ணியதீர்த்த ஸ்நானத்தால் எங்ஙனம் சுத்தமாகும். தருமதானங்களால் நல்லுலகமும், அதர்மத்தால் நரகமும் அனுபவிக்க வேண்டுமென்று எழுதியிருக்கும் பத்திநூல்களின் சரித்திரம் யாவும் அதிசயோக்தி. யாகத்தைச் செய், தானத்தைக் கொடு, ஓமத்தைப்புரி, ஆலயத்தைத் தொழு என்பனவெல்லாம் பிறரை வஞ்சித்து நிழலி லிருந்துண்ணக் கருதி ஸ்வயகாரிய துரந்தரர்களாகிய கவிகள் புத்திர பௌத்திரவர்க்கமாகிய தங்கள் சந்ததியார் பிழைக்கும்பொருட்டு எழுதி வைத்த கபடக்கட்டுக்கதையேயாம். கண்ணுக்குத் தெரிவதையே நம்பவேண்டும். இவ்வாறு பாஷண்டிகள் உபந்நியாசஞ் செய்ய, அரசனும் ஊழ்வினைப்பயனால் தனது சற்புத்தி மாறப்பெற்று வேதியர்களுக்கும் சிவாலய விஷ்ணுவாலயங்களுக்கும் விட்டிருந்த மானியங்களை நிறுத்தி விட்டான். கோயிலில் உள்ள திருவாபரண முதலியனவற்றைக் கவர்ந்து கொண்டான். அன்னசத்திரங்களையும் ஏனைய தருமங்களையும் நிறுத்திவிட்டான். தெய்வகாரியம் பிதிர்காரியம் என்பனவற்றை மறந்தோனாகியும், குடிகளைத் துராகிருதத்திற் றுன்பப்படுத்தியும் தருமநெறி தவறிக் கொடுங்கோல் ஆட்சி கைக்கொண்டான். இரக்கம் என்பது எள்ளளவுமின்றிக் கல் நெஞ்சினனாய் ஒழுவதைத் தெரிந்த மேலோர்கள் மனக்கவற்சிகொண்டு வருந்தி, அந்தோ! அருமையாகிய குணம்வாய்ந்த இவ்வேந்தன் இத்தீயொழுக்கமுள்ள பெயரையும் கேட்கச் சகிக்கான் என்றன்றோ எண்ணியிருந்தோம். "நல்வினைக்கம் அல்லது அல்லற்படுத்தும்" என்ற நீதி மொழிக்கிலக்காக சூனியவாதிகள் கூட்டுறவாலன்றோ இம்மன்னன் உள்ளம் கெட்டது, இவ்வுலகத்து வசைபெறுவது மல்லாமல் அவ்வுலகத்தும் சுகம்பெற மாட்டானே. இங்ஙனம் மேலோர் பலவாறு பச்சாத்தாபமுற்றுக் கெட்டோர்களை ஈடேற்ற வேண்டுமென்ற இரக்கங்கொண்டு அரசனை நல்வழிப்படுத்த எண்ணங்கொண்டு அம்மனோஜவ வேந்தரிடஞ்சென்று ஆசிகூறி, அரசனே! உலகத்து மாந்தர்களை ஆணைவழி நடாத்துதற் பொருட்டே மலரவன் மன்னர்களை உண்டாக்கினன். வேந்தன் என்பான் பிரஜைகளைத் தன்னாலும், தன்னிடத்தவராலும், இரா

ஜாங்கவங்கத்தினராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் துன்பம் நேராது பாதுகாக்க வேண்டும். சாதி சமய ஆசிரம நெறி பிறழாமலும், திருக்கோவிற் பூஜை முதலியன தவருமலும், இன்னும் இவைபோன்ற நற்கருமங்களும் நடந்துவருமாறு தன்குடைக்கீழ் வாழும் மாந்தர்களுக்குக் களிப்பூட்டியும் அரசன் காத்தல் வேண்டும். முட்டையுளிருக்கும் உயிருக்கும் ஊட்டி வளர்க்கும் பரப்பிரமக் கடவுள் ஒருவர் இருக்கின்ருர். அப்பரப்பிரமக் கடவுள் ஆன்மாக்கள் நற்கதிபெறும்பொருட்டு அருளிய வேதசிவாகமப் பிரகாரம் நடத்தல் வேண்டும். எவன் பரமேசுவர விசுவாசமின்றி யுளனே அவனுக்கு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தி கிடையாது. நன்மை தீமைகளை அறிந்து நடவாதவன் மிருகமென்றும் சொல்ல இடமின்று. நல்வினை தீவினை முதலியவற்றை அறிந்து நடவாதவன் ஐசுவரியமும், சுற்றம், பெற்ற முதலிய யாவும் மறைவில்லாத வெளியிடத்து விளக்குப் போலச் சஞ்சலத்துக்குள்ளாகும். ஆதலின் வேந்தனே! உன் முன்னேர்கள் சென்ற வழியே ஈசுவரபக்தி கொண்டு நல்லோர் மனசு கோணுது நடந்து பெருவாழ்வு பெற்று இகபரம் இரண்டினும் சுகமுற்றிருப்பாயாக என்று பல புத்திகளை எடுத்து விளக்கி தத்தம் உறைவிடஞ் சென்றனர். “கொடிறும் பேதையும் கொண்டதுவிடா” என்னும் வாக்கியத்துக்கிலக்காகவும், “விதிக்குப் புத்தி அநுசரனை” என்றவாறும் தீயவழியிலே நடந்துவந்தான். தீயரோடு கூடுவதும் அவர் சொற் கேட்பதும், அவரைக்காண்பதுமாகிய அனைத்தும் தீமைபயக்குமெனக் கருதி மேலோர்கள் அந் நாட்டை விட்டு அகன்றுவிட்டார்கள். இவ்வரசன் துற்புத்திகொண்டு பிரஜைகளை இம்சிக்கின்ருன் என்று கண்டு சில பிராமண முதியோர் இவனது ஆட்சியைப் போக்கத்தக்க சூழ்ச்சி செய்ய வேண்டுமென்று ஆலோசித்து, கீர்த்தி வழுவாது தர்மஜகராஜன் என்று யாவரும் வத்திப் போற்றித் தொழவல்ல கீர்த்திமானுகிய கோலபன் என்னும் அரசனிடஞ் சென்று ஓ மஹாராஜனே! உச்சினிநகரத்துக்கு அதிபனுகிய மனேஜவன் என்னும் அரசன் சூனியவாதிகள் துர்ப்போதனையால் உள்ளம் மாறுபட்டு குருதெய்வ பக்தியும் குடிகளிடத்துக் கருணையுமில்லாது கொடுங்கோல் செலுத்துகின்ருன். புலிக்காட்டில் வசிக்கும் மான் கூட்டங்களைப் போல மிகவும் வருந்தி வாழ்கின்றேம். ஆலயபூஜை உற்சவாதிகளெல்லாம் நின்றுவிட்டன. ஆதலின், ஒரு குடும்பம் பிழைக்க ஒருவனையும், ஒரு ஊர் சுகப்பட ஒரு குடும்பத்தையும், ஒரு நாடு களிப்புற ஒரு ஊரையும் கெடுக்கலாம் என்னும் நீதி

நெறிகொண்டு ஒரு இராச்சியத்துப் பிரஜைகள் சுகிக்குமாறு கொடுங்கோல் அரசனாகிய மனோஜவனைத் தண்டிக்கலாம்: இது செங்கோல் அரசர்களின் நீதியேயாம் என்று உயிரிரப்போரினும் உருக்கமுற்றுக் கேட்டுக்கொண்ட பிராமணர்களின் வார்த்தையைக் கேட்டு கோலபன் மிகவும் வருந்தி இக்கொடிய வார்த்தை கேட்கும் அந்த இராச்சியப் பிரஜைகளின் துன்பத்தைப் போக்காவிடின் நான் பிடித்த வில்லும் எடுத்த கணையும், ஏந்தியவாளும் என்ன பிரயோஜனத்தைத் தரத்தக்கன! பரோபகாரமில்லாத தேகம் பூமிக்குச் சுமையன்றோ. துஷ்டர்களை அடக்குதற்கில்லாப்படை என்னபடை? என நினைத்து கடல்போற் பெருகிய சதுரங்க சேனைகளையும் விரைவில் அழைத்துச் சென்று தூதனுப்பியும் கேளாது மதோன்மத்தங் கொண்டிருக்கும் மனோஜவன் வாழும் உச்சினிப்பட்டணக்கோட்டையை முற்றுகையிட்டு ஆறுமாசகாலம் இராப்பகலாக யுத்தஞ் செய்தான். தன்னிடத்துள்ள திரண்ட சேனைகளெல்லாம் எதிர்த்தும் தருமம் கோணியவனானதால் தெய்வசகாயமின்றித் தோல்வி பெற்ற மனோஜவன் இரவில் இனிஉயிர் தப்பிப் பிழைக்க வேண்டிய மார்க்கத்தைத் தேடவேண்டுமென்று பிள்ளையையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு கள்ளவழியாகப் புறப்பட்டு இருண்ட ஆரணியத்தைப் போய்ச் சேர்ந்தான். செல்வாக்குள்ளவர்களுக்கு நேர்ந்த துக்கமும், சுகமும் தங்களுடையதாகப் பாவித்துக் கிடக்கினும், இருக்கினும்; நடக்கினும் பலபேர் சூழ்ந்துசெல்வார்கள். சிறிது சீர்கேடாகிய சமயத்தில் எப்படிப்பட்ட சகாயம் பெற்று வாழ்ந்தவர்களாயிருப்பினும் வயிற்றிலிருப்பது அவர்களுடைய அன்னமாக விருக்கினும் தெரியாதவர்களைப் போலக் கடைக்கண்ணாற் பார்த்துத் தலைகுனிந்து செல்வதும், அழைக்கினும் காதுகேளாதவர்களாயும் அகன்று செல்வதும் வெறுப்பதும் உலகவியல்பு; அதினும் இவ்வரசன் கொடுங்கோன்மை செலுத்தினோனாதலின் ஒருவரும் இவ்வரசனைப் பின்தொடரவும் தேடவும் இல்லை. மனைவியோடும் மகனோடும் மனோஜவன் உடுக்க வஸ்திரமின்றி ஒரு பொருளுமெடுக்காதவனாய் வெளியே புறப்பட்டான். மோந்தாற் குழையும் தன்மை பெற்று மெதுவாகிய அனிச்சமலரும் அன்னத்தின் கழுத்திலிருக்கும் மயிரும் பரப்பி நடக்கினும் நெருஞ்சிக்காடோ என்று கருதும் மெல்லிய பாதத்தையுடைய சுமித்திராதேவியும் சந்திரகாந்தன் என்னும் அரசிளங்குமாரனும் அரசனும் கல்லும் முள்ளுமுள்ள காட்டில் அதிக வேகமாக இருட்டில் நடக்கவேண்டினமையால் மிகவும் களைத்து ஓரிடத்தில் உட்கார்ந்தார்கள். இரத்தினப் பொற்றூங்கு மஞ்சத்துப்

படுத்த அருமைப் புதல்வனைத் தழைகள் பரப்பி அதின்மீது படுக்க வைத்தார்கள். அக்காட்டில் பலவிதமாகிய மிருகக் கூட்டங்கள் வந்து சூழ்வது, கோலபன் என்னும் பகைவனுடைய சேனைகள் வந்து வளை வது போலவும், அம்மிருகங்களின் சத்தங்களெல்லாம் யுத்தமுரசம் போலவும், கொடிய புலி கரடிகள் ஆர்ப்பது சேனவீரர்கள் செய்யும் வெற்றித்தொனிகள் போலவும் தோன்ற மிகவும் வியாகுலமுற்று துய ரக்கடலுள் ஆழ்ந்து கரைகாணுதவனுக வருந்தினுன். நடந்த அயர் வாலும் பசியினுலும் சந்திரகாந்தன் களைத்து வருந்தினுன். அரிய அரசிளங்குமாரன் பசியை நீக்க வகையற்ற நிலைமையை அரிந்து அர சன் சிந்திக்கின்ருன். எல்லாம் நம் வல்லமையாலாகின்றது; தெய்வம் என்பது ஒன்றுண்டோ என்று செல்வச் செருக்குற்றேமே!இப்போது அந்த வல்லமை எங்கே போயிற்று? பாலுஞ் சீனியும் கலந்த அமுதத் தைப் பொற்கிண்ணத்திலேந்தி வேடிக்கைகாண்பித்து ஊட்ட ஒவ் வொரு வாயன்னமாக அருந்தவும் பொருந்தாத என் குலவிளக்காகிய மதலை பசியால்வருந்த அப்பசியைப் போக்கும் வழியைக் காணுது கண்ணீர் வடிக்கவும் காலம் நேர்ந்ததே! இதனை உற்று யோசிக்கும் பொழுது சகலமும் நம் வல்லமையால் வருவதென்று எண்ணுவது தவறே ஆகும். இருக்கும் பொழுது மேல்வஸ்திரம் சரிந்தால் எடுத் துத்திருத்திச் தூசுமுதலியன மேலே விழவரினும் படியாது அகற்றி ஆதரிக்கும் மெய்க்காவலர் எங்கே? நடந்துவந்தால் முன்னின்று நமது பிரதாபங்களையும் நம்முன்னோர் கீர்த்திகளையும் புகழ்ந்து கொண் டாடும் பாடுவோர் எங்கே? பலவிதமாகிய வேடிக்கைகளை அலங்கார மாகப் புனைந்து சாமார்த்தியமாகப் பேசிக் காலம் போக்கும் வைணர் கள் எங்கே? மந்திரிமார்கள் எங்கே? சேனை எங்கே? அரண்மனைகள் எங்கே? ஐசுவரியங்கள் எங்கே? ஐயையோ! நமது பட்டமஹிஷியருகே ஆடைதாங்கிச் செல்லோரும், அடைப்பமேந்திச் செல்வோரும், கிளி பூவை முதலியனவற்றைக் கொணர்ந்து பேசுவிப்பவர்களும், முழுகு விப்போரும், மயிர் வாருவோரும், ஆடை திருத்துவோரும், மையிடு வோரும், பொட்டிடுவோரும், ஆபரணமணிவோருமாகிய தாதிமார் கள் எங்கே? எல்லாம் ஒழிந்து போயினவே ஆ! ஆ!! எல்லாம் தேவகிரு பையால் வந்தடைகின்றன என்பதை மறந்து போனேனே! மனைமக் கள் சுற்ற முதலியன வெல்லாம் சந்தைக் கூட்டம் போன்றன என்றும் இராச்சிய போகங்களெல்லாம் சொப்பனம் போன்றன வென்றும் மேலோர்கள் சொல்வதை எளனமாக எண்ணினேனே! இவ்விதமாகிய அற்ப ஐசுவரியத்தை எப்போதும் இவ்வண்ணமே வைத்து ஆளலா

மென்றெண்ணியன்றோ மமதைகொண்டு பிறரை மதிக்காதும் செல்வம் பொருந்திய காலத்திலே பல்லுயிர்க்கும் துணை செய்யவேண்டும் என்பதையும் மறந்து அவலனுனேன்! இங்ஙனம் தனக்குள்ளே துக்கித்திருக்குஞ் சமயத்தில் சந்திரகாந்தன் அம்மா சாதம் என்ற ஓசையைக் கேட்டமாத்திரத்தில் அடிவயிற்றில் இடிவிழுந்தது போலத் துடித்துக் கண்ணில் நீர்வடிப்பதைக் கண்ட மனோஜவன் தன் மேல்வஸ்திரத்தால் கண்ணைத் துடைத்து அடி மாதரசே! ஏன் துன்பப்படுகின்றனை நாம் என்ன செய்யலாம்! முற்பிறப்பில் மனமுவந்து ஒருவருக்கும் ஒரு பொருளைக் கொடுத்தேமல்லேம். தர்மதானஞ் செய்தரியேம். ஆலயங்களில் நித்திய பூஜை நைமித்திய பூஜைகளை நடாத்தி வைத்திலேம். பிதிர்கள் மனசுவக்குமாறு யாக சிரார்த்தாதிகள் செய்யவில்லை. பிராமணர்களுக்கு அன்னதானம் பூரிதானம் கன்னிகாதான முதலியன கொடுத்தேமல்லேம். சித்திராபௌர்ணமியில் பிராமணர்களுக்குக் கறிமுதலியனவற்றோடு அன்னபானாதிகள் புசிக்குமாறு கொடுத்தேமல்லேம்; சந்தனம் பாதுகை விசிறி குடை முதலியன கொடுத்தேமல்லேம். அரசு, மா, அத்தி, நெல்லி, ஆல், விளா, இலுப்பை, வேம்பு, வில்வம், வாழை, பலா, மகிழ், தென்னை முதலிய மரங்கள் வைத்து வளர்த்தேமில்லை. காவணம், நந்தவனம், தண்ணீர்ப்பந்தல் முதலியனவும் செய்தேமில்லை. புரட்டாசிமாச மாளயபக்ஷத்திலே தென்றிசை நோக்கிப் பிதிர்களைக் குறித்து நைமித்திக சிரார்த்தஞ் செய்தேமல்லேம். சாந்திராயண முதலிய விரதங்கள் செய்தேமல்லேம். மார்கழி மாசத்தில் விடியற்கால பூசை செய்தேமல்லேம். மேன்மையுற்ற சைவ சீலர்களுக்கு உருத்திராக்ஷ முதலியன உதவினேமல்லேம். சிவாலயத்திலே திருவிளக்கிட்டேமில்லை. திருவலகு திருமெழுக்கிட்டேமில்லை. புல்லையாவது களைந்தெறிந்தேமில்லை. ஆலயவலம் வந்தேமில்லை. சிவபிரான் திருமுடிமீது ஒரு வில்வதளமாவது இடவும் பெறுத பாவியாக இருந்தமையாலன்றோ இங்ஙனம் கஷ்டத்தை அனுபவிப்பேமாயினேம். எது செய்யத்தான் இயலாதிருப்பினும் சிவ என்று மும்முறை உச்சரித்திருக்கினும் சகல பாவங்களும் நீங்கியிருக்குமே! அதுவுஞ் சொல்லாத பாவியாக இருப்போம் போலத் தோற்றுகின்றதே என்று கூறிச் சோர்ந்து தரையின்மீது மயங்கி விழுந்தான். சுமித்திராதேவி திடுக்கிட்டுக் கணவனை இருகையாற்றழுவி கண்ணீராலே கணவன் மேலெல்லாம நனைத்து, சிவ! சிவ!! என் செய்வேன் என்று ஓலமிட்டழுதாள். கஷாயவஸ்திரம் தரித்துக்கொண்டும், கூட்டமாகக்கட்டிய சடையை முடித்தும், விபூதியை உத்தூளன திரிபுண்டரமாகத் தரித்

தும், மார்பிலே பூணூல் பிரகாசிக்கவும் தண்டகமண்டலம் கையிற் கொண்டு பராசரமுனிவர் அவ்வழியாகச் செல்லும் பொழுது இவ் வழுகுரலோசை கேட்டு மனசிரங்கிச் சமீபத்து வருவதை அறிந்த சுமித்திராதேவி வணங்கி அழுது சொல்வாளாயினள். பரமசிவத்தைப் போல எழுந்தருளிய சுவாமிகளே! அடியேங்களது துயரத்தை நீக்கி யருளல் வேண்டுமென வேண்டினள். பயப்படாதே அம்மா என்று தேறுதல் கூறி நீங்கள் யாவர்? இக்காட்டில் வந்த காரணம் என்னை என்று வினவினர் பராசரமுனிவர். எங்கள் அரிய மித்திர பாந்தவ்யம் போல எழுந்தருளிய சுவாமி! திக்கற்றவர்களாக இக்காட்டிலிருக்கும் எங்கள் மூவருள்ளே உச்சினிநகரத்தை ஆண்ட மனேஜவன் என்னும் பெயரையுடைய இவர் எனது பர்த்தா. அடியாள் பெயர் சுமித்திரை. எங்கள் தவத்தாற் கிடைத்த புதல்வன் இவன். இப்பாலன் பசியினல் வருந்தச் சகியாத மன்னவர் மூர்ச்சித்துப் பூமியில் விழுந்து மயங்கிக் கிடக்கின்றார். கோபலன் என்னும் அரசன் வலியவந்து எங்கள் இராச்சியமாகிய உச்சினிபுரத்தைப் பிடித்துக்கொண்டான். பரதேசி களைப்போல இக்காட்டை அடைந்தேம். மாதவரே! நாங்களும் இனி ஒருநாள் நாட்டிலெய்தி அறுசுவையுண்டு வாழ்ந்திருப்போமா! என்று விம்மி விம்மி அழுது அடிவீழ்ந்து வணங்கும் சுமித்திரையை நோக்கி, கற்புக்கோர் வைப்பாய கன்னிகையே! "ஆறிடுமேடு மடுவும் போல் ஒத்தது செல்வம்" ஆனல் அச்செல்வத்தைப் பெற்றிருப்பது நாம் செய்யும் செய்கையைப் பொருத்திருக்கின்றது. பரமேசுவர கிருபை வாய்க்கின் நீவிரேன் அனுபவிக்க மாட்டீர்கள், விசனப்பட வேண்டாம் அம்மா! இதோ உன் கணவன் அயர்வு நீங்கி எழுந் திருக்கின்றான் என்று இரண்டு கண்களையும் மூடிச் சிவத்தியானஞ் செய்து இவர்கள் விருத்தாந்தம் யாவும் அறிந்துகொண்டு, தமது கையினலே அரசனுடைய சிரசு தொடுத்துப் பாதமிருதியாகத் தடவி யவுடன் மறுஜன்மம் எய்தினேனைப்போல மனேஜவன் எழுந்தான். உடனே முனிவர் திருவடிகளை நமஸ்கரித்து தனது விருத்தாந்த மனத்தையும் கூறினன். புவனேசுவரி மந்திரத்தை ஜபிப்பீர்களா யின் பசிப்பிணியும் மனநோயும் நீங்கும். பாவம் நிவாரணமாகும், புனிதமாகிய சுகத்தைக்கொடுக்கும் என்று கூறி அம்மந்திரத்தை உப தேசிக்க, மூவரும் ஆரோக்கியமுற்றுத் திடம்பொருந்தி வணங்கினர் கள். மனேஜவ இராஜனே! நீ குரு தெய்வத் துரோக முதலியன செய்தனை. அப்பாவத்தினின்றும் நீங்கி உன்பகைவனை ஜயித்து வெற்றியடைய வேண்டுமாயின் ஒரு உபாயஞ் சொல்வோம். அஃ

தாவது, கொங்குமண்டலத்திலே நாகாசலம் என்று, உமையொருபாகர் எழுந்தருளியிருக்கும் சிவஸ்தலம் ஒன்றுள்ளது. அங்கே வைரவதீர்த்தம் என ஒன்றுள்ளது. இது பிரமகபாலமேந்திய வைரவக் கடவுளாலே அன்புகூர்ந்து மேன்மை பெறப் பிரதிஷ்டிக்கப்பட்ட திவ்ய தீர்த்தம். இத்தீர்த்தத்தில் இரகுபதியானவர் ஸ்நானஞ்செய்து பின்னர் ஸ்ரீ அர்த்தநாரீசுரர் அருள்பெற்றுப் பகைவனுகிய இராவணனை வெற்றி கொண்டனர். இத்தீர்த்தத்தை மேலோர் வைரவதீர்த்தம் என்பர் என பராசரமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர். இதனைக்கேட்ட மூவரும் முனிவர் பாதத்து விழுந்து நமஸ்கரித்து எங்கள் க்ஷேமவைப்பே! குலதெய்வம் போல இக்கானகத்து எழுந்தருளிய முனிபுங்கவரே! கருணைகூர்ந்து எங்களை நாகாசலத்து வைரவதீர்த்தத்தில் விதிப்படி மூழ்குவித்து உமையொருபாகர் தரிசனஞ் செய்வித்து முன்போல இராச்சியாதி பத்தியத்தைக் கைக்கொள்ளும் திறத்தைக் கொடுக்க வேண்டுமென்று பன்முறையும் வேண்ட, அவர்களை நோக்கி தானுகவே க்ஷேத்திர தரிசனத்துக்குச் செல்லல் வேண்டும். மற்றொருவர் போகலாம் வாருங்கள் என்றழைத்தால் பரமசிவத்தின் பிரேரேபணையாலேயே அழைப்பதாகப் பாவித்து அவசியம் யாத்திரை செல்லல்வேண்டு மாதலிற் றடையின்றி யானும் வருகின்றேன்: என்று மூவரையும் அழைத்துக் கொண்டு வழிகளிலுள்ள சிவாலய தரிசனஞ் செய்துகொண்டு மகிமை வாய்ந்த நாகாசலத்தை அடைந்து கிரிப்பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு மலையை வணங்கி ஏறி வைரவதீர்த்தத்தைக் கண்டவுடனே பகைவருடைய குரோதமெல்லாம் நீங்கியதாக மனசிலே தோன்ற மகிழ்ந்தான் மனோஜவன். வேதாகமவிதிப்படி அம்மூவரையும் பராசரமுனிவர் மூன்று மாசகாலம் வரையில் வைரவதீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் மூழ்குவித்தும் உமையொருபாகர் தரிசனஞ் செய்வித்துக் கொண்டும் வந்து ஒரு நாள் இராம மந்திரத்தை உபதேசித்தார். இராம மந்திரத்தை செபித்து வரவே இரகுநாதர் பிரசன்னராய் மகிழ்ந்து இரதம், சேனை, சங்கம், ஆபரணம், மகுடம், கவசமுதலிய வற்றைக் கொடுத்தனர். பராசரர் பிரமாஸ்திரம் கொடுத்தார். பராசக்தி நல்வரமருளப் பரமேசுவரரை வணங்கிச் சேனைசூழத் தன் நகரத்தை அடைந்து வளைந்துகொண்டு மூன்று நாள் அகோராத்திரம் யுத்தஞ் செய்து நான்காம் நாளில் பிரமாஸ்திரப் பிரயோகத்தால் சேனைகளெல்லாம் சிதறுண்டு போகக் கோலபனையும் வெற்றிகொண்டு நகரத்துட் பிரவேசித்து சிம்மாசனமேறி நீதிமுறை தவறாது மன்

னுயிரைத் தன்னுயிர் போலாண்டு சந்திரகாந்தனுக்கு இராச்சியாபிஷேகம் புரிந்து செங்கோலை அவனிடம் கொடுத்துவிட்டுச் சுமித்திரா தேவியுடன் பராசரரை வணங்கித் திருநாககிரியிற் சென்று சிவத்தியானஞ் செய்து வாழ்ந்திருக்குங் காலையில் மனோஜவன் ஒப்பற்ற சிவபதமுற்றான். சுமித்திரைக்கு உமையம்மையார் தமது பதங் கொடுத்தார்.

இம்மகிமை வாய்ந்த வைரவதீர்த்தக் கரையிலே சிவபூஜை செய்தவர்களும், தானங்கள் புரிந்தோர்களும் ஒன்று கோடியாகிய பலன்களை அடைவார்கள். பேய், பில்லி, சூனியம், பார்வை, சுடலை மாடன் முதலிய கிரகதோஷமுடையோர் மூழ்கி ஜலத்தை உட்கொண்டு உமையொருபாகர் தரிசனஞ் செய்து வைரவமூர்த்திக்கு வடைமாலை சாத்தினால் அவை நீங்குமென்றார் சூதமுனிவர்.

## வாணதீர்த்த மான்மியம்.

சிவபூஜாதுரந்தரர்களே! வெற்றியைத் தரவல்ல வைரவதீர்த்த மகிமையுணர்ந்தீர்கள், மேன்மையுற்ற வாணதீர்த்த மான்மியம் புகல்கின்றேம் கேட்பீர்களாக. இத்தீர்த்தம் இஷ்ட சித்தியையும், தேக காந்தியையும் நல்ல பலனையும் தரும். மாவலியின் பேரனாகிய வாணாசுரன் கர்வத்தால் கண்ணனோடு பொருது கைகள் இழந்து நல்லுணர்வு பெற்று நித்தியானந்தத்தை விரும்பி உமையொருபாகரைப் பூசித்து வணங்கியிருக்கும் நாளிலே தன் பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி வேதாகமவிதிப்படி புண்ணிய தீர்த்தங்களை ஆவாகித்துப் பரமேசுவரரைக் குறித்துத் தவஞ் செய்தான். உமையாருபாகர் எதிர் தோன்றி யாதுவேண்டுமெனலும் நித்தியானந்த முத்திவேண்டு மெனலும், அவ்வாறே சிவகணாதிபனும் வரமீந்தனர். சுவாமி! அடியேன் விருப்பம் ஒன்றிருக்கின்றது. அஃதாவது என்பெயரால் பிரதிஷ்டித்த இத்தீர்த்தத்தில் யாவர்வந்து மூழ்கினும் பலநாள் மெய்யன்புடன் சிவபூஜை செய்த பலனைக் கொடுத்தருளல் வேண்டுமென வேண்ட "அவ்வாறே ஆகுக" என வரங்கொடுத்து மறைந்தருளினர் சிவபெருமான். ஆதலால் விதிப்படி புண்ணிய தீர்த்தங்களில் முழுகி சிவத்தியானஞ் செய்து கொண்டு கிரிப்பிரதக்ஷிணம் வந்து மற்றைய தீர்த்தங்களில் முறையாய் முழுகி வாணதீர்த்தத்தில் சங்கற்பபூருவமாக மூழ்கி, சிவாசாரியரிடத்து வைதிககமோக்தமாகத் தீக்ஷைபெற்ற நெறிப்படி அத்தீர்த்தக்கரையில் சிவபூஜை ஒருநாள் செய்தவர்கள், நூறு வருஷம்

வாணலிங்க பூஜை செய்த பலனை அடைவார்கள். ஆன்மார்த்த பூஜையை வாணதீர்த்தக் கரையிற் செய்து ஆலயவலம் வந்து உமையொருபாகர் முருகர் தரிசனஞ் செய்து உத்தமராகிய சிவவேதியர்களுக்கும் சிவவேடத்தினர்க்கும் அன்னமளித்து இயன்ற தக்ஷிணை கொடுத்து வணங்கினோரைக் கண்ணுற் கண்டவர்களும் நற்கதி பெறுவார்கள். மாசிமாத அமாவாசை முதலாகிய சிவராத்திரி முதற்கொண்டு பங்குனிமாச அமாவாசை தினமீறாகப் பிரதிதினமும் வாணதீர்த்தத்து மூழ்கி விரதமாகச் செங்கோட்டு மலையிலே தர்ப்பசயனஞ் செய்து பஞ்சாக்ஷர முதலிய மகாமந்திரங்களை ஜபித்து வருவோர்களது தன்வழி தாய்வழி தந்தைவழி என்னும் மூவேழு இருபத்தொரு தலைமுறைப் பாவங்களெல்லாம் நீங்கும். மேலாகிய சிவபத்தியும் உண்டாகும். இயலாவிடின் சிவராத்திரியிலேனும் வாணதீர்த்தத்து மூழ்கி அக்கரையில் சிவபூஜை செய்து பஞ்சாக்ஷர ஜபஞ் செய்து, நான்கு சாமத்தினும் உமையொருபாகரைத் தரிசித்து ஆதியந்தமற்ற பரமேசுவரருடைய திருவிளையாடலாகிய பத்திநூல்களை ஓதி பிறருக்குச் சொல்லி, பிறர் சொல்லக் கேட்டு விஷயாதிகளில் மனதைச் செலுத்தாது ஒரு நிலைகொண்டு துயில் நீத்து காலை ஸ்நானஞ் செய்து சிவதரிசனஞ் செய்பவர் சிவகணத்தலைவராவர். அன்று அம்மலைமீது மங்கிய விளக்கைத் தூண்டியவர்களும் அபிஷேகத்துக்குக் கரும்பு தட்டிக் கொடுத்தவர்களும் யமனைத் துரத்தியடிப்பார்களென்றால் அபிஷேகம் செய்து தரிசித்தோர் பலனை யாவரே உரைக்கவல்லார் என்றார் சூதமுனிவர்.

## தேநுதீர்த்த மான்மியம்.

சைவத்திருநீறு சண்ணித்த முனிவர்களே! தேநுதீர்த்த மகிமையைக் கூறுகின்றேம் அன்புடன் கேட்பீர்களாக. அந்நாளிலே காமதேநு ஒப்புயர்வற்ற முப்புராரியை முப்பொழுதுந் துதித்து மேருகிரியின் ஐந்துநாடிகளைப் பெற்று வந்து கொங்குமண்டலத்தில் நாகநாடிக்கொடிமுடி தாபித்து நாககிரியில் தன் பெயரால் ஒருதீர்த்தமுண்டாக்கிற்று. புண்ணிய தீர்த்தங்களை ஆவாகித்து அத்தீர்த்தத்தில் முழுகினவர்களுக்கு நல்லபலன் கொடுக்குமாறு சிவபெருமானைப் பிரார்த்தித்து வரம் வாங்கியது அந்தத்தீர்த்தம். அந்தத் தேநுதீர்த்தத்தில் முழுகிப் பரிசுத்தமாகிய பாலால் உமையொருபாகரை அபிஷேகித்து மிருகமத கர்ப்பூர முதலியன விரவிய வாசனை மிகுந்த

* மேற்குப் பாலாற்று என்பர்.

சந்தனமுஞ் சாத்திய பின்பு சர்க்கரை விரவிய பாலமுதம் குளிர்ச்சி யுடைய அந்தத் தேநு தீர்த்தத்தில் சமைத்து அன்புடன் நைவேத்தியஞ் செய்து வாழ்த்தி மறைமொழி வேதியத் துறவியர் மகேசுவரர் முதலியோர் புசிக்குமாறு கொடுத்தவர்கள் மாதர்களை மைந்தர்களைப் படைத்து இவ்வுலகத்தை ஆண்டபின்பு தாங்கள் விரும்பிய பதங்களைப் பெறுவார்கள். அத்தீர்த்தக்கரையில் பூஜைசெய்து விதிப்படி ஒரு பசு தானஞ் செய்தவர்கள் கோடி கோதானஞ் செய்த பலனைப் பெறுவார்கள். விருஷபமாசத்தில் இத்தீர்த்தத்தில் முழுகி கிரிப்பிரதக்ஷிணம் புரிந்து உமையொருபாகரைப் பூசித்தவர்கள் தேவேந்திர பதத்தைப் பெற்று வாழ்வார்கள். நீரழிவு, மத்தகாசம், அரோசிகம், காமாலை, மஹோதரம், குஷ்டம் முதலிய நோயுள்ளோர் இத்தீர்த்தத்தில் முழுகி அருந்துவராயின் நோய் அகன்று மேனி ஒளிபொருந்தி மனக்களிப்புற்று இம்மையில் வாழ்ந்திருப்பர்.

வசிஷ்டரிடத்திருந்து பல அரசர்களை மாய்த்தகுற்றம் போகுமாறு மூழ்கிய காமதேனு தீர்த்தத்தில் முழுகிக் காமதேனுவைத் தியானித்து உமையொருபாகரைப் பூசித்தவர்கள் மேலாகிய பதத்தை அடைவார்கள் என்றார் சூதமுனிவர்.

## † க்ஷீரதீர்த்த மான்மியம்.

ஒடுங்கும் மனம் பெற்ற உத்தமர்களே! அழகிய தேனுதீர்த்த மகிமையைச் சொன்னோம். வடகீழ்ப் பாரிசத்திலுள்ள பரிசுத்த வெண்ணிறமுற்ற க்ஷீரதீர்த்த மகிமை சொல்கின்றோம். பணிமலையைப் பிரதக்ஷிணம் புரிந்து இப்பாற்சுனையில் மூழ்கி பிதிர்வினை புரிந்து பெரியோர்களுக்கு இயன்றன உதவி உமையொருபாகரை வணங்குவோர் நல்லபலனை அடைவார்கள். இத்தீர்த்தம் விஷம் ஷோகை முதலியவற்றை நீக்கும். பிலத்துவார வழியாகப் பார்வதிதேவியார் இங்கு எழுந்தருளிய காலத்திலே சுப்பிரமணியர் அன்புடன் சமீபத்துச் சென்றார். அம்மையார் ஆவலுடன் இளைய குமாரனைத் தழுவியகாலத்து உலகமாதாவாகிய உமாதேவியார் அமுதகும்பதனத்தினின்றும் பாலூறிப் பீர்வழிந்தது. அந்த அமுத ஞானப் பாலூறி வழிந்து தங்கியதே இத்தீர்த்தமாகும். காவிரி யமுனை முதலிய நதிகள் தைமாசத்தில் அத்தீர்த்தத்து வந்துபடியும். பரிசுத்தத் தன்மையில் அத்தீர்த்தத்துக்குச் சமானமாகிய தீர்த்தம்

† கிழக்குப் பாலூற்று என்பர்.

வேறொன் றிருப்பதாகச் சொல்வதற்கிடமின்று. உபமன்னியுவுக்காகப் பரமேசுவரர் பாற்கடலைக் கொடுத்ததுபோல பார்வதி தேவியார் குமாரருக்கு இத்தீர்த்தத்தை அருளியதாக நினைக்கவேண்டும். உமை யொருபாகரின் திருமேனி வண்ணம் போல வெண்ணிறமாக விளங்கும் இந்த க்ஷீர தீர்த்தத்தால் குமாரருக்கு அபிஷேகிப்பது உத்தம பலனாகும். காவேரி அந்தர்வாகினியாக இதிலமரும். இத்தீர்த்தக் கரையில் கோதானம், பூதானம், கன்னிகாதானம், அசுவதானம் சுவர்னதான முதலியன செய்வோர்கள் நற்பலனைப் பெறுவார்கள் என்றார் சூதமுனிவர்.

## ஷண்முகதீர்த்த மான்மியம்.

தெய்வநீறு பூசிய சிவயோகிகளே! க்ஷீர தீர்த்த மகிமை சொன்னோம். ஷண்முக தீர்த்தமான்மியம் கூறுகின்றோம் கேளுங்கள். கேகயதேசத்திலே தன்மஜன் என்னும் பெயருடைய வேந்தன் நீதி முறையாக ஆண்டு வந்தான். செவிகளில் அணிந்திருக்கும் தாடகங்களைத் தாக்கும் வெண்மை கருமை, செம்மை, அகலம், நீளம், ஒளி, என்னும் அறுவகை இலக்கணங்கள் அமைந்த கண்களையுடைய நூறு மாதர்களை விதிப்படி மணம் புணர்ந்தான் ஒருத்திக்கேனும் குழந்தை இல்லை. மலடென்னும் வசைச் சொல்லுக்கு ஆளானோமே! குழந்தையில்லாத மனைவாழ்க்கையும் ஒரு வாழ்க்கையோ என மனைவியர்களும் அரசனும் பலவாறு துக்கித்து ஈசுரத்தியானம் புரிந்து பலவிதமாகிய தானதருமங்களைச் செய்துவரும் நாளில் பட்டமஹஷிக்கு ஒரு ஆண் குழந்தை ஜனித்தது. அநேக தானதிகளைச் செய்து சந்திரகுமாரன் என்று பெயரிட்டு மிகவும் அருமையோடு வளர்த்து வந்தார்கள்.

ஒரு நாள் பகலிலே நவரத்தினப் பொற்றொட்டிலில் வைத்துப் பாராட்டி உல்லாசமாக விளையாட்டுக்காட்டி வரும் போது, துடி துடித்து விம்மி விம்மி அக்குழந்தை அழுதது. குழந்தையை எடுத்து மார்பிலணைத்துத் தங்கக் கலசத்தில் நீலமணிபோன்ற முலைக்காம்பைப் பவளக்கரணைபோன்ற தங்கள் இருவிரலால் இடுக்கி ஆம்பல் மலர் போன்ற அக்குழந்தை வாயில் வைக்கவும் பாலருந்தாது வீறிட்டழவே நூறு தாய்மார்களும் பலதாதிமார்களும் எத்தனையோவிதமாக உபசரித்தும் சிறிதும் அடங்காது அழுவதைக் கண்டு பூதசங்கையாக இருக்குமோ! மற்று யாதோ என வருந்தி வாடுங்காலத்திலே தொட்டிலைப் பார்த்தபொழுது அதில் ஒருபுறம் பவளமணிகளைக் கோர்த்து முனையில் நீல ஊசி வைத்தது போலக் கொடுக்கைத் தூக்கிக்கொண்டி

ருக்கக் கண்டு இக்கொடிய தேள்தான் கொட்டிவிட்டதென்று தேறியும், குழந்தை அழுகைக்காற்றாது தனித்தனி ஒவ்வொரு வரும் தேள் கொட்டி விஷமேறியவர்களைப் போலவே அலறினார்கள். இவ்வாறு நூறு இராஜமஹிஷிகளும் தோழிமார்களும் அரற்றும் ஓசை பெரிய அழூமோசையாயிற்று. தருமஜகன் அத்தாணிமண்டபத்திருந்து இராச்சிய விசாரணை செய்யும்பொழுது இந்த அழூமோசை கேட்டு இது யாது அறிந்து வருக என மந்திரிகளை அனுப்ப மந்திரிமார்கள் ஓடோடியும் பார்த்து வந்து ஐயா, எங்கள் இளவரசராகிய குழந்தை கொடிய தேள்கொட்டித் துடிக்கிறது. அதனைச் சகியாது இராஜபத்தினிமார்களும் தாதியர்களும் அந்தப் புரத்திலே புலம்பும் ஓசை என்றறிவித்தவுடனே அங்குள்ள மணிமந்திர அவுஷத சித்திவாய்ந்தவர்களைக் கொண்டு ஒரு நிமைப்போதில் குணப்படுத்தி விட்டார்கள்.

அரசன் அங்கு வீற்றிருக்கும் வேதியர் முதலிய பெரியோர்களை நோக்கி மாதவர்களே ! நானோ விருத்தாப்பியனானேன். நூறுமனைவிமாரும் முதிர்ந்த வயசுவாய்ந்தவர்களாயினார்கள். எனக்குள்ள ராச்சிய நிர்வாகஞ் செய்யவோ ஒரு பிள்ளை இருக்கின்றான், "ஒருமரம் தோப்பாகாது" என்றமைப்போல ஒரு பிள்ளைபெற்றது பிள்ளைப் பேறாகமாட்டாது என்ற நியாயமிருப்பதால் வேறு பிள்ளைகளில்லை. நூறு மனைவிகளில் மற்றையதொண்ணூற்றொன்பதின் மரிடத்தும் ஒரு குழந்தையேனும் ஜனிக்கவில்லையே என் செய்வேன் தேள் கொட்டக் குழந்தை அவஸ்தைப்பட இப்பொழுது மெத்த யோசனைக்குள்ளானேன் என்று பிரலாபிக்கும் வேந்தனை நோக்கி மகாஞானவானாகிய ஒரு வேதியன் ஓ! அரசனே நீர் நூறுபிள்ளைகளைப்பெறுவீர். அவர்கள் உலகத்தை ஆள்வார்கள் பயப்படவேண்டாம். சேஷகிரி எனப்பிரசித்திபெற்ற ஒரு திவ்யஸ்தலம் இருக்கின்றது. அங்கேயுள்ள ஷண்முக தீர்த்தத்திலே பத்தினிமார்களோடு விதிப்படி முழுகி உமையொரு பாகரைத் தரிசிப்பீராக என்று மொழிந்தனர். கசடறக்கற்ற அந்தணர்களும், சேனைகளும் சூழ அரசன் தேவிமார்களோடு திருநாககிரியை அடைந்து ஆறுஞ்சுனைக்கரை சேர்ந்து விதிப்படி முழுகி அர்த்தநாரீசுவரர் பாதசேவை புரிந்து புத்திரகாமேஷ்டி யாகம் புரிந்தான். யாககுண்டத்துத் தோன்றிய சுதை அமுதத்தை நூறுபெண்களுக்கும் பகிர்ந்து கொடுத்து நித்தியமும் நியமத்தோடு ஷண்முகதீர்த்தத்து மூழ்கி அம்மையப்பர் குமாரதேவர் தரிசனஞ் செய்து வந்தார்கள். ஈசுவரகிருபையால் நூறு பெண்களுக்கும் தனித்தனி ஒவ்வொரு ஆண் குழந்தை பிறந்தது. இவ்வரத்தாற்பிறந்த நூறு குமாரர்களும் முன்

னுதித்திருந்த ஒருவனுமாக நூற்றெருபிள்ளைகளுக்கும் இராச்சியங்களைப் பகிர்ந்து கொடுத்து சந்திரகுமாரன் என்னும் மூத்தவனுக்குப் பட்டாபிஷேகம் புரிவித்து, அன்புடனே திருச்செங்கோட்டுக்கு வந்து ஷண்முகதீர்த்த முதலியவைகளில் மூழ்கிச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு சிவகைங்கரியங்கள் பல செய்து சிவபத்திமேலீட்டினுல் சிவபூஜை எழுந்தருளச்செய்து கொண்டு சத்காலம் போக்கிக்கொண்டு சிவானந்தப் பெறுவாழ்வு பெற்ருன்.

சுப்பிரமணியக்கடவுளால் ஆக்குவித்த இத்தீர்த்தத்தில் தேவர் முனிவர் சித்தர் வித்தியாதரர் முதலாயினேரும் மேலோர்களும் நீங்காமலிருப்பார்கள். இதிலே அன்பினேடு முழுகினேர் பாவங்கள் நீங்கும். புத்திரோற்பத்தி உண்டாகும் இஷ்டகாமியம் பெறலாகும். முருகர் திருவருளும் உமையொருபாகர் திருவருளும் சித்திக்குமென்ருர் சூதமுனிவர்.

## சர்வதீர்த்த மான்மியம்.

மலவலி தொலைத்தமாதவர்களே! இஷ்டகாமியசித்தியருளும் சண்முகதீர்த்த மான்மியம் கூறினேம். தீர்த்தராஜன் என்றும், தீர்த்த சேகரன் என்றும் தேவர்களால் துதித்தோதவல்ல சர்வதீர்த்த மான்மியம் கூறுகின்றேம். அந்தச் சர்வதீர்த்தம் நாககிரி உச்சியின் வடகீழ்ப் பாரிசத்தில் உள்ளது. அந்த நாககிரி சிவசொரூபம். சர்வதீர்த்தம் விஷ்ணுசொரூபம். சிவபிரானுக்கு "அரியலாற்றேவியில்லை" என்றவாறு நால்வகைச் சத்திகளுள் ஆண்சத்தி திருமாலாதலால் அந்தச் சர்வதீர்த்தகங்கை உலகங்களிலுள்ள முப்பத்து முக்கோடி தீர்த்தங்களும் ஒருங்குறச் சேர்ந்த மாநிலத்தார் பாவங்களைப் போக்குதற்கே எம்பெருமானல் அனுக்கிரகிக்கப்பட்டுள்ளது அந்தச் சர்வதீர்த்தம். அந்தச் சர்வதீர்த்தம் நெருங்கிய இடமெல்லாம்தேவர்கள் முனிவர்கள் விஞ்சையர், வித்தியாதரர், சித்தர் முதலாயினேர் கூடி முழுகுவோரும், கரையோரங்களிற் சிவபூஜை செய்வோரும் பஞ்சாக்ஷரஞ் செபிப்போரும், யோகம் புரிவோரும், பாராணஞ் செய்வோருமாக இருப்பார்கள். அந்த நாககிரியிலுள்ள எந்தத் தீர்த்தத்தருகு செல்லினும் நியமமாக விபூதிதரித்து மெதுவாக நடந்து தெய்வவிசுவாசமுள்ள வார்த்தைகளைப் பேசி மிகுந்த ஒடுக்கமாகச் செல்லுதல் வேண்டும். சர்வதீர்த்தத்தில் முழுகிப்பலனடைய வேண்டி அன்பினேடு முறையாகக் கிரிப்பிரதக்ஷணஞ் செய்து சர்வதீர்த்தத்து மூழ்கி உமையொருபாகரைத் தரிசனஞ் செய்தவர்கள் எல்

லாத் தீர்த்தங்களினும் முழுகிய பலனை அடைவார்கள். அங்கே சென்று முழுக உண்மையில் இயல்பற்றவர்கள் தாங்கள் செல்வதற்கில்லாத நிலைமையைக் கருதி உண்மையோடு வருத்தப்பட்டு உலகீன்ற தாயாரை இடத்தே கொண்ட சிவக்கொழுந்தை இதயத்திருத்தி சர்வ தீர்த்தத்தை நினைந்து இதுவே சர்வதீர்த்தம் என்று தாமிருக்குமிடத்துள்ள வாவி கூப நத நதிகளை மதித்து விதிப்படி ஸ்நானஞ் செய்தவர்கள் சர்வதீர்த்த மாடிய பலனை அடைவார்கள். அந்தச் சர்வதீர்த்தத்தைப் பரிசித்தோர் உட்கொண்டோர் பலனையும், தீர்த்தமாடவேண்டுமென்று வந்து சேர்ந்தோர் பலனையும், மூழ்கினவர் பலனையும், தர்ம தானஞ் செய்தோர் பலனையும் இத்துணைத்தென்று என்னாலும் பிறராலும் சொல்லி முடியாது. பிறவிப்பெருங்கடலைக் கடக்கும் தெப்பமாகுமென்று இத்தீர்த்தத்தைச் சொல்லலாம். இதின்பலனை ஆதியந்தமில்லாத பரமேசுவரர்தான் சொல்லக்கூடுமென்றார் சூதமுனிவர்.

## அக்கினிதீர்த்த மான்மியம்.

அமலபோதாநந்த அருந்தவர்களே! நான்கு வேத இரகசியங்களையும் ஐயந்திரிபறக்கற்றவனும், காமாதி ஆறுகுறும்புகளை அடக்கியநற்றவனும், இல்லறச் சிறையும், விச்சுவாநரன் என்னும் பேரையும் கொண்டவனுமாகிய ஓர் அந்தணன் சராசரப்பொருள்களை ஆக்கி ஆண்டு அழிக்கும் முத்தொழிற்கும் மூலகாரணராகிய எம்பெருமானைக் குறித்து சாந்திராயணம் கிரிச்சர முதலியவற்றையும், பற்பலயாகங்களையும், தலதீர்த்த யாத்திரைகளையும் செய்து மெய்யன்போடு அம்மையப்பரைப் பூசித்து உள்ள முருகி வருந்தி திருவளை எதிர்நோக்கி ஏங்கியிருக்கும் காலத்துக் காளகண்டமூர்த்தி பிரசன்னராய் அன்பனே! நின் அன்புக்கு மகிழ்ந்தேம். யாதுவேண்டினை? என்றனர். உயிர்க்குயிராயிருக்கும் மெய்ப்பொருளே! தேவரீர் அறியாதனவு முளவோ? என்று அடிவீழ்ந்து மயிர்க்கூச்சிட்டு கண்களில் நீர் சொரிய நாக்குழறத் தோத்திரம் புரிந்தனன். "அன்பும் பொறையுமுள்ள அந்தண! நீ இதயத்திற்கருதிய வாறு ஒரு ஆண்மகவு பிறக்கும். தேவர்கள் போற்ற என்போன்றவனென்று ஆய்ந்தோர் கூறுவர், கிரகபதிஎன்று நாமமிடுவாயாக" எனக் கட்டளையிட்டு மறைந்தனர். மனமாசற்ற மாத வேதியன் கற்பிளங்காதலி கருப்பமுற்று குருகேந்திர மேறிய நல்ல முகூர்த்தத்தில் ஆண்மகவினை ஈன்றனள். தேவர் முனிவர் முதலியோரெல்லாம் அகமகிழ்ந்து பூமாரி சொரிந்து அம்மகப் பேற்று வீடுவந்து சேர்ந்தார்கள். விதிப்படி ஜாதகர்மஞ் செய்து பதினொராம்

நாளிலே கிரஹபதி என்று நாமகரணமுஞ் செய்து பிரமா முதலிய தேவர்கள் தத்தம் வாசஸ்தானம் சேர்ந்தார்கள். ஐந்தாம் ஆண்டில் உபநயனம் புரிந்து வேதாப்பியாசம் ஆரம்பிக்க, வெகுசீக்கிரம் பிரஹஸ்பதியோ என்று ஆச்சிரியப்படுமாறு வேதங்களை யெல்லாமறிந்து வாழும் நாளில் மகதியாலேந்திய நாரதமுனிவர் அவ்விடமணுகி விச்சுவாநரனுபசரிக்க விருந்து, அருமதலையாகிய கிரஹபதியின் அவயவ லக்ஷணங்களைப் பார்த்து இவன் விசேஷமாகிய பதவியைப் பெறக்கூடியவன் என்றார். இம்மொழிகேட்டவுடன் கரையழிந்த சந்தோஷமுற்றார்கள் பெற்றோர்கள் என்று சொல்லவும் வேண்டுமோ! பின்னரும் சிரித்து நோக்கிய நாரதர் இவ்வளவு இலக்ஷணங்களோடு கூடிய பிள்ளையாயினும் பன்னிரண்டாம் வயசில் இவன் மீது இடிவிழும் அதனை மாற்றிக்கொள்ளும் மார்க்கத்தைத் தேடிக்கொள்ளுங்கள் என்று முனிவர் சென்றனர். பெற்றோனாகிய விச்சுவாநரன் தன் மீது இடி விழுந்தது போலத் திடுக்கிட்டு குழந்தையை இறுகத் தழுவிக் கொண்டு அந்தோ தெய்வமே வெகுநாள் குழந்தையின்றித் தவநோற்றுப் பெற்றேனே! தேவர்களும் மகிழத்தக்க கல்வி அறிவு ஒழுக்க முதலியனவும் வடிவும் பெற்றவனாகவந்தானே! இப்படிப்பட்ட குழந்தையைப் பன்னிரண்டு வயசுவரைக்கும் வளர்த்து யமனுக்கு ஆகாரமாகவோ கொடுப்பேன்! கொடியபாதகனாகிய எனக்கு ஏன் இந்தப் பிள்ளையைக் கொடுத்தாய்! இந்தப் பிள்ளை நான் காண இறந்துவிட்டால் பின்னர் எனக்கும் என் முதியோருக்கும் பிதிர் கருமம் புரிந்து நரகு செல்லாது தடுப்பவர் ஒருவருமில்லையே என்று கதறும் பிதாவை நோக்கி கிரஹபதி என்னும் சிறுவன் கூறுகின்றான்.

அரியதவங்கிடந்து என்னைப் பிள்ளையாகப் பெற்ற ஐய! சாமானியர்களைப்போலத் தாங்கள் ஏன் வருந்துகின்றீர்கள். கல்வி கற்பதும், பெரியோரிடஞ் சகவாசம் புரிவதும் யாதுக்காக? துயரப்படுவதால் துக்கம் நீங்குமோ? புருஷர் ஆயுசு நூறு என்பது சாஸ்திர சம்மதந்தானே. அவ்வாறிருக்க, காயாசித்தியடைந்து பல்லாயிரவாண்டு உயிர் வாழ்வோர் இல்லையா? பன்னிரண்டாம் ஆண்டில் இடிவிழுவதாகவே பிரமன் விதித்திருக்கினும் அதை அகற்றிக்கொள்ள ஒரு வழியு மில்லாமற் போயிற்றோ! அவன் அசையாமல் அணுவசையாது என்னும் முதுமொழி பொய்த்துப் போமோ? அவனருளிருந்தால் இடிவந்து விழுமோ? “சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கபாய மொருநாளுமில்லை” என்றறுதியிட்ட வாக்கியம் சத்தியமானதன்றோ! அவ்வாக்கியார்த்தத்தைப் படித்தால் இடிவீழும் அபாயம்

நீங்காதோ? பெண்பாலர் போல வீண்வியாகுலம் என்படுகின்றீர் பிதாவே என்று அதிதீரபத்தியை வெளியிட்டான்.

செல்வக்குமாரனது மனத் தைரியத்தையும், பழுத்த பத்தியையும், அருமை வாய்ந்த இரகசிய விஷயங்களையும் ஆலோசித்துச் சந்தோஷ முற்றவராய் அப்பா குழந்தாய்! தேவர்களெல்லாம் அடியோடே அழிந்து போகும்வண்ணம் எழுந்த விஷத்தை அடக்கிய நீலகண்டருக்கு இவ்விடியை அகற்றுவது அரிதன்று. ஆதலால் அம்முப்புரஞ் செற்ற ஒப்பிலாதவனைப் போற்றி இவ்வபாயத்தினின்றும் நீங்கிக் கொள்வாயாக என்று ஆசீர்வதித்தனர். பிதாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற கிரஹபதி என்னும் மறைப்புதல்வன் தந்தையை வணங்கி விடைபெற்றுக்கொண்டு எம்பெருமான் எழுந்தருளிய பலமூர்த்தி தலதீர்த்த தரிசனஞ் செய்துகொண்டு எல்லா வுயிர்களுக்கும் ஆதித்தாய் தந்தையாமே என்னும் குறிப்புத் தோன்ற உமையொருபாகராக எழுந்தருளியிருக்கும் நாககிரிக்கு வந்து ஒப்பற்ற தீர்த்தங்களில் விதிப்படி மூழ்கி பாற்றிருமேனிப் பரமனைப் பணிந்து போற்றித் தவங்கிடக்குநாளில் இடிவீழும் நாள் வந்தது, அன்று அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத்தை அன்பினோடு அர்ச்சித்துக்கொண்டிருக்கும் சிறுவன் முன்னர் இந்திரன் வந்து ஓ சிறுவ! உன் தவத்துக்கு மெச்சினேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றனன். சிறுவன் விழித்துப்பார்த்து, பிரமா திருமால் முதலாயினோரையுமே நான் கருதவில்லை. சிவனடியார்களுக்குக் கிடைக்காத பொருள் என்ன இருக்கின்றது? சிவபத்தி பழுத்தோரை வணங்கத்தக்க நீ என்ன கொடுக்க வல்லை? என்றனன். இவ்வார்த்தைகளைக் கேட்ட இந்திரன் துடித்து சந்திரசேகரன் என்னைவிட வலியனோ? சிறு குழந்தையாதலின் அவ்வாறு கூறினை. யாது வேண்டினும் கொடுக்கின்றேன் கேள் என்று பின்னரும் புகன்ற இந்திரனை நோக்கி அர்த்தராத்திரியில் ஆள்மாறாட்டமாக அகலிகை கற்பை அழித்த கள்ளப்பயலே, உள்ளீடற்ற வார்த்தையை என்னிடத்தில் உளராதே. ஆதியந்தமற்ற இறைவனிடமன்றிச் செத்துப் பிறக்கும் உன்போலொத்த தேவர்களிடத்திலா வரங்கேட்பேன் போ! போ! என்ற சிறுவன் மேலே கோபித்து மின்னொளிகொண்ட வச்சிராயுதத்தை உருவி இடிமுழக்கமுறச் சிறுவன் மேல்விட மதலைகண்டு அயர்ந்து வீழ்ந்தனன். அந்த க்ஷணமே உமையொருபாகர் தோன்றிச் சிறுவன் மேனியை அருமைவாய்ந்த திருக்கரத்தால் தடவலும், துயில்நீங்கி எழுந்தவன் போலச் சிறுவன் எழுந்து கண்ணில் ஆனந்தவாரி சொரியப் பணிந்

தெழுந்து பரவசனைகத் தோத்திரிக்கும் கிரஹபதியை நோக்கி அப்பா சிறுவ! உன் மனதிட்பத்தைக் காட்டுமாறு இந்திரனாக வச்சிராயு தத்தை வீசினேன் எனது அன்பர்களுக்கு இடுக்கண்புரிந்து வாழ் வோர்யார்! நீ பயப்படாதே! இந்திரன்பதிக்கும் யமன்பதிக்கும் மத்தியில் வைசுவாநரன் என்னும் அக்கினிதேவனாக வாழ்ந்திருப் பாய் என்று திருவருள் பாலித்துத் தேவர்கள் வணங்கத் திருமுடி சூட்டி உன்பிதாவினோடு சென்றிரு என்றோதி கோவிலில் எழுந்தரு ளினர். கிடைத்தற்கரிய பெறும்பேற்றால் உள்ளம் நைந்து சந்தோஷ முற்றுத் தன் பெயரால் ஒரு தீர்த்த மமைத்தனன். அத்தீர்த்தத்திற் படிந்து இறைவனை வணங்கினோர்க்கு அக்கினி பயமும் இடிவீழ் அவ மிருத்யுவும் நீங்கும். தயிர், நெய், பாற்பசு மேலோர்களுக்குதவி னோர் தீராதபாவங்களி னின்றும் நீங்குவர் என்றார் சூதமுனிவர்

## யமதீர்த்த மான்மியம்.

மனமடங்கப் பெற்ற மாதவர்களே! பாவனமாகிய அக்கினி தீர்த்த வரலாறு கூறினோம். யமதீர்த்த மான்மியம் கூறுகின்றோம்.

பூருவ காலத்தில் மனுநீதி தவறாது மணிமுடி புனைந்து சுவேதன் என்னும் அரசன் தரணிபுரந்து வந்தான். செல்வம், இளமை தேக நிலையாமை முதலியவற்றை நன்குணர்ந்து மணிமுடி நிறுத்திச் சடை முடிதாங்கிப் பிறையணி பெம்மானைப் பூசித்து வரும் நாளில், கணித நூலார் குறித்த நிரியாணநாள் இது என்று செவ்வனே தெரிந்தான் முறைப்படி நியதிமுடித்து பத்திரபுஷ்பாதிகளில் சிவார்ச்சனை செய்து எம்பெருமான் திருவடிகளை உள்ளத்தே இருத்தி இரு கண்களையு மூடித் தன்னையவனாக அத்வைதமாகப் பாவித்து நிற்குஞ் சமயத்தில் கொழுத்துப்பருத்த எருமைகடாப் பிடரியின்மீது ஏறி மின்னொளி காலுஞ் சூலமேந்தி இடி முழக்க முண்டாகும்படி காலதண்டத்தைச் சுற்றிக்கொண்டு இதழை அதுக்கிய பற்கள் வெள்ளெனத் தோன்ற யமபடர்கள் சூழ ஆர்ப்பரித்து யமன் வந்தான். சுவேதன் கண்டும் அஞ்சாதவனாகித் தான்மேற்கொண்ட சிவபூஜாத்தியானத்தில் நெக்கு நெக்குருக அன்புமிகுந்து பூசித்து வந்தான். சிறிதும் அஞ்சாதும் ஒரு பொருட்படுத்தாதும் சிவபூஜையே பிரதானமாகச் செய்பவனை நோக்கி அடா பேதாய்! பிரமன் அச்சுதன் மற்றைத் தேவர்கள் சித்தர்வித்தியாதரர் முதலாயினோரும் என் கைப்பாசத்தால் உயிரிழந் தார்களென்றால், கேவலமனிதனாகிய நீயா என் பாசத்தை விலக்க



அக்கினி பூசித்தல்.

T. 6849

வல்லவன் என்று சீற்றங்கொண்டு படபடத்து மீசை துடிக்கப் பாசத்தை வீசினன். இத்தேகமுள்ளவரையிலே சிவலிங்க பூசை செய்" என்ற குருவுபதேசம் பெற்றுச் சங்கற்ப பூருவமாகப் பூசியாது விளையாட்டாகவும் வஞ்சகமாகவும் பொருளாசை கொண்டும் பூசிப்பவர்களையும் கைவிடாது காப்பாற்றும் கறைமிடற்றண்ணல் கடையேனைக் கைநழுவவிடமாட்டார் என்னும் நம்பிக்கை கொண்டு மகிழ்ச்சியோடு சிவார்ச்சனை செய்தான். யமன் மிகவும் துடித்துச் சிவபூஜகன் சமீபத்துச் சென்று சூலஞ் சுற்றி இடிமுழக்கம் போலக் கர்ச்சித்தான் இதனை நோக்கிய சுவேதன் அன்புபெருக சங்கரமகாதேவ! மாலயன்காணு மலரடிமுடியா! காமதகனு! திரிபுரதகனு! ஸ்ரீ அர்த்தநாரீசா! எனவும் ஆயிரம் தலையும் ஆயிரம் வலிய புயமுமுற்ற பரமேசுவரர் ஆயிரம் சூரியர்கள் உதயமானதுபோல வெள்ளிய விருஷபரூடராய் மலைமாது ஒருபுறம் விளங்க எழுந்தருளினமையைத் தேவர்கள் கண்டு மலர்மாரி தூவினர்கள். எம்மையாட்கொள்ளும் கருணாநிதியும் சுவேத! அஞ்சேல்! அஞ்சேல்! என அபயமீய்ந்து சூலாயுதத்தைச் சுழற்றி எழுந்தருளுவதைக் கண்டு எருமையோட்டும் கையும் உள்ளமும் திடுக்கிட்டு ஆவிதுறந்து யமன் கீழே விழுந்தான். சிவ! சிவ! ஹர! ஹர! என்று கண்ணீர் வார மெய்சோர நாக்குழற நடுங்கி ஒடுங்கி நிற்கும் சுவேதனை அருளால் நோக்கி கணங்களுக்குத் தலைவனும் பதத்துக்கு முடிசூட்டி அளவில் செல்வத்தையும் அளித்தார் பரமேசுவரர். இடப்பாகத் தமர்ந்த உமாதேவியார் சுவாமி! தேவரீர் பூஜாபலத்தாலடைந்த உத்தியோகத்தைக் கொண்டவன் யமன். அவன் தொழிலைச் செய்தான். ஆனால் யோசித்திருக்க வேண்டியது. தவறிவிட்டான். அப்பிழையை மன்னித்து ஏழையாகிய எமன் ஆவி பெறும்விதம் கருணை புரிதல் வேண்டுமென இரந்த அர்த்த சிவாம்பிகை வேண்டுகோளுக் கிரங்கி உயிர் கொடுத்து அம்மயப்பர் மறைந்தருளினர். யமன் சுவேதனை வணங்கிச் சென்றனன். யமன் தன் நகர் நோக்கிச் செல்லும் மார்க்கத்தில் நாரத முனிவர் கண்டு குசலம் வினவி விவரமறிந்து கூறுகின்றார். ஓ காலா! நல்வேளை யுள்ளதால் பிழைத்து வந்துவிட்டாய் ஆயினும் "பத்தர்கள் சித்தர்கள் பரமஞானிகள் சித்தங் கலங்கிடத் தீவினை மீண்டிடும்" என்பதால் சிவனடியார்களை அவமதித்த குற்றம் உன்னை விட்டு நீங்காது. பரமேசுவரர்க்கு அபசாரம் புரியினும் தப்பித்துக் கொள்ளலாம். சிவனடியார்களால் எய்திய வல்வினை நீங்காது; அடிக்கடி இந்தச் செய்கை உன்னிடத்து ஜனிக்கின்றது. இதனை நீக்கிக்

கொண்டால் மாத்திரம் சிலநாளேனும் சமஞ்வதி அதிகாரஞ் சித்திக்கு மென்று கூறுதலும் நடுங்கி ஆம்! ஆம்!! என ஒப்புக்கொண்டு முனி புங்கவ! இவ்வினை தீர யாது புரிவேன் என வேண்டும் காலனை நோக்கி அப்பா! தென்னவா! வேறு யாதினுனும் முடியாது. ஈசுவர ஆராதனமே எப்பாவத்தையும் போக்கிச் சுகங்கொடுக்க வல்லதெனு லும் சந்தோஷித்து அவ்வாறே புரிகின்றேன் என்று நமஸ்கரித்து விடைபெற்றுச் சிந்திக்கின்ருன். உலகமாதாவாகிய அம்மையாரது பிரிவினலன்ருே எம்பிரானருளீயந்தது. ஆதலின் அவ் விமயவல்லி இடப்பாகத்தமர்ந்த நாகாசலத்தை அடைந்தே பூசிப்பேன் என்று துணிந்து நாகாசலத்தையடைந்து புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி உமையொருபாகரைப் பூசித்து கருணைக்கடலே! உள்ளம் பெருங் கோயிலாகக் கொண்டிருக்கும் உத்தம அடியார்களிடத்து மாரு அன்புதரும் எம்பெருமானே! அடியேன் அறியாது முன்னர் அவ மதித்த குற்றத்தை நீக்கியருளல் வேண்டுமெனத் தோத்திரித்து வரம் பெற்றுத் தன்பெயரால் ஒரு தீர்த்தம் அமைத்து வணங்கி வைச்சுத பட்டணஞ் சேர்ந்தான். அத்தீர்த்தத்தில் மூழ்கி எள், இரும்பு, பொன், பருத்தி, கம்பளம், எருமைக்கடா எருது முதலியவைகளை பிராமணர்களுக்குத் தானஞ்செய்தோர் அவமிருத்தியு, குட்டநோய், பித்தநோய், என்புருக்கி முதலிய துன்பங்களினின்று நீங்கிக் கல்வி, செல்வம், புகழ் அடைந்து பகைத்த சத்துருக்கள் வணங்க வாழ் வார்கள் என்ருர் சூதமுனிவர்.

## குபேரதீர்த்த மான்மியம்.

சிவபதத்தைச் சிந்திக்குஞ் சீரியர்களே! வடதிசையில் விளங்கும் குபேரதீர்த்த மகிமை மிகுந்த புனிதமானது. கேட்போர் வறுமையை நீக்கிச் சிவஞானச் செல்வத்தைத் தேக்கும். இகத்தில் அகண்டை சுவரியத்தைக் கொடுக்கும். சிவபிரானது அருளுக்கும் பாத்திரமாக் கும். அத்தீர்த்தத்தில் நீராடப் பூருவ புண்ணியவான்களே உரியர். அத்தீர்த்தத்தின் சரித்திரம் கூறிகின்ருேம். கேட்பீர்களாக.

கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில் காம்பீலி தேசத்தில் யஞ்ஞ தத்தன் என்னும் ஒரு வேதியன் ஒழுக்கம், தவம், ஞானமுள்ளோனுய் இல்லறமே நல்லறமெனத் தேர்ந்து பசுபுண்ணிய பதிபுண்ணியங்களின் வலியறிந்து வாழும் நாளிலே நல்லமுகூர்த்தத்தில் ஒரு ஆண்மகவு பிறந் தது. அம்மதலைக்குக் குணநிதி என்று நாமகரணஞ் சூட்டி ஐந்தாம்

ஆண்டில் அக்ஷராப்பியாசமும் உபநயனமும் புரிவித்தான். கல்வி, அறிவு, ஒழுக்கமுதலிய குணங்களோடு குணநிதி என்பான் வளர்ந்து பருவகாலமுரவே ஒத்த சுத்தகுலத்தில் மெத்த அழகுவாய்ந்த கன்னிகையை விவாகஞ் செய்வித்தான். இங்ஙனம் தாய் தந்தையர்க்குக் கீழ்ப்படிந்து வாழும் நாளில், தருமத்தைக் கெடுப்பதும், பகையை விளைப்பதும், தரித்திரத்துக்குத் தூதானதும், பொய்க்குத் துணையானதும், துன்பத்துக்கு வித்தானதும், நரகத்துக்கு வழிகாட்டியானதுமாகிய சூதாட்டத்தில் ஊழ்வினைப் பயனால் ஆசைகொண்டான். கல்வியறிவில்லாரோடு சேர்ந்து இரவென்றும் பகலென்றும் கருதாது சூதாடினன். தான் அணிந்திருந்த காதணி முதலியவற்றைத் தோற்றான். அதனை மீட்பேனென்று வீட்டிலுள்ள அணி, ஆடை முதலிய பொருள்களைக் கவர்ந்து தினந்தோறும் தோற்றுக் கொண்டுபோன பொருளை இழந்தும் அந்தச் சூதினைத் தினமும் மறவான், வேதநெறிகளை மறந்து விட்டான். பிள்ளை எங்கே என்று யஞ்ஞதத்தன் மனைவியைக் கேட்டபோதெல்லாம் வாசிப்பதற்குச் சென்றிருக்கின்றான் என்று பிள்ளைமேலுள்ள அபிமானத்தால் மறைத்துக் கூறுவள். இவ்வாறிருக்கும் நாளிலே பெற்றதாய் குணநிதி என்னும் பிள்ளை முகத்தை நோக்கி அப்பா குழந்தாய்! நீ பிரதிதினமும் சூதாடி உள்ளபொருள்களைத் தோற்று வருகின்றனை. உன் தந்தை இந்த இழிந்த நடக்கையை அறிந்தால் உன்னையும் என்னையும் துரத்திவிடுவர். வேதநெறி தவறாத உன் தந்தையாரின் ஒழுக்கத்தை நீ அறியாதவனா? உன்னோடு ஒத்த நம் வருணத்துப் பிள்ளைகளின் நன்னோக்கங்களை உணர்ந்தும் நீ மாறுபட்டு நடக்கின்றனை. புத்திவரும் என்று சொல்லச் சொல்ல அடிக்க அடிக்கப் பயந்து அதிக முயர்வதுபோலக் கவனிக்காது இருக்கின்றனை. இது நன்றன்று என்று கண்களில் நீர் சொரிந்து துக்கத்தோடு சொல்வதனையும் சிறிதும் கவனிக்கவில்லை. தாசிவீட்டுக்குப் போகின்றவன், கட்குடிப்பவன், வேட்டை யாடுபவன் முதலியவர்களுக்கு எத்தனை நற்புத்தி போதிக்கினும் கேளார்கள், அதிகமே செய்வார்கள் என்பதற்கேற்ப நடந்தான். இதனைக்கண்டு அன்னையார் மனக்கிலேசத்தோடு வருந்தி ஒரு நாள் அயர்ந்து நித்திரை செய்யும்போது மெதுவாக குணநிதி என்பான் தாயார் விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு போய்ச் சூதாடித் தோற்றான். தன் கணவன் கொடுத்த மோதிரம் போனமையைத் தாயார் வெளிப்படுத்தாது விதியை நேர்ந்து துக்கித்திருந்தாள். பஞ்ச மஹாயஞ்ஞங்களையும் தவறாது செய்யும் வேள்வி தத்தன் வீதியில் வரும்பொழுது ஒருவன் அணிந்தி

ருக்கும் மோதிரத்தைக் கண்டு ஐயுற்றுத் தெளிந்து இது என் மோதிர மாயிற்றே உம்மிடம் எவ்வாறு வந்தது என்று கேட்டான். சமஸ்த சாஸ்திரவியுத்பன்ன பிராம்மணோத்தம! இதனை நான் திருடவில்லை. உனது பிள்ளை சூதாடி இம்மோதிரத்தைத் தோற்றான். இதுமாத்திர மன்றிப் பல அணிகளும் ஆடைகளும் தோற்றிருக்கின்றான். குற்ற மற்ற வேதாப்பியாசம் செய்யவல்ல நின் இளம் காளையைச் சூதாட்டத் தில் கைதேர்ந்த சிகாமணி என்று பலர் சொல்வார்கள். இவ்விவரங் களைத் தாங்கள் இதுவரையிலும் அறிந்திருக்கமாட்டீர்கள்போலும் என்று மோதிரமணிந்து எதிர்வந்தவன் சொன்னான், இடிமுழக்கங் கேட்ட புற்றில்வாழ் நாகத்தைப் போல அஞ்சித் தன் மகன் குலவொ ழுக்கத்தினின்று நீக்கிக் கீழ்மக்கள் புரியும் ஈனத்தொழிலிற் பிரவே சித்து அணிந்துகொள்ளும் ஆபரணங்களையும் சூதிலே தோற்ற நிலை மையைச் சிந்தித்து ஒருபிள்ளை என்று கொண்டிருந்த காதல் அகல, வெட்கப்பட்டு வீட்டுக்குப்போய் அழகிய தன் மனைவியாரை நோக்கி அடி பெண்ணே! ஈன்ற சிறுவன் எங்கே என்றான். நீராடுதற்குச் சென்றான் என்று கூற, எண்ணெய் இட்டுக்கொள்ளும் போது என் கைவிரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தேனே அதனைக் கொண்டுவா என்றான். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் மனைவியார் திடுக்கிட்டுப் பயந்து மாத்தியாந்நிகம முடித்துப் போஜனம் செய்யுங்கள் தருகின்றேன் என்றாள். தருமசாஸ்திரத்துக்கு விரோத மாக வருணச் சிரமத்துக்கு உரித்தல்லாத கெட்ட தொழில்களைச் செய் யும் குற்றமுள்ள பிள்ளைகளைப் பெறுதலினும், பிள்ளையில்லாது மலடு என்று பலபேர் வசைபேச அயர்ந்து திரிதல் நன்று. அவ்வாறு தீத்தொ ழில் செய்யும் ஒருவனால் அக்குலத்துக்கு இழிவு நேர்வதாயின் வடிவு முதலிய குணங்களுடைய பிள்ளையாக விருந்தபோதிலும் அவனை நீக்கி வரும் பழியினின்று விலகுவதே நன்மையாமென நூலுணர்ந்தோர் கூறுவதை நினைந்து, பிள்ளையினது தீயொழுக்கங்களை அறிந்திருந்தும் வெளிப்படுத்தாது மறைத்துப் பொய்பேசிய தன்மனைவியையும் அந்தப் பிள்ளையையும் நீக்கி வேறுகன்னிகையை விவாகஞ் செய்துகொண் டான். பிரியமுள்ள தாயாரையும் தன்னையும் தகப்பன் நீக்கி விட்ட னனே என்று துக்கக்கடலில் முழுகி இனிமேல் எவ்வாறு பிழைப் போம் எனத் தியங்கி ஐயோ! நமது தந்தையார் கற்குமாறு செல்வ மாய் அனுப்பியகாலத்திலே சிறிதும் புத்தியில்லாது கல்லாத புல்லிய மாக்களுடன் சேர்ந்து சூது வேசிகமன முதலியன செய்தேனே! வயிற்றுக்கு ஆகாரஞ் சம்பாதிக்க யாதேனும் ஒரு வித்தையாவது



குபேரன் பூசித்தல்.

தெரிந்துகொள்ளவில்லையே! வாசியாத மூடனாகிய எனக்குயார் காசு கொடுப்பார்கள்! எவ்வாறு பிழைப்பேன்! என்று எண்ணி எண்ணி உருகிப் பசியால் உழன்று வருந்துங்காலத்தில் ஓர் நாள் ஆகாரஞ் சிறிதும் அகப்படாது போக பசியாகிய பெரு நெருப்பு வயிற்றிற் கொளுத்தக் கண்ணிருண்டு வருந்தினான். அப்போது சூரியன் அஸ்தமனமானான். அன்று சிவராத்திரி யாதலின் சிவாலய பூஜைக்காகச் செல்லும் மற்றோர் வேதியன் பின் இந்தக் குணநிதி என்பானும் தேகமெலிவினால் கால் பின்னப் பின்ன நடந்து சிவாலயத்தை அடைந்து நிவேதனப் பிரசாதத்தைக் கவர்ந்து புசிக்கச் சமயம் பார்த்து இமைகொட்டாது விழித்திருந்தான். அந்த இராமுழுதும் விழித்திருந்து மங்கைபங்கனை நான்கு சாமமும் அர்ச்சித்து விரத முடித்தமையால் விடியற்காலத்தே அந்த விப்பிரன் சிறிது தூக்கங்கொண்டான். இதனை அறிந்த குணநிதி இதுதான் சமயம் என்று உள்நுழைந்து தேடும் பொழுது அகப்படாமையால் மங்கிய விளக்கைத் தூண்டி வெளிச்சத்தினால் வெள்ளிய பிரசாதத்தை எடுத்துத் திரும்பும் போது படுத்திருந்த மற்றொரு வேதியனை மிதிக்க அவன் துண்ணென்று விழித்து யாரோ திருடன் வந்துவிட்டான் என்று கூவ, காவற்காரர்கள் ஓடிவந்து குணநிதி என்னும் திருடனைப் பிடித்து இழுத்துப்போய்த் தலையை வாங்கிவிட்டார்கள்.

அப்பொழுது யமதூதர்கள் கதை வேல்பாச முதலியன கொண்டுவந்து அடிபிடி என்று கட்டி அவ்வாலிபனுயிரைக் கொண்டு போனார்கள். விபூதிருத்திராக்ஷதாரணமும் சிவநாமோச்சாரணமுமுள்ள சிவகணங்கள் விமானத்து விரைந்து வந்து தொடாதீர்கள் விடுங்கள்! விடுங்கள்!! என்று தடுத்தார்கள். அவ்வாறு வந்த சிவகணங்களைப் பணிந்து சுவாமிகாள்! இவன் பிராமணகுலத்திலே பிறந்து வைதிக முறை பிறழ்ந்து நடந்தான். "சூதும் வாதும் வேதனை செய்யும்" என்பதைக்கேளாது சூதாட்டத்தை விரும்பிச் சதாபுரிந்து வந்தான். தன் பெண்சாதி தனிவீட்டில் மனம் பதைத்திருக்க வைத்துத் தாசிவீடு சென்றிருந்தான். சிவனின்மாலியந் திருடினான். இவ்வாறு கொடும் பாவம் புரிந்த இத்தீயோன் சிவபதம் எறுதற்கு என்ன ஏதுவுண்டு? என்ற யமபடர்களை நோக்கிச் சிவகணநாதர்கள் கூறுவார்கள். ஓ! ஓ!! இத்துணைதானோ நீங்கள் அறிந்தது. மஹாசிவராத்திரி தினத்தில் ஆகாரமின்றி உமையொருபாகர் ஆலயத்துள் விழித்திருந்தான். இறைவனைத் தரிசித்தான். விளக்கைப் பிரகாசமுறத் தூண்டினான். இதனால் இவன் இதன் முன்னர் செய்த கொடிய பாதகங்களினின்று

நீங்கினேனாயினன். இப்புண்ணியங்களினால் கலிங்கநாட்டிற்கு அரசனாவான் என்று கூறுதலைக் கேட்டு அதிசயித்து யமதூதர்கள் விட்டு வணங்கி அகன்றார்கள். சிவகணங்களும் ஆசீர்வதித்துச் சென்றார்கள். அச்சிவகணநாதர்கள் கூறியவாறே கலிங்கதேசாதிபதியின் புத்திரனாக அவதரித்து உத்தமன் என்னும் பெயர் பெற்று பூருவ வாசனைப்பயனால் சிவாலயங்களெங்கும் அளவில்லாத தீபங்களேற்றிப் பலவிதபுண்ணியங்களைச் செய்து விதிப்படி சிவபூசை செய்து பலநாளிருந்துமாய்ந்தனன். சிவாலயங்களிலே தீபங்களேற்றிய புண்ணிய பலத்தால் வடதிசைப் பாலகனாகிய குபேரனாயினன். ஆதியிலே சிவாலயத்தில் மங்கிய தீபத்தைத் தூண்டியபலனன்றோ இவ்வளவு செல்வத்தையும் அளகாபுரியதிகாரத்தையும் அடையுமாறு கொண்டு வந்ததென்று தெளிந்து காசி முதலிய பல சிவஸ்தலங்களினும் பூஜை நைவேத்தியம் தீபமுதலியன செய்து திருச்செங்கோட்டுக்கு வந்து புண்ணிய தீர்த்தங்களில் முழுகி உமையொருபாகரைப் பூசித்து, சித்தமென்னும் அகலில் அன்பாகிய நெய் வார்த்து, ஈசனே பதி என்னும் துணிவாகிய திரியையிட்டு பரஞானச்சுடரேற்றிப் பலநாள் சிவயோகத்திருந்தான். எம்மையாளுடைய பரமேசுவரர் பிரசன்னமாகவே கொடிய சூரியப்பிரகாசம் போன்ற திருமேனியைக் காணக் கண்கூசுகின்றது, கண் கூசாதிருக்க அருள்புரியவேண்டுமென வேண்டுதலும் அம்மையப்பர் அவ்வாறே அருளினர். உற்று நோக்கிப் பரமேசுவரருடைய திருமேனியிலோர் புறம் பொருந்தி வாழ என்னிலும் இந்த அம்மையார் யாது தவஞ் செய்தனரோ என நினைந்தான். உடனே ஒரு கண் தெரியாது ஒளி மழுங்கியது. பின்னர் இறைவி கருணையால் பொற் கண்ணைப் பெற்ற குபேரன் உமை இடப்பால் விளங்கும் மங்கையோர் பங்கரை ஒருபால் சிவமாகவும் ஒருபால் சத்தியாகவும் தோத்திரஞ் செய்து வணங்குதலும் சிவபெருமான் கடாக்ஷித்துக் குபேர! நீ என் தோழன் என மகிழ்ந்து கூறினர். பின்பு அவன் தன் பெயரால் ஒரு தீர்த்தம் அமைத்துப் பூசித்து அளகை சென்றான்.

## சூரிய புஷ்கரணி.

நிமல நித்தியானந்த இருடிகளே! பிரமாவின் புத்திரனாகிய தக்கன் ஒரு யாகஞ் செய்ய யத்தனித்தான். அவ்விடத்துக்குத் தேவர் முதலாயினோரும் வந்து சேர்ந்தார்கள். முக்கட் பெருமான் எழுந்தருளாமை கண்ட ததீசிமுனிவர் தக்கனை நோக்கி எம்பெருமான் ஏன் எழுந்தருளவில்லை என்றார். "எச்சத்தை எச்சத்தால்

தொழுக" என்ற சுருதி மாயவன்றான் எச்சன் என்றும் சொல்லும். ஆதலின் இங்கு தக்கன் வருவதற்கு நியாயமில்லை என்றான். இக் கொடிய வசனத்தைக் கேட்ட ததீசிமுனிவர் சபையில் உள்ள யாவரை யும் நோக்கிச் சபையோரே! "எச்சத்தால் எச்சம்" என்னும் வேத வசனத்துக்குப் பொருள் இதுதானோ? சொல்லுங்கள். எச்சம் என் னும் வேதபதத்துக்குப் பார்வதி பாகராகிய பரமேசுரர் என்பதுவே பொருள். மாயவன் முதலாகிய தேவர்கள் எல்லோரும் வந்தனை வழிபாடு செய்து உய்வர் என்பதே யன்றி எச்சம் தன்னாலே தன் னைத் தொழும் என்பது சரியாகுமோ? உலகத்திலே தமக்கு ஒப் பானவர்களுக்கும் தம்மினும் தாழ்ந்தவர்களுக்கும் மரியாதை செய் பவர்களுமுண்டோ? தம்மைப் பார்க்கினும் உயர்ந்தவர்களையன்றோ உபசரிப்பார்கள். வேதவிதியும் இதுவேயாகும். ஆதலால் சிவபெரு மானே யாகத் தலைவர் என்று வேதமெல்லாம் சொல்லும். இதனை யறியாதவர்கள் யாவர் என்று ததீசி முனிவர் கூறினர். அந்தச் சபையிலுள்ள பிராமணர்களெல்லாம் தக்கன் கொடுக்கும் தக்ஷிணைக்கு ஆசையுற்று மதிமயங்கித் தக்கன் சார்பாகவே யிருந்தார்கள். பொது வாகப் பேசாது தாக்ஷணியத்துக் குட்பட்டுப் பக்ஷபாதமாய்ப் பேசி யதால் கலியுகத்திலே பூலோகத்திற் பிறந்து பொய் யொழுக்கம் பூண்டு சிவதூஷணஞ் செய்து வைதிக மார்க்கத்துக்கு அன்னியராகிச் சைவசித்தாந்த சாஸ்திரத்தைக் கைவிட்டுப் புறச்சமய நூல்களைத் தழுவி நரகத்துக்காளாவீர்கள் என்று சாபங்கொடுத்து, தக்கனைச் சிறி உன் வமிசம் நாசமாகும் என்று கூறி சிவநிந்தர் கூட்டத்தில் இருக்கலாகாதென்று தன் இருப்பிடஞ் சேர்ந்தனர். இது கண்டு பிரமதேவர் பயந்து போய்விட்டனர். மாயவனைக் கொண்டு தக்கன் யாகத்தை நடாத்தினான். இவ்விவரங்களை யெல்லாம் நாரதமுனிவ ரால் உணர்ந்த பார்வதிதேவியார் சிவபெருமானைப் பணிந்து என் பிதாவாகிய தக்கன் எப்பொழுதும் தீங்குசெய்து வருகின்றான். அவன் செய்யும் யாகத்தை அழித்தருளல் வேண்டுமென்பதே அடியாள் வேண்டும் வரம் என இரந்து வேண்டினர். பாலலோசனர் வீர பத்திரரைப் படைத்தருள உமாதேவியார் பத்திரகாளியைப் படைத் தருளினர். வீரபத்திரர் பத்திரகாளியாகிய இருவரையும் நோக்கி, தக்கன் யாகத்தை நாசமாக்கிக்கொண்டு கோபத்தைத் தணியுங்கள் என்று சிவபெருமான் கட்டளையிட்டனர். அவ்வாறே செய்து வாருங் களென்று தாக்ஷாயணியும் விடைகொடுத்தனுப்ப அநேகபடைகளோடு சென்று யாகசாலையை அக்கினியூட்டி உள்ளே நுழைந்து தக்கன்

தலையை அறுத்துத் தள்ளியபோது மான் உருக்கொண்டோடிய யாகத்தின் உயிரைப்போக்கி, அக்கினியினுடைய ஏழு நாக்குகளையும் கைகளையும் கண்டித்துத் துண்டித்து, சரசுவதி மூக்கை அரிந்து, தேவ மாதர்களையும் சிக்ஷித்து, சந்திரனைச் சீறிக் காலால் தேய்த்து, சூரியனுடைய கண்களையும் முப்பத்திரண்டு பற்களையும் பறித்து உதிர்த்து யாகத்தை நாசமாக்கினர். இதில் அடியுண்ட சூரியன் கண்ணும் பல்லும் இழக்க நேர்ந்ததை எண்ணி எண்ணித் துக்கித்து நம் காலகதி இவ்வாறாயிற்றே என ஏங்கி ஐயோ! புத்திமோசத்தால் இந்த யாக சாலையிலிருந்துவிட்டேன். சிவநிந்தகருடன் கூடினவர்களில் யார் வாழ்ந்திருக்கின்றார்கள். மஹாபாதகமாகிய சிவ நிந்தகருடன் கூடிய வுடனே பல்லும் கண்ணும் போயினவே. இதனோடு சிவநிந்தனை விடாதே! வமிசநாசமாக்குமே! என வருந்தி இப்பாதகத்தை நீக்கிணலொழிய வாழமாட்டேனெனத் தேறித் திருச்செங்கோட்டுக்கு வந்து புண்ணிய தீர்த்தங்களிலே விதிப்படி முழுகி சிவபரஞ்சுடரைத் தரிசித்து தக்கன் யாகத்துட் பிரவேசித்த குற்றத்தை மன்னித்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்து மனமாசுபோக்கி தன் பெயரால் ஒரு தீர்த்தம் அமைத்துப் பிரதிஷ்டித்தான். இந்தச் சூரியபுஷ்கரணி தீர்த்தத்தில் விதிப்படி மூழ்கினவர்கள் வெவ்விய பிணி குட்ட முதலியன வெல்லாம் நீங்கப்பெற்றுச் சிவபிரான் திருவருளுக்குப் பாத்திரராவார்கள்.

## சந்திர புஷ்கரணி.

நிமல நித்தியானந்த தபசிகளே! சந்திர புஷ்கரணியின் விருத்தாந்தம் கூறுகின்றோம். கேட்பீர்களாக.

தவத்திற் சிறந்த அத்திரிமுனிவர் தனது புத்திரனாகிய சந்திரனைப் பிருகஸ்பதி முனிவரிடத்துக் கல்வி கற்குமாறு விட்டிருந்தான். அவ்வாறே பயின்று வருகையிற் சந்திரன் அழகை வியாழபகவானின் மனைவியாராகிய தாரைகண்டு அதிமோகங் கொண்டு அவனுக்கு வேண்டிய உபசாரங்களைக் குறைவற நடாத்திவரும்போது தனது குருமனைவியின் சரச நடையினைக் கண்டு சகியாது வருந்தி என்செய்வேன் எவ்வாறு தப்பித்துக் கொள்வேன் என்று சந்திரன் திகைப்புற்றிருந்தான். ஆயினும் சந்திரன் அருகில் வருங்காலத்திலே தனது அங்கமுழுவதும் மூடாமலும் விலகினும் மேலே தனபாரம் படுமாறு அடுத்து வளைந்துபோவதும், காமாதுர சம்மந்தமாகிய வார்த்தைகளைச்



T.6869

சந்திரன் பூசித்தல்.

சமயோசிதமாகச் சிலேடையாகக் கூறுவதுமாக இருப்பதில் யவ்வன தசையினனாதலின் சிறிது நெகிழ்ச்சியுற்று மனசைத் திருப்பிக்கொண்டு உள்ளுக்குள்ளே இன்பம் பெருகினவனாக இருந்தான்.

இந்திரன் ஒரு யாகஞ் செய்யும்பொருட்டுப் பிரகஸ்பதி பகவானுக்குத் திருமுகமனுப்பினன். இதனைக் கண்ட வியாழபகவான் மீனவியாரை நோக்கிப் பெண்ணே! இந்திரனிடம் சென்று வருகின்றேன். ஜாக்கிரதையாக இருக்கக்கடவை. நமது சந்திரன் வயசிற் சிறியோனாயினும் புத்தியிற் பெரியவன். கண்ணை இமைகாப்பதுபோலக் காப்பான். எனக்கு விடைதருவாய் என்றனன். நாயக! நின்னைப் பிரிந்து எப்போதாவது வாழ்ந்ததுண்டோ! போய்வருக என்று எவ்வாறு சொல்வேன்! தனித்திருந்து எப்படி உய்வேன்! சொல்வேனேல் யாககாரியத்தைத் தடுத்த குற்றத்துக் காளாகவேண்டுமே என் செய்வேன்! ஆயினும் எத்தனை நாளைக்குள் வந்திடுவீரென்பதை யாயினும் சொல்லுக என்றனள். யாக காரியமாகச் செல்வதால் ஒரு மாசம் தாமதமாகும் என்று சொல்லித் தேவமந்திரி சென்றனர். குருவினோடு வழித் துணையாகச் சென்ற சந்திரன் சிறிது தூரஞ் சென்று விடைபெற்றுத் திரும்பி வந்தான். இதற்கு முன்னரே தாரை அறுசுவையோடு கூடிய அன்னம் சமைத்துப் பொற்பாத்திரத்திலமைத்து வைத்திருந்தனள். சந்திரன் வந்தவுடன் சந்திர! உன்குரு வார்த்தையை மறுது கேட்பதுபோலவே என் வார்த்தையையும் கடவாது இருக்கக்கடவை. நேரமாயிற்று எழு என்று கையைப் பிடித்து இழுத்துப்போய் ஆசனத்திருத்தி கைவளை கலகலவென்ன முகத்திற் குறுநீரரும்ப ஆடையைத் தூக்கி நன்றாகச் செருகிக்கொண்டு வாசனைப் பொடிசேர்ந்த வெந்நீரில் ஸ்நானஞ் செய்வித்து கலையாற்றுடைத்துப் பின்னர் நறும்புகையூட்டி வஸ்திரமுடுத்துப் பூ முடித்து அன்னம் படைத்து உண்மைச் செய்து விசிறிகொண்டு விசிறி சரசவார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தனள். உண்டபின்பு சந்திரன் சமீபத்துள்ள நந்தவனத்திற் போயிருந்தனன். அவர் விரையோடு ஓமாலிகையினூறிய நீரிற்குளித்து மேகலைபூண்டு, அழகிய ரவிக்கையிட்டு, மையணிந்து, வாசனை தடவி, பல ஆபரணம் பூண்டு, புஷ்பஞ் சூடிக்கொண்டு, மெல்லிய கொடிபோல இடைதுவள முல்லையரும்பு போன்ற இளநகை அரும்ப, அம்புலி தங்கும் நந்தனவனத்துள் வந்தனள்.

தாரை வருவதை அறிந்த சந்திரன் சிந்திக்கின்றான். குரு பத்தினியைப் பணியும் சமயத்திலும் பாதத்தைப் பரிசியாது தூரத்தே நின்று விழுந்து பணியவேண்டுமென்று தருமசாஸ்திரங்கள் கூறுகின்றனவே, நாம் இதுவரையில் இளமையாக விருந்தமையால் நமது குருபத்தினி நீராட்டிப் பாராட்டி அமுதூட்டி இசையூட்டி உபசரித்தது நன்றே! இப்பொழுது யவ்வனத்தைப் பெற்றிருக்கும் நமக்கு அவ்விதம் செய்தல் தகாது. மேலும் குறிப்பை நோக்கும் பொழுது காதல் கொண்டிருப்பதாகவும் காண்கிறது. தாய் தந்தை பெண் முதலாயினரோடு தனியே ஒன்றாக உட்காரக்கூடாது. இந்திரியங்களின் கூட்டமானது மிகவும் பலமுள்ளது. அது தெரிந்தவனையும் மயக்கிவிடும். அன்றியும் மாதர்கள் சுவபாவமே மனிதர்களுக்குச் சிருங்கார சேஷ்டைகளினால் தோஷத்தை உண்டுபண்ணும். ஆதலால் தெரிந்தவர்கள் அவர்களிடத்தில் அஜாக்கிரதையாய் இரார்கள். ஜிதேந்திரியனாக விருப்பினும் மூடனாகவிருப்பினும் மாதர்கள் சம்பந்தத்தினால் உட்பட்டவனாகச் செய்கின்றார்கள். என்று தருமசாஸ்திர வசனங்களிருப்பதால் குருபத்தினியார் வசிக்கும் இடத்தைவிட்டுத் தனியே வந்தும் விடாமல் இங்கும் வருகின்றாளே என்று யோசித்திருந்தான்.

தாரை அந்த நந்தவனத்தில் அழகிய புஷ்பங்களைக் கொய்துக் கொண்டு சிறுவாய்க்கால்களைத் தாவிக் குதித்துத்தாண்டி மரநிழல்களில் நின்று வண்டுக் கூட்டங்களின் பாட்டுக்களோடு தானும் இனிய பாடல்களைப் பாடிக்கொண்டு புருவமாகிய வில்லை வளைத்து, நஞ்சு தோய்ந்த கண்ணாகிய பாணங்களைச் சந்திரன்மீது பிரயோகித்து, வாசனை கமகம எனச் சமீபத்து வந்து உட்கார்ந்து தனது மனக் குறிப்பைக் காட்டினள். இதனைச் சந்திரன் கண்டு தாரையே! தன்னையீன்ற தகப்பனாயினும், தானீன்ற பிள்ளையாயினும், சகோதரனாயினும் அழகுள்ளவனாயினும் பெண்கள் மனம் அனலடுத்த மெழுகாக இளகும் என்று நீதிநெறி கூறுவதால் நான் தனியேயுள்ள இடத்தில் நீவரலாமோ? வீட்டில் வேலை இல்லையோ? தலையை வாரிக்கொள்ளுதல், வாசனை எண்ணெய் தடவல், திலகந்தரித்திடுதல் உயர்ந்த வஸ்திரமுடுத்தல் வாசனைப் புஷ்பஞ்சூடுதல், ஆபரணமணிதல், மிக்க அன்னமுண்டிடுதல் முதலியனவற்றை நாயகனில்லாத சமயத்தில் கற்புடைய மாதர்கள் செய்யார்களன்றோ. நீ மிகுந்த அலங்காரஞ் செய்து கொண்டிருக்கின்றனையே. நாம் இருவரும் சுத்தமாகவிருந்தாலும் அன்னியர் ஏசாரோ! ஆதலால் அதிசீக்கிரமாகப்போ என்றனன். இவ்வாறு

கூறும் மதியைத் தாரை நோக்கி, சந்திரா! நின்னிடத்து நான் வந்தால் உலகம் என் சொல்லும் வேலை செய்ய வேறு சமயமில்லையோ? உன்னைக் காணுதற்கே கலன்கள் பூண்டேன். நல்வினைப் பயனால் உன்னைத் தனியே இங்குக் கண்டேன். உன்னுடைய கட்டழகை எண்ணி எண்ணி மூர்ச்சித்தேன். நின்னழகு என்னைத் தடுத்துவிட்டது. அதனால் நினது சரணடைந்தேன். துரையே! உடனே ஆலிங்கனஞ் செய்க என்றனள். சந்திரன் கேட்டுத் திகைத்து மீட்டுஞ் சொல்வானாயினன். தாரையே! நல்ல மரபிலே பிறந்தாய். தேவகுருவின் மனைவியாயினை. நீ இவ்வாறு நடத்தல் உலகத்திலே ஏச்சன்றோ. உன் விருப்பத்துக்கிணங்குதல் எனக்குப் பாவமன்றோ. அங்கவீனனேனும், தரித்திரனேனும் தீராத நோயுளனேனும், தீமையுளனேனும் நாயகனாய் வாய்ந்தபின்னர் அவனோடு வாழ்தலே உத்தமியின் லக்ஷணம் என்ற சந்திரனை நோக்கி உடுபதியே! இந்தக் கதை அனைத்தையும் கட்டி வைப்பாய். சிறுவயசு தொடுத்து நின்னை வளர்த்தேன். பெரியவனாகியபின் என் சொல்லைத் தடுக்கின்றாய், பாவமென்கின்றாய், தாருகா வனத்திலும் ஆயர்பாடியிலும் நடந்தகதைநாமறியேமா? பிரம்மா தான்பெற்ற சரசுவதியை மனைவியாகக் கொண்டார். கண்ணன் அத்தையாகிய ராதையை அணைந்திட்டான். கவுதமன் பத்தினியை இந்திரன் புணர்ந்தான். பிருந்தையை விஷ்ணு சேர்ந்தார், இவர்களுக்குப் பாவம் வரவில்லையே. இவர்களைத் தேவரென்றும் முனிவரென்றும் யாவரும் வணங்குகின்றார்களன்றோ. மாதர்கட்குச் சுகங்கொடுக்கச் சக்தியற்ற முனிவர்கள் தங்கள் மனைவியர் பிறரை நாடிச் சுகத்தை அனுபவிப்பர் என்று எழுதிப் பயமுறுத்தி வைத்திருப்பதை உன்னைப் போன்றோர் நம்பிப்பலனிழந்தார். இது உண்மை, என்மீது காதல் கொள்ளாதவனைப்போல ஆசையை அடக்கிக்கொண்டு படித்த வித்தையைப்பேசுகிறாய். அடடா வீணாகக் காலங்கழிப்பதிற் பிரயோசனமில்லை. சல்லாபம் போதும். நின் தோளை வழங்காய் என்று சந்திரன்மீது விழுந்து அணைந்தனள். காற்றை ஆகாரமாகப் புசித்துக் காட்டிற்றவஞ் செய்யும் முனிவர்களும் உயர்வுபெற்ற தேவர்களும் பெண்களைக் கண்டமாத்திரத்தில் மத்திட்டுச் சுழற்ற உடைந்துபோம் தயிர்போல மனமயர்ந்து செயல்மறந்து போவார்கள் என்றால் வலிய விழுந்தணைத்த காலத்துப் பாலகுமாரனாகிய சந்திரன் தாரை விருப்பத்துக்கிணங்கினனென்பது அதிசயமாமோ? ஆதலால் சிந்தையோடு சிந்தையாய் ஆவியோடு ஆவியாய் ஒன்றுபட்டு ஆனந்தக்கடலில் மூழ்க இருவரும் இன்பமெய்தினார்கள். இவ்வாறு நாடோறும் சுகபோகமனுபவித்துக் கொண்டு வரும்போது தேவகுரு

வும் வந்தார். தாரை எதிரோடி வணங்கி காலலம்பி ஆசனத்தெழுந் தருளச் செய்து அருகிருந்தனள். சந்திரன் வந்து வணங்கி விபூதி ஈந்து மகிழ்ச்சி நாட்டினர். பின்னர்த் தாரைக்கும் சந்திரனுக்கும் நடக்கும் சல்லாபங்களாற் குறிப்பிற்றேர்ந்து பயமுறுத்திக் கேட்க தாரை உண்மையைக் கூறி ஐயா! நடுவுநிலைமையை நாடுங்காலத்தில் தவருதவர்கள் ஒருவருமில்லை. எதுவும் ஊழ்வினையின்படியே நடக்கும். குற்றஞ் செய்தவர்களுக்கன்றே பரிகாரமும் ஆகமத்திற் கூறப்பட்டுள்ளது. பிரமன் முதலியோரும் மயங்கினரேல் ஏழை எம்மாத்திரம்! ஏதோ சிறுவர்கள் மயங்கிவிட்டோம். மன்னிக்க வேண்டுமென்று வணங்க வியாழபகவான் மனைவியின் குற்றத்தைப் பொறுத்து சந்திரனை நோக்கி க்ஷயரோகியாகுக எனச் சபித்தனர். சாபத்தை ஏற்று நடுநடுங்கித் தந்தையாரிடஞ் செல்லும்போது நாரதர் சந்தித்து அந்தோ சந்திர! என்னகாரியஞ் செய்தாய். காமத்தால் அநேகர் கெட்டுப்போயிருக் கின்றார்கள். தவிர்ந்ததை யோசித்து என் செய்யலாம் திருநாககிரிக் குச் சென்று உமையொருபாகரைத் தரிசித்து அம்மையப்பர் எழுந்தரு ளியிருக்கும் தேவதீர்த்தத்தில் ஒரு துளி தீர்த்தம் உட்கொள்வாயேயா கில் க்ஷயரோகம் நீங்கி நன்மதியாவாய் எனலும், அம்முனிவரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு திருச்செங்கோட்டுக்கு வந்து தீர்த்த வாடி கிரிப்பிரதக்ஷிணம் புரிந்து மங்கைபங்கன் மலரடிபோற்றி அரிய தேவதீர்த்தத்தை உள்ளங்கையிலேற்று உட்கொண்ட மாத்திரத்தில் க்ஷயரோகம் நீங்கிக் குணமடைந்தனன். சந்நிதியின் மேற்பால் தன் பெயரால் ஒரு தீர்த்தம் அமைத்துப் பூசித்தனன். அதுவே சந்திர புஷ்கரணி தீர்த்தம். அந்தத் தீர்த்தத்தில் விதிப்படி மூழ்கினோர் ஜன் மாந்தரகர்மத்தால் நேர்ந்த க்ஷயம் சுரம் முதலிய நீங்கப்பெற்று நல்ல புத்தியும் பத்தியும் சிவநேசமுமுற்று வானத்தை விளக்கி மனோரம்மிய மாக்கும் சந்திரனைப்போலக் குலத்தை விளக்கி யவராலும் மதிக்கும் நிலைகொண்டு வாழ்ந்து மருமையில் சிவபத நிழலில் தேவர்கள் மகிழ வாழ்ந்திருப்பார்கள் என்றார் சூதமுனிவர்.

## செங்கமலைத் தீர்த்த மான்மியம்.

வினைமாசு நீக்கிய மெய்த்தவர்களே! அன்புடன் கேட்பீர்களாக. முன்னொரு காலத்தில் தேவர்களெல்லாம் கூடிக் கீர்த்தியடைய வேண்டுமெனக் கருதி, மகமியற்ற ஆலோசித்தார்கள். அந்த யாகத் தில் வரும் புகழ் நமக்கெல்லாம் பொது என்று பேசிக் குருக்ஷேத்தி ரத்தில் முக்கண்ணெம்பெருமானைத் தியானித்து ஒரு யாகஞ் செய்தார்

கள். சிவானுக்கிரகத்தால் அம்மகத்திருந்து வெள்ளிய மலைபோலப் புகழ் தோன்றிற்று. அந்தக் கீர்த்தியை முற்றிலும் திருமாலபகரித்த னர். தடைபுரிந்த தேவர்கள் பகிர்ந்து வாங்க எண்ணி நெருங்கினர் கள் திருமால் ஓடினர். தேவர்களெல்லாம் பின் தொடர்ந்தார்கள். அதனால் அத்திருமால் சினந்து வில்லும் அம்பும் ஏந்தித் தேவர்களை எதிர்த்துப் போர் புரிந்து தேவர்கள் முதுகுகாட்டி ஓடச்செய்து, நெடுந்தூரஞ் சென்று தேவர்களே! நீங்களெல்லீரும் தோற்றீர்கள் என்று சிரித்தனர். பழித்துச் சிரித்த மாதவனுடைய அழகெல்லாம் சாமாளநிறமாய் முகத்தினின்று வெளிப்பட்டுப் போயின. சிறிது சிந்தை வருந்தி நாணேற்றிய கைவில்லை நிலத்தில் ஊன்றிக் கழுத்தில் அழுத்திக் கொண்டு ஒன்றும் தோற்றாமல் தலை கவிழ்ந்து நெடுநேரம் சும்மா விருந்துவிட்டார். இது தெரிந்த மகபதி இக்கீர்த்தியைக் கவர்ந் துகொள்ள வேண்டுமென உத்தேசித்து பரமேசுவரரைப் பூசித்து அநுக்கிரகம் பெற்று எம்பெருமானருளிப் பாட்டின் வண்ணம் ஒரு புற்றாய்ச் செல்லுருவுபெற்று திருமால் வில் நாண் அறத் தின்று வரும் பொழுது வில் நிமிரும் விசையால் அழுத்திய தலை தறிப்புண்டு விண் சென்று விழுந்தது. பெருகிய உதிரத்தில் அத்தலை உருளத்தலைப் பட்டது. அப்பொழுது தேவர்கள் திருமால் இடத்திருந்த பிரக்கியா தியையெல்லாம் அபகரித்துப் பெருமகிழ்ச்சி கொண்டுபோய் விட்டார் கள். பின்பு இச்செய்தி அறிந்த திருமகள தரையில் விழுந்த மீனைப் போல் துள்ளித் துடித்து கனத்த தனங்கள் குழைய மார்பிலடித்துக் கொண்டு ஓலமிட்டு ஐயகோ! உலகரக்ஷகா! நீலமேகவண்ணா! சக்கர பாணி! உன் தலை அறுப்புண்டு தரையிற் புரளவிதியா! என் பிராணநா யகா! என் வயிறுபற்றி எரிகின்றதே! யாகத்தில் வருங்கீர்த்தி தேவர் களுக்கெல்லாம் பொது என்று பேசி மகத்தை இயற்றி யாகபலன் வந்தவுடன் வலியன் நாமானதால் எல்லாம் நாமேகொள்ளலாமென்று ஏன் கருதினீர். பங்கு வஞ்சனை செய்தவர்கள் உய்வார்களா? என் கண்மணியே! ஏன் இந்த அநியாயத்துக்குத் தலைப்பட்டீர்! "கோட் டையிற் பெண் பிறந்தாலும் போட்டவிதி தப்பாது" என்ற பழமொழி மெய்யாயிற்றே! நான் என்ன செய்வேன்! எவ்வாறு உய்வேன்! புரு ஷனை இழந்த பெண்கள் புவனத்திலிருந்து என்ன சுகம்! பெண்கட்கு நவரத்தின அணிபூஷணமல்லவே! புருஷனன்றோ ஆபரணம். ஆ தெய் வமே! பாவையர்க்குப் பதிதானே பாக்கியம். பதியை இழந்த பெண் நிர்ப்பாக்கிய வதிதானே! பர்த்தா விருந்தாலன்றோ பெண்களுக்குச் சந்தோஷம். அந்தச்சந்தோஷத்தினாற்றானே சற்புத்திரனுண்டாம் அப்

புத்திரனாலன்றோ சந்ததி விளங்கும். சந்ததி விருத்தியாலன்றோ பிதிர்களுய்வர், உலகமும் பெருகும். இதுவுமன்றி புத்திரனைப்பெறுமாறு நாம் இருவருஞ் சேர்ந்து படுக்கையை அடைவோம். அவ்வாறே வீரியத்தைத் தரிப்போம் என்னும் பொருளுள்ள வேதமந்திரத்தைச் சொல்லிக்கன்னியர்கள் விவாககாலத்தில் வரனுக்கு மாலையிடுகின்றார்களன்றோ. இது எதைக்கருதி என்றனள். ஓ க்ஷீராப்திவாசா! தாமரை பூத்தகாடு போன்ற உன் கண்ணையும் முகத்தையும் நாபியையும் பதத்தையும் எப்பொழுது காண்பேன்! எனப் பலவாறு பிரலாபித்த திருமகள் பல தேவமாதர்கள் பின் தொடர்ந்து வர, நாககிரியை அணுகி சிவாம்பிகையைத் தொழுது ஒரு தீர்த்தத்தை விதிப்படி பிரதிஷ்டித்து மூழ்கிப் பூசித்துத் தவம் புரியுங்காலத்தில் அம்மையப்பர் கருணை கூர்ந்து பிரசன்ன மாயினர். இருகண் களிகூரக்கண்டு நெஞ்ச முருகி என் அப்பனே! ஒப்பிலாமணியே! தீனதயாள லோகநாயகா அடியாளுக்கு மாங்கலிய பிக்ஷை கொடுத்தருளல் வேண்டுமென வேண்டுதலும் கருணாநிதியாகிய எம்பெருமான் இலட்சுமியை நோக்கி நின் கணவன் அறுப்புண்டசிரம் பொருந்த உயிர்த்தெழுவன் எனத் திருவாய்மலர்ந் தருளினர். அவ்வாறே சிவானுக்கிரகத்தால் உடலும் தலையும் பொருந்தி எழுந்த மாயவனைத் திருமகள் ஆரத்தழுவி மகிழ்ந்து திருவும் மாலும் மங்கை பங்கனைப் பணிந்து துதித்தார்கள். யாதுவரம் வேண்டுமென மகாதேவன் வினவுதலும் எம்பெருமானே! தேவரீர் திருவடியில் மாறாதபத்தியும், திருநாககிரியைத் தரிசித்த அன்பர்களிடத்து நீங்காதுவதியும் நேசமும் எந்நாளும் எங்களுக்கிருத்தல் வேண்டுமெனப் பணிந்தார்கள். அருளினோம் என ஆலயத்துள் மறைந்தனர். பின்பு மலர்மகளும் மாயவனும் போற்றி பரவித்தோத்தரித்தார்கள், மற்றொரு காலத்திலே பதுமாவதி என்னும் கன்னிகை முழுகி மாயவனை மணவாளனாகப் பெற்று மகிழ்ந்தனள். இத்தீர்த்தத்தில் அன்பினோடு நீராடினவர்கள் இலட்சுமி கடாக்ஷத்தைப் பெறுவார்கள். நல்லவரனை மணப்பார்கள். அத்தியாவஸ்தையிலிருக்கும் கணவன் துயர் நீங்கி எழுவன். இத்தீர்த்தக் கரையில் விதிப்படி மண்டப மமைத்து, ஆயிரம், ஐந்நூறு நூறு, என்னும் இயன்ற கழஞ்சு இடையுள்ள பொன்னால் இலட்சுமி உருவமியற்றி வேதிகையிலிருத்தி அத்திருமகளுக்குத் தென்பால் மாயவனைத் துளவாலருச்சித்துப் புஷ்பத்தால் திருவைப் பூசித்து, திருமகள் செய்த பொன்னளவில் இருபதிலொருபங்கு பொன்னுடன் அத்திருமகளுருவையும் வைத்து வேதாகமமுணர்ந்த வேதியரிடம் அன்புடன் கொடுத்து, உமையொருபாகனைப் பூசித்து அந்தணர்களுக் கன்னமூட்

டவேண்டும். இவ்வாறு இலட்சுமிதானம் செய்தவர்கள் மிகுந்த ஐசுவரியங்களை மேன்மேலும் பெற்று வாழ்ந்து பின்னர்ச் சக்கிராதிபதியாய் வீற்றிருந்து சிவபதம் பெறுவர் என்பது உண்மை.

## வருணதீர்த்த மான்மியம்.

சிவத்தைப் பேணும் சீர்த்தியாளரே! திருப்பாற் கடலில் மந்தரகிரியை மத்தாக நட்டுவாசுகியைத் தாம்பாக்கித் தேவர்களும் அசுரர்களும் கையு மெய்யும் வருந்தக் கடைந்தார்கள். அக்கடலினின்று முன்னர் விஷத்தோடு முகடி தோன்றினள். யாவரும் திடுக்கிட்டார்கள். பின்னர் அமுதத்தோடு தாமரைப் பூம்பொகுட்டில் வீற்றிருந்தருளும் திருமகள் மகிழ்ச்சிதோன்ற எழுந்தருளினள். முன்னர் உதித்த காரணத்தால் முகடியை ஜேஷ்டை (மூத்தாள்) என்பர் அந்த மூதேவியை, நீ தீமை (அதர்மம்) யுடன் பாஷண்டிகளோடு வாழ்வாயாக என மாயவன் கட்டளையிட்டுச் சீதேவியை நோக்கி நீ, அரிய வேதத்துடனும், அவ்வேதங்களால் விதிக்கப்பட்ட தருமத்துடனும், அத்தருமத்தின் வழி சென்றொழுகுவோருடனும் வாழ்வாயாக எனச் சக்கிரபாணி ஓதினர். பின்னர்த் தேவர்கள் தும்பிரபன் என்பவனை யழைத்து ஜேஷ்டாதேவியை மணம்புரிவித்தனர். அக்கணவனுடன் கூடி நகர்ப்புறங்களிற் சென்று தீயன புரிபவர்களுடைய பொருள்களைக் கவர்ந்து பல தீங்குகளைச் செய்து சுற்றித் திரிந்தலைந்தாள். கணவனாகிய தும்பிரபன் என்பவன் மனையாட்டியை நோக்கி, அடி பெண்ணே! நமக்குத் தக்க வாசஸ்தானம் நோக்கி வருமளவும் இவ்வுலகத்துத்தானே இரு எனக்கூறி, பாதாள உலகம் புகுந்தனன். காக்கைக் கொடியும் கழுதை வாகனமுங் கொண்ட மூத்தவள் ஊரூரகச் சென்று திரிந்து அலையும் பொழுது செங்கமலையுடன் கூடி வரும் ஆதிகேசவப் பெருமாளைக் கண்டு அடியில் வீழ்ந்து அழுது தொழுது, ஐயனே! அடியாள் கணவன் பாதாள உலகஞ் சென்றறன் இன்னும் வரவில்லை. போதிய ஆகாரமின்றி வருந்தி யலைகின்றேன். வாழ்தற்கோர் நல்லுபாயம் அருளல் வேண்டுமென வேண்டினள். "பெண்ணென்றாற் பேயுமிரங்கும்" என்னும் பழமொழிக்கேற்ப மாயவன் மனமிளகி, ஓ ஜேஷ்டாதேவியே! ஏன் வருந்துகின்றாய்? நானும் பிரமனும் மற்றைத் தேவர்களும் எத்தேவரை உபாசித்துப் பதவிகளைப் பெற்றோம்! இச்சீதேவி எந்தத்தேவோபாசனையால் யாவராலும் வணங்க, இழந்த பதியை அணையப்பெற்றாள். அத்தேவர் அர்த்தநாரீசுவரர் என்றறியாயோ! அத்தேவர் அடியார்களுக்கு

அநுக்கிரகஞ் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் திருநாககிரியில் வருணதீர்த்தம் என்றொரு தீர்த்தமுளது. நீ தோன்றிய கடற்கரசனாகிய வருணன் பிரதிட்டித்து மூழ்கி மேற்றிசைக் காவலதிகாரத்தைப் பெற்று மகிழ அருள்புரிந்தது அத்தீர்த்தம். அதில் மூழ்குவாயாகில் நல்லருளைப் பெறுவாய். சிவபிரானையேனும், சிவாகமங்களையேனும், சிவநேசர்களையேனும் நிந்தித்தவர்கள், அன்னோர்களோடு கூடினோர்கள் அகத்தும் முகத்தும் மகிழ்ந்து வீற்று, அவர்கள் பொருள்களைப் புசித்து வருணதீர்த்தக் கரையில் உபாசனை புரிந்து மகிழ்வாயாக எனக்கூறி மறைந்தனர். மூத்தாளும் விரைந்து திருச்செங்கோட்டை அணுகிச் செல்லும்பொழுது நல்லோர்களும் பெரியோர்களும் தீர்த்தமாடி விபூதி உருத்திராக்ஷதாரிகளாய்ச் சந்திவந்தனைகளை முடித்துச் செல்வதையும் வருவதையுங் கண்டு, தரித்திரத்துக்கு அதிபதியாகிய நம்மைக்கண்டு அருவருப்படைவார்களாதலின் அவர்களுக் கிப்பாலடாது செல்லல் வேண்டுமெனத் தன் இழிவை நினைந்து நாணி மெல்ல ஒதுங்கி ஒதுங்கிச் சென்று பத்தியோடு தீர்த்தத்தில் மூழ்கிக் கரைமேலிருந்து சிவோபாசனை செய்தனள். அடியார்க்கெளியராகிய அம்பிகைபாகர் வேண்டிய வேண்டியாங்குதவுவோராதலின் சாம்பவோத்தமர்களும் பூசிக்கப்படும் பதவி கொடுத்தோமெனக் கூறி ஆலயத்துள் மறைந்தனர். உமையொருபாகரைப் பூசிப்போர், காண்போர் நினைவோர்களுடைய ஐசுவரியங்களைக் கவராமலும், அவரிடத்துச் செல்லாலும் ஆலயத்து வாயுதிக்கிலிடம் பெற்றிருக்கின்றனள். வருணதீர்த்தத்து மூழ்கி இத்தேவியைத் தரிசிப்போர் தரித்திரத்தி லுழலார்கள். பெற்ற ஐசுவரியம் க்ஷீணிக்காது. நீரிழிவு முதலிய நோய் நீங்கும். அன்னோர் தோண்டுங் கிணறு முதலியவைகளில் நல்ல தண்ணீர்ப் பெருக்க முண்டாகும் என்றார் சூதமுனிவர்.

## சத்த கன்னியர் தீர்த்த மான்மியம்.

தபோதனர்களே! அபிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் எழுமாதர்களும் கண்டு படிந்து மங்கைபங்கனை நேசித்துப் பூசித்து இஷ்ட காமியத்தை அடைந்தனர். அவர்களாற் பிரதிஷ்டித்த அத்தீர்த்தமே சத்தகன்

† என்றலுமிங் கெனைவணங்கி யீர்ஞ்சடையண்ணலையுமை யோடிகழ்ந்து நாளு, மொன்றியுறை வோர்பொருள்க ளொன்றறவே வவ்வியவணுற்றேநின்று, மன்ற வருந்திடுதி....... இலிங்கபுராணம்.

னியர் தீர்த்தமெனப்படும், முக்காலத்தில் மடவர்களைப் படையா ளாகக் கொண்டு ஐங்கணைகளையும அஞ்சாது விடுத்துச் சாம்பலாய்ப் போன மன்மதன் அம்மையப்பர் திருவருளப்பாங்கின் வண்ணம் அனங்கனுக தோன்றி பிரஜாவிருத்திக் கேதுவாகி ஆன்மாக்களுக்குப் போகமளித்து, தானங்கோடுப்போர் வாங்குவோர் மனசிலே தங்கிக் கோடுத்தல் வாங்கல் செய்து இரதிதேவிக்கு இனியமணவாளனுகி மூன்றுலகும் மலர்க்கணையால் வென்றுலவும் மதனனது மனைவியா கிய இரதிதேவியானவள் இந்தச் சத்தகன்னியர் தீர்த்தத்து முழுகி உமையிடத்தவரை வணங்கி எம்பெருமானே! உலகத்திற் பேண்களா கப் பிறந்தோர் இணையற்ற ஐசுவரிய முதலிய பெருமை பொருந்தி யிருக்கினும், கணவரது வடிவங் குன்றியிருக்கக் காணின் சிறிதும் மகி ழார்கள். எல்லாக் கஷ்டங்களும் அடர்ந்திருக்கினும் குறைவற்ற வடி வுற்ற மணவாளனை மாத்திரம் பெற்றிருப்பார்களாயின் கறையுற்ற களிப் பெய்துவார்கள். ஆதலின் என்கணவன் அனங்கனுக இருப்பது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. தீட்டிய மரத்திற் கூர்மை பார்த்தவன்போல தேவரீர்மீது புஷ்பபாணத்தை யேவிவிட்டனன்§ அதுவும் பிரமதேவரது சாபமாகிய விதிகூட்டு செயலாகுமாதலின் அவ்வியல்பினனென்று தள்ளாமல் சன்னிதானத்தின் முன்னர்ச் சதா நின்று குற்றேவல் புரிபவர்கள் என மன்னித்து அடியாளுக்கிரங்கி என் பர்த்தா நல்லுருவந் தாங்கி யின்பமணவாளனுய் என்னேடு கூடி வாழ அனுக்கிரகிக்க வேண்டுமையா என்று வேண்டினள். கருணைநிதி இரக்கங்கொண்டு இளங்கொடிபோன்ற ரதிதேவியே! வைவசுவத மனுவந்தரத்து இருபத்தெட்டாவது துவாபரயுகத்தில் மாயவன் கண் ணனுக அவதரிப்பன். அவன் காதலனுக நின் கணவன் பிறப்பன். அப்பொழு இருவருங்கூடி வாழுங்கள் என்று மறைந்தருளினர். மதனனது சத்துருவாகிய சம்பராசுரன் என்பான் ரதிதேவியைப் பிடித்துக்கொண்டு போய்த் தன் அரண்மனையில் வைத்தான். புலி வாயில் அகப்பட்ட புல்வாய் போலத் தியங்கி மயங்கி உயிரைப் போக்கிக் கொள்வதாக யத்தனித்தாள். அப்போது "ரதிதேவியே, கலங்காதே. உன் கணவன் வந்து மணப்பன்" என்று ஆகாசவாணி கூறினள். கணவன் வருவன் என்னும் நம்பிக்கை கொண்டு உயிர் நீக்காது மாதுபாகரைத் தியானித்துக் கொண்டிருந்தாள். சம்பரன் ஸ்நானஞ் செய்து அலங்கார முதலியன செய்துகொண்டு ரதியருகில்

§......வேதன்.........மன்மதன் றன்னைப் பார்த்திம் மயக்கத்தை வரு வித்தாயால், நின்னுடலிறைவனெற்றிக் கண்பட நீறுமென்முன் மச்சபுராணம்.

வந்து அடி பெண்ணே! உனது இன்பத்தை அனுபவிக்க நெடுநாளாகத் தவஞ்செய்திருந்தேன். திருவுளச் செயலால் நீயும் என் வசமாயினை. ஆவியே! கட்டிக் கனியே! உன் செவ்வாயால் நல்ல உத்தரவு கொடடீ என்று கூறிக் கட்டிப் பிடிக்க சமீபத்து நெருக்கினன். திடுக்கிட்டு ஆ தெய்வமே! இவ்விதிக்கா ஆளாக்கினை! என நொந்து "பிடித்த பசாசுக்குப் பிண்ணாக்குஞ் சாதம் போட்டுத்தான் பார்க்க வேண்டு" மென்று கருதி விரைந்து ஓரறைக்குட் புகுந்து அர்த்த சிவாம்பிகையைத் தியானித்து மந்திரஜபஞ் செய்தனள் செய்யவே தன்னைப்போலவே ஒரு பெண் தோன்றினள். தோன்றிய மாயாதேவி, மால்மருகி கட்டளையின் வண்ணம் சம்பரன் காதலைத் தணித்தனள். இவ்வாறு அப்பாதகன் வந்தபோதெல்லாம் மாயாதேவியே எதிர் தோன்றுவள். இரதிதேவி இவ்வாறு பதிவிரதத்தை அனுஷ்டித்திருந்தனள் கேட்டீர்களோ முனிசிரேஷ்டர்களே! இங்கு இவ்வாறிருக்க, கண்ணபிரான் மனையாளாகிய உருக்குமணிக்குக் கருப்பத்தில் மன்மதனுற்றுப் பிறந்தனன். அழகெல்லாந் திரண்டோருருவாகிய பூலோக மன்மதனே இவனுகுமென்று தேவகி ரோகிணி ரேவதி முதலிய பெண்களெல்லாம் மகிழ்ந்து பேசிக்கொண்டு குழந்தையைச் சீராட்டி வந்தார்கள். இவ்விருத்தாந்தத்தை நாரதரால் அறிந்த சம்பரன் அக் குழந்தையை ஒருவரும் அறியாதபடி மெல்ல வெடுத்து நடுக்கடலிற் போட்டு சத்துரு நாசமானுனென்று மகிழ்ந்து சென்றனன். பிறந்து ஏழாம் நாளில் கையில் வைத்திருந்த குழந்தை மாயமாகப் போய் விட்டதே என்று உருக்குமணி அலறினள். தேவகி முதலிய எல்லாப் பெண்களும் கூடிப்புரண்டு புரண்டழுதார்கள். கிருஷ்ணமூர்த்தியும் வந்து மிகுந்த விசனமுற்று அடிவீழ்ந்து வருந்தும் மனைவியை எடுத் தணைத்து, என் செய்யலாம்! உலகத்திலே திரிகாலமு முணர்ந்த மஹான்களும் ஊழ்வினையை விலக்க வரிதாகும் கன்மானுபவத்தால் உலகிற் பிறப்பு வருவது அது கழிந்தால் அப்பிறவிவிட்டு நீங்க வேண்டும். உலகத்தில் ஒவ்வொருவரும் எத்தனை அன்னையையும் அப்பனையும் பெற்ருர்கள். இன்னும் பெறப்போகின்ருர்கள். நம் தந்தை தாயை ஈன்றவன் அவரை ஈன்றவர்கள் எல்லோரும் எங்கே? பிறப்பு எப்பொழுது வந்ததோ அப்பொழுதே இறப்பு இருக்கின்றது. எனக் கர்மசேஷத்தாலாயவை யெல்லாம் எடுத்துக்கூறி மகவிழந்தவளுக்கு மனத்தேறுதல் கூறினர். இஃதிவ்வாறுக.

கடலில் வீழ்ந்த மகவை மகரம் விழுங்கிவிட்டது. பரதர்கள் வீசிய வலையில் ஒரு நாள் ரதிகாந்தனை விழுங்கிய மீன் அகப்பட்டது.

அரிய பொருள்கள் கிடைத்தால் அரசனுக்குக் கொடுத்துத் தயை சம்பாதிப்பது உலகர் வழக்கமாதலின் பெரியதும் அழகுவாய்ந்தது மாகிய அம்மீனைச் சம்பரனிடம் வலைஞர் கொடுத்தனர். அதனை மடையர்கள் பீறி அழகிய குழந்தை இருக்கக் கண்டு பயந்து சாம் பரனுக்குக் காட்டினார்கள். அவன் மாயாதேவியிடம் கொடுத்தான். அப்பொழுது நாரதமுனிவர் விவரமனைத்தையும் ரதிதேவிக்குணர்த் திச் சென்றனர். அறிந்த அவ்வம்மணி தெய்வசங்கற்பத்தின் செயலை நினைந்து காதலனாகிய குழந்தையைக் கையிலேந்தி வளர்த்தனள். அவ்விள மதனன் இருந்து தவழ்ந்து நடந்து ஐம்பருவமுற வித்தி யாப்பியாசம், வேதசாஸ்திரம், வில்வித்தை, அம்புவித்தை, கதை வித்தை, குதிரை யானை தேர் ஏற்றம் என்பனவும், மாயை ஆயிர மும் ரதிதேவி கற்பித்து வளர்த்தனள். பதினாறு வயசாயிற்று, மதனன் ரதியை அன்னை என்று இனிதினோக்கினன். ரதிமாது கணவனென்று காதல் நோக்கஞ் செய்யக் கண்ட மதனன் அம்ம! நீ என் தாயாகவிருந்தும் காமநோக்கம் புரியும் காரணம் என்னை? என்றனன். ஆ! என் இன்பக்கனியே! நீ என் பிராணநாதன் சிவ பிரான் நெற்றிக்கண்ணால் எரிந்து அனங்கனாகிய குறைதீரத் துவாரகா புரியில் கிருஷ்ணன் சுதனாக நீ பிறந்ததை அறிந்த சத்துரு சம்பரன் கடலில் எடுத்தெறிந்தான். விழுங்கிய மீனைப் பிளந்து சம்பரனிடங் கொடுத்தார்கள். என் கற்பைக் காக்கும்வழி உண்டாக்கிய மாயா தேவியிடம் அப்பாதகன் கொடுக்க வளர்த்து வந்தேன். இவ்விவரம் எல்லாம் நாரதமுனிவரால் அறிந்தேன் என்றவுடன் தேவியை அணைத்து மதனன் இரதமேறினன். ரதி தேர் நடாத்தினள். சம் பரன் பொருத அவனைக் கொன்று துவாரகாபுரி நோக்கிச் சென்றார் கள். ஆங்கு வருவதை உருக்குமணி நோக்கி நாம் ஈன்ற குழந்தை உயிருற்றிருந்தால் இக்குமரனைப் போன்றிருப்பன் என நைந்து முலை யிற் பால்சுரக்க நின்றாள். கிருஷ்ணன் தேவகி முதலானவர்களும் வந்தார்கள். நாரதரும் வந்தார். மதனனுடைய விவரமெல்லாம் கூற மகிழ்ந்த உருக்குமணி மகனை இருகத்தழுவி முலையமுதமீய்ந்தனள். கிருஷ்ணன் முதலிய யாவரையும் பணிந்த பின்னர், கற்கர் வந்து, அக்குமரனுக்குப் பிரத்யும்நன் என்னும் நாமகரணத்தையும், செள்ள உபநயநத்தையும் செய்வித்துப் பின்னர் இரதியை விதிப்படி மணம் புரிவித்தனர். மதனனும் இரதியும் இன்பத்தை அனுபவித்தார்கள். ரதிதேவி தான் இவ்வித இன்ப சல்லாபத்தைப் பெறத் திருச்செங் கோட்டிற் செய்த தவத்தையும் ஸ்ரீ அர்த்தநாரீசுரர் அனுக்கிரகத்

தையும் அடிக்கடி கூறி மங்கைபங்கனைத் தியானித்து ஆங்கு வாழ்ந்திருந்தார்கள். ஆதலின் சத்தகன்னியர் தீர்த்தத்து யாவர் மூழ்கினும் இஷ்டகாமியார்த்தத்தைப் பெறுவார்கள். லோகவசியமும் சத்துவமும் நினைத்தகாரியம் கைகூடுதலும் பொருந்தும். கற்புக் கோடாது கணவனைக்கூடி வாழ்வார்கள் என்றார் சூதமுனிவர்.

---

## நிருதீர்த்த மான்மியம்.

**வை**ராக்கியமுற்ற மஹான்களே! தவசிரேஷ்டராகிய வசிஷ்டமுனிவரும் அருந்ததியம்மையாரும் செய்த பெருந் தவப்பேற்றால் சத்தியமுனிவர் முதலாகிய நூறுமக்கள் பிறந்து வேதங்களையெல்லாம் ஐயந்திரிபறக்கற்று வாழ்ந்தார்கள். விசுவாமித்திரரின் ஏவலால் சுதாசனன் என்னும் அரக்கன் அந்தக் சத்திமுனிவர் முதலாகிய நூறு பேரையும் வாயிற்போட்டு விழுங்கிவிட்டான். வசிஷ்டரும் மனைவியாரும் இதனைக் கேட்டுத் துயரம் அடைந்து அழுது புலம்பி புத்திரர்களைப் பறிகொடுத்த பாவிகளுக்குப் பூலோக வாழ்வு யாதுக்கென்று கருதி உயர்ந்த மலைமேலேறி விழுந்தும், ஆழ்ந்த நதிகளிலும், கடலிலும் போய் விழுந்தும் மரணம் நேராமையால் பெருமூச்சு விட்டு விதியே பெரிது என்று விம்மி விம்மிச் சோர்ந்து கிடக்கும் வசிஷ்டர் முன்பு இறந்த சத்தி முனிவரது மனைவியாராகிய அதிர்சந்தி என்னும் நங்கை தலைவிரிகோலமாக வந்து விழுந்து புரண்டு என் ஐயனே! உலகத்திலே குழந்தையை இழந்தவர்களுடைய துயர் பெரிதேன்பார்கள். அத்துயரம் மற்றொரு குழந்தை பிறந்தால் மறந்துபோகும். புருஷனை இழந்த பெண்களுக்கு அன்னை இருந்தேன்! தந்தை இருந்தேன்! மக்களிருந்தேன்! ஆதலின் அக்கினிப்பிரவேசம் புரிந்து அந்நாயகனோடு சேர்ந்து விடுகிறேன் என்று அழ, ஆ என் அருமை மருமகளே! உன் வயிற்றிலிருக்கும் குழந்தையால் என் வம்சத்தை விருத்தி செய்து கொள்ளலாமென்று நம்பியிருக்கின்றேன் என்று, வசிஷ்டரும் அருந்ததியும் கூக்குரலிட்டழுதார்கள். அப்பொழுது சக்கிரபாணியாகிய திருமால் தோன்றி ஓ வசிஷ்டமுனிவரே! சாமானியர்கள் போல ஏன் வருந்துகின்றீர்கள். உத்தமியாகிய அதிர்சந்தி வயிற்றிலிருக்கும் குழந்தைக்குச் சமானம் உலகத்திலொருவரையும் சொல்லக்கூடாது. சிவபத்தியில் எனக்குச் சமானமானவன். அவனால் உம்முடைய வமிசமும் பெருமை பெறும் என்றனர். வசிஷ்டரும் அருந்ததியும் ஒருவாறு தேறி அதிர்சந்தியை நோக்கி அடிபாவாய்? கருப்பமுற்ற பெண்கள் அழுதல்



ரதியும் மன்மதனும் பூசித்தல்.

துக்கப்படல், அதிகமாகச் சிரித்தல், தலையை விரித்துலாவல், சண்டையிடல், இருப்பிலாவிடத்திருத்தல், நகத்தால் நிலத்தைக் கீறல், காட்டிடத்தும், புற்றிடத்தும், மரநிழலிடத்தும், நெருப்புக்குச் சமீபத்தும் போதல், மாலைநேரத்துண்ணல், போதாப் புடவையுடுத்தல், படுக்கைமேனடத்தல், நீரினீந்தல், உமி,இரும்பு, என்பு, கரிதுவைத்தல் கூடாது. சாவதானமாக அறையில் ஆடையுடுத்தல், மனம் களிப்பெய்து மாறுபுஷ்ப பூஷணங்கள் அணிதல், தானியங் கூட்டி நீராடல், ஆசாரியர்களுக்குப் பணிவிடை செய்தல், கணவனைப் பணிதல், தாதிமார்களிடத்து இதம் பேசிப் பணிவிடை பெறல், நன்னூல் வினவல், சாத்துவிககுண உணவருந்தல் முதலியன செய்தால் அழகும் சௌரியமும் திடகாத்திரமும் தீர்க்காயுசு முள்ள குழந்தையைப் பெறுவார்களானதால் மனத்திருப்தியுடன் இருப்பாயாக எனத்தேற்றி ஆசிரமத்துக்கு அழைத்துப்போயிருந்தார்கள். பத்துமாதம் நிறைந்து நல்ல வேளையிலே தேவர்களும் முனிவர்களும் மகிழப் பராசரர் அவதரித்தனர். உரிய காலத்தே செய்யத் தகுவனவெல்லாம் வசிஷ்ட முனிவர் செய்து சீராட்டப் பூருவபக்ஷப் பிறைபோலப் பராசரர் தாயாரைநோக்கி என் அருமை வாய்ந்த தாயே! திருமாங்கலியம் உன் கழுத்திலில்லையே என் தகப்பன் எவ்வாறு மாய்ந்தனர் என்ற வார்த்தை கேட்ட தாயார் மெத்த கலங்கி அருமருந்தன்ன புதல்வா! ஒரு கொடிய அரக்கன் உன் தந்தையை வாயிற் போட்டுக்கொண்டான் என்று வருத்தத்தோடு சொன்னாள். அதனைக் கேட்டுத் திடுக்கிட்ட பராசரர் சிவனைப் பூசித்து மூவுலகத்தையும் சாம்பலாக்குவேன் என்று சினந்த மதலையை வசிஷ்டர் நோக்கி குழந்தாய்! அது தகாது. உன் தந்தையைக் கொன்ற அரக்கனை மாய்ப்பாயாக என்றனர். உடனே சிவபிரானைப் பூசித்துத் தன்னை மறந்திருந்தார். பார்வதிபாகர் விருஷபாரூடராகத் தரிசனங் கொடுத்து மதலாய் யாதுவேண்டினை? என்றனர். புளகாங்கிதனாய் நாத்தழுதழுப்ப ஆனந்த நீர் வடிய, என் ஐயனே! சிறியேன் தவத்துக் கிரங்கி அருளிய தெய்வமே! என் தந்தையைக் காணவேண்டு மென்னவே, அன்பனே! சகோதரர்களோடு உன்னைப் பார்க்க உன் தந்தை இதோ வந்திருக்கின்றான் என்றனர். வந்த தந்தை முதலிய நூறு பேர்களையும் பராசரர் அடிபணிந்தனர். சத்தி முனிவர் புதல்வனது முகத்தைப் பார்த்து அப்பா மகனே! உலகத்தில் நல்ல மக்களைப் பெற்றோர்க்கு அரியது ஒன்று மில்லை என்பர். அதற்கேற்ப முன் செய்த தவத்தால் உன்னைப் பெற்று நான் கைலாய பதவி பெற்றேன் என மகிழ்ந்து கூறி வசிஷ்டர் பாதத்தை வணங்கி துணைவருடன்

கைலாயமலை சேர்ந்தனர். ஏத்திப் பணியும் பராசரர் விரும்பிய வரப் பிரசாதமருளி மங்கையோர் பங்கர் மறைந்தனர்.

பின்னர்ப் பராசரர் என் தந்தை முதலானவர்களைக் கொலை செய்த பாதகர்களாகிய அரக்கர் குலம் நாசமாகும்படி செய்கிறேன் என்று அபிசார வேள்வி செய்யக்கருதி இருப்பினாலும் மரத்தினாலும் ஜுஹு, உபபிருது முதலிய பாத்திரங்களும், பாசிக்கொத்துகளாகிய சமித்துகளும் அமைத்துக் கொண்டு கருப்பு முண்டாசு கட்டிய ருத்து விக்குக்களினாலே காலம் தவறாது விதிப்படி கரும் பாம்பினுடையவும் கரிய அஜத்தினுடையவும் வபையினால் ஹோமம் பண்ணி பூரணாகுதி செய்யத் தொடங்கினர். அப்பொழுது உலகத்திலே பத்துத் திசை களினும் வாழும் அரக்கர் தானவர், பூதவேதாளங்கள் ஒவ்வொன்றாக மென்மேல் ஓலமிட்டு வந்து பூரணாகுதி நெய்த்தாரையால் ஜொலித்து விளங்கும் அக்கினியில் விழுந்து சாம்பிராயின. அப்பொழுது தென் மேற்கினன் வாகனமாகிய பூதமும் நிருதியைத் தூக்கிக்கொண்டு ஆகா யத்திற் றாவிவந்தது. அப்பொழுது நாகாசலம் தோன்றவே, என் அப்பனே! உன்திருவருளாலன்றோ திசைக்காவல் பதவி பெற்றேன் நான் ஒரு பிசகும் செய்தறியேனே ஒரு நிமிஷந்தாழ்த்தாயேல் ஓம குண்டத்து வீழ்ந்து மாய்வேனே என்று சிரமேற் கைகூப்பி நாகாசல த்தைப் பார்த்து முறையிட்டனன், அப்பொழுது எங்கு நோக்கினும் அழுகுரலோசையைக் கேட்ட வசிஷ்டமுனிவர் விவரமுணர்ந்து பராச ரர் முன்னம் வந்து அப்பா மகனே, உன் தாதையைக் கொன்றவனை யேயல்லாமல் எல்லா அரக்கர்களையும் கொல்ல யத்தனித்திருப்பது மாதவர்களுக்கு அழகன்று. ஆதலின் நிறுத்துவாயாக எனலும்: மூத்தோர் சொல்வார்த்தை அமுதம் என்பதற்கியைந்து பராசரர் அதனோடு நிறுத்தினர், மந்திரசக்தியிழுக்காமையால் நிருதியும் தோத்திரித்தபடியே நின்றனன். பின்பு கோதைபாதியன் திருவரு ளால் உயிர் பிழைத்தேன் என்று சிவபரஞ் சுடரைத் தொழுது நாககிரி யிலே தன்பெயரால் ஒரு தீர்த்தம் பிரதிட்டித்து உயிர் பிச்சைகொடுத்த அர்த்தநாரீசுவரரை வலமவந்து வணங்கித் தோத்திரித்து வரம்பெற்று கிருஷ்ணாங்கனை என்னும் நகரம் சேர்ந்தனன். இந்த தீர்த்தத்தில் மூழ்கி அர்த்தநாரீசுவரரைத் தரிசித்து வணங்கினோர் மனத்துயர் நீங் கும். சிவபுண்ணிய சிந்தையுண்டாய் நல்வினை செய்து மறுமையின்ப மனுபவிப்பர் என்றார் சூதமுனிவர்.

# சத்தரிஷி தீர்த்தமான்மியம்

ஒழுக்கந்தவருத உத்தமர்களே! கிருதயுகத்திலே மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காத்து நீதிதவருது செங்கோல் செலுத்தி தரும சிந்தை பெற்று மஹாதைசுவரிய சம்பன்னனுகிய சுகேது என்னும் அரசன் சுவேதி என்னும் கற்பின மனையாளோடு கூடி இல்லறம் நடத்தி வந்தனன். அப்பொழுது அதிவிருஷ்டி அநாவிருஷ்டி முதலிய தோஷங்களால் பஞ்சம் அவமிருத்தியு சத்துருபயம் முதலியன இல்லாது மனக்களிப்பினேடு பிரஜைகள் வாழ்ந்திருந்தார்கள். பின்பு தாயாதிகள் குரோதங்கொண்டு யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். ரத கஜதுரகபதாதிகளுடன் பலநாள் போர்முனையினின்று போர்புரிந்து நாளடைவே தேர், யானை, குதிரை, சேனைகள் குறைந்து காலகதியால் தோல்விபெற்றுச் சத்துருக்கள் கைக்கு அகப்படாமல் காட்டில் மறைந்தனன். இதனை அறிந்த பதிவிரதாசிரோன்மணியாகிய சுவேதி மிகக் கலங்கி அரசன் ஒளித்திருக்கும் வனத்துட் சென்று தன் நாயகனைக் கண்டு சந்தோஷித்துத் தங்களுக்கு நேர்ந்த அவ காலத்தை நினைந்து வருந்தினள். மனைவியாரைக்கண்ட அரசன் மனம் நொந்து அடி பெண்ணே! அந்தப்புரத்தில் அரிவையர் பணிசெய்யப் பஞ்சு மெத்தையில் வைக்கினும் பாதம் நோமென்றவாறு உல்லாசமாக விருந்த நீ கல்லு முள்ளும் அடர்ந்த காட்டிற் கொடிய மிருகங்கள் கூச்சலிட எவ்வண்ணம் சகித்திருப்பாயெனக் கூறிச் சோர்ந்த கணவன் கண்ணைத் தன் முன்றானையாற் றுடைத்து என் பிராணநாயகா, தேசராஜாக்களும் திருவடி வணங்கச் சிங்காசனத்திருந்து செங்கோல் செலுத்தும் தேவரீர் சுகம் என் சுகம், தேவரீர் கஷ்டம் என் கஷ்டமன்றோ! உடலும் உயிரும் கலந்தே சுகதுக்கங்களை அனுபவிக்குமாதலால் உடல்போன்ற யான் உயிராகிய தேவரீரைவிட்டு எங்ஙனம் தனித்திருப்பேன் என்று கூறி அம்புகள் தைத்தவடியும் உதிரங்களைத் துடைத்துச் சிவந்த புண்களைத் தடவி வருந்தினள். அம்புபட்ட காயங்கள் ஆருமையால் உடல்மெலிந்து நடக்கச் சக்தியற்றவனுகிய கணவனைக் கண்டு தன் தோளின்மீது ஏற்றிச் சுமந்துதிரிந்தனள். காய்கனி முதலியன கண்டவிடத்தருந்தி நீரருந்தி நாள்போக்கி வாழ்ந்தார்கள். மிகவும் சக்தி குறைந்து மனைவியார் தொடைமீதுதலை வைத்து மன்னன் மயங்கி இருந்தனன். நவமன்மதனைப் போன்ற அழகிய வடிவம் புழுதி பொருந்தி மெலிந்து உணவின்றிக் களைத்

திருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்து வருந்திச் சுவேதி ஒரு மர நிழலில் இருந்தனள். அவ்வனத்து அவ்விடத்து வந்த அங்கீரஸ முனிவர் சந்திர பிம்பம்போன்ற முகம் பொருந்திய யவ்வன மங்கை இருப்பக்கண்டு திகைத்து நோக்க, மடியின்மீது அரசகுமாரன் சயனித்திருப்பதையும் கண்டு ஐயங்கொண்டு மனம் விண்டு சமீபத்து வந்து அம்மா! உன்னைப்பார்க்கால் இராஜகுமாரிபோலக் காண்கிறது. உன்மடியில் சோகமுற்றிருப்பவர் அரசிளங்குமாரனுகவும் தோன்றுகிறது. நீங்கள் யார்? இவ்விடம் வரவேண்டிய காரணம் என்னை என வினவினர். மங்கை அழுது சுவாமி தாயாதிகளால் ஓட்டப்பட்டு நாட்டைவிட்டுக் காட்டையடைந்தோம். என் பெயர் சுவேதி என்பர்; என் நாயகர் பெயர் சுகேது என்பர். தபோநிதியே! எங்கள் கஷ்டம் நீங்கிச் சுகத்தைப்பெறும் நாளும் வருமோ? கூறுதல் வேண்டுமென்று வேண்டினள். எவரேனும் ஜன்மாந்தர வினை அனுபவித்தே தொலைத்தல் வேண்டும். ஆதலின் வினைப்பயனின் படி அரசாண்ட நீங்கள் அன்னஆகாரமின்றிக் காட்டிலே திரியுமாறு நேர்ந்தது. அன்னமின்றி இன்று வருந்துகின்ற நீங்கள் நாளை அரியாசனத்திலிருந்து அரசாளினும் ஆளுவீர்கள். எல்லாம் ஈசன் செயலால் நடக்கும், ஓ பெண்கள் நாயகமே! பயப்படவேண்டாம். புத்திர பாக்கியம் வெற்றி ஐசுவரிய முதலியனவெல்லாம் அடைதற்கு ஒரு உபாயமிருக்கின்றது. அவ்வாறு செய்வீர்களாயின் கூடிய சீக்கிரம் சுகத்தை அடைவீர்கள் என்றார். இதனைக்கேட்ட சுவேதி என்னும் நங்கை ஓ ரிஷிசிரேஷ்டரே! நாங்கள் கடைத்தேறும் உபாயத்தைக் கருணைகூர்ந்து அனுக்கிரகிக்க வேண்டுமையா என்று கேட்டனள். கேளுமம்மா! அரசிளந்தோகையே! நவராத்திரிவிரதம் என்றொரு விரதமுண்டு. அது துர்க்கையைக் குறித்து மூன்றுநாள், இலட்சுமியைக் குறித்து மூன்றுநாள், சரசுவதியைக் குறித்து மூன்றுநாள் ஆக ஒன்பது நாள் விதிப்படி பூசித்து வந்தால் சகல நன்மையும் பொருந்தும் என்று கூறினர். அவ்வாறே செய்கின்றேன் சுவாமி எனலும், என்கூட வாருங்கள் என்று நடந்தார். புருஷனைத் தோளின்மீது சுமந்துகொண்டு சுவேதி சென்று முனிவர் ஆசிரமம் சேர்ந்து விதிப்பிரகாரம் நவராத்திரிவிரத ஆரம்பஞ் செய்து ஒன்பது நாளும் விதிப்படி பூசித்தனள். சுகேதுவும் ஆரோக்கியமுற்றான். அரசிளநங்கை கர்ப்பமுற்று நல்ல ஓரையில் அழகுவாய்ந்த ஆண்மகவு ஈன்றாள். ரிஷிசிரேஷ்டர் ஜாதகர்மமும், சூரியப்பிரதாபன் என்னும் நாமகரணமுஞ் செய்து அடைவே சவுளோப நயனங்களுமியற்ற



நவராத்திரியில் தொழுது சூரியப்பிரதாபன் ராஜ்யபாரம் பெறல்.

வளர்ந்து சகல வித்தைகளும் கற்று வளர்ந்தனன். பின்னர்த் தீர்த்த யாத்திரை நிமித்தம் அங்கிரசர் புறப்பட்டனர். அவருடன் சூரியப் பிரதாபனும் சென்றனன். ஆவணிமாச பூருவபக்ஷ அஷ்டமித் திதி முதல் ஆரம்பித்துச் செய்யப்பட்ட மஹோநந்தவிரதமாகிய கேதாரே சுர விரதத்தின் பொருட்டுச் சகல தேவர்களும் எல்லா முனிவர்களும் அரசர் முதலாயினோர்களும் திருச்செங்கோட்டிற் பிரசன்னராயினர். அப்பொழுது அங்கிரஸரும் சூரியப்பிரதாபனும் வந்திருந்தார்கள். புரட்டாசிமாச அமரபக்ஷ சதுர்த்தசியன்று கேதாரேசுவர விரத சமாப்தியும், மஹாளய பக்ஷ அமாவாசையன்று ஸ்ரீ அர்த்தநாரீசுவர தரிசனமுமாதலின் அன்பினோடு தரிசித்து சூரியப்பிரதாபன் சித்த மெலிந்து மெத்தக் கலங்கி அங்கீரஸரை வணங்கி சுவாமி! எல்லா ராஜகுமாரர்களும் பரிவாரங்கள்சூழ சர்வபூஷணலங்கிருதராய் இருக் கிறார்கள். அடியேனே மிகுந்த தீனனாக இருக்கின்றேன். எளியேனும் அரசகோலத்துடன் வாழ்வேனோ என்று கலங்கிய ராஜகுமாரனைத் தேற்றி இன்றையத்தினம் அன்பினோடு ஸ்ரீ அர்த்தனாரீசுவர தரிச னம் செய்த உனக்கு இனி மனத்துயர் வராது. சுகத்தை அடை வாய். ஆனால் இதன் முன்னர் உன் தாயார் சுவேதிக்கு நவராத்திரி விரத உயர்வைக் கூறி விரதமனுஷ்டிக்கச் செய்தேன். ஒவ்வொராண் டினும் நடத்திவருகின்றாள். அதன் பின்னர்த்தான் பிறந்தாய். அதே விரதத்தை நீயும் இவ்விடத்துச் செய்வாயானால் உடனே விஜ யத்தை அடைந்து மகிழ்ச்சி பெறுவாய் என்பது நிச்சயம் என்று பின்னரும் சொல்கின்றார்.

ஓ சூரியப்பிரதாபா! உலகவுயிர்களுக்குத் தாய்தந்தைகளாவர் சத்தியும் சிவமுமே என்றும், அச்சத்தியும் சிவமும் வேறல்லர், ஒரு வரே என்றும் விளக்குவது ஸ்ரீ அர்த்தநாரீசுவர முகூர்த்தமாகும். உடலில் வலக்கூறு சிவபரமாகிய புருஷபாகமும், இடக்கூறு சத்தி பரமான ஸ்திரிபாகமுமாம் என்னும் உண்மையைத் தேவ சாயலாகிய மானுஷ்யவடிவில் ஆண்களுக்கு நாடி முதலியன வலப்பக்கம் வலிந்தும் பெண்களுக்கு இடப்பக்கம் வலிந்தும் காண்பதுவே போதியசான்றாம். இவ்வண்ணம் இடப்பாகம் பெற்று விளங்கும் பராசத்தியாரின் அமி சங்களே மற்றெல்லாச் சத்தியுமாவர் என்றறிஞர் கூறுவர். விஜயத் தைக் கொடுக்கும் சத்தியைத் துர்க்கை என்றும், ஐசுவரியத்தைக் கொடுக்குஞ் சத்தியை இலட்சுமி என்றும், கல்விஞானத்தைக் கொடுக் குஞ் சத்தியைச் சரசுவதி என்றும் புகழ்வர். இம்முச்சத்திகளுக்கும் அதிஷ்டானமாக வீற்றிருக்கும் பராசத்தியாகிய ஸ்ரீ அர்த்தசிவாம்பி

கையை வத்தித்தொழுது பூசித்தவர்கள் எல்லாச் சத்திகளையும் எல்லாத் தேவர்களையும் வத்தித்தொழுது பூசித்த பலனை அடைவார்கள். ஓ அரசிளங்காளாய்! விஜயத்தைக் குறித்துத் துர்க்கையை மூன்று நாளும், ஐசுவரியத்தைக் குறித்து இலட்சுமியை மூன்று நாளும் கல்வி ஞானத்தைக் குறித்துச் சரசுவதியை மூன்று நாளுமாக ஒன்பது நாள் பூசிப்பதேயன்றோ நவராத்திரி பூஜை. இவ்விதமாகவன்றோ உன் அன்னையும் பூசிக்கின்றனள். ஹே சூரியப்பிரதாபா! ஆன்மகோடிகளை இரக்ஷிக்கும் பொருட்டு பராசத்தியாகிய ஸ்ரீ அர்த்த சிவாம்பிகையே துர்க்காதேவியாயும், இலட்சுமி தேவியாயும், சரசுவதி தேவியாயும் வீற்றிருப்பதாக நினைந்து நாங்கள், பிரதிஷ்டித்து மூழ்கிப் பகவிபெற்ற சத்தரிஷி தீர்த்தத்தில் அன்புடன் சங்கற்பபூருவமாக நாளை முதல் ஒன்பது நாளும் முழுகிப்பூசிப்பாயேல் உடனே அனுக்கிரகத்தைப் பெற்று மகிழ்வாய் என்றனர். அன்றிரவு அதே தியானமாக விருந்து விடியற்காலை எழுந்து சத்தரிஷி தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து அங்கிரசராணையின் வண்ணம் ஆகமவிதிப்படி ஒன்பதுநாளும் பூசித்து வணங்கி மனங்கசிந்து ஒரே நிலையான தியானத்திலிருந்தனன். அப் பரமேசுவரிதோன்றி மதலாய்! வருந்தாதே நின் பூசைக்கு மகிழ்ந்தேம் உடனே சென்று பகைவரை வென்று விஜயைசுவரிய ஞானங்களைப் பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். அந்த சப்தரிஷி தீர்த்தத்தின் கீழே மஹாத்மாக்கள் சிவயோகத்திருக்குங் குகையிலிருந்த அங்கிரஸரிஷிதுணர்ந்து நிஷ்டை தெளிந்து வெளியில் வந்து திருவருளாற் பெற்ற அஸ்திரசஸ்திரங்களை யெல்லாம் வைத்துப் பூசித்து ஆசீர்வதித்து சூரியப் பிரதாபனையும் பூசிக்கச் செய்தனர். அந்த ஒன்பதாம் நாளாகிய நவமியே மஹாநவமி என்றும், அப்பூஜையே ஆயுதபூஜை என்றும் பெயர் பெறும். மறுநாள் அங்கிரஸர் "விஜயத்தைப் பெறுவாயாக" என ஆயுதங்களைச் சூரியப் பிரதாபனிடம் கொடுத்தருளினர். வணங்கிப் பெற்ற சூரியப் பிரதாபன் எல்லையில்லாத சந்தோஷமுற்றுப் போர்க் கோலங்கொண்டு சமர்க்களஞ் சென்று பகைவரை வென்று விஜயம் பெற்றனன். ஆயுதங்களையேந்தி வெற்றி பெறப்புறப்பட்ட நாளே விஜயதசமியாகும். விஜயம் பெறல், ஆயுதமேந்தல், திரவிய விருத்திபுரிய ஆரம்பித்தல், வித்தியாரம்பஞ் செய்தல் முதலிய வற்றிற்கு அவ்விஜய தசமியை நன்னாளென்று இந் நாளுங் கொண்டாடுகிறார்கள். அந்நாட்களுக் கேற்றம் அர்த்தசிவாம்பிகை யாலேயே ஆசீர்வதித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தபோதனர்களே! இவ்வாறு விஜயம் பெற்ற சூரியப்பிரதாபன் தாய்தந்தையர்

களை நகரத்துக்கழைத்துப் போய்க் களிப்புண்டாக்கி இராஜசின்னங்களுடன் வந்து சக்கரிஷி தீர்த்தத்தில் முழுகி சுவாமிதரிசனஞ் செய்து பூஜை நிவேதனங்களுக்கு மானியங்கள் விட்டு தான் முழுகி விஜயமடைந்த சக்கரிஷி தீர்த்தத்துக் கீழிருக்கும் குகைகளுக்கு வேண்டிய சௌகரியங்களும் சிஷ்யவர்க்கங்கள் தங்களுக்குள்ள ஐயங்களை மஹாத்துமாக்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் அப்பியசிக்கவும் தகுதியுற அக்குகையருகே ஒரு † மச்சும், கைவல்லியமான சித்துக்களை விளையாடிப்பார்க்கும் தானமாகிய சித்தாடு பாறையைச் சூழ உயர்வு பொருந்திய தபோவனமும் இயற்று வித்தனன் பின்பு தன் நகரஞ்சென்று விவாகஞ் செய்துகொண்டு ராஜ்ஜிய பட்டாபிஷேகம் பெற்று வாழ்ந்து மறுமையிற் சிவலோகம் சேர்ந்தனன். ஆகலால் இத்தீர்த்தத்தில் முழுகிச் சிவபரஞ்சுடரைத் தரிசித்தவர்கள் எதனை அபேக்ஷிக்கின்றார்களோ அதனைக் கைகூடப் பெறுவார்கள் என்றார் சூதமுனிவர்.

---

## இராமதீர்த்த மான்மியம்.

வைராக்கியமுற்ற மாதவர்களே! செந்தாமரைப் பூம்பொகுட்டிலிருந்து சிருஷ்டித் தொழில் புரியும் திசைமுகன் ஒருயாகமியற்றக் கருதினன். அதை உணர்ந்து தேவேந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் மற்ற யாவரும் வந்து சேர்ந்தார்கள். அத்தருணம் பிரமதேவர் பாரியாகிய சரசுவதி வராமலிருந்தனள். அதனை உணர்ந்தவேதியன் இடைக்குலக் கன்னியாகிய காயத்திரியை இரண்டாம் பாரியாகக்கொண்டு தீக்ஷைபெற்று யாகசாலைக்குட் பிரவேசித்து யாகத்தை நடத்தினன். சரசுவதி நதிவடிவாகி அந்த யாகசாலையை அழிப்பதாக முந்தினள். அச்சினத்தைத் தணிவித்து வாணியையுங்கூடவிருந்தியாகத்தை முடிவு செய்தார்கள். இந்த வேதியன் தேவியாகிய காயத்திரிதேவி ஒரு நாள் நாகாசலத்துக் கெழுந்தருளி நாரிபாகனை வணங்கி பகவனே! அன்பர் நாயகனே! அறிவு அருள்பவனே! சூரியசந்திரர்களுக்கு அருள் புரிந்தியக்குதலானும், வணங்குமடியார்களின் பிறவியாகிய வித்தைவறுத்து விடுதலானும் பார்க்கரென்னும் திருநாமமுற்ற ஐயனே! என்று துதித்துப்பலகாள் தவம் புரிந்தனள். தவத்துக்கிரங்கிய மாது பாகன் பிரசன்னராய்க் காயத்திரியை யாதுவேண்டினை கூறுக என்றனர். சுவாமி! மக்களைப்பெறாத மனைவியும், பலன்றராத மரமும், சந்திரசூரியர் எய்தாத நாளும், கன்றீனாப் பசுவும், மங்கலமில்

† மஹாத்மியர் மச்சு என்பதை மாமியாமச்சு எனக் கூறுகின்றார்கள்.

லாத மங்கையும் எந்தையே! தேவரீர் திருநாமமில்லாத மந்திரமும் பிரயோசனமற்றனவேயாகும். என் அப்பனே! விசாலமாகிய சமுத்திரத்திலுள்ள பொருள்களையெல்லாம் இகழ்ந்துவிட்டு அதிலுள்ள உயர்ந்த மாணிக்கத்தைச் சிரமேற்கொள்வது போல, வேதமாகிய கடலிலுள்ள மந்திரங்களை யெல்லாமிகழ்ந்து, ஞானிகளாவார் உன் நாம மந்திரத்தையே கொள்வார்கள். அகத்திருளை ஒழித்து தெளிவை உண்டாக்குதற்குச் சிவமந்திரத்துக்கே ஆதிக்கிய முளதாகலின் தேவரீர் திருநாமம் பொருந்தாதது எனக்கண்டு காயத்திரியாகிய என் மந்திரத்தை மாதவர்கள் கைக்கொள்ளாமலிருக்கின்றார்கள். ஓ சம்புவே! உன் அருளாலே உன்னையே பணிந்தேனையா! வேதங்களாலு மறியாதவனே! மெய்த்தவர்கள் உன்னும் பொருளே! சரணம். சரணம். இகபரந்தருபவனே சரணம். சரணம். விடைமேல் வருவோனே சரணம். விமலையோர் பங்கா சரணம். சரணம், பிரபுவே! என் மந்திரத்தின்மீது உன்நாமமுறுதற்கு வரந்தரவேண்டும். இறைவனே! தேவரீரை எள்ளளவு நினைந்தவர்களுக் கெய்தாப்பதனுண்டா! குறையாதவலியும் குறையாத நிதியும் குறையாத மங்களமுமடைவார்களன்றோ. சிவபரஞ்சுடரே! பர்க்கசப்தத்தை என் மந்திரம் பெறத்தக்கவரமே அடியாளுக்கு வேண்டும் என்று மனமுருகி வேண்டினள். இளஞ்சந்திரனை முடியிலே தரித்த இறைவன் கருணை கூர்ந்து காயத்திரிமாதே! நீ வேண்டியவாறு காயத்திரி மந்திரத்தில் பர்க்க சத்தம் பொருந்தி நிலவுக. வேதசாரமாகிய அந்தக் காயத்திரி மந்திரத்தைச் சந்தியாகாலங்களில் வேதியர்கள் தவறாதோதி வருங் கடப்பாடுடையவர்களாக என ஆலயத்துள் மறைந்தனர். காயத்திரிதேவி ஆனந்த பரவசங்கொண்டு உமை யொருபாகரைப் போற்றிப்பணிந்து ஒரு தீர்த்த பிரதிட்டித்து மூழ்கி ஸ்ரீ அர்த்தநாரீசுரரை வணங்கி விடைபெற்று வேதனிடஞ் சேர்ந்தனள் அக்காயத்திரி பிரதிட்டித்த தீர்த்தத்திற் புனிதமாகிய தர்ப்பைப்புல் விருத்தித்திருக்கும். இத்தீர்த்தம் மிகவும் விசேஷமானது என்று சூதமுனிவர் பின்னும் சொல்கின்றார். உண்மையை உணர்ந்த உத்தமர்களே! தசரத சக்கிரவர்த்தி திருமகனாகிய இராமர் தாடகை சங்காரஞ்செய்து அகலிகைக்கருள் சொரிந்து வில்லை யொடித்து ஜானகி மணமுடித்து மணிமுடி பொருந்தாது சடைமுடி தரித்து வனத்திற்றிரிந்து மனையாளை வல்லரக்கன் கவர்ந்து செல்ல வானரசேனையைக் கூட்டிக்கொண்டு வாரிதியிலணைகட்டி இராவணாதியரை மாய்த்தனர். அதனாற் சூழ்ந்த பிரமஹத்தியை அகற்றும் பொருட்டாகச் சேதுவினருகே இராமலிங்கப் பிரதிட்டை செய்து

வடக்கு நோக்கிவரும் பொழுது நாகாசல மான்மியத்தை உணர்ந்தவ ராதலின் அங்குற்ற முனிவர்களெதிர் கொண்டழைக்க வணங்கி அவர் களோடு கிரிவலம் வந்து மலைமீதேறிப் பாவநாசத்தில் மூழ்கி வடக்கு நோக்கச் சமீபத்தில் தர்ப்பைகள் பூத்து ரமணியமாக விளங்கிய தீர்த் தத்தைக்கண்டு அதில் மூழ்கியவுடனே தேகம் பாரமிறங்கியது போல மனம் பரிசுத்தமாயிருக்கக் கண்டு அதிசயித்து காயத்திரியால் பிரதிட் டித்த தீர்த்தமென முனிவர்களாலே தெரிந்து மகிழ்ந்து உமையொரு பாகரைப் பூசித்து வணங்கி எம்பெருமானே! மாசுநீக்கியருளல் வேண்டு மென்று பணிந்து என் மனசைப் புனிதமாக்கிய தீர்த்தத் துக்கு அடியேன் பெயரும் பொருந்தவேண்டுமென வேண்டுதலும், வேண்டிய வேண்டியாங்குதவும் வித்தகன் அங்ஙனமேயாகுக என அருள் புரிந்தனர். பால்வண்ண மேனியனைப் பாடிப்பாடி விடை பெற்று அரிதிற் பிரிந்து சீதாதேவி இலட்சுமணர் இராமர் மூவருஞ் சென்றனர். கேட்டீர்களோ மாதவர்களே! அன்று முதல் அத்தீர்த் தத்துக்கு இராமதீர்த்த மென்றும் பெயர் வழங்கி வருகின்றது. அத் தீர்த்தத்தில் மூழ்கினோர் பாவநீங்கிப் புனிதராவார்கள், மற்றைத் தலங்களில் நூறுவருஷம் ஜபித்த காயத்திரிப் பலனை அத்தீர்த்தக் கரையில் ஒரு முறை நினைத்தாற் போதும் என்றார் சூதமுனிவர்.

## வாயுதீர்த்த மான்மியம்.

மெய்யுணர்ந்த வேதியர்களே! முன் ஒரு காலத்தில் வாயுதேவ னுக்கும் ஆதிசேடனுக்கும் பகைதோன்றி நாகராஜன் ஆயிரம்படங் களையும் விரித்து மேருகிரியை மூடிக்கொண்டனன். அதனைப் பெயர்த் துத் தன்வலிகாட்டும் நிமித்தம் பிரசண்டமாக வாயு ஓங்கி மோதினன் அதனால் அநேக கோடி பிராணிகள் மாய்ந்தன. பல ஜீவர்கள் கலங்கி மெய் சோர்ந்தன. இதனால் உலகத்திற் பல இடுக்கண்கள் நேர்ந்தன. இதனை ஓர்ந்த வாயுதேவன் திடுக்கிட்டு ஆ! ஆ!! என்ன பாதகம் புரிந் தேன். வலிகாணும் வகையில் விளையாட்டாகச் செய்த காரியத்தால் எல்லையில்லாத உயிர்களுக்கு இமிசை நேர்வதாயிற்றே! இதனாலன்றோ கோபமே கொலை முதலியபாதகங்களுக்கு மூலமெனக் கொண்டு "ஆறு வது சினம்" என்கின்றார்கள். இனி இப்படிப்பட்ட தீமைகளுக்கு இடந்தருவனேல் திசை காவலதிகாரமும் போய்த் தீராநரகத்தை அனுபவிக்கவேண்டும் என்று தேர்ந்து, இப்பாதகம் நீங்குதற்கு நாக ராஜன் பூசித்து அவம்போக்கித் தவமுற்ற நாகாசலத்தை அணுகித் தீர்த்துக்கொள்ளுதல் நலமென வுன்னித் திருச்செங்கோட்டுக்குச்

சென்று உமையொருபாகரை வணங்கித் தன்பெயரால் ஒரு தீர்த்த மியற்றி மூழ்கி அப்பவத்தினின்று நீங்கி நல்லவரங்களைப் பெற்றுத் தமதிடஞ் சேர்ந்து சிவத்தியானத்துடன் மகிழ்ந்து வீற்றிருந்தான். இதில் மூழ்கினோர் சிவநேசமும், பாவத்துக்கஞ்சுதலும், புண்ணியத்தை விரும்புதலும் பொருந்தி வாழ்ந்து மகிழ்வர் என்றார் சூதமுனிவர்.

## ஈசானதீர்த்த மான்மியம்.

சிவமே பொருளெனத் தெளிந்த ஞானிகளே! சாம்பமூர்த்தியைப் பூசித்துச் சாரூபமும் வடகீழ்த்திசைக் காவலும் பெற்ற ஈசானரால் பிரதிட்டித்துப் பெருமை பொருந்திய ஈசானதீர்த்த மான்மியத்தைக் கேளுங்கள். முனிவீர்காள்! குசத்துவஜன் என்னும் முனிவனது அருமைவாய்ந்த புத்திரிகாரத்தினமாகிய வேதவதியானவள் வாக்கினாலும், மனதினாலும், மாயவன் புகழையே பாராட்டிக்கொண்டு சடைமுடி தாங்கித் தவம்புரிந்தனள். இலங்காதிபதியாகிய இராவணன் அக்கன்னிகையின் சௌந்தரியத்தைக் கண்ணுற்றுக் காமபாணத்தாற் கலங்கி அருகிற் சென்று வடிவுடை மங்கையே! உன்னை வேண்டியன்றோ உலகம் தவஞ் செய்யவேண்டும். தவக்கோலங் கொண்டு நீ தவஞ்செய்கின்ற காரணம் தெரியவில்லையே. நீ யார் மகள் என்றனன். குசத்துவஜன் என்னும் முனிவன் ஓதும் வேதத்தில் உற்பவித்தமையால் வேதவதி எனப் பெயரிட்டழைத்தனன். வாசுதேவனை என் மகளுக்கு வரனாக வரித்திருக்கின்றேன் என்று என் பிதா கூறுதல் கேட்டு வந்தவர்களெல்லாம் ஆசையற்று அகன்றனர். என் பிதா நித்திரைபுரியுங்காலத்திலே சம்பு என்னும் பெயர் கொண்ட தைத்தியனொருவன் என் பிதாவைக்கொலை செய்தனன். என் தாயார் உடன்கட்டை ஏறிவிட்டனள். என் தந்தையின் எண்ணத்தை முடிக்குமாறு இம்மாதவவேடம் பூண்டிருக்கின்றேன் என்றனள். மெல்லிய ஓசையால் கூறும் இனியமொழி கேட்டுக்கொண்டே அவயவாதிரூபலாவண்ணியங்களை நோக்கி ஆசைக்கடலுள் ஆழ்ந்தவனாய் ஓ பெண்கள் நாயகமே! நான் இலங்கைமன்னன் இராவணன் என்னும் பெயரினன். புலத்திய மஹாமுனி பௌத்திரன். குலத்தினாலேனும், பலத்தினாலேனும், செல்வத்தினாலேனும், உருவத்தினாலேனும், ஏனைய நலத்தினாலேனும் நாராயணன் எனக்கு ஒப்பானவனல்லன். உடம்பை ஏன் உலர்த்துகிறாய்? எனக்குப் பாரியாய்த் தாரதலங்களுக்குத் தலைவியாகும் நினைவைக் கொள்வாயாக எனக் கூறினன். காய்ச்சிய நாராசம் புகுவதுபோற் செவியிற் சொல்

செல்ல வருந்தி திருமார்பனை வரித்தேனென்று சொல்லியும் பயித்தியம் கொண்டவனைப்போல அடாத வார்த்தை கூறினாய்; புலத்திய முனி குலமன்னவனுக் கிதுதான் குணமா? என்றனள். குயிலோசையாள் இவ்வண்ணம் கூறுதலும் மன்மதன் பூவம்பால் உயிரை அரிந்திடத்தரியானாய் வேதவதியை எட்டிக் கட்டிப் பிடித்தனன். அடேபாபி, என்னை அவமானப் படுத்தினையன்றோ! உனக்கும் இலங்கைக்கும் உன் கிளைக்கும் நாசமுண்டாக்கத் தோன்றுவேன் என்று அக்கினிப் பிரவேசமாய்விட்டனள்.

அதன்பின் இலங்கையிலே ஒரு தடாகத்திலே தாமரையில் ஜனித்து அழகிய சிசுவாய் விளங்க, அச்சிசுவை ஏவலாளர் எடுத்துப் போய் இராவணனிடம் கொடுத்தனர். இக்குழந்தையால் இலங்கை அழியுமெனக் கேட்டு ஒரு பேழையிலிட்டுச் சமுத்திரத்தில் விட்டான். அப்பேழை மிதந்துபோய் மிதிலை நாட்டுத்துறைமுகத்திலொதுங்கி மண்ணிற்புதைந்து கிடந்தது. புத்திரகாமேட்டியாகஞ் செய்யுமாறு ஜனகராஜன் உழுத படைச்சாலி லிப்பேழை எழுந்தது. திறந்து பார்க்க அழகு வாய்ந்த பெண் குழந்தை யிருக்க, தேடப்போன மருந்து காலிலகப்பட்டதுபோற் கண்டு ஆனந்தங்கொண்டு அருமை பெற வளர்க்க வளர்ந்தது. உழுபடைச்சாலுக்குச் சீதை என்று பெயராதலின் அப்படைச்சாலில் அகப்பட்ட பெண்ணுக்கு சீதை எனப் பெயரிட்டழைத்தார்கள். அருமையாகப் பெற்ற பெரிய வில்லை வளைக்கும் வலிமையுடையோனுக்கே சீதையை மணமுடிப்பதென்னும் கருத்துடையனாக இருந்தான் ஜனகன். தாசரதி அவ்வில்லை ஒடித்துச் சீதையை மணந்து தந்தை சொல் காக்கு நிமித்த சடைமுடி தாங்கி வனத்திற்புகுந்த கணவனுடன் சித்திரகூட பருவதம் சேர்ந்து ஓர்நாள் தன் தொடையின்மீது தலையை வைத்துக் கணவன் துயிலவிருந்தனள். நல்லுணர்வற்ற ஜயந்தன் காகவுருவுகொண்டு அத்தேவியின் முலையைக் கொத்தினான். திடுக்கிட்டு ரகுபதிக்குணர்த்த விழித்து நோக்கி ஒரு தர்ப்பையைக் கிள்ளி குருவிக்குத்தக்க ராமசரம் என்றெய்யவே அது பாய மனம் நொந்து தரையில் வீழ்ந்து வணங்கிப் பலவாறு வேண்டி அழுதனன். வேண்டுகோளுக்கிரங்கிய ஜானகிராமன் சினந்தவிர்ந்து நீ கொண்ட காக்கையினங்களின் இருவிழிகளுக்கும் ஒருமணியே நிற்க எனக்கூறி அனுக்கிரகிக்கினும், பதிவிரதையின் முலையைத்தீண்டிய குற்றத்தால் காக்கைத் தன்மை நீங்காமல் வருந்தி அதை நீக்கிக் கொள்ளுமாறு காசிமுதலிய பல தலங்களிற் சென்றும் தீராமல் மெய்நடுக்குற்று அந்தரஞ்சென்று இந்திரன் முன்னின்று தனக்கு

நேர்ந்த கேட்டினைக் கூறி அழுவே, மகனுக்குற்ற தீங்கினை ஓர்ந்து பதிவிரதையாகிய தீ முன்னர் விடணுகிய கொசு வனுகக்கூடுமா? மகனே! ஜயந்தா! நான் படுகிற துயர் போதாதா? உனக்கும் இப் புத்தி வந்ததா? என்று கலங்கி ஆயினும் இதற்கு வேறு எவ்வித பரிகாரமுமில்லை. முக்கட்பெருமான் பொற்பதமே துணை புரியும். எனக்கு நேர்ந்த ஆபத்துகளை அவ்வாறே பரிகாரஞ் செய்திருக்கின் றேன்; எம்பெருமான் ஆன்மாக்களை இரட்சிக்கும்பொருட்டு உமை யொருபாகராக நாகாசலத்தின்கண் வீற்றிருந்தருளுகின்றார். அவ் விடஞ்சென்று அங்குள்ள புண்ணியத்தீர்த்தத்துள் மூழ்கி உட்கொண்டு அம்மையப்பரைத் தரிசிப்பாயேல் இத்துயரினின்று நீங்குவாயென்று உறுதி கூறினன். கேள்வியுற்ற ஜயந்தகாகம் அதிவேகமாகப் பூலோ கத்துக்கு வந்து நாகாசலத்தைக் கண்டு துதித்து மேலே செல்லும் பொழுது பெரிய காற்றும் மழையும் சுழன்றடித்தது. நெடுந்தூரம் வந்த அயர்வாலும் காற்றுமழையாலும் சோர்ந்து ஈசானதீர்த்தத் தருகில் விழுந்தது. அச்சுனை மழையால் பெருகிக் கடைபோயிற்று. அந்நீரை மூன்று விழுங்கு அருந்தினதாலும், நாகாசலக் காற்றின் ஸ்பரிசத்தினுலும் காக உரு நீத்துப் பழைய தேவ உருவம் பெற்று ஜயஜயபோற்றி மங்கையோர் பங்கா என்று தோத்திரம் புரிந்தனன். தேவர்கள் கண்டு ஆச்சரியமுற்று இவ்விதத்தலமும் தீர்த்தமும் உல கத்திலுண்டா என்று கொண்டாடி மகிழ்ந்து பூமாரி பொழிந்தார் கள். தேவர்கள் சூழ ஜயந்தன் ஆலயத்துட் சென்று ஸ்ரீ அர்த்தநாரீ சுவ்ரரைத் துதித்து வரம்பெற்றுப் பொன்னுலகம் சேர்ந்தனன். இத்தீர்த்தத்தில் விதிப்படி மூழ்கி இடையரு அன்பினேடு நாரிபாகனைத் தியானித்துத் தரிசித்தவர்கள் துயரினின்று விடுபடுவார்கள் என்றார் சூதமுனிவர்.

## சரசுவதி, கங்கை, யமுனை தீர்த்த மான்மியம்.

திரிபதார்த்த முணர்ந்த செழுமறையோரே! சரசுவதி, கங்கை, யமுனை என்னும் தேவமாதர்கள் தனித்தனியே அம்பிகாபாகன் திரு முன் சென்று இறைவனே! தேவரீரது திருவடியை தியானிப்ப வர்களே தன்னியர்கள். அந்தச் சிவபத்தர்களுடைய பிறப்பு, ஆசா ரம், குலம், கோத்திரம் முதலியவைகளைப் பாராட்டல் கூடாது. அந்த மெய்யடியார்களுக்குச் செய்யும் பூசையானது சகல தேவர் களுக்கும் பிரீதியாகும். சிவனடியார்கள் எந்தப் பொருளையேனும் பார்த்தாலும், தொட்டாலும், நினைந்தாலும் அப்பொருளுக்குற்றி



நாய் ராஜகுமாரனாகப் பிறத்தல்.

ருந்த பாவங்கள் காற்றிற் பஞ்சுபோற் பறந்துபோம். ஆதலின், ஒப்புயர்வில்லாத ஏற்றமுற்ற சிவபத்தர்கள் சிந்தையில் எளியேங்களை நினைக்கத்தக்க நல்வரமருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். பக்தவத்ஸலனாகிய மங்கைபங்கன் கருணைகூர்ந்து ஓ மாதர்களே! என்னைப் பூசிப்பதன் முன்னர் சிவகணநாதர்களோடு கூட உங்களையும் தியானித்துப் பூசித்த பின்னரே எம்மைப் பூசிப்பார்கள். நீங்கள் அபேக்ஷித்தவாறு அவ்வரம் ஈந்தனமென அந்தர்த்தானமாயினர். ஆனந்த பரவசமாய்த் தங்கள் பெயரால் தனித் தனி ஒரு தீர்த்த மமைத்து மங்கைபங்கனைப் பணிந்து மகிழ்ந்தார்கள் என்றார் சூதமுனிவர்.

## ஜாம்பவந்த தீர்த்த மான்மியம்.

கலிங்க தேசத்திலே சவிதா எனப் பெயரிய மறையவனொருவன் இருந்தான். இளமையிலே வேதசாஸ்திரங்களைப் பயின்று வந்தான். சங்கீதங்களிற் பிரியமுற்றவனானான். இதனால் இசைநூலிற் பழக்கமுள்ளாரிடத்துப் பழகினான். இசையுணர்ந்த தாசிகள் வீட்டிற்குப் போய்வரும் அப்பியாசமுற்று அவர்கள் செய்யும் அலுக்காலும் குலுக்காலும் பிலுக்காலும் மயங்கி முன்னோர் சம்பாதித்து வைத்துள்ள சங்கம தாவரச் சொத்துக்களையெல்லாம் கொடுத்துவிட்டான். தனங் குறைவுற்ற கறிந்த கணிகையர் தங்கள் தனங்களை மறைக்க ஆரம்பித்தார்கள். சொர்க்கத்தைக் கைக்கொள்ளாவிடிற் சுகமில்லையே என்று வருந்திச் சொக்கட்டான் முதலியவைகளாடித் தினம் சம்பாதிக்கும் பணத்தைக் கொடுத்துப் பணம் வருடிக் களித்து வருவான். ஊரிலுள்ள ஏனையோர்கள் செல்வப்பெருக்கால் அடையும் சுகத்தையும் மதிப்பையும் தன் தாழ்வையும் கருதி இவ்வுலகத்திற் செல்வமே பெருமையைக் கொடுக்கவல்லது எனத்தேறி சில கள்ளர்களோடு கூடித் திருடும் முயற்சியிற்றலையிட்டான். சாமானிய திருட்டிற் பிரவேசிப்பதிற் பிரயோசனமில்லை. தக்கதிருட்டாகக் கண்டு கொண்டு அப்பால் அப்பொருளைப் போற்றி யோக்கியனாக நால்வர் மதிக்க வாழ்வோமென்று நினைந்து, களவிற் கைதேர்ந்த வல்லவர்களுடன் கூடி சோமநாதம் என்னும் க்ஷேத்திரத் திருவிழாவுக்குப் போய்ச் சேர்ந்தான். அவ்வாலயத்தில் மணிகளும் பொன்னும் மலிந்துகிடப்பதைக் கண்டு இவ்வாலயத்திற் கைவைத்தால் போதுமானமட்டில் எடுக்கலாமென்று ஆலோசித்தான். யாத்திரீகர்களாக இருந்தாற் கிட்டாது; இவ்வூர் வாசியாக இருக்க வேண்டுமென்று கருதி ஓர் மனை வாங்கி

மனையாட்டியுடன் கூடிவாழ்ந்தான். விசேஷ நாட்களில் ஆலயதரிசனத்துக்குச் செல்வான். அங்கிருப்பவர்களுடன் மகிமை வாய்ந்த ஸ்தலமாதலால் இந்த இந்தத் திருப்பணிகள் குறைவாக இருக்கின்றன. அவற்றைச் செய்தாற் சிறப்பாக இருக்குமென்று அன்புருகிப் பேசுவான். சிலவற்றைப் பிறரைக்கொண்டு செய்விப்பான். கோவிலதிகாரிகள் சிரத்தையாகக் காரியங்களை நடத்துவதில்லை. கோவிலதிகாரம் கிடைக்குமானால் நித்திய நைமித்தியாதிகளும் திருப்பணிகளும் செவ்வனே நடத்தலாகும் என்றும் சொல்வான். மனசிற் கரவு வைத்துச் சொல்வதை ஓராத ஜனங்கள்; விஷத்தைக் குளிர்ந்த ஜலமென்பார் போல இதனை உண்மை என்று கருதினர்கள். இவனுற் சகாயம் பெற்றுப் பிழைப்பவர்கள் அங்கங்கே இவனது நற்காரியங்களை எடுத்தோதி சவிதா என்பவனுக்குக் கோவிலதிகாரங் கொடுக்க வேண்டுமென்று அரசனைக் கேட்டுக்கொண்டார்கள். அரசன் அவ்வண்ணமே ஒப்பினன். அதிகாரத்தைப்பெற்ற விப்பிரன் தனக்கிசைந்தவர்கள் சூழ்ந்து வரக் கோயிலிற் சென்று தன் வரவு கூறிக் கேட்க வேண்டியவைகளைக் கேட்டுச் சொல்லவேண்டியவைகளைச் சொன்னன். தன் காரியம் முற்றுப் பெறுதற் பொருட்டுத் தன் வார்த்தை கடவாது சிலரை யடக்கினன். அடங்காதவர்களிற் சிலரை ஆசைகாட்டி வசப்படுத்தினன். இவ்வகைகளிற் படியாதவர்கள் விஷயத்திலாலோசித்து அவர்களுள் கட்சியை யுண்டாக்கினன். நித்திய நைமித்திகதிருப்பணி விஷயங்களிலே சைவாகமங்களின் கட்டளை இது என்று ஆய்ந்தோர் கூறினல், குறுமதியாளரைக் கேட்டு இது அவர்களுக்குச் சம்மதமில்லை என்று தன் எண்ணமும் வாக்குமே செல்லவேண்டியதாகச் சாதிப்பன். பதிவாக்கின் அருமை தெரியாத சிவத்துரோகிகள் களிப்பார்கள். இவ்வண்ணம் ஒழுகும் நாளில் மனையாட்டி இறந்தாள். கற்புள்ள பிறர் மனைவியாரை வலிதிற் புணர்ந்தோர், மாதரைக் கொன்றோர், கருவைக் கலைத்தோர், எஜமானனுக்கு இடர் செய்தோர், சிவத்துரோகஞ் செய்தோராகிய இவர்கள் எத்தனை கலியாணம் செய்யினும் செய்யச் செய்ய மனைவியார் மாய்ந்து விடுவார்களாதலால் ஏழுமுறை விவாகஞ் செய்தும் அப்போதப்போதே அம்மனைவியர் மாய்ந்துவிட்டார்கள். இவ்வாறு பெண்டிழந்தவனுகை இருக்கும் இதற்குச் சலிக்காமல் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கமாகத் திருவாபரணங்கள் வைக்கும் இடமும் ஒரு இரவில் எல்லாம் அபகரித்துச் செல்லத்தக்க விதத்தையுஞ் சமயத்தையும் பார்த்துக்கொண்டிருந்தான்.

இவ்வாறு ஒழுகுங் காலத்தில் ஒருநாள் இரவிலே கோவிலுக் குளமேபோகும்போது வாசற்படி தடுக்க விழுந்தான். காலிற் காயம்பட்டது. சுவாமி அபிஷேகத்துக்கு வந்திருந்த எலுமிச்சம் பழம் ஒன்று எடுத்து நல்லெண்ணெயில் தோய்த்துச் சூடுகாட்டி அக்காயத்துக்கு உபசாந்தியாக ஒற்றினான். பின்பு வீட்டிற்குச் செல் லுங்காலத்தில் பாம்பு கடித்துவிட்டது. மணிமந்திர அவுஷதங்களால் விஷம் நீங்காது மாய்ந்தான். யமதூதர்கள் வசப்பட்டுத் தென்னாட் டானிடத்து விசாரணையாய்ச் சிவத்துரோகி என்று தீர்மானிக்கப் பட்டு நரகத்துக்கு அனுப்பப்பட்டான். அனேக நாள் நரகவேதனைப் பட்டுப் பின்பு தனக்கு வேண்டியவற்றைப் பெறக் கோவிலதிகாரம் பெற்றமையினால் மலப் புழு முதலிய ஜனங்கள் பெற்றுப் பின்பு நாயாகப் பிறந்தான். சைவாசாரியர் கூறிய பதிவாக்கை அவமதித்து மாறு கூறினமையால் வாய்ப்புண் பட்டுப் புழுத்தது. எங்குச் சென் றாலும் அடித்துத் துரத்தினார்கள். பல ஊர்கள் அலைந்து கடைசி யாகத் திருச்செங்கோட்டுக்கு வந்து சேர்ந்தது. எங்குச் சென்றாலும் புழுத்த நாய் என்றே துரத்தினார்கள். ஒரு சிவயோகி மலையோர மண்டபத்து வசித்திருந்தார். அவ்விடத்துக்குப் போய் அவரை அடுத்தது ஊரிலே இரந்துகொண்டு வருவதிற் புசித்து மிகுந்த அன் னத்தைப் போடுவர். உண்டு அங்ஙனமே மெலிவுடன் இருந்தது. மஹாளயபக்ஷ அமாவாசையன்று தரிசனார்த்தம் சென்று வரும் ஜனத் திரளுள் மிதிப்பட்டுக் கத்தி மரணாவஸ்தைப்பட்டது. உயிர் போய் விடும்போல இருக்கிறது. கொஞ்சம் வாயில் ஜலம் விடுங்கள் என்று பார்த்தவர்கள் கூறினார்கள். ஒருவன் கொஞ்சம் ஜலம் விட்டான். ஒரு துளி உட்சென்று மாய்ந்துபோய்விட்டது. வழியை விட்டிழுத் தெறிந்துவிட்டார்கள்.

சில நாளின் பின் மலைநாட்டரசன் புதல்வன் ஸ்ரீ அர்த்தநா ரீசுரர் தரிசனத்துக்குப் பரிசனங்கள் சூழ வந்தான். மலைக்குச் செல்லும் வழி மண்டபத்தில் இருந்த ஒரு பரதேசி காலில் விழுந் தெழுவதைக் கண்டவர்கள், இவ்வூரில் இரந்துண்டிருக்கும் பிச்சைக் காரன் காலில் அரசகுமாரன் விழுகின்றாரே இது என்ன பைத்திய மென்று நினைந்தார்கள். அப்பரதேசி முன் அரசகுமாரன் கைகட்டி நின்று அடிகாள்! அடியேனைத் தெரிகிறதா? என்றான். பரதேசி மருண்டு தெரியவில்லைச் சுவாமி என்றார். மாதவரே! இவ்விடத்து வாய்ப்புழுத்த நாயொன்றிருந்ததே. அந்த நாயே இத்தேகம் பெற்றி ருக்கிறது. தேவரீர் இவ்வூரிலிரந்துண்ணும் அன்னசேடவிசேடமும்,

பிராணுந்திய காலத்தில் ஒருவன் ஜாம்பவந்த தீர்த்தத்தில் தோய்த்த வஸ்திரத்தைப் பிழிந்து ஜலம் வார்க்க கொஞ்சம் உட்கொண்ட புண்ணியத்தாலும் அடுத்த ஜன்மம் இராஜகுமாரனைப் பிறந்தேன். அதிலும் பூருவ ஜனன ஞானங்களும் பெற்றிருக்கின்றேன் என்றனன். யாவரும் வியப்புற்றார்கள். யோகிதேகம் புளகிப்ப நாக்குளறி அந்தோ இத்தலத்தில் இவ்வித மேன்மை இருக்கிறதென்று கருதாமல் யோகசாதனஞ் செய்துக்கொண்டிருந்தேனே என்று அழுதனர். அரசகுமாரனுடன் யாவருஞ் சென்று தீர்த்தங்களில் முழுகி உமை யொருபாகரைத் தரிசித்து ஆனந்தங்கொண்டார்கள். சில நாள் அங்கிருந்து அரசகுமாரன் தன் நகரஞ்சேர்ந்து ராஜ்ஜியாதிகாரம்பூண்டு உமையொருபாகருக்கு நித்திய நைமித்திகங்களுக்காகப் பல கிராமங்கள் விட்டு திருப்பணிகளுஞ் செய்து மறுமையிற் சிவபதம் பெற்றான்.

தபோதனர்களே! சிவத்துரோகம் வருவதும் சிவபுண்ணியம் எய்துவதும் மிகச் சுலபமாகவே தானிருக்கின்றது. அறிந்து நல்வழிப் படவேண்டும். இந்த ஜாம்பவந்த தீர்த்தத்தில் முழுகினோர் பாவம் போகும் தீர்க்காயுளும் ஞானமும் பொருந்தும் என்றார் சூதமுனிவர்.

## மயேந்திர தீர்த்தமான்மியம்.

வைராக்கியமுற்ற மாதவர்களே! மயேந்திர தீர்த்த மகிமை கூறுகிறேன் கேட்பீர்களாக. அஞ்சனை புத்திரனுடைய வாலில் கலை சுற்றி நெய்விட்டு நெருப்பிட்டு வெருட்டிய அரக்கர்வாழும் இலங்கையை கொளுத்தும்பொழுது, நகரம் அழிந்து போகாமல் நிருமிக்கும் பொருட்டு தேவதச்சனாகிய மயன் உமைபாகனைப் பூசித்துத் தன் பெயரால் ஒரு தீர்த்தங்கண்டு வரம்பெற்று முன்போல நகரத்தைப் படைக்கும் வலி பெற்றான். அத்தீர்த்தத்தில் மூழ்கி அம்மையப்பரைப் பணிந்தால் நினைத்தன பலிதமும் சித்திரத் தொழில்களெல்லாம் எளிதிலமைதலும் பொருந்தி இம்மையிற் சம்பத்தையடைந்து சிவபத்தி மேலிட்டால் மறுமையில் இன்பத்தைப் பெற்று வாழ்வார்கள் என்றார் சூதமுனிவர்.

## தீர்த்த நிலை.

பக்தி மிகுந்த உத்தமர்களே! திருநாக கிரியிலுள்ள சிவதீர்த்தங்களின் மகிமைகளை ஒருவாறு சுருக்கமாகச் சொன்னேன். அத்தீர்த்தங்களில் ஆடினவர்களும், அத்தலத்தை நாடினவர்களும், அங்

குக்கூடினவர்களும், பாடிப் பரவிப் பரைபாகன் திருவருள் பெற்ற வர்களுமானவர்களிற் பல ரீண்டும் இருக்கின்றார்கள். அன்னவர்பா லத்தலத்தில் எம்மையாளுடைய நாயகர் காட்டியருளிய கிருபையை யும் கதையாகச் சொன்னேன். நீங்களறியாதனவல்ல ஆயினும், அந்தந்தத் தீர்த்தங்களிருக்கும் நிலையையும் கூறுகிறேன் கேட்பீர்களாக.

பால்வண்ண மேனிகொண்டு நின்றகோல நிமலநாயகர் எழுந்தருளியிருக்குந் தீர்த்தத்தைத் தேவதீர்த்தம் என்பர். சிவபரஞ்சுடரைத் தீண்டுபவர்களே அத்தீர்த்தத்தைப் பரிசிக்கும் அதிகாரிகள், இடைக்குக் கீழிட்ட உருப்புக்களில் அத்தீர்த்தத்துளி விழாது ஏற்று உட்கொள்ளுதல் வேண்டும். உமாதேவியார் தவஞ் செய்யவும் அர்த்தநாரீசுரகோலமாக ஈருருவும் ஒருருவாய் நின்றிருப்பவும் பெற்ற தென்மூலத்தீர்த்தத்தின் உயர்வை யாவரே புகலவல்லார்.

இந்த தேவ தீர்த்தத்தின் கிழக்கே திருமதலின் புறத்தே இருப்பது நாகதீர்த்தம், அதனையடுத்து வடக்கிலிருப்பது சத்திரதீர்த்தம், அதற்குச் சற்று கிழக்காக ஆறுசுனைகள் பொருந்தி யிருப்பது ஷண்முக தீர்த்தம், அதன் தென் கீழ்த்திசையில் வாண தீர்த்தம். அதன் கிழக்கில் பாண்டவதீர்த்தம், அத்தீர்த்தத்துக்குச் சற்று கிழக்கில் குமாரதீர்த்தம், அதன் கிழக்கில் பாண்டீசர் திருமுன்னிருப்பது சூரியபுஷ்கரணி, அதன் கிழக்குத் தாழ்விலிருப்பது பாண்டியதீர்த்தம், அதன் தென்கிழக்கில் காளிமலையிலிருப்பது துர்க்கை தீர்த்தம், அதன் தென்கிழக்கில் அக்கினிதீர்த்தம், துர்க்கை தீர்த்தத்தின் மேற்கில் யமதீர்த்தம்.

மேற்குத் திருமதில் ஓரத்திருப்பது விஷ்ணு தீர்த்தம். அதன் மேல்புறம் சிறிது தூரத்தே இருப்பது செங்கமலைத் தீர்த்தம், இதன் தென்பால் நிருதிதீர்த்தம், செங்கமல தீர்த்தத்தின் மேல்புறம் அடுத்திருப்பது வருண தீர்த்தம், அதற்கு சற்று தூரத்தில் வடமேற்காக விருப்பது சத்தகன்னியர் தீர்த்தம், அதையடுத்து மேற்கிலிருப்பது சந்திர புஷ்கரணி, அதன்மேற்கு சத்தரிஷிதீர்த்தம்.

திருமதிற் சுற்றுள் வடபாங்கில் பிரமதீர்த்தம், வடதிருவாயிலின் கீழாகவிருப்பது இந்திரதீர்த்தம், அதன் வடக்கில் தாழவிருப்பது மயேந்திர தீர்த்தம், அதன் வடக்கில் கீழாகவிருப்பது சாம்ப

வந்த தீர்த்தம், அதன் கீழாக விருப்பது குபேரதீர்த்தம். இதன் மேற்புற மிருப்பது வாயு தீர்த்தம்.

ஆலயத்தின் வடகிழக்கில் கணபதி தீர்த்தம், அதன் பக்கத்தில் அம்பா தீர்த்தம், அதன் கிழக்கு பாவநாசதீர்த்தம், அதன் கீழ் வடக்கில் காயத்திரி தீர்த்தம், இராமதீர்த்தமென்பது மிதுவே. இதன் கிழக்கு சிவதீர்த்தம், இதற்குக் கீழாகவிருப்பது சர்வதீர்த்தம், அடுத்திருப்பது தன்மதீர்த்தம், இதன் கிழக்கு வயிரவதீர்த்தம், நாகருக்குமேலாக இருப்பது ஈசானதீர்த்தம், அதன் கீழே நிரையாக விருக்கும் மூன்று தீர்த்தங்களும் கங்கை, யமுனை, சரசுவதி, இவற்றின் மேற்கிலிருப்பது காமதேநு தீர்த்தம், கிழக்காகவிருப்பது க்ஷீரதீர்த்தம், வீரபத்திரமூர்த்தி ஆலயத்தருகில் சாஸ்தா தீர்த்தம். இவ்வாறு விளங்கியிருக்கின்றன. இவற்றின் இடையே அநேக தீர்த்தங்களிருக்கின்றன. யாவரே எடுத்துரைக்க வல்லார் என்றார் சூதமுனிவர்.

## சிங்கவன்மன் சாப விமோசன மான்மியம்.

முப்பொருளுணர்ந்தமுனிபுங்கவர்களே! முப்புவனங்களும் ஈன்ற முதல்வியிடமமர்ந்த முதல்வன் எழுந்தருளிய நாககிரிலே சிங்கவன்மன் என்னும் பெயர் வாய்ந்த அரசன் திருப்பணிகளும் திருவிழாவுமியற்றிப் பேறு பெற்ற சரித்திரத்தைக் கூறுகின்றேம் கேளுங்கள் என்ற சூதரைச் சௌநகாதியர் வணங்கிப் பிறவிப் பெருங்கடலுக்குச் சிவசரித்திரமாகிய தெப்பத்தை ஈட்டிய எங்கள் ஜீவதயாபர! கருணை கூர்ந்து திருவுளம் பற்றுதல் வேண்டும் சுவாமி எனவேண்டி சிவநாமஸ்மரணை செய்து மௌனமுற்றிருந்தார்கள். தமது குரவரை வணங்கிச் சூதமுனிவர் கூறுவாராயினர்.

மெய்யைப் பொய்யென்றிகழும் மேதாவிகளே! மணியினங்களையும், பலாச்சுலைகளையும், பலவித புஷ்பராசிகளையும் இரு கரையிலும் ஒதுக்கும் இரேவை நதி சூழ்ந்து விளங்கப்பெற்றது சயங்கலம் என்னும் பெயர்கொண்ட நகரம் பொன்னகரமும் எந்நகரமும் அந்நகரத்துக் கொப்பாகாது. கயிலையைப் போலும் மேருவைப்போலும் வெள்ளிக் குவியலும் தங்கக் குவியலுமிருக்கும். குபேரனைப் போன்ற வணிகரும் இந்திரனைப் போன்ற போகமுற்ற மன்னவர்களுமே அந்நகரத்து வசிப்பவர்கள். சமஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷா விற்பன்னர்கள் பலர் உளர். நங்கையர் வீணைகானஞ் செய்வதையும் ரம்பா

ஸ்திரீகளும் விஞ்சையர்களும் கேட்டும் பார்த்தும் மனசுருகுவார்கள். உயர்ந்த நிலாமணி முற்றத்திருந்து மாதர்கள் ஆடும் முத்தாலமைத்த பந்துகள் உயரப் போய்வருவது ஸ்திரீ ஜனங்களுடைய முகத்துக்குச் சந்திரன் ஒப்பென்று மேலோர் கூறுவர், ஆ! ஆ!! இந்தச் சந்திரனில் களங்கமிருக்கிறது என்று நகைப்பது போல அந்தப்பந்து பின்னரும் அங்கனையார் கையில் வந்து சேர்கின்றன. குளிர்ச்சி பொருந்திய பூரண சந்திரனனவன் ஓ மாதர்களே! உங்கள் முகத்துக்கு நான் ஒப்பல்லன், ஒப்பாகும்படி என்னிடத்துள்ள களங்கத்தை நீக்குங்கள் என்று ஒளிவாய்ந்த கையில் அடைக்கலம் புகுந்து போன்றுமிருக்கின்றன; புட்பங்களையும் பொன்மணிகளையும் அலைகள் கரையில் விளையாடும் பெண்கள் காலிற் சொரிய, குங்குமகளபந்திமிர்ந்த தனபாரங்களையுடைய மங்கையர்களெல்லாம் தங்கள் தங்கள் பிராணநாயகரோடு கூடிப்பிரியாமல் நீராடுவார்கள். அந்த இங்கிதத்தை இரதிதேவியுடன் சென்ற மன்மதன் கண்டுவெநண்டு தன் ஆண்மையை வெறுப்பன். அரசர்கள் கோரமாகிய குதிரைமீது உலாவி வருவார்கள். வீரமும் வெற்றியும் பொருந்தியவர்களாக விளங்குவார்கள். இன்னும் பற்பல பொற்பமைந்த சயங்கலநகரத்தை ஆள்பவன் யாரெனின்; சூரியகுலத்துத்தோன்றி மேகத்தைப் போலப் பொழிபானின்ற கொடையாவன். நீதிநெறி தவறாத அரசாட்சியாலும், வேதாகமபுராண வித்தியா கோஷ்டியினாலும், உத்தம ஜனங்களுக்குத் தானதருமங்கள் செய்வதனாலும், யாகாதி கிருத்தியங்களை நடாத்து வித்தலினாலும் ஆண்மையிலும் இந்தப் பூமண்டலத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று சொல்லும் வண்ணம் பராக்கிரமம் பொருந்தியவன், அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன் என்னும் ஆறு சக்கிரவர்த்திகளிலும் மேலிட்டவனென்று புகழ்ப்பெற்றவன் சிங்கவன்மன் என்னும் பெயரை உடையவன். இவன் ஆறிலொரு கடமை கொண்டு அரசு புரியுங்காலத்திலே குடிஜனங்கள் மிருகவாதை பொறுமல் முறை யிட்டார்கள். தன்னாலும், தன் பரிவாரங்களாலும், பகைவர்களாலும், கள்ளர்களாலும், விலங்கினங்களாலும் குடிகளுக்குப் பயங்காணாது காக்கவேண்டுமென்று நீதி சாஸ்திரங்கள் கூறுவதாய் துஷ்டமிருகங்களை வாட்டி ஓட்ட வேட்டைமீது நாட்டம் வைத்தான் வச்சிர கவசந் தரித்து, சுவர்ணமுடி சூட்டி, சிவந்த பட்டாடை உடுத்து, இரத்தினக் கச்சை கட்டி, கால்களில் வீரக்கழல் பூட்டித் தோற்கவசந் தொட்டிறுக்கி, இடையிலுடைவாள் கட்டிக் கைகளில் மேலாகிய விற்பிடித்து முதுகில் அம்பறாத் தூணியுங்கட்டினன். வெளிகளில் மிருகங்

களைச் சயிப்பதாகக் கல் காடு வேலி கான்யாறு முதலியவற்றைப் பாய்ந்து செல்கின்ற ஒரு குதிரை சமீபத்துவர நீலவர்ணக் குதிரை மேற்கொண்டு ஒளி பொருந்திய கூரிய வேலைக்கையிலே தாங்கி அலங்காரத்துடன் சிங்கவன்மன் புறப்பட்டான். கண்ணிகளும் வலைகளும் சுமந்துகொண்டு போகும் எருமைக் கடாக்களும் திண்மையாக உயர்ந்தோங்கிய யானைகளும், வேட்டைக் காரராகிய வேட்டுவர் கூட்டங்களும், இவ்வளவென்று எண்ணுதற்கரியராகிய வீராதி வீரர்களும், பல ஆயுதங்களெடுத்த காலாட் படைகளும் எதிர்த்து வந்த ஈசுவரனையும் எண்ணாதவர்களாய் வெற்றிக்கொடிகள் ஆகாசம் நெருங்கி அடர்ந்து போகும் யமக்கூட்டங்கள் போல வெளியே புறப்பட்டார்கள். மூவிலைவேல்களும் வில்லம்புகளும் பிறைபோன்ற சிறுக்கம் புகளும் விஷயம் பொதிந்த பட்டாக்கத்திகளும், நேரிசங்களும், ஈட்டிகளும், குறுந்தடிகளும் வளைதடி சக்கரங்களும், கவண்களும், பிண்டி பாலங்களும் கைக்கொண்டு அணி அணியாய்ப் போகும் பதாதிகளுடனே மிருகங்கள் சஞ்சரிக்கின்ற கானகங்களிலே வேட்டையாடச் சென்றான் சிங்கவன்மன். கானகத்துட் புகுந்திருக்கும் துஷ்டமிருகங்கள் வெளிப்படுமாறு பதாதிகளைக் கொண்டு காட்டைக் கலைத்து விடச் செய்து சேனைகளை அணிவகுத்து அங்கங்கே கட்டாக நிறுத்தி வலைகள் கட்டி வில்லம்பு முதலிய பல ஆயுதங்களாலும் அடர்ந்து வருகின்ற மிருகங்களைச் சங்கரித்தான். எவர்க்குஞ் சிக்காது தப்பி விரைந்தோடுகின்ற ஒருமானைக் கண்டு குதிரையைத் தூண்டி தாண்டி மறித்தான். பின் தொடர்ந்த பல வேட்டைக் காரரைக்கொன்று உக்கிரமாகச் செல்லும் ஓர் காட்டுப் பன்றியை நோக்கிப் பின்தொடர வெகு குரூரங்கொண்டு எதிர்த்துப் பாயவரும் அந்தக் காட்டுப் பன்றியைச் சிங்கவன்மன் அடர்ந்தெதிர்த்தான், அந்தவலிய பன்றியும் பாண்டியனை எதிர்த்த பன்றியரசனைப்போல யாவரும் நடுநடுங்க அக்காடு சூழ்ந்த இடமெல்லாம் திடுக்கிட உறுமி எதிர்த்தது. சிங்கவன்மனும் அதிசௌரியத்தோடு முன்னின்று கூரிய கணைகளை விட்டு உடலைத் துளைபடச் செய்யவே பன்றி ஓடிற்று. பின் தொடர்ந்து அரசன் துரத்தவும் பன்றி விழுந்து எழுந்து அகப்படாமல் ஓடியபன்றி அங்கொருசார்பில் நெருங்கி அகப்படுவது போல எதிர்த்து நின்று போராடித் தாண்டிற்று. கூடத்தொடர்ந்து விரைந்தோடி வந்த வீரர்களெல்லாம் இளைத்து அங்கங்கே நின்று விட்டார்கள். சற்றும் வாட்டமில்லாத சிங்கவன்மராஜன் இளைப்பில்லாமல் அந்தப் பன்றியைப் பின் தொடர்ந்து எவ்விதத்தும் கொல்வேனென்று முடுகினான். இவ்வரசன் நம்மை

உயிருடன் விடமாட்டான் என்று பயந்து மரச்செறிவுகளால் சூரிய சந்திர ஒளிகளும் புகுதாத இருண்ட ஒரு வனத்துட் புகுந்து அவ் வனத்தில் அரிய தவஞ் செய்து கொண்டிருக்கும் பிருகுமுனிவர் பாதத்தில் விழுந்தது. அத்தவமுனி விழித்தவுடன் சுவாமி! ஒரு அரசன் வில்லிற்கணையை வைத்துக் கொல்வதாகப் பின் தொடர்ந்து வருகின்முன். அவனுக்குப் பயந்து உமது பாதத்தில் அடைக்கலம் புகுந்தேன். என்னை இரக்ஷிக்க வேண்டுமென்று கண்களில் நீர் வடித்து விழுந்தது கண்ட பிருகுமுனிவர் பன்றியை நோக்கி நீ பயப்பட வேண்டாம் என்று அபயாஸ்தங் கொடுத்தனர்.

அந்தச் சமயத்தில் வில்லிற் கணைபூட்டியபடியே அதிவேகமாகப் பின் தொடர்ந்து வரும் சிங்கவன்மனைப் பார்த்து " ஓ வேந்தே! சிறிது நிதானிப்பாயாக. பன்றி என்பால் அடைக்கலம் புகுந்திருக்கிறது. கொல்லாதே எனறு கூறவும் நில்லாது கணையை விட்டான். அக்கணை பன்றியுடலில் ஊடுருவிச் செல்லவே தரையில் விழுந்தது. முனிவன் கடுங் கோபங்கொண்டு ஓ அரசனே! நம்மிடத்து அடைக்கலம் புகுந்தபன்றியைக் கொன்றது நீதியன்று நீ இரக்கமற்ற வினை செய்தாயாதலால் இந்தக்ஷணமே புலியுருவங் கொண்டு இம்மிருகத்தின் இரச்சியைப் புசி என்று சபித்தார். உருக்கின செம்பு காதிற் புகுந்தது போலும் சாபமொழி கேட்டு உடல் நடுங்கி முனிவனை வணங்கி ஐய, யான் சிறிதும் குற்றஞ் செய்யவில்லையே! என் சேனைகளை ஹதஞ் செய்த பன்றியை இக்கணையாற் கொல்வேனென்று சபதம் புரிந்து வில்லிற் பூட்டிய பாணத்துடன் கொடிய பன்றியைத் தொடர்ந்து வந்தேன். அவ்வேனம் சந்நிதானத்தில் வீழ்ந்தது. தொடுத்த பாணத்தை விட்டேன் அதுமாண்டது. இதற்காக, இவ்வளவு பெரிய சாபங் கொடுத்தது தருமமல்லவே ஆனால் ஈசுரபத்தியுள்ளவர்களை அவமதித்தோர் வாழ்ந்ததில்லை யானதால் நான் கெட்டேன். முனிபுங்கவரே! ஒரு பன்றிக்கு மனசிரங்கிக் கருணை செய்த கிருபையை மண்டலத்தரசன் பால் வைத்திரட்சிக்கவேண்டும் சுவாமி! என்முன். வெவ்விதாகிய புலியுருவமாய் விட்டான். அக்கொடிய புலியுருவத்தோடு அம்முனிவர் பொன்னடியில் விழுந்து புரண்டு அழுது சொல்கின்முன். மனமாசற்ற மாதவரே! இப்பன்றியைக் கொன்று இதன் இறைச்சியால் என் வயிறு நிரப்ப வேண்டு மென்றேனும், என் அகங்காரத்தாற் பெற்ற கொலைச் செய்கையினுலேனும் இதனைக் கொல்ல முயன்றேனல்லேன். ஊர் அருகே அடர்ந்த காட்டிலுள்ள மிருகங்கள் உழுநிலங்களை நஷ்டம் செய்யாதும், வனங்களில் வசிக்கும் முனிவர்கள் செய்யும்

தவத்துக்கு இடையூறு நேராதும் இருக்குமாறே வேட்டையாடத் தலைப்பட்டேன். ஆயின் காமத்தால் பத்துக்குற்றமும், கோபத்தால் எட்டுக்குற்றமும் நேருகின்றன. அக்காமத்தாலாகும் பத்துக் குற்றங்களாவன:— வேட்டையாடுதல், சூதாடுதல், பகலிற்றூங்குதல், வம்பு வளர்த்தல், ஸ்திரீலோலனுயிருத்தல், குடித்தல், பாட்டு கூத்து வாத்தியம் என்பவைகளில் விருப்பமுள்ளவனுயிருத்தல், வீணே திரியல் என்பன. கோபத்தால் உண்டாகும் எட்டுக் குற்றங்களாவன:— கோள் துணிவு, துரோகம், பொறாமை, பிறர் குணத்தைச் சகியாமை, ஒருவர் பொருளை அபகரித்தல், காரணமின்றி அடித்தல், வைதல் என்பன. முற்கூறிய பதினெட்டுக் குற்றங்களுள்ளும், முதற்கண்ணே கூறிய வேட்டையாடுதல் உலக நன்மையை உத்தேசித்துச் செய்திருந்தாலும் இப்போது எனக்குப் பெருந் துக்கத்தையே விளைத்தது. அப்பன்றி சமுகத்தில் வந்தபின் கொன்றது தவறு எனின், அதிகுரூரத்தோடு உறுமி ஓடி வரும் பன்றி எங்ஙனம் தவசிரேஷ்டராகிய தங்களை இம்சிக்குமோ என்ற பயத்தினுல் கணையைவிட்டேன். தங்களிடம் இப்பன்றி அடைக்கலம் புகுந்ததும் தாங்கள் அபயமீய்ந்ததும் அடிமைக்குத் தெரியாது என் விதிவசமானது பன்றியைக் கொல்லாதே என்று தாங்கள் கூறிய மொழி காதிற் புகவில்லை. அப்பிழையினுல் சபித்தவாறே புலியுருவானேன். என் வமிசத்தில் நான் ஒருவன் தான் இருக்கின்றேன். எனக்குப்பின் சந்ததியுமில்லை. ஆதலால் இந்த இராஜ்ஜியம் வாழும் பொருட்டுக் கடைக்கண் சிறிது பாலித்தருளல் வேண்டும் நான் இப்புலியுருவத்தோடு காடுசேர்வேனேயானுல் இன்று முதல் நாடாளுதற் கொருவருமில்லை "அரசனிருந்து சோம்பலின்றித் தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டியாமற் போனுல் பெரியமற்சங்கள் சின்ன மற்சங்களைப் போல பலமுள்ளவர்கள் பலமில்லாதவர்களுடைய பொருள் பசு தானியம் முதலியவற்றை அபகரித்துக் கொண்டு கொன்று விடுவார்கள். யக்கிய யாகங்களில் புரோடாசத்தைக் காக்கை முதலியன தின்று விடும். அவிசை நாய் முதலியன நக்கி விடும். அவனவன் பொருள் அவனவனுக்காகமாட்டாது. அரச தண்டனைக்குப் பயந்தே உலகத்தார் சரியாக நடப்பார்கள் தண்டனை செய்யாவிடில் ஜாதிமரியாதையையும் சாஸ்திர மரியாதையையும் கடந்து நடப்பார்கள். ஒருவன் மனைவியைப் புணர்தல் திருடுதல் வன் செய்கை முதலியவைகளால் சண்டை செய்வார்கள். ஆதலால் பரோபகாரத்தின் பொருட்டாகவேனும் என் குற்றத்தைப் பொறுத்துக் கருணை கொள்ளுதல் வேண்டுமென்று புலிவடிவாகிய சிங்கவருமன் சொல்லி முறையிட்டான். எவ்வுயிர்களிடத்தும் இரக்

கத்தைக்கொண்ட முனிவரானதால் சிறிது மனசிரங்கி சிவநாமஸ்மரணை செய்து யோகசாதனையினாலே தியான சமாதியாகவிருந்து மனசொருமிப்பாகப்பரஞ்சுடர் ஜோதியை நோக்கி ஞானதிருஷ்டியால் உசாவியிருந்தார். பாதக உபபாதக அதிபாதக மகா பாதகங்களாகிய பேரிருளை ஓட்டவல்லது சிவபரஞ்சுடரே என்று கண்டார். அச் சிவ பரஞ்சுடரும் சதாசாந்நித்தியங்கொண்டு விளங்குவது திருநாககிரி என்னும் பரிசுத்த ஸ்தலமே உணர்ந்தார். அத்தலத்திலே பல புண்ணிய தீர்த்தங்களும் புண்ணியபுருஷர்களும் சதா வசித்திருக்கின்றார்கள் என்றும் தெரிந்தார். இன்னும் அப்பரிசுத்த ஸ்தலத்தின் அருமை பெருமைகள் பலவற்றை ஞானவறிவினாலே நாடியுணர்ந்து விழித்து அன்புடன் புலியை நோக்கி ஓ சிங்கவன்மராஜனே! வருத்தப்படாதே. உன்னைப்பற்றியசாபம் நிவிர்த்தியாகி உனதிரண்டு குலமரபும் புத்திரசம்பத்துடனே வாழ்ந்து சிவனிணையடி வணங்கிச் செல்லுதற்கரிய மேலாகிய பதம் பெற்று மேன்மையாக வாழ்ந்திருக்கும். பயப்படாதே ஆனால் எல்லா வல்லமையுமுள்ளவன் நேர்ந்த கோபத்தால் ஒருவனை வெட்டலாம். வெட்டுவது சுலபம். வெட்டிய காயத்தை ஆற்றுவது பிரயாசை. நல்ல மருந்து தேடி ஆற்றவேண்டும். சல்லிய கரணி முதலிய முக்கரணிகள் தெரிந்தவன் இருக்குமிடங் கூறுவன்; தேடிப்போய் மருந்து செய்து தான் காயத்தை ஆற்றிக் கொள்ளுதல் வேண்டும். அதுபோல நீசெய்தவன் செய்கையால் மனம் புழுங்கிச் சாபம் கொடுத்துவிட்டேன். அதுவும் உன்னைப் பற்றிவிட்டது. அது நீங்குதற்கு எளிதாகிய உபாயமறிந்தேன். சொல்கின்றேன். அவ்வாறு செய்வாயானால் இச்சாபம் விமோசனமாகும். அஃது என்னையெனில் தென் நாட்டில் மேன்மையாகிய தலமிருக்கின்றது. அதுபோல மூவுலகத்துமில்லை. கங்காநதியைவிட மேலாகிய நதி ஒன்றுண்டு. அதையடுத்த மரம் பறவை விலங்கினங்களெல்லாம் தெய்வவடிவாக விளங்கும். மணிக்கோவை அணிந்த அரமகளிரெல்லாம் தங்கள் தங்கள் நாயகருடன் கூடி நீராடுவார்கள். அந்நதி குடகதேசத்துற்பத்தி யாகிப் பஞ்சகிரி பஞ்சக்குரோசத் தெல்லைக்குள் பெருகிவரும். அகத்திய முனிவர் கைக்கமண்டலநீர் சிவாஞ்ஞையின் வண்ணம் மூத்த பிள்ளையார் வெண்காக்கை உருக்கொண்டு கவிழ்த்துவிடப் பட்டது. மஹா மஹிமை வாய்ந்தது. தீராத பாவமும் நரகவேதனையும் தீர்க்கவல்லது. அதன் திவலை சிறு காற்றினால் தெறித்து ஒருவர் மேனியிற் பட்டவுடன் அவர்கள் சிவலோகம் தம்லோகம் என்று விரைந்து சென்று நெடுங்காலம் வீற்றிருப்பார்கள். அந்நதியைக் காவேரி என்றும் அழைப்பார்

கள், அந்நதிக்குக் கீழ்த்திசையில் ஒரு கிரி காணப்படும். அதற்குப் பெயர்கள் பல. மூவுலகத்துமுள்ள தீர்த்தங்கள் செறிந்திருப்பதாய் தேவாதிதேவன் எழுந்தருளி யிருப்பதாய்ச் சகல பாவங்களையும் தீர்த்து முத்தி மோக்ஷங் கொடுப்பதாய்ப் பல பல கற்பக புஷ்பவனங்கள் வதிந்திருப்பதாய் மகாமேருகிரியின் கொடுமுடிச் சிகரமாய்ப் புதுமையாய்ப் பிரபலித்திருப்பது, அந்தத் திருச்செங்கோட்டுமலை. அம்மலையின்மீது மரகதமணி யொளிவடிவாகவும், மணியொளி நிறமாகவும் பார்வதி தேவியிடப் பாகங்கலந்து பிரியாமல் சாமள வன்னமாகவும், நிறைந்த பால் வர்ணமாகவும், நாககுண்டலமும் கனகமணி தாடங்கமும் பொருந்திய செவிகளும், தண்டாயுதம் பிடித்த கரமும், கொடிவளையலணிந்த கையும், கொன்றைமாலை சூடிய மார்பும், முலை மார்பும், வியாக்கிர சர்மாம் பரமும், பீதாம்பரமும், வீரக்கழலணிந்த பாதமும், சிலம்பணிந்த பாதமும் நாகாபரணங்களும் இரத்தினுபரணங்களுந் தரித்த திருமேனியும் மணிமகுடந் தரித்த சடைமுடியும், கரிய கூந்தலுமாக அழகிய சிவனும் உமையும் ஒன்றுய்க்கூடி ஸ்ரீ அர்த்தநாரீசுவரராக எழுந்தருளியிருக்கின்றுர். போகமோக்ஷங்களை ஆன்மகோடிகளுக்கருளி எழுந்தருளிய மூர்த்தமாதலால் நாகீசுவரரென்றும் வாழ்த்தி பல்லாயிரஞ் சுனைகளிலும் படிந்து உமையொருபாகரையும் சண்முகக் கடவுளையும் தரிசித்து சாமவேத கானங்களினுற் கீதங்கள்பாடி புஷ்பாஞ்சலியிட்டுத் தேவர்களும் முனிவர்களும் நிறைந்து சேவிப்பார்கள். இத்தலம் மூவுலகத்தையும் ஈடேற்றும் வண்ணம் தோன்றியதானதால் ஓ சிங்க வன்ம ராஜனே! நீ இக்கொடிய புலிவடிவோடு சென்று பத்திமேற்கொண்டு கணபதி தீர்த்தத்தில் முழுகி அமுதத் திருமேனியுடைய அழகிய அர்த்தநாரீசுவரரைத் தியானித்துக்கொண்டு அப்புண்ணிய கிரியை மும்முறைவலம் வந்து கணபதிதீர்த்தம் விஷ்ணு தீர்த்தம் குமாரதீர்த்தம் முதலிய ஒப்புயர்வற்ற தீர்த்தங்களிற்படிந்து ஏனைய தீர்த்தங்களைப் புரோக்ஷித்துக் கொண்டு துணிவாக பரமசற்குரு உபதேச முறைமை விதிப்படியே தொடங்கி நியதிகள் முடித்துக்கொண்டு சிவத்தியானத்துடன் மூத்த பிள்ளையாரைத் தரிசித்துக் கனிந்த பலாப்பழம் மாம்பழம் வாழைப்பழம் தேங்காய் மற்றுங் கனிவர்க்கத்துடனே மோதகமும் அமுதமும் நிவேதனம் புரிந்து பணிந்து கணபதி தியானமியற்ற வேண்டும். பின்பு குமாரதீர்த்தத்தில் மூழ்கி ஷடாக்ஷர ஜபத்துடன் குமார கடவுளைத் தரிசித்து, அதன்பின் சந்திர தீர்த்தத்திற் படிந்து அங்ஙனமிருக்குங் கற்பகவிருக்ஷத்திற்குக் காவ

லாக வீற்றிருக்கும் விசுவதேவரை வணங்கி ஸ்ரீ அர்த்தநாரீசுரரை இருகண் பெற்ற பிரயோசனமாகத் தரிசித்து வணங்குவாயானல் இந்தச் சாபம் விமோசனமாகும். எழுமையும் செய்த வல்வினைகளும் போம். நீ அழகிய இராஜவடிவு பெறுவாய். புத்திர பௌத்திரர்களு முண்டாவர். வெற்றியுமடைவாய். ஒரு குடை நிழலிலிருந்து உலகனைத்தையும் ஆள்வாய். முதுமையிலே சிவயோகமும் சிவஞானமு முற்று அழிவில்லாத இன்பத்தை அனுபவிப்பாய் எனக் கருணையுடன் புகன்றனர். அவ்விடத்து அரசனம்பால் உயிர்துறந்த பன்றியை நோக்கி "எழுக" என்ற மாத்திரத்தானே எழுந்து முனிவனை வணங்கி வனத்துட் சென்றது. இதனைக் கண்ணுற்ற சிங்கவன்மன் தவமுனிவர் தாளினை வணங்கித் தன் சேனைகள் சயங்கல நகரத்துக்குச் செல்ல தான் புலியுருவுடனே திருநாககிரியைத் தேடிக் காடு மலையாறு முதலிய பலவற்றைத் தாண்டித் தென்றிசை நோக்கிச் செல்லுங்காலத்தில் ஒரு மலையைக் கண்ணுற்ருன். அப்படிப் பார்த்த மாத்திரத்தில் நித்திய தரித்திரன் பெருநிதி கண்டது போல மனசிலே சுவேச்சையாக ஒருவித மகிழ்ச்சியும் ஆராமையும் தோன்ற அதிசயித்தான். திருக்கோபுர தரிசனமானவுடன் புலிவடிவமே மாறிப் போனது போலப் பாவனை உண்டாயிற்று. இவ்வதிசயத் தோற்றங்களாய் பிருகி மஹாமுனிவர் மொழிந்த நாககிரி இதுவாகதானிருக்குமென்று பேரானந்தமுற்ருன். அப்பால் திருக்காவேரி காணவே அன்புடன் முனிவர் உபதேசித்த முறைப்படி தீர்த்தமாடி இமைகொட்டாது திருமலையைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டே அணுகிக் கிரிப்பிரதக்ஷிணம் புரிந்து திருவட்ட விநாயகரைச் சேவித்து சித்விலாசராகிய உமையொருபாகரையும் இளைய பிள்ளையாரையும் தியானித்து மனக்களிப்புடன் பண்ணிசை வழுவாது காவியங்களோத வல்ல பெரியோர்களைப் பரவி அன்புடன் கணபதி தீர்த்தக்கரை சென்று ஸ்நானஞ் செய்து வேள்முருகரைப் பணிந்து விசுவதேவரைப் போற்றி செய்து குமாரதீர்த்தத்தும் மற்றுள தீர்த்தங்களுள்ளும் படிந்து பால்வண்ணமூர்த்தியாகிய ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் உபயபாதங்களைக் கண்டான். புலியுருவங்காணுன். ஒளிபொருந்திய தேவனே என்று பிரமிக்கும்படி இராஜவடிவங் கொண்டான். ஆடினன், பாடினன், அலறினன், உளறினன், அழுதனன், தொழுதனன், கறையற்ற சந்தோஷங்கொண்டு களித்தனன். இதனைக் கண்டவர்கள் மூர்த்திதலதீர்த்த மகிமை இத்தன்மைத் தெனக்கூற அளவுபடாதென உள்ள முருகிப் பரவசரானுர்கள். அரசன் தன் விருத்தாந்தங்களை சொல்

லவே யாவரும் அதிசயித்து இத்தலத்தும் அத்தலத்தும் எத்தலத்தும் உத்தமமாக இத்தலம் போன்ற ஓர் நற்றலமுண்டோ! புலியுருவத்தைப் போக்கி நரவடிவாக்கிய அதிசயம் பேரதிசயமென்று உமையொருபாகர் தண்ணருளை வியந்து அரசனை ஆசீர்வதித்தார்கள். வருந்திய புலியுருவம் நீங்கப்பெற்ற சிங்கவன்மன் கருப்பிணி நீங்கத் திருச்செங்கோட்டிற் பல திருப்பணி செய்ய ஆசை கொண்டான். சயங்கலநகரத்திலிருந்து அளவில்லாத பொருள்களை யானை ஒட்டகங்கள் மீது ஏற்றிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான். இதனை அறிந்த பூசுரர்களும் குருக்கண்மாராகிய தேசிகர்களும் ஆசிகூறி மகிழ்ந்தார்கள்.

## திருவிழா மான்மியம்.

அக்கவடமும் பொடியும் அழகென்றுன்னும் அன்பர்களே! எல்லாவளமும் பொருந்திய சயங்கல நகரத்திலிருந்து யானை ஒட்டகங்கள்மீது பொன்னும் மணியும் ஏற்றிவந்து மலைகள்போலச் சேனை வீரர்கள் குவித்தார்கள். அவற்றுள் நீலராசியும், முத்துராசியும், பொன்ராசியும் மூன்று மலைபோலிருந்தன. அவை நீலகிரி கைலையங்கிரி மேருகிரி போல விளங்கின. மும்மூர்த்திகளும் காணிக்கை வைத்ததுபோன்றுமிருந்தன. அப்பொழுது சிங்கவருமன் நான்முறை தெரிந்தோர்களை அழைப்பித்தான். வரருசிமுனி போன்ற கணிதவல்லவரும், உய்த்துணர்ந் துரைக்க ஆகமங்களில் வல்லுநராய்த் தெளிந்த அறிவையுடைய ஆதிசைவாசாரியர்களும், திறமை பெற்ற மயனுக்குச் சமானமாகிய சிற்பவினையாளர்களும் பெரிய பொருள்களையும் எளிதாக மதித்து எடுத்தடுக்கவல்ல வலிபொருந்தியவர்களும் வந்து சேர்ந்தார்கள். மலையைப் பிணைத்துப் பாண்டிலில் வைக்கினும் துக்கத்தைப் பிடரி யிற்றுங்கி இழுக்கத்தக்க எருமைக்கடாக்களும் வந்தன. பல கருமார்கள் வந்தார்கள். உலைக்கூடங்கள் கட்டினார்கள். நல்ல சுபமுகூர்த்தம் பார்த்து விக்கினேசுவர பூசைபுரிந்து வேலையை ஆரம்பித்தார்கள். அதிவிரைவில் எந்நாட்டாரும் அதிசயிக்கும் வண்ணம் வெள்ளி பொன் இரத்னங்கள் விளங்க இரதங்கள் சமைத்தார்கள். தெய்வமணிகளால் முகிளிதமாகிய கொடிஞ்சில்களும், இரத்தின கலசங்களும், கொடிகளும், சந்திரமண்டலங்களை அளாவப் பாதாள நாகங்கள் சுழல்வதால் அதிர்ந்து நெளியத்தக்க வட்டமாகிய சக்கரங்களும் விசாலமாகிய மேல்தட்டுகளும் அசைந்து விளங்கும் கொடிகளும் அழகுபெறச் செய்துமுடித்தார்கள். உற்சவ

தரிசனத்துக்கு வருக எனத் தேசங்களுக்குத் திருமுகம் அனுப்பினன். * உத்தராயணத்திலே சகல ஜீவாத்துமாக்களுக்குச் சுகமும், அரசனுக்கு ஜயமும் தேவர்களுக்குக் களிப்பும் பொருந்துமாறு திருவிழாச் செய்ய ஆரம்பித்தார்கள். ஆகமோத்தமர்கள் வாஸ்து பூஜை மிருத்சங்கிரகணம் அங்குரார்ப்பணம் துவஜாரோகணதி மஹோத்சவங்களை ஆரம்பித்தார்கள். விதிப்பிரகாரம் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது திருவிழாக்களியற்றி ஒன்பதாம் நாள் கைலயங்கிரி இமாசலம் மேருமலை போன்ற மூன்று இரதங்களிலும் உமையொருபாகர் சுப்பிரமணியர் விநாயகராகிய மூவரையும் தேவர்கள் புஷ்பமாரி பொழிய வேதியர் மறையொலிமுழங்க அடியார்கள் ஹரஹர சத்தம் புரிய இரதங்களின்மீது எழுந்தருளச் செய்தார்கள். நகரமெங்கும் மணிமயமாகிய தோரணங்கள் கட்டினார்கள். வீதிகளெல்லாம் புனுகு கஸ்தூரி ஜவ்வாது கர்ப்பூரச்சாந்துகளால் மெழுகி நவரத்தினத் தூள்களாற் கோலமிட்டுப் பெண்கள் அலங்கரித்தார்கள். கமுகு, கரும்பு, வாழை, தென்னம்பிள்ளைகளை நாட்டினார்கள் அஷ்டமங்கலங்கள் வைத்தார்கள். இன்னும் பல்பலவிதமாக தேவநகரம்போல அலங்கரித்தார்கள். கோடிக் கணக்காகிய பிராமணர்களுக்கும் மஹேசுரர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் முப்பழங்கள் தேன் பால் அப்பவர்க்கம் வடை பருப்பு முதலிய கிருதகுள பாயசான்னங்களாகிய பதார்த்தங்களெல்லாம் சுவாமிக்கு நிவேதனமன்புடன் செய்வித்து போஜனம் செய்வித்தார்கள். விசித்திரமாக அலங்கரிக்கப்பட்ட இரதங்களிற் பூட்டிய சங்கிலிகளைப் பிடித்து இழுத்தார்கள். அப்பொழுது சிற்றாலவட்டம் பேராலவட்டம் குடைசுருட்டி சூரியபாண்டக்கயங்கள் மகர தோரணங்கள் பிடித்தவர்களும், சாமரைகளிரட்டுவோரும், துந்துபி கின்னரவாத்தியங்கள் பாடுவோரும் இனிய பாடல்கள் பாடுவோரும் ஹரஹர முழக்கஞ்செய்வோரும் சங்கவாத்தியம் புரிவோரும் நெருங்குவோரும் தள்ளுவோரும் விழுவோரும் எழுவோருமாக ஆகாயத்திலும்பூமியிலும் காணப்பட்டார்கள். சொல்லுதற்கரிய விபவமாகத் திருவிழாவைச் சிங்கவருமராசன் நடப்பித்தான். தேவர்களும் முனிவர்களும், பிராமணர்களும், பரமேசுவரனே என்னும் பெருமை பாராட்டத்தக்க தேசமன்னர்களும் எங்கும் நிறைந்திருப்ப

* சம்ஸ்கிருதம் தமிழ் புராணங்களிற் தைமாச ரேவதி நக்ஷத்திரத்தில் துவஜா ரோஹணம் செய்ததாகக் காணப்படுகின்றது. காலாந்திகத்தில் வைகாசிமாசமாயிருக்கலாம்.

தால் கொங்குமண்டலம்போன்ற தலம் எங்குமில்லை என்று விளங்கியது. சிவவேதியர் மடங்களும், மறையோரகரமும். பெரியோர் தவச்சாலைகளும், சங்கமர்களுக்கில்லங்களும், பல பல அன்னசத்திரங்களும், மண்டபங்களும், மாளிகைகளும், வித்துவான்களுக் கிருப்பிடங்களும், வித்தியாசாலைகளும், நான்கு வருணத்தார்க்கும் வீதிகளும் செய்தமைத்தான். மனைபத்தியோடு கட்டழகுபொருந்திய பெண்கள் சதாகாலமும் சுவாமி திருவாலயத்திற் சேவித்துப் பணி செய்திருக்க அமைத்தான். அநேக புஷ்பமாலைகளும், கற்பூரசந்தன மிருகமதமாதி திமிர்ந்த சந்தனங்கள் நித்தியமும் அர்ப்பிதமாகும்படி செய்தான் நாளொன்று ஆயிரஞ் சுவர்ணக் குடங்களால் புனிதமாகிய காவேரி மஞ்சனமும் கிரிதீர்த்தங்களும் திருமெனிகுளிர அபிஷேகிக்குமாறும், இரத்தினமயமாகிய திருவாபரணங்களும், பீதாம்பரங்களும் வாங்குவித்தான். தேவாமுதம் போலும் போஜன முதலிய சகல பதார்த்தங்களும் ஆயிரம் பொன்மனித்தாலங்களில் நிறைய அமைத்த நிவேதனமும் ஏல தாம்பூலம் சமர்ப்பித்துச் சோடசோபசாரங்களும் புரிந்து புஷ்பாஞ்சலியிட்டு வணங்கி எப்பொழுதும் இவ்வண்ணமே நடக்கத்தக்க ஏற்பாடு செய்தான். கண்குளிர இவ்வாறு நடாத்திக் தரிசித்து மெய்மயிர் பொடிப்ப நாக்குளறத் தோத்திரித்தான். அன்புடன் வணங்கும் சிங்கவன்மனது அன்பின் திறத்துக்கிளகிய உமையொருபாகர் திருவுளமிரங்கி ஓ அன்பனே! உனக்கு யாது வரம் வேண்டுமெனலும் கிருபாநிதியே! தேவரீரைத் தரிசிக்கப் பெற்றவர்களுக்கு வேண்டுவனவும் வேறுண்டோ. ஆகலால் தீனதயாளா! எல்லாராலும் வேண்டப்படும் திருவடிப்பத்தியும், அடியார்களிடத்து விசுவாசமும் வேண்டும். அடியேன் திருவடிப்பத்தி புரிந்திருத்தற் பொருட்டு இராச்சியபாரத்தைத் தாங்கவல்ல ஒரு சற்புத்திரன் வேண்டுமென்றனன். அவ்வாறே புத்திரனுதிப்பன்; சத்தியவருமன் என நாமமிட்டழைப்பாயாக எனத் திருவாய் மலர்ந்தருளினர். உள்ளமுருகிப் பலமுறை வணங்கிச் சிவபணி செய்திருந்த சிங்கவருமன் நாகாத்திரி வாசிகளாகிய பெரியோர்களிடத்தில் ஆசிபெற்றுக்கொண்டு தன் நகரத்தை நோக்கிச் சென்றான். பிருகுமுனிவருடைய உபய பாதங்களிற் றாழ்ந்து நடந்த விசேஷங்களைக் கூறி ஆசி கூற, பொன் நகரம்போன்ற தன் நகரத்தை அடைந்தனன். நல்ல சுபமுகூர்த்தத்திலே சத்தியவன்மன் பிறந்தனன். இராஜாங்கத்துக்கு வேண்டிய அனைத்தும் பெற்ற அவனை மனிமுடிசூட்டி அரசாளவைத்து உமையொருபாகர் பத்தி செலுத்தி வாழ்ந்த பின்பு தேவரும் மூவரும்



திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் பிர்மோற்ஸவ திருவிழாவும், மலையும்.

யாவரும் விரும்பும் சிவசாம்ராஜ்ஜியம் பெற்றிருந்தனன் சிங்கவரும ராஜன்.

## பாண்டவச் சருக்கம்.

அகப்புரத்துறவுபூண்ட அருந்தவசிகளே! பாண்டுபுத்திரர்களாகிய ஐவர்களும் இத்தலத்து வந்து பூசித்த விவரம் கூறுகின்றேன், கேட்பீர்களாக. வெண்ணிறம் பொருந்திய பாண்டு மஹாராஜனுக்குக் குமாரர்களாகிய தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவரையும் போர்முனையினின்று வெல்லும் வலியற்ற திருதராட்டிர புத்திரர்களாகிய துரியோதனுதியர்கள் வஞ்சனை கொண்டு ஐவர்களையும் அழைத்துக் கபடச் சூதாடி அவர்கள் பொருள்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள். இதனோடுமமையாது பதிவிரதா சிரோன்மணியாகிய துரோபதையை நடுச்சபையிலே துகில் உரிந்து மானபங்கஞ் செய்தார்கள், அப்பொழுது வீமார்ச்சுனர்கள் சினந்து போர்க்கோலங்கொண்டு அக்கொடியோர்களை வதைப்பதாக எழும்பினர்கள். பொறுமையிற் சிறந்த தருமர் அவர்களை அடக்கிய பெரிய தகப்பனர் கருத்தை அறியச் சென்றார். பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமுஞ் செய்யவேண்டும். அஞ்ஞாதவாச காலத்தில் யாருக்கேனும் தென்படுவீர்களாயின் பின்னரும் பன்னிரண்டு வருஷம் காட்டிற் சென்று வருதல் வேண்டும் என்று கட்டளை இட்டான். அவ்வார்த்தைக்கு இணங்கிய பாண்டவர்கள் வனவாசஞ் சென்றார்கள். அவ்வாறு வனவாசஞ் செய்யுங் காலத்தில் அநேக புண்ணிய தீர்த்தங்கள் மலைகள் தலங்கள் முதலிய வற்றைத் தரிசித்துக்கொண்டு மெலிந்துவரும் இடையில் அழகுபொருந்திய திருச்செங்கோட்டு மலையைக் கண்டார்கள். மனோரம்மியத்தைத் தரும் அம்மலையின் மீதேறி கணபதிதீர்த்தம் குமாரதீர்த்தம் என்பனவற்றில் முழுகி விஷ்ணுதீர்த்தம் படிந்து பரமேசுவரஸ்மரணை செய்துகொண்டு நம் சத்துருக்களை ஜயித்து வாழ்வோம் என்றெண்ணிக் கொண்டிருக்கும் போது அப்புள்ளியன்சுனையுட் படிந்திருக்கும் சக்கிரமானது, "மயங்காதீர்கள். அரசர்களே! உங்கள் சத்துருக்களுடன் பொருது யுத்த காலத்தில் நேரும் பேராபத்துச் சமயத்தில் உங்களுயிரைக் காத்து பகைவர்களைச் சாயச் செய்கின்றேன்" என்றது. இதனைக் கேட்ட பாண்டவர்கள் பெரிதும் மகிழ்ச்சி பூண்டு அதிசயமுற்று முன்னொரு காலத்தில் தக்ஷிண தேசத்தில் நாகாசலமென்று ஒரு திவ்யஸ்தல மிருக்கின்றது. அதிலுள்ள வயிரவ தீர்த்தத்தில் விதிப்படி படிந்தால் சத்துருக்களை ஜயிக்கும் வலிபுண்டா

மென்று வியாசமுனிவர் ஓதி இருக்கின்றானன்றோ. அம்மலைதானிம் மலை என்று தேறி வயிரவதீர்த்தத்தை அடைந்து விதிப்படி ஸ்நானம் செய்து ஜபஞ் செய்துக்கொண்டு வசித்தார்கள். கோலபனை ஜயிக்க மஞ்ஜெஜபன் சகலபடையும் வலிமையும் பெற்றது போலப் பாண்டவர் களும் கண்டார்கள். இவ்வளவு நாளும் எத்தனையோ வனங்களும் தலங்களும் கண்டோம். இத்தலம்போல எளிதிலே விரும்பிய பொருளைத் தரத்தக்க பதியைப் பார்த்ததில்லை. இந்தக்ஷேத்திரமும் தீர்த்தமும் சொல்வதற்கரிய பலன்களை கொடுத்தனவன்றோ! இத் தலத்து எழுந்தருளி யிருக்கும் மூர்த்தி எத்தன்மையுள்ளதாக இருக் குமோ அறியோம் என்று அதிசயித்து வியாசர் கூறியவண்ணம் விரதம் பூண்டு தீர்த்தங்களெல்லாமாடி ஸ்ரீ அர்த்தநாரீசுவரரையும் குமரவேளையும் தரிசனஞ் செய்து திருக்கோவிலுக்குக் கிழக்குத்திசை யில் தர்ப்பசயனம் செய்து இருந்துகொண்டு சகஸ்திரநாமத்தால் உமையொருபாகரைத் தோத்திரித்துக் கிரிப்பிரதக்ஷணம் புரிந்தார்கள். அங்கு தவம் புரிந்திருக்கும் சனகன் சனற்குமாரன் அகத்தியன் புலத்தியன் விஞ்சையர்கள் சித்தர்கள் முதலிய பலபெரியோர்களெல் லாம் ஆசிர்வதித்தார்கள். தென்புலத்தை அடைந்தோர்களைக் குறித் துப் பாண்டவர்கள் தீர்த்தக்கரையில் சிராத்தஞ் செய்தார்கள். பின்பு முருகேசனை வணங்கிப் பிராமணர்களுக்கும் அடியார்களுக்கும் அன்ன மூட்டினார்கள் உமையொருபாகரை அர்ச்சனை செய்து உமையொரு பாகருடைய திருவுளச் செயலால் சேனையும் திருநாடும் மெய்தி, இழந்த அத்தினபுரியும் பெற்றுக் கொள்ளும்படி அருள் விளைவு பெற் றார்கள். அந்நாககிரியிலே தங்கள் பெயரால் உமையொருபாகரை வேண்டி ஒரு தீர்த்தங் கண்டார்கள். அத்தீர்த்தத்தில் வியாசர் மந்திரத்தியானம் புரிய பல்லாயிரம் பிராமணர்களுடன் மூழ்கி சமா ராதனை புரிந்து பல தானங்களும் கொடுத்துப் பாண்டவர்கள் குமா ரரையும் உமையொருபாகரையும் தோத்திரஞ் செய்தார்கள். அங்கு நின்றும் அரிதினீங்கிய பின் யுத்தத்தில் விஷ்ணுதீர்த்தத்துளிருந்த சக்கிரம் வரங் கொடுத்தவாறு சூரியனை மறைத்தது. அதனால் சத்து ருக்கள் சாய நேர்ந்தது. பின்பு ஜயங்கொண்டு இராச்சியத்தைக் கைக்கொண்டு வாழ்ந்திருந்தார்கள். அவர்களமைத்த பஞ்சபாண்டவ தீர்த்தத்தில் மூழ்கி மங்கைபங்கனைத் தரிசித்தோர்கள், இழந்துபோன பொருளும் பெரிய நகரங்களும், அகன்றுபோன பெரும்படைகளும் முன்னிருந்ததிலும் மேலான வலியையும் பெறுவார்கள். இது உண்மை என்றார் சூதமுனிவர்.

# பாண்டீசுர மான்மியம்.

சிவனே பதி எனத் தேர்ந்த மாமுனிவர்களே! தெய்வத்தன்மை பொருந்திய திருநாககிரியின் மீது அளவிலா மஹிமை வாய்ந்த சிவ லிங்கம் ஒன்றிருக்கின்றது. எப்பொழுது மழை வேண்டினும் உதவ வல்லது பாண்டீசர் என்னும் பெயர்பூண்டது. அதன் மான்மியத்தைக் கூறுகின்றோம் கேட்பீர்களாக.

உத்தம தவம் பூண்டொழுகும் சாரமாமுனி திருநந்தனவன மமைத்துப் பலவித புஷ்பங்கள் உண்டாக்கி மாதுர் பூ தேசுரருக்கு இண்டைதொடை முதலிய மாலைகள் தொடுத்துச் சாத்தித் தரிசிக்கும் பணிவிடை செய்து வந்தனர். உறையூரில் வசிக்கும் சோழன் காமக் கிழத்தியா மையலிற்சிக்கிச் சிவபிரானுக்குச் சாத்தும் செவ்வந்திமலர் களை மனைவியாரும் காமக்கிழத்திமார்களும் சூடிக்கொள்ளுமாறு கொடுத்தான். அரசியார் அரசனது திருமுகத்தை நோக்கி என் பிராணநாதா! சிவபிரானுக்குகந்த இச்செவ்வந்தி மலரைப் பொள்ள வுடலைப்பெற்ற என்போன்ற நாரியர்கள் சூடுவது நீதியன்று என் றாள். வேந்தன் ஒப்பவில்லை, என் செய்வாள்! அப்புஷ்பங்களைக் கூந்தலிற் சூடப் பயந்து கையிற்கொண்டு மானசிகமாகக் கங்கையில் அர்ச்சித்து ஈசுரார்ப்பிதஞ் செய்துவிடுவாள். இதுகண்ட சாரமா முனிவர் மனம் பொறாராய் வருந்துவர், மாதர் மயக்கத்தில் ஆழ்ந்து அறநெறி தவிர்ந்து மன்னன் ஒழுகுதலைத் திரிபுரமெரித்த விரிசரைக் கடவுளோர்ந்து மண்மாரி பொழியச்செய்தனர். மண்மாரி பொழி வதைத் தெரிந்து திடுக்கிட்ட மன்னன் கோரமென்னும் குதிரைமீது ஏறித் தன் நன் மனைவியாரையும் எடுத்து வைத்து மற்றையோர்களை யும் அழைத்துக்கொண்டு அதிவேகமாகச் சென்றனன். சிவபக்தி வாய்ந்த மனைவியாரோடிருப்பதால் தன்னருகில் மண்மாரி விழாது அயற்புறமெல்லாம் மண்குவிந்தது. சூழ்கொண்ட மங்கையுடனிப்பதால் இயலவில்லை எனக் கருதி அரசியைத் தள்ளிவிட்டு விரைவாகப் பரி யைத் தூண்டினன். பொழிந்த மண்மாரியால் மூடப்பட்டு அரசன் மாண்டான். தள்ளுண்ட புண்ணியமுதிர்ந்த ஒண்ணுதலாகிய இராஜ மஹிஷி காவிரியில் விழுந்தமையால் பரமேசுவராநுக்கிரகத்தால் அவ் விடத்துக் கிடைத்த புணையைப் பிடித்துக் கரை சேர்ந்தாள். கர்ப் பிணியாக இருப்பதை உணர்ந்த ஓர் அந்தணன் அந்நங்கையை அழைத்துப் போய் ஆதரித்து வந்தான். நல்ல சுபவேளையில் ஆண் மகவு பிறந்தது. வளர்பிறை மதிபோல வளருங்காலத்து வேந்தன்

வேண்டி விடுத்த யானை மாலை சூடி மகிழ்ந்தெடுத்து பிடரியேற்றிச் சென்றது. பெரியோர்கள் அணிமுடிசூட்ட அரசிளங்குமரன் அரியாசனத்து அமர்ந்துலகாண்டான். இந்த உறையூர், திருவாரூர், திருச்செய்ஞசலூர், திருநாகை,காவிரிப்பூம்பட்டிணமுதலிய பெரியநகரங்களையுடையது சோழதேசம்.

கொடுங்கோளூரிலே சேரர் குடியிலே பெருமாக்கோதையார் பிறந்து இளமையிற்றுறவு பூண்டு திருவஞ்சைக்களத்தை அடைந்து அங்கிருந்து சிவகைங்கரியம் புரிந்து வருகையில், இவர் பிதா மோக்ஷாபேக்ஷையால் தவவனம் புகுந்த பின் அரசாட்சிக்கு வேறே அரசனில்லாமையால் மந்திரிகள் வந்து மகுடஞ் சூட்டிக்கொள்ளுமாறு பிரார்த்தித்தார்கள். சிவாஞ்ஞையினால் யாவர்க்கும் யாவையும் வசனிப்பதுகளை அறியும் உணர்ச்சியும் பாராக்கிரமமும் ஈகையும் மற்றும் அரசர்க்கு வேண்டிய மற்றையனவும் அருளிச் செய்யப்பெற்று மணிமுடி புனைந்து செங்கோலோச்சி யிருந்தனர், பட்டாபிஷேகமுற்று வீதி உலாவி வரும்பொழுது தலையிற் சுமந்து வரும் உழை மண் மழையால் நனைந்து உடல் வெண்பொடி பூசினது போலக்காண வெண்ணீறு பூசிய அடியவரிலொருவரென்று கருதி யானையை விட்டிழிந்து எதிர் சென்று பணிய சுவாமி! அடியேன் வண்ணானென்று அடிவிழுந்து பணிய, சேரர் பெருமான் அவனை நோக்கி அடிச்சேரனடியேன் சிவவேடத்தை நினைப்பித்தீராதலில் வருந்தாதேகுமென்று கூறி ஏகினர். அரசினால் வரும்பயன் முதலியவைகளெல்லாம் சிவபெருமானின் திருவடிகளே எனத் தெளிந்த உணர்ச்சியினால் சிவார்ச்சனை செய்து வந்தார். சொக்கநாதப் பெருமான் "மதிமலிபுரிசை" என்னும் திருமுகப்பாசுரமனுப்ப பெற்றுப் பாணபத்திரருக்கு வேண்டு பொருள் கொடுத்தனுப்பினர். சிவபெருமான் ஞாபகமூட்டப் பெற்றுச் சிதம்பரஞ் சென்று பொன் வண்ணத்தந்தாதி யோதித்துதித்துச் சுந்தரமூர்த்தி நாயனைரைக் கண்டு வணங்கி நேசமுற்றுப் பல தலதரிசனஞ் செய்து பின்னர்த் தம் நாட்டிற்கு வன்றொண்டரை அழைத்துச் சென்று திருவஞ்சைக்கள தரிசனஞ் செய்து வீற்றிருந்து புறப்படச் சுந்தரமூர்த்திகள் பின்னே பொக்கிஷத்திருந்த பொருள்களை யெல்லாம் மூட்டை கட்டி ஆட்களின் தலைமேல் அனுப்பிவிட்டனர். சில தினஞ்சென்ற பின்னர் அங்கு எழுந்தருளியிருந்த வன்றொண்டர் பரமேசுரர் அனுப்பிய வெள்ளை யானைமீது ஆரோகணித்து சேரமான் பெருமானிடத்து ஞாபகத்துடன் செல்வது தெரிந்து குதிரை மேலேறிக்கொண்டு அதன் செவியில் சிவமந்திரத்தை ஓத அப்பரி ஆகாயத்திற் கிளம்பிச் சுந்தரமூர்த்தி

களுடன் கைலாயத்திற் சென்று நந்திகேசுரரால் தடைபட்டு ஆதியுலா ஓதிப் பரமேசுவரின் திருவருளால் சமீபத்திற் சென்று அரங்கேற்றிச் சுந்தரமூர்த்திகளுடன் கணநாதராய் வீற்றிருந்தனர். இந்தத் திருவஞ்சைக்களம், கருவூர் முதலிய அரிய பெரிய நகரங்களைப் பெற்றது சேரநாடு. பெண்ணரசியாய்ச் செங்கோலோச்சிய தடாதகைப்பிராட்டியாரைத் திருமணமுற்று அநேக திருவிளையாடல்கள் புரியவாய்த்த மதுரை கொற்கை முதலிய நகரங்களையுடையது பாண்டிநாடு.

இந்த மூன்று தேசங்களினும் மழை வருஷியாதொழிந்தது. மழை குறைவுபடவே உழவு குறையும். உழவு குறையவே விளைவு குறையும். விளைவு குறைவுபடவே மக்களால் தேவர்களுக்குச் செய்யப்படும் நித்திய பூஜை குறையும். நித்தியபூஜைத் தாழ்விற்குச் செய்வது நைமித்திய மாதலின் திருவிழாக்களும் தவறும். தவநெறியான் வந்த பொருளைத் தக்கோர்க்கு உவகையோடு கொடுத்தல் தானமாதலின் அத்தானமும் நடவாது. மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிருக்கல் தவமாதலின் அத்தவமும் நடவாது. எனவே, பெரும்பான்மை இல்லறத்தார் செய்யுந்தானமும் துறவறத்தாரியற்றும் தவமும் நடவாதாதலின் செங்கோல் ஓங்காது. என்பது கருதியே சோழ சேர பாண்டியர்களென்னும் மூவரசரும் மேலோரிடத்து முறையிட்டுக் கேட்டு மேகத்துக்கதிபதி இந்திரனாதலின் அமராபதி சேர்ந்து கேட்டு வருதல் வேண்டுமெனத் தீர்மானித்து மண்டலமகன்று விண்டலஞ் சென்றார்கள். சுதர்மம் என்னும் மண்டபத்தில் அரியாசனத்தில் அரியாசனத்தில் வீற்றிருக்கும் புரந்தரனைக் கண்டார்கள். மூவேந்தரையும் வரவேற்று மூன்று ஆசனங்களைக் காட்டச் சோழனும் சேரனும் காட்டிய ஆசனத்திருந்தார்கள். இட்ட தவிசு இந்திரன் பீடத்தினும் தாழ்ந்த அளவினதாதலின் அதன் மேலாரோகணியாது பொன்னாட்டரசன் வீற்றிருக்கும் அரியணையில் ஒக்கத் தென்னாட்டரசன் ஏறி உட்கார்ந்தான். அருகிருந்த இருமன்னருக்கும் உபசார மொழிகள் புகன்று வந்த காரணம் யாதென வினவினன். மேகபதியே! எங்கள் நாட்டில் மழையின்மையால் வந்தோம் என்றார்கள். பெய்யும் என்று அணிகலன் ஆடைகளுதவிப் போய் வாருங்களென விடை கொடுத்தான். அவர்கள் சென்றபின் பாண்டியன் தன்னாட்டிற்கு மழை வேண்டுமென்று கேட்காமல் பெருமிதமாக வீற்றிருப்பதை ஓர்ந்த ஆகண்டலன் பல்லோர்களால் தாங்கி வந்த பெரிய ஆரத்தைக்கொடுத்தான். அதை மலர் மாலைபோல வாங்கிக் கழுத்திலிட்டான். இந்திரன் அதிசயித்து இன்று முதலுனக்கு "ஆரந்தாங்கு

பாண்டியன்" எனப்பெயராகுக எனப் பட்டப்பெயரளித்தான். இங்கு இவற்றைக் கவனியாது கன்னி நாடன் அந்நாட்டை விட்டிழிந்து இந் நாட்டை அடைந்தான். இந்திரன் ஆணையால் சோழ சேரநாடுகள் மழையாற் செழித்தன. பாண்டி நாடு பின்னரும் வரள நேர்ந்தது. பாண்டியன் மெலிவுற்றுத் தங்கள் குலதெய்வமாகிய சோமசுந்தரப் பெருமானை ஏத்தித்துதித்து வணங்கினன். பாண்டிய ராஜனே! காவிரி சூழ்ந்த கொங்குநாட்டிலே நாகாசலம் எனப்பெயரிய தெய்வீகம்விளங் கும் மலை இருக்கின்றது. அக்கிரி சூழ்ந்த நகர்க்கு திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் பெயர். அவ்விடத்திலே நீங்காது நவகோடி சித்தர்கள் பத்திவிசுவாசத்தோடு தொண்டு செய்திருப்பார்கள். அக் கிரியின்மீது தேவதீர்த்தத்திலே பொற்றாமரைப் பூம் பொகுட்டின் மீது உமையொருபாகராக எழுந்தருளி இருக்கின்றோம். அங்ஙனம் சென்று வணங்குவையேல் மகிழ்ச்சி யடைவாய் எனச் சோமசுந்தரே சுவரர் திருவாய்மலர்ந்தருள, ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு பாண் டியன் திருநாககிரியை அடைந்து தீர்த்தங்களிற் படிந்து கிரிவலஞ் செய்து ஐங்கரனையும் வடிவேற் குமரனையும் மங்கைபங்கனையும் தொழு து வணங்கினன். உமையொருபாகர் மகிழ்ந்து ஆங்குவசிக்கும் ஒரு சித்தனை அழைத்து அறுவகை மந்திரத் தொகைவகை யெல்லாம் உப தேசிப்பாயாக என அவ்வாறே செய்தான். அம்மந்திரஞ் சித்தியாய் நிறைவேறுதல் கருதிவந்திச் சிலையின் மீது ஒரு சிவக்குறி நிறுவி ஏத்தி வணங்கினன். வேண்டிய வரங்களை எம்பெருமான் அனுக்கிரகித்தார். அவ்வரசன் பிரதிட்டித்தமையால் பாண்டீசுரர் எனப்பெயர் படைத் தது. ஒரு தீர்த்தம் உண்டாக்கினன். அதனைப் பாண்டிய தீர்த்தம் என்பர். அதில் மூழ்கினோர் வசீகரத்தைப் பெறுவர் வரப்பிரசாத மடைந்த பாண்டியன் பொதியை சென்று சம்வர்த்தம், அவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்னும் மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ பொழிவனவாகிய எழு மேகங்களுள்ளே கடல் மேய வீழ்ந்த புட்கலாவர்த்தம் முதலியநான்கு மேகங்களையும் தலையிட்டான். பின்பு இந்திரன் வேண்ட நான்காம் வருணத்தாளொருவன் பிணையின்பேரில் விட்டுப் பெருமை அடைந் தான்.

மனமாசற்ற மாதவர்களே! உமையொருபாகரையும் நாககிரியை யும் நினைந்து தொழுவோர் இகத்தில் இன்பமும் பரத்தில் இன்பமும் உற்று வாழ்வார்கள் என்று கூறி சிவநாம கீர்த்தனஞ் செய்து ஹரஹர முழக்கஞ் செய்து இம்மான்மியத்தைக் கேட்பவர் படிப்பவர் பூசிப்ப

வர் உதவி புரிபவர்கள் யாவரும் சிவப்பேறு பெறுவார்கள் எனக் கூறினர். சௌனகாதி முனிபுங்கவர்களெல்லாம் எழுந்து வணங்க நாகாசல மான்மியத்தை தேவரீர் புகன்று புண்ணிய மீட்டினீர்கள். நாங்கள் சேவித்துப் புண்ணியம் பெறும்படி அனுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். ஹர ஹர சம்போ சங்கர என ஓதி மகிழ்ந்தார்கள். இம்மகிமைகளைக் கேள்வியுற்ற எல்லா முனிவர்களும் நாககிரியை யடைந்து தரிசித்து கருதிய நலங்களையும் பெற்று ஆநந்தமுற்றார்கள்.

## மலைகாவலராக்கிய மான்மியம்.

சிவநேயச் செல்வர்களே! சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்ன மான்மியங்களை இது வரையிற் சொன்னேன். அதன் பின்பு ‡ உமையொருபாகர் திருவருளால் நிகழ்ந்த அற்புதங்களாமென்று திருச்செங்கோட்டிலிருந்த தவமுனிவர்கள் கூற, அறிந்துணர்ந்தவைகளில் சிலவற்றை, நாககிரீசுவரர் அநுக்கிரகத்தால் மொழிகின்றேன், சிவகருணை விளங்கிய சரித்திரமானதால் இவைகளை, யும் அன்புடன் கேட்பீர்களாக. கடையுகமாகிய இந்தக் கலியுகத்திலே தேவர்களும், இது ஏதோ காரணமாகும் போலக் காணப்படுகிறதே என்று ஆச்சரியப்படுமாறு அசுவபதி, கஜபதியென்னும் யவன அரசர்கள், படையாலும் அடலாலும் மிகுந்து அரசுபுரிந்தார்கள். வடவாமுகாக்கினி தான் புகைந்தெழுந்ததோ என்று சொல்லும்படியாகச் சேனைக் கடல் பொங்கித் தென்முகம் நோக்கி கேதாரம், காசி, மல்லிகார்ச்சுனம், தென்கைலாயம், வேங்கடம், அருணை, தில்லை முதலிய தலங்களைக் கெடுத்து எங்கள் மதத்தைப் பரவச்செய்கிறோமென்ற வீரத்துடன் புறப்பட்டு நடக்கும் முன்னணி தென்சமுத்திரத்தை எட்ட இடையிலுள்ள பலதலங்களின் பொருள்களைக் கொள்ளையிடல், சாஸ்திரங்களை யபகரித்தல் முதலிய கொடுந்தொழில்களைச் செய்து வருவது கண்டு, சேரன், சோழன், பாண்டியனென மூவேந்தரும் கொல்லி, கோனேரி, பொதியம் என்னும் தங்கள் மலைகளில் ஒழித்துக் கொண்டார்கள். வந்த யவனப்படை மதுரையை யடைந்தது. சொக்

‡ சூதர் சவு நகர்முதலாஞ் சுருதிமறையவர்க்குரைத்த
காதையொழிந் தனமிப்பாற் கன்னிபங்கன் திருவிளையாட்
டிதெனச்செங் கோட்டுறைவு மிருந்தவத்தோ ரிசைப்பவுணர்ந்
தோதுவன்சிற் சிலவறிந்த நாகவரைச் சிவனருளால்.

—திருச்செங்கோட்டுப் புராணம்.

கநாதக் கடவுளாகிய எல்லாம் வல்ல சித்தர் காட்டியருளிய அற்புதங்களைக் கண்டு பயந்து அந்நகரை விட்டு வழிகளிலுள்ள பல இடங்களிற் கொள்ளை கொண்டு திருச்செங்கோட்டையடைந்து அழிக்கக் கருதி வந்தார்கள். அப்பொழுது உமையொருபாகர் திருவடியிலும், ஷண்முகநாதர் திருத்தொண்டிலும் மாறாத அன்பு பொருந்திய பக்திசிரத்தையுள்ள, வீமனன், ஓவணன், இரங்கணன் என்னும் அரசர்கள் ஸ்திரி ஜனங்களுடன் சேனை சூழமலையாள தேசமுதலிய இடங்களிற் சென்று பொருள் தேடி நாகமலைச்சாரலில் வந்து தங்கினார்கள்.

ஆங்கு யவனர்கள் புரியும் கொடுமைகளைக் கேட்டு மனஞ்சகியாராய் கத்திகேடயங்களும் வில்லும் கணைகளும் தாங்கி, ஆட்டுமந்தையில் புலிகள் புகுந்தவாறு யவனப்படைகளைச் சின்ன பின்னப் படுத்தி கால்வேறு தலைவேறு உடல்வேறாகக் கண்டித்துவிடவே யவனர்கள் மாண்டுபோனார்கள். கண்ட யவன அரசர்கள் கடுஞ்சினங்கொண்டு அம் மூவரசரையும் எதிர்த்தார்கள். அந்த மூன்று வீரர்களும் உயிர் துறந்தார்கள். யவனத்தலைவர்கள் மலையேறினார்கள். தேவேந்திரன் கண்டு மனம் புழுங்கி வச்சிராயுதத்தை ஏந்தி சேனையை மாய்த்தான். கெடுமதியுடன் பணிமலை யேறினமையால் யவனத் தலைவர்கள் அந்தகராய் வழிதெரியாது ஐயோ! மகிமை வாய்ந்த தலமென்றும், தெய்வ அநுக்கிரக முள்ளவர்களென்றும் அறியாது வந்து எதிர்த்து கண்ணிழந்தோமே! என்செய்வோம் சுவாமி யென்று தோத்திரித்திருந்தார்கள்.

சமயம் கெடாமலும், தலமழியாமலும் காக்கும் நிமித்தம் வைராக்கியமுற்று மாய்ந்த மூவரையும் அநுக்கிரகிக்கு நிமித்தம் உமையொருபாகர் எதிர்தோன்றி மூவரையும் எழுந்து வருக அருளி அன்பர்களே! உங்கள் பெண்களுடன் கூடி பூலோகத்தில் வாழ்ந்திருக்கப் பிரியப்படுகிறீர்களா? எனத் திருவாய்மலர்ந்தருளினர். எங்களை யாட்கொண்ட பெருமானே! உலகத்திலே பிறந்தவர்கள் எப்போதாயினும் இறக்க வேண்டுமென்பது தேவரீர் அருளிய வேதாகமங்களின் துணிபு. இதனிடையே முக்குணத்தால் புத்திமாறிக் கொண்டுவரும். இப்பொழுது மூர்த்தி தலதீர்த்தம் மோக்ஷங் கொடுக்க வல்லதானதால் அவைகட்கு இடையூறு நேருதல் கூடாதென்றும் அவ்விதம் நேருமென்று உத்தேசத்தால் தெரிந்தால் உடல், பொருள், ஆவி மூன்றும் விட்டேனும் பாதுகாத்தல் வேண்டுவது பத்தி யுள்ளார்க்கடையாள மென்றுந் தோன்ற எதிர்த்து யுத்தம் செய்து

மாய்ந்ததை நோக்கி, அருள் சுரந்து தேவர்கட்கும் கிடைத்தற்கரிய அரியதரிசனம் நாயினேமுக்குக் கொடுத்தருளப் பெற்றேம். இனி உடல் பெற்று வாழ்ந்திருப்போமாயின் மனம் வாக்கு காயங்களாலாகும் தொழில்களால் வினைபொருந்தி தீமைக்கு இடமாயினுமாம். எங்களுக்கு பூலோக வாழ்வு வேண்டாம். தேவரீரது திருவடிப்பத்தியும் அடியார்களிடத்து அன்பும் மாறாதிருக்கும் வரமே வேண்டுமென்று துதித்தார்.

வேண்டிய வேண்டியாங்குதவும் பெருவள்ளலாராகிய கருணாநிதி அன்பி நோக்கி! அன்பர்களே! உங்களுக்கு தேவபதவி கொடுத்தோம். நம் அடியார்களுக்குற்ற வல்வினைகளை நீக்கி நம் நாகாசலச் சார்பில் ஸ்திரி ஜனங்களுடனே பணிமலை காவலர் என நம் அடியவர்கள் புகழ வாழ்வீர்களாக என வரமுதவி மறைந்தருளினர். ஸ்ரீ அர்த்தநாரீசுரர், அரவகிரிவேலர் திருவருட்கு வைப்பிடம் என்றோதும்படி வீற்றிருந்தருளினார்கள். உமைபாகரருளால் இது ஒரு காரணமாயிற்றென்று உலகம் புகழ்ந்தது. பில்லி சூனியம், வைப்பு, பேய், பசாசு, மாடன், இருளன் முதலிய க்ஷுத்ர வினைகளெல்லாம் பெருந்தீமுன் இலவம்பஞ்சாகக் கரிந்து பறக்கும்படி நாளும் தெய்வீகம்பொருந்த விளங்குகிறார்கள். குமாரக்கடவுளையும் கோதைபாகனையும் தரிசித்தவர்கள் பணிமலை காவலரைக்கண்டு வல்வினையகலப் பெறுகிறார்கள். இம்மகிமை யுணர்ந்த தேவேந்திரனும் இப்பதவியை விரும்புகிறானென்றால் அதன் மகிமையை யாவரே புகல வல்லார். சிவபத்தி வாய்ந்தோர்களுக்கு தீங்கு புரிந்தமையாலும், மங்கைபங்கன் திரவியங்களையபகரிக்க வேண்டுமென்று திருமலை யேறியதாலும் கண்கள் தெரியாது அசுவபதி கஜபதி யென்னும் இருவரும் அந்தகர்களாய் வழிகாணாது கலங்கி கோதைபாதியரையும் குமாரதேவரையும் வணங்கி பூதியணிந்து சிவபத்திகொண்டு, மூவரசரான மலைகாவலரைச் சரண் புகுந்து மன்னிப்புடன் நல்வரம் பெற்று வாயில் காவலராக நின்று, மணிமலைப் பரமரிடத்து அன்புள்ளார்க்கு எவ்வித தீவினைகளும் அணுகாது காத்து பத்திபொருந்தி விளங்குகிறார்கள்.

## கல்லிடபத்துக்குக் கடலையருத்திய மான்மியம்.

நீர்வளம் நிலவளம் குடிவளமுதலிய எவ்வளங்களாலும் சிறந்து செழித்து இந்நாட்டிற்கிணை எந்நாடு மொவ்வாதென்று பொன்னாட்டாரும் புகழும் பொற்பமைந்த சோழநாட்டுக்குத் திருமுகம்போல

விளங்கும் கும்பகோணத்திலே வேளாண் செட்டிகள் மரபியற்றிய மாதவத்தானே தோன்றிய சிவப்பிரகாசர் சிவபக்தி ஜீவகாருண்ணியம் பொறுமை அன்பு ஆசாரம் ஒழுக்கம் ஊக்கம் சாந்தம் சற்சனநேய முதலிய நற்குணங்களோடு உண்மையே பேசுவதும், உறுதியே சொல்வதும் பெரியோர்களைக் கண்டால், அன்போடும் அச்சத்தோடும் எதிர்கொண்டு வணங்கி வாழ்த்துவதுமாகிய நற்செய்கைகொண்டு ஏழு வயசிலேயே இலக்கிய இலக்கணப் பயிற்சியும் ஞானசாஸ்திராப்பியாச முடையோராய் மானுடப் பிறப்பினருமையும் இது நீங்குமுன்னரே சற்குருவை அடைந்து முந்திவழி தேடவேண்டுமெனச் சிந்தித்து மூர்த்தி தலந்தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும் என்ற ஆப்தவசனத்தின் வண்ணம் புண்ணியஸ்தல யாத்திரை செய்யப் புறப்பட்டனர்.

பல நாடுகளுக்குச் சென்று பற்பல சிவஸ்தலங்களைக் கண்டு புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி சிவதரிசனஞ் செய்து கொண்டு அங்கங்குள்ள பெரியோர்களையும் தரிசித்து இரு என இருந்து ஆன்மஞான சம்பாஷணை செய்துகொண்டு சஞ்சரிப்பாராயினர்.

நவகோடி சித்தவாசபுரம் கோமுத்தி க்ஷேத்திரம் என்னும் திருவாவடுதுறை வந்து வைதிகசைவ சித்தாந்த ஞானபானுவாக விளங்கும் நமச்சிவாயமூர்த்திகளைக் கண்டு தரிசனஞ் செய்து அஞ்சலியஸ்தராய் நிற்கும்போது தன்னை யறியாது கண்களினின்று ஆனந்த நீர் ஊற்று நீர்போர் சுரந்து சுரந்து விழுந்து விழுந்து மார்பினிடத்து வண்டலாடவும், உடல் குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர் சிலிர்த்து, மயிர்க்குச்செறிந்து என்புநெக்கு விட்டுருகியும், மனங் கனிந்து கசிந்து கசிந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பட பட என்று பதறிப் பதறி உருகி உருகி ஆனந்தவெள்ளத்தி லழுந்தி யழுந்திப் பரவசமாகியும், என்றும் தோன்றாத வண்ணம் அன்பும் ஆராமையும் அச்சமும் தோன்றுதலால் இதுதான் நன்மை அடிமை கொண்டருள எழுந்தருளிய ஞானசாரியமூர்த்தமென்று கருதி, ஹரஹர என வாய் நீர் சுரந்து பாடி ஆடி நாக்குழறித் தழும்பேறியும், ஆனந்தக்கூத்தாடியும் கைகளைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு அன்பே வடிவமாகி நிற்கும் இவரது அதிதீவிர சத்தி நி பாதக் குறியைச் சுவாமிகள் திருவுள்ளத்தடைந்து கிருபாவீக்ஷணஞ் செய்து நமதருட் குருவின் திருவாக்கின்படி எய்திய பக்குவி இதன்தானென்றுதேறி உடனே ஞானவிதி முறைப்படி சிவதருமணி என்னும் நைட்டிக

தீக்ஷை செய்து அபிஷேகம் பண்ணி உண்மை நிலையையும் உபதேசித் தடிமைகொண்டு பதிபசு பாசம் என்னும் திரிபதார்த்த உண்மை தேறுமாறு சைசித்தாந்த சாஸ்திரங்களை உபதேசித் தருளினர். சீடராகிய சிவப்பிரகாச சுவாமிகள் சாக்ஷாத்கரா சுவானுபவ நிலையை மௌனமுத்திரையினால் குறிப்பாய் எடுத்து விளக்க, நமச்சிவாய மூர்த்திகள் ஆனந்த பரவசராய்த் தமது இரண்டு திருக்கரங்களாலும் ஆலிங்கனஞ் செய்துகொண்டு இவ்வாதீனத்தைப் பரிபாலித்து வரக் கடவை என்று கட்டளை இட்டு சகசானுபவ நிமித்தம் குகையில் வசித் துக்கொண்டிருந்தனர். சிவப்பிரகாச சுவாமிகளும் குருவாஞ்ஞையின் வண்ணம் சிலகாலம் அங்கு ஆதீனமுறைப்படி அன்பர்களுக்குத் தீக்ஷாநுக்கிரகஞ் செய்துகொண்டிருந்து பின்னர்த் தமது பரமாசாரியராகிய உபாபதிசிவாசாரியரையும் நடராஜ வள்ளலாரையும் தரிசிக்கும் பேரவாக்கொண்டு திருக்கூட்டத்தோடு சிதம்பரத்தை அடைந்து, சிற்சபேசர் சந்நிதிமுன் நின்று ஹரஹர மகாதேவா! என்தந்தையே! என் தாயே! என் குருவே! என் தெய்வமே! என் குலதெய்வமே! என் உயிர்த்துணையே! என் அறிவுக்கறிவாகிய இறைவனே! தேவரீர் திருவடிப் புகழை அனந்தமாகிய வேதங்களுமறியாது விழித் துக்கொண்டு தேடித் தேடி இளைக்கின்றன என்றால், ஒன்றுக்கும் பற்றாத கிஞ்சிஞ்ஞனாகிய அடியேன் எப்படி அறிந்து துதிப்பேன் என்று பேரன்போடு அஞ்சலியஸ்தராய் ஆனந்தபரவசராய்த் தரிசித்து நிற்கும்போது அம்பலவாணர் திருவருளால் தமது திருக்கரத்தில் திவ்யமாகிய ஒரு சிவலிங்க மெழுந்தருளியிருக்கக் கண்டு இது சிவபெருமான் கருணை எனக் கருதி உள்ளக்களிப்பினோடு பன்முறை பணிந்தெழுந்து அமலமூர்த்தியிடம் விடைபெற்று ஆலத்தை அரிதி னீங்கிக் கொற்றவன் குடிக்குச் சென்று முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்த உமாபதி சிவாசாரிய சுவாமிகள் சந்நிதானமடைந்து தரிசனஞ் செய்து சிலநாள் அத்திருமடத்தில் வசித்திருந்து தமதுள்ளத்தை ஆனந்த நடராஜபிரான் தரிசனத்துளதாய பேரன்பிழுக்க, மற்றொருபால் குருவாஞ்ஞை திருவாடுதுறைக்குகந்த, படர்ந்த அரசு விளங்கு நற்றலத்திற் புகுந்து சிவபெருமானைத் தரிசித்து ஆனந்தபரவசராய் நடனமாடித் தேவாரம்பாடித் திருக்கரத்தாற்றிருத்தாள மொற்ற அத்திருக்கை சேப்புற்று வருத்தமுறுவதைத் தயாநிதியாகிய எம்பெருமான் திருவுளத்துணர்ந்து ஓர் திருத்தாளங் கொடுத்தருளப் க்களிப்போடு திருமடத்திலெழுந்தருளி யிருந்தனர்.

அக்காலத்தில் இராயவேலூரில் அரசுபுரிந்து கொண்டிருந்த விருபாக்ஷிராயருடைய ஆஞ்ஞையினால் அதிகாரம் பெற்ற வைணவ சமய ஒழுக்கம் பூண்ட ஓர் வடுகன், நடுநாட்டின்கண் அதிகாரஞ் செலுத்திக் கொண்டிருந்தனன். அவன் சிதம்பரஞ் சென்று நடராஜாவுக்கு நடக்கும் நித்திய நைமித்திக விபவங்களைக் கண்டு களிகூராது, புறச்சமயத்தானாகிய வைணவனாதலால் மிகப் பொறாமை கொண்டு அந்த நடேசராலய வருவாய்கள் அனைத்தையும் கோவிந்தராஜப் பெருமாள் பெயரால் செய்து திருவாராதனம் திருவிழா முதலியவற்றை விபவமாக நடாத்தினான். நடேசராலய நித்திய நைமித்தியச் செலவுகள் குறைவு நேரவே தீக்ஷிதர்களும் சைவர்களும் மற்றைத் தலத்தாரும் ஒன்றுகூடி அவ்வைணவனிடஞ் சென்று பலவாறுக நியாயங்களை எடுத்துக் கூறியுஞ் சிறிதும் செவிகொடாமையால் மனக்கவலை கொண்டு நித்திய கர்மானுஷ்டானம் ஆகாரம் நித்திரை முதலிய யாவுமொழித்து வாட்டமுற்று இவ்விவரங்களைச் சைவசமய ஸ்தாபன சந்தானசாரியராகிய திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சந்நிதிக்குத் தெரிவித்துக் கொண்டார்கள். இதனை வினவிய சிவப்பிரகாச சுவாமிகள் நிஷ்டாபரராய் எழுந்தருளியிருக்கின்ற தமதாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகளிடம் விண்ணப்பஞ் செய்தமாத்திரத்தில் நமது ஆன்மார்த்தமாயுள்ள நடேசபெருமான் சந்நிதிக்கு இவ்வளவு தாழ்வு நேரிட்டிருப்பதைக் கேள்விப்பட்டும் சும்மாவிருப்பது சரியன்று; ஆதலால், அப்பா! நீ உடனே சென்று இக்காரியத்தை எவ்விதத்திலாவது ஜயித்துக்கொண்டு வரவேண்டுமென்று நமசிவாய மூர்த்திகள் உத்தரவு கொடுத்தருள, திருக்கூட்டத்தோடுஞ் சிதம்பரத்துக் கெழுந்தருளி வைணவனாகிய அவ்வதிகாரியிடத்துச் சென்று முன்பின் வழக்கங்களை அனுபவ பூருவமாக எடுத்துக் காட்டியும் கேளாமையால் வைணவர்களுக்கும் தீக்ஷிதர்களுக்கும் பெரும் போர் நேர்ந்தது. இவ்வாறு நேர்ந்தும் சாதகம் காணாமையால் தீக்ஷிதர் முதலிய சைவசமயிகள் ஒன்று கூடி இராயவேலூர்க்குச் சென்று இராயருக்கிதனை அறிவித்து இச்சிவத்துரோகியை நீக்குவித்தாலன்றி இத்துயர் நீங்குவதில்லை எனத் தீர்மானித்தார்கள். அப்பொழுது சிவப்பிரகாச சுவாமிகள் நாமே அங்கு சென்று, முடிவு செய்து கொண்டு வருகின்றோம் என்று பிரயாணஞ் செய்யத் தொடங்கினர். அன்று இரவில் நடேசபெருமான் தீக்ஷிதர்கள் சொப்பனத்திற் றோன்றி, "நம்முடைய சிவிகை சத்திர சாமரம் ஆலவட்டம் இடபத்தடி முதலிய சகல விருதுகளையும் கொடுத்துச் சிவப்பிரகாசத்தை



கல்விருஷபத்துக்குக் கடலையருத்தல்.

அனுப்பக்கடவீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். தீக்ஷிதர்கள் வைகறையிலெழுந்து சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து நித்திய கடனே முடித்துக்கொண்டு சபாபதியைத் துதித்து விடைபெற்றுச் சொப்பனத்திற் கட்டளை யிட்டவாறே சிவிகை சத்திர சாமராதி சின்னங்களைக் கொண்டு வந்து வைத்து அம்பலவாணர் கட்டளையிட்ட செய்தியையும் கூறிப்பிரார்த்திக்க, சுவாமிகள் அவற்றை நோக்கியிருந்த அச்சங்கொண்டு சந்நியாசியாசிரமமுடைய நமக்கு இவைகள் ஏன்? வேண்டுவதில்லை என்று மறுக்க அம்பலவாணர் அருளிப்பாடாதலால் சுவாமிகள் மறுப்பது யுத்தமன்றென்று கூறியது கேட்டு, பரம காருணிகராகிய சிவபிரான் திருவருள் இங்ஙனமாயின் தடுப்பது நன்றன்று என உடன் பட்டு அவர்கள் வேண்டு கோளின்படி சிவிகையின் மீதெழுந்தருளித் திருக்கூட்டத்தோடும் அநேக சின்னங்களோடும் ஆடம்பரமாக அவிடத்தினின்று மெழுந்தருளி திருக்காளத்தி திருக்காஞ்சி முதலிய தலதரிசனஞ் செய்து கொண்டு வேலூருக்குச் சென்றனர். சுவாமிகள் எழுந்தருளுவதை அங்குள்ள தலவாசிகளாகிய சிவநேயர்கள் கேள்வியுற்று எதிர்கொண்டு சென்று சுவாமிகள் நல்வரவினைப் பணிவோடு வினவினர்கள். தமதுள்ளக்குறிப்பைக் கட்டளையிட்டருள அவர்கள் சுவாமி! மந்திரியின் சகாயமிருந்தால்தான் கருத்து முற்றுப்பெறும். ஆனல் மந்திரி கன்னடர், வீரசைவம், பத்தரிடத்தன் புள்ளவர், இலிங்கணபத்தர் என்பது அவர் பெயர். இலிங்க சம்பந்தமில்லாதவர்கள் யாராயிருப்பினும் இவர் முகாலோபனஞ் செய்கிறதில்லை என்றனர்.

அது கேட்ட சுவாமிகள் இதற்குயாது செய்யத்தக்கது என்று மயங்கிச் சிவாலய வழிபாட்டின் பொருட்டு பெரியோர்கள் எத்தனையோ வகையிற் புகுந்து நடாத்தியிருக்கின்றார்கள். ஆதலின் ஆன்மார்த்த சிவலிங்கப் பெருமானைச் சிறுபெட்டகத்துள் எழுந்தருளச்செய்து உத்தமாங்கமான சிரசின்மீது தரித்துச் செல்லலாமெனத் திருவுளத்து உணர்ந்து கொண்டிருக்கையில், அம்பலவாணர் அசரீரியாக "அங்ஙனமே புரிதி" என்று மும்முறை கட்டளையிட்டருளலும் சுவாமிகள் ஆனந்த பரவசராய்ப் பணிந்தெழுந்து ஸ்நானனுஷ்டானம் பூஜை முடித்துச் சிவலிங்கப்பெருமானைச் சிறுபெட்டகத் தெழுந்தருளப்பண்ணிச் சிரசின்மீது தரித்துக்கொண்டு, திருக்கூட்டத்தாருக்கும் அவ்வாறே தரிப்பித்துப் பின்னர் இலிங்கண பத்தர் அரண்மனைக்குச்சென்று தமது வரவைத் தெரிவித்தனர்.

அம்மாதிரி நம் சமயாசாரியர் எழுந்தருளினரென்றுணர்ந்து சகலவிருது வாத்தியங்களோடும் எதிர்கொண்டு வந்து தன் அரண்மனைக் கெழுந்தருளச் செய்து அர்க்கியபாத்திய ஆசமனாதி உபசாரங்களோடு பாதபூசை செய்து விதிப்படி நமஸ்கரித்துத் தீர்த்தப் பிரசாதம் பெற்று அஞ்சலியஸ்தனாய் ஒன்றுக்கும் பற்றாத நாயேனைப் பொருளாக மதித்து இச்சிறுகுடிலுக்கு எழுந்தருளியகாரணம் யாதென விண்ணப்பஞ் செய்ய, சிதம்பரத்தின்கண் வைணவனாகிய ஒருவன் சிவாபராதியாய் அதிகாரஞ் செலுத்துகின்றனன் என்று அவனது தீயவொழுக்கங்களை யெல்லாம் ஆதியோடந்தமாய்த் திருவாய்மலர்ந்தருளக் கேட்டமாத்திரத்தில் அவ்வமைச்சர் மிக மனவருத்தமுற்று உடனே ஏவலாளர்களைக் கூவி "நீங்கள் அதிவிரைவாகச் சிதம்பரஞ் சென்று சிவபராதியாய் அதிகாரஞ் செலுத்தும் அவ்வைணவனைச் சிரச்சேதஞ் செய்து அம்பலவாணருக்கு வழக்கப்படி சகல வருமானங்களையும் மீட்டுக்கொடுத்துச் சிறப்புறக் கும்பாபிஷேகஞ் செய்வித்து முன்போலத் தாழ்வின்றி நித்திய நைமித்தியங்களை நடப்பிக்கத் திட்டஞ் செய்து விபூதிப்பிரசாதம் இங்குக் கொண்டுவரச் செய்யுங்கள்" என்று சர்வாதிகாரமும் கொடுத்தனுப்ப, அவர்கள் அங்குச் சென்று அவ்வாறே செய்து தீக்ஷிதர்களால் விபூதிப்பிரசாதம் கொடுப்பித்தனர். அதனை அதிவிநயத்தோடு சிவப்பிரகாசதேசிகர் தமது திருக்கரத்தாலேற்றுச் சிவகவசமாக நெற்றியிற்றரித்து மந்திரியாருக்கும் கொடுப்பிக்க அவரும் கிரமமாக வாங்கி அணிந்து கொண்டனர்.

பின்பு சித்தராமதேவரை வரவழைத்து வீரசைவக்கிரியாசாரத்தைப்பெற்று எல்லோரும் சமத்துவமாக விருந்து இலிங்க நிவேதனஞ் செய்து முடித்த பின்னர் ஆன்மார்த்த சம்பாஷணஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது, அரசன் சுவாமிகள் எழுந்தருளியிருத்தலையும், அவரது மகிமையையும் கேள்வியுற்று மந்திரியார் அரண்மனைக்கு வந்து சுவாமிகளைக் கண்டு தரிசித்து தேசிகோத்தவர்! சிலநாள் இங்கு மழை பெய்யாமையால் பயிர்களும் பிராணிகளும் வாட்டமுறுகின்றனஎன்ற போது சிறிது நேரம் இங்கிரும் எம்பெருமான் கருணைபுரிவார் எனக் கட்டளையிட்டு உள்ளேசென்று சிவபூஜை முடித்து வீணையைக்கையிலே தாங்கி முற்றத்திலே பொறுத்தற்கரிய வெய்யிலினின்று மேகராகக் குறிஞ்சி என்னும் பண்ணால் தேவாரமோதி ஓர் காலைத்தூக்கி நர்த்தனஞ் செய்தருளிய வுடனே பெரியமழை உண்டாய் ஊரெங்கும் வெள்ளமயமாயின. அரசனும் மந்திரியும் ஆச்சரியமுற்று போதும் என்று வேண்டினார்கள். நடனத்தை நிறுத்த மழையும் நின்றது. இம்

மகிமை கண்ட அரசனும் மந்திரியும் சுவாமி! இதோ சமீபத்திருக்கும் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்து அடியேங்களுக்குச் சதா தரிசனம் கொடுத்து வருதல் வேண்டுமெனப் பிரார்த்திக்க அவர்கள் அன்புக்கிணங்கினர். அத்தலத்து அக்கினி தீர்த்தக்கரையில் திருமடம்மைத்துப் பூசை நைவேத்தியாதிகளுக்கு ஏழுகிராமம் சர்வமானியம் விடுத்து ஆனை குதிரை ஆநிரை சத்திர சாமராதி விருதுகளும் கொடுத்தருளினர். சகலவிபவத்தோடும் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்தனர். அக்காலத்து அத்துவிதவெண்பா முதலிய பதினைந்து கிரந்தங்கள் அருளிச்செய்தனர்.

இங்ஙனம் சிலநாளகன்றபின் தலயாத்திரை செய்யக் கருதி திருக்கழுக்குன்றம் திருக்காளத்தி ஏகி பொன்முகரியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது, வடதேசத்திலிருந்து அங்கு வந்திருந்த மத்துவசமயாசாரியர் ஒருவர் பூசைமுடித்து நிற்கக்கண்டு இருவரும் அளவளாவி ஒருவருக்கொருவர் நல்வரவு வினவிப் பிரிய வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கும் போது, இருவர்மத சித்தாந்தங்களை வாதிக்கத் தொடங்கினர். "சுருதியுக்தி அனுபவங்களுக்கு விரோதமின்றிச் சமயவாதம் புரிவதில் எவர் தோல்வி எய்துகின்றனரோ அவர் வெற்றி எய்திஞேர்க்கு அடிமையாதல் வேண்டும்" என்னும் பிரதிஞ்ஞை செய்து கொண்டு அந்நதிக்கரையிலேயே மத்துவர் வாது செய்து சித்தி பெறுமல் நான்காம் நாள் தமது மத்துவாசாரிய ஸ்தானத்துக்கு வேறொருவரை நியமித்து தம்மோடு கூடவந்த யானை சேனை முதலிய யாவற்றையும் அவரிடத்தே ஒப்பித்து தாம் சுவாமிகள் திருவடியில் நமஸ்காரஞ் செய்து அவரால் கொடுத்தருளப்பட்ட விபூதி உருத்திராக்ஷ பஞ்சாக்ஷர முதலிய வற்றைப் பெற்று அடிமைப்பட்டு அஞ்சலியஸ்தராய் நிற்க "தூளிதங் காளத்தி மூர்த்தி" யெனத் தீக்ஷாநாமமிட்டுச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கு நின்றும் கலியாணபுரி தரிசித்து உடுப்பிச் சுப்பிரமணியத்தருகிலோர் தாடகக் கரையில் மூன்று நாள் விதேக கைவல்லிய நிஷ்டானுபூதியிலிருந்தனர். அவ்வூரிலுள்ள அன்பர்கள் சொப்பனத்தில் எம்மிறைவன் அறிவித்தவண்ணம் காலையில் சுவாமிகளை வணங்கி அமுதுகொள்ள வேண்டுமெனப் பிரார்த்திக்க அன்பிற்கிரங்கிச் சிவபூசை புரிந்து திருக்கூட்டத்தாருடனங்கிருந்து பின்னர்க் கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டுக்கு எழுந்தருளினர்.

அப்பொழுது அத்தலத்தின் கண்ணுள்ள கேதாரி ஐயர் என்னும் ஓர் பிராமணருடைய சிஷ்யர்களிற் சிலர் இந்தப் பிராமணவீதியில் சூத்திரர் சிவிகையேறிச் செல்லுதல் கூடாதென்றார்கள். எத்தனையோ திவ்யஸ்தலங்களில் எந்த வீதிகளிலும் சிறிதும் தடையின்றி வந்த சிவிகையை இங்கு ஏன் தடுக்கின்றீர்கள் என்று தேசிகோத்தமரது திருக்கூட்டத்தார் வினவவும் கேளாது துடுக்கெனவந்து தடுத்தனர் இதனைத் தெரிந்த சுவாமிகள் தமது அடியாரை நோக்கி நீங்களேன் மறுக்கின்றீர்கள். சந்நியாசிகளுக்குச் சிவிகை சாமரம் சத்திராதியாடம்பரங்கள் எற்றுக்கு? ஆனால் சிவபிரானது அருளிப்பாட்டை மறுத்தற் கஞ்சியன்றோ இவற்றை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. முன்னர் ஊர்ந்து செல்லும்படி சிதம்பரத்தில் தீக்ஷிதர் முதலியோரைக் கொண்டு பிரேரேபித்த திருவருள் இப்பொழுது இத்திருச்செங்கோட்டில் இவர்களைக்கொண்டு இறங்கி நடந்து செல்லுமாறு கூட்டியது போலும் எனச் சிவிகையினின்றிறங்கி எப்படிப் பட்ட பெரியோர்களானாலும் பிராரப்த கன்மத்தை அனுபவித்தே தொலைத்தல் வேண்டுமென்று சொல்லிக்கொண்டு பாதசாரியாய்ச் சென்றனர்.

இதனைக் கேள்வியுற்ற அந்நகரவாசிகளாகிய சிவநேசர்கள் பலர் திடுக்கிட்டோடி வந்து பார்த்தபோது விபூதி ருத்திராக்ஷ காஷாயாலங்காரமும், முகத்திற் சிவகளைப் பொலிவும் அடக்க ஒடுக்கமும் அன்புமுள்ள அடியார் கூட்டங்களும், சிவிகையூர்ந்து செல்லல் கூடாதென்று தடுத்து இறங்கிச் செல்லச் செய்தமையினால் சிறிதும் கலக்கங்கொள்ளாது எல்லாஞ் சிவன்செயல் என்றெண்ணிய திண்ணமும் நோக்கி மனமுருகினவர்களாய்க் கண்களில் நீர் சொரிய அஞ்சலியஸ்தராய், ஏது கூறுதற்கும் அஞ்சினவர்களாய்ப் பின் சென்றார்கள். தடுத்த கூட்டத்தார்களும் தொடர்ந்து சென்றார்கள். சிவதீர்த்தத்திலே சிவப்பிரகாச சுவாமிகள் அநுஷ்டானம் புரிந்தனர். திருக்கூட்டத்தாரும் அவ்வண்ணமே புரிந்து பண்ணமைவுடன் தேவாரமோதிக் கொண்டு ஆலயத்துட்சென்றார்கள். இதனிடையே செல்லும் பொழுது திருக்கூட்டத்தவர்களிற் சிலரைத் தலவாசிகளாகியசிவபத்திமான்கள் சுவாமிகள் யாரென விசாரித்தார்கள். திருவாவடுதுறைச் சிவப்பிரகாச சுவாமிகள் என்ற மாத்திரையானே முன்னர்ச் சுவாமிகளது பிரபாவங்களைக் கேட்டிருந்தவர்களாதலால் திடுக்கிட்டு மஹாத்மாவை இவ்வாறு அவமதித்தமை யாதாகுமோ! "பத்தர்கள் சித்தர்கள் பரமஞானிகள் சித்தங்கலங்கிடத் தீவினை மீண்டிடும்" என்றவாறு என்ன தீங்கு விளையுமோ? சருகுக்கிட்ட நெருப்புச் சந்தன மரத்தையும்

சேர்த்துப் பிடித்தது போலத் துடுக்கர்கள் செய்த முடுக்கு ஊருக்கே இடுக்கண் விளைக்குமோ தெரியவில்லையே எனத் துன்புற்று, வழியிற் றடுத்தவர்களைப் பார்த்து ஐயன்மீர்! இவர்களைச் சாமானியர்களாக மதித்து விட்டீர்கள் போலும், சிவபிரானது திருவருள் பூண்டவர்களாயிற்றே. சிதம்பரத்திலே சிவலிங்கமும், திருவாவடுதுறையிலே திருத்தாளமும் சிவபிரானே அனுக்கிரகிக்கப் பெற்றமையும், சிவிகை சத்திர சாமரங்களெல்லாம் சிதம்பரேசர் திருவருளால் பெற்றுக்கொண்டமையும் கேள்விப்பட்டிலீர்களோ? நவகோடிசித்த வாசபுரமாகிய திருவாவடுதுறை யாதீன புருஷரன்றோ. இக்காலத்திலே சைவப்பயிர் வளர்ப்பவர்களன்றோ. பாதசாரியாக நடக்கச் செய்து விட்டோமென்ற செருக்கு அடையவேண்டாம் என்றார்கள். சைவப்பயிர் வளர்ப்பவர்கள் என்றீர்களே, இவர்களுடைய ஆதீன மகிமையாது? என்பாரை நோக்கிச் சுவாமிகள் திருக்கூட்டத்தவருள் ஒருவர் கூறுவாராயினர்.

திருக்கைலாச மலையிலே அருள் வடிவாகிய கல்லால மரநிழலிலே தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ கண்டபரமசிவனார் சிவஞான போதப்பொருளை நந்தியெம்பெருமானுக்கு அருளிச்செய்ய அவர் மெய்ப்பொருள் தெளிந்து சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். அவர் சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச் செய்தார். அவர் பரஞ்சோதி முனிவருக்கருளிச் செய்தார். பரஞ்சோதி மகாமுனிவர் திருக்கைலாயமலையினின்று தமிழ்நாட்டுக்கு எழுந்தருளி திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்தருளி இரண்டு பிராயத்திற்றானே மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் எழுந்தருளியிருந்த சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்ட தேவர்பால் வந்து சிவஞான போதத்தை நல்கி இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து தற்பொருட்டு மொழி பெயர்த்துப் பொழிப்பு முரைக்க என்றருளி யுபதேசித்தகன்றனர். அம்மெய்கண்டதேவரும் திருத்துறையூரிலே அவதரித்தருளிய ஆதிசைவரும் சகலாகம பண்டிதரென்னும் காரணப் பெயருடையவருமாகிய அருணந்தி சிவாசாரியருக்கருளிச் செய்தனர். அவர் சிவஞான போதத்துக்கு வழிநூலாகச் சிவஞான சித்தியாரும், இருபா விருபதும் செய்து திருப்பெண்ணாகடத்திலே பிராமண குலத்திலே அவதரித்தருளிய மறைஞான சம்பந்த சிவசாரியருக்கு உபதேசித்தனர். மறைஞான சம்பந்த சிவாசாரியர் தில்லைவாழந்தணர்களில் ஒருவராகிய உமாபதி சிவாசாரியாருக்கு உபதேசித்தருளினார். உமாபதி சிவாசாரியர் வடமொழியிற் பௌஷ்கராகமத்துக்கு வியாக்கியானத்தையும், தமிழிலே புடை நூலாகிய சிவப்பிரகாசம், திருவருட்

புயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்டபுராணம் திருப்பதிகக்கோவை, முத லிய பிரபந்தங்களையுஞ் செய்தருளினர். அன்றியும் சபாநாயகர் விடுத் தருளிய.

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு-படியின்மிசை
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்னும் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பா னுக்கு உடனே முத்தி கொடுத்தருளினர். பின்பு அப்பெற்றான் சாம் பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அதனுண் மையை வெளிப்படுத்தி அவர்கள் ஐயத்தை ஒழித்தற் பொருட்டுத் தம்முடைய ஆன்மார்த்த பூஜை கொண்டருளிய சிவபிரான் ஆடி யருளிய தீர்த்தத்தினால் வளர்ந்து பரிபக்குவ மடைந்துள்ள முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தருளினர். சிதம்பரபுராணத்து வழித்தாக அருளிச்செய்யப்பட்ட கோயிற்புராணம் அரங்கேற்றப் படாது பேட கத்துள் இருந்தபொழுது சபாநாயகர் தில்லைவாழந்தணர்களுக்குச் சொப்பனத்திற்றோன்றி "நாம் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரி யருடைய பேடகத்துள் இருக்கின்றேம்" என்று திருவாய் மலர்ந் தருளினர். அதனைத் தில்லைவாழந்தணர்கள் உமாபதி சிவாசாரியருக்கு விண்ணப்பஞ்செய்ய அவர் கோயிற் புராணத்தைச் சபாநாயகர் சந்நிதி யில் விரைவாக அரங்கேற்றி யருளினர். உமாபதி சிவாசாரியரிடத்தே அனுக்கிரகம் பெற்ற அருணமச்சிவாய தேசிகர் நவகோடி சித்த வாச புரம் என்னும் திருநாமமுடை திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கு உபதேசித்தருளினர். சித்தர் சிவப் பிரகாச தேசிகர் திருவாரூரிலே வேளாளர் குலத்திலே பிரமசரிய நிலையிலே துறவறத்தினராய்ச் சத்தி நிபாதத் துத்தமராய் எழுந்தருளி யிருந்த நமச்சிவாயா குருமூர்த்திகளுக்கு உபதேசித்தருளினர். அந்த நமச்சிவாய மூர்த்திகளால் அன்புடன் உபதேசிக்கப் பெற்றவரே இப்பொழுது எழுந்தருளி வந்திருக்கும் சிவப்பிரகாச சுவாமிகள். என்ற மாத்திரையானே மெய் நடுக்குற்று அங்குள்ள சிவநேயர் களெல்லாம் கண்ணில் நீர் சொரிந்து மனம் பதைப்புக்கொண்டார்கள்.

கேதாரி ஐயர் சீடர்கள் இதனைக்கேட்டுச் சிறுநகைபுரிந்து இத்தன்மையான மகத்துவம் பொருந்திய ஆதீன புருஷரானால் இதோ சுவாமி சந்நிதானத்திலிருக்கிற கல் இடபம் எழுந்து கடலை உண்மைச் செய்வார? செய்தாலன்றோ மஹானென்று கொள்ளலாம் என்றார்கள். அப்படிச் செய்தால் யாது செய்து கொள்ளுகிறீர்கள் என்றார்கள். அடிமையாகிறோம் என்றார்கள். இதனைக்கேட்ட சுவாமிகள் திருக்கூட்டத்தினரும், தல அடியார்களும் வருந்தி ஈசுவர கிருபை பெற்றவர்கள் இக்காரியத்தைச் செய்விப்பது பெரிதன்று. எறும்பு பெண்ணுகை வில்லையா? முதலையுண்ட மதலை மூன்றாண்டின்பின் வரவில்லையா? என்று மறுமொழி கூறி சிவப்பிரகாச சுவாமிகள் பாதத்திற் பணிந்து இந்தக் "கல் இடபம் கடலையுண்மைச் செய்தல் வேண்டும்" என்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொண்டார்கள். யார் நம்மைப் புகழ்ந்தாலென்ன! இகழ்ந்தாலென்ன! இவ்வித பரீக்ஷைகாட்டி எந்தக் காரியத்தை முடித்துக்கொள்ளல் வேண்டும், என்று மறுக்கவே யாவரும் அடியற்றமரம் போல் விழுந்து, சுவாமி! சந்நிதானத்துக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லாவிடினும், அக்காலத்திலேதான் பரமேசுவரகிருபை விளங்கிற்று, இக்கலியில் ஒன்றும் நடவாதென்பாரும், சிவபிரானிடத்தும் சிவனடியாரிடத்தும் சிவாகமங்களிடத்தும் பற்றில்லாத மூடமதியானரும் பத்திகொண்டு வழிபாடியற்றி நற்கதி பெற்றுய்யத்தகும் பிறநலத்தைக் கருதிக் கருணைகூர்ந்து ஆவசியகம் செய்தருளல் வேண்டுமெனப் பன்முறை வேண்டுதலும் சிறிது மனசிளகினவராய்த் திருவருளிருக்கு மேல் இது ஒரு பெரிய காரியமா? என்று கூறி, ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் சந்நிதியில் அஞ்சலியஸ்தராய் நின்று ஸ்மரணை செய்து,

வில்லார் பொதுச்சபையின் வித்தகா நீயுமுனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாகிலிந்தக் கல்லேறெழிஇக் கடலை
இட்டவிவர் முன்றினச்செய்யே.

என்னும் இவ்வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளின மாத்திரையானே சந்நிதானத்திருந்த திருநந்திதேவர் ஓங்காரமிட்டு வாலை நிமிர்த்திக் காலைநீட்டி எழுந்து முன்வைத்த கடலை முழுமையும் புசித்து நிற்ப, இத்தெய்வீகத்தைக் கண்ட யாவரும் வியப்புற்று ஹர ஹர சப்தம் புரிந்து அஞ்சலியஸ்தராய் ஆரவாரித்து மகிழ்ந்தார்கள். கேதாரி ஐயர் சீடர்கள் மிகுந்த அச்சங்கொண்டு நடுங்கி ஓடோடியும் மலைவி

னின்றிறங்கி ஆசாரியர் பாற்சென்று இவ்வற்புதத்தை விண்ணப்பஞ் செய்யக்கேட்டு ஆச்சரியமும் பயமுங்கொண்டு மலையேறி அங்கு ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் தரிசனஞ் செய்திருக்கும் சுவாமிகள் பாதத்தில் தீர்க்கதண்டன் சமர்ப்பித்து, ஜாதியிலும் சமர்த்திலும் உயர்ந்தோர்கள் என்று நாங்கள் கொண்டிருந்த அகந்தையை அம்மையப்பர், சந்நிதானத்தை கொண்டு நீக்கிவிட்டனர். அடியேங்கள் அபராதத்தைத் திருவுள்ளத்தடைக்காது மன்னித்து அடியேங்களை அடிமை கொண்டருளுதல் வேண்டும். அடியேங்களை அடிமைகொண்டதற்குச் சாட்சியாக சுவாமிகள் இச் சிவிகையின் மீது முன்போலவே எழுந்தருளுதல் வேண்டும். அவ்வாறின்றிப் பாதசாரியாகச் செல்லின் சுவாமிகள் சந்நிதியிலேயே உயிர்விடுவோம் என்று அன்பினோடு பிரார்த்திக்க அவர்கள் அன்புக்கிரங்கி அங்ஙனமே சிவிகைமீ தெழுந்தருளியாவரும் துதிக்க நகரப் பிரதக்ஷிணம்புரிந்து கேதாரி ஐயர் திருமடத்திறங்கி அவர்களுக்குத் தீக்ஷைபுரிந்து சிலநாள் அங்கிருந்து நின்றகோல நிமலராகிய உமையொரு பாகரைத் தரிசித்துக்கொண்டிருந்து அரிதினீங்கித் திருவண்ணாமலைக்கு எழுந்தருளினர்.

துறையூர் இளவரசனாகிய இலிங்கதுரை காசியாத்திரைபோய்த் திருவண்ணாமலையிலே சுவாமிகள் திருமடத்தில் தங்கி தரிசித்துக்கொண்டிருக்கும்பொழுது, தன் தமையன் இறந்துபோக இளவரசர் திருவண்ணாமலையிலிருப்பது தெரிந்து வந்து விண்ணப்பித்தார்கள், அரசன் வருந்தி ஒருவாறு தேறி இது சிவப்பிரகாச சுவாமிகளின் சந்நிதானப் பெருமை என்று கருதி சுவாமிகளையும் அழைத்துக்கொண்டு வரும் வழியில் பெண்ணையாறு மிகப்பெருகிவரக்கண்டு விபூதிப்பிரசாதத்தைச் சுவாமிகளிடக் கணைக்காலளவு ஜலமாகவே அரசன் சிவிகையின் வரக் கரைசேர்ந்து துறையூர் வந்து அரசு கொண்டவுடன் தன் அரமனைக் கெதிரில் திருமடமமைத்துக் கொடுத்து பூஜை நைவேத்தியத்தின் பொருட்டுச் சர்வமானியமாகச் சில கிராமங்களைச் சாசனமெழுதிக் கொடுக்க அவ்விடத்து வசித்துவந்தனர். குருதரிசனஞ் செய்யக் கருதித் திருவாவடுதுறைக்குச் செல்லும் மார்க்கத்தில் திரிச்சிராப்பள்ளியில் அடியார்கள் வேண்டப் பட்டணப்பிரவேசமாகுங்காலத்திலே பந்தங்களுக்கு எண்ணெய் இல்லாமலும் காலமானதால் அகப்படாமலும் போனதை அறிவிக்கக் காவிரி ஜலத்தைக்கொண்டு வந்து போடுக எனக் கட்டளையிட்டவாறு காவிரி ஜலத்தை விடப்பந்தம் எரிந்தது. திருச்சோற்றுத் துறையருகிலுள்ள ஆலமரத்தடியிலிருந்த குட்டரோகி வணங்கமனமிரங்கி தம்பலத்தைக் கொடுக்க உண்டமாத்திரத்தே அந்

நோய் நீங்கித் திருக்கூட்டத்தொருவனுனன். சோழவமிசத்தாளொருவன் பிரமகத்திதோஷத்தால் வருந்தக்கண்டு விபூதியைத் தெறித்தவுடனே பிரமகத்தி நீங்கப்பணிந்தான். தருக்களைய நல்லூர்க்குச் சென்றவுடன் அவ்வூர்ச் சிவாலய பூஜகராகிய ஆதிசைவருடைய புத்திரன் விஷம் தீண்டி இறக்க மயானத்துக்குக்கொண்டு செல்பவர்கள் அலறிச்செல்வதைக் கண்டு அப்பிரேதத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வாங்கி விபூதியை எடுத்துச் சிவபெருமானைத் தியானித்துப் பிரேதத்தினெற்றியிலிட்டு ஞானக்கூத்தாவென்ன சுவாமி! என்றெழ அச்சிறுவனை இரண்டு கைகளாலும் ஆரத்தழுவிச் சிவிகை மீதேற்றித் திருவாவடுதுறை சென்று குருநாதரைக் கண்டு வணங்கி சென்றநாள் முதல் நடந்த விவரங்களை எடுத்தோதிச் சிலநாளிருந்து புறப்பட்டு வரும் வழியில் திருப்பட்டீச்சுரம், வள்ளலார்கோயில், துறையூர், திருச்சத்திமுற்றம், திருக்குடந்தை என்னும் இப்பஞ்ச ஸ்தலமத்தியிலுள்ள நவலிங்க தீர்த்தக்கரையில் இரங்கி ஞானக்கூத்தருக்குத் திருவண்ணமலை யாதீன குருத்துவ அபிஷேகம் புரிந்து ஆன்மார்த்த பூஜையை நிறைவேற்றிக்கொண்டு சிரசின்மீது குவித்த அஞ்சலிய ஸ்தராய்ச் சாக்ஷாத்கரிசனஞ் செய்து நிற்கும்போது யாவரும் ஆச்சரியப்பட பூமி படீரென்று வெடித்து ஒளிப்பிழம்பு தோன்றிற்று. அப்பேரொளிப் பிழம்பின் வழியாய்ச் சுவாமிகள் திருமேனிகரைந்து மறைந்தது. அங்குள்ளார் அவ்வற்புதத்தைக் கண்டு பேரானந்தமுற்று ஆடிப்பாடிப் பரவசமாயினர்.

---

௨

## ஊமையைப் பேசுவித்த மான்மியம்.

தெய்வச் செந்தமிழ் வழங்கும் கொங்கு மண்டலத்திலே வாரக்க நாட்டிலே காடாம்பாடி என்னும் ஊரிலே ஐஞ்ஞூற்ருரான வணிகர் குலத்திலே பத்தர்பாததூளி என்பார் ஒருவர் இருந்தார். தம்மைக் குறிக்கும் போதெல்லாம் "பத்தர்பாததூளி" என்று இழித்துக் கூறிக்கொள்ளுவதால் அப்பெயரிட்டழைக்கப் பெற்ருர். கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்னும் வாக்கியத்துக்கு இலக்கியமான உத்தம குணமுள்ள இந்திரையனைய சுந்தரம் என்னும் நங்கையை மணந்து நல்லறமான இல்லறம் நடாத்திவந்தார். அறநூல் விதித்தவழியே வாணிபத்தில் தேடியபொருளாற் சுற்றத்தார் சிவநேயர் முதலியவர்களைப் போஷித்து மற்றைச் சிவகைங்கரியங்களையும் அன்புடன் செய்து

வருவார். எவ்வருணத்து எவ்வகையினராக இருக்கினும், சிவநேய ரென்று மாத்திரங்கண்டால் அவர்களைத் தாய் தகப்பன் அண்ணன் தம்பி சுற்றத்தார் உறவினர் குரு தெய்வமாகப் பாவிப்பார். அவர் களுக்குப் பணிவிடை செய்து களிப்பூட்டும் நோக்கமே கொண்டிருப் பார். அவர்கள் மொழியும் வார்த்தைகளைப் பரமோபதேசமாக மகிழ் ந்து கேட்டிருப்பர். ஒரு பொருளை இரண்டு கண்களும் ஒத்து நோக்கு வது போல சதிபதிகள் இருவர்களும் ஒன்று பட்ட கருத்துடையவர்க ளாக வாழ்ந்தார்கள். சமீபத்துள்ள திருவவிநாசி, திருமுருகன் பூண்டி திருப்பேரூர் முதலிய தலங்களுக்குச் சென்று வணங்கி இயன்ற பணி விடை செய்து வருவார்கள். முதுமையுற்றும் மகப்பேறிலாமையை நினைந்த நங்கை மனக்கிலேச முற்று நாயகனை வணங்கி சுவாமி! மலமா சற்ற மாதவர்களும் மக்கட்பேறின்றி மிகப் புலம்பி வருந்தினர்க ளென்றால் அறியாமையை ஆபரணமாகப் பூண்ட அடியாள் துயர் கொள்ளாதிருக்குந் தரமுள்ளவளா? என்று அடிபணிந்து புருஷன் பாதங்களைக் கண்ணீரால் நனைத்தாள். கணவன் தேறுதல் கூறி பெண் ணே! முன்பருவத்தே மேடு வெட்டி வளப்படுத்தி நாற்று நட்டு நீர் பாச்சிப் பயிரை வளர்க்காது ஏமாந்திருந்தவன் இப்பருவத்தே நெல் லுக்கு இச்சித்தால் வருமா? அது போல முன் பிறவிகளில் நல்லதருமங் களை ஈசுரார்ப்பிதமாகச் செய்யாத பாவிகளாகிய நமக்கு இக்காலத்தில் என்ன சுகங்கிடைக்கும்? திருவருள் கிடைக்குமேல் இனிமேலுங் கிடை க்கும், ஆனதால் நீ சந்திர ஜடாதரனைச் சந்ததம் சிந்தனை செய்து கொண்டிருப்பாயாக வெனக்கூறி, இருவரும் பல புண்ணிய வினைகளைச் செய்து வந்தார்கள். தலயாத்திரையாகச்செல்லும் மாதவர்கள் தம் மில்லத்து வருவது தெரிந்து வழக்கம்போல எதிர் சென்றழைத்து வந்து இருத்தி உபசரித்தனர். அவர்கள் அன்ப! நின் இள்ளவள் உள்ளத்தே அல்லல் கொண்டிருக்கும் காரணம் யாதென வினவினர் கள். நமக்குப் பின் நம் இல்லத்துவரும் பெரியோர்களை உபசரிக்கத் தக்க கான்முளை யில்லையே என வருந்துகிறளென்றனர். நேச! தந்தி யில்லாத வீணை போன்றதன்றோ தநயரில்லாமனை முதுமையிலன்னம் ஊட்டவும், தீமூட்டவும் இல்லறத்தார்க்கு அவசியம் பிள்ளை வேண்டும். மனையாள் வயிற்றிற்றனக்குப் பிள்ளை உண்டாகாவிடில் வேறுவகையா கவும் கொள்ளுகிறார்கள். ஔரஸன், க்ஷேத்திரஜன், தத்தன், கிரத் திரமன், கூடோற்பன்னன், அபவித்தன், கானீனன், ஸகோடன், கிரீ தன், பௌனற்பவன், ஸ்வயந்தத்தன்,பாரஸவன் என்று புத்திரபேதங் கள் பன்னிரண்டு வகையிவையென மநுநூல் கூறுகின்றன. ஆனாலும்

எக்காலத்தும் எவ்வருணத்தாராலும் அங்கீகரிக்கத்தக்க ஸ்வீகார புத்திர விஷயத்தில் மனஞ் செலுத்துவது சால நலமாகுமென்று மாதவர்கள் கூறினார்கள். அருகு நின்று கேட்ட சுந்திர நங்கை கண்களில் நீருகுத்து சுவாமிகளே! தத்த புத்திரனை ஏற்றுக்கொள்ளுவதால் மலடர் என்னும் வசைநீங்குமா? இல்லையானதால் தள்ளாமை நேர்ந்த காலத்தில் எங்களிடமுள்ள திரவியங்களை ஈசுரார்ப்பிதம் செய்து அவனடித்தொண்டு பூண்டு பதவியைப்பெறுவதே தகுதியாகும். திருவருளால் குழந்தைப் பாக்கியம் கிடைத்தால் பெற்று மகிழலாம் என்று உள்ளத்துயருடன் கூறினள். அதனைக் கேள்வியுற்ற அருந்தவர்களும் மனங்கனிந்து அம்மணி! சிவபிரானது சீபாதகமலங்களிற் பதிந்த அன்புள்ளவர்களுக்கு அரியகாரியம் ஒன்றுமில்லை. அன்புள்ளார்க்கு அருள் புரிபவர் அம்பிகை பாகரேயாவர். அவரும் அரவாசலத்தில் அருள் சுரந்து எழுந்தருளியிருக்கின்றார் ஆதலின் அன்பர்களே! நாங்கள் கூறுவதைச் சற்று கவனமாகக் கேட்பீர்களாக.

கடும் பவங்களை யெல்லாம் ஓட்டும் காவிரி நதிக்குக் கிழக்கே ஓங்காரவடிவுற்ற திருச்செங்கோட்டில் ஆதி நாயகியாருக்கு அர்த்த பாகங்கொடுத்தருளிய தினமாகிய அமாவாசையன்று அங்குச்சென்று தீர்த்த ஸ்நானம் புரிந்து கோதை பாகனையுங் குழந்தை வடிவேலனையுந் தரிசித்து அருந்தவருடனருந்தி அத்தலத்து அம்மையப்பர் அருள் சுரந்த மான்மியங்களைக் கேட்டு அநந்தல் புரிதல்வேண்டும். இவ்வாறு மூன்று நாள் வசித்திருந்து இயன்ற தானதருமங்களைச் செய்வீர்களாயின் அவசியம் ஆண் சந்ததியுண்டாகும். மலடிகல் என்னும் ஓர் தெய்வக் குன்றிருக்கிறது. அதன் மகிமை கூறவல்லேம் அல்லேம். உமையொருபாகர் பூசனையை முடித்துக்கொண்டு அவசியம் தென்புலத்தார்க்கு சிரார்த்தம் புரியுங்கள் மகப்பேறுண்டாம். எல்லாவரங்களையும் இறைவனே கொடுப்பவனாக இருக்க பிதுரர்களைப் பூசிக்கவேண்டிய அவசியமென்னை யென்பீர்களாயின் கூறுவாம்.

ஏதோ ஒரு காரணத்தால் துன்மரணமுற்றுப் பசாசபதவி பெற்றவர், நரகத்துள்ளவர் முதலானோர் பசியால் வருந்துங்காலத்தில் பூமியிலுள்ள தன் வருக்கத்தார்க்கு மகவு இல்லையாகுக எனச்சபிப்பர். அவர்களுக்கு இறைவர் பிதுர் தேவர். அப்பிதுர்தேவரைப் பூசித்தால் பசியால் வருந்தும் அன்னவர் பசியைத்தீர்ப்பர். பூவுலகத்திற் பூசித்தோர்க்கு புத்திரப்பேறு உண்டாம் வரம் கொடுப்பர்.

நம் மிறைவனை பரமசிவமே இவ்வதிகாரத்தையவர்க்குக்கொடுத்தருளினர். முற்கூறியவர் பிரேத பிதுர் ஆவார். நற்கருமம் இயற்றித் தேவராயினர்க்கு இறைவர் வேறு சிலர். அவரைத் தேவபிதுர் என்பர். இவ்விருவகையினத்தரிடத்துப் புரியும் பூசை சூரிய சந்திர பரமாகும். அச்சந்திரன் அம்பிகை, சூரியன் பரமசிவம், ஆனதால் அப்பூசை புறம்பல்ல. அச்சூரிய சந்திரர் கூடும் நாளான அமாவாசை விசேஷநாளாயிற்று. சத்தியும் சிவமும் அர்த்தநாரீசுர கோலக்காட்சி கொடுத்ததும் மாளயபட்ச அமாவாசை நாளேயாம். அதுவே உத்தமோத்தமதினம் என்பர். இன்னும் பிதுரர்களுக்குப் பிரியமான நாட்கள் பல. ஒவ்வொரு வருடத்துள் வரும் அமாவாசை நாட்கள் பன்னிரண்டு. மார்கழி தை மாசி பங்குனி இந்த நான்கு மாதங்களிலும் கிருஷ்ணபட்ச சத்தமி அஷ்டமி நவமி திதிகள் வரும் அட்டகை தினங்கள் பனிரண்டு. வியதிபாத நாட்கள் இருபத்தாறு. மாதசங்கிராந்தி நாட்கள் பன்னிரண்டு. கார்த்திகைமாத பூர்வபட்ச நவமி, புரட்டாசி மாச அமரபட்ச த்ரயோதசி, வைகாசிமாத பூர்வபட்ச த்ரிதிகை, மாசி அமாவாசையான யுகாதிநாட்கள் நான்கு. ஆவணி கிருஷ்ணபட்ச அஷ்டமி, பங்குனி, அமாவாசை, கார்த்திகை பூர்வபட்ச த்வாதசி, சித்திரை த்ருதிகை, தை ஏகாதேசி, ஆடி தசமி, ஐப்பசி நவமி, ஆடி சித்திரை பங்குனி ஆனி கார்த்திகை இம்மாதங்களின் பூரணை, மாசி சத்தமியான மநுவாதி நாட்கள் பதினன்கு புரட்டாசிமாத அமரபட்ச பிரதமை முதல் அமாவாசை வரை மாளய நாட்கள் பதினாறு ஆகிய தொண்ணூற்றாறு நாட்களும் மஹோதய அர்த்தோதய புண்ணியகாலங்களும் சூரிய சந்திர கிரஹண நாட்கள், கல்யாணம் உற்சவங்களின் முதல் நாளும் வேதாகமங்கள் நன்குணர்ந்த பெரியோர்கள் அணுகும் போதும் புண்ணிய தீர்த்தம் புனித தலங்களை யடைந்த போதும் பிதுர் பூசனை செய்யவேண்டுமென்று நன்னூல்கள் கூறுகின்றன இறந்து போனவர்கள் சொர்க்த்திருக்கினும் நரகத்திருக்கினும் பூலோகத்திருக்கினும் அங்கங்கே ஊட்டும் வலிமை சிரார்த்த மந்திரத்துக்குண்டு. தேவராயிருப்பின் அமுதமாயும், அரக்கராயிருப்பின் தசையாயும் இயக்கராயிருப்பின் மதுவாயும், பேயாயிருப்பின் இரத்தமாயும் பாம்பாயிருப்பின் வாயுவாகாரமாயும், பசுவாயிருப்பின் புல்லும் வைக்கோலுமாயும், மாநுடராயிருப்பின் அவரவர்கள் புசிப்புக்கான தானியங்களாயும் மற்றும் எப்பிறவி கொண்டிருப்பினும் அவ்வப்பிராணிக்குரிய ஆகாரமாயு மூட்டும். பலபசுக்கள் அடர்ந்திருக்குங் கிடையில் காப்போன் கன்றை விட்டால் தன் தாயைப் போயணுகுவதுபோல குறித்தவர்



ஊமையைப் பேசுவித்தல்.

களிடமே போய்ச்சேரும். உத்தமத்தினும் உத்தம சிவதலமான திருநாககிரியில் சிரார்த்த மியற்றுவது விசேஷமாகும். ஆதலின் அங்குச் சென்று செய்வீர்களாயின் புத்திரோற்பத்தி கிடைக்குமென்று மாதவர்கள் கூறிய மொழிய முதத்தைச் செவியால் மாந்தி அவ்வாறே புரிகிறோம் என்று பணிந்து விடைபெற்று மகவைப்பெற்றவர்களை போல மகிழ்ச்சிதோன்ற விதிப்படி யாத்திராதான முதலியன பெரியோர்களுக்குதவி பத்தர்பாத தூளியும் சுந்தரமங்கையும் மற்றுஞ் சுற்றத்தாரும் புறப்பட்டு மலர்களையும், வளைகளையும் மணிகளையும் இருகரைகளிலும் ஒதுக்கும் அலைகளையுடைய புனிதமான காவிரி நதியையடைந்தார்கள். ஸ்நானம் புரிந்து ஆற்றைக்கடந்து பஞ்சக்குரோச எல்லையானதால் பூமியிற் பாதம் வைக்க அஞ்சி கிரியைநோக்கி வணங்கி நடந்து திவ்யக்ஷேத்திரமாகிய திருச்செங்கோட்டையணுகி தென்வீதி மார்க்கமாகச் சென்றார்கள். விபூதிருத்திராக்ஷ மணிந்து சிவகளை விளங்கி திருமடத்தின்முன் எழுந்தருளியிருக்கும் ஆசாரியர் ஒருவரைக் கண்குளிரப் பார்த்த மாத்திரையானே உடல் புளகிப்ப கண்ணீர் ததும்ப அன்பு ஈர்ப்ப பரவசமுறுவதால் திகைத்து நின்று அதிசயித்து அன்னவர் பாதத்து வீழ்ந்து பணிந்தனர். இவர்கள் மனக்கனிவை நோக்கிக் கருணை கூர்ந்த அவ்வாசாரிய சுவாமிகள், பரமைசுவரிய விபூதியருளப்பெற்ற சிரத்தும் நுதலகத்தும் உரத்தும் அணிந்து கொண்டவர்களை இனிதின் நோக்கி அன்பர்களே! மெத்தவியாகூல சிந்தையுடன் வந்த நீங்கள் யாவர் என்று வினவலும் அடிகாள், அடியேங்கள் வாசஸ்தானமாகக் கொண்டிருப்பது வாரக்க நாட்டிலுள்ள காடாம்பாடி யென்னும் ஊர். ஐஞ்ஞூற்றுவகுல வணிகன் பத்தர்பாத தூளியென எளியேனை யழைப்பார்கள். இவள் என்மனையாட்டி புத்திரப்பேறில்லாது வருந்தினவர்களாய் அம்மையப்பர் திருவருளைப் பெறுதற் பொருட்டே வந்தோம் என்றனர். ஈசுர கடாட்சத்தால் புத்திரபாக்கியத்தைப் பெறுவீர்களெனத் தேசிகோத்தமர் ஆசீர்வதித்தனர். அந்த சைவாசாரியர் கட்டளைப்படியே திருமலையேறித் தீர்த்தங்களில் மூழ்கி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு பிதுர் பூசை செய்து கோதைபாகனையுங் குழந்தைவடிவேலனையும் வணங்கிக் குறையிரந்து அடியார்களுடன் புசித்து அன்றிரவு உபவசித்திருந்து திருச்செங்கோட்டு மான்மியங்களை அன்புடன் கேட்டு மகிழ்ந்து இவ்விதம் மூன்று நாள் வசித்து ஆசாரியர் அநுக்கிரகம் பெற்று ஊர்போய்ச் சேர்ந்தார்கள். சிவாநுக்கிரகம் எந்நாட்கிடைக்குமோ என்று ஏங்கியிருந்தார்கள். கருணாநிதியான கன்னிபாகன் திருவருளால் சுந்தரியம்

மாள் கருப்பமுற்றாள். பொருளில் விருப்பும் புசிப்பில் வெருப்புமாகவும் தலைசுற்றவும், சத்திபண்ணவும், இடைதோற்றவும், பசுநரம்போட வும், முகம் வெளுக்கவும், முலைக்கண் கறுக்கவும், ஆலிலை வயறு அடி கனத்து முன்வரவும், எடுத்தடிவைத்தால் இரண்டு யோசனை நடந்த அயர்வு தோன்றவும் சூல்முதிர்ந்த சுந்தரியம்மாளை யாவரும் கண்டு மகிழ்ந்தார்கள். பூரணகருப்பமுற்று நல்ல ஓரையில் குழந்தை பிறந் தது. கண்டு கேட்டவர்களெல்லாரும் அடங்கா மகிழ்ச்சியுற்றார்கள். ஆண்மகவென்று கேட்டமாத்திரத்தானே நித்திய தரித்திரன் பெரிய நிதிகண்டெழுந்ததுபோலும், பிறவிக்குருடன்கண் பெற்றதுபோலும், பத்தர்பாததூளி என்பார் சந்தோஷமுற்று செயத்தகும் கருமங்களைக் குறைவற இயற்றி அந்தணர்களுக்கும் அடியவர்களுக்கும் ஆதுலர் களுக்கும் அகமகிழ வேண்டுவன அளித்து அம்மையப்பர் ஆலய முத லிய பல திவ்விய க்ஷேத்திரங்களில் விசேஷபூசையும் அன்னதானமும் செய்வித்து அர்த்தநாரீசுரர் அநுக்கிரகத்தில் வந்தமைபற்றி அக்கட வுளின் திருப்பெயர் கொண்டு "உமைபாகன்" என்ற நாமகரணம் செய் வித்தார். அருமையாகப் பெற்றெடுத்த குழந்தை தாய்முகம் பார்த் தும், கைகால் உதரியும், குப்புறத்தும், ஒருகால் நீட்டி மறுகால் முடக் கி கையூன்றித் தலை நிமிர்த்தலாகிய செங்கீரை யாடியும், சப்பாணி கொட்டியும் தாய்தந்தையர் மார்மேலும் தோள்மேலும் மடிமேலும் முடிமேலும் கைமேலும் விளையாடி வளர்ந்தது.

மகிழ்ச்சி பொருந்திய தாய் தந்தையர் குழந்தையை எடுத்துக் கொண்டு திருச்செங்கோட்டுக்கு வந்து அந்நாளிலநுக்கிரகித்த ஆதிசை வாசாரியரவர்களைக்கண்டு திருவருட்பிரசாத மகிமையைக் கூறிப்பணிந் து அன்னவர் கட்டளைப்படியே தான தருமங்களும் தேவிபாகருக்கும் செங்கோட்டுவேலருக்கும் விசேஷ அபிஷேக நைவேதநாதிகளும் புரிந்து அவ்வாசாரியர் மனமகிழவேண்டுவன அளித்து விடைபெற்றுத் தம்பதிவந்து சேர்ந்தார்கள். அல்லும் பகலும் அர்த்தநாரீசுரரை யகத்தே யிருத்தி அருமையாக மதலையை யலங்கரித்து விளையாடவிட்டு எடுத்து மார்புற அணைத்து முத்தமிட்டு, மதலையால் உடலுக்கு வரும் இன்பத்தைப்பெற்று கற்புள்ளவள் கணவனை யுபசரிப்பது போல உப சரித்தும், படிப்பில் ஆசைவைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட்டியும், தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத் தை வளர்ப்பதுபோல வளர்த்தும், முன்சிறுமை யடைந்து பின் செல் வத்தைப் பெற்றவன் அச்செல்வத்தைப் பாதுகாப்பதுபோல பாது காத்தும் வளர்க்க வாழையிளங்குருத்துப்போல குழந்தை வளர்ந்தது.

அருமையாகப் பெற்றெடுத்த குழந்தையின் நிறம்பாத மழலைச் சொல்லால் வரும் செவியின்பத்தை அநுபவிக்கவும் பேரவாகொண்ட தாய் தந்தையர்கள் அல்லும் பகலும் கொஞ்சிக் கொஞ்சி வார்த்தை சொல்லிக்கொடுத்து குழந்தை வார்த்தைக்கு எதிர்பார்த்திருந்தார்கள். மூன்றாண்டு நிரம்பிற்று பேசவில்லை. நற்றவமுற்றுங் பெற்றவளான சுந்தரியம்மாள் குழந்தையை மடிமீது வைத்துக்கொண்டு அடி முதல் முடிவரையில் அமைந்துள்ள வடிவத்தை நோக்கி மகிழ்ந்து இவ்வளவு அழகு வாய்ந்த குழந்தையாக விருந்தும் பேசாமலிருக்கிறதே என் செய்யலாமென்று கண்ணீர் வடித்திருப்பதைக் கணவன்கண்டு யாது சிந்தனை யென்றனன். ஆவியனைய அண்ணலே! அருந்தவப்பயனகை வந்த குழந்தை இன்னும் பேசவில்லை. என்னபாவஞ்செய்த பாவிகளோ ஊமைப்பிள்ளையைப் பெற்றிருக்கிறார்கள் என்று உலகுளோர் பேசுவார் களே! என்ன செய்வோம் எனத் தேம்பி அழுதனள். வணிகனும் மகனைப்பார்த்து மனமயர்ந்து ஊழ்வினையால் நேர்ந்ததற்கு வருந்தி என் செய்வது என்று தேறி மனையாட்டியை நோக்கி அடி பெண்ணே! ஆற்றொணுத துன்பத்தை யனுபவித்தவர்களே கணித்தற்கியலாத இன் பத்தை அநுபவித்திருக்கிறார்கள். ஆகலின் பிரயோசனம் அற்ற தென்று வெறுக்கிற இச்சிசுவே சிலாக்கியமானதென்று ஆச்சரியப் படுமாறு சாதுரிய மாதுரியமாய் மொழியவும் கூடும். வருந்தாதே! மணிமந்திர ஔஷதபிரயோகங்களால் போக்கலாம், அதினும் மாறு விடில் தவம் தானம் விரதங்களைப் புரிந்து ஊமைத் தன்மையை மாற்ற லாம் எனத்தேற்றி தேர்ந்தவர்களை யழைத்து மணிமந்திர ஔஷதங் களைப் பிரயோகித்தும் நீங்கவில்லை. தவதான விரதங்களை விசேஷ முறச் செய்தும் பேசவில்லை. ஐந்து வயதாயிற்று. இச்சிறுவன் பிறந்த மாதத்துப்பிறந்த ஏனையோர் குழந்தைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்தார்கள். அதனை யோர்ந்து, நல்லபிள்ளையைப் பெற்றிருந்தால் நம் பிள்ளையையும் பள்ளிக்கமர்த்தலாமே எனத் தாய் தந்தையர் இரு வரும் செய்யும் வகை யொன்றும் காணாராய் மனம் வருந்தி இருந் தார்கள்.

இஃதிங்ஙனமாக கீழ்கரைப் பூந்துறைநாட்டிலே ஏமப்பள்ளி யென்னும் ஊரிலே கொங்கு நாட்டு வேளாளக்கண்ண குலத்திலே வே லப்பன் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் இளமையிலேயே அன்பு வாய்மை ஒழுக்கம் முதலிய நற்குணங்களோடு வளர்ந்து செல்வம், இளமை யாக்கை முதலியன நிலையிலாதவெனக் கருதி துறவின்மேல் விருப்ப முற்றவராக வளர்ந்தார். இதனையோர்ந்த இவரது இரு முது

குரவரும் வருந்தி, நம் குடிக்கு ஒரு பிள்ளையேயாக உள்ள இவன் கருத்து இவ்வாறாயின் எவ்வண்ணம் வமிச விருத்தியாகுமென்று உமை பாகனை அல்லும் பகலும் உள்ளத்தே கருதி யிருந்தார்கள்.

ஒரு நாளிரவில் வேலப்பன் சொப்பனத்தில் ஒரு சிவாசாரியர் போல அம்மையப்பர் தோன்றி "அன்ப! செங்கோட்டுக்கு வருக" என்றோதி மறைந்தருளினார். திடுக்கிட்டு நித்திரை நீங்கி யெழுந்து மனமயர்ந்து செயல் மறந்து திருவளப் பாங்கின் தன்மை தேறாராய் அதிகாலையிற் பிரயாணப்பட்டு நாகாசலத்தை யணுகி தீர்த்த ஸ்நானம் செய்து கோபுர வாயிலுட் புகுந்தனர். வெண்பொடியும் கண்மணியும் பூண்டு விளங்கும் ஆதிசைவாசாரியர் ஒருவர் விபூதியளிக்கக் கைநீட்டினர். இராத்திரி சொப்பனத்தில் தோன்றியவராகவே இருப்பக்கண்டு திகைத்து மெய்ம்மயிர் பொடிப்ப நாத்தழுதழுப்ப வெயர்வரும்ப கண்களில் நீரூற்றெடுப்பத் தரிசித்து அடியற்ற மரம்போல உடல் தரை பொருந்த வணங்கி மஹதைசுவரியத்தைப் பெற்றணிந்து நின்ற வேலப்பனை ஆசாரியர் நோக்கி "தீக்ஷைமுதலிய சம்ஸ்காரங்கள் புனைந்து இல்லறத்து நின்று சிவகைங்கரியம் புரிந்து வாழ்குக" என்று ஆஜ்ஞாபிக்குமாறு இராத்திரி என் கனவில் சிவபெருமான் கட்டளையிட்டருளினார். அதனால் உன்வரவை எதிர்பார்த்திருந்தேன் என்றார். தான் கண்ட சொப்பனத்தையும் கூறி என்னை யாட்கொண்டருளும் சிவபெருமான் கட்டளையின் வண்ணமே வாழ்ந்துய்வேனென்று பணியவே* சிவதீக்ஷை செய்து சைவநூல்கள் போதித்து சுவாமி தரிசனம் செய்வித்தனுப்பினர். பல திருப்பணிகளியற்றியும், உமையொருபாகர் திருவோலக்கமாகுங்காலத்தெல்லாம் சாமரையிரட்டுந் திருத்தொண்டு புரிந்து வருவர். இதனால் சாமரவேலப்பபூபதி யென்றழைக்க மிகுந்த பத்தி வைராக்கியமுற்று வாழ்ந்தனர்.

அங்ஙனம் சிறுவன் இனிமேற் பேசான் ஊமைப் பிறவிதான் எனத்தீர்மானம் கொண்டதாய் தந்தையர்கள், ஒருவன் கொடுத்த பணம் செல்லாததாயின் உடைவனிடத்தே சேர்த்து விடுவது வணிகர்களின் வழக்கமாதலின், இக்குழந்தை நமக்கு உபயோகப்படாமையால் ஈட்டிய அம்மையப்பருக்கே அர்ப்பிதம் செய்து விடலாமெனத்தேறி

*தோகையொரு பாலிலகு சோதிகண விற்றோன்றி
ஓகையுறக் கூறு முறைப்படியே-நாககிரி
பண்டிதர்தீக்கை பரிந்துசெயப் பெற்றுய்ந்தான்
பண்டுவினை தீர்வேலப்பன்.

குழந்தையை அழைத்துக்கொண்டு திருச்செங்கோட்டை யடைந்தார்கள். அன்று வைகாசிமாத பௌர்ணமையும் விசாக நக்ஷத்திரமுமான நம்மை யாட்கொண்டருளும் அர்த்தநாரீசர் எழுந்தருளிய திருத்தேரை அடியவர் குழாங்கள் தெற்கு வீதியில் இழுத்து வந்தார்கள். அப்பொழுது ஊமைப் பிள்ளையை விபூதியாலலங்கரித்து அழைத்துக்கொண்டு பத்தர் பாதத்தூளி ஓடும் திருத்தேரை வலம் வந்தனர். குழந்தை யில்லாதிருந்ததும், பிரான் அருளாற் பிறந்தது, ஊமையாக விருப்பது, பெற்றோர் உள்ளம் நைந்திருப்பது முதலிய எல்லாம் அறிந்தவரான சாமரவேலப்பபூபதி அவர்களை நோக்கி தேர் ஓட்டுவிக்கும் முயற்சியை விட்டு ஐயமுற்று தடுக்கவும் பயந்து இரண்டு கைகளையும் சிரமேற் குவித்து என் அப்பனே! ஒப்பில்லாமணியே! குலதெய்வமே! யாது நிகழ்விக்கின்றனையோ அறியேன் எனக்கண்ணீர் வடித்து அவர்களைப் பின்தொடர்ந்து தூரத்தே நின்றனர். பத்தர்பாததூளி அருமையாகப் பெற்றெடுத்த சிறுவனை இருகையாலும் பிடித்தேந்தி உமைபாக! நீ கொடுத்த பொருளை உன்னிடமே செலுத்துகிறேன் ஒப்புக்கொள்வாயாக என்று ஓடிவரும் தேர்ச்சக்கரத்தின் கீழ் குழந்தை தலையை உருட்கட்டையைப்போல வைத்தனர் இதனைக்கண்ட § சாமரவேலப்பபூபதி ஏழைபங்காளா இக்குழந்தை மாயுமேல் என் தலையையும் தேர்ச்சக்கரத்திற் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று வைராக்யத்துடன் கூறினர். தேருருள சிறுவன் தலையைத் தாண்டிச்சென்றது குழந்தையும் ஏனையா தேர்க்காலில் வீழ்த்தினீர்கள் என்று பேசியது. தாய்தந்தையர்கள் களிகூர்ந்து பிள்ளையை எடுத்து முத்தமிட்டார்கள். அன்பர்கள் ஹர ஹர முழக்கமிட்டார்கள். சாமரவேலப்பபூபதி தேவிபாகன்றிருவுள்ளச் செயலை எண்ணி எண்ணி கண்ணீர் சொரிய நின்றனர். குழந்தை வரத்துக்காக வந்திருந்த காலத்து உமேசரை அர்ச்சித்து விபூதி கொடுத்த சிவாசாரியர் குழந்தை நெற்றில் விபூதிவைத்து தாய்தந்தையர்களுக்கு மளித்து ஆசீர்வதித்தனர் தாய்தந்தையர்களின் பத்தியையும் சாமரவேலப்பபூபதியின் வைராக்கியத்தையும் எல்லாரும் புகழ்ந்தேத்தினார்கள். தேர்க்காலில் ஊமைக்குழந்தை அபாயமின்றிப் பேசி எழுந்த இடத்துக்குத் தென்பால் ஒருமடங்கட்டுவித்து ஏழைகளுக்கு அன்னம் அளித்து சிறுவன் செவ்வனே பேசுவதைக் கண்டு ஆனந்தங்கொண்டு, பல சிவ பணிவிடை செய்து ஒவ்வொரு

§ஊமைதனைப் பேசுவித்தா னும்பரிடு புட்பமழை
யாமெனவே பெய்யவகை யாக்கினன்—எமதகர்
வேலன்.........

திருத்தேர் நாட்களிலும் வந்து † அபிஷேகம் புரிந்து அன்னதானம் செய்து அகமகிழ்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

## மேய்ப்போருகை வந்த மான்மியம்

அன்பு மிகுந்தவர்களே! அரவகிரியில் ஸ்ரீ அர்த்தநாரிப்பரமன் அநுக்கிரகித்த அருள் விளையாட்டுகளநந்தம். செங்கோட்டுவேலர் செய்த லீலைகளில் ஒன்று சொல்லி முடிக்கின்றேன் கேட்பீர்களாக.

பலவளங்களுஞ் சிறந்த பாண்டிவளநாட்டிலே, தன்னிகரில்லாத்தாமிரபரணி தீரத்திலே, குலத்தின் மிக்கோர் வாழும் குருகூரிலே பூர்வபுண்ணிய வசத்தால் முத்தமிழினு முதிர்ந்தோனுகி நாற்கவியின் நலத்தினைக்கண்டு எத்தகையினரும் மதிக்கத்தக்க பிரபலபண்டித சிகாமணியாகி பிரதிவாதி பயங்கரன் என்னுங் காரணப் பெயரைப் பூண்ட ஒருவன் எண்ணிறந்த மாணவர்கள் சூழ்ந்துவரப் பலநாடுகளினுஞ் சென்று அவ்வந்நாட்டு அரசர்களுக்குத்தன் வருகையினை முன்னே அறிவித்து அவ்வரசரின் சமஸ்தான வித்துவான்களுடனும், அந்நாட்டு வித்துவான்களுடனும் அரசர் முன்னிலையில் வாதித்து அவ்வித்துவான்களைத் தோற்கடித்து அவ்வித்துவான்களின் பொருளினையும் நூல்களையுங் கொள்ளைகொண்டு அரசனிடத்தும் பல திரவியங்களையும் சன்மானமாகப்பெற்று அநேக விருதுகளையும் அடைந்து திக்குவிஜயம் செய்து வருவானுயினன். இங்ஙனம் இவ்வித்துவான் தேசசஞ்சாரம் செய்து வருகையில் கொடுமுடி நிறைந்த கோடுகள் சூழ்ந்த கொங்கு நாட்டிலே தெய்வத்தன்மை பொருந்திய திருச்செங்கோட்டிலே கருணைபொறை ஈகை முதலியவற்றிற் கிருப்பிடமாய் செந்தமிழில் தினகரன் போல் விளங்குபவனுய் சிவசுப்ரமணியக் கடவுளின் அன்பு பூண்டவனுய் குணசீலன் என்னும் வித்வசிரோமணி இருக்கின்றுனென்று கேள்வியுற்று அவனுடன் வாதஞ் செய்யக்கருதி அப்பண்டித சிகாமணிக்கு முன்னந்தெரிவித்து திருச்செங்கோட்டினை நோக்கிப் பிரயாணப்பட்டனன். இதனைக்கேட்ட குணசீலன் ஷண்முகக்கடவுள் ஆலயத்திற்குச் சென்று ஆறுமுகக்கடவுள் அடிபணிந்து அநேகமான தோத்திரங்களைச் செய்து பிரதிவாதி பயங்கரனென்னும் வித்துவான் தன்னுடன் வாதம் புரியத் தெரிவித்திருக்கும் உண்மையினைத் தெரிவித்

† ஆதியில் பிரார்த்தனை செய்வித்தவர் சேனுபதி குருக்களாதலின் அப்பரம்பரையாரைக் கொண்டே இவ்வபிஷேகத்தை நாளும் பத்தர்பாததூளியின் மரபினர் நடத்துவிக்கின்றனர் என்பர்.

துக்கொண்டு கலையுணர் புலவனே! கங்கை மைந்தனே! கார்த்திகேயனே! கந்தனே! கடம்பனே! கருணையங்கடலே! காத்தருள்க! என்னிறைவனே! ஏழையேன் பங்கிலிருக்க வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டு திரும்பிவந்து வீடுசேர்ந்து அன்று இரவு நித்திரை செய்துகொண்டிருக்கையில் செங்கோட்டுவேலர் கனவிற்றோன்றிக் கவிஞனே அஞ்சற்க! பிரதிவாதிபயங்கரனைப் பின்னிடயாமே செல்வோம் எனக் கூறி மறைந்தனர். குணசீலன் நித்திரை தெளிந்தெழுந்து தனது தெய்வம் தனக்குரைத்த தைரியத்தை எண்ணி ஆனந்தித்து அமர்ந்திருந்தான்.

பிரதிவாதி பயங்கரனென்போன் தான் முன்னம் தெரிவித்தபடி ஒரு நாள் வழக்கப்பிரகாரம் பல்லக்கிலேறிக்கொண்டு திருச்செங்கோட்டு எல்லையிற் பிரவேசித்து, தனக்குமுன்னே தோற்றும் தெய்வீகம் பொருந்திய மலையினைப் பார்த்தபோது அம்மலை பாம்பின் வடிவமாயிருத்தலைக் கண்டு அதிசயமுற்று,

சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென
வமரிற் படம்விரித் தாடாத தென்னை?

என்று இரண்டாம் அடியினை முடிக்க இயலாது சிறிது நேரமயங்க, அருகே வரும் மாடு மேய்க்கும் ஒரு சிறுவன்,

அஃ தாய்ந்திலையோ
நமரின் குறவள்ளி பங்க னெழுகரை நாட்டுயர்ந்த
குமரன் றிருமரு கன்மயில் வாகனங் கோத்துமென்றே.

எனப் பாடி முடித்தனன். இதனைக்கேட்ட பிரதிவாதிபயங்கரன் ஒன்றுந் தோற்றாது திப்பிரமை கொண்டு பல்லக்கினின்றுகீழே இறங்கி இஃதென்ன ஆச்சரியமாக இருக்கின்றது. நாம் வாய்திறந்து சொல்லாமலே மனத்தினினைத்த கவித்துறையை நிமிஷம்முடிவு செய்தனனே இவனோ மஹாகவிஞனாக இருக்கின்றான் இவன் தொழிலோ மாடு மேய்க்குந் தொழிலாக இருக்கின்றது. இவன் முகத்திலோ சரஸ்வதி நடனமிடுகிறாள். இவனைப்பார்க்குந்தோறும் சந்தோஷம் விளைகின்றது. ஆயிரம் ஆசுகவிகள் கூடினும் இவனுக்குச்சமான மாகாதே எனப்பலவாறு சிந்தித்து அப்பா! நீயார் உன் வரலாறு என்ன! புகல வேண்டுமென்றனன். அச்சிறுவன் கவிஞரே! இத்திருச்செங்கோட்டில் சரஸ்வதி விக்கிரஹமாக விளங்கும் குணசீலன் என்னும் சகலகலா பாரங்கதரின் கடைமாணாக்கன் அடியேன். பாடுக என்று கூறிதிறந்த வாயினை மூடுமுன்னே பல்லாயிரங் கவிகளைப்பாடும் பாவலர்கள் பற்

பலர் அவரைச் சூழ்ந்திருப்பர். அவர் யாருங்கண்டசுத்தி சொல்வர், அவரில் நான் ஒருவனே கண்டசுத்தி சொல்வதில் சிறிது தாமசமுடையவன் என்றனன். இதனைக்கேட்ட வித்துவான் ஆ! ஆ!! நன்றாக இருக்கிறது. மனத்தில் எண்ணிய ததனை முடிக்கத்தக்க இவனே குணசீலனுக்குக் கடைமாணாக்கனெனில் மற்றைய மாணாக்கர்களின் திடம் எத்தகையதோ! இவர்களுக்கு ஆசிரியராக விளங்குபவரின் அருமை எப்படிப்பட்டதோ நாம் அறியோம் இத்தகையினர்முன் நாம் எவ்வண்ணம் சென்று வெற்றி பெறுவது என மனங்கலங்கிச் சிறிதுதேறி ஐய! நன்குகற்ற வித்துவானாய் இருந்தும் மாடுமேய்க்கும் இத்தொழிலினை நீர்வகித்ததென்னை? என்றனன். அச்சிறுவன் கவிஞனை நோக்கிக் கூறுவானாயினன்.

புலவரே! இம்மாடுகள் அனைத்தும் என்னுடைய ஆசிரியருடையதே நான் அவர்பால் கற்ற கல்வியின் ஆராச்சியால், உலகத்தில் வாழும் எல்லா யோனிகட்கும் மேலாய் விளங்கும் பெருமை மிக்க மேன்மையுடையனவும், பொலிவுடைத்தாயிருக்கும் தூய்மையான கங்கை முதலி தீர்த்தங்களெல்லாம் உடைத்தாயிருக்கின்றனவுமாகிய பசுக்கூட்டங்களைக் காத்தலே சிறந்த புண்ணியமெனத் தேர்ந்து இக்காரியத்தில் மேற்கொண்டேன் என்றனன். கேட்ட வித்துவான் அச்சிறு பிள்ளையின் வாயினின்றும் வரும் மாதுரிய சாதுரியமான அருமைவாக்கியங்களை மேலும் மேலும் கேட்க ஆவலுற்று அப்பா! இப்பசுவினங்களின் மகிமைகள் இன்னமும் ஏதாவது தெரிந்திருந்தால் விசிதமாகக் கூறுவாயெனலும் அச்சிறுவன் சொல்ல ஆரம்பித்தனன்.

கைலைமலையிலே சிவபெருமான் சந்நிதியிலே வெள்ளியநந்தி விளங்கியிருக்கும். அந்நந்தியின் பக்கத்தில் நந்தை முதலிய பசுக்களிருக்கும். அவைகளைச் சிவபெருமான் சிற்றுயிர்க்கிரங்கிப் பூமியிற் பிறக்கும்படி செய்தலால் அவைகள் பாற்கடலிற் பிறந்து இவ்வுலகத்தில் வாழ்வார்க்குத் துன்பங்களைக் கெடுத்து பல வரங்களைக்கொடுக்கும். மேற்கூறிய பசுக்கள் நந்தையென்றும், சுபத்திரை யென்றும், சுரபியென்றும், சுசீலை யென்றும், சுமனை யென்றும் அழைக்கப்படும். அவற்றுள் நந்தை கபில நிறம், சுபத்திரை கருமை நிறம், சுரபி வெண்மைநிறம், சுசீலை தூமிர நிறம், சுமனை தாமிரநிறம், என்று நிச்சயித்து அதனதன் பெயரைச் சொல்லிப் பூசை செய்து அவற்றினுண்டான பால், தயிர், நெய் கோமயம், கோசலம் கோரோசனையாகிய ஆறு பொருள்களும் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தருள வேண்டும். பிரமனும் திருமாலும் அப்பசுக்களின் கொம்பினடியில் வாழ்வார்.



மேய்ப்போனாக வந்து வித்துவானை வெல்லல்.

கோதாவிரி முதலிய தீர்த்தங்களும் இயங்குதிணை நிலைத்திணையாகிய உயிர்களும் கொம்புநுனியிற்கூடி நிற்கும். சிவபெருமான் சிரத்தினும், சத்தி நெற்றியினடுவிலும், சண்முகன் மூக்கு நுனியிலும், இந்திரன் மூக்கு நுனிக்குள்ளும், அச்சுவினிதேவர் இரண்டு கன்னங்களினும், சூரியனுஞ் சந்திரனும் இரண்டு கண்களினும், வாயு பற்களினும் வருணன் நாவினும், கலைமகள் நெஞ்சினும், எமனும் இயக்கரும் கெண்டைதலத்திலும், சந்திதேவதை உதட்டிலும் இந்திரன் கழுத்திலும், அருக்கர் முறிப்பிலும், சாத்தியர் மார்பிலும், வாயு கால்களிலும், மருத்துவர் முழந்தாளிலும் நாகர்கள் குளம்புகளிலும், கந்தருவர் குளம்பு நடுவிலும், அரம்பையர் குளம்பின் மேலிடத்திலும், உருத்திரர் முதுகிலும், அட்டவசுக்கள் சந்துகடோறும், பிதிர்தேவதைகள் வரைப்பரப்பிலும் சத்தமாதர்கள் யோனியிலும், அபானத்திற்றிருமகளும், நாகாதிபர் வாலிலும் ஆதித்தனொளிவாலுரோமத்திலும், கங்கை கோசலத்திலும், யமுனை கோமயத்திலும், மாதவர் உரோமங்களிலும், பூமிதேவி வயற்றிலும், ஆகவனீயம் இதயத்திலும், தக்கணாக்கினியம் முகத்திலும், யாகத்தொழில்கள் எலும்பினிடத்தும், கற்புடைய மடவார்கள் எல்லா அங்கங்களிலும் இருப்பார்கள். வேதாகமங்களை நன்குணர்ந்த சேய்ஞலூர்ப் பிள்ளையாரென்னும் தண்டிகேசுரர் பசுவின் உயர்வை நோக்கியன்றோ மாடுமேய்க்குந் தொழிலைப் பூண்டனர். புண்ணியத்தொழில் இதுபோலுலகத்திலுண்டோ? புலவர் திலகரே! சகல பாவங்களையும் போக்கவல்லது திருநீறு ஆம் அன்றோ! அந்நீற்றுக்கு மூலமானது அவதாரஞ் செய்யும் மூர்த்தம் பசு என்றால் இன்னும் என்ன கூறுதல் வேண்டும்.

அப்பசுக்களை மேய்க்கினும் புனமுருக்கக் கோலால் மெல்ல கெச்சநெறி கெச்சநெரி யென்று ஒற்றி யொற்றி யோட்டினும் சிவலோகத்திற் சிறப்புப் பொருந்த வாழ்வார்கள். இரக்கமில்லாமற் கோபித்து அதட்டி யடித்து வருத்துவோர் நரகத்திற்றங்குவார். அரன் அரி அயன் ஆகிய முத்தேவரும் இந்திரனும் அவன் வழிவந்த மற்றத் தேவர்களும் உமாதேவி முதலானவர்களும் அந்தணர்களும் பசுக்களின் நீங்காமல் வாசம் செய்வார்களாதலின் அப்பசுக்களைப் பூசிப்போர் உயர்வாயிருப்பார்கள். பசுக்களை ஓம்பாமலும் தொழாமலும், இருக்கிறவர்கள் நரகத்தில் விழுதற்கெளியராயும், அந்நரகத்தினின்றுங் கரையேற அரியராயு மிருப்பார்கள். அவற்றை யோம்புவோரும் பாதங்களில் தொழுவோரும் சிவலோகத்தினைப் பொருந்துவர். அப்பசுக்களுக்குப்புற்களை வாயிற்கொடுத்து வலஞ்செய்து வாழ்த்தி வணங்

கிப் பூசைசெய்வோர் இருவினைகளையும் நீங்கிச் சிவலோகத்தில் சுற்றத்தாருடன் விளங்கியிருப்பர். அப்பசுக்களின் பாலினைக்கொண்டு சிவபெருமானுக்கு அபிடேகம் செய்தோர் அப்பெருமான் உலகத்தினைச் சேருவர். பசுக்களைக்கையால் தீண்டினவுடன் எல்லாப்பாவங்களும் குறைந்து கெடும். அஷ்டமிதோறும் மஞ்சனம் கொண்டு அபிஷேகஞ் செய்து பூவாலருச்சித்துத் தூபதீபமும் காட்டி அன்னமுதலிய நிவேதனமும் தண்ணீரும் ஊட்டி அப்பசுக்களை உவகை பொருந்தச் செய்யவேண்டும். பசுக்களை முதுவேனிற் காலத்தில் குளிர்ச்சியுள்ள மலைப்பக்கமாகிய காட்டினிடத்துத் தழைத்திருக்கும் சோலைகளிலும், முன்பனி பின்பனியாகிய காலத்தில் சூரியகிரணம் பரந்த வெளிப்பரப்பிலும், மற்றைக் கார்கால முதலிய காலங்களில் துன்பமில்லாத இடங்களிலும் மேய்க்கவேண்டும். பசுக்கள் தினவுக்கு உறைஞ்சும் கற்றூணை மந்தைமுதலிய இடங்களில் நட்டவர்கள் நிரதிசயாநந்த வாழ்வை யடைவார்கள். பசுவினைத்தானம் செய்வோர் புத்திரபவுத்திரருடன் நெடுங்காலம் வாழ்வார். பசுக்களை வாகனமாக ஏறிச்செலுத்துவோர் தீ நரகத்தினையடைவர். மலட்டுப் பசுவின் மீதாயினும், இடபத்தின் மீதாயினும் பாரமான பண்டங்களை ஏத்துவோர் பாவிகளாவார்கள். பசுக்கள் கன்றீனின் கன்றுகட்கு இரண்டு மாதம் வயிறு நிறையப்பால் குடிக்கும்படி செய்து பின்பு அவற்றின்வாய் நுரைகளைக் கழுவிப் பசுவின் பாலைக்கறந்து கொள்ளவேண்டும். இன்னும் பசுக்களின் மகிமையினையும் அவற்றை ஆதரிக்கவேண்டிய செயல்களையும் கூறின் விரியும் என்று சொல்லி முடித்தனன்.

பிரதிவாதி பயங்கரனாகிய வித்துவான் அச்சிறுவன் அடைந்திருக்கும் தமிழ்ப்புலமையையும் ஆகம உணர்ச்சியினையும் அறிந்து, இச்சிறுவன் உபாத்தியாயருடன் நாம் வாதம் செய்வது கூடாதெனக் கலங்கி, வந்தவழியே பல்லக்கைத்திருப்பி விடும்படி சொல்லி, பல்லக்கில் ஏறிக்கொண்டு கையேட்டுக்காரர்கள் சூழ அகன்று விட்டனன். அச்சிறுவனும் பசுக்களும் மறைந்தன. சமீபத்திலிருந்து அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்ருந்த சிலர் ஓடி நடந்த வரலாற்றினைக் குணசீலனுக்குத் தெரிவிக்க அவர் ஆச்சரியமுற்று இச்செயல் செங்கோட்டுவேலர் திருவிளையாட்டென அறிந்து மகிழ்ந்து ஆலயத்திற் சென்று சரவணபவனைத் தரிசித்து ஆநந்த பரவசமாகப்பாடி ஆடித் திரும்பிச் சுகமாக வாழ்ந்து வந்தனன். இவ்வண்ணம் ஸ்ரீ அர்த்தநாரீசுரரும் குமாரக்கடவுளும் அன்பு பூண்ட அடியவர்கள் துயரத்தில்